
வன்னிய புராணம்-ஒன்று

(மூலமும் - உரையும்)

(வன்னியர் - வரலாறு, கலை, பண்பாடு)





இராஜ வன்னியர்களுடைய 32 விருதுகள்

பதிப்பாசிரியர்

டாக்டர் கெ. சிவராமலிங்கம்,

எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்டி.

இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்

சூளைமேடு, சென்னை - 600 094.

வன்னிய புராணம் - ஒன்று

(மூலமும் - உரையும்)

(வன்னியர் - வரலாறு, கலை, பண்பாடு)

பதிப்பாசிரியர்

டாக்டர். கெ. சிவராமலிங்கம்,

எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்டி.

இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்

சூளைமேடு, சென்னை - 600 094.

வன்னிய புராணம் – ஒன்று

(மூலமும் – உரையும்)

(வன்னியர் – வரலாறு, கலை, பண்பாடு)

முதல் பதிப்பு – 2004, பக். 37 + 620 = 657

வெளியீடு எண். 2.

விலை ரூ. 250/–

நூல் கிடைக்குமிடம்:–

இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்
பழைய எண். 10, புதிய எண். 19,
நேரு தெரு, அவ்வை நகர்,
சூளைமேடு, சென்னை–600 094.
தொலைபேசி எண் : 9544 – 23610704.

கணினிப் பதிப்பு :

ஓம் கணபதி கிராபிக்ஸ்
எண். 49, மலையபெருமாள் தெரு,
சென்னை– 600 001.
தொலைபேசி எண் : 2539 3478.
செல் : 98414 20563

உயர்திரு.
டாக்டர். பெ. கிருஷ்ணன்,
துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்,
சைவ சித்தாந்தத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 005.

அணிந்துரை

டாக்டர் கெ. சிவராமலிங்கம் அவர்கள் வரலாறு பயின்று எம்.ஏ பட்டம் பெற்று, திருவிசலூர்க் கோயில் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். தாம் பிறந்த குலத்துக்கும் நாட்டுக்கும் ஏதேனும் செய்ய வேண்டும் என்னும் உந்துதல் காரணமாக இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம் என்னும் அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் வன்னியர் வரலாறு பண்பாடுகளை வெளியிட்டு வருகிறார்.

முதன முதலாக **வன்னியர் சிலை எழுபது** என்னும் நூல் இந்நிறுவனத்தின் மூலம வெளியிடப்பட்டது இரண்டாவதாக வெளியிடப்பட்டுள்ள வன்னிய புராணம்-ஒன்று என்னும் இந்நூல் வன்னியர் தோற்றம், வரலாறு, வீரத்தை விளக்கும் வன்னியர் புராணங்கள் இரண்டில் மதுரை மேலவாயில் வீரப்பிள்ளையால் சுந்தரபாண்டியன் கேட்கப் பாடப்பட்ட நூலாகும.

இந்நூல் 1060 பாடல்களை உடையது. பாடல்களைச் சீர் பிரித்து எழுதி அவற்றுக்குப் பொருளும் விளக்கவுரையும் எழுதியுள்ளார் ஆசிரியர் புராணக் கதைக் குறிப்புக்களையும் தேவையான இடங்களில் சேர்த்துள்ளார். அரக்கர்களை அழிக்கச் சிவபெருமானின் நெற்றிக்கண் வியர்வையிலிருந்து சம்புமகாரிஷி யாகத்தில் தோன்றியவர் வன்னியர் என்பதையும் இவ்வன்னியர் வாதாவி என்றும் கொடிய அரக்கனையும் அவன் படைகளையும் போர் செய்து அழித்துத் தேவர்களுக்கும் மக்களுக்கும் அவனால் ஏற்பட்ட துன்பங்களைப் போக்கினார்கள் என்பதையும் இந்நூலால் உணர முடிகிறது. மேலும் வன்னியர்க்குரிய பெயர்களான, உடையார்

நயனார், சம்மட்டி, தேவராயன். போன்றவற்றையும் அவற்றின் காரணங்களையும் இந்நூல் காட்டுகிறது

முதல் வன்னியனான உருத்திர வன்னியனின் மகன் அவன் காலத்தில் இருந்த சோழன் மகளைத் திருமணம் செய்ததால், வன்னியர் தாய் வழியில் சோழ மரபினர் என்பது தெரிகிறது சிவனுடைய நெற்றிக் கண் வியர்வையில் முதல்வன்னியன் தோன்றியதால் சிவன் மகன் ஆகிறான். எனவே வன்னியர் தந்தை வழியில் சிவன் மரபினர் என்பதும் இந்நூலால் தெரிய வருகிறது. சொல்லடைவு, பாடல் முதல் குறிப்பு, நூலின் சிறப்பு ஆகியவற்றையும் தந்துள்ள ஆசிரியர் இரண்டாவது வன்னிய புராணக் கதையையும் தந்து இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகளையும் சுட்டியுள்ளார்.

இந்நூல் வன்னியரின் வரலாற்றையும் சிறப்பையும் விளக்குவதால் வன்னியர் அனைவரும் வாங்கிப் பயன்பெற வேண்டிய ஒரு முக்கியமான நூலாகும் ஏனென்றால் வன்னியர் தங்கள் பெருமைகளைத் தாங்களே உணராமல் இருக்கிறார்கள்

மேலும் இது சாதி பற்றிய நூல் என்ற குறுகிய நோக்கத்தோடு பார்க்காமல் ஒரு சிறப்பான பாரம்பரியத்தில் வந்த ஒரு சமூகத்தாருடைய வரலாற்றுச் சிறப்பையும் வீரம், கொடை, பண்பாடுகளையும் விளக்கும் நல்ல நூல் என்ற கண்ணோடு நோக்க வேண்டிய நூலாகும். எனவே அனைத்து சமூகத்தாரும் இதனைப் படித்தறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது. ஆகவே இந்நூல் எல்லா பள்ளி, கல்லூரி, பொது நூல் நிலையங்களிலும் இடம் பெற வேண்டிய ஓர் அரிய நூல். இதுபோல் இன்னும் பல நூல்களையும் படைத்துச் சிறப்பாக வாழவேண்டும் என ஆசிரியரை வாழ்த்துகிறேன்

சென்னை-600 005 அன்பன்

பெ. கிருஷ்ணன்.

*திருமிகு. சா. சுப்பிரமணியம் **I.A.S.** ஓய்வு,*
தலைமைச் செயலகம்,
சென்னை, தமிழ்நாடு அரசு.

அணிந்துரை

புராணம் என்பது வரலாற்றைக் குறிக்கும் சொல் இப்புராணங்கள் வேத காலத்துக்கு முன்பிருந்தே உள்ளன மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே வரலாறும் தோன்றி விட்டது உலகத்தில் உள்ள ஜீவராசிகள் அனைத்துக்கும் வரலாறு உண்டு. அவற்றுள் அக்கினியின் வரலாற்றைக் கூறுவதே ஆக்கினேய புராணம்.

அக்கினிக்கு வேறு பெயர் வன்னி இவ்வன்னியில் தோன்றியவரே வன்னியர் இவ்வன்னியரின் வலாறு, வீரம், போர்ச் செயல்களை விளகக்கும் நூலே வன்னிய புராணம். இவ்வன்னியர் வீரத்துடன் போர்புரிந்து மக்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றியவராவர்

"சிவனின் நெற்றிக்கண் வியர்வையிலிருந்தும் அக்கினியிலிருந்தும் தோன்றியவர்கள் வன்னியர்கள் அசுரர்களை அழித்துத் தேவர்களையும், அட்டதிக்கு பாலர்களையுமே காத்தவர்கள் வன்னியர்கள் சம்பு மகா முனிவரின் வேள்வியில் தோன்றியவர்கள் வன்னியர்கள். அசுரர்களை அழிக்கும் சம்மட்டி வன்னியர்கள். தேவேந்திரன் மகளையே மணந்து, சோழனிடம் பெண் எடுத்தவன் முதல் வன்னியன்" ஆகிய செய்திகளை முறையாக எடுத்துக் கூறுகிறது இந்நூல்

இத்தகைய சிறப்புக்களை விளக்கும் இந்நூல் ஒவ்வொரு வன்னியன் கையிலும் இருக்க வேண்டிய நூலாகும் இதைச் சிறப்பான முறையில் பதிப்பித்த டாக்டர் கெ சிவராமலிங்கம் அவர்களை மிகவும் பாராட்டுகிறேன். மேலும் இதுபோன்று வன்னியர் பெருமை பாராட்டும் பல நூல்களை இவர் வெளியிட்டுச் சிறப்படைய வாழ்த்துகிறேன்

அன்பன்,

சென்னை-600 040

*சா. சுப்பிரமணியம் **I.A.S.***

உயர்திரு. டாக்டர். வ.வ. இராமநாதன்,
பேராசிரியர்,
விலங்கியல் துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600 030.

ஓர் அரிய ஆவணம்

வன்னியர் வரலாறு பண்பாட்டை விளக்கும் வன்னிய புராணம் என்னும் இந்நூல் மிகவும் சிறப்பான நூலாகும். பிரமனின் மார்பிலிருந்தும், முகத்திலிருந்தும், முதுகிலிருந்தும் எல்லாமக்களும் தோன்றியிருக்க வன்னியர் மட்டும் "சிவன் தன் நெற்றிக்கண் வியர்வையை அக்கினியில் ஊற்ற அதிலிருந்து தோன்றியவர்" என்னும் உண்மையை விளக்குவது இந்நூல். பாண்டியன் வேண்டுகோளின் படி வடமொழி ஆக்கினேய புராணத்திலிருந்து தமிழில் வீரப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்டது.

இந்நூலைப் பதிப்பித்துள்ள டாக்டர். கெ. சிவராமலிங்கம் அவர்கள் இந்நூலைச் செம்மையாகப் பதிப்பித்துள்ளதோடு, நூலுக்குச் செம்மையான ஆய்வுரையும் வழங்கியுள்ளார். இதில் புராணம் பற்றிய பொதுவான செய்திகளையும், பதினெட்டு புராணங்களைப் பற்றிய விரிவான செய்திகளையும் கொடுத்திருப்பதோடு வன்னிய புராணச் சுருக்கத்தையும், இரண்டு வன்னிய புராணக் கதைகளையும் கூறியுள்ளமை ஆசிரியரின் பதிப்புத் திறமைக்குச் சான்றாகும். இரண்டு புராணங்ளுக்கிடையே உள்ள வேறுபாடுகளையும் பட்டியலிட்டுக் காட்டியுள்ள திறமையும் பாடல் விருத்த வகை என்பதை எடுத்துக்காட்டி ஒவ்வொரு விருத்தமும் எத்தனை பாடல்கள் என்பதை கணக்கிட்டுக் காட்டியுள்ள முயற்சியும் பாராட்டற்குரியன கதைச் சுருக்கத்தை அறியும் வண்ணம் ஒவ்வொரு ப்பாடலுக்கும் தலைப்பிட்டுக் காட்டியுள்ளார் நூலின் இறுதியில் பாடல் முதற்குறிப்பும், நூலில் அடங்கியுள்ள சொற்களின் பட்டியலும் கொடுத்துள்ளார். இது ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன்படும்

இத்தகு சிறப்புடைய இந்நூல் அனைவருடைய இல்லங்களிலும் இருக்க வேண்டிய ஓர் அரிய படைப்பு என்பதில் ஐயமில்லை

அன்பன்,

சென்னை-40

வ.வ. இராமநாதன்

ஸ்ரீ வெங்கடா ஜலபதி துணை

முன்னுரை

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்னும் திருநாவுககரசரின் வாககிற்கிணங்க மனிதனாகப் பிறந்தவன் சமுதாயத்தில எதற்காவது யாருககாவது பயன் பட்டு வாழவேண்டும் பிறந்தோம், பொருளீட்டினோம், உண்டோம், உறங்கினோம், இறந்தோம என்று வாழ்வது பயனற்ற வாழ்க்கை

வேதகாலத்திலிருந்து இன்று வரை வீரத்திலும் கொடையிலும் சிறந்து விளங்குவது வன்னியர் பரமபரை. இப்பரம்பரையினர் எப்போதும் அரசராகவும், அரசருக்கு உதவி செய்தும், மக்களைக் காத்தும், புலவர்களை ஆதரித்தும் வாழ்வாங்கு வாழ்ந்துள்ளனர் அப்பரம்பரையில் தோன்றியதற்காகவாவது ஏதேனும் கடமைகளைச் செய்து சிறப்பாக வாழவேண்டும் என்ற நோக்கத்தாலேயே இந்நூலாசிரியாராகிய நான் **இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையத்தைத்** தொடங்கினேன்

வன்னியர் வில்லின் பெருமையை விளக்கும் **வன்னியர் சிலை எழுபது** என்னும் நூல் இம்மையத்தின் முதல் நூலாக வெளியிடப்பட்டது இரண்டாவதாக வன்னியர் தோற்றத்தையும் வரலாற்றையும் விளக்கும் வன்னியர் புராணங்கள் இரண்டில் வீரப்பிள்ளை எழுதிய முதல் வன்னிய புராணத்தைத் தற்போது வெளியிடுகின்றேன். இன்னொரு வன்னிய புராணம் பின்னர் வெளியிடப்பட உள்ளது.

கொடியவனான வாதாவி என்னும் அரக்கன் சிவனருளால் வரம் பெற்று, வரம் பெற்ற செருக்கால் தேவரையும், முனிவரையும், யாவரையும் கொடுமைப்படுத்தினான். மும்மூர்த்திகளாலும் அழிக்க முடியாத இவனை அழிப்பதற்கென்றே சம்புமுனிவரின் யாகத்தில் தோன்றியவன் உருத்திர வன்னியன். இவன் பரம்பரையினரே வன்னியர் என்னும் வரலாற்றுச் செய்தியை விளக்குவது இந்நூல். இது வியாசரால் எழுதப்பட்ட பதினெட்டு புராணங்களில் ஆக்கினேய புராணத்தில் உள்ள வரலாறு இதனைத் தமிழில் ஆக்கியவர் வீரப்பிள்ளை இவர் பிற்காலப் பாண்டியனான சுந்தரபாண்டியன் காலத்தவர் சுந்தர பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்க இந்நூலை ஆக்கினார்

இததகைய பெருமை மிக்க இந்நூலை வெளியிடுவதில் ஆக்கமும ஊக்கமும் அளித்த அனைவருககும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் முதலாவதாக இந்நூலின் பதிப்பிற்கு பெரிதும் உதவி செய்த வித்வான், **ஆர். ஜயலட்சுமி** அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது கணினியில அச்சிட்ட **திரு ஏ. தணிகைவேல், எம்.ஏ.,** அவர்களுக்கும் என் நன்றி நூலை வெளியிடப் பேருதவி புரிந்த பேராசிரியர் **டாக்டர். வ.வ.ராமநாதன்,** பச்சையப்பன் கல்லூரி சென்னை, **திரு. கோவிந்தராஜ் எம்.ஏ.,** (ஆய்வாளர், காவல்துறை மதுவிலக்கு, ஸ்ரீவில்லிபுத்தூர்), **திரு. வி. ஸ்ரீரங்கன்,** துணை ஆய்வாளர், (காவல்துறை மதுரை) **திரு. சி. குணசேகரன்** (பொறியாளர், தொலைதொடர்புத் துறை, சென்னை) கொடைவள்ளல், மனிதநேயப் பண்பாளர், தொழிலதிபர் **திரு.டெல்டா ஆர்.நாராயணசாமி, திரு. கோதை கேசவன், திரு, அ. சுப்பிரமணியன், திரு. கெ. இராமராசு** மற்றும் வன்னியர் குலப் பற்றுடையவர் அனைவருக்கும் என் நன்றி

இந்நூல் அச்சாகும்போது பிழை திருத்துதல் மற்றும் உள்ள பணிகளில் உறுதுணையாக இருந்த என் அன்பிற்கினிய இல்லாள் **திருமதி. தி.பாரதிசிவராமலிங்கம்.பி.இ,** வானொலி மேற்பார் வையாளர், ஊரக வளர்ச்சி இயக்ககம், சென்னை, அவர்களுக்கும் அருமைப் புதல்வர்கள் **திரு. சி. பாரத், திரு. சி. சாய்ராம்,** அவர்களுக்கும் என் நன்றி.

எல்லாவற்றுக்கும் மேலாக **"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடன்"** என்பதற்கிணங்க என்னைப் பெற்றெடுத்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த என்தாய் **திருமதி. கெ.சலுப்பாள்,** அவர்களுக்கும், **"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன்"** என்பதற்கிணங்க எனக்குக் கல்வி அறிவூட்டி ஆளாக்கிய தந்தையார். **திரு. ர.கெங்காசலம்** அவர்களுக்கும் என் நன்றி என்றென்றும் உரியது

"என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரின் பொற்கமல பாதங்களில் இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்."

சென்னை-94
15-08-2004

அன்புடன்

டாக்டர். கெ.சிவராமலிங்கம்

பொருளடக்கம்

பதிப்புரை

இந்தியப் பண்பாடு, கலை, வரலாறுகளை ஆய்வு செய்யும் நோக்கோடு எழுந்தது **இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்**. இம்மையத்தின் முதல் நூலாக வெளிவந்தது **வன்னியர் சிலை எழுபது**. இதில் வன்னியர் வரலாறு, பண்பாடுகள் வன்னியர் கையில் உள்ள வில்லின் துணையோடு, ஓரளவே சொல்லப்பட்டன. வன்னிய புராணத்தின் துணையோடு ஆய்வுரையில் பல செய்திகள் கூறப்பட்டிருப்பினும் மூல நூலில் இருப்பது ஓரளவே. எனவே வன்னியர் தோற்றம், வரலாறு இவற்றை விரிவாகக் கூறும் வன்னியர் புராணத்தையும் வெளியிடுவது இந்நிறுவனத்தின் கடமையாகிறது. எனவே இந்நூல் இரண்டாவது நூலாக வெளியிடப்படுகிறது.

வன்னிய புராணம் என்ற பெயரில் இருவேறு நூல்கள் உள்ளன. அதில் முதலாவது நூல் இது. சுந்தர பாண்டிய மன்னன் அவைப்புலவரான வீரப்பிள்ளை என்பவரால் வடமொழியிலிருந்து தமிழில் எழுதப்பட்டது இந்நூல். ஓலைச் சுவடியிலிருந்து 1912 ஆம் ஆண்டு விருத்தாசலம் பொன்னம்பலக் குருக்கள் வேண்டுகோள்படி புரசைவாக்கம் ஸ்ரீமான் மு. பாலசுந்தர நாயகர் அவர்களால் பார்வையிடப்பட்டு சென்னை, திருப்பதி இரத்தின முதலியார் அண்ட் சன்ஸ் கலைக்கியான முத்திராட்சர சாலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பதிப்பு நோக்கம்

இந்நூல் தற்போது கிடைப்பதில்லை என்பதோடு, அச்சுப் பிழை காரணமாகவோ எழுதியவரின் கவனக் குறைவாலோ பாடல்கள் பல இடங்களில் பிழையாக உள்ளன. உரையும் பழைய கால வசன நடையில் உள்ளது எனவே பாடல்களைச் செம்மைப்படுத்தி எளிய உரை எழுதி எல்லோரும் பயன்பெறும்படி பதிப்பிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு இந்நூல் பதிப்பிக்கப்படுகிறது.

பதிப்பு முறை

1 பாடல்கள் ஒழுங்கான முறையில் சீர் பிரிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளன

2. பொழிப்புரையோடு அருஞ்சொற்களுக்குப் பொருளும் கதைக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன

3 ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்பு தரப்பட்டுள்ளது

4 நூலின் காலம், புராண வரலாறு, வன்னியர் பெயர்க்காரணம், கதைச் சுருக்கம், கதை வேறுபாடுகள், நூலின் சிறப்பு ஆகியவை அடங்கிய நூலாய்வு நூலின் முதலில் இடம் பெறுகிறது.

5 நூலின் இறுதியில் பாடல் முதற்குறிப்பும், சொல்லடைவும் இடம்பெறுகின்றன

பதிப்பில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள்

முன்பே கூறியபடி பாடல்கள் பல இடங்களில் பிழையாக உள்ளன எதுகை மோனை வைத்தும், பொருளைக் கொண்டும், அசை, சீர்களை வைத்தும் அவற்றின் உண்மை வடிவம் கண்டு பிடிக்கப்பட்டது

சான்றாக மூன்றாவது அத்யாயம் 15-வது பாடலில் முதலடியில் **எனது தூணி அத்திரங்கள்** என்று இருக்க வேண்டிய இடத்தில் என்று தானியத்திரங்கள் என்றுள்ளது செனிக்க, உனது, தனுவு என்ற எதுகைகள் மூலமும் அம்பறாத்தூணி என்னும் உரையாலும், **எனது சூலம்** என்னும் எதுகை ஓசையாலும், அசை சீராலும் **எனது தூணி** என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஐந்தாவது அத்தியாயம் 5-வது பாடலில் தாஷ்டிகம் **செய்** என்று முதலடியில் வரவேண்டியது சேய் என இரண்டாமடி முதலில் வந்துள்ளது. **மாயை** என்பதே முதலில் வரவேண்டும். தாயின், மாயை, நேய, சேய என்று எதுகை அமைய

வேண்டும் தாஷ்டிகம் செய் என்று தான் வரவேண்டும் தாஷ்டிகம் சேய் என வரலாகாது **தாயின் கருவில் இருமதலை தேமா, புளிமா, கருவிளங்காய்**, என்பதற்கேற்ப **தரணி உதித்து தாஷ்டிகம்செய்** இரண்டுமா, ஒரு காய் வரவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு சொல்லும், அடியும ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டன.

இதே 5-வது' சருக்கத்தில் 19-வது பாடலில் **நாமமும் நுவலுகின்றான்.** என்பதற்குப் **பெயரிட்டான்** என்று பொருள் எழுதவதற்குப் பதில் **போதித்தான்** என்று தவறான உரை உள்ளது.

எட்டாவது சருக்கத்தில் நான்காவது பாடலில் **எனச் சுரர்** என்பது **எனக்கரர்** என்று அச்சிடப்பட்டுள்ளது.

பதினோராவது சருக்கம் 23ஆம் பாடலில் கசமுகா **ககனம்** என்பது **கசமுகாக்கள்** என்று பதிப்பிக்கபட்டுள்ளது.

இதே சருக்கம் 46, 47 ஆம் பாடல்களின் உரையில் வாதாவி கூறியது அமைச்சர் கூறியது என்பன மாற்றி எழுதப்பட்டுள்ளன. 53-வது பாடலில் மார்க்கண்டனுக்காக எமனை உதைத்தவனே! என்று பாடலில் இல்லாத உரை எழுதப்பட்டுள்ளது. ஏற்று வாகனனே (இடப வாகனனே) என்பதே பாடல் தொடர். 54-வது பாடலில் **மண்டிய** என்பது **மன்றிய** எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 60-வது பாடலில் **திருமாது** என்பது **நுறுமாது** எனவுள்ளது. உபாயம் என்பது பாரம் என்று அச்சிடப்பட்டுள்ளது

பதின்மூன்றாவது சருக்கத்தில் 31-ஆம் பாடலில் பணிக்குழாம் கருடன்காண பதைத்துயிரிழப்ப என்பது மணிக்குழாம் மனத்துயிரிழப்ப என்றுள்ளது. கருடன் காண பதைத்து உயிரிழப்பது பாம்புக் கூட்டமே (பணி) யன்றி மணிக்கூட்டமல்ல. மனத்துயிர் என்னும் சொல்லும் தவறு. பல இடங்களில் நா-நூ மயக்கம் உள்ளது

இங்குக் காட்டப்பட்டவை ஒருசிலவே. சுவடியிலிருந்து எழுதும் போது ஏட்டுச் சுவடியில் புலமை உள்ளவர் எளிதாக எழுதி விடலாம் ஆனால் தவறாகப் பதிப்பித்து விட்டால் அதன் மூலத்தை மனக்கண்ணால் கண்டு பிடித்துச் சரி செய்ய சுவடிபடிக்கும் நேரத்தை விட மிகுதியான நேரம் ஆகும்

இவ்வாறு பல இடர்ப்பாடுகள் இருப்பினும் பதிப்பாசிரியரின் சிற்றறிவுக்கேற்ப ஓரளவு செம்மையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதில் மீண்டும் பிழையிருப்பின் அறிஞர்கள் களைந்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

டாக்டர். கெ. சிவராமலிங்கம்.

நூலாய்வு

நூலின் பெயர்

வன்னிய புராணம் என்பது நூலின் பெயர் **வன்னி** என்பதற்கு 'மரம்' போன்ற வேறு பொருள்கள் இருப்பினும் **அக்கினி** என்பதே இங்கு பொருத்தமான பொருள் ஏனெனில் உலகில் உள்ள அத்துணை பேருக்கும் தீங்கு செய்யும் **'வாதாவி'** என்னும் அரக்கனை வேரோடு அழிக்க அக்கினியிலிருந்து தோன்றியவன் உருத்திர வன்னியன் இவன் சிவபெருமான் அருளால் தோன்றியதால் சிவன் மகன் எனப்பட்டான் வன்னி அதாவது அக்கினி அல்லது நெருப்பிலிருந்து தோன்றியவன் ஆதலால் வன்னியன் எனப்பட்டான். இவன் மரபினரே வன்னியர் எனப்படுவர் எனவே வன்னியர் என்பவர் நெருப்பில் தோன்றியவர். இவர் வரலாற்றைக் கூறுவதே வன்னிய புராணம்,

புராணம் - பொருள்

புராணம் என்றாலே பொய், கட்டுக்கதை, புனை சுருட்டு என்ற கருத்து பரவலாக உள்ளது ஆனால் இக்கருத்து உண்மையன்று. 'இல்லாமல் பிறக்காது, அள்ளாமல் குறையாது' என்பது போல நடந்த சில உண்மைகளை மிகைப்படுத்தி நம்ப முடியாதது போல் கூறுவதுதான் புராணம்.

உலகத் தோற்றம், ஊழி முடிவு இவற்றைக் கூறும்போது புராணம் அறிவியல் நூலாகிறது.

முனிவர் மரபு, மன்னர் மரபு இவற்றைப் பட்டியலிட்டுக் காட்டும்போது வரலாற்று நூலாகிறது. அரிச்சந்திர புராணம் அரிச்சந்திரன் வரலாற்றையும், பெரிய புராணம் அடியார் வரலாற்றையும் கூறுவது நோக்கத் தக்கது.

கதைகளைக் கூறுவதால் நாட்டுப்புற இலக்கியம் ஆகவும், ஒழுக்க நெறியை வலியுறுத்துவதால் அறநூல் ஆகவும விளங்குகிறது.[1]

புராண இலக்கணம்

இறையனார் களவியல் உரையில் முசசங்க வரலாற்றை எடுத்துக் கூறும் நக்கீரர், சங்ககாலப் புலவர்க்கு நூல், அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூதபுராணமும் எனக் கூறுகிறார்.[2] எனவே சங்ககாலப் புலவர்களுக்குத் துணை புரிந்த நூல்களுள் புராணமும் ஒன்றென்பது புலனாகிறது. இலக்கண நூல்களோடு வைத்து எண்ணப்படுவதால் புராணமும் இலக்கணமாய் இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.

இலக்கியங்களுக்கு இலக்கணம் வகுக்கும் பாட்டியல் நூல்கள்,

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாக"[3] எனவும்

"அறமுதல் நான்கினும் ஆக்கப் பெறுவது
காப்பியம் புராணமாய்க் கருதவும் பெறுமே"

எனவும் கூறுகின்றன. எனவே, புராணம், இலக்கியம் என்பதும், காப்பியத்துக் கீடாகவே கருதப்பட்டது என்பதும் தெளிவாகிறது.

---

1 கோலவரைத் துயிலரஙகன் சரிதம் ப-9

2 இறையனார் அகபபொருள் நக்கீரர் உரை நூற்பா-1

3 பிரபந்த மரபியல நூறபா - 1

4 மேறபடி நூற்பா - 2

புராண வகை

புராண இலக்கியங்களை இரண்டு வகைப்படுத்தலாம், 1, மகாபுராணங்கள் 2 உபபுராணங்கள் இவை தவிர, இறைவனின் தலம், தீர்த்தம், மூர்த்தி பெருமை கூறும் தல புராணங்களும் உண்டு. இவை பெரும்பாலும் ஏதாவதொரு புராண மூலத்திலிருந்து வந்தவையாகவே காணப்படும். மகாபுராணங்கள் பதினெட்டு. உபபுராணங்கள் பதினெட்டு.

மச்சம் கூர்மம் வராகம் வைணவம்
பத்மம் பிரமம் பாகவதம் சைவம்
மார்க்கண்டேயம் காந்தம் வாமனம் காருடம்
பிரமாண்டம் லிங்கம் பிரமகை வர்த்தம்
மவுடிகம் நாரதம் ஆக்கி னேயம்
பாற்படு பதினெண் புராணம் என்ப

என்பது திவாகரம் (2453) இவை மகாபுராணங்கள் இப்பதினெட்டு புராணங்களே வேறு ஒரு பாடலில் வேறு வரிசையில் காட்டப்படுகின்றன

பிரமநற் பதுமம் வைணவம் சைவம்
பேருல கேத்துபா கவதம்
அருள்தரு நார தீயமார்க் கண்டம்
ஆக்கினே யம்பவி டியமே
கருதரும் பொருள்சேர் பிரமகை வர்த்தம்
இலிங்கம் வராகமெய்க் காந்தம்
மருவுவா மனம்சொல் கூர்ம நீண் மற்கம்
காருடம் சிறந்த வாயவியம்

1. பிரமபுராணம் (பிராமியம்)

உலகத்தோற்றம், சூரிய குலமன்னர் மரபு, சந்திரகுல மன்னர் மரபு இவற்றைக் கூறும் இந்நூல் சிவத்தலங்கள், வைணவத் தலங்கள்

ஆகியவற்றின் வரலாற்றையும் கூறுகிறது. எனவே தலபுராணங்களுக்குப் பதினெண் புராணங்களே அடிப்படை.

2. பதும புராணம் (பாத்மம்)

பிரமனின் தோற்றம், உலகத்தோற்றம் இவற்றோடு மேலுலகம், கீழுலகம் ஆகியவற்றின் அமைப்பு, சிறப்பு இவைகளும் இதில் கூறப்படுகின்றன மேலும் பலதீர்த்தச் சிறப்புகளும், நாராயண மந்திரத்தின் பலனும் கூறப்படுகின்றன

3. வைணவ புராணம் (விஷ்ணு புராணம்)

இந்நூலும் உலகத்தோற்றம், உயிர்களின் தோற்றம் கூறுவதோடு ஏழுகண்டங்கள், சுவர்க்கம், நரகம், கிரகங்கள் ஆகியவற்றின் இலக்கணமும் கூறுகிறது அரச நீதியும் உலக முடிவும் கூட இதில் இடம் பெறுகின்றன.

4. சைவ புராணம் (வாயு புராணம்)

சிவலிங்க வழிபாடு, தலம், தீர்த்தம், சிபெருமானின் தக்கயாகம், திரிபுரதகனம், கணபதி, கந்தன் பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் தோற்றம் ஆகியவை இப்புராணத்தில் பேசப்படுகின்றன

5. பாகவத புராணம் (சுகர் பாகவதம்)

அறிவு, செல்வம், வீரம், புகழ், ஞானம, ஆசையின்மை ஆகிய அறுவகைக் குணங்களையுடைய திருமாலின் வரலாறு கூறுவது பாகவத புராணம். இந்நூல் வியாசரால் சுகருக்கு உபதேசிக்கப் பட்டது. எனவே சுகர் பாகவதம் என்றும் பெயர் பெறும் இந்நூலில் எவை எவை செய்யக் கூடாது என்பனவும் கூறப்படுகின்றன இது தவிர அம்பிகையின் வரலாறு கூறும் தேவி பாகவதம் என்ற நூலும் உண்டு.

6. நாரதீய புராணம்

இந்நூல் திருமாலுக்குரிய துதிகள், விரதங்கள், புண்ணிய காலங்கள் ஆகியவற்றைக் கூறுகிறது. மேலும் துருவ சரித்திரம்,

பிரகலாத சரித்திரம், உருக்குமாங்கதன் மகள் மோகினி சரித்திரம், ஆகியவையும் பல தரும நெறிகளும் இதில் இடம் பெறுகின்றன.

7. மார்க்கண்டேய புராணம்

விஷ்ணு மனிதப் பிறவி எடுத்ததன் காரணம், பாண்டவர் ஐவருக்கும் திரௌபதி மனைவியான காரணம், பலராமர் பிரமகத்தி தோஷத்தால் வருந்திய காரணம், கிருஷ்ணார்ச்சுனர் அகால மரணத்துக்குக் காரணம் ஆகியவை விளக்கப்படுகின்றன.

8. ஆக்கினேய புராணம் (அக்கினி புராணம்)

இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை, பாகவத புராணம், ஹரி வம்சம் ஆகியவற்றின் சாரம் அடங்கியது இப்புராணம். மேலும், யாகமுறைகள், திருமால் தீட்சை, சிவபூசை, பிரபஞ்ச இலக்கணம், அரசர் ஆட்சி முறை, பொருளாதார மேன்மை, நோய் நீங்க மருந்து, முடி சூட்டும் விதி, ஆலய நிர்மாணம், விக்கிரக நிர்மாணம், யாத்திரை விதி, தரும முறைகள் ஆகியவற்றைத் தெளிவு படுத்தும் நாகரிகச் சின்னமாக இப்புராணம் விளங்குகிறது.

9. பவிஷ்ய புராணம்

பவிஷ்யம் என்பது நிகழ இருப்பது என்னும் பொருளை உணர்த்துவது. பிரதமை முதல் முப்பது திதிகளிலும் (வளர்பிறை 15 தேய்பிறை 15) கடைப்பிடிக்க வேண்டிய விரதங்களைக் கதைகள் மூலம் உணர்த்துவதால் இது விரதபுராணம் எனவும் பெயர் பெறும். கலியுக அரச வம்சங்களை முன்கூட்டியே கூறுகிறது. கண் இமைக்கும் காலம் முதல் மநுக்கள் காலம் வரை காலவகைகளையும் கூறுகிறது. பூத இலக்கணம், உலகநீதி, ஆதித்தன் வரலாறு ஆகியவற்றையும் கூறுகிறது.

10. பிரம கைவர்த்த புராணம்

இந்நூல் பிரமத்தைப் பற்றி விவரிப்பது. மச்ச புராணத்தின் ஒரு பகுதி மட்டும் இதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தேவதைகளை

வழிபடும் முறைகளைக் கூறுகிறது. தேவதைகளுக்குரிய மந்திரங்கள், கவசங்கள், தோத்திரங்கள் ஆகியவையும் கூறப்படுகின்றன கிருஷ்ண சரிதமும், இராதா கல்யாணமும் இந்நூலுள் இடம் பெறுகின்றன

11. இலிங்க புராணம்

ஏகாதச ருத்திரர் எனப்படும் பதினோரு ருத்திரர்களைச் சிறப்பித்து, லிங்க பூசை மந்திரம், திருநீறு, உத்திராட்சம், ஆகியவற்றின் பெருமைகளும், துருவன், ஆதித்தர் பெருமைகளும் இந்நூலுள் கூறப்பபடுகின்றன.

12. வராக புராணம்

திருமால் வராக அவதாரத்தின் போது பூமிதேவிக்குக் கூறியதாக அமைந்துள்ளது இப்புராணம். சிவனது பெருமை கூறப்படுகிறது. விரத பலன்களும், இரணியன், இரணியாட்சன் வரலாறுகளும் கூறப்படுகின்றன.

13. கந்தபுராணம் (ஸ்காந்த புராணம்)

இது உத்தரஸ்கந்த புராணம், தட்சிணஸ்கந்த புராணம் என இரு பிரிவுகளாக உள்ளது. முருகப் பெருமானின் பிறப்பு முதல் வள்ளி கல்யாணம் வரையுள்ள செய்திகள் இடம் பெறுகின்றன. மன்மதன் எரிக்கப்படுதல், இரதி புலமபல் ஆகிய செய்திகளும் இடம் பெறுகின்றன.

14. வாமன புராணம்

திருமால் வாமனனாகப் பிறந்து மூவடி மண்கேட்டு உலகளந்த செய்தி கூறுவதோடு, தக்கயாகம், சிவபெருமான் பார்வதி உரையாடல், மன்மதன் மலரம்பு எய்தல், பிரமனும் திருமாலும் அடிமுடி காணல் ஆகிய சிவனைப் பற்றிய செய்திகளையும் இது கூறுகிறது.

15. கூர்ம புராணம்

இதுவும் தேவரும் அசுரரும் திருமால் ஆமை வடிவம் எடுத்து பாற்கடலைக் கடைந்தபோது மந்தரமலையைத் தாங்கிய செய்தியைக் கூறுவதோடு சிவபெருமான் கதைகளையும் கூறுகிறது

16. மச்ச புராணம்

அசுரன் வேதங்களைக் கவர்ந்து கடலில் ஒளித்த போது திருமால் மீனாக மாறி அவற்றைக் காக்கும் கதையாகிய வைணவக் கதையும், புரூரவ சரிதம், யயாதி சரிதம், பார்வதி திருமணம், கந்தர் பிறப்பு ஆகிய சைவக் கதைகளும் இப்புராணத்தில் இடம்பெறுகின்றன.

17. கருட புராணம்

திருமால் கருடனுக்கும், கருடன் காச்யபனுக்கும் உரைத்த செய்தி அடங்கிய நூல். இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகியவற்றின் சாரமும் மருத்துவம், சோதிடம் நவரத்தினங்களைத் தேர்வு செய்யும் முறை அறுபது ஆண்டுகளின் பெயர்கள், கருட சரித்திரம், உடல் உறுப்பு இலக்கணம் ஆகியவையும் இந்நூலின் செய்திகள்.

18. பிரம்மாண்ட புராணம்

பிரம்மா ஓரண்டமாக மேலேழு அண்டங்கள் கீழேழு அண்டங்கள், கால அளவை ஆகியவற்றைக் கூறுவது பிரம்மாண்ட புராணம்.

உபபுராணங்கள்

சனற்குமார புராணம், சிவதரும புராணம், துருவாச புராணம், நாரத புராணம், கபில புராணம், அவுசன புராணம், சௌமிய புராணம், வருண புராணம், காளி புராணம், வாசிட்ட புராணம், சௌர புராணம், மாலை புராணம், சாம்பேச புராணம், பார்க்கவ புராணம் போன்றவை.

இவற்றை ஒட்டியே பல புராணங்கள் தமிழிலும் எழுந்தன அவற்றுள் ஒன்றே வன்னிய புராணம்.

ஆசிரியர்

இந்நூலின் தலைப்பில் மதுரை, சுந்தரபாண்டிய மகாராஜாவின் சமஸ்தான வித்வான்களில் ஒருவராகிய கி. வீரப்பிள்ளை இயற்றிய வன்னிய புராணம் என்று காணப்படுகிறது. எனவே இதன் ஆசிரியர் வீரப்பிள்ளை என்பது தெளிவாகத் தெரிகிறது. முதல் அத்தியாயம் பதினாறாவது பாடலில் கிருஷ்ணன் பாலன் வீரகுமாரன் என்பது காணப்படுகிறது.

அன்றியும் நூலின் இறுதி அத்யாயம் இருபத்து நான்கு, இருபத்து ஆறு, இருபத்து ஏழாம் பாடல்களில் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வியாசன் சனகனுக்கு வடநூலால் உரைத்ததை **மீனவன் கேட்கக்** கூறினேன் என்றும் (24) **வன்னிய வீரனின் புராணத்தை (பாடல் 1057) 1073** பாடல்களால் வேதத்தில் சொன்ன கதையை ஆராய்ந்து செந்தமிழில் கூறினேன் என்றும் (26) கூறுவதிலிருந்து இவர் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் மன்னர் (வன்னியர்) மரபில் தோன்றியவர் என்பதும், இவரது தந்தை பெயர் கிருஷ்ணன் என்றும் தெரியவருகிறது. இதில் வர்மன் என்பது வன்னியர்களின் பட்டப்பெயர் ஆகும்.

காலம்

சுந்தர பாண்டியன் என்ற பெயரில் மாறவர்மன், சடையவர்மன் என்ற பட்டப் பெயர்களோடு பல மன்னர்கள் 13-ஆம் நூற்றாண்டு முதல் மதுரையை ஆண்டிருக்கின்றனர் பிற்கால பாண்டியர் ஆட்சியில், சுந்தர பாண்டியன் காலத்தில் வீரப்பிள்ளை என்ற புலவர், வன்னிய புராணம் என்ற நூலை எழுதியுள்ளார் இதில் (வீரப்)

பிள்ளை என்பது தலைவர், இளவரசன் என்று பொருள்படும் பிள்ளை என்பது வன்னியர்களின் பட்டப் பெயர்களில் ஒன்றாகும் ஆகவே, வீரப்பிள்ளை என்ற புலவர் வன்னியர் மரபில் வந்தவர் என்பதும், இந்நூலின் காலம் கி.பி. 13 ஆம் (சுந்தரபாண்டியன்) நூற்றாண்டாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

வழிநூல்

மன்னு காதை வடமொழி யானதைப்
பன்னு செந்தமிழ் ஆனபண் பாவினால்
இன்ன லின்றி இயம்பக் கேண்மினோ (பாடல் 21)

வடமொழியில் கூறியதைத் தமிழில் பாடுகிறேன் என்று கூறுவதால் இது வழிநூல் என்பது தெரிகிறது. 19, 20 ஆம் பாடல்களில், பரமசிவன் நந்திக்கு உரைக்க. நந்தி வியாசருக்குரைக்க வியாசர் சூதனுக்கு உரைக்க. சூதன் சகைருக்கு உரைத்த வன்னிய புராணத்தைச் சனகர் அத்திரிக்குக் கூறுவதாக உள்ளது. 30 ஆம் பாடல் ஆக்கினேய புராணத்திலுள்ள கதை என்று குறிப்பிடுகிறது. எனவே இதன் முதல் நூல் வடமொழி ஆக்கினேய புராணம் என்று தெரிகிறது

நூலமைப்பு

எல்லா நூல்களையும் போலவே விநாயகர் காப்புடன் நூல் துவங்குகிறது ஆசிரியர் பரமசிவம், பராசக்தி, முருகன், வீரபத்திரன், நால்வர், நாயன்மார், நந்திதேவர், தண்டியடிகள், சரஸ்வதி ஆகிய தெய்வங்களைப் போற்றுகிறார்.

அவையடக்கமாக நான்கு பாடங்களில், "அன்ன பட்சிக்குக் கொசு ஈடாகுமோ" என்றும், "பூவோடு சேர்ந்த நாறும் மணம பெறும" என்றும், "அறிவுடையோர் அறிவில்லாதவரைத் தள்ள மாட்டார்" என்றும் கூறுகிறார்

அதன் பிறகு கூடல் மன்னன் சுந்தர பாண்டியன் "வன்னிய புராணம் ஓது" எனக் கூற "மதுரை மேல வாயில் கிருஷ்ணன் பாலன் வீரகுமாரன் ஓதினேன்" என்று கூறுகிறார் கதைச் சுருக்கமாக, காசிபன் மகள் அசோமுகியின் பிள்ளை வாதாவி சிவனிடம் பெற்ற வரத்தால் அக்கிரமம் செய்ய சம்பு முனிவர் யாகத்தில் வன்னிய வீரர் உதித்து வாதாவியை அழித்த கதையைச் சிவன் நந்திக்குரைக்க, நந்தி வியாசனுக்குரைக்க. வியாசன் சூதனுக்குரைக்க சூதன் சனகனுக்குச் சொல்லச் சனகன் அத்திரிக்குக் கூறியதை வடமொழியிலிருந்து தமிழில் சொன்னேன் என்று கூறுகிறார்.

முப்பத்தோரு அத்யாயங்களில் ஆயிரத்து அறுபது பாடல்களில் கதையைக் கூறுகிறார். ஆனால் நூலில் 1073 பாடல்களால் சொன்னேன் என்று கூறுகிறார். ஏதாவது ஒரு அத்யாயமோ அல்லது பதின்மூன்று பாடல்களோ ஏடு பார்த்து எழுதுவோர் பிழையால் விடுபட்டிருக்கக் கூடும்.

இராமாயணம், பாரதம், கந்தபுராணம் போலவே தூது செல்லல் தீய அரசன், அல்லது அரக்கன் நல்லோர் சொல்லைக் கேளாமல் யுத்தத்துக்குச் சம்மதித்தல், தம்பிகள் முதலில் யுத்தம் செய்தல், பின் மகன்கள் யுத்தம் செய்தல், இறுதியில் அரசன் யுத்தம் என்று பதினோரு நாள் சண்டை, நகர் அழித்தல், முடி சூட்டல் என்னும் அமைப்பில் கதை செல்கிறது.

இறுதியில் எழுதியவர் பெயருடன் வாழ்த்துக்கள் இடம் பெறுகின்றன நூலின் பயனும் கூறப்படுகின்றது

ஒவ்வொரு சருக்கத்திலும் சனகர் அத்திரிக்குக் கூறுகிறார் என்று நினைவு படுத்திக் கொண்டேயிருக்கிறார் ஆசிரியர். இது புராண மரபு இதனால் கதையோட்டம் தடைப்படுகிறது

பாடல் அமைப்பு

நூல் முழுவதும் விருத்தப் பாக்களால் அமைந்துள்ளது மூன்று சீரால் அமைந்த சில பாடல்களும், சில கலித்துறைகளும் உள்ளன பெரும்பாலும் நான்குசீர் விருத்தங்களே (கலிவிருத்தம்) இடம் பெற்றுள்ளன அறுசீர் எழுசீர் விருத்தங்கள் அடுத்து இடம் பெறுகின்றன

எழுசீர் விருத்தம்	166
அறுசீர் விருததம்	373
கலித்துறை (5 சீர்)	25
கலிவிருததம் (4 சீர்)	475
மூன்று சீர்ப்பாடல்கள்	21
மொத்தப பாடல்கள்	1060

கதைச் சுருக்கம்

சனக மகரிஷி பர்ண சாலைக்கு முனிவர்கள் வருகின்றனர் அத்திரி முனிவர் சனகரிடம் ஏதேனும் புண்ணியக் கதை கூறுங்கள் எனக் கேட்கச் சனகர் “வீரவன்னியன் கதை சொல்கிறேன்” என்கிறார்

தக்கன் யாகம், சூரபத்மன் அழிதல்

முதலில், யுகமுடிந்து மீண்டும் படைத்த கதை கூறுகிறார். முனிவர்களைப் படைத்த பிரமன், தக்கன், பிருரு, காசியபர், மரீசி, அந்தணர், அரசர், வைசியர் வேளாளர் ஆகியோரைப் படைக்கிறார். பார்வதி தக்கன் மகளாய்ப் பிறக்கிறாள். சிவனை மணக்கிறாள் தக்கன் இறைவனை மதிக்காமல் யாகம் செய்கிறான் யாகத்துக்குச் சென்ற பார்வதி தக்கன் அவமதிப்பால் அவனைச் சபித்துத் திரும்புகிறாள். இறைவன் வீரபத்திரனை அனுப்ப, வீரபத்திரன் தக்கனை அழிக்கிறான். தக்கன் ஆட்டுத்தலை பெறுகிறான் தேவர்கள் தக்கனுக்கு உதவியதால் இராக்கதர்களால் துன்பம் அடைட்வீர்கள்

எனச் சாபமிடுகிறான் இறைவன் இதனால் மாயை என்றொரு பெண்ணைப் படைக்கிறான். மாயை காசிபரைச் சேர்ந்து சூரபத்மன், சிங்கமுகன், கஜமுகன், ஆகிய பிள்ளைகளையும், அசோமுகி என்ற பெண்ணையும் பெறுகிறாள். சூரன் தேவர்களைத் துன்புறுத்த, பிள்ளைகள் மூவரும் முருகப் பெருமானால் வதம் செய்யப்படுகின்றனர்.

வாதாவி வில்லவன் பிறத்தல், வில்வலன் அழிவு

அசோமுகி வேசியாகித் துருவாசரைச் சேர்ந்து தன் அண்ணனைக் காட்டிலும் வலிமை பெற்ற வாதாவி, வில்வலன் என்ற இரு பிள்ளைகளைப் பெறுகிறாள் இருவரும் முனிவர்களை உண்ணப் புதிய உத்தியைக் கையாண்டனர். வில்வலன் உணவுப் பொருளாக மாறி முனிவர் வயிற்றில் சென்று வயிற்றைக் கிழித்து வெளிவர, இருவரும் முனிவரை உண்பது வழக்கம். ஒருநாள் அகத்திய முனிவரிடம் தங்கள் கைவரிசை காட்ட அகத்தியர் வில்வலனைச் சீரணம் செய்து விட்டார். வருத்தமடைந்த வாதாவி பூமியில் புரண்டு அழுது மிகவும் துன்புற்றான்.

வாதாவி தவம் புரிந்து வரம்பெற்றுக் கொடியவனாதல்

சிவன் அருளால் வாதாவி சிவனைக் குறித்துக் கடுந்தவம் செய்யச் சிவன் காட்சி கொடுக்கிறார் பிரமனும், தேவர்களும் ஏவல் செய்யவும், தேவராண்டில் ஆயிரம் ஆண்டு வாழவும், ஒரு அம்பு விட்டால் அது ஆயிரம் அம்பாக மாறவும், எதிரிகள் இல்லாமல் பல மோடு வாழவும் வரம் பெறுகிறான் வாதாவி. மயனை அனுப்பிக் கடல் நடுவே நகரம் அமைத்துக் கொடுத்து மயன் மகளையும் மணம் செய்து கொடுக்கிறார் சிவன். சுக்கிரன் அருளால் எண்ணற்ற அரக்கர்களைப் படைத்துக் கொண்ட வாதாவி ஆணவத்தினால் அடக்கமின்றி எட்டுத்திசைகளையும் கொள்ளையடித்துத் தேவர்

நகரையும் கொள்ளையடித்துத் தேவரையும், முனிவரையும், அட்டதிக்குப் பாலரையும் துன்புறுத்தினான்

வீரவன்னியர் தோற்றம் வாதாவி அழிவு

தேவர்கள் துன்புற்றதனால் நாரதரைச் சிவனிடம் தூதனுப்பினர். நாரதர் வாதாவியின் கொடுமைகளைச் சிவனிடம் கூறினார். சிவபெருமான் "வாதாவி யாராலும் இறக்கமாட்டான். என்ன செய்வது?" என்று திருமாலிடம் கேட்க, திருமால் "உன்னுடைய நெற்றிக்கண் வியர்வை நீரின் மூலம் வேள்வியிலிருந்து உதிக்கும் வீரனே வாதாவியை அழிப்பான்" என்றார். எனவே இமயமலையின் வடபக்கம் சம்பு மகரிஷியிடம் அனைவரும் சென்றனர். சம்பு மகரிஷியை யாகம் செய்யும்படிக் கூறினர். யாககுண்டம் அமைத்து அந்நாட்டிற்குச் சம்பு தேசம் என்று பெயர் சூட்டிப் பங்குனி உத்திரத்தில் நெற்றிக் கண் வியர்வையைச் செங்கழுநீர்ப் பூவோடு நெருப்பில் ஆகுதி கொடுக்க நெருப்பிலிருந்து அக்கினிக் குதிரையோடு ஆடை, ஆபரணம், வில், அம்புடன் வீரவன்னியன் தோன்றினான் இந்திரன் மகள் மந்திர மாலையைத் திருமணம் புரிந்தான். வீரவன்னியனும் மந்திரமாலையும் சிவபெருமானிடம் தங்களுக்குப் பிள்ளைகள் அருளும்படி வேண்ட சிவபெருமான் நான்கு பிள்ளைகளை அருளினார். நான்கு பேரும் நான்கு குதிரைகளுடன் செங்கழுநீர் மாலைகளுடன், கையில் வில்லுடன், தோன்றினர். கிருஷ்ண வன்னியன், பிரமவன்னியன், சம்பு வன்னியன் அக்கினி வன்னியன் எனப் பெயரிடப்பட்டனர். நான்கு பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து ஏராளமான படைகளையும், வீரர்களையும் படைத்து ஐந்து வன்னியர்களுக்கும் வாழ்த்தும் அத்திரங்களும் வழங்கினார் சிவன். ஏனைய கடவுளரிடமும் அத்திரம் பெற்று ஐந்து வன்னியரும் வாதாவியை அழிக்கப் புறப்பட்டனர் துர்க்கையின் உதவியால் கடல் கடந்தனர்

நாரதரைத் தூதனுப்பித் தேவரை விட்டு விடும்படியும் இல்லையேல் போருக்கு வரும்படியும் செய்தி கூறினர் வாதாவி ஒப்புக் கொள்ளாமல் படையெடுக்க அவன் பிள்ளைகளும் படைகளும் அழிந்து அவனும் அழிந்தான். வீரவன்னியர் வாதாவியின் நகராகிய இரத்தினாபுரியை அழித்துத் திரும்பி வந்து முடிசூட்டி அரசாண்டனர். மந்திரமாலை கருவுற்று ஒரு மகனை ஈன்றாள் அம்மகனுக்குச் சந்திரசேகர வன்னியன் என்ற பெயர் சூட்டினர். அவன் பெரியவனானதும் சோழ அரசனின் மகனை மணம் செய்வித்தனர். சந்திரசேகர வன்னியனும் நல்லாட்சி செய்து தேவேந்திரன் போல் வீற்றிருந்தான் இதுவே கதை

நூலின் சிறப்பு

நூலின் ஆசிரியர் வாழ்வியல் அநுபவம் மிக்கவர் என்பதும், இலக்கண இலக்கியங்கள் பயின்றவர் என்பதும் நூலைப் படிப்போர்க்கு இனிது விளங்கும். புணர்ச்சி விதிகள் பாடல்களில் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. ஆனால் படிப்போரின் எளிமைக்காகப் பதிப்பில் சொற்கள் கூடிய வரை பிரித்துத் தரப்பட்டுள்ளன.

வாழ்வியல் அநுபவம்

யாகம எவ்வாறு செய்வது என்ப்தையும் திருமணச் சடங்குகள் எவ்வாறு நிகழும் என்பதையும் இந்நூலில் ஆசிரியர் இயல்பாக எடுத்துக் கூறுகிறார்

யாகச் சடங்கு

ஆயிரம் யோசனை நீளம் ஆயிரம் யோசனை அகலத்திற்கு ஊர் அமைக்கப்பட்டு அதில் யாகம் செய்யுமிடம் அமைக்கப் படுகிறது பசும் பொன்னால் சுவர் எழுப்பி, வச்சிரக் கல்லால் உத்தரம் அமைத்து, பவளத்தால் தூண் நிறுத்தி, பொன்னாலும், மணியாலும்

போதிகை அமைக்கப்படுகிறது புஷ்பராகக் கல்லால மேற்கூரை வேயப்படுகிறது. அதன்மேல் செப்போடு வேயப்படுகிறது

மரகதக் கற்களால் தளம் அமைக்கப்படுகிறது. நவரத்தின கும்பம அமைக்கப்படுகிறது சுற்றிலும் முத்துமாலைகள் தொங்கவிடப்படுகின்றன இடையே யாகம் செய்யும் இடம் காமதேனுவின் சாணத்தால் மெழுகப்பட்டு, புண்ணியாவசனம் செய்து யாககுண்டம் அமைக்கப்பட்டு பூரண கும்பம் வைக்கப்படுகிறது. யாக குண்டத்துக்கு நான்கு வாசல்கள் அமைக்கப்படுகின்றன. மேற்கு வாசலில் விநாயகர் கிழக்கு வாசலில் முருகன், வடக்கு வாசலில் துர்க்கை, தெற்கு வாசலில் பைரவர் நிறுத்தப்படவேண்டும். என்னும் முறையை ஆசிரியர் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார். யாகத்திற்குத் தேவையான பொருள்களாக அவிசு, பசுநெய், எள்ளு, வெல்லம், தேங்காய், தருப்பை, மாவிலை, வெற்றிலைபாக்கு ஆகியவை கூறப்படுகின்றன. யாகம் வளர்க்கும் முறையையும் கூறுகிறார் ஆசிரியர்.

திருமணச் சடங்கு

பத்து பொருத்தம் பார்க்க வேண்டும் என்ற நியதியை உருத்திர வன்னியன் திருமணத்தின் மூலம் உணர்த்துகிறார் விநாயகனைப் போல் உருவம் செய்து சரட்டில் கோர்ப்பதே வன்னியர்க்குரிய தாலி என்பதை விளக்குகிறார் மணவறை ஜோடித்தல், அரசாணிக் கால் நாட்டல், பாலிகை முளைக்க வைத்தல், குயவன் பந்தலைத் தொட்டு மண்கலசம் செய்யும் பந்தமுட்டி என்னும் சடங்கு, தீ மூட்டி மந்திரம் ஓதுதல், சரடு அணிவித்தல், அக்கினியை மும்முறை வலம் வருதல், மைத்துனன் நெற்பொரி இடுதல், அம்மி மிதித்தல், மாமனும் மாமியும் நெற்றிப்பட்டம் கட்டுதல், விருந்தூட்டுதல், மருவூட்டல் என எல்லாச் சடங்குகளையும் விரிவாக விளம்புகிறார் இதனால் ஆசிரியரின் உலக அனுபவம் தெள்ளத் தெளிவாகப் புலப்படுகிறது

பிறநூல் அறிவு

துர்க்கையிடம் பேய்கள் "போரில்லாமல் நாங்கள் பசியால் வாடுகிறோம் முருகன் சூரபத்மனை அழித்த பின் எங்களுக்கு உணவேயில்லை" என்று முறையிடுகின்றன துர்க்கை "பொறுங்கள் வன்னியன் வாதாவியுடன் போரிடுவான், அப்போது உணவளிப்பேன்" எனக் கூறுகிறாள். போர் மூண்டு வன்னியன் வெற்றி பெற்றதும் பேய்கள் உணவு பெற்று மகிழ்கின்றன. இவற்றைப் பரணி நூல்களின் அடிப்படையில் பாடியுள்ளார் ஆசிரியர்.

இராமாயணத்தில் இராமன் அங்கதனை இராவணனிடம் தூதனுப்புகிறான். அப்போது இராவணன் அங்கதனிடம் "வாலி மகனா நீ, இராச்சியம் முழுவதும் உனக்களிப்பேன்" என்று கூறுகிறான் அங்கதன் நகைத்து "நாய்தரக் கொள்ளுமோ சீயம்" (நாய் கொடுப்பதைச் சிங்கம் ஏற்குமோ) என்கிறான். அதேபோல் இவ்வன்னிய புராணத்திலும் வாதாவி உருத்திர வன்னியனிடம், "சிறுவனாக இருக்கிறாய், உன்னைக் கொல்ல மனம் வரவில்லை. தேவலோகத்தையே நான் உனக்குத்தருகிறேன், திரும்பிப் போ" என்று கூற, "ஞமலி அளித்திடும் சுகவாழ்வு அரிதனக்கொக்காது" என்கிறான் உருத்திர வன்னியன் (பாடல் 853) (ஞமலி - நாய். அரி - சிங்கம்) "என் மாமனார் தேவேந்திரன் அவர் எனக்குச் சீதனமாகவே தேவலோகத்தை அளிப்பார். அப்படி இருக்க நீயா தருவது?" என்று எள்ளி நகையாடுகிறான், இவ்விடத்தில் கம்பராமாயணத்தை நினைவூட்டுகிறார் ஆசிரியர்

புராணம் கற்றவர்

மேலும் ஆசிரியர் புராணங்களை நன்கு பயின்றவர் என்பது நூல் முழுவதும் இவர் கூறும் புராணச் செய்திகளால் போதருகின்றது.

சிவன் மார்க்கண்டனுக்காக எமனை உதைத்தது, முப்புரம் எரித்தது, பிரமன் தலையைக் கொய்தது, யானையை உரித்துப் போர்த்தது, தக்கனை அழித்தது ஆகிய வீரச் செயல்கள் நூல் முழுவதும் இடம் பெறுகின்றன. துர்க்கை தாருகன் உரம் (வலிமை) கிழித்த செய்தி, சிறுத்தொண்டரிடம் சிவன் பிள்ளைக் கறி கேட்டது, திருநீலகண்டருக்கு அருளியது, கண்ணப்பன் கண்ணைத் தோண்டிச் சிவனுக்கு அப்பியது, இரணியன் வரலாறு, ஆலகால விடத்தை இறைவன் உண்டு நீலகண்டனானது, ஆகியவை ஆங்காங்கே சுட்டப்படுகின்றன

போர் நடக்கும் போது அசுரர்கள் ஆகாயம் முழுவதும் மறைந்து சூரியனையே மறைத்தனர் உருத்திர வன்னியன் அம்பு விட்டு அசுரர் தலைகளைக் கொய்தான் அவை பனங்காய் உதிர்வது போல் உதிர்ந்தன. இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் ஆசிரியர் இவ்விடத்தில் ஒரு புராணச் செய்தியைப் புகுத்துகிறார் ஆதிசேடன் வாயு இருவரும் யார் பெரியவர் என்று வாக்கு வாதம் செய்ய ஆதிசேடன் மேரு மலையைத் தன் உடலால் வளைத்துத் தலையால் மூடினான். வாயு வேகமாக வீசி ஆதிசேடனை அப்புறப் படுத்தி மலையைப் பெயர்க்க வேண்டும். ஆதிசேடன் மலை பெயராமல் காப்பாற்ற வேண்டும். வாயு வேமகமாக வீச ஆதிசேடனை அகற்ற முடியவில்லை. வாயுவின் வேகம் தாங்காமல் எல்லோரும் ஆதிசேடனை வேண்டினர் ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளுள் ஒன்றை மட்டும் லேசாகத் தூக்க மூன்று சிகரங்கள் பறந்து மூன்று திக்கில் விழுந்தன. அவை தென்கடலில் விழுந்தன. ஒன்று இலங்கை, மற்றொன்று மகேந்திர மலை, மூன்றாவது இரத்தினாபுரி இம்மலைகள் விழுந்ததுபோல் அசுரர் தலைகள் சிதறின என்று இங்கு ஒரு புராணக் கதையை உவமையாக்குகிறார்

வருணனை

சிலேடை, மடக்கு போன்ற அணிகள் நூலிள் பயன்படுததப் படவில்லை யென்றாலும் ஆங்காங்கே பொருத்தமான உவமைகளைப் பெய்திருக்கிறார் ஆசிரியர் அவை பெண்களை வருணிக்கும் இடங்களிலும், போர்ச் செய்திகளிலும் இடம் பெறுகின்றன. இந்திரன் மகள் மந்திர மாலையை வருணிக்கும் போது அவள் கூந்தலுக்கு மட்டுமே மேகம், பாசி, அலை, கொன்றைக் காய், கருவண்டு, கருமணல், அமாவாசை இருட்டு ஆகிய அனைத்தையும் உவமை கூறுகிறார் பிறை போன்ற நெற்றி, வில்போல் புருவம், குமிழம்பூ நாசி, நஞ்சும் அம்பும் போன்ற கண், வள்ளைத்தண்டு காது, கண்ணாடி, சாணைக்கல் போன்ற கன்னம், பவளவாய், குயில்போல் குரல், சங்குக் கழுத்து, மன்மதன் கிரீடமோ, மலையோ, யானை மத்தகமோ, பூரண கும்பமோ, தாமரை அரும்போ எனும் மார்பு, ஆலிலை வயிறு, காந்தள் கை, மாந்தளிர் மேனி என வருணிக்கிறார் இதே அரக்கியரை வருணிக்கும் போது, இருள் போன்ற உடல், காடு போன்ற மயிர், அக்கினி போன்ற கண்கள், ஆயிரம் முழம் நீள முடைய கயிறு போன்ற தலை மயிரும், தனங்களும் உடையவர் என்கிறார்

போர்க்களத்தில் அசுரர்கள் மடிந்து கிடக்க, இரத்தம் கடலெனப் பெருகியது விழிகள் கயலாகவும், கணைக்கால்கள் வரால் மீனாகவும் குழிந்த கண்கள் ஓடமாகவும், விருதுக் கொடிகள் பாய்மரமாகவும், அம்பும் வில்லும் பக்கப் பலகைகளகாவும், இராட்சதர் உடல் தாமரை இலையாகவும் வருணிக்கப்படுகின்றன

தற்குறிப்பேற்றம்

போர் முடிந்த பிறகு வன்னிய வீரர்கள் இரத்தினாபுரியைத் தீயிட்டுக் கொளுத்தினர் இரத்தினாபுரிமுழுதும் தங்கமும்

நவமணிகளும் நிறைந்திருந்தன தங்கத்தினாலான மதில்கள் சுற்றிலும் காணப்பட்டன கொள்ளையிட்டவை போக எஞ்சிய பொன்துகள்களையும், கரித்தூசியையும் கடலில் தள்ளினர் அவையே கருமணலாகவும், தங்க மணலாகவும் மாறின. ஆறுகளிலும் அவையே எதிர்த்துச் சென்றடைந்தன என்று இயற்கையாய் உள்ள கருமணலுக்கும், பொன்துகள் போன்ற மணலுக்கும் காரணம கற்பிக்கிறார்.

இலக்கணப் புலமை

வீரவன்னியர் படையெடுத்து வடக்கேயிருந்து தெற்கே வருகின்றனர் வரும்போது ஐவகை நிலமும் கடந்து வருகின்றனர் முல்லை நிலத்தின் கடவுளாகிய திருமாலுக்கு, இடையர் பாலன்னம் அளித்தல், குரவைக் கூத்தாடுதல், தேவேந்திரன் மருத நிலக் கடவுளாயிருந்து விழாக்களால் மகிழ்தல், குறிஞ்சி நிலத்தில் குறவர் முருகனுக்குத்தேன், தினைமாவு அளித்து வெறியாடுதல், நெய்தல் நிலத்தில் நுளையர் வருண தேவனுக்கு விழா எடுக்கக் சுறா முள்ளை நாட்டிப் பந்தலிடுதல், பாலைவனத்தில் மறவர் கொள்ளையடித்தல். துர்க்கையை வணங்குதல், அவர்கள் முற்றத்தில் புலி விளையாடுதல் ஆகியவற்றை வருணிக்குமிடத்து ஆசிரியரின் பொருளிலக்கணப் புலமை புலப்படுகிறது

வன்னியர் பெயர்களும் விளக்கமும்

வன்னியில் (அக்னியில்) உதித்ததால் வன்னியர், சிவபெருமான் நெற்றிக்கண் வியர்வையில் தோன்றியதால் நயனார், பண்டாரமாகிய சிவன் மகன் ஆனதால் பண்டாரத்தார், தேவர்களுக்கு அரசன் ஆனதால் தேவராயன், அரசுடையான் ஆதலால் உடையாா அசுரர் ஆகிய இரும்பை அடிக்கும் சம்மட்டி என்று வன்னியர்க்குரிய பெயர்களையும் அதன் காரணமும் கூறுகிறார் (862 863)

போரறிவு

கருடாஸ்திரம், நாகாஸ்திரம் வருணாஸ்திரம, அக்கினி அஸ்திரம் என்று எதற்கு எது பகையாய் விட வேண்டும் என்பதை அறிந்திருக்கும் ஆசிரியர் பிரமாஸ்திரத்துக்குப் பகையாக சஞ்சீவி அஸ்திரத்தைப் புதுமையாய்க் கூறுகிறார் பிரமாஸ்திரத்துக்குப் பகையே இல்லை. பிரமாஸ்திரம் வந்தால் அதை வணங்கிக் கட்டுப்படுவதே மரபு எல்லா இதிகாச புராணங்களிலும் அப்படிததான் வரும். இராமாயணத்தில் பிரமாஸ்திரத்தால் இலக்குவன் முதலியோர் மயங்கியது இவ்வாறுதான். ஆனால் அநுமன் சஞ்சீவி மலையைக் கொண்டுவந்து அதன் மேலுள்ள காற்றால் அவர்களை எழுப்பியதால் பிரமாஸ்திரத்துக்கு எதிராகச் சஞ்சீவி அஸ்திரம் விட்டதாகக் கூறுகிறார் இந்நூல் ஆசிரியர் இது இவருடைய கற்பனையா முதல் நூலிலுள்ளதா என்பது தெரியவில்லை

இன்னொரு வன்னிய புராணக் கதை

இந்நூலுக்குப் பின் பதிப்பிக்கப் பட்ட வேறு ஒரு வன்னிய புராணத்தில் கதையைச் சில இடங்களில் மாற்றி அமைத்துள்ளனர்

வன்னியபுராணக் கதையைத் தமிழ் நாடடில் திருவானைக்காவில் நடநததாகக காட்டியுள்ளனர் சுமித்திரர், சுசீலை என்ற இருவருக்கும சம்பு கேசுவரப் பெருமான் அருளால் சம்பு என்ற பிள்ளை பிறநததாகக் கூறப்படுகிறது. சம்பு கடியதவம் மேறகொள்கிறார் சம்புவின் தவத்தைக் கண்டு "பதவி பறிபோய் விடுமோ" என்று அஞ்சிய தேவேநதிரன் சிவபெருமான். உமாதேவியின் உதவியால் உமாதேவியின சிரிப்பிலிருந்து தோன்றிய அசயந்தி என்பவளைச் சமபு முனிவருக்குத திருமணம் செய்து கொடுத்து அவரைச் சமசாரி ஆக்கி விடடான

விப்ரசித்து என்பவனின் மக்கள் வாதாவி, இனதாவி இவர்கள் இரததினாகரத்தை ஆண்டனர். பிரமனை நோக்கித் தவம் செய்து

பிரமாஸ்திரம் பெற்றனர் சிவனை நோக்கித் தவம் செய்தும் சிவன் காட்சி தராததால் வாயுஸ்தம்பன மந்திரம், அக்கினிஸ்தம்பன மந்திரம் உச்சரிக்க உலகமே இயக்கம் நின்றது அதனால் சிவன் காட்சி தந்தார். அரக்கர் இருவரும் யாராலும் எதனாலும் சாகா வரம் பெறுகின்றனர். வரம் பெறும்போது அக்கினியை மட்டும் மறந்தனர் வரம் பெற்ற பின் எல்லோரையும் கொடுமைப்படுத்தினர்.

வாதாவி இனதாவி கொடுமையைப் போக்கச் சிவபெருமான் உமாதேவியைச் சம்பு முனிவரிடம் அனுப்பிப் புத்திர காமேட்டி யாகம் செய்யச் சொல்கிறார். யாகத்தில் வீரவன்னியன் தோன்றுகிறான். முருகப் பெருமானே வீர வன்னியனாகத் தோன்றியதாக அசரீரி எழுகிறது. வீரர்கள் பலரும் வேள்வியில் தோன்றினர் உருத்திர வன்னியன் மந்திரமாலை, லாவண்ய சாரவல்லி என்ற இரு மனைவியரை மணக்கிறான் ஐந்து குழந்தைகள் பிறந்தார்கள். அவர்கள் பெயர்கள் 1. நீலகண்டவன்னியர். 2 வச்சிரவாகு வன்னியர். 3. கங்காபால வன்னியர். 4. சாம்பவ வன்னியர் 5. பாசுபத வன்னியர் இவர்கள் ஐவருக்கும் முறையே 1 தருமன்மகள் வசந்திகாதேவி 2 வருணன் மகள் வகுள மஞ்சரி தேவி 3. வாயுதேவன் மகள் கந்த மஞ்சுளா தேவி. 4. குபேரன்மகள் சுவர்ணமாலிகா தேவி. 5. சிங்கத்துவசன் மகள் இரத்தின மஞ்சரிதேவி ஆகிய ஐவரையும் மணம் முடித்தனர். ஐவரும் முறையே காஞ்சிபுரம், அரியலூர், சிதம்பரம், திருவானைக்கா, சிவகிரி ஆகிய ஐந்து நகரை ஆட்சி செய்தனர்

வன்னியவீரர் வாதாவி இனதாவியை அழித்துத் தேவர்களைக் காக்கின்றனர்.

இரு வன்னிய புராணத்துக்கும் வேறுபாடுகள்

புராணம் 1	புராணம் - 2
1. சூரனின் தங்கை அசோமுகிக்குப் பிறந்தவர்கள் வாதாவி வில்வலன்	1 விப்ரசித்து என்பவனுக்குப் பிறந்தவர்கள் வாதாவி இனதாவி.
2. வில்வலன் இறந்தபின் வாதாவி சிவனைக் குறித்துத் தவம் செய்து வரம் பெறுகிறான்.	2 வாதாவியும், இனதாவியும் பிரமனைக் குறித்துத் தவம் செய்து பிரமாஸ்திரம் பெற்றனர். வாயுஸ்தம்பனம், அக்கினிஸ் தம்பனம் செய்து சிவனை வரவழைக்கின்றனர்.
3. சிவபெருமான் அருளால் மயன் இரத்தினாபுரி என்ற நகரைக் கடல் நடுவே சிருஷ்டிக்கிறார் வாதாவி மயன் மகளை மணக்கிறான்	3. வாதாவியும் இனதாவியும் இரத்தினாகரம் என்னும் நகரை இயல்பாகவே ஆளுகின்றனர்.
4. சம்பு முனிவர் சிவன் வேண்டுகோள்படி இமய மலைக்கு வடக்கே யாகம் செய்கிறார்.	4. திருவானைக்காவலில் உமா தேவி வேண்டுகோள் படி சம்பு முனிவர் புத்திர காமேட்டி யாகம் செய்கிறார்
5. உருத்திர வன்னியன், யாகத்தில் தோன்றுகிறான் ஆனால் முருகனின் அவதாரம் இல்லை.	5. உருத்திர வன்னியன் முருகன் அவதாரமாகக் கூறப் படுகிறான்.
6. உருத்திர வன்னியன் இந்திரன் மகள் மந்திர மாலையை மட்டுமே மணக்கிறான்	6. மந்திரமாலையோடு லாவண்ய சார வல்லி என்பவளையும் மணக்கிறான்.

7 சிவன் நான்கு பிள்ளை களைப் படைககிறான் 1 கிருஷ்ண வன்னியன். 2. பிரம வன்னியன் 3 சம்பு வன்னியன் 4 அக்கினி வன்னியன் மந்திரமாலை வயிற்றில் கடைசியில் சந்திர சேகர வன்னியன் பிறக்கிறான்

8 நான்கு பிள்ளைகளும் சுசீல முனிவரின் நான்கு பெண்களை மணந்து போர் முடிந்து திரும்பி வரும்போது அவர்கள் இறந்த தால் நான்கு அசுரப் பெண் களுடன் வாழ்க்கை நடத்து கின்றனர் சந்திரசேகர வன் னியன் சோழ அரசன் மகளை மணக்கிறான்.

9. பாலாற்றுக்கு வடக்கே வீர வன்னியன், பாலாற்றுக்கும் பெண்ணையாற்றுக்கும் இடையே கிருஷ்ண வன்னியன், பெண்ணை யாற்றுக்கும் காவி ரிக்கும் இடையே பிரம வன்னியன், சேதுவுக்கும் காவிரிக்கும் இடையே சம்பு வன்னியன், கீழ் சமுத்திரத்துக்கு மேற்கு அக்கினி வன்னியன் ஆண்டனர் என்று கூறுகிறது

7. உருத்திர வன்னியனுக்கு இரு மனைவியர் மூலம் ஐந்து பிள்ளைகள் பிறக்கின்றனர் 1. நீலகண்டன். 2 வச்சிரவாகு. 3 கங்காபாலன். 4. சாம்பவன் 5. பாசுபதன்.

8 ஐந்து பிள்ளைகளும் தருமன் மகள் வசந்திகா தேவி, வருணன் மகள் வகுள மஞ்சரி வாயுவின் மகள் கந்தமஞ்சுளா, குபேரன்மகள் ஸ்வர்ண மாலிகா, சிங்கத்துவசன் மகள் இரத்தின மஞ்சரி ஆகியோரை மணக்கின்றனர்

9. காஞ்சிமாநகர் - நீல கண்ட வன்னியனுக்கும், அரியலூர் - வச்சிரவாகுவுக்கும், சிதம்பரம் - கங்காபாலனுக்கும், திருவா னைக்கா - சாம்பவ வன்னி யருக்கும், சிவகிரி - பாசுபத வன்னியருக்கும் உரியதாகக் கூறப்படுகிறது

வன்னிய புராணம்

(மூலமும் - உரையும்)

1. பாயிரம்

1. விநாயகர் காப்பு

பூத லம்புகழ் புண்ணியக் கச்சியில்
தாது மாமலர் தாரணி செஞ்சடை
ஆதி அண்ணல் அளித்த கெஜமுகன்
சோதி பாதம் துதித்து வணங்குவாம்.

இப்பூமியில் உள்ளவர் அனைவரும புகழத்தக்க சிறப்பு வாய்ந்த புண்ணியம் நிறைந்த நகரம் காஞ்சிபுரம இதில் மகரந்தம் நிறைந்த மாலையணிந்த சிவந்த சடையையுடைய ஏகாம்பரேசுவரரின் (சிவன்) மகனாகிய யானை முகனின் (அதாவது விநாயகனின்) ஒளி பொருந்திய பாதத்தைப் போற்றி வணங்குவோம்.

பூதலம் - பூமி உலகம **கச்சி** - காஞ்சிபுரம **தாது** - மகரந்தம **தார்** - மாலை **ஆதி அண்ணல்** - முதல்வனாகிய சிவபெருமான **கெஜமுகன்** - யானைமுகன் **சோதி** - ஒளி **துதித்து** - போற்றி

2. பரமசிவம்

சீர்பூத்த நெடியோனும் உந்திதனில்
உதித்தோனும் தேடிக் காணா
வார்பூத்த முலைப்பாகர் மலைமருந்தாய்
இருந்தருளி வான வர்க்காய்
கார்பூத்த நஞ்சருந்தி உயிரளித்துக்
காத்துகந்த கருணை மூர்த்தி
பார்பூத்த மலர்ப்பதத்தை யெனதுமனம்
தனிலிருத்திப் பணிகு வோமே.

சிறப்புப பொருநதிய திருமாலுமட அவருடைய கொப்பூழில தாமரைமலரில தோன்றிய பிரமனும், அடிமுடிதேடியும காணமுடியாதவன கச்சணிந்த உண்ணாமுலையாகிய உமையம்மையை இடபபக்கத்தில் கொண்டவன் அண்ணா மலையாகிய மருந்தாய் அமர்ந்தவன் கடலில தோன்றிய கருமையான ஆலகால விடத்தை அருந்தித் தேவர்கள் அசுரர்கள் உயிரைக் காத்தவன், கருணைமிக்கவன் இப்படிப்பட்ட சிவனின் மலர்போன்ற பாதங்களை என் மனத்தில் வைத்துப் பணிகிறேன்

சீர் - சிறப்பு **நெடியோன்** - திருமால் **உந்தி** - கொப்பூழ திருமாலின கொப்பூழில் பூதத தாமரையில் பிரமன் இருப்பதாகப் புராணம பதமநாபன் என்பது நாபியில் பத்மத்தை (தாமரையை) உடையவன என்ற பொருளில் திருமாலைக குறிககும சொல் **வார்** - கசசு **கார்** - கருமை

அடி முடி தேடிக்காணாத வரலாறு

திருமாலும் பிரமனும தாமே பெரியவர் என்று போட்டி போட்டனர் சிவன் திருவண்ணாமலையில் நெருப்பு மலையாய் நின்று "யார் எனது அடியையோ முடியையோ முதலில் கண்டு பிடிக்கிறீர்களோ அவர்களே பெரியவர்" என்று கூறினார். திருமால் பன்றி வடிவம எடுத்துக கீழே தோண்டிப் போக பிரமன் அன்ன வடிவம் எடுத்து உயரே பறககு இருவராலும கண்டுபிடிகக முடியவில்லை

ஆலகால விடம் உண்ட வரலாறு

அமிர்தம் எடுப்பதற்குத் தேவர்கள் திருப்பாற் கடலைக கடைந்தபோது ஆலகால விடம தோன்ற அதன் கடுமையால எல்லோரும் மயக்க மடைநதனர் அப்போது சிவபெருமான் உள்ளங்கையில விடத்தை வாங்கி உண்டார் இவை இரண்டும் புராணக் கதைகள்

3. பராசக்தி

பச்சைநிறம் உடையாளைப் பவளமெனும்
இதழாளைப் பருப்ப தம்போல்

கச்சிறுகு முலையாளைக் கருணைதரு
விழியாளைக் கரிய கூந்தல்
மெச்சுரும்பு மலராளை உலகெமெலாம்
ஈன்றருளும் முதன்மை யாளை
இச்சையுடன் அறம்வளர்க்கும் எழிலாளை
அனுதினமும் இறைஞ்சு வோமே.

பசசை நிறம உடையவளும், பவளம போன்ற சிவந்த இதழையுடையவளும், கச்சணிந்த மலைபோன்ற மார்பை யுடையவளும், கருணை மிக்க விழியையுடையவளும், வண்டுகள் மொய்ககின்ற மலரணிந்த கரிய கூந்தலையுடையவளும், உலகத்தைப் படைதத அருளுடையவளும, விருப்பத்தோடு முப்பத்திரணடு அறங்களையும வளர்ப்பவளும் ஆகிய காமாட்சியாகிய பராசகதியைத் தினமுமவணங்குவோம்

பருப்பதம் - மலை சுரும்பு - வண்டு, இச்சை - விருபபம

4. விநாயகர்

துங்கமதம் வழிந்தொழுகும் தும்பியெனும்
முகத்தானைத் துகளி வாத
ஐங்கரனைக் கனிவேண்டி அரனறிய
வலம்புரியும் அருளி னானை
கங்குல்நிறக் கயமுகனைக் கடிந்தவனைக்
கங்கைதரும் காளை யானை
செங்கையினால் மருப்பொடித்துக் சிலையெழுதி
னோனடியைச் சென்னி சேர்ப்போம்.

உயர்ந்த மதம் வழியும் யானை முகத்தை உடையவனும், குறறமறற ஐந்து கைகளையுடையவனும், மாங்கனிக்காகச் சிவனை வலம செய்த அருள்பொருந்தியவனும் இருள் (கரிய) நிறமுடைய கஜமுகாசுரனை வதம் செய்தவனும் கங்கைக்கு மகனாகிய காளை

போன்றவனும. சிவந்த கரஙகளால தன் கொம்பை ஒடிதது வியாசன் கூறிய பாரதத்தை மலையில் எழுதியவனும ஆகிய விநாயகனின திருவடிகளைத் தலைமேல கொள்வோம

துங்க - உயர்நத **தும்பி** - யானை **துகள்** - குறறம நாரதா கொண்டு வநத மாஙகனியைப் பெறுவதறகாக (உலகை முதலில யாா சுறறி வருகிறார்களோ அவாகளுககே கனி எனற பநதயததில) முருகன் மயிலமேல ஏறி உலகைச சுறற கணபதி தநதை தாயைச் சுறறினாா **அரன்** - சிவன **கங்குல்** - இருள மருப்பு - தநதம **சிலை** - மலை **சென்னி** - தலை

5. சுப்பிரமணியர்

சரவணையில் உதித்துவளர் சண்முகனை
மலைமடந்தை தனப்பா லுண்ட
கரமிரண்டா றிருதோளில் கடப்பமலர்த்
தாரானைக் கனத்த வேலால்
உரமவுணர் களைஜெயித்துஉம்பர்கோன்
மடந்தைமணம் உகந்து வேடர்
தருமானை மணந்தகுகன் தாள்தனையாம்
எந்நாளும் தலைமேல் கொள்வாம்.

சரவணப் பொய்கையில் தோன்றி வளர்ந்தவனும் ஆறுமுகங்களையுடையவனும், மலையரசன் மகளாகிய உமாதேவியிடம் பாலுணடவனும். பன்னிரண்டு கைகளையுடையவனும், தோள்களில் கடப்பமாலை அணிந்தவனும். கூரிய கனமான வேலால், சூரபத்மன் போன்ற அசுரர்களை வென்றவனும், தேவேந்திரன் மகளாகிய தெய்வயானையையும், வேடர் மகளாகிய வள்ளியையும் மணந்தவனும் ஆகிய முருகனின் பாதங்களைத தலையில வைபபோம்.

சிவபெருமான நெறறிக்கண்கள் ஆறிலிருந்தும ஆறுபொறிகள தோன்றி அவை சரவணப பொய்கையிலிடபபட்டு ஆறு குழந்தைகள

ஆயின எனபது கநத புராணம், **தார்** - மாலை **அவுணர்** - அரககர் அசுரா **உம்பர்** - தேவா, **கோன்** - அரசன தேவர்களின் அரசன் தேவேந்திரன் **மடந்தை** - மகளாகிய தேவயானை **வேடர்தருமான்** - வேடர் வளர்தத வள்ளி, **குகன்** - முருகன்

6. வீரபத்திரன்

தக்கன்மக மழித்தருள்வான் தற்பரமன்
தழல்விழிநீர்த் தரையில் தோய
உக்கிரமாய் உதித்தவனை ஒருகோடி
பூதமுடன் உம்பர் ஆவி
கக்கவுமே முனைந்தவனைக் கன்னியெனும்
பத்தினிதன் காவ லோனை
நக்கனென எழுந்தருளி உம்பருயிர்
அளித்தவன்தாள் நாவிற் சேர்ப்பாம்.

தக்கனின் யாகத்தை அழிக்க, சிவனின் நெற்றிக்கண் நீர், தரையில் விழ, அதிலிருந்து தோன்றியவனும், ஒரு கோடி பூதங்களும் தேவர்களும் உயிர்விடக் காரணமானவனும், காளிதேவிக்குக் காவலாக இருப்பவனும், தேவர்களுக்கு மீண்டும் உயிர் வழங்கியவனும் ஆகிய வீரபத்திரனைப் போற்றுவோம்,

உம்பர் - தேவர், **நக்கன்** -சிவன்

வீரபத்திரன் வரலாறு

தக்கன் சிவபெருமானை மதிககாமல் யாகம் செய்ததால் பார்வதி யாகததை அழிப்பேன் என்று சபதம செய்தாள் சிவனின் விழி நீர் கீழே விழ அதிலிருந்து தோனறிய வீரபத்திரன் பூதங்களையும், தேவர்களையும், யாகத்தையும அழித்துப் பின் மீண்டும் தேவர்களை எழுப்பித் தந்தான்

7. நால்வர்

அப்பரெனும் பெரியோனை அறுசமயங்
களிலும்வா தாடு வோனை

அப்பணியும் சடையானை அரிவையிடம்
தூதுவிடும் அழகுள் ளானை
மைப்படுங்கண் ணுமைமுலைப்பா லுண்டு
சமணரையழித்த மறைவல் லோனை
நற்பரியை நடத்துமரன் நற்பாதம்
அடைவானை நம்பு வோமே.

ஆறுசமயங்களோடும் வாதுபுரிநத அப்பரையும், கங்கையணிந்த சடையுடைய சிவனைப் பரவை நாச்சியாரிடம் தூதனுப்பிய சுந்தரரையும், மைதீட்டிய கண்ணையுடைய உமையிடம் ஞானப் பாலுண்டு சமணரை அழித்த வேதியனாம் சமபந்தரையும், குதிரைக்காரனாக வந்த சிவனின் பாதங்களை அடைந்த மாணிக்க வாசகரையும் போற்றுவோம்.

அப்பர்

அப்பர் சமண சமயத் தலைவராயிருந்து தருமசேனர் என்ற பெயரோடு சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சௌரம் ஆகிய ஆறு சமயத்தையும் புறக்கணித்தவர் சிவனருளால் வயிறறுவலி பெற்றுப்பின் தீர்ந்து சைவ சமயத்துக்கு மாறிவர்.

சுந்தரர்

சுந்தரர் சஙகிலியைத் திருமணம செய்ததால் முதல மனைவியாகிய பரவை ஊடல் கொள்ளச சிவனையே தூதுவிட்டார்.

சம்பந்தர்

சம்பந்தர் உமையமமையிடம் பால் பெறறு உண்டு மூன்று வயதிலேயே பாடும் சக்தி பெற்று மதுரையில் சமணர்களோடு அனலவாதம் புனல்வாதம் செய்து அவர்களை அழியுமாறு செய்தவர்.

மாணிக்கவாசகர்

மாணிககவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம அமைச்சராக இருநதபோது குதிரை வாங்கக் கொடுத்த பணததில் கோயில் கட்ட, சிவன்

நரிகளைக குதிரையாககிக கொணடு வநது கொடுத்தார் குதிரைகள் மீண்டும் நரிகளாகக் கோபம் கொணட அரசன் வைகை மணலில் மாணிகக வாசகரை நிறக வைத்தான் சிவன் வைகையில வெள்ளத்தை வரச்செய்தார் வநதியெனனும கிழவிக்குக் கூலியாளாய் வந்து வெளளததை அடைககாமல் வேடிககை காட்டினார் வேநதனிடம் பிரம்படி வாஙகி, இறுதியில காட்சி கொடுதது, வெள்ளத்தைத் தடுத்து, மணிவாசகர் பெருமையையும வந்தியின பெருமையையும உணர்த்தி அவர்களை ஆட்கொணடார்

அப்பு - நீர் **அரிவை** - பெண் இங்கு பரவை நாச்சியார் சுந்தரரின் முதல மனைவி **பரி** - குதிரை

8. நாயன்மார்

கடுக்கையரன் களித்திடவே மணந்தருளுங்
கன்னிதனைக் கரத்தீந் தானை
படுக்கைதனில் பாவைதனை அணையாமல்
பரமன்வரம் பற்றி னானை
உடுக்கையைத் தன் கரத்தணிந்த உத்தமற்கு
உச்சிட்டம் முன்தந் தானை
தடுக்கையுறா மகவுணவு தந்திட்டோன்
தன்னடியைத் தலைமேற் கொள்வோம்.

கொன்றையணிந்த சிவன் மகிழத் தன் மனைவியையே அளித்த இயற்பகை நாயனார், தன்மனைவி சிவன்மேல் ஆணையிட்டு எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது என்று கூறியதால் அவளையும் தீண்டாமல் சத்தியம் காத்த திருநீலகண்டர், உடுக்கையைக் கையில் உடைய சிவனுக்குத் தன் கண்ணையே தோண்டி அப்பிப் பார்வை கொடுத்த கண்ணப்ப நாயனார் யாரும் தடுக்காமல் முழுமனத்தோடு பிள்ளையை வெட்டிக் கறி செய்து படைத்த சிறுத்தொண்ட நாயனார் ஆகியவர்களின் பாதங்களைத தலைமேல் வைப்போம் (வணங்குவோம்)

இயற்பகை நாயனார்

இயற்பகை நாயனார் என்பவர் சிவனடியாாகள எதுகேடடாலும இலலையெனனாது கொடுபபவர் ஒருமுறை சிவனே அடியாா வேடததில வநது நாயனாரது மனைவியையே கேடக மறுககாமல் ஈந்து முகதி பெறறவர் இயல்புககே விரோதமான செயல் செய்தமையால இயறபகை எனப்படடாா

திருநீலகண்டர்

திருநீலகண்டர் என்பவர் தினமும் வேறு பெண் வீட்டுக்குச் செனறதால் கோபம் கொண்ட மனைவி சிவன் மீது ஆணையிட்டுத தன்னைத் தீண்டக் கூடாது என்று கூற இறுதிவரை அதைத தவறாமல் கடைபபிடித்தார்

கண்ணப்ப நாயனார்

வேடக் குலத்தில் பிறந்த திண்ணன் என்பவன வேட்டைக்குச் சென்ற போது சிவலிங்கத்தைப் பார்த்து அளவறற விருப்பம் கொண்டான் அதற்கு அர்ச்சகர் செய்வதையெல்லாம் பார்ததுத் தானும் அவ்வாறே செய்ய எண்ணி வாயில் நீரை எடுத்துக்கொண்டு போய் அபிடேகம் செய்து. தலையில் பூ எடுத்துக் கொண்டு போய் அர்ச்சனை செய்து வேட்டையாடிய பன்றியைச் சுடடு அந்த இறைச்சியைப் படைத்து இரவு முழுவதும் சிவனுக்குத் தீங்கு வருமோ என்றஞ்சித் தூங்காமல் காவல் காத்தான் அர்ச்சகர் யார் இவ்வாறு செயவது என்று வருந்த இறைவன் அவர் கனவில் தோன்றி ஒளிந்திருநது பார்க்குமாறு கூறினார் சிவன் தன கண்ணில் இரத்தம் வரச் செய்தார் பதறிய திண்ணன் பச்சிலையெல்லாம் வைத்துக்கட்டிப் பார்த்தும் நிற்காமையால தன் கண்ணையே தோண்டி அப்பினான் இரத்தம் நின்றது இன்னொரு கணணிலும இரததம வரவே இன்னொரு கண்ணையும் தோண்ட முற்பட்டு இறைவனால் தடுககப்பட்டான் கண்ணை அப்பியதால் கண்ணப்பன் எனப்பெயர் பெறறான அவன் பெருமையை அர்ச்சகரும உணர்ந்தாா

பரஞ்சோதி அல்லது சிறுத்தொண்டர்

நரசிமம பலலவனிடம படைததலைவனாக இருந்து வாதாபியை வெனற பரஞசோதி இறுதியில சிவததொணடு செயவதில் ஈடுபடடாா இவரும அடியாா எது கேடடாலும தவறாமல கொடுபபவர் சிவனே அடியவர் வேடததில வநது தநதை தாயககு ஒரே மகனாய் உளள பாலகனை முழுமனததோடு அரிந்து செய்த கறி கேட்டாா தங்கள் மகனையே தநதை தாய இருவரும ஒருமித்த மனததோடு நறுக்கிக கறி சமைத்துப போட்டனா இறையருளால பாலகன் மீணடும உயிர் பெறறான்

இந்நாலவரும செயறகரும செயல் செயதமையால அறுபத்து மூவர் சார்பாக இநநால்வரையும வணங்கியுளளாா ஆசிரியர்

கடுக்கை - கொனறை, **உச்சிட்டம்** - பார்வை, **மகவு** - குழந்தை

9. நந்திகேசுவரர், சண்டிகேசுவரர்

சந்ததமும் தவம்புரியும் சிவாதரன்தன்
தனயன்எனத் தகைமை பூண்ட
நந்தியெனும் நாமமுள நக்கரிணை
யாகவளர் நார ணன்தாள்
தந்தைபதம் அறவெட்டி அழியாத
பதவிபெறும் சண்டீ சன்தாள்
சிந்தையக லாதிருத்தி அழல்உதித்த
வீரனெழில் செப்ப வந்தேன்.

இடைவிடாது தவம்செய்யும் சிலாதரன் என்பவனின் மகனான நந்தியென்னும் பெயரையுடைய, சிவனுக்கிணையான, நந்தி கேசுவரனையும், தந்தையின் பாதங்களையே வெட்டி அழியாத சிவபதம் பெற்ற சணடிகேசுவரனையும் மனத்தில் இருத்தி வன்னிய புராணத்தைக் கூறுவேன்

சந்ததம் - எபபோதும, **தனயன்** - மகன, **நாமம்** - பெயா **நக்கன்** - சிவன **அழல்** - நெருபபு, **நந்திகேசுவரர்** - சிவனின் மிக

நெருங்கிய தொண்டா காளை வாகனம வேறு நந்திகேசுவரா வேறானவர் சிவன கோயிலகளில் அதிகார நந்தி என உளளே செல்லுமுன் உததரவு வாங்கிச் செலலுமாறு, அமைததிருபபா

சண்டிகேசுவரர்

கும்பகோணததுக்கு அருகிலுள்ள கலய நல்லூரில (தறபோது சாக்கோட்டை எனப்பெயா) எசச தத்தன் எனபவருக்கு மகனாகப் பிறந்தாா விசார தருமர் அவா ஒருநாள மாடு மேயககும சிறுவனைப் பார்த்தார் அவன மாடுகளை நன்றாக மேய்ககாமல அடிததுத துன்புறுத்துவதைக கண்டு மனம வருநதினாா தாமே மாடுகளை அழைததுச் சென்று புல் உள்ள இடங்களில் நனறாக மேயவிட்டு அன்போடு நடததினார் மாடுகள மகிழ்ச்சியடைந்து மிகுதியாகப பால கறந்தன ஊரில உளளவா அவரையே மேயககுமபடி கூறினர் அவரும மகிழச்சியோடு இபபணியைச செய்தார்

மாடுகள் நன்றாகப் புலலுண்டு செழித்தமையால் கறநதபால போகவும் மடியிலிருந்து பால் பெருகி வழிந்து ஓடலாயிறறு இதனைக் கண்ட விசாரதருமர் பால் வீணாகிறதே எனறு, மணலால் சிவலிங்கம பிடித்து, அதற்கு அபிஷேகம செயது, சிவ பூசை செயயத் தொடங்கினார் இதை ஒரு நாள பார்த்த ஊரான் ஒருவன் எல்லோரிடமும கூறிவிட்டான் எல்லோரும எச்ச தத்தனிடம் முறையிட்டனர் எச்ச தத்தனும் மகன் மாடு மேயக்குமிடம் சென்று பார்வையிட்டார் ஊரார் சொன்னது உணமையாயிருக்கவே அருகில் சென்று அழைத்தார் சிவபூசையில் முழுகி இருந்த மகனுக்குக் காதில் விழவிலலை சினம கொண்ட தநதை சிவலிங்கததைக் காலால எற்றினார் இடையூறு ஏறபட்டதை உணர்நத விசாரதருமா யாரெனறு பாராமல் காலை வெட்டி விட்டாா சிவன காட்சி கொடுததுத் தநதையையே வெட்டியதால் இனி உனக்கு நானே தநதை யெனறு தனககுரிய அனைத்து மரியாதைகளையும் கொடுததுச் சண்டீசுவரன எனற பெயரையும் அளித்தான. சிவன் கோயிலகளில் சிவன் அம்மையுடன் விநாயகா முருகன் நால்வரோடு சண்டிகேசுவரரும சோந்தே பஞ்ச மூாததியாக வீதியுலா வருவா கோயிலகளில் சண்டிகேசுவரர்

முனனால சிலா துணியிலுளள நூலைப போடுவா இது தவறு அவா சிவததியானத்தில் ஆழந்திருப்பவா ஆதலால் நம வருகையை அறிவிகக சிறு ஒலி எழுபபுகிறோம இடது உள்ளங்கையில வலது ஆளகாட்டி விரல நடுவிரல்களால் லேசாகத் தட்ட வேண்டும சொடக்கு போடககூடாது

10. துர்க்கை

சங்கரனோ (டு) எதிர்த்துநடம் புரிமலர்த்தாள்
அம்பிகையே சமய மென்ன
எங்குமுறை எழிலாளே இருள்மகி
டனைக்கடிந்து இணையி லாளே
கங்கணக பாலிதிரி சூலிபெருங்
கணங்களுடன் களித்த தாயே
பொங்கரவ மணிந்தருளும் பூவையே
வன்னியர்கள் புகழ்காப் பாயே.

சிவனை எதிர்த்து நடனம் புரியும் மலா போன்ற தாள்களை உடைய அம்பிகையே! எங்கும் நிறைந்து வாழும் அழகியவளே! இருட்டுப் போன்ற மகிடாசுரனைக் கடிந்த ஒப்பற்றவளே! கங்கணமும் மண்டை ஓடும் அணிந்தவளே! திரிசூலம் ஏந்தியவளே! பூதகணங்களுடன் மகிழ்ச்சியாக இருப்பவளே! சீறும பாம்பை அணிகலனாக அணிந்தவளே! வன்னியர் புகழைப் பாடக் காப்பாக விளங்குவாயே

மகிடன் - மகிடாசூரன எருமைத்தலை அசுரன இவன் வரம பெறறதால் எல்லோரையும துனபுறுத்த தேவி துர்ககையாக வநது ஒனபது நாள விரதமிருந்து பததாம நாள் இவனை அழிததததாக வரலாறு **இருள் மகிடன்** - கருமை நிறததையுடைய மகிடன் **கங்கணம்** - கையில அணிவது **கபாலம்** - மணடை ஓடு **கணம்** - கூட்டம **அரவம்** - பாமபு

11. சரஸ்வதி

தவளமெனும் நிறத்தாளைத் தண்தரள
வடமணிந்த தனத்தி னாளைப்
புவனமெலா நிறைந்தாளைப் பூரவா
கினியென்னும் புகழி னாளை
சவையதனிற் குடியாளைத் தமிழ்வல்லோர்க்
கமுதமெனும் தைய லாளை
உவணம்ஊர் தியைஅனந்தன் உகந்தணிந்த
இணைமலர்த்தாள் உட்கொள் வோமே.

தூய வெண்மையான நிறத்தையுடையவள் குளிர்ச்சி பொருந்திய முத்துமாலை அணிந்த மார்பை உடையவள் உலகமெலாம் நிறைந்தவள் பூரவாகினி யென்னும் பெயர் படைத்தவள் கற்றவர் சபையில் குடியிருப்பவள் தமிழில் புலமை பெற்றவர்க்கு அமுதம போன்றவள் அன்னத்தில் ஏறுபவள் (அன்னப் பறவை மீது அமர்ந்தவள்) அபபடிப்பட்ட சரஸவதியின் ஆதிசேடனால் வணங்கப்பட்ட இரு மலர் போன்ற பாதங்களைக் கருத்தில் இருத்துவேன்

தவளம் - வெண்மை **தரளம்** - முத்து **வடம்** - மாலை **தனம்** - மாாபு **புவனம்** - உலகம **தையல்** - பெண் **உவணம்** - அனனப பறவை **ஊர்தி** - ஏறி நடததுபவள **அனந்தன்** - ஆதிசேடன் **உகந்து** - மகிழநது **இணை** - இரணடு

12. அவையடக்கம்

நற்றமிழ் ஓர்ந்திடும் நாவ லோரவை
கற்றறி யாதவன் கலைஉரைத் தல்போல்
வித்தக விழிஞ்சன்(ஏ) (று) அனத்தின் முன்னொரு
சத்திலா மசகமும் பறவை தந்தவே.

நல்ல தமிழை ஆராயும் அறிஞர்கள் சபையில் ஏதும் அறியாதவன் பேசுவதுபோன்றது நான் இந்நூல் எழுதுவது இது எப்படி இருக்கிறதென்றால் பிரமன் ஏறக்கூடிய அன்னப் பறவை முன்பு சத்தற்ற ஒரு கொசுவும் பறவையெனப பறப்பது போன்றது

ஓர்ந்திடும் - ஆராய்ந்திடும **நாவலர்** - பேசுவதில் வல்லவர் **விரிஞ்சன்** - பிரமன் **அனத்தின்** - அன்னப் பறவையின் **மசகம்** - கொசு

13.

சுதமதி நீர்விட சுவைகள் குன்றுமோ
மதுமலர் புனைந்த நார் மணம் அகற்றுமோ
நதிஅணி அரன்மகன் வீர வன்னியன்
கதையினால் எனதுரை கடிந்து ரைப்பரோ.

பாலில் மிகுதியாக நீரை விட்டால் பாலின் சுவை குன்றுமா? தேன் நிறைந்த மலரில் நார் வைத்துக் கட்டினால் பூவின் மணம் குறையுமா?, கங்கை நதியைத் தலையில் அணிந்த சிவன் மகனான வீரவன்னியன் கதையை நான் பாடுகிறேன் என்பதால் அதன் புகழ் குறையுமா? பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவதுபோல் இதனைக் கூறுவதால் எனக்கும் பெருமை எனவே என் உரையை யாரும் கடிந்து உரைக்க மாட்டார்கள் (உரைக்கப்படும் பொருள் பெரிது என்பதால் உரைக்கும் சிறியவளாகிய என்னை யாரும் இகழ மாட்டார்கள் என்பது கருத்து)

சுதம் - பால் **அதி** - மிகுதியான **மது** - தேன் **நதி** - கங்கை

14.

நச்சளித் திடுமரவம் நலம தாகுமோ
மெச்சிய கரும்பினில் இனிப்பு குன்றுமோ
அச்சமி லாதிந்த தமிழு ணர்ந்துளோர்
குச்சித கவியெனும் பயன்கொள் வார்களே.

நஞ்சை அளிக்கும் பாம்பு நல்லது ஆகுமோ? கரும்பில் எங்கேயாவது இனிப்பு குன்றுமா? (எங்கிருந்தாலும் நல்லது நலலது தான் தீயது தீயதுதான்) அதனால் தமிழுணர்ந்த பெரியோர் நான் பாடும் பொருளின் சிறப்பு பற்றி நான் சிறியேனாயினும் என்னை இகழாமல என்புகழற்ற கவியின் பயனை மட்டும் கொள்வார்கள

நச்சு - நஞ்சு **குச்சிதம்** - புகழில்லாத

15.

அணுவள வுந்தமிழ் மிடிய கற்றியே
கணமது ரந்தரு கவியு ணர்ந்தபேர்
இணையிலா மூடர்முன் எதிர்ப்ப தாகுமோ
மணமலர் போர்கொள்வர் மற்போர் கொள்வரோ.

ஒரு கவியில் ஒரு சிறிது குற்றம் ஏற்பட்டாலும் அதனை நீக்கி இனிமையான கவியை உணரும் ஆற்றல் படைத்தவர் தனக்கு இணையில்லாத ஒரு மூடனை எதிர்ப்பார்களா? மணமுடைய மலர்களோடு போர் செய்பவர் மற்போர் செய்வார்களா?

தமிழுணர்ந்தவர் குற்றம் நீக்கிக் கொள்வர் அதனால் என்கவி நல்லது இல்லாவிட்டாலும் எனமீது போர் புரியாமல் ஏற்றுக்கொள்வர் என்பது கருத்து

மிடி - குறறம் **மதுரம்** - இனிமை

16. பாடுவித்தோன்

ஆதி யானுறை கூடலில் மன்னவன்
சோதி சுந்தர பாண்டியன் துங்கமாய்
சாதி வன்னிய காதை புராணமாய்
ஓது என்ன உளமகிழ்ந் தோதினன்.

சிவன் வாழும மதுரையில் வீற்றிருந்து அரசாளும் சுந்தர பாண்டியன், வன்னியா கதையைப் புராணமாய்ப் பாடு என்று கேட்க. மனமகிழ்ந்து கூறினேன்

ஆதியான் - சிவன் **கூடல்** - மதுரை **துங்கமாய்** - மேன்மையாய்

17. பாடியோன்

ஆல முண்டோன் அனுதினம் ஆண்டருள்
மேல வாயிலில் மேவிய கிருஷ்ணன்
பால னாகஇப் பாரில் உதித்திடும்
சீல வீரகுமா ரன்என் சீருளோன்.

ஆலகால விடத்தை உண்ட சிவன் தினந்தோறும் ஆட்சி செய்யும் மதுரையில் மேல வீதியில் உள்ள கிருஷ்ணன் என்பவரின் புதல்வனாக இப்பூமியில் அவதரித்த வீரப்பிள்ளை என்னும் புகழையுடைய நான்,

ஆலம் - விடம் **பாலன்** - மகன் **சீலம்** - ஒழுக்கம்

18. பாடுபொருள்

காசி பன்மகன் காளைவா தாவி
ஈச னைத்துதி செய்தவன்(று) எழிலுள
தேசு பெற்றுச் செலுத்தும் நாள்தனில்
மாசில் வன்னிய மன்னர் உதித்ததும்.

காசிப முனிவரின் மகனாக உதித்த வாதாபி இறைவனைத் துதிசெய்து, எழில் பெற்று வாழும் நாளில் குற்றமற்ற வன்னிய மன்னர் தோன்றியதையும்.

தேசு - ஒளி **மாசு** - குற்றம

19.

இந்தி ரன்மகள் இட்ட மணந்ததும்
அந்த நால்வர் மகத்தில் உதித்ததும்
சிந்து மீதினில் சென்றுவா தாவியின்
புந்தி யோக்கியப் பூதவ மாண்டதும்

அவர் இந்திரன் மகளான மந்திரமாலையை மணந்ததும் யாகத்தில் அவர்களுக்குப் பிள்ளைகள் நால்வர் தோன்றியதும், அவர்கள் கடல் கடந்து வாதாவியின் புந்தியோக்கியப் பட்டினத்தை அடைந்து, அங்கு ஆட்சி புரிந்ததும்,

மகம் - யாகம், **சிந்து** - கடல், **பூதலம்** - பூமி உலகம **புந்தியோக்கியப் பட்டினம்** - இரத்தினாபுரி

20.

நாதன் நந்திக் குரைசெய நந்தியும்
வேதம் ஓதும் வியாசன் உரைத்ததை
சூத னுக்குரை செயவச் சூதனும்
தீதி லாசன கற்கு ரைத்தனன்.

இறைவன் நந்திக்குக் கூற நந்திதேவர், வேதம் ஓதும் வியாசனுக்குச் சொல்ல, வியாசன் சூதனுக்குச் சொல்லச் சூதனும் குற்றமற்ற சனகற்குக் கூறினான்.

தீது - குற்றம

21.

சனகன் இந்தச் சரிதை உணர்ந்துமே
முனிவன் அத்திரி கேட்க மொழிந்தனன்
புனிதம் ஆகிய பூதவம் மீதுளார்
வினவி யாரும் வியந்தறி வார்களே.

சனகர் இவ்வரலாறறை அறிந்ததும அத்திரி முனிவர் கேட்கக் கூறினார் தூய்மையான இப்பூமியில் யாா வேணடுமானாலும் இதனைக் கேடடு அறியலாம்

22.

வன்னி யன்தணல் உதித்தருள் வன்னியன்
மன்னு காதை வடமொழி யானதைப்
பன்னு செந்தமிழ் ஆனபண் பாவினால்
இன்ன லின்றி இயம்பிடக் கேண்மினோ.

அக்கினியில் உதித்த வனனியர் கதையை வடமொழியில் இருந்ததைத் தமிழில் இசைப்பாவினால துன்பமில்லாமல் கூறக் கேட்பீர்களாக!

வன்னி - அகனி **மன்னு** - நிலைபெறற **காதை** - கதை **பண்** - இசை **இன்னல்** - துனபம **இயம்பிட** - கூற **கேண்மின்** - கேளுஙகள

2. சிருஷ்டிச் சருக்கம்

23. முனிவர்கள் சனகர் இருப்பிடம் வருதல்

ஆல முண்டரு ளமரரைக் காத்த
அண்ணலுஞ் சனகனுக் குரைத்து
பாலெனப் பஞ்சாக் கரமதைப் புகட்டி
பரிவுடன் கைலைமீ திருப்ப
சாலைசூழ் வனத்திலுறை கும்பன் குமுதன்
துகளிலா கோதமன் மதங்கன்
சீலமத் திரியும் புலத்தியன் வசிட்டன்
சேர்ந்தனர் சனகர் சாலையினில்.

ஆலகால விடததை அருந்தித் தேவாகளைக காதத சிவன் சனக முனிவர்ககுத் திருவைந் தெழுததை உபதேசித்துக கயிலை செல்ல சனக முனிவரின் தவசசாலையைச் சுறறியுளள வனததில்

வாழும குமபன் குமுதன் குற்றமற்ற கோதமன், மதங்கன் ஒழுக்கத்தையுடைய அததிரி புலத்தியன், வசிட்டன ஆகியோா சனகரின் தவச் சாலைக்கு வந்தனா்

ஆலம் - ஆலகால விடம **அமரா்** - தேவா் **அண்ணல்** - பெருமை பொருந்தியவா் இங்கு சிவன் **பஞ்சாட்சரம்** - பஞசம + அட்சரம பஞசாக்கரம் தமிழில் ஐந்தெழுத்து, அதாவது நமசிவாய **கைலை** - கயிலை மலை, சிவனின இருபபிடம **வனம்** - காடு **துகள்** - குறறம **சீலம்** - ஒழுக்கம் **சாலை** - தவசசாலை, பாணசாலை, இருப்பிடம

24. சனகனின் புகழைக் கூறுதல்

கண்டனன் சனகன் கருத்தினில் இருந்த
கழல்களில் இறைஞ்சியங் கிருத்தி
உண்டதோா் தவஞ்செய் ததுவென நாடி
உற்றதே தெனமுனி யுரைப்ப
சண்டனை உதைத்த தற்பரன் அருளகத்
தவஞ்சிறு சாரவஞ் செழுத்துக்
கொண்டமா தவமே எனத்தொழு தேத்திக்
குலவியங் குறைந்திடும் நாளில்.

முனிவாகள் வருகையைப் பாா்தத சனகா தனது கருத்தினில வைததிருந்த முனிவா்களின பாதங்களில் வீழ்ந்து வணங்கி, அவாகளை அமரச் செய்து "நீங்கள் இங்கு வருவதற்கு நான என்ன தவம் செய்தேன்" என மகிழந்து "என்னை நாடி வந்த காரணம என்ன?" என்று கேட்டாா் "எமனை உதைத்த சிவன் மூலமே நேரடியாகப் பஞ்சாட்சர உபதேசம் பெற்ற தவமுனிவா் நீங்கள் உங்களைக காணுவது பெருமபேறு அதனாலேயே வந்தோம" என்று முனிவாகள் விடை கூறினா இவ்வாறு விடை கூறிய முனிவா்கள சனகனை வணங்கித் தொழுது போறறினா எலலோரும சோந்து மகிழ்ந்து வாழ்ந்து வந்த காலததில

கழல் - பாதஙகளில் அணியுமம அணிகலன் இங்கு பாதங்களைக குறிததது **சண்டன்** - எமன **தற்பரன்** - சிவன்

சிவன் எமனை உதைத்த வரலாறு

மிருகண்டு என்ற முனிவர் நீண்ட நாள் புத்திர பாக்கியம் இலலாமையால் சிவனை நோககித தவம் செயதார் காட்சி கொடுதத சிவன "உனககுப் பதினாறு வயதே ஆயுள் பெறற நல்ல மகன வேணடுமா? நூறு வயது ஆயுளுடைய தீய மகன் வேண்டுமா?" என்று கேட்டார் மிருகண்டு முனிவரும "பதினாறு வயது ஆயுளே பெறறிருந்தாலும் நல்ல மகனே வேண்டும" எனறு கேடக சிவனும அவ்வாறே அருள் செய்தார் பிறந்த மகனுககு மார்க்கண்டேயன் எனப் பெயரிடடு அருமை பெருமையோடு வளர்ததனர் பெற்றோர் மார்க்கண்டேயனும் அழகிலும், அறிவிலும பகதியிலும பண்பிலும சிறந்து விளஙகித் தவறாது சிவபூசை செய்தான்

பதினாறு வயது நெருங்கியவுடன், 'மகனின் ஆயுள் முடியப் போகிறதே' எனப் பெறறோர் கவலையுற்றனா இதனையறிந்த மார்க்கணடேயன் பெற்றோரைத் தேறறி, இடைவிடாது சிவபூசை செயதான் இபபூசை காரணமாக எம தூதர்களால் மாாககணடேயன் உயிரகைக் கவர இயலவிலலை எனவே எமனே நேரில் வந்து மார்ககண்டேயன் மீது பாசக்கயிறு வீசினார் மார்க்கண்டேயன் சிவனைக் கடடிப பிடிக்கப் பாசக் கயிறு லிஙகத்தைச சுறறியது எமன் இழுக்கச் சினம கொண்ட சிவன் எமனைக காலால உதைத்து வீழ்த்தினார்

எமன இல்லாமையால் பூமி பாரம மிகுந்திடவே பூமாதேவி சிவனை வேண்ட சிவன் எமனை மீண்டும் உயிர்ப்பித்தார் "தங்கள் விதிப்படிதானே நான மார்க்கண்டன் உயிரைக் கவர வந்தேன எனனை ஏன் தண்டித்தீாகள்?" என எமன் கேட்க "என்னுடைய பகதனின உயிரை நீ கவரக் கூடாது அவனுக்கு என்றுமே வயது பதினாறுதான்" என்று கூறியருளினாா சிவன என்பது புராண வரலாறு

25. அத்திரி முனிவர் சனக முனிவரிடம் கதை கூறுமாறு கேட்டல்

அத்திரி சனகன் அடியிணை தொழுதேன்
அய்யனே இழிவுபோக் குவதாய்க்
குற்றமில் லாத குவலய மேலோர்
குறித்திடக் கதைகள் கூறென்ன
சித்தமுந் தேறிக் கதைகள் ஆராய்ந்து
தெரிந்து வன்னியர்களின் சரிதை
சத்திய மாக உனக்குரை செய்வன்
தவமுனி கேளென உரைப்பான்.

அத்திரி யென்னும் முனிவா் சனகரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "பூமியில் உள்ள குற்றமற்ற மேலோர்கள் அறியுமாறு பாவம் போக்கக் கூடிய நல்ல கதை ஒன்று கூறுங்கள்" என்று வேண்டினார். சனக முனிவரும் தெளிந்த உள்ளத்தோடு பூமியில் உள்ள கதைகளை ஆராய்ந்து அவற்றில் வன்னியா் கதையைத் தேர்ந்தெடுத்து "இதை உண்மையாக உனக்குச் சொல்கிறேன் தவத்தையுடைய முனிவனே கேள்" என்று கூறத் தொடங்கினாா

குவலயம் - உலகம **சித்தம்** - மனம

26. சனகர் வன்னியர் கதையைக் கூறத் தொடங்குதல்

வன்னியர் பெருமை மனத்தினில் தெளிய
வகையுடன் அருளும் மாதவனே
என்னஅச் சனகன் அவ்வகைத் தாகி
இயம்பிட நாவெழா மறையிற்
சொன்னஅக் கதையைத் தொல்லுல குறைவோர்
துதிசெய்துட் சூட்சும மாக

நுண்ணிய துணர்ந்த மாத்திர முரைப்பேன்
நுண்மையாய்க் கேளென உரைப்பான்.

அத்திரி முனிவரும், "தவத்தையுடைய முனிவரே! வன்னியர் பெருமையை மனத்தினில் தெளிவாகப் பதியுமாறு கூறுங்கள்" என்று கேட்டுக்கொண்டார் சனக முனிவர், "அவ்வளவு சிறப்புடைய கதையைச் சொல்ல என் நாக்கு போதாது இருப்பினும் வேதத்தில் சொல்லப்பட்ட அக்கதையைப் பூவுலகோர் போற்றும்படி நுட்பமாக உணர்ந்த வரை சொல்கிறேன். நீயும் நுட்பமாகக் கேள் " என்று கூறத் தொடங்கினார்

மறை - வேதம. **துதிசெய்தல்** - போற்றுதல் **சூட்சுமம்** - நுட்பம்

27. யுக முடிவுக்குப் பின் பிரமன் உலகைப் படைத்தல்

யுகமுடி வாகும் காலில்
ஓங்கிய புவன மெல்லாம்
திகிரிமால் உளத்த டக்கி
சிருட்டியால் புவியுண் டாக்கி
வகையுந்தி மலரின் வேதன்
வந்தவன் அவனும் இந்தச்
செகமெலாம் முன்பு போலத்
திருத்தவே மனது கந்தான்.

யுகம் முடியும் போது, சக்கரத்தையுடைய திருமால் இவ்வுலக மனைத்தையும் தன் வயிற்றில் அடக்கி வயிற்றிலிருந்து எழும் தாமரையில் மீண்டும் பிரமனை உருவாக்கினான் பிரமன் மீண்டும் இவ்வுலகைப் படைக்க நினைத்தான்.

உலகம் அழிந்தழிநது மீண்டும படைக்கப்படும கடல்கோள்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன உலகம தோன்றி அது முடியும் வரையுள்ள காலம ஒரு யுகமாகும் இவ்வாறுள்ள யுகங்கள நான்கு அவை கிருதயுகம்

திரேதாயுகம துவாபரயுகம கலியுகம எனபன ஒவவொன்றும பலலாயிரக் கணககான வருடங்களை உடையவை கலியுகம முடிந்ததும் மீண்டும் கிருதயுகம் தொடங்கும உலகம அழியும போது கடல் பொங்கி நிலம் மூழ்கும இதனைத திருமால மண்ணினை உண்பதாகவும மீண்டும நிலம் தோன்றும்போது, உமிழவதாகவும் கூறுவர் இதனாலதான் "மண்ணினை உண்டுமிழ்நத மாபவன்" என்பர் திருமால மீண்டும உலகைப் படைக்க நினைக்கும போது தன் கொப்பூழில ஒரு தாமரைக் கொடியையும் அதன் முடிவில் ஒரு தாமரை மலரையும் அதன்மேல் பிரமனையும் தோற்றுவிபபான் இத்திருவுருவத்துக்குப் பத்மநாபன் என்று பெயா பத்மம - தாமரை நாபன் - நாபியை (கொப்பூழை) உடையவன் என்பது பொருள பிரமன் மீண்டும உலகைப் படைப்பான்

கால் - காலம் **புவனம்** - உலகம் **திகிரி** - சககரம **திகிரிமால்** - சக்கரத்தையுடைய திருமால, **சிருட்டி** - கிருஷடி தோறறம **உந்தி** - கொப்பூழ், **தேவன்** - பிரமன் **செகம்** - உலகம் **உகந்தான்** - திருவுளம் கொண்டான், விருமபினான் நினைத்தான

28. முதலில் முனிவர்கள் தோன்றுதல்

மலரவன் நினைத்த வேளை
மரீசியோ டங்கி ராவும்
புலகனத் திரிகி ருந்து
புலத்தியன் புகழில் மிக்க
கலசன காதி யுற்றார்
கனவல விரவிற் றக்கன்
பிலமுடன் உதித்தான் மார்பில்
பிருகுவும் நண்ணி னானே.

தாமரை மலரில் தோன்றிய பிரமன் உலகைப் படைக்க வேண்டுமென நினைத்த மாத்திரத்திலேயே மரீசி, அங்கீரா, புலகன், அத்திரி, கிருது, புலத்தியன், புகழ் பொருந்திய சனகர், சனந்தரர், சனாதரா சனற்குமார் எனப் பல முனிவரும் தோன்றி விட்டனர்

பிரமனின் வலதுகால் பெருவிரலில தக்கன் தோன்றினான் மார்பில பிருகுமுனிவர் தோன்றினர்.

மலர் + அயன் - மலரயன் - தாமரை மலரில் தோன்றிய பிரமன **கனவலவிரல்** - கனமான வலது விரல் - பெருவிரல் **பிலம்** - பலம் - வலிமை

29. தக்கன் சிவனிடம் குழந்தை வேண்டுதல்

தருமதே வதையும் தாதா
தனமதில் உதித்தார் அப்போ
பெருமைசேர் மரீசி யின்பாற்
பிறந்தனன் காசி பன்தான்
மலரணி யீந்த தக்கன்
மகவினுக் கரனைப் போற்றி
திருவுளம் அறிந்தி டத்தன்
தேவியோ டுரைசெய் கின்றான்.

பிரமன் தனத்தில் தருமதேவதை உதித்தாள். பெருமை மிக்க மரீசியிடத்தில் காசிபன் என்ற மகன் பிறந்தான். பிரமனின் வலதுகால் பெருவிரலில் பிறந்த தக்கன் தனக்குப் பெண் வேண்டி சிவனுக்கு மலரால் அர்ச்சனை செய்தான். உமாதேவியே தன்மகளாக வர வேண்டுமென்பது தக்கன் விருப்பம். இதனையறிந்த சிவன் தன் தேவியிடம் பின்வருமாறு கூறுகிறான்

தாதா - தந்தை, பிதா, இங்கு பிரமன் **மகவு** - குழந்தை

30. நான்கு சாதியினர் தோன்றுதல்

அந்தணர் அரசர் வைசியர் சூத்திரரென்
றறைந்திடு நாற்குல மரபில்
வந்தறு தொழிலுக் குரியவர் இவரால்
வழுத்திட குலமு முற்பவித்தார்

இந்த நான்கிலும் வேந்தரை வர்களின்
இவர்களுக் கியம்புமாக் கினேயம்
தொந்தமா யுரைக்கும் பொருளினை யுணர்ந்து
சூக்ஷமமாய் உரைக்கக்கே ளென்றான்.

"அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு சாதியோரைப் படைத்தான் பிரமன். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறு தொழில்கள் உண்டு இந்த நான்கு சாதியினரில் வேந்தர் குலத்துதித்த ஐந்து பெண்களுக்கு வியாச முனிவர் நெருக்கமாக உரைத்த ஆக்கினேய புராணத்தில் இருக்கும் செய்திகளை நுட்பமாகக் கூறுவேன் கேள்" என சனக முனிவர் அத்திரி முனிவர்க்குக் கூறத் தொடங்கினார்

உற்பவித்தார் - தோன்றினார் **தொந்தம்** - இணக்கம, பழமை **ஆக்கினேயம்** - அக்கினி புராணம **அந்தணர்க்கு உரிய ஆறு தொழில்கள்** - வேதம் ஓதுதல், பிறரை ஓதுவித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், ஈதல், ஏற்றல் **அரசர்க்குரிய ஆறுதொழில்கள்** - ஈதல், உலகை ஆளுதல், படைப்பித்தல், காததல், போர் செய்தல், வேள்வி செயதல் **வணிகர்க்குரிய ஆறுதொழில்கள்** - வணிகம் செய்தல், ஈதல், வேள்வி, ஓதல், உழவு, பசுகாத்தல் **வேளாளர்க்குரிய ஆறுதொழில்கள்** - உழவு, பசு காத்தல், வாணிகம, பருத்திபட்டு நூல் அமைத்தல், மேளம், பறை போன்ற கருவிகளை இசைத்தல், பிறருக்குத் தொண்டு செய்தல்

31. சாதிகள் பிறந்த விதம்

பங்கய முகத்தி லுதித்தவந் தணரும்
பதுமன் மார்புதித்த க்ஷத்திரியர்
புங்கவன் வயிற்றி லுதித்திடும் வைசியர்
பிரமன் பின்னுடம்பு சூத்திரரும்
இங்கிவர் நான்கில் உயர்ந்தவர் ஆணும்

இழிகுலப் பெண்ணுமாய் இசைந்து
அங்கதி லுதித்த அனுலோமன் என்பர்
அநேகர் உண்டெனு மொழிந்தான்.

"பிரமனின் தாமரை போன்ற முகத்தில் தோன்றிய அந்தணர், மார்பிலே தோன்றிய அரசர், வயிற்றில் தோன்றிய வைசியர் (வணிகர்) முதுகில் தோன்றிய சூத்திரர் இவர்களோடு உயர்ந்த குல ஆணும், இழிந்த குலப் பெண்ணும் சேர்ந்து பிறந்த அனுலோமர் என்பவரும் பலர்" என்று சனகர் கூறுகிறார்.

பங்கயம் - தாமரை **பதுமன்** - பதுமத்தின் மேல் உள்ளவன, பிரமன் **பதுமம்** - தாமரை **புங்கவன்** - உயர்ந்தவன், பிரமன்

32. சாதிக் கெல்லாம் தலைவர் வன்னியர்

உலகுள சாதிவகைக் கெல்லாம் வேந்தர்
உபகுல வன்னிய ரென்றும்
கலையுணர் வியாச ருரைத்த ஈரொன்பான்
கவிதையாக் கினையினிற் கண்ட
நிலையெழு ருத்திர பாகயா யத்தை
நிகழ்த்துவேன் கேளுநீ ரிருந்து
சிலையினால் மிகுந்த வீரசே வகத்தை
சிந்தையிற் தெளிவுற வென்றான்.

"உலகில் உள்ள சாதிகளுக்கெல்லாம் அரசராக விளங்குபவர் வீரவன்னியர் எல்லாக் கலைகளும் உணர்ந்த வியாசர் கூறிய பதினெட்டு புராணங்களில் ஆக்கினேய புராணத்தில் உள்ள உருத்திர வன்னியர் வரலாற்றைக் கூறுவேன் மனத்தில் தெளிவோடு நீங்கள் இருந்து கேளுங்கள்" என்றார் சனகர்

உபகுல வன்னியர் - வீரவனனியா **ஈரொன்பான்** - பதினெட்டு **ஆக்கினை** - ஆக்கினேய புராணம

33. அரக்கர்களை அழிக்கத் தோன்றியவர் வன்னியர் எனல்

அயனுள சிருஷ்டி அமைத்திடும் அதனில்
அமரரும் முனிவரும் அனைத்தும்
கயமுதல் எறும்பு கடைவகை யுளதும்
காசினில் உறுபொருள் கருவி
நயமுறு புயங்கள் தாவர சங்கம
நலங்கொளும் பவங்களும் நவின்ற
செயமெலாங் கன்றுரைத்த ஆக மத்தின்
சிவன்மகன் புகமகன் கேளென்றான்.

“பிரமனது சிருஷ்டியில் தேவர், முனிவர், யானை முதல் எறும்பீறாக உள்ள உயிர்கள், மற்றுமுள்ள தாவரங்கள், பொருள் எல்லாவற்றின் நலங்களையும் அழித்துக் கெடுக்கக் கூடிய பலமுள்ள அரக்கர்களுக்காகச் சம்பு மகரிஷி யாகத்தில் உதித்த வீரவன்னியர் புராணத்தைக் கூறுகிறேன் கேள்” என்றார் சனகர்

அயன் - பிரமன **சிருஷ்டி** - படைப்பு, **கயம்** - கஜம் - யானை

34. சிவன் பார்வதியிடம் தக்கன் மகளாகச் செல்லும்படி கூறல்

தென்றிசை உறையுந் தக்கன்
சீருள தவஞ்செய் கின்றான்
நன்றவன் மகவா வென்று
நாடுவா யென்ன லோடும்
கொன்றை சூடியை யிறைஞ்சி
கூறுவாள் அடியேன் தன்னை
மன்றல் சூடுவதெந் நாளோ
மயேஸ்வரா என்று கேட்டாள்.

"தெறகே வாழும தக்கன் தனககு மகவாக நீ வரவேண்டுமெனத் தவம் செயகிறான் நீ சென்று வா" என இறைவன் (சிவன்) உமையிடம் கூற உமை, கொன்றை சூடிய சிவனை வணங்கி, "நீங்கள் என்று வந்து எனனை மணப்பீர்" என வினவினாள்

கொன்றை சூடி - கொன்றை மாலை அணிநத சிவன் **மன்றல்** - மணம இங்கு மணமாலை **இறைஞ்சி** - வணஙகி **மயேஸ்வரன்** - சிவன்

35. பார்வதி தக்கனின் குழந்தையாதல்

கன்னியா யுதிஏ ழாண்டில்
கணதேவர் சூழ உன்பால்
அன்னியே மணமுங் கொள்வன்
தோகைநீ ஏகு கென்ன
மன்னவன் தக்கன் தேவி
மகிழ்ந்திடக் குழவி யாகி
முன்னுறக் கண்ட மாது
உவகையிற் றோய்ந்தா ளன்றே.

"நீ கன்னியான ஏழாம் ஆண்டில் பூதகணங்கள் சூழவந்து உன்னை மணப்பேன் மயில் போன்றவளே! நீ செல்வாயாக" என்று சிவன், உமைக்கு விடைகொடுக்க, தககனும் அவன் மனைவியும் மகிழும் வண்ணம் பார்வதி குழந்தையானாள் இக்குழந்தை தங்கள முன்னே வரக்கண்ட தக்கன் மனைவி மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தாள்

கணதேவர் - பூதகணம **அன்னி** - அண்ணி - நெருஙகி **தோகை** - மயில், **குழவி** - குழந்தை

36. சிவன் தக்கனின் மகளை உரிய பருவத்தில் மணத்தல்

களித்தனர் உம்ப ரெல்லாம்
காவன மலரைப் பெய்தார்
உளத்தினில் மகிழ்ந்தான் தக்கன்
உத்தமி எங்கள் அம்மை
வளர்த்திடும் தவத்தால் பன்னி
மனமிக மகிழ்ந்தா ளன்னாள்
விளத்திடும் பதியிற் போந்தே
விருவணம் செய்து கந்தான்.

தேவர்கள் மனம் மகிழ்ந்தனர் சோலையிலுள்ள மலர்களை யெல்லாம் கொண்டு வந்து மலர் மாரி பொழிந்தனர். தக்கன் மிகவும் மகிழ்ந்தான் உமாதேவியையே வளர்த்திடும் பேறு பெற்றதால் தக்கனின் மனைவியும் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள் சிவன் தான் கூறியவாறே ஏழாண்டு கழிந்ததும் நேரில் வந்து மணம் புரிந்தான்

உம்பர் - தேவர், **காவனம்** - சோலை, **பன்னி** - பதனி - மனைவி, **பதி** - ஊர் **விருவணம்** - விரும்பிய வண்ணம, திருமணம

37. சிவன் தினமும் தக்கனுக்குத் திருநீறு அளித்தல்

தக்கனும் அரனை நோக்கித்
தவறிடா நிதமும் என்னூர்
புக்கிவி பூதி நல்கி
புகலுதி வரங்க ளென்ன
அக்கண மறைந்தே முக்கண்
நாரியோ டுலக னைத்தும்

மிக்கவெண் ணீற ணிந்து
வெள்ளியங் கிரியி ருந்தார்.

தககண் சிவனிடம், "நாள் தோறும் என் ஊருக்கு வந்து திருநீறு கொடுத்து வேண்டிய வரங்கள் கொடுக்க வேண்டும்" என வேண்டினான் அவ்வாறே வரமீந்த சிவன் உலகுக் கெல்லாம் திருநீறு கொடுத்துக் கயிலை மலையில் உமையுடன் மிகவும் மகிழ்ச்சியோடிருந்தார்

நிதம் - நாளதோறும், **புக்கி** - புகுந்து, **நல்கி** - கொடுதது, **நாரி** - பெண், இஙகு உமை **வெள்ளியங்கிரி** - வெள்ளிமலை - கயிலைமலை பனியால உறைநது காணப்படுவதால் வெள்ளி மலையாயிற்று

38. தக்கன் செருக்கடைதலும். சிவனை அழிக்க யாகம் செய்தலும்.

பூதியை அளிக்கத் தக்கன்
புத்தியில் கெருவ மாகி
ஆதிய ரன்தனை இகழ்ந்தான்
அருள்தனை அறிந்தே பக்க
பேதையோ டுரைகள் செய்தே
போந்திடா திருக்கப் பின்னோன்
சோதியை அழிப்பே னென்று
சேர்வுறு மகம்பு ரிந்தான்.

விபூதி பெற்றதால் செருக்கடைந்த தக்கன் சிவனை இகழ்ந்தான் இதனை அறிந்த சிவன் தன் மனைவியிடம் இனி அங்கு போகக கூடாது என்று கூறிக்கொண்டிருந்தான் அப்போது சிவனை அழிப்பதற்காகத் தக்கன் ஒரு வேள்வி செய்யத் தொடங்கினான்

பூதி - விபூதி - திருநீறு **கெருவம்** - கர்வம் - செருக்கு **பேதை** - உமை **சோதி** - சிவன், **மகம்** - யாகம்

39. பார்வதி தக்கனின் யாகத்துக்கும் போக விரும்புதல்

வானவர் சூழ வேதன்
மாலுடன் அஷ்ட பாலர்
பானுவும் புவிநி றைந்த
பான்மையை உமையாள் கண்டு
தானக மகிழ்ந்தே ஈசன்
தாள்வலம் புரிந்து தந்தை
யானவன் மகமும் காண
அடியளுக் கருள்க வென்றாள்.

தேவர்கள், பிரமன், திருமால், அட்டதிக்கு பாலர், சூரியன் அனைவரும் தக்கனின் வேள்விக்காகப் பூமியில் சூழ்ந்ததைக் கண்ட உமை, மிகவும் மனமகிழ்ந்து, இறைவனின் திருவடியை வலம் வந்து வணங்கி " என் தந்தை வேள்வி செய்கிறார். நான் அவர் யாகத்தைக் காண அருள்வீராக " என்றாள்

வேதன் - பிரமன், **அஷ்டபாலர்** - எட்டுத்திசைக காவலர், அவர்கள் இந்திரன், அக்னி, எமன், வாயு, வருணன், நிருதி, குபேரன், ஈசானன் **வானவர்** - தேவர், **பானு** - சூரியன்

40. பார்வதி யாகத்துக்குச் சென்று தக்கன் மதியாமையால் சபித்தல் சிவன் சினத்தல்

அரனுமங் கனுப்பச் சென்று
அழைத்திடாத் தக்கன் வாழ்வு
சரியவும் மகம்பேய் சுடுகா
டெனச்ச பித்து கோதை
வரமருள் கயிலை சென்ற
வாறெலா மங்கை பாகன்

திருவுள முணர்ந்தோ ராகிச்
சினத்துடன் விழிக்க லுற்றார்.

சிவன் அனுப்பச் சென்ற உமாதேவி, தக்கன் சிவனை அழைக்காமல் அவமதிப்புச் செய்ததோடு தன்னையும் இகழ்ந்ததால் தக்கன் வாழ்வு வீழ வேண்டும், யாகம் நடக்குமிடம் பேய்கள் உலவும் சுடுகாடாக வேணடும் எனச் சபித்தாள். பின் கயிலை சென்று வரம் தந்த சிவனிடம் நடந்தவற்றைக் கூறினாள் மங்கையை இடப்பாகம் கொண்ட சிவன் பார்வதியின் மன வருத்தம் உணர்ந்து நெற்றிக் கண்ணைத் திறந்தான்

மங்கை பாகன் - உமையை இடப்பாகம் கொண்ட சிவன்

41. வீரபத்திரன் தோன்றுதல்

விழியினீர் ததும்பக் கண்டு
விமலனுக் கிரத்திற் தோய்த்தே
அழிவிலாப் புலிய ளித்தார்
அவ்விடம் உதித்த வீரன்
உழுவையின் உரிய ணிந்த
உருத்திர உருவ மன்னித்
தொழுதனன் தக்கன் யாகம்
துகளெழும் படச்செய் யென்றார்.

நெற்றிக் கண்ணில் வந்த நீரில் குற்றமற்ற சிவனின் உக்கிரத்தோடு உதித்த வீரன் அழிவற்ற புலிகளைப் படைத்த புலித்தோல் அணிந்த உருத்திரனின் அருகே சென்று தொழுதான். சிவன் அவனிடம் "தக்கன் யாகம் செய்யுமிடத்தைத் தூள் தூளாகச் செய்து புழுதி பறக்கச் செய்" என்றார்.

விமலன் - குறறமறறவன், **உக்கிரம்** - கோபம **உழுவை** - புலி **உரி** - தோல், **துகள்** - தூசி, **உருத்திரன்** - சிவன

42. வீரபத்திரன் தக்கனையும். தேவரையும் அழித்தல்

படையெனும் அலகை சூழப்
பதியினில் ஏகி யாகம்
உடைபட விழித்தான் உம்பர்
ஒன்றிலா மடிந்தார் தக்கன்
முடியையோர் அலகை உண்ண
ஒழித்தனன் சாலை யெல்லாம்
சுடலையா யினவ ழிந்து
தோன்றினார் விடையின் மீது.

வீரபத்திரன் தனது படைகளாகிய பேயகள் சூழ்ந்து வர தக்கனின் ஊர் சென்று யாகம அழியுமாறு விழித்தான் தேவர்கள்அனைவரும் மடிந்தனர். தக்கனின் தலையை ஒரு பேய் உண்டது யாக சாலைகளை அழித்தான் யாகசாலை சுடுகாடாகியது அப்போது சிவன் காளை வாகனத்தில் தோன்றினார்.

அலகை - பேய், **உம்பர்** - தேவா, **சாலை** - யாகசாலை, **சுடலை** - சுடுகாடு, **விடை** - ரிஷபம், காளை மாடு

43. தேவர்கள் உயிர்த்தெழுதலும். தக்கன் ஆட்டுத்தலை பெறுதலும்

தந்தையின் மகத்தைக் கண்ட
தையலாள் அரனை யேத்தி
எந்தையால் தேவர் மாண்டார்
எழுந்திடச் செய்வா யென்ன
சிந்தையில் கருணை கூர்ந்து
செழித்திட எழும்பச் செய்தார்
அந்தமாய்த் தக்கன் ஆட்டுத்
தலைபெற அளித்தான் ஐயன்.

தந்தையின் யாகம் அழிந்ததைப் பாாதத தாட்சாயணி (உமை) என் தந்தையால் தேவர்கள் அழிந்தனா் எழுப்பித் தருவாய் எனச சிவனை வேண்டச் சிவனும் கருணை கொணடு தேவா்களை எழுப்பி, இறுதியில் தக்கனும ஆட்டுத்தலை பெறும்படி அருள் செய்தான்.

தையல் - பெண, இங்கு உமை **ஏத்தி** - போறறி. **அந்தம்** - இறுதி

44. சிவன் தேவர்களைச் சபித்தல்

அண்டர் ஆனவர் அரனை இறைஞ்சினர்
சண்டன் வீழ உதைத்தவர் சாற்றுவார்
துண்டெ மைபழித் தோதுந் துகளினால்
மண்ட ரக்கரில் வாடுவீ ரென்றனன்.

தேவர்கள் சிவனைத் துதித்தனா். எமனை விழும்படி உதைத்த சிவன் " என்னை இகழ்ந்த குற்றத்தினால் அரக்கா்கள் மூலம் துன்பப்படுவீா் " என்று கூறினாா்.

அண்டர் - தேவா் **சண்டன்** - எமன், **சாற்றவார்** - சொல்லுவாா் **துகள்** - குற்றம்.

45. தேவர்கள் "அசுரர்களால் துன்புறும் நாள் எவ்வளவு" எனக்கேட்டல்

உள்ள மானது உருகிய உம்பரும்
வள்ள லாய்அவு ணன்எமை வாட்டுநாள்
விள்ள வேணு மெனத்தொழ வேணியும்
கள்ள மின்றிக் கடவுளுரை செய்வார்.

மனம் வருந்திய தேவர்கள் அசுராா்களால் துன்புறும நாள எவ்வளவு எனக் கூறுமாறு வேண்டினா் சடையை உடைய சிவனும் ஒளிக்காமல் கூறத் தொடங்கினாா்.

வேணி - சடை **கள்ளம்** ஒளிவு வஞ்சனை

46. சிவன் "மாயையின் மூலம் அரக்கர் தோன்றுவர்" எனல்

மாயை யென்றொரு வஞ்சியு தித்தவள்
தூய காசிபன் தோள்தனில் தோயவே
சாய வீரரென் றான தனையராய்
ஆயி ரத்தெட்டு அண்டமும் ஆளுவார்.

மாயை என்ற பெண் தோன்றிக் காசிப முனிவரைச் சேர்வாள் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் ஆயிரத்தெட்டு அண்டத்தையும் ஆளுவார்கள்

வஞ்சி - பெண். **தனயர்** - பிள்ளைகள்

47. முருகன் உதித்து அரக்கரை அழிப்பான் எனல்

நாலு நூற்றிரு பத்தேழ் சதுர்யுகம்
காலன் அஞ்சக் கடிந்தனன் ஆதியை
வால கந்தன் மலர்க்கை உறைந்திடும்
வேலி னாற்சிறை மீட்பதும் உண்மையே.

அவர்கள் ஐந்நூற்றெட்டு முறை வரும் நான்கு யுகம் முடியும் வரை எமனும் அஞ்ச ஆளுவர் அவர்களை என் மகன் கந்தன் கை வேலால் அழித்து உங்களைச் சிறை மீட்பான். இது உண்மை

சதுர் - நான்கு. **காலன்** - யமன். **கடிந்தனன்** - துன்புறுத்துவர். **ஆதியை** - அவர்களை. **வால** - பாலன் மகன் **மலர்க்கை** - மலர் போன்றகை. **உறைந்திடும்** - விளங்கும்

48. மாயை தோன்றுதல்

என்ன ஈசன் அடியை இறைஞ்சினர்
மின்ன லென்ன விளங்கினர் மேருவின்

மன்ன ரன்தன் மனதில் நினைந்திட
கன்னி மாயை கதிரெனத் தோன்றினன்.

என்று சிவன் கூறத் தேவர் இறைவன் அடியை வணங்கினர் ஒளிபெற்று விளங்கினர் கயிலையில் வாழும அரன் தன் மனத்தில் நினைந்ததும் கன்னியாகிய மாயை ஒளியுடன் தோன்றினாள்

மேரு - இமயமலை **மன் + அரன்** - நிலை பெறற சிவன், **கதிர்** - சூரியன சூரியன் போல ஒளியுடன் தோன்றினாள்

49. மாயை சிவனை வணங்குதல்

வேண்டு மாயை விளைத்திடு மெல்லியாள்
ஆண்ட முத்தி னகையிதழ் ஆம்பலாள்
காண்ட கன்னிகை காள கண்டனடி
பூண்டு நன்முடி கவிந்து புகலுவாள்.

மாயையை நிகழ்த்த வல்ல மாயை மென்மையானவள் முத்துப் போல் பறகளையும், செவ்வல்லி போன்ற இதழ்களையும் கொண்டவள் கண்டம் கருத்த சிவனின் அடியில் முடியை வைத்து வணங்கிக கூறலுற்றாள

முத்தின்நகை -முத்துப் போல் பல், **ஆம்பல்** - செவவல்லி **இதழ்** - உதடு, **காளகண்டன்** - நஞ்சுண்டதால் கருத்த கழுத்தையுடைய சிவன் **முடி** - தலை, **கவிழ்ந்து** - வணங்கி

50. மாயை " என் கணவன் யார் " எனக் கேட்டல் சிவன் " காசிபன் " எனக் கூறுதல்.

மாச கத்து மடந்தை எனக்கிசை
நேச மான கணவன் நிகழ்த்தென
காசி பன்தவம் செய்வன் கடுகவே
ஆசை யாயணை கென்ன அணுகினாள்.

" குறறமுடைய பெணணான எனக்கு அன்பு தரும கணவன் யார் கூறு " என்றாள் " காசிப முனிவன் தவம செய்கிறான் விரைவாகச் சென்று ஆசையோடு அவனைச் சேர்வாயாக " என்று சிவன் கூற மாயையும் காசிபரை அடைந்தாள்

மாசு + அகத்து + மடந்தை, குற்றமுள்ள மனததையுடைய பெண், **கடுக** - விரைவாக **நிகழ்த்து** - கூறு

51. காசிபன் மாயை வருகையை உணர்தல்

மேருவின் வடபுறம் விளங்கு மாதவம்
மாருள வீசனை மனத்தி ருத்தியே
நேருள தவஞ்செயு மருகில் நின்றிடு
காரிகை வாடையால் கண்வி ழித்தனன்.

மேருமலையின் வடபுறத்தில் ஈசனை மனத்தில் நினைத்துத் தவம் செய்யும் காசிப முனிவர் அருகில் வந்துநின்ற பெண்ணின் வாசனையால் தவம் கலைந்து கண்விழித்தார்

காரிகை - பெண், இங்கு மாயை **வாடை** - மணம்

52. காசிபன் காம வயப்பட்டு மாயையை விரும்புதல்

கண்டனன் மடந்தைமேற் காதல் ஆகியே
விண்டனன் தவமெலாம் மெல்லி மாயையால்
மண்டிய மதன்விடு வாளி தீர்த்தருள்
என்றிடக் கன்னியும் இசைந்து கூடினாள்.

கண்விழித்ததும் காரிகையைக் கண்ட முனிவன் மாயை காரணமாக, அவள்மீது விருப்பம் ஏற்படத் தவத்தைக் கைவிட்டான் " மெல்லியலாளே ! மன்மதன் விடும் மலரம்பால் ஏற்பட்ட காம நோயைத் தீர்ப்பாயாக " என வேண்டினான். மாயையும் ஒபபுககொணடு அவரோடு சேர்ந்தாள்.

மடந்தை - பெண இங்கு மாயை **விண்டனன்** - விடடான **மண்டிய** - பெருகிய **மதன்** - மனமதன் **வாளி** - அம்பு, மனமதன மலரமபு விடுவதால காமம ஏறபடுவதாகப் புராணம கூறுகிறது **கன்னி** - பெண - மாயை

53. சூரபத்மன் பிறத்தல்

மருவவும் அரக்கியாம் எனவ கன்றனர்
இருடியின் கெற்பமும் நிற்கொ ணாமலே
ஒருசிறு கடிகையி லுதித்த சூரனும்
அரிவையும் முனிவனை மருவ வேண்டினள்.

சேர்ந்ததும் அரக்கியெனத் தெரிந்து விலகினார் முனிவர் முனி கர்ப்பம தங்காது. ஆகையால் ஒரு சிறு கணத்தில் சூரன் பிறந்தான் மாயையோ முனிவரை இன்னும் பொருந்த விரும்பினாள்

இருடி - ரிஷி - முனிவர், **கடிகை** - மிகக குறைந்த நேரம், நொடி, **அரிவை** - மாயை, **மருவ** - சேர

54. கஜமுகாசுரன் தோன்றுதல்

கரியெனும் உருவமாங் காசி பர்க்கெதிர்
பிரியமாய்ப் பெண்கரி யாகி நின்றனள்
ஒருமையி லணைந்தபின் னிபமு காசுரன்
தரணியில் உதித்திடத் தவத்தோன் கண்டனன்.

காசிபர் அஞ்சி ஆண்யானை வடிவம் எடுத்தார் மாயை பெண்யானை ஆனாள் இருவரும் இணைந்ததால் கஜமுகாசுரன் பிறந்தான் இவ்வாறு பூமியில் கஜமுகாசுரன் பிறந்ததைக் கண்டார் முனிவர்

கரி - யானை **இபம்** - யானை **தரணி** - பூமி யானை வடிவததில சேர்ந்ததால் யானை முக அசுரன் தோன்றினான

55. சிங்க முகாசுரன் தோன்றுதல்

கேசரி யாகியே கிளர்ந்து நின்றனன்
மாசில் பெண்மடங்க லாகி நின்றனள்
பாசமா யணைந்தனன் பாவை கெர்ப்பமாய்
மாசுள சிங்கமா சூரன் வந்தனன்.

முனிவர் ஆண் சிங்க வடிவமாகினார் மாயை பெண் சிங்கம் ஆனாள். கிளர்ச்சியடைந்த முனிவர் பாசத்தோடு அவளை அணைய அவள் கர்ப்பமடைந்து தீயவனான சிங்கமுகாசுரன் தோன்றினான்

கேசரி - ஆண்சிங்கம், **மடங்கல்** - சிங்கம

56. அசோமுகி பிறத்தல்

தகரெனும் உருவாய்த் தவசி நின்றனர்
வகையுறு பெண்தகர் ஆகி மருவினள்
துகரசோ முகியெனும் தோகை தோன்றினள்
அகமகிழ் சாமம்நால் அளித்த மாயையே.

ஆட்டுருவம் எடுத்தார் முனிவர் மாயையும் பெண் ஆடு ஆனாள், இருவரும் சேரவே அசோமுகி என்ற அரக்கி தோன்றினாள் இவ்வாறு நான்கு சாமத்திலும் நால்வரைப் பெற்றாள் மாயை

தகர் - ஆடு, **தவசி** - முனிவர், **துகர்** - குற்றம, **அசம் + முகி** - அசோமுகி, **அசம்** - ஆடு, ஆட்டு முகத்தைப் பெற்றவள்

57. அசுரர்கள் உலகத்தை ஆளுதல்

முளைத்திடும் அவ்வணம் மூன்று சூரரும்
வளத்தினில் அரன்டி உகந்து போற்றியே
அளித்த தாயிரம் அண்டம் ஆண்டனர்
களித்தனர் தேவரும் கண்டு போற்றவே.

பிறந்த இம்மூன்று அரக்கரும் உள்ளத்தில் சிவனை நினைத்துப் பூசித்து ஆயிரம அண்டங்களையும நீண்டநாள் ஆணடனா தேவர்களும் கண்டு மகிழ்ந்து போற்றினா (ஆனால் பின்னர் செருக்கடைந்து தீசசெயல புரிந்தனர் தேவர்கள் சிவனிடம முறையிட சிவன் நெற்றிக்கண்களிலிருந்து ஆறு பொறிகள தோன்றின)

58. அசுரர்கள் கொடுமையால் முருகன் அவர்களை அழித்தல்

சரவணப் பொய்கையில் சண்மு கத்துடன்
திரமுற உதித்தனன் சினத்து வென்றனன்
கருமுகி யெனுமசோ முகியும் காமனின்
மருமலர்க் கணையினால் மயங்கு நாளினில்.

ஆறு பொறிகளும் சரவணப் பொய்கையில் இட்டவுடன் ஆறுமுகமாகி முருகன் வலிமையோடு தோன்றினான் கோபித்து அம்மூவரையும போரில் அழித்தான் கருமை நிறம் பொருந்திய அசோமுகியும் காமனின் (மன்மதனின்) மணம் பொருந்திய கணைகளினால் துன்புற்றாள்

திறம் - வலிமை எதுகைககாக திரம ஆயிற்று. **மரு** - மணம் மனமதன முல்லை. நீலம் தாமரை. மா. அசோகு ஆகிய ஐந்து மலர்களைக கருமபுச் சிலையில் அமபாக வைத்து விடுவதாக நம்பிக்கை

59. அசோமுகி துருவாசரை விரும்புதல்

கேசமும் சுருண்டனள் கிளர்த்த பல்லினாள்
ஊசலாடு குழலினாள் உவகை மூடிய
மாசுள அரக்கியை மணம்செய் வாரிலை
வேசியா கத்துரு வாசரை விரும்பினாள்.

சுருண்ட மயிரையும் நீண்ட பல்லையும். விரித்து ஆடும் கூந்தலையும் உடைய குற்றமே உருவான அரக்கியை யார் மணப்பர்?

ஒருவரும வரவில்லை எனவே வேசியாக மாறித் துருவாச முனிவரை அடைய விரும்பினாள்

கேசம் - மயிா **குழல்** - கூந்தல

60. அசோமுகி கருவுறுதல்

கன்னியின் வயிற்றினில் கருவ மர்ந்திட
வன்னுரு வதனம் வெண்ணுருவ மாகியே
துன்னிடை யகன்றிடத் துடித்த நாடிகள்
பன்னுபச் சுருபமாய்ப் பயன்ற தாமரோ.

அவ்வாறே அடைய கர்ப்பமானாள் அதனால் கரிய முகம் வெளிற, இடை அகல, நாடி துடிக்க, பிரசவ வேதனை ஏற்பட்டது.

கரு + அமர்ந்திட - கருவமர்ந்திட - கர்பபம் ஏறபட, **வன்** - கருமை, **வதனம்** - முகம் **துன்** - நெருங்கிய, குறுகிய

61. அசோமுகி இறைவனை வேண்டுதல்

அப்பொழு (து) அவுணமாதர் கண்க லங்கியே
மைப்படு கண்டனை மனத்தி ருத்தினாள்
கப்பனை யாகிய கடவுட் காரணம்
செப்பிட வல்லவர் செகத்தில் இல்லையே.

அப்போது அரக்கரினப் பெண்ணாகிய அசோமுகி நஞ்சுண்டதால் கருத்த கழுத்தையுடையவனாகிய சிவனை மனத்தில் இருத்தி வேண்டினாள் கற்பனை என்று சொல்லப்படும கடவுள் செயலகளுக்குக் காரணம் கூறவல்லவர் இப்பூமியிலேயே கிடையாது

அவுண மாதர் - அரககப்பெண - அசோமுகி **மைப்படுகண்டன்** - விடமுண்ட கழுத்தையுடைய ஈசன் **கப்பனை** - கறபனை, **செகம்** - உலகம

62. வில்லவன் வாதாவி பிறத்தல்

கொல்லுநம னஞ்சிடக் கொதித்துமனம் பொங்க
சொல்லுமறை மாமுனிவர் உம்பரும் வருந்த
அல்லலுறும் அழற்கடவுள் அங்கமெழில் சோர
வில்வலன் வாதாவிஇரு வோரைஅவள் ஈன்றாள்.

எல்லோருடைய உயிரையும் போக்குகின்ற எமனே அஞ்சுமாறு, அவன் கொதித்து மனம் சினகக, வேதம் கற்ற முனிவரும் தேவரும் வருந்த, அக்னி உடல் அழகு கெட, வில்வலன், வாதாவி என்ற இரு அரக்கரை அசோமுகி பெற்றெடுத்தாள்

நமன் - எமன், **மறை** - வேதம, **உம்பர்** - தேவர், **அல்லல்** - துனபம **அழல்** - நெருப்பு, **அங்கம்** - உடல், **எழில்** - அழகு, **ஈன்றாள்** - பெற்றெடுத்தாள

63. வில்லவன் வாதாவியின் வலிமை

அரக்கர்மட மாதுளம் மகிழ்ச்சியுற அன்றே
பெருக்குகிரி யீதெனவே பேணிவளர் போதில்
தருக்கடனில் வாழ்பறவை தன்தசைக ளுண்டோ
உரக்கினில் மிகுந்தவிரு வோர்வலி உரைப்பாம்.

அரக்கர் குலப் பெண்ணாகிய அசோமுகி மனம் மகிழ்ச்சியடைந்து மக்கள் இருவரையும் பெரிய மலைகளோ என்று அதிசயிக்கும்படி வளர்த்ததனால் மரங்களில் வாழும் பறவைகளோ, தசைமிகுந்த மிருகங்களோ எங்கும் வளர முடியவில்லை வலிமையில் மிகுந்த இவ்விருவரின் வலிமை மிகுந்த கதையைக் கூறுகிறேன்

கிரி - மலை, **தருக்கள்தனில்** - தருககடனில **தரு** - மரம் **உரக்கு** - வலிமை

64. சனகர் கதை கூற அத்திரி வாதாவி வில்வலன் செயல்களைக் கூறுமாறு வேண்டுதல்

என்றசன கன்பதம் அத்திரி இறைஞ்சி
நன்றுரை செய்தாயென நயந்துளம் அதாகி
குன்றெனும் அசோமுகி குழந்தைகள் நடத்தை
இன்றுதவ றாமலே இயம்பென இசைப்பான்.

என்று கூறிய சனகரின் பாதத்தை அத்திரி முனிவா போறறி "மனம் ஒன்றிடுமாறு நன்றாகக் கதை கூறினீர்கள் குன்று போனற அசோமுகியின் குழந்தைகள் செயலை இன்று தவறாமல் எடுத்துக் கூறுங்கள் " என்று கூறச் சனகரும் கூறத் தொடங்கினாா

3. வில்வலன் வதைச் சருக்கம்

65. வில்வலன் வாதாவி பற்றிச் சனகர் கூறத் தொடங்குதல்

இருவராம் இயக்கர் செய்யும்
இடரிவை இயம்பல் ஆகா
தெரிந்தருள் உணர்ந்த மாற்றம்
செப்புவேன் முனியே சற்றும்
பருவதம் எல்லாம் போற்றும்
பத்தினும் பகரல் ஆகா
உருமையாம் ஆக்கை யுள்ள
பாலரென் றினிகேள் என்றான்.

" இவ்வாதாவி, வில்வலன் இருவர் செய்யும துன்பங்கள் அளவில் அடங்காதவை , சொல்ல முடியாதவை, தெரிந்தவரை சொல்லுகிறேன் முனிவரே கேளுங்கள எல்லா மலைகளையும சோத்தால் அதைப்போல் பத்துப் பங்கு பெரியது என்ற கூடச் சொல்ல முடியாத அளவு பெரிய உடலையுடையவர் இவ்விரு குழந்தைகள் இனி கேட்பாயாக " என்றார் சனகமுனிவர்

இயக்கர் - அவுணர் அசுரர் **இடர்** - துன்பம், **இயம்பல்** - சொல்லல், **செப்புவேன்** - சொல்வேன், **பருவதம்** - மலை **பகரல்** - கூறுதல **உருமை** - உருவம **ஆக்கை** - உடல, **பாலர்** - குழநதைகள்

66. அரக்கர் இருவரின் செயல்கள்

அட்டதிக் கெஜத்தை ஏந்தி
ஆடினர் பந்தா மென்றே
எட்டுதிக் கினுமிருப் போரை
ஏவல்கள் செய்ய வைப்பார்
மட்டிலா மிருக வேட்டை
ஆடியே அருந்தி இந்த
வட்டவா ருதிநீர் வற்றக்
குடிப்பினும் தாகந் தீரார்.

எட்டுத் திசைகளிலுமுள்ள காவல் யானைகளைப் பந்தாக வைத்துத் தூக்கி எறிந்து விளையாடுவர் எட்டுத் திசைகளிலுமுள்ளவர்களைத் தங்களுக்கு ஏவல செய்யச் செய்வாாகள் அளவில்லாத மிருகங்களை வேட்டையாடி உண்டு. இப்பூமியைச் சூழ்ந்திருக்கும் கடல்நீர் முழுவதையும் குடித்தாலும் தாகம அடங்காமல் தவிப்பர்கள்.

அட்டம் - எடடு, **திக்கு** - திசை, **கெஜம்** - யானை எட்டு திசைகளிலும எட்டு யானைகள் உள்ளதாகப் புராணம கூறுகிறது அவை ஐராவதம் புண்டரீகம வாமனம, குமுதம், அஞ்சனம புட்பதந்தம் சார்வபூபம சுப்ரதீபம **ஏவல்** - பணி தொண்டு **மட்டு** - அளவு **வட்டம்** - உருண்டை **வாருதி** - கடல

67. வாதாவி வில்வலன் செயலால் தேவர் அஞ்சுதல்

புயல்தனைப் பிசைந்தும் இந்தைப்
பொருந்துநற் றிலதம் இட்டும்

மயிடமேல் ஏறுஞ்சண்டன்
மனங்கலங் கிடவே பொங்கும்
பயமறத் திரிவார் வானோர்
பயந்திட நகைகள் செய்தே
கயவரிவ் வவுணர் செய்கை
கடவுளே அறிய வல்லர்.

மேகங்களைப் பிசைந்தும், சந்திரனை நெற்றியில் பொட்டாக வைத்துக் கொண்டும், எருமை மேல் ஏறும் எமனும் மனம் கலங்க, அச்சமில்லாமல் திரிந்தனர். வானவர்கள் அஞ்சும் வண்ணம் பெரிதாகச் சிரிப்பர் தீயவராகிய இவவசுரரின் செயல்களைக் கடவுள்தான் அறிய முடியும்.

புயல் - மேகம, **இந்து** - சந்திரன், **மயிடம்** - எருமை, **சண்டன்** - எமன், **நகை** - சிரிப்பு, **கயவர்** - தீயவர். **அவுணர்** - அரககா

68. மலையரசன் நடுங்குதல்

கரிய வெற்புகள் இரண்டு
காசினி உதித்த வென்றே
வருமுகில் தொகைக்கும் எல்லாம்
ஆவென வயிற்ற ளிப்பன்
பருவதக் கோன்ந டுங்கி
பலத்தினில் அதிக வீரன்
இருவரென் செய்வ ரோஎன
இதயமது ஏங்கல் உற்றான்.

வருகின்ற மேகக் கூட்டங்களுக் கெல்லாம் இடம் அளிக்கும் பர்வத அரசன் கருமையான இரண்டு மலைகள் பூமியில் தோனறிவிட்டனவே அவை நம்மை விட பலத்தில் மிகுதி பெற்றுள்ளனவே என நடுங்கினான் இவ்விருவரும் நம்மை என்ன செய்வார்களோ என மனம் ஏங்கத் தொடங்கினான்

வெற்பு - மலை **காசினி** - பூமி **முகில்** - மேகம **பருவதக்கோன்** - மலைகளுக்கெல்லாம் அரசன், **இதயம்** - மனம

69. கடலரசன் வருந்துதல்

புனலர சன்தன் உள்ளம்
புழுங்குவன் இந்தை தீயது
அனுதினம் அருந்த வாரி
அடைந்துநீர் சுவற லாலும்
தனையுற வாக நாடி
தழைத்தசீ வன்கள் எல்லாம்
கனமகன் றோடிக் கண்ணீர்
கசிந்திடக் கண்ட காலை.

இவ்வாதாவி, வில்வலன் அருந்துவதால் வடவைத்தீ மிகுந்து தணணீர் வற்றுவதையும், தன்னை உறவாக நினைத்து வாழ்ந்த ஜீவன்கள் அனைத்தும், தண்ணீர் இல்லாமையால் வெளியில் ஓடிக் கண்ணீர் சிந்தி அழிவதையும் கண்ட பொழுது கடலரசனாகிய வருணன் மனம் நொந்தான் வடவைத்தீயும் தண்ணீர் குறைந்ததால் பொங்கிச் சினந்து சீறியது.

புனலரசன் - கடலுககும நீருக்கும தலைவன், வருணன் **இந்தை தீ** - வடவைத தீ, கடல் நடுவே உள்ளது **வாரி** - கடல, **சுவறல்** - வற்றல **சீவன்** - உயிர்கள

70. சூரிய சந்திரர் அச்சம்

சினத்தினில் பிறந்த செந்தீ
செங்கதிர் உலகில் தாவ
கனத்திடும் அழலோன் வெம்பி
காசினி தனில்உ திக்க
மனத்தினில் கலக்கம் ஆகி
மதியும் அத்தன்மை வானில்

செனித்திட இயக்கம் இன்றி
தேசினில் ஒளித்தி ருந்தான்.

சீறிச் சினந்த வடவைத்தீ கடல் வற்றியதால் சூரிய மணடலம வரை தாவ, சூரியனே வெதும்பி, உலகில் உதிகக அஞ்சினான் சந்திரனும் வெப்பம் தாங்காமல் வானத்தில் தோன்ற அஞ்சி புகை மூட்டத்திலேயே மறைந்திருந்தான்

செங்கதிர் - சூரியன், **அழலோன்** - சூரியன், **காசினி** -பூமி **மதி** - சந்திரன், **செனித்திட** - தோன்ற, **தேசு** - புகை, மேகமண்டலம

71. எமனின் அச்சம்

பண்டுறை அவுணர் ஆவி
பற்றும்பா சக்க யிற்றைக்
கண்டநீர் மனந்து ணிந்துஇக்
கயவரைக் கடிவீர் ஆகில்
முண்டமர் செய்வர் வாயால்
முழுங்குவர் எனது பக்கல்
அண்டிய தூதர் நீங்கள்
அவரிடத்து அணுகல் என்றார்.

வாதாவி, வில்வலன் வலிமையைக் கண்ட எமனும், தன் தூதர்களை நோக்கி, "முன்பிருந்த அரக்கர்களைப் பாசக்கயிறு போட்டு உயிரைப் பறித்ததை நினைத்து மனம் துணிந்து வாதாவி வில்வலனையும அவ்வாறே செயயலாம் என்று நினைததால் அவர்கள் போர் புரிவார்கள், உங்களை வாயில் போட்டு விழுங்கி விடுவார்கள் எனவே அவர்கள் பக்கம் போகாதீர்கள்" என்று தூதர்களிடம் கூறினான்

பண்டு - முனபு **ஆவி** - உயிர் **அவுணர்** - அரககர் **அமர்** - போர **பக்கல்** - பக்கம் **அண்டிய** - நெருஙகிய **அணுகல்** - நெருஙகாதீாகள

72. எமன், தேவர்களின் கலக்கம்

மட்டிலா துயர முற்ற
மறவிஅங் கிருக்க வானோர்
திட்டமும் புகழும் நீங்கிச்
சிந்தையும் துவக்கிப் பண்டு
பட்டபாடு அகன்றி லோமிப்
பாவிகள் உதித்தார் என்ன
கொட்டமும் செய்வரோ என்று
உள்ளமும் குழற லுற்றார்.

இவ்வாறு அளவற்ற துயரம் அடைந்து எமன் அங்கு இருக்க, தேவர்கள் தங்கள் பெருமை புகழ் குன்றி, மனம் கலங்கி "முன்பு பட்ட துயரமெல்லாம இன்னும் நீங்கவில்லை போலும் இப்பாவிகள் தோன்றினரே! என்ன கொட்டம் அடிக்கப் போகிறார்களோ" என்று சஞ்சலமடைந்தார்கள்

மட்டு - அளவு, **மறவி** - எமன் **வானோர்** - தேவா, **திட்டம்** - பெருமை, **சிந்தை** - மனம, **பண்டு** - முன்பு, **கொட்டம்** - துஷடத்தனம, கெடட செயலகள **குழறல்** - சஞ்சலம அடைதல்

73. வில்வலன் ஆடாக மாறுதல்

உரத்தினில் வலிய சூரர்
உலகிலோர் விடுதி பெற்றே
வரத்தினில் மிக்கோ ரடவி
முனிவரின் மலர்த்தாள் ஏத்தி
பருத்தவென் னமுத ருந்தி
பரிவுடன் ஏகும் என்றே
இருத்திவில் வலனை மேடம்
என்னவன் தசைக ளாலே.

வலிமையில் மிக்க அச்சூரர்கள் உலகில் ஒரு வீடு எடுத்துக் கொண்டனர் வரம பெற்ற முனிவர்கள் வீதி வழியே வந்தால் அவர்களின் பாதங்களை வணங்கி, "நாங்கள் சமைகக்கும் நல்லுணவை அருந்திச் செல்வீர்" என ஆசனம் அளிப்பர் வில்வலனை ஆடாக மாறச செய்து அவன் தசையை அறுத்து.

உரம் - வலிமை, **விடுதி** - வீடு, இல்லம **அடவி** - காடு, **மேடம்** - ஆடு

74. முனிவர்களைப் புசித்தல்

வகையோடு பொரிய லோடு
மாதவர்க்கு அடிசில் ஈய
உகந்தவர் உண்டால் சூரன்
உந்தியில் உருவம் உன்னி
தகரெனும் உருவம் மாறித்
தவசிகள் வயிற்றைக் கீறி
மகிழுறு தவத்தோர் மாள
மாய்கைசெய் (து) அருந்து நாளில்.

வகையாகப் பொரியல் செய்து, முனிவர்களுக்கு அருமையான உணவைத் தர மகிழ்சசியோடு முனிவர்கள் உண்டால வில்வலன் என்னும் அரக்கன் வயிற்றிலேயே ஆட்டுருவம் நீக்கித் தன் பழைய உருவெடுத்து முனிவர்களின் வயிற்றைக் கீறி வெளியே வருவான். தவத்தையுடைய முனிவாகள் இறந்ததும் அவர்களை இருவரும் அருந்துவர்

அடிசில் - உணவு **ஈய** - கொடுக்க **உகந்தவர்** - மகிழசசியடைநதவராய. **உந்தி** - கொபபூழ - இஙகு வயிறு **தகர்** - ஆடு. **மாள** - இறகக **மாய்கை** - மாயை - தநதிரம

75. அகத்தியரை அழிக்க நினைத்தல்

கும்பமுனி சூரருரை கூடி மகிழ்ந்தே
செம்பொன்அடி யில்பணிகள் செய்தவண் இருத்தி
இன்புள விருந்திட இருடியமர் போதில்
வம்புசெயும் வில்வலன் வதைத்திட நினைத்தான்.

இவ்வாறு இருக்கும் நாளில் ஒருநாள் அகத்தியர் வந்தார் அப்போதும் அசுரர் இருவரும் அவருடன் உரையாடி மகிழ்ந்து அவருடைய பாதங்களுக்குத் தொண்டு செய்து அமரவைத்து விருந்திட்டனர் முனிவரும் அமர்ந்து விருந்துண்டார். அப்போது வம்பு செய்பவனாகிய வில்வலன் அவருடைய வயிற்றைக் கிழித்து வதைக்க நினைத்தான்.

கும்பமுனி - அகத்தியர் **அவண்** - அங்கு. **இருடி** - ரிஷி - முனிவர். **அமர் போதில்** - அமர்ந்து விருந்துண்ட போது

76. அகத்தியர் வில்வலனை அழித்தல்

மளமளெனு மாய்கையை மனத்தினில் உணர்ந்து
களவசுரன் ஆவியினி காணஅரிது என்றே
வளமுடைய பூதியை அருந்தினர் வயிற்றில்
புளகன்உள வாம்உடல் புழுங்கஇனிது ஒழிந்தான்.

வயிற்றில் அசுரன் செய்யும் தந்திரத்தை விரைவாக உணர்ந்த அகத்தியர் இந்த அசுரன் உயிரை இனிக் காண முடியாது என்று சொல்லி விபூதியை அள்ளி வாயில் போட்டார். மகிழ்ச்சியோடு வெளிவர நினைத்த வில்வலன் வயிற்றினுள்ளேயே உடல் புழுங்கி இறந்தான்

மளமளெனும் - விரைவாக **பூதி** - விபூதி திருநீறு **புளகன்** - மகிழ்சசி அடைந்தவன

77. பாவம் நீங்க அகத்தியர் சிவபூசை செய்தல்

அவுணன்உடல் உண்டபவம் அண்டினதி னாலே
புனிதபர சிவன்பூசை புரிகுவல்யான் என்றே
அவனிதனில் லிங்கமும் அமைத்தடி பேணி
பவமதை அகற்றிவளர் பாரினில் உறைந்தான்.

அகத்தியரும் அசுரன் உடலை உண்ட பாவம பெற்றதனால் சிவபூசை செய்வேன் என்று பூமியில் பல இடங்களில இலிங்கம் அமைத்துப் பூசை செய்து பாவத்தை அகற்றி உலகில் வாழ்ந்தார்

அவுணன் - அசுரன், **பவம்** - பாவம **புரிகுவல்** - புரிவேன், **அவனி** - பூமி **பார்** - பூமி

78. அகத்தியர் பெயரால் கோயில் ஊர் அமைத்தல்

அகத்தியமது ஆலயப் பெயர்வி ளங்க
சகத்துளோர் வணங்கிடத் தழைத்தருள்கள் ஈய
பகைத்தவுண சீரணம் பதிபெயர்கள் ஊரில்
சகத்துணைவனைப் பரிவுடன் துதிகள் செய்தான்.

அகததியர் பூசித்த லிங்கமும், ஆலயமும அவர் பெயரால் அகத்தியலிங்கம், அகத்தீச்சரம என்று பெயர் விளங்க, இப்பூமியிலுள்ளோா அதனை வணங்கினார்கள் அவர்களுக்கும் அருள் செய்தார் இறைவன் அவுணனைச் சீரணம் செய்த ஊரில் தன் துணைவனை இழந்த வாதாவி அவனை அன்புடன் துதிக்கின்றான்

79. வாதாவி வருந்துதல்

கோடைக் கிடியென்றுமே நாக்குளறி
வாடிக் குடல்மண்ணில் விழுந்துபுரண்டு

ஓடிப் புலியம்மிதன் மேல்குழவி
சாடித் தனதாவி தளர்ந்தனனே.

வாதாவி கோடையிடிபோல் அழுது, நாக்குளறி, வாடி, மண்ணில் விழுந்து, புரண்டு, பூமியாகிய அம்மி மீது குழவி புரள்வதுபோல் உருண்டு, உயிர் தளர்ந்தான்

சாடி - உருண்டு

80. சினம் ஆறுதல்

வாழுமுயிர் மாயவருந் தின்னப்
பாழுமுனி யோடுபகைத் தனமால்
வேழம்தனை வென்றிடும் ஆளியெனத்
தாழுமுடல் என்றுதணிந் திடுவான்.

"வாழ வேண்டிய உயிர் சாகுமாறு அப்பாழாய்ப் போன முனிவரோடு பகைகொண்டோம் அதனால் யானையைத் தின்னும் சிங்கம் போல அண்ணனை விழுங்கிவிட்டான் அவன்" என்று கோபம் தணிந்தான்

வேழம் - யானை, **ஆளி** - சிங்கம்

81. புலம்புதல்

அண்ணா எனதாவி அகன்றதுளம்
எண்ணாதும் எண்ணினேன் என்செய்வேன்
விண்ணாள விரும்பி மடிந்தனையோ
கண்ணாள சொல்என்று கலங்கினனே.

"அண்ணா நீ இறந்தபோதே என் உயிரும் போனது மனம் எண்ணாததெல்லாம் எண்ணுகிறது என்ன செய்வேன்? சொர்க்கலோகத்தை ஆள விரும்பி மடிந்து போனாயோ? கணணாளனே சொல் " என்று கலங்கினான்

விண் - சொரகம் **ஆவி** - உயிர்

82.

தெரியாவகை சிந்தையில் எண்ணிஉடல்
பெரியோர் அடிபேணி வணங்குவனோ
அரிதாம் அவுணாதி சிகாமணியே
விரிவான புயாசல வில்வலனே.

"தெரியாமல் கெட்டதை மனத்தில் நினைத்து விட்டேன் பெரியோர் அடிகளில் வீழ்ந்து வணங்கினால் இப்பாவம் போகுமோ? அரிய அரக்கர் தலைவனே ! பரந்த மலைபோன்ற தோள்களை உடைய வில்வலனே ".

அவுண ஆதி - அரக்கர் குலததுக்கு, **சிகாமணி** - முடிமணி போன்றவன், **புயாசலம்** - புயம் + அசலம், **புயம்** - தோள், **அசலம்** - மலை

83.

அந்தோஎன் அகம்குளிர ஆதரவாய்
வந்தேஒரு வண்ணம் வகுத்திடுவாய்
சிந்தாகுலம் தீர்ப்பவ ருன்னையலால்
எந்தாய்துணை வேறிலை இவ்வுலகில்.

"ஐயோ என் மனம் குளிர ஆதரவாய் வந்து ஏதேனும் ஒரு வழிசொல்வாய உன்னைத் தவிர என் மனக்கவலை தீர்ப்பவர் இவ்வுலகத்தில் வேறு யாரும் இல்லை, நீயே துணை "

அகம் - மனம, **வண்ணம்** - வழி, **சிந்தாகுலம்** - கவலை

84.

ஆக்கம்பெரி தானதினால் அதனைத்
தூக்கித் திசைமீது திரிந்திடுதல்

ஊக்கம்இலை யென்(று) ருகு கின்றவனைக்
காக்கைக்கருதல் கடனா தலினால்.

"உடல் பெரிது, ஆகவே இதைத்தூக்கிக் கொண்டு எங்கும் அலைய இயலாது உருகுகின்ற என்னைக் காப்பது சிவன் கடன் " என்று கூறிய வாதாவி

ஆக்கம் - உடல

85. இறைவனைத் துதித்தல்

உள்ளத்துறை அந்தரி ஊழிருளை
விள்ளும்கதிரால் வினையா னவெலாம்
மெள்ளக்கெடு சங்கரியான விமலன்
வள்ளல்பாதம் வாழ்த்திடல் ஆகினனே.

உள்ளத்தில் இருக்கும் ஊழ்வினை இருளைத் தன் ஒளியால் கெடுப்பவன் ஆன குற்றமற்ற சிவனின் பாதத்தை வழிபடத் தொடங்கினான்.

அந்தரி - உள்ளுக்குள் இருக்கும், **ஊழ்** - வினை, **கதிர்** - ஒளி **சங்கரி** - அழிப்பவன், **விமலன்** - குற்றமறறவன், **வள்ளல்** - வேண்டியதைக் கொடுப்பவன், இங்கு சிவன்

86. சிவன் செயலை விளக்கும்படி அத்திரி வேண்டல்

புக்கிக்கதை போற்றிடு மத்திரியும்
மிக்கசனகன் கழலே வினவி
துக்கங்கள்செய் சூரனுளம் தனிலே
நக்கன்புகுந் தென்ன நடத்தினனோ.

இவ்வாறு சனகர் கதை கூற கதை கேட்கும் அத்திரி முனிவரும் சனகன் பாதங்களைப் பணிந்து," துயரங்களே தரககூடிய சூரன் உள்ளத்தில் சிவன் புகுந்து என்ன செய்தான்? " என்று கேட்டார்.

புக்கி - ஊன்றி, **நக்கன்** - சிவன்

87. சனகன், சிவன் செயல் நம்மால் அறிய முடியுமோ? எனல்

என்ளெண் ணெயதாக நிறைந்தருளும்
வள்ளல் விளையாட்டை வழுத்துவதோ
கள்ளன்கதிர் தீபமும் காட்டுமவன்
குள்ளச்சடை மாமலர் கொள்பவனே.

சனகரும், "எள்ளுக்குள் நெய்யாக நிற்கும் இறைவன் விளையாட்டை நம்மால் சொல்ல இயலுமோ? கள்ளனும அவனே, கள்ளனைப் பிடிக்கத் தீபம் காட்டுபவனும் அவனே, குட்டைச் சடையில் மலர்சூடிய சிவனின் செயல் நம்மால் அறிய இயலுமோ?" என்றார்.

88. மேலும் கதை கூறுமாறு அத்திரி வேண்டல்

வாதாவி யரக்கன் மகேசுரன்தன்
பாதாம்புயம் வேண்டிய பான்மையெலாம்
வேதாந்தம் விளங்கிடும் மாமுனியே
ஓதாய்என வோதீடல் ஆகினனே.

" வாதாவி அசுரன் சிவனின் பாதங்களை வணங்கித் தவம் செய்த விதத்தையெல்லாம் வேதாந்தம் உணர்ந்த மாமுனிவரே கூறுங்கள் " என அத்திரி கேட்கச் சனகன் கூறத் தொடங்கினான்.

மகேசுரன் - சிவன், **பதம் + அம்புயம்** = பாதாம்புயம் தாமரை போன்ற பாதங்கள், **பான்மை** - தனமை.

4. வாதாவி சூரன் தவம்புரி சருக்கம்

89. வாதாவி தவம் செய்தல்

குருமுனி பூசை செய்த
குழகன்ஆ லயத்தை நாடி

கருமலை அவுணன் உள்ளம்
கசிந்தரன் அடியே ஏத்தி
உரிமையாய் வலம தாகி
உயர்ந்திடும் தடத்தின் மூழ்கி
புரிசடை அணிந்து பூதி
பூண்டுமா தவம்கொண் டானே.

கரியமலை போன்ற அரக்கனான வாதாவியும், அகத்தியர் பூசை செய்த ஆலயத்துக்கு வந்து உள்ளம் உருகிச் சிவன் அடியைப் போற்றி வலம் செய்து, குளத்தில் மூழ்கிச் சடாமுடி தரித்து, விபூதி அணிந்து தவம் செய்யலானான்.

குருமுனி - குருவாகிய முனிவன், அகத்தியன் **குழகன்** - சிவன், **தடம்** - குளம், **பூதி** - திருநீறு

90.

பருத்ததோர் கம்பம் மீதில்
பற்றிய ஊசி நாட்டி
சிரத்தினில் அழுந்த உள்ளம்
சீரடி உயரத் தூக்கி
எருதிவர் ஈசன் பாதம்
இடைவிடா மனதி ருத்தி
பெருத்திடும் மாமன் செய்த
பெருந்தவம் செய்ய லுற்றான்.

பருமனான ஒரு கம்பத்தை நாட்டி அதில் ஒரு ஊசியை ஏற்றி அந்த ஊசி தன் தலையில் அழுந்துமாறு கால்களை உயரத் தூக்கி, காளையை வாகனமாகக் கொணட சிவன் பாதங்களை இடைவிடாமல் உள்ளத்தில் இருத்திச் சிவனின் மாமனாகிய தக்கன் செய்தது போன்ற மிகக தவத்தைச் செய்தான்

சிரம் - தலை. **எருது + இவர்** - எருதிவர் - எருதினமேல் ஏறி நடத்தும்

91.

உணவின்றி துயிலு மின்றி
ஒருமன தாக யாக்கை
தணிவதாய் அருள்சு ரந்து
தழைத்துநூ றாண்டு கம்ப
நுனியினில் நின்றான் எம்மான்
நுவலொணாக் கவுசி கன்தான்
திணிபுய அவுணன் என்று
செகத்தினில் துதிக்கச் செய்தான்.

உணவின்றி உறக்கமும் இன்றி உடல் வற்ற ஒரு மனத்தோடு அருள் சுரக்க நூறாண்டு கம்ப நடுவில் நின்று ஒப்பற்ற பெருமையையுடைய விசுவாமித்திரனோ இவ்வசுரன் என்று சொல்லும்படி தவம் செய்தான்

கவுசிகன் - விசுவாமித்திரன். **திணிபுய அவுணன்** - திண்ணிய தோள்களையுடைய அசுரன் **செகம்** - உலகம்.

92.

கோதிலா உளமு மன்னி
குளிர்பனிக் காற்ற ருந்தி
ஆதியை இறைஞ்சும் சூரன்
அடியிணை மனத்தின் ஓர்ந்து
மாதிடப் பாகம் சூழும்
மான்மழு சூலம் ஏந்து
நீதிசேர் விடையே றியங்கு
நிருதத்தா ளுடனெ ழுந்தான்.

குற்றமற்ற உள்ளத்தோடு காற்றையே உணவாக அருந்திச் சிவனை வணங்கும் சூரனின் பக்தியை உணர்ந்த சிவபெருமான் இடப்பாகத்தில் உமாதேவியோடும், மான், மழு, சூலத்தோடும் இடப வாகனத்தில் நடனமாடிய தாளோடும் எழுந்தருளினான்.

கோது - குற்றம, **மாது + இடம் + பாகம் + சூழும்** - பெண்ணை இடபபாகத்தில் கொண்ட, **விடை** - காளை, **நிருதம்** - நிருத்தம் - நடனம்

93. சிவன் காட்சி கொடுத்தல்

நந்தியும் கணமும் சூழ
நாரதர் யாழொ லிப்ப
துந்துமி அறைய வானோர்
துதித்துமா மலர்கள் தூற்ற
சுந்தர முனிவர் ஏத்த
சுரர் மடந்தையர் நடிப்ப
கந்தனை ஈன்ற எந்தை
கமழ்நடம் புரிந்து வந்தார்.

நந்தியெம் பெருமானும் பூதகணங்களும் சூழ, நாரதர் யாழ் இசைக்க, துந்துமி ஒலிக்க, தேவர்கள் மலர்மாரி பொழிய, முனிவர்கள் துதிக்க, தேவ மடந்தையர் நடனமாட, கந்தனைப் பெற்றெடுத்த தந்தையாகிய சிவன் நடனமாடி வந்தார்.

வானோர், சுரர் - தேவர், **நடிப்ப** - நடனமாட, **துந்துமி** - தேவர்களின் இசைக்கருவி

94. அசுரன் சிவனைத் துதித்தல்

தவம்புரி அவுண னெங்கள்
தற்பரன் மலர்த்தாள் கண்டு
கவலையாய்க் கண்ணீர் சோர
கரத்தினால் இறைஞ்சி ஈரேழ்

புவனமும் நிறைந்த தேவே
 புனிதனே அடியேன் செய்த
பவமெலாம் அகற்ற வந்த
 பரமனே போற்றி யென்றான்.

தவம்புரிந்த அசுரன் சிவனின் மலர்ப்பாதம் கண்டு, கண்ணீர் சிந்திக் கை குவித்து, "பதினான்கு உலகங்களிலும் நிறைந்த தேவனே! அடியேன் செய்த பாவத்தை அகற்ற வந்த பரமனே ! போற்றி!" என்று துதித்தான்

தற்பரன் - சிவன் **பவம்** - பாவம பதினான்கு உலகம் மேல் ஏழு உலகம், கீழ் ஏழு உலகம் அவை பூலோகம், புவர்லோகம, சுவர்லோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம, சத்தியலோகம், அதல, விதல, சுதல தராதல மகாதல, இரசாதல பாதாளம்

95.

ஆதியே போற்றி போற்றி
 அந்தரி நேசா போற்றி
சோதியே• சுடரே போற்றி
 சுடலையில் நடித்தாய் போற்றி
பூதியை அணிந்தாய் போற்றி
 புலியுரி உடையாய் போற்றி
வாதனை தீர்த்தாள் கின்ற
 வாமதே வன்தாள் போற்றி.

" ஆதியே போற்றி ! உமையவள் நேசனே போற்றி ! சோதியே போற்றி ! சுடுகாட்டில் நடனம் ஆடுபவனே போற்றி ! திருநீறு அணிந்தவனே போற்றி ! புலித்தோலை அணிந்தவனே போற்றி ! வேதனை தீர்க்கும் உமைபங்கன் திருவடி போற்றி

அந்தரி - உமை **சுடலை** - சுடுகாடு. பூதி - **திருநீறு உரி** - தோல, **வாதனை** - துனபம

96.

மான்மழு கரத்தாய் போற்றி
　　மதிநதி சடையாய் போற்றி
வானுள அமரர் போற்றும்
　　வள்ளலின் மலர்த்தாள் போற்றி
ஊன்விழி அளித்த வேடற்கு
　　உகந்தருள் அளித்தாய் போற்றி
ஈனவன் தவமு கந்தே
　　எழுந்தருள் ஈசா போற்றி.

மான்மழு ஏந்திய கையையுடையவனே போற்றி ! பிறைச் சந்திரனையும், கங்கையையும் சடையில் அணிந்தவனே போற்றி ! வானுலகில் உள்ள தேவர்களால் போற்றப்படும் திருவடிகளை வணங்குகிறேன் விழியைத் தோண்டி அப்பிய கண்ணப்ப நாயனார்க்கு அருளியவனே போற்றி ! இழிந்தவனாகிய என்னுடைய தவத்திற்கு இரங்கி எழுந்தருளிய இறைவனே போற்றி !

மதி - பிறை, **நதி** - கங்கை **ஈனவன்** - இழிந்தவன்

97. சிவனிடம் வில்வலன் இறந்த செய்தியைக் கூறுதல்

வில்வல னோடு நாயேன்
　　இப்புவி உதித்த நாளில்
கொல்எம னாக வந்த
　　குருமுனி சிவக்க அண்ணன்
அல்லவாய் சீர ணித்தான்
　　அய்யனே மிடிஅ கற்றி
செல்வமும் தருவை யென்று
　　செம்மலர்ப் பதம்ப ணிந்தான்.

அண்ணன் வில்வலனோடு நான் இப்பூமியில் தோன்றி வாழும நாளில் அகத்தியர் சினத்தினால் அணணன் சீரணிக்கப்பட்டு இல்லாமல் போனான் ஐயனே ! என் துனபம் போக்கிச செல்வம் தருவாய்" என்று வாதாவி சிவனுடைய சிவந்த மலர் போன்ற பாதங்களை வணங்கினான்

சிவக்க - சினகக **மிடி** - துன்பம், வறுமை

98. ஈசன் வரம் கேட்குமாறு கூறுதல்

இரங்கு கின்ற அவுணனுக் (கு)
இரங்கி ஈசன் அருளுவான்
உரஞ்செய்உன் னுளத்தில் நண்ணும்
உறுதி ஓதும் என்றனன்
நிரஞ்சனே அகண்ட மான
நித்ய நீல கண்டனே
புரந்த கித்த புனிதனே
புதுமைகே ளென்றுரை செய்வான்.

கசிந்துருகும் வாதாவிக்கு இரங்கிய இறைவன் " உறுதியான உன் உள்ளத்தில் என்ன நினைக்கின்றாயோ அதனைக் கேள் " என்றான். வாதாவியும், " எங்கும் நிறைந்தவனே ! அகன்ற நீல நிறமுள்ள கழுத்தை உடையவனே ! முப்புரங்களை எரித்தவனே ! தூய்மையானவனே ! நான் கேட்கும் புதுமையான வரத்தைக் கேள் " என்றான்

உரம் - வலிமை, **புரம் தகித்த வரலாறு** - ஆகாயத்தில் சுழலும பொன், வெள்ளி செமபாலான மூன்று கோட்டைகளையுடைய மூன்று அசுரா பூமியில் ஆங்காங்கே கோட்டையோடு இறங்கி நாசம விளைத்தனர் இதனை அறிந்த இறைவன் மேருமலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும், திருமாலை அமபாகவும கொண்டு வில்லை

வளைதது நாண ஏறறாமலே கோட்டைகளைப பாாததுச சிரிககக கோடடைகள எரிந்தன இதுவே திரிபுர தகனம (முபபுரம எரிததமை)

99. வாதாவி ஆயுள், மனைவி, மக்கள் வேண்டுதல்

தேவ ராண்டினி லாயிரம்
செழிப்ப யான்வி ளங்கவும்
மூவ ராலும் முருகனாலும்
முனிவ ராலும் மாறிலா
கோவ தாகி முடிபுனைந்து
கொலுவி னோட மைச்சரும்
கோதி லாநற் பாவையோ (டு)
எனக்கு கந்த பாலரும்.

“தேவர்களுக்கு வகுககப் பட்ட வருஷங்கூளில் ஆயிரம் ஆண்டுகள் நான் செழித்து வாழவேண்டும் பிரமன், திருமால், சிவன் மூவராலும், முருகனாலும், முனிவர்களாலும் எனக்கு அழிவு ஏற்படக் கூடாது நான் அரசனாக முடிபுனைந்து ஆளவேண்டும் அமைச்சர்களும், குற்றமற்ற மனைவியரும், நல்ல பிள்ளைகளும், தரவேண்டும்.

மூவர் - சிவன் பிரமன் திருமால் **மாறு** - பகை - அழிவு கோ - அரசன் **கொலு** - அவை **கோது** - குற்றம் **எனக்குகந்த** - எனக்கு+உகந்த - எனக்குத தகுந்த நான் விருமபிய வணணம **கொலுவினோடமைச்சரும்** - கொலு + இன் + ஓடு + அமைச்சரும் **பாவை** - மனைவி **பாலர்** - குழந்தைகள்

100.

தந்திமா இனங்களும் தளங்குழாங் களிரதமும்
பந்திபந்தி யாகவந்து பாரினில் செனிக்கவும்

மந்திரந் தவத்தினோர்கள் வாடவே மதித்திடா
முந்துதென் திசைக்கெலாம் செழித்துயான்
இருக்கவே.

யானை, குதிரை, காலாட்படை, தேர்ப்படைகள் வரிசை வரிசையாக வந்து நிறைய வேண்டும் மந்திரம் கற்ற முனிவர் வருந்தும் வண்ணம் மதிப்பளிக்காமல் தென்திசையில் நான் செழித்து வாழ வேண்டும்

தந்தி - யானை **மா** - குதிரை **தளம்குழாங்கள்** - காலாள் **இரதம்** - தேர் **பந்தி** - வரிசை **செனிக்க** - தோனற

101. ஊர் வேண்டுதல்

மயேந்தி ராபுரிக்கும் மிஞ்சுமாம் இரத்தினாபுரி
நயந்தவாய் விளங்கவும் நலத்தவேந்த காமவான்
செயம்பெறத் துதிக்க அட்டதீவினோர்செழித்துளம்
பயந்துமா மணிக்குவை பண்பதாய் அளிக்கவும்.

மகேந்திர புரியை விட உயர்வான இரத்தினாபுரி என்னும் ஊரை நான் ஆளவும், எல்லா வேந்தர்களும் என்னைத் துதிக்கவும், எட்டுத்தீவிலும் உள்ளோர் எனக்கு அஞ்சி நவரத்னங்களைக் கப்பமாகக் கட்டவும் வேண்டும்.

102. கடவுளர் பணி செய்ய வேண்டுதல்

பிரமனோத மறையை தேவர்
பேதை கீதம் உரைசெய
உருவி லானெ னக்குகந்த
ஒளிதி ருத்தி நிற்கவும்
கரிய மாரெத்தினங்
களங்க மால்தி ருத்தவும்

கரையி லாவை போகமே
கனத்த ளிக்க வென்றனன்

பிரமன் வேதம் ஓத வேண்டும தேவ ரம்பையர் பாட்டுப் பாட வேண்டும மன்மதன் எனக்கு ஒப்பனை செய்ய வேண்டும் நான் அணிந்த அணிகலன்களைத் திருமால் திருத்தித் தரவேண்டும் இப்படிப்பட்ட அளவற்ற சுகபோகங்களை எனக்கு அளிக்க வேண்டும்

மறை - வேதம் **தேவர் பேதை** - தேவ மகளிர் **உருவிலான்** - மன்மதன மன்மதன் சிவன் மீது மலரமபு எய்த போது சிவன் நெற்றிக் கண்ணைத திறகக, மனமதன் எரிந்தான மனமதனின் மனைவியான ரதி இறைவனிடம வேண்ட அவள கண்ணுக்கு மட்டும் தெரியுமபடி அருளினான இறைவன் எனவே மன்மதன் உடல் இல்லாதவனாக உருவறறவனாக ஆனான் **கரை** - அளவு **வைபோகம்** - இன்பம்

103.

எனதுதூணி அத்தி ரங்கள்
எயவவ் வொன்ற தாயிரம்
செனிக்கவே உரைக்கொ ணாத
சேனை செங்கரத் தின்மேல்
உனதுசூலம் மழுவும் அன்னம்
உவணம் ஊர்தி யானவர்
தனுவுடன் விளங்கு சங்கும்
திகிரியும் தழைக் கவே.

நான் என் அம்பறாத்தூணியிலிருந்து விடும் அம்புகள் ஒவ்வொன்றும் ஆயிரம் ஆக வேண்டும் என்னுடைய சொல்லமுடியாத அளவு ஆயுதங்களில் உன்னுடைய சூலம் மழுவும அன்னத்தையூர்தியாக உடைய பிரமனின் அஸ்திரமும். கருடனை

ஊாதியாகவுடைய திருமாலின விலலும் சங்கும் சக்காமும் விளங்க வேண்டும

தூனி - அமபுபபுடடில **அத்திரம்** - அமபு **செனிக்க** - தோனற **உவணம்** - கருடன **தனு** - வில **திகிரி** - சககரம

104.

நஞ்சு கக்கு நாகவாளி
நார சிங்க நாகமும்
அஞ்செ ழுத்தோ டழல்விளங்கும்
பாசு பாணம் வயிரவர்
அஞ்சி டா (து) அவுணர்காலம்
அயிலும் இன்னும் அளவிடா
குஞ்சரங்கள் உவணவாளி
குறைவி லாமல் அருளவே.

விடத்தைக் கக்கும் நாகாஸ்திரம், சிங்க முகாஸதிரம், அஞசெழுத்தைச் சொல்லி விடும் நெருப்பைக் ககும் பாசுபதாஸ்திரம், வயிரவாஸ்திரம், அவுணர்கள் அஞ்சிடாமல் விடக்கூடிய காலாயுதம், வேலாயுதம், அளவிட முடியாத கஜமுகாஸ்திரம, கருடாஸ்திரம் ஆகியவற்றைக் குறைவின்றி அருள வேண்டும்

நஞ்சு - விடம **நாகவாளி** - நாகாஸ்திரம **அழல்** - நெருப்பு **காலம்** - காலாயுதம, பாசம **அயில்** - வேலாயுதம **குஞ்சரம்** - யானை, யானை முக அம்பு **உவணவாளி** - கருடாஸ்திரம், நாகாஸ்திரத்தை எதிாத்து விடப்படுவது

105.

சுரர்கள் மாலை என்தோள் சூட்டவும்
அரிவை மாரென வனிதை விளங்கவும்

பரிதி யெந்தன் பதிவலம் ஆகவும்
அருளு மென்ன அரனடி பூண்டனன்.

தேவர்கள் கற்பக மாலை என் தோளில் சூட்ட வேண்டும் தேவ் மகளிர் ஏவல் செய்ய வேண்டும் கதிரவன் என் ஊரை வலம் வர வேணடும் இவ்வளவு வரங்களையும் அருள வேண்டும என்று சிவன் அடியை வணங்கினான்

அரிவைமார் - தோழிபபெண் **வனிதை** - தேவபபெண் **பரிதி** - கதிரவன்

106. சிவன் வரம் அருளுதல்

தந்தோம் என்று தற்பரன் ஓதியே
விந்தை யான விபூதி அளித்து
அந்த மாமஞ் செழுத்தை அருளியே
சிந்தை சேரவு ணற்கினும் செப்புவான்.

தந்தோம் என்ற கூறிய சிவன் விபூதி அளித்து, அஞ்செழுத்தை அசுரன் மனம் கொள்ளும்படி ஓதி மேலும் சில கூறினான்.

அந்தம் - உறுதி. அவுணறகு + இனும் **இனும்** - இன்னும **செப்புவான்** - கூறுவான்

107. மயனிடம் சென்று ஊர் அமைக்குமாறும் மகளைத் தருமாறும் கேட்கச் சொல்லுதல்

மயனிடத் தேகி வழுத்தி டிலவன்
நயம தாக ரத்தினாபுரி நாட்டுவான்
துயவ தாயவன் தையலைத் தருகுவான்
அயர்வி லாம வணைந்திடு சூரனே.

"மயனிடம் சென்று அவனைத் துதிப்பாயாகில் அவன் மிகச சிறப்பாக ரத்தினாபுரிப் பட்டினம அமைத்துத் தருவான் அவன

பெண்ணையும் உனககு மணம் முடிததுத் தருவான் தளர்ச்சியில்லாமல
உடனே செல்" என்றார்

மயன் - தேவ சிறபி **வழுத்திடில்** - துதிததால் **தையல்** - பெண
அயர்வு - தளாசசி

108. சுக்ராசாரியாரிடம் செல்லும்படி கூறுதல்

அவுண தேசிகன் நேசம்கொண் டவனடி
கவன மாகப் பரவ கருணையால்
குவிய லாயவு ணக்குழாம் கூடுவர்
புலிபு ரந்த புகழ்ச்சிகே ளென்றான்.

" அரக்கர் குருவாகிய சுக்ராசாரியரின் அன்பைப் பெற்று அவனடி வணங்கினாயானால் அவனது கருணையால் கூட்டம் கூட்டமாக அரக்கர் வருவர் அவர்களைக் காத்து அவர்களின் புகழ்மொழியைக கேள் " என்று சிவன் கூறினான்

தேசிகன் - குரு **புரந்து** - காத்து

109. சிவன் இருப்பிடம் செல்லுதல்

மாசி லாத மனத்தினன் ஆகிய
ஈசன் இவ்வரம் ஈந்துழை ஏகினர்
நேச மாக நிலையின் நிருதனும்
பாச மாம்கழல் ஏற்றிப் பணிந்தனன்.

குற்றமற்ற மனத்தை உடைய சிவனும் இவ்வரத்தைக் கொடுத்துத் தன்னிருப்பிடம சென்றார் அரக்கனும் அன்புடன் சிவன் பாதங்களைப் பணிந்து துதித்தான்

மாசு - குறறம **உழை** - பக்கம இடம், தன் இருப்பிடம **நிருதன்**
அசுரன

110. வாதாவி மயனிடம் செல்லல்

தவம்பு ரிந்தஅச் சாலையகன் றிட்டு
உவகை மன்னி மயனுக்குரை செய்வான்
பவம கற்றும் பரமனுன் தயவினால்
அவனி பெற்றிடு வையென் றருளினார்.

வாதாபி தான் தவம்புரிந்த தவச்சாலையை விட்டு மிகமகிழ்சசியுடன் மயனிடம் சென்று "பாவம் நீக்கும் சிவன் உன்தயவால் ஒரு பட்டணம் கிடைக்கும் என்று அருளினார் " எனக்கூறினான்

உவகை - மகிழச்சி **பவம்** - பாவம **அவனி** - உலகம, தேசம

111. மயன் பட்டணம் அமைக்க இடம் வினாதல்

எவ்வி டத்தினில் ஈசர் இயம்பினர்
அவ்வி டம்புகல் என்ன அறைகுவான்
பௌவம் ஆர்கடல் சூழ்ந்திடும் பௌவமே
கௌவம் எவ்வம் கடிந்தகொண் ணூரினில்.

"எந்த இடத்தில் ஈசன் கூறினாரோ அவ்விடம் போகலாம " என்றான் மயன் "ஆரவாரம் நிறைந்த கடலால் மேம்பட்ட, பாவம் நீக்கப்பட்ட கொண்ணூரில் ".

பௌவம் - ஆரவாரம கடல் **எவ்வம்** - பாவம

112. வாதாவி தென்திசையில் இடம் கூறுதல்

நற்ற வத்துக் குகந்திடு நாயகன்
கற்றை வார்சடைக் கண்ணி களிக்கவே
பற்றி நின்ற பவமறத் தென்திசை
பற்றிப் பக்கல் பதியும் அளித்தனன்.

"நான் செய்த தவத்துககு மகிழ்ந்த, சடையையும தலைமாலையும உடைய சிவன், என்னைப் பற்றிய பாவங்களை நீக்கித் தென்திசையில் ஓர் ஊர் அளித்தான்" என்று கூறினான் வாதாவி

உகந்திடும் - விருமபிடும மகிழ்நதிடும **பவம்** - பாவம

113. மயன் தென்திசை செல்லுதல்

என்ன ஐயன் இன்ப இதயமாய்
வன்ன மீது வனத்தரி ஏகினன்
பன்ன கத்தின் விடமுண்ட பண்பினன்
பன்ன ருங்கதை சாற்ற அருகரோ.

இதைக்கேட்ட மயன் மகிழ்ச்சியோடு வாகனத்தில் ஏறிப் புறப்பட்டான். ஆலகால விடமுண்ட அரனின் அருளை யாரால் சொல்ல இயலும்?

பன்னகரம் - பரம்பு

114. சனகன் கதையைத் தொடர்தல்

பல்லி நாண அவுணன் புரிதவம்
வல்லி பாகன் மனத்தில் உகந்தனன்
அல்லல் நீக்கினன் அத்திரி யேயினி
புல்லக் கேட்டருள் என்று புகன்றனன்.

சுவரில் தொங்கும் பல்லியும் நாணுமாறு ஊசியில் தொங்கி அசுரன் செய்த தவம் கண்ட உமைபாகன் மனத்தில் மகிழ்ந்தான். வாதாவியின் துன்பம் நீக்கினான். "அத்திரி முனிவரே இனி சொல்லக் கேள்" என்று சனகர் கூறினார்.

வல்லி - கொடி இங்கு கொடி போனற உமை

5. இரத்தினாபுரி சருக்கம்

115. இடம் தேர்ந்தெடுத்தல்

அட்ட கிரிஒரு மட்டி வேயுருர்
அவுண னுக்கனு கூலனாம்
முட்ட வரமருளி இட்ட படிவனம்
மொய்த்த புவியை அகன்று
வட்ட வாருதி அதனி டை யொரு
திட்ட தாய்ஒளி தங்கியே
மட்டில் புகழொரு மயனு மங்கொரு
பட்டணம் கொண்ட மைத்தனன்.

எட்டுமலை ஒன்று சேர்ந்தது போல் உருவம் கொண்ட வாதாவிககு அவன்கேட்ட வரஙகளையெலலாம் உதவிய சிவனின் கட்டளைப்படி, அசுரனும் மயனும், காடு நிரம்பிய பூமியை விட்டு நீங்கினா் கடல் நடுவே ஒளி பொருந்திய மேட்டைக் கண்டு அங்கு அளவற்ற புகழுடைய மயன் ஒரு பட்டணம அமைத்தான்.

அட்டம் - எட்டு **கிரி** - மலை **வட்டவாருதி** - பூமியை வடடமாகச சூழந்துள்ள கடல **திட்டு** - மேடு

116. மயன் ஊர் அமைத்தல்

கஞ்ச னுலகினும் கண்ண னுலகினும்
காம னுலகினும் அதிகமாம்
பஞ்ச லோகமு ருக்கி யங்கு
பதித்த மாமதில் மேடைமேல்
மிஞ்சு கோமள உத்தி ரங்களும்
மேல்ப ரப்பினான் வயிரமாம்

மஞ்சு லாவுபொன் னாணி வச்சிர
வாம மென்ன விளைத்தனன்.

பிரமலோகம், வைகுண்டம், காமன் உலகமாகிய ஆரோக்ய லோகம் இவற்றைவிட அழகுடையதாய், பஞ்சலோகத்தை உருக்கி அதனால் செய்த மதில்களும் வயிர மேடையும அமைத்து, அதன்மேல் தாமரை வடிவில் செய்த உத்திரங்களும் பரப்பிப் பொன்னாலும் வைரத்தாலும ஆன ஆணிகளைப் பதித்தான்

கஞ்சன் - பிரமன் **பிரமன் உலகு** - சத்தியலோகம் **கண்ணன்** - திருமால **திருமால் உலகம்** - வைகுண்டம் **காமன்** - மன்மதன **காமனுலகம்** - ஆரோக்ய லோகம **பஞ்சம்** - ஐந்து **கோமளம்** - தாமரை **வச்சிரம்** - வயிரம

117. கோட்டை அமைத்தல்

அவிழ்ந்தனன் மணிமிகுத்துயர்
புரமதிற்குடம் மின்னவே
பவழமீது நிரைத்தபோதிகை
பச்சையாற்சர மிட்டனன்
சவைமிகுந்திடு வண்டரளமாலை
இலங்குகூடம் அமைத்தனன்
குவிழதாகிய சேனைசூழ்ந்திடு
கோட்டைகொத்தளம் கூடினான்.

மாற்றுக்குறையாத பொன்னினால் மணிகள் பதிக்கப்பட்ட சிகரம் அமைத்தான். பவளங்களால் மேல் வளைவுகள் செய்து மரகதச் சரங்கள் தொங்கவிட்டான் முத்து மாலைகள் விளங்கும் சபை நிறைந்த கூடங்கள் அமைத்தான். கூட்டமாகச் சேனை சூழ்ந்திடும் கோட்டை கொத்தளங்கள் அமைத்தான்.

அவரிழந்த - மாறறுக குறையாத **குடம்** - குமபம - சிகரம **போதிகை** - வளைவு **சரம்** - மாலை **தரளம்** - முதது **இலங்கு** - விளஙகு **குவிழ்** - கூட்டம **சேனை** - படை

118. மாட மாளிகை அமைத்தல்

கொலுவின் மண்டபம் பூட்டினான்வெகு
 கொடிய வீதிகளும்
சலவை யாகிய கல்லினால்தள
 வரிசையெங்கும் நிரப்பினான்
மலைக ளெனமதில் நாட்டினான்வெகு
 மாடமாளிகை கட்டினான்
நலுகி லாதவைஞ் நூறுசதுர
 மவனியாக்கினன் மயனுமே.

கொலு மண்டபம் அமைத்தான் கொடிகள் கட்டப்பட்ட வீதிகளுக்கெல்லாம் சலவைக்கல்லால் தளவரிசை போட்டான் மலைகளைப் போல் மதில் எழுப்பினான் மாடமாளிகைகள் அமைத்தான் அழிவில்லாமல் ஐந்நூறு காத சதுரத்துக்குப் பட்டணம் உண்டுபண்ணினான்

கொடிய - கொடிகள் கடடபபட்ட **நலுகு** - நலிதல் - கெடுதல்

119. கொட்டகை, சோலை, அரங்குகள்

கரிபரித்திரள் சாலையும்வளர்
 காவணங்களும் சோலையும்
அரிவைமாதர்கள் மேடையுமழ
 கானதோரண வீதியும்
பெருநிதிக்குகை யாடரங்குகளும்
 அரிவைவாழ் பெருங்கோயிலும்
வரிசையாகி நிறுத்தினானெழில்
 வயிரமாலைகள் தூக்கினான்.

யானை குதிரை கொட்டடிகளும் (லாயம்), பூககள பூககும நந்தவனங்களும், காய்கனி தரும் சோலைகளும் பெணகள வசிக்கும் அந்தப்புர மேடைகளும, அழகு நிரமபிய தோரணங்கள் கடடப்பட்ட வீதியும் மிக்க செல்வம் நிறைந்த பொக்கிஷ அறைகளும நாட்டியம ஆடும் நடனசாலைகளும, காளி கோயில்களும, வரிசை வரிசையாகக கட்டினான் அவற்றில் எங்கும் வைர மாலைகள் தொங்கவிட்டான்

கரி - யானை **பரி** - குதிரை **திரள்** - கூட்டம **சாலை** - கொட்டடி **காவனம்** - பூங்காவனம, நந்தவனம **அரிவை** - பெணகள, காளி **தூக்கினான்** - தொங்கவிட்டான்

120. கொடிகள்

பரிதிமண்டலம் உறைமதில்களில்
பஞ்சவன்ன வரவமும்
அரியினுவணம்விடை நரியும்எயினமும்
ஆளிமயி லொடுசேவலும்
பெரியஅனுமனும் மகரமதியமும்
பிரமனூர்திசெங் கவிகையும்
முரசுபூதவெங் காவிசுருட்டியும்
மொத்ததுவசமும் கட்டினான்.

சூரியமண்டலத்தைத் தொடக்கூடிய மதில்களின்மேல் பலவண்ணங்களில், அரவக்கொடி கருடக்கொடி, இடபக்கொடி, நரிக்கொடி, பன்றிக்கொடி, யாளிக்கொடி, மயில்கொடி, சேவலகொடி, அனுமககொடி, மகரக்கொடி, பிறைக்கொடி அன்னக்கொடி, குடைக்கொடி முரசக்கொடி, பூதக்கொடி, காவிக்கொடி ஆகிய பல்வேறு கொடிகளையும் கட்டினான்

பரிதி - சூரியன் கதிரவன **அரவம்** - பாமபு **உவணம்** - கருடன் **விடை** - இடபம **எயினம்** - ஏனம பன்றி **மதியம்** - சந்திரன பிறை **பிரமனூர்தி** - அன்னம

121. கோயில்கள், மண்டபங்கள்

எந்தஉலகிலும் இந்தநகரிணை
இல்லையாம்படி ஏத்தினான்
தந்தியுரியணி நாதனாலயம்
தாழ்ச்சியின்றி அமைத்தனன்
மந்திரிதளமி யாவுமுறைந்திடு
மண்டபங்கள் அளித்தனன்
விந்தையாகிய வாவிதுன்னிய
அமரராரர்பதி என்னவே.

எந்த உலகிலும் இதுபோன்ற நகர் இல்லையெனும்படியும், தேவருலகம் என்று சொல்லும்படியும் யானையை உரித்துப் போர்த்த சிவனின் ஆலயமும், மந்திரிகள் இல்லங்களும், மண்டபங்களும், குளங்களும், நீராழி மண்டபங்களும் அமைத்தான்.

இணை - ஒப்பு **தந்தி** - யானை, **உரி** - தோல் **தந்தி உரி அணிநாதன்** - சிவன் தாருகாவனத்து முனிவர்கள் தன்னைக் கொலல ஏவிய யானையை உரித்துப் போர்த்துக்கொண்டான் சிவன் இது அவனுடைய எட்டு வீரச் செயல்களுள் ஒனறு இது நிகழ்ந்த இடம மயிலாடுதுறையை அடுத்த வழுவூர் ஏனைய ஏழு செயல்கள் 1 தக்கனையழித்தது, 2 யமனை உதைத்தது, 3 காமனைக் கண் அழலால் எரித்தது 4 திரிபுரம் அழித்தது, 5 ஜலந்தராசுரனை அழித்தது, 6 அநதகாசுரனை அழித்தது, 7 பிரமன் தலையைக் கொய்தது இவை நடைபெறற இடங்கள முறையே திருப்பறியல், திருக்கடவூர், திருககுறுககை திருவதிகை, திருவிற்குடி, திருககோவிலூர், திருக்கண்டியூர் என்பன யானையை உரித்துப் போர்த்துக் கொண்ட வடிவம் கஜசம்ஹார மூர்த்தி எனப்படும்

122. இரத்தினாபுரியெனப் பெயரிடுதல்

அருணனும்மதி கிரணமென்னநவ
மணிநிறைத்திடும் அவனியாம்

கருணைதருமர னகமுமகிழுவ
கஞ்சனுலகினு மிஞ்சுமாம்
வருணன்வலமிடம் ஆகுவன்கதிர்
மதியுமப்படி ஏகுவன்
பொருவிலாவரும் அந்நகர்பெயர்
பொங்குரத்தின புரியரோ.

சூரியக்கதிர், சந்திரக்கதிர் என்று சொல்லும்படி ஒளி மிகுந்த இரத்தினங்கள் நிறைக்கப்பட்டு. கருணை நிறைந்த சிவன், மனம் மகிழும்படியும், பிரமன் உலகையும் விஞ்சும்படியும் அமைந்த அந்நகரை வருணனும், சந்திரனும், சூரியனும் வலமாகச் சுற்றுவர். இப்படி ஒப்பற்ற அந்நகரின் பெயர் இரத்தினாபுரியாகும

அருணன் - கதிரவன் **மதி** - சந்திரன் **கிரணம்** - கதிர், ஒளி **கஞ்சன்** - பிரமன்

123. மயனின் மகளைத் திருமணம் செய்து வைக்கும்படி வேண்டுதல்

இப்படி நகர மைத்திட அரக்கனும்
தப்பிலா மயன்வலி தனையு வந்தினி
செப்புத லீயருள் சிறுமி என்றனைக்
கைப்பிடித் திடவுமுன் கருத்தி ரங்குவாய்.

இவ்வாறு மயன் நகரம் அமைகக வாதாபியாகிய அரக்கனும் குற்றமற்ற மயனின் வலிமையை உணர்ந்து மகிழ்ந்து, " உன்னுடைய மகளை மணம்புரியவும் நீ அருள்புரிவாயாக " என்றான்

உவந்து - மகிழ்ந்து **சிறுமி** - புதல்வி

124. மகளின் அழகு

தருவதாய் மயனுளம் தழைப்ப தாயினான்
கருமுகில் குழல்விழி காவி கூன்சிலை

புருவமா மதிமுகம் பூவை யாமவள்
திருவையிந் திராணியாம் தெரிவை ஆகுமால்.

அப்படியே தருவதாக மயன் மனம் மகிழ்ந்து கூறினான் கரியமேகம் போன்ற கூந்தலும, நெய்தல் பூப்போன்ற விழியும், வளைந்த வில்லை ஒத்த புருவமும் மதிபோன்ற முகமும் உடைய அவள் (மயன்மகள்) இலக்குமியையும், தேவேந்திரன் மனைவி இந்திராணியையும் ஒத்து விளங்கினாள்

தழைப்பது ஆயினான் - மகிழச்சி அடைந்தான் **முகில்** - மேகம **குழல்** - கூந்தல் **காவி** - நெய்தல் பூ கருங்குவளைப்பூ **கூன்** - வளைந்த **சிலை** - வில் **பூவை** - பெண் **திரு** - இலட்சுமி **தெரிவை** - பெண

125. பண்புகள்

அகமதில் உணர்ந்திடா அந்தம் மிக்கவள்
துகளிலா மனத்தவள் சுரம்நொ டிப்பவள்
நகையொளி யாளினும் நாடி டாமயல்
சுகமதில் வல்லவள் சூழ்ச்சி வல்லவள்.

மனத்தினால் உணரமுடியாத அழகு மிக்கவள் குற்றமற்ற மனத்தை உடையவள் ஏழுஸ்வரங்களும் அறிந்து பாடுபவள் ஒளி பொருந்திய பல்லை உடையவள் மிக்க சுகம் அளிப்பவள் ஆராய்ச்சித் திறமை மிக்கவள்.

அகம் - மனம **அந்தம்** - அழகு **துகள்** - குற்றம் **சுரம்** - ஏழுஸ்வரம **நொடிப்பவள்** - இசைபபவள் **நகை** - சிரிபபு - பல **சூழ்ச்சி** - ஆராயச்சி

126. மகள் பெயர், திருமணம்

அசுரமாய் கையிலுறும் அரிவை தேசினில்
கசிமது வினிமொழி காமன் தேவியாம்

சுசியுள் ளவள்பெயர் சொக்க கன்னியாம்
பசியபொற் பாவையைப் பரிவின் ஈந்தான்.

அசுர மாயையில் விழப்போகும் அவள் ஒளியில் மன்மதன் மனைவியான ரதிக்கு ஒப்பானவள் தேன் கசியும் மதுரமான மொழி பேசுபவள், அவள் பெயர் சொக்க கன்னி பசியபொன் போன்ற இப்பாவையை மயன் பரிவோடு வாதாவிக்குக் கொடுத்தனன்

தேசு - ஒளி **மது** - தேன், **கசிதல்** - துளிர்த்தல் **காமன் தேவி** - மன்மதன் மனையாள், ரதி **பரிவு** - அன்பு **ஈந்தனன்** - கொடுத்தான்

127. அத்திரி இருவருக்கும் பொருந்துமோ எனல்

என்னஅச் சனகனை இறைஞ்சிச் செப்புவான்
துன்னிய அவுணனின் தூல மென்மயன்
கன்னியின் தூலமோ கலக்கு மோவினி
நுண்ணிடை யொக்குமோ நுவலும் என்றனன்.

என்று சனகமுனி சொல்ல அவனை வணங்கிய அத்திரிமுனி, "அசுரன் உடலோ எட்டுமலை சேர்ந்தது போன்றது பெண்ணின் உடலோ மிகச்சிறியது எப்படி ஒக்கும், எப்படிச் சேருவர்? கூறுவாய்" என்றார்.

இறைஞ்சி - வணங்கி **செப்புவான்** - சொல்லுவான் **துன்னிய** - நெருங்கிய **தூலம்** - உடல் **நுவலும்**, **கூறும்** - கூறுங்கள்

128. சனகன் ஐயம் தீர்த்தல்

சிற்றுரு வாகிய திண்மை மன்னிய
உத்தமி மாய்கையி லுருவம் ஆகுவள்
அத்திரி யேயென அறைந்து சூரர்கோன்
நத்திய மாமனை நலங்கொண் டாடினான்.

"சிறிய உருவமுடையவளாயினும் வலிமை மிக்க அவ்வுத்தமி ராட்சச மாயை அறிந்தவள். அதனால் பெரிய உருவம் எடுப்பாள்

அத்திரி முனிவரே ! ஐயம் வேண்டாம்" என்று கூறிய சனகா மேலும் கதையைத் தொடாநதார். அசுர மன்னனாகிய வாதாவி, தன்னை விருமபிய மாமனை மிகவும் உபசரித்தான்

நத்திய - விரும்பிய **நலம் கொண்டாடுதல்** - மகிழவோடு உபசரிததல நலமெலலாம செய்தல்

129. வாதாவி சேனை வேண்டுதல்

அளித்திடும் மாமனை அவுணன் ஏத்தியே
உளத்தினில் உவகையால் உலகில் புல்கியே
களிப்புடன் கன்னியைக் கலந்த காலையில்
தளத்தினில் சிருஷ்டிசெய் என்று கூறினான்.

உள்ளத்தில மகிழ்ச்சியோடு கன்னியைப் புணா்ந்தபின் தனக்குக் கன்னியை அளித்த மாமனாகிய மயனைப் போற்றி வணங்கிய அசுரன் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு அவனை அணைத்து, "எனக்கு வேண்டிய சேனைகள் அனைத்தையும் சிருஷ்டிசெய் மாமனே " என்று கூறினான்

புல்கி - அணைத்து **கலந்த** - புணா்ந்த **காலை** - பொழுது **தளம்** - சேனை **கிருஷ்டிசெய்** - உணடாக்கு

6.வாதாவிக்குப் படைமிகுந்த சருக்கம்

130. சுக்கிராசாரியார் வருகை.

மயனால் அணைந்த அவுணன்
மாதோ டிருப்ப அகமகிழ்ந்து
புயவகோன் என்னும் தேசிகனைப்
புந்தி நினைக்கப் புளகமெனும்
தயவா நகரம் சார்ந்திடுகாண்
தரணி வண்மை உளத்துணர்ந்து

நயமா நகரம் எனத்துதித்தே
அவுணன் இதனை நவில்கின்றான்.

மயனாகிய தேவதச்சனால் மாட்சியடைந்த வாதாவி தன்மனைவியுடன அகமகிழ்ந்து இருக்கும்போது, அசுர குருவாகிய சுக்கிராசாரியாரை மனத்தில் நினைத்தான் இதனை உடல் புளகத்தால் உணர்ந்த சுக்கிராசாரியார் தயவுடன் அசுரன் நகரம் சேர்ந்தார். நகரைச் சுற்றிப் பார்த்து "நகரம் நன்றாயுள்ளது" என்று கூற, வாதாவி பின்வருமாறு கூறலுற்றான்.

அணைந்த - அடைந்த **மாது** - மனைவி **புயவகோன்** - அசுரகுரு **புந்தி** - உள்ளம் **நவில்கின்றான்** - சொல்கின்றான்

131. மயன் சுக்கிரனைத் துதித்தல்

வித்தாய் முளைத்த விளக்கொளியே
விண்ணும் மண்ணும் நிறைந்தோனே
சித்தா கியதோர் சீமானே
சிறந்த வெண்மை நிறத்தோனே
முத்த னான முதல்வோனே
மறைநூ லுணர்ந்த கோமானே
பத்த னான அடியேற்குன்
பாதம் அளித்துப் பலன்தருவாய்.

"விளக்கொளி போன்று சிறு வித்தாய் விளங்குபவனே! விண்ணிலும் மண்ணிலும் நிறைந்தவனே ! அறிவும் செல்வமும் தருபவனே ! வெண்மை நிறம் பொருந்தியவனே ! முற்றிலும் அறிந்தவனே ! வேதநூல் உணர்ந்தவனே ! உன் பக்தனான எனக்கு உன் திருவடிகளை அருளிப் பயன் தருவாயாக !"

சுக்கிரன் - வெள்ளி இவர் அசுரர்களுககுக குரு நவக்ரகங்களுள் ஒருவர் வானில விடியலில் கதிரவன் உதிக்கு முன்னர் உதிககும வெள்ளி

போன்ற புள்ளியே வெளளியாவார் இதை வெளளி முளைத்தல் என்பர். வடமொழியில் சுக்ரோதயம் என்பர் **மறை** - வேதம்

132. சுக்கிராசாரியார் வாதாவியைப் புகழ்தல்

என்னா அவுணன் தொழச்சுங்கன்
இதயம் மகிழ்ந்தே இயம்புகின்றான்
முன்னோன் பதத்தைப் போற்றிசெய்தே
முடியைப் புனைந்த வாதாவி
மன்னா உன்றன் குலமெல்லாம்
வேலோன் கரத்தால் மடிந்தனரென்(று)
உன்னா உளத்தில் துயரமுற்றேன்
உதித்தாய் அவுணர் குலக்கொழுந்தே.

என்று கூறி வாதாவி வெள்ளியைத் தொழ, வெள்ளி, மனம் மகிழ்ந்து கூறுகிறான். "முன்னவர்கள் பாதங்களைப் போற்றி முடி புனைந்த வாதாவியே, உன் குலம் அனைத்தும் குமரன் வேலால் அழிந்தனர் என்று நினைத்து மிகவும் துயரத்தோடு இருந்தேன் ஆனால் அசுரர் குலக்கொழுந்தாக நீ உதித்து விட்டாய்."

சுங்கன் - சுககிரன் **வேலோன்** - முருகன் **உன்னா** - உன்னி - நினைத்து **உதித்தாய்** - தோன்றினாய்.

133. வாழ்த்தி என்ன வேண்டும் எனக்கேட்டல்

உனது பதியின் ஒளிவாழ்க
உள்ளம் வாடாச் சுகம்துன்ன
வனிதை சொக்க தேவியுடன்
வாழ்ந்து தனயர் உண்டாக
தனுவார் பகையை அடக்கவெகு
தைரி யங்களு முனக்காக
எனைநீ நினைந்த வகையின்றே
இயம்பு மென்ன இசைக்கின்றான்.

''உன் ஊரின் ஒளி வாழ்க ! நீ மனம வருததமில்லாமல் சுகத்துடன் வாழ்க ! சொக்கதேவியோடு மகிழ்ச்சியாக வாழந்து நல்ல பிளளைகள் பிறப்பதாக! வில்லெடுதது வரும் பகைவர்களை அடக்க ஒரு தைரியமும் உண்டாகட்டும் ! என்னை நீ நினைத்த காரணமென்ன கூறு* என்று கேட்டார்

வனிதை - பெண் - இஙகு மனைவி **தனயர்** - பிளளைகள் **தனு** - வில **இயம்பு** - கூறு, சொல்

134. வாதாவி நடந்த கதை கூறுதல்

தாயின் கருவில் இருமதலை
தரணி உதித்துத் தாட்டிகஞ்செய்
மாயை யாலே வளர்காலம்
மறைவல் லோனே குறுமுனியாவ்
நேய தமையன் தனையிழந்து
நித்தன் அருளை தவம்புரிந்து
சேய மயனால் சீரணிந்துன்
செய்ய பாதம் தொழுதனனே.

"வேதத்தில் வல்ல குருவே! என் தாய் அசோமுகியின் வயிற்றில் நாங்கள் இருவர் பிறந்தோம் எங்கள் வலலமையாலும் மாயையாலும் உடல் வளர்க்கும் போதில் அகத்திய முனியால் என் தமையனை இழந்தேன் சிவனை வேண்டித் தவம் செய்து மயன்மூலம் சிறப்புப்பெற்று உன் பாதம் தொழுதேன்

தாய் - அசோமுகி **குறுமுனி** - அகத்தியன் **தமையன்** அண்ணன் **நித்தன்** - சிவன **சீர்** - சிறபபு **செய்ய** - சிவந்த

135. வாதாவி சுக்கிரனிடம் தனக்கு வேண்டியதைக் கூறுதல்

கனத்த வெனது கிளைஞருடன்
கருமான் இரதம் கருணையினால்
செனித்தே எனது தேசமெலாம்
செழித்தே விளங்கத் தேசிகனே
மனத்தில் உகந்து அருளெனவே
வள்ளல் பளிங்கு வெள்ளியும்
நினைத்தான் நிமலன் அஞ்செழுத்தை
நிறைந்தார் அவுணர் நேமியினில்.

வலிமைமிக்க எனது சுற்றத்தாரையும், மந்திரிகள், யானை தேர் என்று அனைவரையும் படைத்து எனது தேசம் செழிப்போடு விளங்க அருள்புரிவீராக" என்று வாதாவி வேண்ட வெள்ளை நிறம் கொண்ட சுக்கிரனும் பஞ்சாட்சரத்தைச் செபிக்க பூமியில் அரக்கர் நிறைந்தனர்.

கனத்த - வலிமையான, **கிளைஞர்** - உறவினர், **கருமான்** - மந்திரி பிரதானிகள் **செனித்து**- உருவாகி **தேசிகன்** - குரு **உகந்து** - விரும்பி, **பளிங்கு** - வெண்மை, **நிமலன்** - குறறமறறவன் இங்கு சிவன் **நேமி** - பூமி

136. அரக்கர் நிறைதல்

போகில் உறையும் புற்றிலுறை
கறையான் உடலம் புளகித்து
வாகு சிறைகள் மன்னுங்கால்
வானத் துயர்ந்த வாறதுபோல்
யோகி உரைத்த அஞ்செழுத்தில்
ஓயா அவுணர்க் குழாம்கிளர்ந்து
நாகம் சுமக்கும் புவிநிறைந்தார்

என்ன முனியும் நவில்கின்றான்.

பாம்புப் புற்றில் உறையும் கறையான் உடல் பெருத்து இறக்கை முளைத்த காலத்து வானத்தில் கூட்டமாகப் பறப்பதுபோல் (புற்றீசல் போல) சுக்ரன் உரைத்த அஞ்செழுத்தால் மேலும் மேலும் அசுரர் கூட்டம் பெருகி, ஆதிசேடன் சுமககும இப்பூமி யெங்கும் நிறைந்தனர் என்று சனகர் கூற அததிரி கூறுகிறார்

போகில் - பாமபு, **உடலம்** - உடல, **புளகித்து** - பெருதது, **சிறை** - இறககை, **மன்னும்** - பொருந்தும, **குழாம்** - கூடடம், **நாகம்** - ஆதிசேடன் பூமியை ஆதிசேடனின ஆயிரம் தலைகள் தாங்குவதாக ஐதிகம **முனி** - அததிரி முனிவர்

137. அத்திரி பஞ்சாட்சரத்தின் பெருமை வினாவுதல்

அஞ்சக் கரத்தால் அவுணர்புவி
அடைந்தார் என்னும் அருந்தவனே
அஞ்சக் கரத்தால் அனைத்துலகும்
அடைந்த சீவ ராசிகளால்
அஞ்சக் கரத்தை அன்றிஒரு
மந்தி ரம்வே றிலையெனவே
அஞ்சக் கரத்தின் புதுமையெனக் (கு)
அருளு மென்ன அறைகுவனால்.

"இறைவனின் 'நமசிவய' என்னும் ஐந்தெழுததால் இறந்த அரக்கர் அனைவரும் பூமி வந்தார் என்று கூறும் முனிவரே! அவ் ஐந்தெழுத்தால் எல்லா உலகிலும் உயிரினங்கள் பெருகும் என்றால் அதைத் தவிர வேறு சிறந்த மந்திரம் எது? எனவே ஐந்தெழுத்தின் பெருமையை எனக்குக் கூறுங்கள்" என்று அத்திரி முனிவர் கூறச் சனக முனிவர் கூறுகிறார்

ஜீவராசி - உயிரினம

138. சனகர் பஞ்சாட்சரத்தின் பெருமை கூறுதல்

உருவாய் அருவாய் வெளியாகி
ஒளியாய் உள்ள பரப்பாகி
அருளை உடையோர்க்(கு) அறமிரண்டாய்
ஐந்துள் எட்டட் சரமாகி
விரிஎண் பத்து நானூறா
யிரவித் தாகி வேறாகி
தருபோ தாந்த நாதாந்தத்
தழைக்கும் பொருளாய் உதித்ததுவே.

"இவ்வைந்தெழுத்து, உருவமாகவும், அருவமாகவும், வெட்டவெளியாகவும், ஒளி மிகுந்த சுவர்க்கமாகவும் இருப்பது அருளுடையோர்க்கு இதுவே அறமாகவும் விளங்கும் எட்டு அட்சரமாக விளங்குவதும் இதுவே, எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதத்துக்கும் விதையும் இதுவே இதுவே அறிவின் எல்லை, இதுவே நாத முடிவு, இதுவே உயிர்க்கும் பொருள்

போதம்+அந்தம் - போதாந்தம் - அறிவின் எல்லை, **நாதம்+அந்தம்**-நாதாநதம் - ஒலியின் முடிவு

139.

அஞ்சக் கரமே பெரிதாகும்
அஞ்சக் கரமே சிறிதாகும்
அஞ்சக் கரமே சராசரமாம்
அஞ்சக் கரமே யாக்கையுமாம்
அஞ்சக் கரமே உயிராகும்
அஞ்சக் கரமே சகலசித்தும்
அஞ்சக் கரத்தால் ஆவதன்றி
அஞ்சில் அதிகம் அறைகுவதோ.

ஐந்தெழுத்தே பெரியது. சிறியதும் ஐந்தெழுத்தே. இயங்கும் பொருளும் ஐந்தெழுத்தே. இயங்காப் பொருளும் ஐந்தெழுத்தே

உடலும் ஐந்தெழுத்தே உயிரும் ஐந்தெழுத்தே எல்லா ஞானமும் ஐந்தெழுத்தே. ஐந்தேழுத்தே சகலமும் என்றால் இதைவிடப் பெரிய மந்திரம் ஏது?

சரம் + அசரம் - சராசரம். **சரம்** - இயங்குவது. **அசரம்** - இயங்ககாதது, நிலையானது மண்ணிலுள்ள அசையும அசையாப பொருள்கள் சராசரம எனப்படும மலை, கல் முதலானவை அசையாப் பொருள்கள் பூமி, உயிாகள் அசைபவை **யாக்கை** - உடல, **சகலம்** - எலலாம், அனைத்தும் **சித்து** - அறிவு, **அதிகம்** - மிஞசியது. மேலானது. பெரியது

140.

ஆட்டம் எல்லாம் அஞ்செழுத்தே
அடங்கி நின்றதும் அஞ்செழுத்தே
பாட்டும் பயனும் அஞ்செழுத்தே
பரவை ஆன(து) அஞ்செழுத்தே
நாட்டில் பெரியோன் நானெனவே
நவில்கின் றதுவும் அஞ்செழுத்தே
வாட்டம் இன்றி தவமுனியுன்
மனதிற் தெளிவை என்றுரைப்பான்.

ஆடுவதும் அஞ்செழுத்தே, ஆடி அடங்குவதும் அஞ்செழுத்தே, பாட்டும் அஞ்செழுத்தே, அதன் பயனும் அஞ்செழுத்தே கடலும் அஞ்செழுத்தே, நாட்டில் நானே பெரியவன் என்று சொல்லும் ஆணவமும் அஞ்செழுத்தே. அத்திரி முனிவரே இதனை மனதில் உணருங்கள்" என்றார் சனகர்

பரவை - கடல்

141. வாதாவியின் சேனைப் பெருக்கம்

கரிமுக அவுணர்கள் கனத்த கோடியாம்
பரிமுக அவுணர்கள் பதினெண் ணாயிரம்
அரிமுக அவுணர்கள் அறுபதி னாயிரம்
நரிமுக அவுணர்கள் நாற்பதி னாயிரம்.

(அஞ்செழுத்தின் மகிமை கூறிய சனகர், கதையைத் தொடர்கிறார்) சுகராசாரியார் உருவாக்கிய அசுரர்கள், யானைமுக அசுரர் பலகோடி குதிரைமுக அசுரர் பதினெட்டாயிரம். சிங்கமுக அசுரர் அறுபதாயிரம் நரிமுகத்தை உடையவர் நாற்பதாயிரம்

கரி - யானை பரி - குதிரை, **அரி** - சிங்கம

142. அரக்கர் செயல்கள்

ஆயிரம் சென்னி இரண்டா யிரம்கரம்
பாயென உவரிமேல் பள்ளி கொள்ளுவர்
மாயிரு விசும்பினின் மறையும் மாய்கையோர்
ஓய்விலா வாரியை உணப்ப கோடியே.

ஆயிரம் தலைகள் இரண்டாயிரம் கைகளோடு விளங்கும் அவ்வசுரர்கள் கடலைப் பாயாக நினைத்து அதன்மேல் படுத்துக் கொள்வர் அகன்ற, பெரிய இடத்தையுடைய ஆகாயத்தில் மறைவர். ஓய்வில்லாமல் கடலைக் குடிப்பர் இவ்வாறு பெரிய மாயையை உடையவர்களாயிருந்தனர்.

சென்னி - தலை **கரம்** - கை, **உவரி**, **வாரி** - கடல **மா**, **இரு** - பெரிய, அகனற **பள்ளி** - படுக்கை, **விசும்பு** - ஆகாயம் **உணப்ப** - உண்ணுவர்

143.

புலியென உறுமுவோர் புகலெண் ணாயிரம்
உலகினைப் பந்தடித் (து) உவகை ஆகுவர்

எலிமுக அவுணர்கள் எழுபது ஆயிரம்
மலைகளைப் பிடுங்கியே வானில் எற்றுவார்.

புலிபோல் உறுமுபவர் எட்டாயிரம் பேர் பூமியைப் பந்தாக அடித்து மகிழ்வர் எலிமுகத்தையுடைய எழுபதாயிரம் அசுரர் மலைகளைப் பிடுங்கி வானத்தில் வீசுவர்,

உவகை - மகிழச்சி, **எற்றுவர்** - வீசுவர்

144.

ஒருசிரம் அவுணருக் கிரங்கொள் பாலைபோல்
கருமுகி லெனக்கரம் காதம் நீளுவோர்
பெருவிலங்கு ஆயிரம் பிடித்து அருந்துவோர்
தருமமி லாவுளம் தழைப்பர் கோடியே.

ஒருதலையுடைய அசுரர் இருகண்களும் நெருப்புப் போல் கோபம் எரிய, கரிய மேகம் போன்ற நிறத்துடன், ஒரு காத தூரம் நீளும் கையுடன், பெரிய பெரிய விலங்குகளை ஆயிரம் ஆயிரமாகப் பிடித்து உண்ணுவர். இவ்வாறு இரக்க மற்ற உள்ளம் படைத்த அரக்கர்கள் கோடி கோடியாவர்.

சிரம் - தலை, **பாலை** - நெருப்பு, **காதம்** - காவதம், நான்கு கூப்பிடு தூரம் **தருமம்** - இரக்கம், அறம்

145.

சத்தசாக ரங்களைத் தடைகள் இன்றியே
மெத்தநீர் அருந்தியே மீனெலாம் மெல்லுவார்
கத்தப வத்தினர் கழுதை முகத்தினார்
அத்திஊன் அருந்திடும் அவுணர் கோடியே.

ஏழு கடல்களையும் ஒரே மூச்சில் உறிஞ்சி அவற்றிலுள்ள மீன்களை மென்று தின்பார்கள் மிக்க பாவம் செய்பவர் கழுதை

முகமுடையோர், யானையைத் தின்பர் இப்படிப்பட்ட அரக்கர் கோடிகோடியாவர்

சத்தசாகரம் - ஏழு கடல் - உப்புககடல், தேன்கடல், கருபபஞுசாற்றுக்கடல், பாறகடல, நெய்ககடல், சததோதம். **அத்தி** - யானை

146. அரக்கியர், அமைச்சர், இரதங்கள் பெருகுதல்

அரக்கியர் எண்ணிலார் அங்கு உதித்தனர்
உரத்தொரு புரவிசூழ் இரதம் ஒன்பதா
யிரத்தொகை அமைச்சர் களெழில் அரக்கர்கள்
இரத்தினா நங்கையர் நேமி எங்குமே.

எண்ணற்ற அரக்கியர் அவ் இரத்தினாபுரியில் தோன்றினர். வலிமையான குதிரைகள் பூட்டப் பெற்ற தேர்கள் ஒன்பதாயிரம் நிறைந்தன. அவ்வசுர பூமியில் எங்கும் அமைச்சர், அரக்கர், அரக்கியர்களே நிறைந்தனர்

உரம் - வலிமை, **புரவி** - குதிரை, **நங்கை** - பெண், **இராட்சசி. நேமி** - பூமி

147. சேடியர் உதித்தல், சுக்கிரன் மகிழ்தல்

உளத்தினிற்கு உகந்த சேடியர் உதித்தனர்
களித்திடும் சேனையின் கடல்நி றைந்திட
தளித்திடும் மனத்தினான் தவத்தின் மிக்கவன்
பளிங்கெனும் தேசிகன் இவைப டைத்தனன்.

அரக்கியர்களுக்கு மனத்துக்குப் பிடித்த தோழிகள், பணிப்பெண்களும் தோன்றினர். இவ்வாறு படைகள் கடல்போல் நிறைய மகிழ்ந்த, மனத்தையுடைய, தவத்தில் சிறந்த, வெள்ளியாகிய சுக்கிரன் இவை அனைத்தையும் படைத்தான்

உகந்த - பிடிததமான, **சேடி** - பணிப்பெண்

148. வாதாவிக்குத் தம்பியர் பிறத்தல்

பாக்கிய முளவ சோமுகி நற்பாலரைத்
தாக்கிய நால்வர்த் தரணி தானிடத்
தூக்கியவா தாவிதன் துணைவர் தன்முகம்
நோக்கியே நாமமும் நுவலு கின்றனன்.

புத்திரப் பேறடைந்த அசோமுகி மேலும் நால்வரைப் பெற்றெடுத்தாள் அவர்களைத் தூக்கிய வாதாவி தம்பியா முகம் நோக்கி அவர்களுக்குப் பெயர் வைத்தான்

துணைவர் - துணையாக உள்ளவர், இங்கு தம்பிகள் **நாமம்** - பெயர், **நுவல்கின்றனன்** - கூறுகினறான்

149. தம்பியர்க்குப் பெயர் சூட்டுதல்

வாரதன் குண்டலன் மகோன் மகோதரன்
பேரென உரைசெய்யும் பெரிய சூரனைத்
தாரணி தம்பியர் இறைஞ்சித் தாட்டிகச்
சூரனைச் சூழ்ந்திடத் துதிப்பன் வெள்ளியை.

வாரதன், குண்டலன் மகோன், மகோதரன் ஆக நான்கு பேரிட்டான் வாதாவி அவர்கள் வளர்ந்து பெரியவரானதும் தங்களை வளர்த்த அண்ணனுக்குத் துணையாக அவனைச் சூழ்ந்தனர் வாதாவியும் சுக்கிரனைத் துதித்தான்

150. வாதாவி சுக்கிரனைத் துதித்தல்

ஐய னேயெனை ஆண்டருள் ஆதியே
மெய்ய னேஎங்கள் வேதனை தீர்த்திடும்
துய்ய னேஒரு துன்பமில் லாமல்செங்
கைய னேஇனி காக்கக் கடனென்றான்.

"தலைவனே ! என்னை ஆளும் முதல்வனே ! உண்மையானவனே ! எங்கள் துன்பம் தீர்க்கும் துயவனே ! சிவந்த கையை உடையவனே ! இனி ஒரு துன்பமும் இல்லாமல் காப்பது உன்கடன்" என்று வாதாவி சுக்கிரனைத் துதித்தான்.

ஐயன் - தலைவன், **ஆதி** - முதல்வன், **வேதனை** - துன்பம், **துய்யன்** - தூய்மையானவன்

151. சுக்கிரன் வாதாவியை வாழ்த்தித் தன் ஊர் போதல்

சூர னேஉனைச் சூழ்கிளை ஞோர்களும்
வார ணிந்த சொக்ககன்னி வஞ்சியும்
பாரை ஆண்டு பலன்மிகு வாயென
வீர வெள்ளிதன் பதிகுறித் தேகினன்.

"சூரனே ! நீ உன் சுற்றத்தோடும், மனைவி சொக்க கன்னியோடும், இப்பூமியை ஆண்டு பலன் பெறுவாய்" என்று வாழ்த்திய சுக்ராசாரி தன் ஊர் சென்றார்.

கிளைஞோர் - சுற்றத்தார், **வார்** - கச்சு, **வஞ்சி** - வஞ்சிகொடி போன்ற பெண், **பார்** - பூமி, **பதி** - ஊர்

152. வாதாவி அரசாளுதல்

தானை சூழத் தழைத்தவா தாவியும்
வானை உற்றிடும் மண்டபம் மன்னியே
கோனெ னக்கொலு வெய்திய காலையில்
மானை நேர்விழி மாதினைக் கூடினான்.

படைகள் சூழ இருந்த வாதாவியும் வானளாவிய மண்டபத்தை அடைந்து அரசனாகக் கொலு வீற்றிருந்த பொழுது மான் போன்ற விழியுடைய தன் மனைவியைக் கூடினான்

தானை - படை **கோன்** - அரசன **நேர்** - ஒத்த

153. குழந்தைகள் பெறுதல்

அன்ன நாள்தனில் ஆயிழை கர்ப்பமாய்
தன்னை ஒத்த தனயர்கள் நால்வரை
உன்னி நின்றங்கு உரமுள மைந்தரை
கன்னி உள்ளம் களிக்க அளித்தனன்.

இப்படி இருக்கையில், சொக்க கன்னி, கருவுற்று, தன்னைப் போலவே நான்கு பிள்ளைகள் பெற நினைக்க அவ்வாறே வலிமையுள்ள மைந்தர்கள் நால்வரை வாதாவி மனம் மகிழுமாறு அளித்தாள்

நாடனில் - நாள் + தனில், **ஆயிழை** - தேர்நதெடுக்கப்படட·· அணிகலன்கள் இங்கு அவறறை அணிந்த பெண், சொகக கன்னி **தநயர்** - பிளளைகள், **உன்னி** - நினைத்து, **உரம்** - வலிமை

154. பிள்ளைகள் கல்வி கற்றல்

ஈரைந் தாண்டில் இலங்கு பாலருக்கு
ஓரும் வேதம் முதலியது ஓதியே
தேரும் மந்திர வித்தை தெரிந்திட
சீர ளித்துத்தன் சிந்தை மகிழ்ந்தனன்.

பத்து வயதிற்குள் தன் குழந்தைகளுக்கு வேதம் ஓதுவித்து மந்திர வித்தையும் கற்றுக் கொடுத்து மனம் மகிழ்ந்தான் வாதாவி

ஈரைந்து - பத்து, **சிந்தை** - மனம

155. பிள்ளைகளின் பெயர்கள்

கம்ப னோடு கசமுகன் கும்பனும்
சம்பு மாலி யெனும்பெயர் தாங்கியே
செம்பொன் மேரு எனச்சிறு பாலகர்
அம்பு சூழ்புவி ஆண்டனர் என்றனன்.

கமபன், கசமுகன கும்பன் சம்புமாலி என்னும் நால்வரும மேருமலை போன்ற ஒளியுடனும், வலிமையுடனும், கடல்சூழ்ந்த இப்பூமியை ஆண்டனர் என்றார் சனகர்.

அம்பு - நீர் கடல்

156. சனகரிடம் அத்திரி. மேலும் கதையைத் தொடரும்படி கூறுதல்

ஏது காதை எழிலெனும் அத்திரி
மாத வன்பதம் வாழ்த்தி வணங்கியே
தீதி லாக்கதை இன்னமும் செப்பெனத்
தாது கொன்றையன் தாள்துதித் தோதுவான்.

கதை கேட்ட அத்திரி, இக்கதை மிகவும் நன்றாயிருக்கிற தென்று சொல்லி, சனகனின் பாதம் வாழ்த்தி வணங்கி, "இக்கதையை மேலும் கூறுக" என்று வேண்ட சனகரும், கொண்றை அணிந்த சிவனைத் துதிதது்க் கூறத் தொடங்கினார்

காதை - கதை. **கொன்றையன்** - கொன்றை மாலை அணிநத **சிவன்.**

7. வாதாவி திக்கு விஜயம் செய் சருக்கம்

157. வாதாவி படையெடுக்க நினைத்தல்

திருவளரும் நவமணியால் இழைத்தமுடி
சென்னியினிற் சிறந்து மின்ன
பெருமையுள நகரமற்று பிரபலமாய்
மண்டலத்தில் பெம்மான் என்ன
விருதிணிதோ டணிகீர்த்தி பளபளென
விரவிமணி உரத்தில் துன்ன
கருமலைபோல் வீற்றிருக்கக் கடல்சேனை
தனைப்பரவக் கருணை கூர்வான்.

நவரத்னங்களால் செய்த அழகு மிக்க திருமுடி தலையில் ஒளிவீச, இதைப் போல் பெருமையுள்ள நகரம வேறெங்கும் இல்லை, இதற்கு இவன் தலைவன் என்று எல்லோரும் கூற விருதுகள், பட்டப்பெயர்கள் மார்பில் அலங்கரிக்க வீற்றிருந்த வாதாவி கடல் போன்ற தன் படையைப் பிரிக்க எண்ணினான்

திரு - அழகு, **சென்னி** - தலை, **மணி** - அழகிய, **உரம்** - மார்பு, **துன்ன** - நெருங்க, **பரவ** - பிரிகக

158. படையைப் பிரித்தல்

தனக்கிசை அமைச்சர் எண்ணிலரும்
சார்ந்திட அருளிய சேனை
இனத்தினில் ஒருவற் காயிரம்கோடி
இசைந்தன ஐந்நூற் றைம்பதுபேர்
மனத்தினில் வகுத்த நிருபமுமளித்து
மாநிலம் புரந்திட அவுணர்
வனத்தினில் திரிந்தாயிரம் விலங்கழிக்க
மன்னனுண் டாகி இருந்தனனால்.

தன்னுடைய ஐநூற்று ஐம்பது அமைச்சருக்கும், ஒவ்வொரு வகைச் சேனையிலும் ஆயிரம் கோடி பங்கிட்டுக் கடிதம் அனுப்பி அரசாட்சி செய்தான் வாதாவி அப்போது அசுரர்கள் காட்டில் திரிந்து ஒரு நாளைக்கு ஆயிரம் விலங்குகளைக் கொன்று கொண்டு வந்தனர் அவற்றை உண்டு அரசு வீற்றிருந்தான்

நிருபம் - கடிதம, **மாநிலம்** - பெரிய உலகம், **புரந்திட** - காத்திட

159. வாதாவியின் ஆசை

மனதிலோர் சூழ்ச்சி நினைப்பான் மாநிலத்தில்
மன்ன னென்றே முடிபு னைந்தார்
கனமென வேவரு மெனதடி இறைஞ்சி
கனநிதிக் குப்பை ஈய்ந்திடுவான்

வனிதையர் முன்றில் மாசினை யகற்றி
வழுத்திய பணிகளை மன்ன
முனிவரைப் பேசி அரசிலங் குவநூல்
முறையென உளத்துணர்ந் தனனால்

இப்படி அரசாணட வாதாவிக்கு மனத்தில ஒரு சூழ்ச்சி தோன்றியது "இவ்வுலகத்தில மன்னன் என்று முடி சூட்டிக்கொண்டால் மற்ற மனனர்கள் அடி வணங்கிக் கப்பம் கட்ட வேண்டும் தேவலோக மங்கையர் முற்றத்தில் குப்பை அகற்றி நான் இட்ட பணியைச் செயயவேணடும் முனிவர்களை நான் அதட்டிப் பேச வேணடும் இப்படி அரசு செய்வது தானே பெருமை" என நினைத்தான்

சூழ்ச்சி - ஆராய்ச்சி, **கனம்** - பெருமை, மிகுதி **குப்பை** - செல்வம, கப்பம கட்டும் செல்வம, **வனிதையர்** - தேவமகளிர், **முன்றில்** - முற்றம, **மாசு** - அழுக்கு, குப்பை, **பணி** - வேலை

160. எல்லாச் செல்வமும் வீண் என நினைத்தல்

கவனவான் பரியும் இரதமும் கரியும்
கனத்தபொற் பணிகளும் கடல்சூழ்
அவனியும் நிதியும் அரிவையர் மணமும்
ஆண்மைசேர் குழவியும் அமைச்சர்
குவவுதோள் வீரர் கோயிற் கொத்தளமும்
குறைவறு செல்வமும் படைத்த (து)
அவலமே யன்றி கீர்த்தி யுண்டாவ (து)
அரிதென அவுணனும் துயருற்றான்.

"வேகமாகச் செல்லக்கூடிய குதிரைகளும் தேரும், யானையும், கனமான பொன்னாலான ஆபரணங்களும், கடல சூழ்ந்த உலகமும செல்வமும், அழகான மனைவியும், ஆண்மையுள்ள குழந்தைகளும்

அமைச்சர்களும, வலிமையான தோள்களையுடைய வீரர்களும், அரண்மனை, கோட்டைகளும், குறைவற்ற செலவமும் படைத்து என்ன பயன்? இவை அனைத்தும் வீணேயன்றிப் புகழ் உணடாவது அருமை" என உணர்ந்த வாதாவி மிக்க துயரம அடைந்தான்

கவனம் - வேகம, **பரி** - குதிரை **இரதம்** - தோ, **கரி** - யானை, **அவனி** - உலகம, **அரிவை** - பெண், **குழலி** - குழநதை **அவம்** - வீண **கொத்தளம்** - கோட்டை, கட்டடம

161.

இரணியன் இலங்கைக் கிறைவன் முதலா
எனதுசுற் றங்களா யிருந்தும்
அரியினால் மடிந்தார் அழிவிலா வரம்கொண்
டாழியில் அரசனென் றமர்ந்தேன்
முருகனில் அதிகத் திண்டிய வீரர்
முளைத்தனர் மணிமுடி துலங்க
பெருமைகள் அணிந்த வறுமைகள் அறையில்
பேய்ச்சுரைக் காயென வாமால்.

"இரணியன், இராவணன் முதலானவர் எனது சுற்றத்தினராய் இருந்தும் எல்லோரும் திருமாலால் இறந்தனர். நான் யாராலும் அழிக்க முடியாத வரம் பெற்றுக் கடல் நடுவே பட்டணம் அமைத்து வாழ்ந்து வருகிறேன், முருகனை விட, மிகுந்த பலமுள்ள தோள்களையுடைய வீரர் இவ்வளவு பேர் என்னிடம் உள்ளனர், இப்படிப்பட்ட பெருமைகளை வாயினாற் சொல்லி என்ன பயன்? பேய்ச் சுரைக்காய் கறிசமைக்க உதவுமா? அதுபோல் என்னுடைய பெருமைகளாலும் பயனில்லை"

இலங்கைக்கு இறைவன் - இராவணன **அரி** - திருமால், விஷ்ணு **ஆழி** - கடல **துலங்க** - விளங்க

162.

முருகவிழ்கைதை மலர்முடி அணிவார்
முருக்கலர் அணிகிலார் உலகில்
பெருமையாய்ப் பெரியோர்தம்மை அழைத்தின்பம்
பெய்குவார் சிறியரோ டிணங்கார்
கரும்பினை அருந்தும்நாவு பேய்க்கரும்பைக்
கவ்விடா தெனநிதிக் கனத்த
அரசனாகியநா மரசினைச் செலுத்தி
அவனியிற் புகழுவ மென்றே.

"அழகிய மணம் மிகுந்த மடல் அவிழும் தாழை மலரை முடியில் அணிவார்களே தவிர முருக்க மலரை அணிய மாட்டார்கள், பெரியோர்களோடு சேர்ந்து இன்பமாய் இருப்பவர்கள் சிறியாரோடு சேர மாட்டார் கரும்பை உண்பவர் பேய்க் கரும்பை ருசிக்க மாட்டார் அதுபோல் மிக்க செல்வம பெற்ற அரசனாகிய நான் இப்படியே இருந்தால் எனன பயன்? பேரரசனானால் தான் பூமியில் புகழ்" என நினைத்தான்

முருகு - மணம, அழகு **கைதை** - தாழை **முருக்கலர்** - முருககு + அலர் **அலர்** - மலர் - பூ

163. வாதாவி அமைச்சர்களிடம் படையெடுக்குமாறு கூறுதல்

நிருபதி உளத்தில் உவகையாய் அமைச்சர்
நிறைமுகம் நோக்கியே உரைப்பான்
இருவிசும் பகன்ற புவிமிசை திக்குவிஜயம்செய்
திமையவ ரிருடியோ டியாவரையும்
பருமையின் நகரில் பணிசெயக் கடிந்து
பண்புடன் அரசுவீற் றிருப்பத்

தரும வாதாவி அசுரனென் றவனி
அடங்கலும் புகழுற வென்றான்.

வாதாவி அமைசசர்களை அழைத்து அவர்கள முகம நோக்கி "இடமகன்ற ஆகாயம் பூமியெங்கும் திக்குவிசயம் செய்து தேவர், முனிவர் யாவரையும் இந்நகரில ஏவல் செய்யுமாறு செய்து, (ஏகசக்ராதிபதியாய்) எல்லோரும் தருமவாதாவி என்று புகழுமபடி வீற்றிருக்க வேண்டும்" என்றான்

நிருபதி - அரசன், வாதாவி **விசும்பு** - ஆகாயம **இமையவர்** - தேவர் **பருமை** - பெரிய **கடிந்து** - அடககி ஏவி **அவனி** - உலகம்

164. அமைச்சர், சேனைக்கு ஆணையிடல்

என்னலும் அமைச்சர் இணையடி இறைஞ்சி
இயக்கரின் சேனையோ டிசைப்பார்
மன்னவன் அஷ்ட திசையினில் விசயம்
மன்னியே நகரிசேர்ந் துரைப்ப
உன்னிய அதனால் படையெடுத் திடுமென்
றுவகையா யவரவர் சேனை
அன்னது கடல்போல் அளவிலா வெள்ளம்
அங்ஙனம் எழுந்தன வன்றே.

உடனே அமைச்சர்கள் வாதாவியின் பாதங்களை வணங்கித் தங்கள் சேனைத் தலைவர்களிடம சென்று "அரசர் எட்டு திக்கிலும் விஜயம் செய்து வெற்றி பெற எண்ணினார் அதனால் படையெடுங்கள்"என்று கூற படைத்தலைவர்கள் மிகழ்ச்சியோடு அவரவர் படைகளைக் கூட்ட வெள்ளம் போல் படையெழுந்தது

இயக்கர் - அசுரா **அஷ்டம்** - எட்டு **விசயம்** - வெற்றி **உன்னிய** - நினைத்த

165. படையெடுப்பு

குடமுழ வொலியும் அவுணர்கள் ஒலியும்
குரகதம் கரியொலி அன்றி
கடல்முர சொலியும் இரதமூர் ஒலியும்
கம்மிட புவனமும் அதிர
முடிபுனை அவுணர் பூபதி இந்த
மூர்த்தியென் றேத்திடக் கண்டு
படிமிசை ஏக உலகெலாம் அடைந்து
பாரமே செய்தனர் அன்றே.

குடமுழாக்களின் ஒலியும், அரக்கர் ஆரவாரமும், குதிரை யானைகளின் கனைப்பு, பிளிறல் ஓசைகளும், முரசங்களின் ஒலியும், தேரோடும் ஓசையும் சேர்ந்து கடல்போல் ஆரவாரம் மிகுதியாக, பூமியே அதிர்ந்தது இவன்தான் முடி புனையத் தகுந்த அரசன் என்று உலகமே வாதாவியைப் போற்றுமாறு பூமியெங்கும் படைகள் நிரம்பியதால் பூமிக்கே பாரம் மிகுதியாயிற்று

குடமுழா - ஒருவகை முரசு **குரகதம்** - குதிரை **கரி** - யானை **இரதம்** - தேர் **கம்மிட** - நெருங்க மிகுதியாக **புவனம்** - உலகம், பூமி **படி** - உலகம், பூமி

166. வெற்றி பெறுதல்

அஷ்டதிக் கேகி அவனியாள் சூரரை
அணைந்ததி வீரரைப் பிடித்து
கட்டிவான் உறையும் கடவுள்தன் புகழைக்
கவர்ந்துகா வலனென மகவான்
பட்டணத் துறையு மிமையவ ரனைத்தும்
பந்தனம் செய்து பதியில்
கிட்டிமண் டபத்தில் வீற்றிடு நாள்பைங்
கிளியயி ராணி கேள்வன்.

எட்டுதிக்கும சென்று உலகத்தை ஆளும் அனைத்து அரசர்களையும வெனறு பிடித்துக கட்டி, வானுலகக கடவுள்களின் புகழைக் கவாந்து, இந்திர லோகத்துத தேவர்களையும், மாதர்களையும் கட்டிக் கொணடுவந்து மண்டபத்தில் அரசாட்சி செய்தான் வாதாவி அப்போது கிளிபோன்ற இந்திராணியின் கணவன்.

மகவான் - இநதிரன் **பந்தனம்** - கடடுதல **அயிராணி** - இநதிராணி **கேள்வன்** - கணவன்

167. தேவர்கள் வாதாவிக்குப் பணிவிடை செய்தல்

மேகமூர் மகவான் குழாத்துடன் ஏகி
மென்மலர் கழலினில் தூவ
தோகையர் அவுணர் ஊழியம் செய்ய
சுடர்விளக் கெங்கணும் தோன்ற
வேகமாம் சண்டன் உலகினில் உயிரை
விரும்பிலன் நிருதியும் பணிசெய
யாகமா வருணன் எங்கணும் குளிர்ச்சி
அதுதர வாயுவும் அவுணர்.

மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்திரன் தன் தேவர் கூட்டத்துடன் கற்பக மலர்களை வாதாவியின் பாதங்களில் தூவி வழிபட்டான். தேவமாதர்கள் அசுரர்களுக்குப் பணிவிடை செய்தனர். அக்கினி இரத்தினாபுரி யெங்கும் விளக்குகள் ஏற்றினான் வேகமாக உயிரைக் கவரும் எமன், அரக்கர்களின் உயிரைக் கவராது நிறுத்திக் கொண்டான் நிருதியும் இராட்சதர்களுக்கு ஏவல் செய்தான் வருணன எங்கும் எல்லோருக்கும் குளிர்ச்சி தந்து கொண்டிருந்தான். வாயுவும் அரக்கர்களின்,

மகவான் - இந்திரன கிழககுத் திசை அதிபதி **குழாம்** - கூட்டம **மென்மலர்** - மெனமையான மலர் இஙகு கற்பக மலர் **தோகையர்** - மயில் போன்ற பெணகள இங்கு தேவமாதர் **ஊழியம்** - தொண்டு

அக்கினி - தெனகிழககுததிசை அதிபதி **சண்டன்** - எமன தெறகுத்திசை அதிபதி **நிருதி** - தெனமேறகுத் திசை அதிபதி **வருணன்** - மேறகுத் திசை அதிபதி கடல், மழைககு அரசன **வாயு** - காறறு வடமேறகு திசை அதிபதி

168.

முன்றிலை விளக்கக் குபேரனும் நிதிகள்
முறையுடன் அளித்திட ஈசன்
வென்றிய தான வரமளித் திடவும்
வேதனும் மறைசொல மாலும்
ஒன்றிய வேவ நற்பணி செய்ய
ஓவியம் மன்னற் களிக்க
துன்றிய அரவு லோகனும் மதுகொண்
டீய்ந்திட அவுணனும் இருந்தான்.

வீதிகளைப் பெருக்கிக் குப்பைகளை அகற்றினான் வடதிசை அதிபனான குபேரனும செல்வங்களை அள்ளிக் கொடுத்தான். வடமேற்குத் திசை அதிபனான ஈசனும் வெற்றிகளைக் கொடுத்துக் கொண்டே இருந்தான் பிரமனும் வேதம் ஓதிக் கொண்டிருந்தான். திருமாலும் இட்ட பணிகளைச் செய்ய, இலக்குமியும் செல்வம் அளிக்க, பாம்பு லோக அரசனான ஆதிசேடனும் மதுவைக் குடம் குடமாய்க் கொடுக்க வாதாவி அரசு வீற்றிருந்தான்

முன்றில் - முறறம, தெரு, வீதி **விளக்க** - தூய்மைப்படுத்த **வேதன்** - பிரமன் **ஓவியம்** - திருமகள் **அரவுலோகன்** - ஆதிசேடன்

169.

கின்னரர் யாழை விரவினால் ஒலித்து
கெலிப்புள கீதங்கள் உரைப்ப
உன்னியர் சித்தர் இந்திர சாலம்
ஓதிட ஓங்குகந் தருவர்

நன்னயத் தூது நடந்திட அரவ
நங்கையர் நடனஞ்செய கலைமா
தென்ன அவ்வுலகில் மறைகளை ஒலிப்ப
இயக்கர்கோன் இணையிலா திருந்தான்.

கின்னரர்கள் யாழ் மீட்டி, வெற்றியைப் பாடினர் சித்தர்கள் இந்திரஜால வித்தைகள் காட்டினர் கந்தர்வர் தூது சென்றார்கள் நாக கன்னியர் நடனமாடினர் கலைமகள் வேதம் ஓதினாள் இவ்வாறு அரக்க அரசன் வாதாவி ஒப்பற்றவனாய் இருந்தான்.

கெலிப்பு - வெற்றி **கீதம்** - பாடல் **அரவநங்கை** - நாக கன்னி **மறை** - வேதம

170.

அவனி வாதாவி சூரனே நமோவென்
றனுதினம் துதித்திட அவுணர்
குவியெலாம் ரத்தினா கரம கன்று
கொடுவன விலங்கினைச் சாடி
தவியணி இழைத்த முடிபுனை அரசன்
தனக்கு நல்கிடத் தயவாய்
புவியினைப் புரந்து புகழ்ந்தி டும்நாள்
புரந்தரர்க் கிடர்செய் யெண்முடியா.

எல்லோரும் "வதாவி சூரனே நமோ"வென நாள்தோறும் வாழ்த்தினர் அசுரர் கூட்டமெல்லாம் ரத்தினாபுரி நகரைவிட்டுக் காடு சென்று வனவிலங்குகளை வேட்டையாடி, மணியிழைத்த மகுடம் புனைந்த அரசனுக்குக் கொடுத்தன அவன் அவற்றை உண்டு புகழோடு பூமியை ஆண்டான் ஆனால் அவன் தேவர்களுக்குச் செய்யும் தீங்கு சொல்லிமாளாது .

அனுதினம் - நாள்தோறும் **துதித்திட** - புகழ்ந்திட **குவி** - கூட்டம் **இரத்தினாகரமகன்று** - இரத்தினாபுரி நகரை விட்டு நீங்கி

சாடி - கொனறு **நல்கிட** - கொடுத்திட **புரந்து** - காபபாறறி **புரந்தரர்** - தேவர்

171. தேவர்கள் அச்சம்

தேவர் அஞ்சினர் முனிக்குழாம் கலங்கினர் தேவர்
பாவையர் அஞ்சினர் பாலர்கள் ஒடுங்கினர் பரிதி
தாவு கின்றதேர் மதில்வலம் புரிந்திர வதனில்
கோவில் மண்டபத் தீபமாக யிருந்துடல்
குறைந்தனன்.

தேவர்களும் தேவமங்கையரும் அஞ்சினர் முனிவர்கள் கலங்கினர் திசைக்காவலர் எண்மரும் ஒடுங்கிக் கிடந்தனர் கதிரவன் தான் ஏறிச் செல்லும் தேரில் பூமி முழுவதும் வலம் வராமல் வாதாவியின் மதிலை மட்டும் வலம் வந்து இரவில் கோவில் மண்டபத்தில் விளக்காக எரிந்து உடல் குறைந்தான்

குழாம் - கூட்டம் **பாவையர்** - தேவமங்கையர் **பாலர்** அட்டதிககுக் காவலர் **பரிதி** - கதிரவன், சூரியன்

172. அசுரர்களின் கொடுமை

அசுரர்கோன் ஆக்ஞை தவறினர் யாக்கையைப்
பசியை நீக்கிடப் பட்சணம் பண்ணுவர் பயந்தே
கசிகண் ணீர்விட கடவுளர்பண் டீய்ந்திடும் காலம்
உசித மாகவே உலகினைப் புரந்தனன் அவுணன்.

வாதாவியின் கட்டளையை மீறினால் அவர்கள் உடலைப் பசிக்கு இரையாக்குவான் என்பதனால் பயந்து அனைவரும் கண்ணீர் விட்டு அழுதனர் இறைவன் கொடுத்த வரத்தின்படி வாதாவி

யாராலும் அழிவில்லாமல் தேவர்கள் ஆண்டில் ஆயிரம் ஆண்டுகள் நாடடைக காத்துத் தன் விருப்பப்படி ஆட்சி புரிந்தான

ஆக்ஞை - கட்டளை **யாக்கை** - உடல் **பட்சணம்** - உணவு **பட்சனம் பண்ணுவர்** - உண்ணுவா **பண்டு** - முனபு **உசிதம்** - விருபபம

173. தேவேந்திரன் புலம்புதல்

பசும்பொன் னாடு பார்த்திபன் குழாத்துடன்
பகர்வான்
தசையெ லும்பினைக் காவடி தூக்கெனச்
சாற்றும்
அசுரன் சூரபன் மாவினுக் கதிகமா மிவர்பால்
இசைய ஊழியம் செய்திட அளிப்பனோ ஈசன்.

பசிய பொன்னாடான தேவலோகத்துக்கு அதிபனான தேவேந்திரன், தன் கூட்டத்தினரிடம, "மாமிசத்தையும், எலும்பையும காவடியாகக் கட்டித் தூக்கச் சொன்ன சூரபத்மனை விட இவன் இன்னும் கொடியவனாக உள்ளான் இவனிடம் ஊழியம் செய்யும் படி இப்படி ஒரு வரத்தை இந்த ஈசன் அளிக்கலாமா?" என்று புலம்பினான்

பசும்பொன்னாடு - தேவர் உலகம், **பார்த்திபன்** - அரசன, **குழாம்** - கூட்டம , இங்கு தேவா, **பகர்வான்** - சொல்லுவான், **தசை** - மாமிசம் **இசைய** - விருபபப்படி, **ஊழியம்** - தொண்டு

174. தேவேந்திரனின் துன்பம்

அரக்கி மாதர்கள் அரிவையர்க் கேவலை
இசைப்பான்
செருக்கி வாவென செப்புதல் மனத்தை
உருக்க ஊணிலாது துயிலுமி லாமலே உலர்ந்தே
எருதி லேறரன் செயலென இடரனு பவிப்பான்.

மேலும் அரககி மாதர்களுககுத் தொண்டு செய்யுமாறு தேவ மங்கையரிடம அசுரன கூறுவதும் கர்வத்தால் "வாடி" "போடி" என்று கூப்பிடுவதும மனத்தை உருக்க உணவும், தூக்கமும் இன்றி, "இவையாவும், இடப வாகனததில் ஏறும் அசசிவன் செயலல்லவா?" எனக்கூறித் துன்புற்றான்

இசைப்பான் - சொல்லுவான் **செருக்கி** - செருக்குடன், கர்வததுடன, **செப்புதல்** - கூறுதல், **ஊண்** - உணவு **துயில்** - தூககம், **எருதிலேறரன்** - எருதில + ஏறு + அரன், **இடரனுபவிப்பான்** - இடர் + அநுபவிபபான், துனபத்தை அநுபவிப்பான

175. அத்திரி மேலும் கதை கேட்டல்

முனிவ னேயென அத்திரி மகிழ்ந்தினம்
மொழிவான்
புனிதன் ஈந்திடும் வரமதால் புகழ்சேர் அவுணன்
இனிய காதை நன்றாமின் றின்னமும் இசைப்பா
யெனப்ப ணிந்திட சனகனும் இயம்பிட மாதோ.

முனிவனே என்று சனகன் கூற, அத்திரி முனிவர் மகிழ்ந்து, "தூயனாகிய சிவன் கொடுத்த வரத்தால் புகழோடு வாழ்ந்த வாதாவி கதை மிகவும் இன்பமாயிருக்கிறது, இன்னும் கூறுங்கள்" என்று பணிந்தார். சனகரும் மேலே கூறத் தொடங்கினாா

மகிழ்ந்தினம் - மகிழ்நது + இனம் **இனம்** - இன்னும், **புனிதன்** - தூயன - இங்கு சிவன், **காதை** - கதை, **இசைப்பாய்** - கூறுவாய்

8. நாரதர் தூதுச் சருக்கம்

176. தேவர்களின் துன்பத்தை நாரதர் அறிதல்

வானவர்க் கவுணன் தருவா தையால்
தேனு வாழும் உலகம் செழித்திடா

ஏன அமரர் இன்பமும் குன்றின
தான நாரதன் அன்பின் அறிந்தனன்.

தேவர்களுக்கு வாதாவியாகிய அரக்கன தரும் துன்பத்தால் காமதேனு வாழும் உலகம் செழிப்பு குன்றி அமரர்கள் இன்பமும் போய் இழிவடைந்தனர் இதனை நாரதர் அன்பினால் அறிந்தார்

வானவர் - தேவா, **தேனு** - காமதேனு, தெய்வப் பசு, பாறகடலைக கடைந்த போது தோன்றியது வேண்டியதைக கொடுககும

177. நாரதர் இந்திராணியைக் காணுதல்

பொன்ன கர்க்கணி போன பிழையையும்
உன்னி யுள்ளம் உருகி உயர்தவம்
மன்னு தேவர்கோன் மண்டபத் (து) ஏகியே
மின்னி டைத்திரு மெல்லியைக் கண்டனன்.

தேவர்களுக்கு மதிப்பு அகன்றதனால் உள்ளம் உருகித் தவம் செய்யும் மின்னலை ஒத்த இடையையுடைய இந்திராணியைத் தேவேந்திரன் மண்டபத்தில் சென்று கண்டார்

பொன்னவர் - தேவர், **அணி** - அழகு, மேன்மை, **உன்னி** - நினைத்து, **மன்னு** - நிலைபெறற, **மின்னிடை** - மின்னலை ஒத்த இடை

178. நாரதர் இந்திராணியிடம் "இந்திரன் எங்கே" எனல்

கோத கன்ற குயிலிந்தி ராணியே
வாதை உந்தன் மனத்தில் இருந்திட
ஏது காரணம் இந்திரன் எங்குளான்
ஓது கென்ன அறைந்திடல் உற்றாள்.

"குற்றமற்ற குயில் போன்ற குரலுடைய இந்திராணியே ! உன் மனததில் துன்பம் நிறையக் காரணம் என்ன? இந்திரன் எங்கே? சொல் !" என்று நாரதர் கேட்க இந்திராணி சொல்லலுற்றாள்.

கோது - குற்றம், **வாதை** - துன்பம், **ஓது** - சொல்லுக **அறைந்திடலுற்றாள்** - கூறத் தொடங்கினாள்

179. இந்திராணியின் விடை

சூரன் தங்கை பெறுஞ்சுதன் ஆனவன்
நாரி பாகன் மலரடி நண்ணியே
பாரெ லாம்தன் வயப்பட ஆண்டுமே
சீரி தாமனம் கொண்ட செருக்கினால்.

"சூரபத்மன் தங்கை அசோமுகி பெற்ற மகன் வாதாவி உமையிடப்பாகம் கொண்ட ஈசனின் மலர் போன்ற பாதங்களை வணங்கி இப்பூமி முழுவதும் ஆண்டும் செருக்கினால்,

சூரன் தங்கை - சூரபதமன் தங்கை அசோமுகி, **சுதன்** - மகன், **நாரி** - பெண், இங்கு உமை, **நாரி பாகன்** - பெண்ணை இடப்பக்கத்திலே கொண்டவன், சிவன **மலரடி** - மலர்போன்ற பாதங்கள், **நண்ணி** - அடைந்து

180.

தேவர் கின்னரர் சித்தர் கருடரும்
பாவை மாரும் பணிசெய என்றிவர்
தாவில் வஞ்சனை யாலம ராவதி
கோவும் ஏகினர் என்றுரை கூறினாள்.

தேவர்கள், கின்னரர், சித்தர், கந்தருவர், கிம்புருடர், தேவமாதர் என்று எல்லோரும் பணி செய்யுமாறு தேவர் கோவையும் பிடித்துச் சென்றுள்ளான்" என்றாள்.

அமராவதி - தேவர் தலைநகரம், **கோ** - அரசன்.

181. நாரதர் ஆறுதல் கூறுதல்

உள்ளம் வாடி உரைசெய நாரதன்
கள்ளம் இன்றி கருத்தில் அடங்கிநற்

கிள்ளை யென்னும் கிளிமொழி கேள்வனை
வள்ளல் என்னும் மயேஸ்வரன் மீட்பனால்.

இந்திராணி இவ்வாறு மனம் நொந்து கூற நாரதா, "கள்ளம் இல்லாது கிளி போன்ற மொழி பேசுபவளே! உன் கணவனைச சிவனே மீடபான்"

கிள்ளை - கிளி, **கேள்வன்** - துணைவன், கணவன் **மயேஸ்வரன்** - சிவன்

182. நாரதர் தேவேந்திரனைக் காணுதல்

துய்ய வெண்சிற (கு) ஓதிமத் தோகையே
ஐயன் தன்னரு ளால மராவதி
உய்யு மென்ன உரைபகர்ந் தேகியே
ஐய னோட மரர்க்கிறை ஓதுவான்.

"தூய்மையான வெண்மையான சிறகுகளையுடைய அன்னம் போன்றவளே ! சிவனருளால் தேவருலகம் பிழைக்கும்" என்று கூறித் தேவேந்திரனிடம் சென்றார் நாரதரிடம் தேவேந்திரன் கூறுவான்

துய்ய - தூய்மையான, **ஓதிமம்** - அன்னம

183. தேவேந்திரன் நாரதரிடம் கூறுதல்

நற்ற வத்துறும் நாரதரே கேளும்
மெத்த வாதைசெய் சூரர்கள் மேன்மையை
சத்தி வேலன் தவிர உளமகிழ்
உற்ற காலையில் உரக பாணியான்.

"நல்ல தவத்தையுடைய நாரதரே கேளுங்கள் ! மிக்க கொடுமை செய்யும் சூரர்கள் செருக்கைச சகதி வேலாயுதத்தை உடையமுருகன் அடக்கியதால மகிழ்ச்சி பெற்றிருந்த வேளையில், பாம்பை ஆபரணமாக உடைய சிவன்

வாதை - கொடுமை. **தவிர** - தவிர்க்க. நீகக. **உரகபாணி** - உரகம் பாமபு **பாணி** - கை. பாமபைக கையில உடைய சிவன்

184.

அன்பி னால்வர் அசோமுகி பாலனும்
தென்ப தாகியே சேமமும் பெற்றிட
கும்ப னென்னும் கொடியன் கொடுமையின்
வம்பி னாலுமே வாடி உறைந்தனம்.

அசோமுகி மைந்தனாகிய வாதாவி தவம் செய்ததால் அவன்மீது அன்பு கொண்டு வரம் கொடுத்தார் அவனும் நலம் பெற்று நன்கு வாழ்ந்தான் அவன் மகன் கும்பன் கொடிய அரக்கன் செய்யும் கொடுமையால் நாங்கள் துன்புற்றோம்.

அசோமுகி பாலன் - வாதாவி. **தென்பு** - பலம் **கும்பன்** - வாதாவி மகன். **வம்பு** - வலிமை. **உறைந்தனம்** - தங்கினோம

185.

எங்க ளைப்புரந் தின்ப அருள்தரும்
மங்கை பங்கரிவ் வன்பரின் ஆண்மையைச்
சங்க ரித்திடும் தந்திரம் சாற்றினால்
பங்கம் விண்டு பலனடை வோமென்றான்.

எங்களைக் காத்து அருள் தரும சிவன் இக்கொடியோரின் செருககை அழிக்கக கூடிய வழியைக் கூறினால் எங்கள் துன்பம் தீர்ந்து பலனடைவோம்" என்று கூறினான் (தேவேந்திரன்)

புரந்து - காப்பாறறி. **மங்கை பங்கர்** - உமையை இடப்பாகம கொண்ட சிவன். **சங்கரித்திடும்** - அழிக்கும. **தந்திரம்** - வழி. **சாற்றினால்** - கூறினால் **பங்கம்** - குறை. **விண்டு** - தீர்ந்து

186. நாரதர் தேவேந்திரனுக்கு ஆறுதல் கூறுதல்

குரவ நாரதன் கூறுவன் கோத்தவர்
பரமன் தன்னரு ளாலவு ணன்பதி
உரமும் வேலையில் வீழ்த்தும் உபாயமும்
பரமன் அன்பிற் பண்ணுவனென் றேகினான்.

முனிவனாகிய நாரதரும் "சிவன் அருளால் வாதாவியின் ஊரும், வலிமையும் கடலில் வீழும் வழியைச் செய்கிறேன்" என்று கூறி விடைபெற்றார்.

குரவன் - தலைவன், முனிவன், குரு **அவுணன்** - அசுரன, **பதி** - ஊர், **உரம்** - வலிமை, **வேலை** - கடல், **உபாயம்** - வழி, **அருளால்** + **அவுணன்** + **பதி**, **பண்ணுவன்** + **என்று** + **ஏகினான்**.

187. நாரதர் சிவனிடம் சென்று வேதம் ஓதல்

வெள்ளி வெற்பில் வீற்றருள் ஈசனை
கள்ள நாரதன் கண்டு கரத்தினால்
வள்ளல் பாதம் வணங்கி மறையினை
உள்ளம் ஊன்றி உருகிநின் றோதுவான்.

வெள்ளி மலையாகிய கயிலாய மலையில் வீற்றிருக்கும் இறைவனைக் கள்ளத்தனம் வாய்ந்த நாரதர் பார்த்து அவன் பாதங்களை வணங்கி, உள்ளம் உருகுமாறு வேதம் ஓதினார்.

வெற்பு - மலை **வெள்ளி வெற்பு** - கயிலை மலை பனி உறைநது வெள்ளி போன்று காட்சி அளிப்பதால் கயிலை மலை, வெள்ளி வெறபு, வெள்ளியங்கிரி எனப்படும் நாரதர் எப்போதும் ஏதாவது தந்திரம் செய்து கொண்டே இருப்பதால் "கள்ள நாரதர்" என்றார் **வள்ளல்** - சிவன், **மறை** - வேதம

188. நாரதர் சிவனைத் துதித்தல்

ஆதி நாயகனே அகண்ட பூரணனே
அத்தனே அம்பிகை பாகா

சோதி யாய்நின்ற சுந்தரப் பொருளே
சுடலையில் நடித்திடும் பரனே
நீதி வெள்விடைமே லேறிய விமலா
நிமலனே ஒளிதரு நீற்றைப்
பாதியா மெய்யில் அணிந்தருள் பரனே
பரமனே யெனப்பர வினனால்.

"முதன்முதல் தோன்றியவனே ! எங்கும் நிறைந்தவனே ! தலைவனே ! உமையை இடப்பக்கம் உடையவனே ! ஒளி வடிவாய் நின்ற அழகிய பொருளே ! இடுகாட்டில் நடனமாடும் ஈசனே ! வெண்மையான இடபவாகனத்தில் ஏறிய குற்றமற்றவனே ! ஒளி மிகுந்த திருநீற்றை ஒருபக்க மேனியில் பூசியவனே ! பரமனே !" எனத்துதித்தார்.

ஆதி - முதல், **நாயகன், அத்தன்** - தலைவன் **அகண்டம்** - உலகம், ஆகாயம் அனைத்தும் **பூரணம்** - நிறைதல், **சோதி** - ஒளி, **சுந்தரம்** - அழகு, **சுடலை** - இடுகாடு, **வெள்விடை** - வெண்மையான காளை மாடு **விமலன், நிமலன்** - குற்றமற்றவன், **மலம்** - குறறம், **நீறு** - திருநீறு, விபூதி **மெய்** - உடல் **பரவினன்** - துதித்தான்

189. சிவன் நாரதரை வந்த காரணம் கேட்டல்

ஏத்திடப் பரமன் நாரதர் மீதில்
இனிதருள் புரிந்துமேல் இசைப்பார்
நாற்றிசை யதனில் புதுமைகள் ஏதோ
நவிலென நக்கனை இறைஞ்சி
தோத்திர முரைத்துத் தொகையிட முடியா
தொல்பதி யாவையும் அளித்துக்
கூற்றுவ னென்ன ஒருவனை இருத்திக்
குவலயம் அழித்திடும் கூத்தா.

நாரதர் துதியைக் கேட்ட சிவன் மகிழ்ந்து அவர் மீது அன்பு கொண்டு "நான்கு திசைகளிலும் ஏதேனும் புதுமை உண்டா? சொல்" என்றார் நாரதரும் சிவனை வணங்கி, அளவிட முடியாத பழைய நகரங்களை உருவாக்கி, யமன் என்ற ஒருவனையும் உண்டாக்கி எல்லா வற்றையும் அழிக்கும கூத்தனே !

நாற்றிசை - நான்கு + திசை. **நவில்** - சொல், **நக்கன்** - தலைவன **தொல்பதி** - பழமையான நகரங்கள, **கூற்றுவன்** - எமன், **குவலயம்** - உலகம்

190. நாரதர் அசுரனைப் பற்றிக் கூறுதல்

புல்லிய அவுணன் உமதடி ஏத்தப்
புந்தியின் மகிழ்ச்சிகூர்ந் துனது
வல்லியும் இடத்தில் வளர்ந்திட விடைமேல்
வந்தவன் வாட்டங்கள் அகற்றி
செல்வமும் பணியும் செழிப்புற நல்க
தேவரைச் சிறையினில் அடைத்தான்
அல்லலை அகற்றுற வேண்டுமென் றிரங்கும்
அருமுனிக் (கு) ஓதுவான் அரனும்.

அறபமான அசுரன் உன்னை வணங்கியதால் மகிழ்ந்து, உன் தேவியுடன் விடைமேல் வந்து அவன் துன்பம் தீர்த்துச செல்வம ஈந்தாய் ஆனால் அவனோ தேவர்களை யெல்லாம் சிறைவைத்தான் அவர்கள் துன்பம் நீக்க வேண்டும்" என இரங்கினார் சிவனும் நாரதரிடம் கூறுவார்

புல்லிய - அறபமான **புந்தி** - மனம் அறிவு **கூர்ந்து** - மிகுநது **வல்லி** - உமை **விடை** - காளை **அல்லல்** - துனபம் **அவுணன் + உமது + அடி + ஏத்தி** அவணனுமதடியேததி

191. சிவன் அரக்கன் நகர் பற்றி வினாவுதல்

நற்றவம் உயரும் நாரத அவுணன்
நகரினில் புதுமைய தெல்லாம்
சொற்றவ றாமல் உரைத்தருள் என்ன
சுரர்பணிந் தேத்திய தேவா
ரத்தின நகர மேருநகர் மயனால்
நாட்ட அந்நகர்க் கிணையுளதோ
பத்திசேர் மதிலும் கூட கோபுரமும்
பரிதியே விளங்குமா நகரம்.

"நல்ல தவமுடைய நாரதரே ! அசுரன் நகரிலுள்ள புதுமைகளை ஒன்று கூட விடாமல் கூறு" என்றார். நாரதரும், "தேவர்கள் பணிந்து வணங்கும் தேவனே ! ரத்தினாபுரி மேருமலை போன்றது மயனால் அமைக்கப்பட்ட அந்த நகரத்துக்கு இணையுண்டோ? வரிசை வரிசையாக மதிலும், கூடங்களும், கோபுரங்களும், சூரியனும விளங்கும் நகரம்

சொற்றவறாமல் - சொல + தவறாமல் **சுரர்** - தேவர், **பத்தி** வரிசை, **பரிதி** - சூரியன

192. நாரதர் வாதாவி பற்றிக் கூறுதல்

அரக்கன் வாதாவி வெள்ளியை இறைஞ்சி
அளவில்ஆ யிரக்குழா மவுணன்
பெருக்க மாயளிக்க பெருமலை எனவே
பின்னவன் துணைவரோ டுறைந்து
திருக்கிளர் கடல்சூழ் புவியெலாம் சூறை
செய்துதே வரைச்சிறை யிட்டே
உருகு பாலகரை ஏவல்செய் யென்ன
உளமகிழ்ந் திருந்தனன் மாதோ.

அரககனான வாதாவி சுக்ராசாரியை வழிபடடு அளவற்ற அரக்கர்களைக் கூட்டம் கூட்டமாய் அடைந்தான பெரியமலை போல் தன் துணைவருடன் தங்கி, செல்வம நிறைந்த பூமியெல்லாம் கொள்ளை அடித்து, தேவரைச் சிறையெடுத்து, அட்டதிக்கு பாலரை ஏவல் செய்து மனமகிழ்சசியோடு வாழ்கிறான்

வெள்ளி - சுக்கிராசாரி, **திரு** - செலவம, **சூறை செய்து** - கொள்ளை அடித்து

193. நாரதர் சிவனிடம் தேவர்களின் துன்பத்தைப் போக்குமாறு வேண்டுதல்

இனமயவர் மகளிர் அரக்கர்மா தேவல்
இசைந்திட எழிலினை அகன்றார்
அமையபொன் னுலக அதிசயத் தருக்கள்
அருநிதியங்கள் அகன்று மகவான்
உமையயி ராணிஉட லிழ்வுற் றரக்கன்
ஒண்மலர்ப் பதமுற்று வாடும்
சுமையகற் றிடும்ஆறு உரைத்தரு ளென்ன
சுந்தரப் பொருள் இயம்பும்.

தேவ மாதர், அரக்க மாதர் ஏவத் தொண்டு செய்து அழகிழந்தனர் தேவருலக மரங்களையும் செல்வங்களையும் இழந்த இந்திரனும், இந்திராணியும், அரக்கனுக் கேவல் செய்து உடல் இளைத்து விட்டனர் அவர்கள் அரக்கனின் பாதங்களை வணங்கி வாழும் வாழ்க்கையை அகற்ற வழி கூறுங்கள்" என்றார் சிவபெருமானும் கூறுவார்

இமையவர் - தேவா, தேவர் கணணிமைக்க மாடடார் ஆதலின் இமையோர் எனப்பட்டனர் **அதிசயத் தருக்கள்** - கற்பகம, பாரிசாதம் மந்தாரம், அரிச்சந்தனம் தேவதாரம், **அருநிதியம்** - நவநிதி - ஒன்பது, செலவம - சங்கநிதி, பதுமநிதி கசசபநிதி கறபநிதி முகுநதநிதி நந்தநிதி

நீலநிதி மகாநிதி மகா பதும நிதி. **மகவான்** - இநதிரன். **அயிராணி** - இந்திராணி. **சுமை** - துன்பம. **ஆறு** - வழி

194. சிவபெருமான் நந்தியிடம் உபாயம் கேட்டல்

நந்தியே ஈதென் புதுமை நாரதன்
நவின்றனன் நாமறி கிலமுன்
இந்தவா தாவி இதயமும் வாடி
எனைத்துதி செய்தனன் இரங்கி
சிந்தையில் துயரை அகற்றினேன் இந்த
தீவினை செய்வது முறையோ
தந்திரம் செய்யும் அவுணனை அடக்கும்
சாதகம் உரையென்று அறைவான்.

"நந்திகேஸ்வரனே ! இது என்ன விந்தை ! நாரதன் கூறுவது ஒன்றும் நாமறியவில்லையே ! இந்த வாதாவி மனம் வருந்தி என்னைத் துதித்தான் நானும் மனமிரங்கித் துன்பத்தை நீக்கினேன் இப்படிக் கெட்ட காரியங்கள் செய்கிறானே ! இது முறையோ? தீவினை செய்யும் அரக்கனை அடக்க ஒரு உபாயம் கூறு" என்றார் சிவன்.

நவின்றனன் - கூறினான். **சாதகம்** - வழி

195. நந்தியின் விடை

அந்திவண் ணன்தாள் அகத்தினில் இருத்தி
அகடியனே நீரறி யாத
விந்தைகள் உளதோ கள்ளனு மாகி
விளக்கது பிடிக்கவு மானீர்
முந்திய அவுணர் வினவிய வரமும்
மொழிந்திடும் உனது நன்மனதால்
சிந்தயே அறியும் தேவனே நீர்செய்
திருவிளை யாடல் காண்பதுவே.

அந்திவானம் போல் சிவந்த நிறமுடைய சிவனின் தாள் தொழுத நந்தி "நீர் அறியாத விந்தைகள் உண்டா? கள்ளனும் நீ ! கள்ளனைத் தேடி விளக்கெடுத்து ஓடுபவனும் நீ ! முன்பு அசுரனுககு வரம் கொடுத்த உன் மனமே அதனை நீக்கும் உபாயமும் அறியும நீர் செய்யும் திருவிளையாடலைக் காண்பதுவே எங்கள் வேலை" என்றார்

அகடியன் - உபாயம செயபவன்

196.

அஞ்செ ழுத்தான ஆதியே அவுணன்
அருந்தவப் புதுமையால் இரங்கி
மிஞ்சு வாழ்வை அளித்தனிர் நீரும்
வெஞ்சம னாதியை உதைத்து
பஞ்ச பாணனை விழியெரித் தெழுப்பும்
பரமனே உன்னருள் தன்னை
இஞ்சி செய்திடுமென நந்தியும் பணிய
ஈசனும் உவகையால் அறைவான்.

"நமசிவாய" என்னும் ஐந்தெழுத்தானவனே ! அரக்கன் செயத கடுமையான தவத்துக்கு இரங்கிப் பெருவாழ்வு அளித்தீர் யமனை உதைத்து மீண்டும் எழுப்பினீர் மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்து எழுப்பினீா உமதருளை நீரே போக்க வேண்டும்" என்று மேலும் நந்தி பணிவுடன் கூற இறைவனும் மகிழ்ச்சியோடு கூறுவார்

சமன் - யமன் **வெஞ்சமன்** - கொடிய எமன **பஞ்சபாணன்** - ஐந்து அமபுகளை உடையவன் முலலை, மா அசோகம், தாமரை, நீலம ஆகிய ஐந்து மலாகளைத தன் கருமபு விலலில் அமபுகளாக எயது காமத்தை உணடாககுபவன மன்மதன எனடதால அவனுககுப 'பஞ்சபாணன' என்று பெயர் **பஞ்சம்** - ஐந்து **பாணம்** - அமபு **பாணன்**

- அமபுகளை உடையவன், **இஞ்சி** செய் - மாறறு, **உவகை** - மகிழ்ச்சி, **அறைவான்** - சொலலுவான்

197. சிவன் கணங்களுக்குக் கட்டளையிடுதல்

நல்லகண நாதர் முகநாடி உரைசெய்வர்
அல்லவுணன் ஆதியர் அகந்தைகள் அடக்க
வில்லவலர் மிடுக்கர சியற்கை இடரான
வல்லவர்கள்சேதி வளமாய் உரைமின் என்றான்.

சிவகணநாதர்களின் முகம் பார்த்து இறைவன் கூறுவார் "இருள் போன்ற அக்கொடிய அரக்கர் செருக்கை அடக்க வேண்டும நீங்கள் சென்று வில் தொழிலில் வல்ல அவர்கள் மிடுக்கையும் அரசு செய்யும் தன்மையையும அவர்கள் செய்யும் கொடுமையையும் பார்த்து வந்து விபரமாகச சொல்லுங்கள்" என்றார்.

கணநாதர் - சிவகணங்கள், **அல்** - இருள், **அல் அவுணன்** - இருள் போனற அரக்கன, நல்லவன் அல்லாத அரக்கன் என்றும் பொருள் கொள்ளலாம், **அகந்தை** - செருக்கு

198. சிவகணங்கள் இரத்தினாபுரிக்குச் செல்லுதல்

இக்கணம் மற்றேகி அவ்வியக்கர் புகழோர்ந்தே
புக்குவம் எனத்தொழுது போந்தனர் களித்தே
அக்கணம் இரத்தினம் எனும்புரி அடைந்தே
நக்கனை மனத்தினில் இருத்தினர்க ளானார்.

சிவகணங்களுமே, "நாங்கள் இந்தக்கணமே சென்று அவ் இராட்சதர்களின் செயலை ஆராய்ந்து வருவோம்" என்று வணங்கி விடை பெற்றுச் சென்றனர் அப்பொழுதே இரததினாபுரியை அடைந்து இறைவனை மனத்தில் வைத்தார்கள்

இயக்கர் - அரககர் **ஓர்ந்து** - ஆராயநது, **புக்குவம்** - புகுவோம செல்வோம **களித்து** - மகிழ்ந்து, **நக்கன்** - சிவன்

199. அசுரன் செருக்கையும். தேவர்கள் இழிவையும் காணுதல்

மாசகலும் வெண்மையுரு மன்னும் நகரத்தில்
பேசவுணர் ஆதிகள் பலத்துறு செருக்கும்
வாசவர்கள் ஆதியரும் மாதரும் இளைத்தே
நீசருரு வானதும்மன் னேமிசைகள் கண்டார்.

குற்றமற்ற தூய்மையான நகரில் அசுரர்கள் செருக்கோடு இருப்பதையும், தேவேந்திரன் முதலானோரும், தேவ மாதரும் இளைத்து நீசர் போல் இருப்பதையும் பூமியில் பார்த்தார்கள்

மாசகலும் - மாசு + அகலும - குற்றம இல்லாத, **வாசவர்** - இநதிரர், **நீசர்** - கீழானவர், கடையா

200.

புண்டரீக வேதமறை மங்கைபுகழ் ஓத
சண்டனுளம் அஞ்சியிரு சாமரை யிரட்ட
கொண்டல்நிற வாதாவி வீரர்கொளும் ஆண்மை
மண்டலமெலாஞ் சிறையில் மன்னுவதும் கண்டார்.

தாமரை மலரில் வீற்றிருக்கும் வேத மங்கையாகிய கலைமகள் அசுரன் புகழை ஓதுவதையும், எமன் அஞ்சி இருபக்கமும் சாமரை வீசுவதையும், மேகநிறம் பொருந்திய வாதாவி வீரர்களின் செருக்கையும், ஏனைய உலகத்தார் அனைவரும் சிறையில் வாடுவதையும் பார்த்தனர்.

புண்டரீகம் - தாமரை, **மறை** - வேதம, **மங்கை** - சரஸ்வதி, கலைமகள் **சண்டன்** - எமன், **சாமரை** - கவரி, **கொண்டல்** - மேகம்

201. அரக்கர் நகரச் சிறப்பு காணுதல்

மாமதிலின் ஆடரங்கின் வாயில் சிகரத்தி
லேமகுடம் மின்னவும் இரவுபகல் இன்றி

மாமணி இடத்திலும் மலர்ப்பொழில் வகுத்தார்
சோமன் மண்டலத்துலவு தோரணமும் கண்டார்.

மதில், ஆடரங்குகளின் வாயில், சிகரங்கள் எங்கும் தங்கக் குமபங்கள் ஒளி வீசுவதையும், இரவு பகல் வேறுபா டில்லாமல் இரத்தின மணிகள் ஒளிவீசுவதையும், சோலைகள் நெருங்கியிருப் பதையும், சந்திர மண்டலம் வரை தோரணங்கள் தொங்குவதையும் கண்டனர்,

மகுடம் - குமபம, **சோமன்** - சநதிரன்

202. அரக்கர் மாளிகை காணுதல்

அரக்கருறை மாளிகை அகத்தில் அளவாகா
பெரியமலை மேருவின் பேசவரி தன்னார்
அரக்கியர் ஸ்தனங்கள் அளவாகு மதுபேசில்
முருக்குவர விலங்குயிர் முடித்திட வடிப்பார்.

அரக்கருடைய மாளிகை அளவைக் கூறினால் மேருமலை கூட ஒப்பாகாது. அரக்கியர் மார்பு நீளம் எவ்வளவு என்றால் கயிறாக முறுக்கி விலங்குகளை அடித்துக் கொல்வர் அவ்வளவு நீளம்.

ஸ்தனம் - மார்பு

203. அரக்கர் உருவம் காணுதல்

பந்திமலை யேஅவுணர் பாரினில் உலாவும்
விந்தையும் முகங்கள் முகம்வே றுருவுமன்ன
நந்திஅரி சீயமும் தகரெலி கழுகு
கந்துகம் கழுதையும் என்றுருவம் கண்டார்.

உலகத்தில் வரிசையாக உலவும் மலைகள் போன்றனர் அசுரர் அவர்கள் முகங்கள் வேறு வேறு உருவங்களாக இருந்தன மாடு. சிங்கம், புலி, ஆடு, எலி, கழுகு, குதிரை, கழுதை என்று பல முகங்களையுடைய உருவங்களைச் சிவகணங்கள் பாாத்தனர்.

பந்தி - வரிசை, **நந்தி** - மாடு **அரி** - **சீயம்** - சிங்கம **தகர்** - ஆடு, **கந்துகம்** - குதிரை

204.

ஆயிரம் புயங்களும் ஐந்நூறு சிரமான
தாயிரம் சிரங்களிரண் டாயிரம் கரங்கள்
மாயிரு விசும்பினை மறைக்குமுட லென்றே
பேயவுணர் ஆண்மை எவர்பேசுவர் மாதோ !

"ஆயிரம் தோள்கள், ஐந்நூறு தலைகள், ஆயிரம் தலைகள், இரண்டாயிரம் கைகள் ஆகாயம் வரை மறைக்கும் உடல் என்று பேய் போன்ற அரக்கர்களின் ஆண்மையை யாரால் பேச முடியும்?"

புயம் - தோள், **சிரம்** - தலை, **கரம்** - கை

205. சிவகணங்கள் அரக்கர் சேனையைப் பார்த்து அதிசயித்தல்

ஆதியெனும் சேடனும் அளக்கவரி தான
தீதவுணர் சேனைநிலை ஈசரும் களிப்பர்
சோதியர னின்அருள்கள் சொல்ல முடியாதென்
றோதியொரு வர்க்கொருவர் உரைத்ததி
சயிப்பார்.

"ஆதிசேடனாலும் அளக்க முடியாத சேனையை இத்தீய அரக்கர் பெற்றுள்ளனா இதனைச் சிவன் பார்த்தாலும் மகிழ்வார் ஒளி பொருந்திய சிவனின் அருளை யாராலும் சொல்ல முடியாது" என்று ஒருவர்க்கொருவர் கூறி அதிசயித்தனர்

ஆதிசேடன் - ஆயிரம தலையுடைய அரவம திருமாலின படுககை பூமியைத தாங்குவது

206. சிவகணங்கள் வாதாவியின் கொலுமண்டபம் காணுதல்

வங்கைமிகு வாகிய வாதாவி அவன்தேவி
இங்கித விலாசமும் எழில்கொலுவின் நேரும்
மங்கையர் நடனமிட வானவர் கள்பாட
துங்கமிகு வாணையொடு சூழ்வனவும் கண்டார்.

பகைமிகுந்த வாதாவியின் மனைவியின் அழகும், அவர்கள் கொலுவிருக்கும் நேர்த்தியும், நடன மங்கையர் நடனமும், தேவர்களின் பாடலும், மேன்மை மிகுந்த யானைகள் கூட்டமும் கண்டனர்

வங்கை - பகை **விலாசம்** - அழகு, **துங்கம்** - மேன்மை

207. வாதாவியின் மனைவி மக்களைக் காணுதல்

விரிவுதிண் புயம்விளங்கு வேந்தவுணன் பாலர்
விரிமலர் வதனமும் மின்கொடி மின்னார்கள்
விரிமலர்ச் சரங்களென மன்கரம் எடுத்தே
விரிவுற அணியும் விநோதமும் அறிந்தார்.

வலிய புயத்தை உடைய வாதாவியின் புதல்வர்களின் மலர் போன்ற முகத்தையும், மின்னல் கொடியொத்த பெண்கள் மலர்ச்சரங்களைப் போல் வாதாவியின் கைகளை எடுத்துத் தோளில் அணிவதையும் பார்த்தனர்.

சரம் - மாலை **மன்** - மன்னன, வாதாவி

208. தேவமாதரைப் பார்த்துக் கூறுதல்

நறும்புகை அணிந்தகுழல் நாரியர்கள் இன்று
நறும்புகை அற்று நரம்பென உதிர்ந்தார்

நறும்பணி யணியுடல் ஈமொய்க் கவசம்
நறும்பகை வரேவலை நடத்தினர்க ளென்றார்.

"சாம்பிராணி அகில் ஆகியவற்றைத் தூபங்களில் போட்டுப் புகை அணிந்த கூந்தலையுடைய தேவமாதர் இன்று நரம்புகள் போல உள்ளனர். ஆபரணங்களை அணிந்தவர்கள் இன்று உடல் ஈ மொய்க்க இராட்சதர் இட்ட வேலைகளைச் செய்கின்றனர்" என்று (சிவகணங்கள்) பேசிக்கொண்டனர்

நாரியர் - பெண்கள், **பணி** - ஆபரணம

209. தேவேந்திரன், முனிவர்கள் நிலை காணுதல்

நற்றவம் புரியும்மக வானுளமும் நாணி
நற்றவம் புரியவுணன் நற்பதம் பணிந்தார்
நற்றவ முனிவர்கள் நயங்களை அகற்றி
நற்றவ மென்னாதனைத் தொழுதிடவும் கண்டார்.

தவம் புரியக்கூடிய இந்திரன் உள்ளம் வெட்கி, தவம்புரிந்து செல்வம் பெற்ற வாதாவியின் பாதங்களைப் பணிவதையும், நல்ல தவத்தையுடைய முனிவர்கள தவங்களை விட்டு, வாதாவியைத் தொழுவதையும் பார்த்தனர்

மகவான் - இந்திரன்

210. திசைக் காவலர் நிலை அறிதல்

எண்டிசையின் காவலர் எழிலிசையும் குன்றி
எண்டிசை பரவவவ் வியக்கர் நகரத்தில்
அண்டியகம் வாடினர்க ளாகியே அரன்தாள்
அண்டியுரை செய்வம்என் றகத்தினில்
உணர்ந்தார்.

எட்டுத்திசைக காவலரும் அழகும் புகழும் குன்றி, எட்டுத்திசை போற்றும அவ்வரக்கர் நகரில் உள்ளம் வாடி வாழ்வதைப் பார்த்து "இதனையும் சிவனிடம் கூறுவோம்" என நினைத்தனர்.

அண்டி - அடைநது

211. வாதாவியின் தம்பியர் சூறையாடுவதைக் காணுதல்

அம்புவி அவுணர்கோன் அனைவன் வாரதன்
வம்புகை குண்டலன் விசைம கோனுடன்
தம்பி யென்றுணர் மகோதரனும் தாட்டிலான்
அம்புவி அடங்கலும் சூறை ஆடுவான்.

அழகிய புவியை ஆளும் அரக்கர் தலைவன் வாதாவியை ஒத்த தம்பி வாரதன், அக்கினி யெழும்பும் கண்ணையுடைய குண்டலன், வெற்றியுடைய மகோன், மகோதரன் ஆகியோருடன் இவ்வுலகெங்கும் சென்று சூறையாடுவதைப் பார்த்தனர்

அம் - அழகிய, **புவி** - பூமி, **வன்புகை** - வலிய புகையெழும்பும, **விசை** - வெற்றி, வேகம், **தாட்டிலான்** - தடையின்றி, **சூறை** - கொளளை

212.

உடுக்கணம் உதிர்ந்திட உரகர் ஏங்கிடப்
படைத்தலைவ ரோடு பதியகன்று பண்புடன்
நடுக்கடல் துயின்றருள் நார ணன்பதி
திடுக்கிடச் சூறையாய்த் திரும்பி வந்தனர்.

நட்சத்திரக் கூட்டம் உதிரவும், பாம்புக் கூட்டம் ஏங்கவும், படைத்தலைவர்களோடு ஊரை விட்டுச் சென்று நடுக்கடலில் துயிலும் திருமாலின் வைகுண்டமும் திடுக்கிடுமாறு சூறையாடுவதைப் பார்த்தனர்

உடு - நட்சததிரம, **உரகர்** - நாகர், பாமபு வடிவினா **பதி** - ஊர்
நாரணன் - திருமால

213. சிவனையும் சிறைப் பிடிக்கும் வாதாவியின் எண்ணம்

அரன்பதி நாளைபோய்ச் சூறை ஆடியே
பரமனைப் பிடித்துநம் பதியின் வாசலில்
வரமளித் திடுமென வைத்து ருக்கினால்
பெருந்தவ மாமெனப் பிதற்றல் ஆயினன்.

"நாளைக்குச் சிவனுடைய கயிலாயம் சென்று, கொள்ளை அடித்துச சிவனைச் சிறைப்பிடித்து நம் நகரின் வாசலில் தினம்தோறும் வரமளித்தக் கொண்டே இரும் என வைத்துவிட்டால் இதுவே நான் செய்த தவம்" என்று வாதாவி பிதற்றுவதைச் சிவகணங்கள் கேட்டனர்

214. சிவகணங்கள் கயிலைக்குத் திரும்புதல்

அரன்கண நாதரும் அகத்தில் உற்றனர்
உரங்கள்போல் கண்டிலம் ஒருவ ராலிவர்
சிரந்துணி யாரெனச் சிந்தையில் எண்ணியே
பரமனுக் குரைக்கவே பறந்திட் டார்களே.

சிவனுடைய கணநாதர்கள் இவையனைத்தையும் மனத்தில் வைத்தனர் "இவனுடைய வலிமை போல் வேறெங்கும் காணோம், பூமியில் யாரும் இவன் தலையைக் கொய்ய மாட்டார்" என மனத்தில் நினைத்து, இவற்றை யெல்லாம் சிவனுக்குரைக்கச் சிவலோகத்துக்குப் பறந்தனர்

உரம் - வலிமை திமிர் **சிரம்** - தலை, **துணியார்** - வெடட மாட்டார்

215.

சுத்திய மதிலும் தோரணங்கொள் வீதியும்
சத்தசா கரமும் தரணியும் தாண்டினர்
சித்தமீ துவகையாம் செம்ம லாகிய
அத்தன்வாழ் கிரியினில் அணுகி னாரரோ.

சுற்றியுள்ள மதில்களைக் கடந்து, தோரண வீதி கடந்து ஏழு கடலும், புவியும் தாணடி மனத்தில் மகிழ்ச்சியளிக்கும் சிவன் வாழும் கயிலை மலையை நெருங்கினார்கள்

சுறறிய என்பது எதுகைககாகச் சுத்திய என்று ஆனது **சத்தம்** - சபதம - ஏழு **சாகரம்** - கடல் **தரணி** - உலகம, சித்தம - மனம், **உவகை** - மகிழ்சசி, **அத்தன்** - சிவன், **கிரி** - மலை, **அணுகினர்** - நெருங்கினர், **அரோ** - அசை

216. சிவகணங்கள் சிவனிடம் தாங்கள் கண்டதைக் கூறுதல்

நாரியை இடத்தினில் சுமந்த நாயகன்
மூரி முப்புரமெரி முத்தன் கீர்த்தியே
சேரவே அவுணன் தீய அந்நகர்
சீரினை ஓர்ந்தனம் செய்ய பாதனே !

"உமையை இடப்பக்கம் கொண்டவனே ! சிரித்து முப்புரத்தை எரித்தவனே ! வாதாவி உன்னால் அடைந்த புகழினால் உணடாக்கிய இரத்தினாபுரியின் சிறப்பைக் கண்டு வந்தோம் சிவந்த பாதங்களை உடையவனே !

நாரி - பெண் இஙகு உமை **மூரி** - சினநது சிரித்து **முப்புரம்** - தாருகாடசன், வித்யுனமாலி கமலாட்சன் ஆகிய மூவரின் கோடடை 98-ஆம பாடலின் உரையில் காணக

217. வாதாவி சிவனைச் சிறைபிடிக்க எண்ணியதைக் கூறுதல்

பதியு டன்உமைப் பிடித்திடப் பகர்ந்தனன்
சதிசெயும் அவுணரைச் சாட லாகுமோ
நதியணி நாதனே ! நாளை நம்பதி
இதமிலாச் சூறைகள் ஆட எண்ணினான்.

"ஊருடன் உன்னையும் பிடிக்கச் சதி செய்கிறான் அவ்வசுரன். கங்கையைத் தலையில் அணிந்தவனே ! நாளை நம் ஊருக்கு வந்து சூறையாட எண்ணியுள்ளான் சதி செய்கின்ற அவனை விடலாமா?" என்றனர்

பதி - ஊர், இங்கு கயிலை **சதி** - சூழ்ச்சி, **சாடல்** - அழிக்க, **நதி** - ஆறு, இங்கு கங்கை **சூறை** - கொள்ளை

218. அரக்கர்கள் பற்றிக் கூறுதல்

கரிமுகம் புலிமுகம் கரடி வானரம்
அரிமுகம் ஆயிரம் மடங்கல் ஒன்றதாம்
பரிமுகம் படைத்தவர் பகர்க ணக்கிலார்
புரியவன் செய்வது புதுமை கேட்பதோ.

"யானை முகம், புலி முகம், கரடி முகம், குரங்கு முகம், யாளி முகம், ஆயிரம் சிங்கம் சேர்ந்த முகம், குதிரை முகம் எனப் பல முகம் படைத்த அரக்கர் எண்ணில் அடங்கார். இரத்தினாபுரியை உடைய அவ்வரக்கன் செய்யும் புதுமைகளைக் கேட்பீராக"

கரி - யானை **வானரம்** - வால் + நரம் - குரங்கு, **அரி** - யாளி **மடங்கல்** - சிஙகம **பரி** - குதிரை **பகர்** - சொல்ல

219.

ஓரசு ரன்செயல் உவரி குன்றினால்
பேரசு ரர்குழாம் பேச வல்லதோ

நேரிழை யார்தனம் நீளம் ஐம்பது
தூரயோ சனையதாத் துன்பம் செய்குவார்.

"ஓர் அசுரன் குடிப்பதாலேயே கடல் வற்றும் என்றால், அவ்வளவு அசுரர் செயலைக் கூற இயலுமா? பெண்களின் தனம ஐம்பது யோசனை தூரம் நீளும் அதனால் அவர்கள் மிருகங்களையே கொல்லுவர்".

உவரி - கடல **குன்றும்** - வற்றும **நேரிழை** - ஆபரணம், இங்கு ஆபரணம அணிந்த அரக்கியா **தனம்** - மார்பு **யோசனை** - ஒரு குறிப்பிட்ட தூரம்

220. நகரம் பற்றிக் கூறுதல்

பொன்னின் நாடெனப் புகழ்ச்சி செய்குவார்
மின்னொளி மதிலொடு மேடையும் உள்ளது
வன்னமாம் சித்திர வீதி வண்மையும்
மன்னிய மயனவன் மாண்பினிற் செய்தனன்.

"இரத்தினாபுரியைத் தேவலோகம் என எல்லோரும் புகழுவர் மின்னல் போல் ஒளி வீசும் மதில்களும், மேடைகளும், அழகிய சித்திர வீதிகளும் மயன் மிகச் சிறப்பாகச் செய்து அமைத்துள்ளான்"

பொன்னின் நாடு - தேவருலகம் **மன்னிய** - நிலைபெற்ற

221. தேவர்கள் நிலை பற்றிக் கூறுதல்

சந்திரா தித்தர் மதிலிற் சார்ந்திடார்
இந்திரன் பிரமன்மால் இதயம் குன்றினர்
அந்தகன் பதியிலும் அவுண ராபதி
நிந்தைசெய் திடுவனோ நிருதர் மாய்ந்திடார்.

"சந்திரனும் சூரியனும் இரத்தினாபுரி மதிலின் பக்கம் கூட போக அஞ்சுவர். இந்திரன், பிரமன், திருமால் அஞ்சி ஒடுங்கி

உள்ளனர் எமலோகத்திலும் இடையூறு செய்வான் என அஞ்சி எமன் அவர்கள் யாருடைய உயிரையும் பிடிப்பதில்லை எனவே எந்த அரககருமம இறக்க மாட்டார்"

சந்திராதித்தர் - சந்திரன் + ஆதித்தர் **அந்தகன்** - எமன். **அந்தகன் பதி** - எமலோகம் **அவுணராபதி** - வாதாவி **நிந்தை** - தீங்கு **நிருதர்** - அரக்கர் **மாய்ந்திடார்** - இறகக மாடடாாகள்

222. யாரால் மடிவாரோ எனல்

அவுணரின் திணியினை அகத்தில் எண்ணினால்
பவணயில் எம்முயிர் பதைக்கு தையனே !
புவனரட் சகனார் புந்தி மாய்ந்திடார்
எவன்வலி யால்மடிந் திடுவரோ என்றார்.

"அந்த அரக்கர் கூட்டத்தை நினைத்தாலே எங்கள் உயிர் பதைபதைக்கிறது உலகத்தைக் காப்பாற்றும் திருமாலாலும் அவர்களை அழிக்க முடியவில்லையெனில் யாருடைய வலிமையால் இறப்பார்களோ?

திணி - கூட்டம் **அகம்** - மனம **புவனரட்சகனார்** - உலகம் காக்கும் திருமால்

223. நாரதன் சொன்னது மெய்யெனல்

கொன்றைசூ டினனடி குலவி ஏத்தியே
நன்றிசெய் நாரதன் நவின்ற யாவையும்
மன்றலந் தொடையணி மாது பங்கனே
இன்றம ரர்க்கருள் ஈயு மென்றனர்.

"மணம் பொருந்திய மாலை யணிந்த உமாதேவி பங்கனே கொன்றை மாலை அணிந்த உமதடியை வணங்கி, நன்மை செய்யும் நாரதன் கூறிய அனைத்தும் உண்மைதான் ! தேவர்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று சிவகணங்கள் கூறினர்

நன்றி - நனமை **மன்றல்** - மணம் **அம்** - அழகிய, **தொடை** - மாலை **மாது** - பெண இங்கு உமை **பங்கன்** - பங்கில் கொண்டவன, **ஈயும்** - தாருங்கள

224. சிவன் நாரதருடன் ஆலோசனை செய்யத் தொடங்குதல்

அத்தியின் தோலணி அரனிவ் வாசகம்
உற்றவை உணர்ந்துணர்ந் துவகை ஆகினர்
நற்றவ முனியொடு நவிலும் ஈசனும்
சொற்ற ஆலோசனை சுருக்கிச் சொல்லுவான்.

"யானைத் தோலணிந்த சிவன் இவ்வுரை கேட்டதும், நடந்தவற்றை அறிந்து, மகிழ்ந்து நல்ல தவமுடைய நாரத முனிவரோடு செய்யும் ஆலோசனையை இனிமேல் சுருக்கிச் சொல்லுவேன்" என்று சனகர் அத்திரிக்குக் கூறினார்

அத்தி - யானை **அரன்** - சிவன் **நற்றவமுனி** - நாரதன் **நவிலும்** - கூறுவான் **சொற்ற** - சொன்ன

9. சிவனாலோசனைச் சருக்கம்

225. சிவன் தன் அவையோருடன் வீற்றிருத்தல்

அந்தமா விசும்பு படர்ந்திடும் அவனி
அளித்திடும் அயன் சிருட்டியினால்
உந்தியூர் வனதத் துவநடப் பனவோ (டு)
உயர்பற வைகள் முதலினுக்குந்
தந்தையாய்க் காக்கும் தயாபரன் அடியைச்
சார்ந்திடும் கணங்களும் உயர்ந்த
நந்திநா ரதர்கள் பதஞ்சலி முதலாய்
நாடிட நாதன்வீற் றிருந்தான்.

ஆகாயம வரை விரிந்த அழகிய பூமியில் பிரமன் படைதத ஊர்வன, தத்துவன, நடபபன, பறபபன அனைத்துக்கும, தந்தையாய் இருந்து காக்கும் கருணைக் கடலான சிவனடியைச் சார்ந்திருககும் சிவகணங்களுடனும், நந்திகேசுவரன், நாரதன், பதஞ்சலி முதலானோருடனும் சிவன் தன் அவையில் வீற்றிருந்தார்

அந்தம் - அழகு **விசும்பு** - ஆகாயம **அவனி** - உலகம **அயன்** - பிரமன் **சிருட்டி** - படைப்பு **தயாபரன்** - கருணையுளளவன், இஙகு சிவன் **நாடிட** - விரும்பிட சூழ்ந்திட

226. தேவர்கள் யாவரும் அவ்விடம் வருதல்

கருணையால் இமையோர் கரியவன் கஞ்சன்
காலனோ டஷ்டபா லகரும்
வருகவே நினைந்தார் அவரவர் அவுணர்
வாள்விழி துஞ்சுதல் காத்தே
பெருமைநா யகன்தன் அடியிணை சார்ந்து
பிஞ்ஞகா எங்களைக் காத்த
மருமலர் பாத முயலகற் குதவு
மாறுபோல் அளித்தருள் என்றார்.

தேவர்கள், திருமால், பிரமன், எமன், எட்டுதிசை பாலகர் அனைவரும் சிவன் அவைக்கு வர எண்ணினர் இறைவன் கருணையால் அவரவர் ஏவல் செய்யும் அசுரர் கண் உறங்க அந்த நேரம் பார்த்து அனைவரும் சிவனை அடைந்தனர் அடைந்து "எங்களைக் காத்த மணம் மிக்க மலர் போன்ற பாதங்களை உடையவனே ! முயலகனுக்கு அருள் செய்தது போல் எங்களுக்கும் அருள் செய்வீராக" என்று வேண்டினர்

கரியவன் - திருமால், கருமை நிறமுடையதால் கரியவன் எனப்படடார் **கஞ்சம்** - தாமரை, தாமரையில் வீற்றிருப்பவர் ஆதலால் பிரமன கஞ்சன் எனபபட்டாா, **காலன்** - எமன, **துஞ்சுதல்** - தூங்குதல்

227. சிவன் அனைவரையும் "நீங்கள் ஓர் அரக்கனுக்கு ஏவல் செய்யலாமா"? எனக் கேட்டல்

யாவரும் கயிலை அடைந்திடும் அளவே
ஆங்கவர்க் கரனருள் புரிவார்
தேவரே மாலே செய்யபங் கயத்துச்
சேர்ந்திடும் தேவரே உலக
சீவனை எல்லாம் கவரும்அந் தகனே
திவலைசூழ் வாரிமேல் அவுணன்
கோவிலில் குடியாய் இருந்திட்டு அவனாற்
குறித்தவை செய்திட லாமோ?.

எல்லோரும் கயிலையை அடைந்ததும், சிவன் அவர்களை நோக்கி, "தேவர்களே ! திருமாலே ! சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனே ! உலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் கவரும் யமனே ! அலை நிறைந்த கடல் நடுவே அரசு செய்யும் அரக்கனின் அரண்மனையில் போய் இருந்து கொண்டு அவன் சொல்லும் பணிகளையெல்லாம் செய்வது உமக்கு அழகா?" என்று கேட்டார்.

செய்ய - சிவந்த **பங்கயம்** - தாமரை **சீவன்** - உயிர் **அந்தகன்** - எமன் **திவலை** - நுரை அலை, **வாரி** - கடல், **கோவில்** - அரண்மனை

228. தேவர் வேண்டுகோள்

ஐயனே அரனே அடியவர்க் கெளியாய்
அத்தனே அந்தி வண்ணாநின்
செய்யபங்க கயத்தாள் தொழுதிடும் எங்கள்
தீவினை அகற்றிடும் தேவே

வையகம் சூறை கவர்ந்தவா தாவி
வலிதனை அடக்குமோர் சூழ்ச்சி
துய்யனே உரையு மெனச்சுரர் மிகவும்
துதித்திருந் தார்களக் காலை.

"சிவனே! அடியவாக்கெளியனே! ஐயனே! அந்திக்காலச செவ்வானம போன்ற நிறமுடையவனே ! உனனுடைய சிவந்த தாமரை போன்ற பாதஙகளைத் தொழும எங்கள தீவினைகளை அகற்றிடும் , தேவா! தூய்மை யானவனே! உலகம் முழுவதையும் சூறையாடிய வாதாவியின் வலிமையை அடக்குவதற்கு ஒரு வழி கூறுங்கள்" என்று தேவர்கள துதி செய்தார்கள் அப்போது

பங்கயம் - தாமரை **சுரர்** - தேவர்

229. சிவன் தேவர்க்கபயம் அளித்தல்

அத்தனும் உளத்தில் அடக்கிடா உவகை
ஆகியே அமரருக் கருள்வார்
சித்தமீ துறையும் தீதெலாம் அகற்றிச்
செம்மலையினிற் சிறப்புடன் அமர்வீர்
அத்திசூழ் அவுணன்பா லணுகா தீரென
அபய ஹஸ்த மளித்து
உத்தமன் அடியைத் துதித்தனர் இமையோர்
உவகையாம் கடலமிழ்ந் தனரே.

சிவனும் உள்ளத்தில் மகிழ்ச்சியுடன் "உங்கள் துன்பமெல்லாம் நீங்கி மேருமலையில் சிறப்போடு அமருங்கள் ! வாதாவியிடம் செல்ல வேணடாம்" என்று அபயம் அளித்தார் தேவர்களும் சிவன் அடியைத் துதிதது மகிழ்ச்சிக கடலில் மூழ்கினார்கள்

அத்தி - தீமை **ஹஸ்தும்** - கை

230. சிவன் சித்ரகுப்தனிடம் வாதாவியின் வாழ்நாள் கணக்கை வினாவுதல்

அப்பொழு தரனும் கொடிய வாதாவி
அவனிவாழ் ஆண்டுகண் டுரைக்கும்
கைப்பிடி கணக்கு சித்திர குப்தனைக்
கருத்தினில் நினைத்திடக் கடுகி
மைப்படு கின்ற அரனடி இறைஞ்ச
மறலியின் கணக்கனை நோக்கி
இப்புவி அனைத்தும் சூறைக்கோ ளவுணற்
கெவ்வளவு ஆண்டினி யென்ன.

சிவன், வாதாவி இபபுவியில் வாழும் நாள் எவ்வளவு என்று கணக்குப் பார்க்க, சித்ர குப்தனை நினைத்தார் நினைதத மாத்திரத்தில் சித்ர குப்தன் விரைந்து வந்து சிவனின் திருவடியை வணங்கினான் சிவன், எமனின் கணககனான சித்ரகுப்தனை நோக்கி, "இப்பூவுலகம் அனைத்தையும் கொள்ளை கொண்ட அசுரனுககு இன்னும எவ்வளவு ஆண்டு வாழ்நாள் உள்ளது?" என்று கேட்டார்.

அவனி - உலகம, **சித்ரகுப்தன்** - "யார் யார் எனனெனன புண்ணிய பாவம செயகின்றனர்? யாருக்கு எப்போது ஆயுள் முடிகிறது" என்று கணககு பார்ப்பவன், **கடுகி** - விரைந்து, மைப்படுகின்ற - கழுத்து கருத்த தேவாமிதம் எடுககப் பாறகடலைத தேவரும அசுரரும கடைந்த போது ஆலகாலவிடம தோனறியது தேவாகளைக காக்க அதனைச் சிவன் உண்ணும போது பாாவதி கழுத்தைப் பிடித்ததால விடம கழுததிலேயே தங்கியது எனவே மைபபடுகண்டர் ஆனார் **மறலி** - எமன்

231. சித்ரகுப்தன் "தேவ ஆண்டுகள் ஆயிரம் வாதாவிக்கு. அது முடியும் தறுவாய்" எனல்

கணக்கினில் தெளிந்தே கழறுமின் என்ன
கடவுளை இறைஞ்சியே மொழிவான்

இணையிலா தேவ வருஷம் ஆயிரம்
இவனுக்கிங்க ணுயர்ந்தவர் இன்றி
பணியினில் துயின்றோன் வென்றிட முடியாப்
பரமனே பண்டருள் அளித்த
குணமுள ஆண்டும் குறுகின தினிசெங்
கோல்களும் தீர்ந்தன வென்றான்.

சித்ரகுப்தனிடம் "கணக்குப் பார்த்துக் கூறு" என்ற சிவன் மொழிய, கடவுளை வணங்கிய சித்ரகுப்தன், "இவனுக்கு இணையற்ற தேவ வருடம் ஆயிரம் உண்டு, இவனை விட பூமியில் உயர்ந்தவர் யாருமில்லை, பாம்பணையில் துயிலும் பரமனாலும் இவனை வெல்ல முடியாது என்று நீரே வரமளித்தீர் அப்படி நீர் அளித்த ஆண்டுகளும் முடியப் போகின்றன இவன் ஆட்சியும் முடியப் போகிறது" என்று கூறினான்

கழறுமின் - கூறுங்கள **பணி** - பாம்பு

232. சிவன் பிரம தேவனிடம் கேட்டல்

கமலனை நோக்கிக் கழறுவான் அந்த
கயவன்தாய்க் கருவு தித்தது
அமையுள மிசையே எவன்கரத்தால்
அடங்குவான் அறையென வேதன்
விமலனை இறைஞ்சி விதித்தநூ றாண்டில்
வெய்யவன் சுதனுல கடைவன்
சமன்தனை உதைத்த தாளனே உம்மால்
தழைத்தது ஆயிரம்மிசை என்றான்.

சிவன் பிரமனைப் பார்த்து "பிரமனே ! இக்கயவனைத் தாய் வயிற்றில நீர் உண்டாக்கிய போது இவனுக்கு எவ்வளவு ஆண்டு ஆயுள் கொடுத்தீர்? இவன் எப்படி இறப்பான் என விதித்தீர் கூறும்"

என்றார் பிரமனும் சிவனை வணங்கி "எமனை உதைத்த காலையுடையவனே ! நான் இவனுக்கு நூறாண்டுதான் விதித்தேன் நூறாண்டுகள் முடிந்ததும் சூரியன் புதல்வன் யமனின் உலகடைய விதித்தேன் தேவரீர்தான் இவனுக்குத் தேவ ஆண்டு ஆயிரம் அளித்தீர்" என்றான்

கமலன் - தாமரையில் வீற்றிருப்போன, பிரமன் **கமலம்** - தாமரை, **கழறுவான்** - கூறுவான் **கயவன்** - கீழானவன், **மிசை** - ஆண்டு, ஆயுள **வேதன்** - பிரமன் **விமலன்** - குறறமற்றவன், சிவன. **வெய்யவன்** - கதிரவன் **சுதன்** - மகன் **சமன்** - யமன

233. பிரமன் சிவனிடம் "எல்லாம் நின் செயல்" எனல் சிவன் திருமாலிடம் "எல்லாம் உன் செயல்" எனல்

சங்கரித் திடுவான் அறிந்திலம் இசைந்த
சங்கரி பாகனின் உள்ளமே
எங்கள்பெம் மானே இணையடி இறைஞ்ச
இன்பமாய் அருள்மழை சுரந்து
செங்கண்மால் வதன நோக்கியே உரைப்பார்
செகமெலாம் உனதருள் மாய்கை
தங்கிய கபட நாடக சூத்திர
தயித்தியற் காலனே என்றார்.

"அவனை அழிக்கும் வழி தெரியவில்லை நீங்கள் தாம். ஏதேனும் செய்ய வேண்டும் உமையிடப்பாகனே" என்று பிரமன் கூற சிவனும் அருள்மழை பொழிந்து திருமாலைப் பார்த்து, "எல்லாம் உன் செயல் நீ கபட நாடக சூத்திர தாரி" என்றார்

சங்கரித்திடுவான் - அழிபபதற்கு **சங்கரிபாகன்** - உமையை இடபபககம கொணடவன் **வதனம்** - முகம **செகம்** - உலகம, **கபடம்** - வஞ்சனை

234. திருமால் வாதாவியை அழிக்க வழி கூறுதல்

என்றிடத் திருமால் அருளினில் தெளிந்தே
இயம்புவார் அத்தனே கரத்தின்
மின்திகழ் சிலையால் மடிந்திடான் அவன்பால்
மேவிட வேலினால் ஆகா
வொன்றிய புவன கதிர்திசை அதனில்
உயர்தவம் புரிசம்பு முனியே
நன்றுள மகத்தி லுன்தழல் விழிநீர்
நலங்கிட வுதிக்கும் நாயகனே.

திருமால் தன்னருளால் அறிந்து கூறத்தொடங்கினார் "ஐயனே! அவன் உங்கள் கரத்திலுள்ள ஒளிமிக்க வில்லாலும் இறவான் அவனிடம் செல்ல வேலன்கை வேலாலும் இயலாது பூமியின் ஒளிபொருந்திய கிழக்குத்திசையில் சம்பு முனிவர் என்பவர் தவம் செய்கிறார். அவருடைய யாகத்தில் நீர் உம் நெற்றிக் கண்ணிலிருந்து விடும் நீரில் ஒரு தலைவன் உதிப்பான்."

மின் - ஒளி **திகழ்** - விளங்கும் **சிலை** - வில் **மடிந்திடான்** - அழிய மாட்டான **கதிர்திசை** - கிழக்குத்திசை **மகம்** - யாகம், **தழல்விழி** - நெறறிக்கண் **உதிக்கும்** - தோன்றும்

235. வன்னியனால் மடிவான் எனல்

வன்னிய பூமன் சிலையினால் மடிவன்
மற்றொ ருவரால் மடியான்
பன்னகம் சூடும் பரமனே என்னால்
பகர்ந்திட முடியுமோ உம்மால்
இந்நிலை அடைந்தான் உன்னையும் ஆள்வன்
இப்பொழு தேதவ முனிபால்
மன்னுவோம் என்று உளமகிழ்ந் தேத்த
மலைமகள் கேள்வனும் நவில்வான்.

“அவ்வன்னிய மகராசன் கைவில்லால் மடிவானே அல்லது வேறொருவராலும இவ்வசுரன் மடிய மாட்டான் பாமபை அணியும பரமனே ! உன்னால் இந்நிலை அடைந்தவன் உன்னையும் சிறைபிடிப்பான் அதனை என்னால் சொல்ல முடியுமா? இப்போதே சம்புமுனிவர் இருக்குமிடம் செல்வோம்,“என்றார் உமையிடப்பாகனும கூறுவான் -

பன்னகம் - பாமபு **மன்னுவோம்** - அடைவோம்

236. சிவன் சம்பு முனிவரிடம் செல்லப் புறப்படுதல்

ஆதியாம் கடவுள் கண்களி கூர்ந்தே
அமரருக் குரைப்பரிச் சூட்சம்
சீதரன் உரைத்த இதுநலம் என்றே
சேவினில் ஏறுவோன் இடத்தில்
மாதுமை யுடனே மான்மழு கரத்தில்
மதிஅறுகு தேங்குசெங் கழுநீர்
தாதவிழ் தும்பை அணியுமை கண்டன்
சம்புமா முனிஉழை சார்ந்தார்.

சிவனும் மிக மகிழ்ந்து தேவர்களிடம், “திருமால் உரைத்த இச்சூழ்ச்சி மிகவும் நன்று” என்று கூறினார், இடபத்தில் ஏறுபவனும், சந்திரன், அறுகு, செங்கழுநீர், தும்பை அணியும் நீலகண்டனும் ஆகிய அச்சிவன், இடப்பக்கம் உமையாளோடும், கையில் மான், மழுவோடும், சம்புமாமுனிவர் இருக்குமிடம் சேர்ந்தார்.

சீதரன் - ஸ்ரீதரன் - இலக்குமியை மார்பில் உடையவன், திருமால் **சே** - எருது, இடபம **இடம்** - இடப்பக்கம, **மதி** - பிறை, **உழை** - இடம்

237. சிவனுடன் சென்றவர்கள்

நந்தியும் மாலும் பிரமனும் வானோர்
நாயகன் அஷ்ட பாலரும்

கந்தனும் ஆகு அரசனும் சண்டி
கேசனும் கந்தரு வோரும்
தந்திநேர் நாரத னும்பதஞ் சலியும்
சண்டனை வென்றமார்க் கண்டன்
விந்தைசேர் புலிக்கா லனும்புடை சூழ
விமலனும் எழுந்தருளி னானே.

நந்தி, திருமால், பிரமன், தேவர்கள் தலைவனாகிய தேவேந்திரன், அட்டதிக்கு பாலர், கந்தன், விநாயகன், சணடிகேசுவரன், கந்தர்வர், வீணை மீட்டும் நாரதர், பதஞ்சலி, எமனை வென்ற மார்க்கண்டேயர், வியாக்ர பாதர் ஆகியோருடன் சிவன் எழுந்தருளினார்

ஆகு - மூஞ்சூறு, பெருச்சாளி, மூஷிகம, **ஆகு அரசன்** - விநாயகர், **தந்தி நேர்** - வீணை மீட்டும **சணடன்** - எமன், **புலிக்காலன்** - வியாக்ர பாதர், **புடை** - பககம

238. சம்புமா முனிவர் இருப்பிடம் அடைதல்

தருக்களின் மலரை தட்சகர் பொழிய
சத்தமா தரும்புடை சூழ
உருக்கமாம் கீதம் கின்னரர் பாட
உயர்ந்தவான துந்துமி முழங்க
எருக்கணி ஈசன் உளமகிழ் தவரோ
டிமையவர் கிரிஉத் தரம்உறைந்
திருக்குமா மகம்செய் சாலைசேர்ந் திடவே
தோத்திரம் செய்தனர் சம்பு.

தேவலோகத்தில் இருக்கும் பஞ்சதருக்களின் மலர்களை இயககர் தூவ, சப்த மாதர்கள் பக்கங்களில் வர, கின்னரர்கள் கீதம் இசைக்க, துந்துபி முழங்க, எருக்கு மாலையணிந்த சிவன் மனம மகிழந்து, அவரோடு இமயமலைக்கு வடககே உள்ள இடத்தில் யாகம்

செய்யும் சம்புமா முனிவரிடம் சென்றார் சம்புமா முனிவரும் எழுந்து தோத்திரம் செய்தார்.

தரு - மரம இங்கு தேவருலக ஐந்து மரங்கள, மந்தாரம், கறபகம், அரிச்சந்தனம், பாரிசாதம், தேவதாரம் **தட்சகர்** - இயக்கர் **சத்தம்** - சபதம, ஏழு, **சத்தமாதர்** - பிராமி, வராகி, இநதிராணி, மகேஸ்வரி, வைஷ்ணவி, கௌமாரி சாமுண்டி **இமையவர் கிரி** - இமைய மலை **உத்தரம்** - வடக்கு, **மகம்** - யாகம்

239. சம்பு மகரிஷியின் தோத்திரம்

கால காலபைங் காமத கனனே
ஆல முண்டு அமரரைக் காத்தொரு
பால னைத்தின்று பண்போ டெழுப்பின
சீல னேஉன்றன் சேவடி போற்றியே.

யமனுக்கு யமனே ! காமனை எரித்தவனே ! ஆலகால விடமுண்டு தேவரைக் காத்தவனே ! சிறுத்தொண்டரின் மகனை உண்டு மீண்டும் எழுப்பிய பண்புடையவனே ! உனது திருவடிபோற்றி!

காலன் - எமன், **காமதகனன்** - மன்மதனை எரித்தவன் **ஆலம்** - ஆலகாலம் **பாலன்** - சீராளன், சிறுத்தொண்டன் மகன் **சீலம்** - ஒழுக்கம, பண்பு **சீலன்** - பண்புடையவன்

240.

நாக ஆபர ணாதி நமோநமோ
தோகை யோர்புறஞ் சூழும் நமோநமோ
ஆகு வாகனனை ஈன்றவ நமோநமோ
வேக மான இறைவா நமோநமோ.

நாகாபரணத்தை அணிந்தவனே நமோ நமோ ! உமை ஒருபக்கம் உடையவனே நமோ நமோ ! மூஞ்சூறு வாகனனாகிய

விநாயகனை ஈன்றவனே நமோ ! நமோ! வேகமானவனே நமோ நமோ !

நாகாபரணம் - நாகம + ஆபரணம பாமபை அணியாகக கொணடவன **தோகை** - மயில். இஙகு மயில போனற உமாதேவி. **ஓர் புறம்** - ஒருபக்கம **ஆகு வாகனன்** - பெருசசாளி வாகனன - விநாயகன்

241.

எள்ளில் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திடும்
வள்ளல் உன்றன் மலரடி நமோநமோ
வெள்ளை யாகும் விடைதனில் ஏறியே
தெள்ளுநீர் சடையுடை செல்வ நமோநமோ.

எள்ளுக்குள் எண்ணெய போல் எங்கும நிறைந்திருப்பவனே உன் மலரடியை வணங்குகிறேன் வெண்மையான காளையில் ஏறுபவனே ! தெளிந்த நீரையுடைய கங்கையைச் சடையில் அணிந்த செல்வனே ! உன்னை வணங்குகிறேன்

தெள்ளுநீர் - தெளிநத நீர் கங்கை

242.

கஞ்ச னுந்திரு மாலும் அறிந்திடாக்
கஞ்ச பாத மெனக்கருள் கின்றனை
பஞ்ச பாணனைப் பஸ்பம தாக்கிய
பஞ்ச சென்னி பரனே நமோநமோ.

பிரமனும் திருமாலும் அன்னப் பறவையாகவும் பன்றி வடிவமாகவும் மாறி முடி, அடி தேடியும் கண்டுபிடிக்க இயலாதவனே தாமரைப் பாததததை எனக்கு அருளியவனே! ஐந்து அம்புகளை உடைய மன்மதனைச சாமபல் ஆக்கியவனே! ஐந்து தலைகளையுடையவனே ! உன்னை வணங்குகிறேன்

கஞ்சன் - தாமரை மலரிலுள்ள பிரமன் **கஞ்சம்** - தாமரை, பஞ்ச **பாணன்** - ஐந்து அம்புகளையுடையவன மன்மதன் **பஸ்பம்** - சாம்பல், **பஞ்ச சென்னி** - ஐந்து தலை, ஈசானம், தத்புருடம அகோரம வாமதேவம, சதயோஜாதம என்ற ஐந்து முகங்களையுடையவன சிவன்

243. சம்புமுனி சிவனை வந்த காரணம் வினவுதல்

நாய காஎந்தன் சாலையில் நண்ணிடச்
சேய னேன்எத் தவம்செய்த னன்திகழ்
தூய னேவரும் சூழ்ச்சி உரையென
ஆயு நற்கலை அம்முனிக் கோதுவார்.

நாயகனே! என்னுடைய தவச்சாலையில் தாங்கள் வர நான் என்ன தவம் செய்தேன்! தாங்கள் வந்த காரணத்தைக் கூறுங்கள் என்று கலையுணர்ந்த சம்புமுனி கேட்கச் சிவன் கூறத் தொடங்கினார்

நாயகன் - தலைவன் **சாலை** - தவச்சாலை **சேயன்** - குழந்தை போன்றவன்

244. வாதாவியைக் கொல்லக்கூடிய ஒருவனை யாகத்தில் தோற்றுவிக்குமாறு சிவன் வேண்டுதல்

மாத வத்திலுயர் சம்பு மாமுனி
தீதி லாதிமை யோர்கள் செழித்திட
வாத ரக்கனை வாட்டும் ஒருவனைச்
சோதி வேள்வியில் தோன்றிடச் செய்யென்றார்.

"தவத்திலுயர்ந்த சம்பு முனிவரே ! தேவர்கள் துன்பம் நீங்கி நன்றாக வாழ்ந்திட, வாதாவியைக கொல்லக் கூடிய ஒருவனை யாகத்தில் தோன்றச் செய்" என்று சமபுமுனிவரிடம் சிவன் வேண்டினார்

வேள்வி - யாகம்

245. சம்புமாமுனி வேள்வி தொடங்கினார் எனச் சனகன் கூறுதல்

என்ன அம்முனி ஈசனை நோக்கியே
துன்னு வேள்வி தொடங்கலுற் றானென
வன்ன அத்திரிக் கோதிய வார்த்தையால்
மன்னு வேள்வியின் வண்மை வழுத்துவாம்.

"சிவன் கூறியதும் சம்புமுனி ஈசனை நோக்கி யாகம் செய்யத் தொடங்கினார் இனி அவ்வேள்வியைப் பற்றிக் கூறுவோம்" என அத்திரி முனிவர்க்குச் சனகர் கூறினார்.

10. சம்பு மகாரிஷி வேள்விச் சருக்கம்

246. சம்பு மாமுனிவர் மயனை வரவழைத்தல்

மந்திர மாதவன் மனத்தி லேயரன்
விந்தையைந் தட்சரம் வினவி ஏத்தியே
சிந்தையில் மயன்தனைச் சேர எண்ணினன்
வந்தி றைஞ்சிட வழுத்து வானரோ.

மந்திரங் கற்றுணர்ந்த மிக்க தவத்தையுடைய சம்புமாமுனி மனத்தில் பஞ்சாட்சரத்தை நினைத்து மயனை வந்து சேர வேண்டும் என எண்ணினான் அப்படியே மயன் வந்து வணங்க அவனிடம் கூறுவார்.

247. மயனை வேள்விச்சாலை அமைக்கும்படி கூறுதல்

நற்றவ ரோமகம் நாட்டு கின்றனன்
இத்தினம் மயநின் இன்பம் என்னவே
சுற்றிய மதிலொடு தூண்நி றுத்தியே
பத்தியா யளியென மயனும் பண்ணுவான்.

தவத்தையுடைய சம்புமாமுனி, "நான் ஒரு வேள்வி செய்யப் போகிறேன் மதிலும் தூணும் நிறுத்தி ஒரு யாகசாலை அமை" என்றார் அப்படியே மயனும் செய்யத் தொடங்குகிறான்

பத்தி - பக்தி

248. மயன் இடம் தேர்ந்தெடுத்தல்

இவ்வண்ணம் இயற்றுவன் இதின்தென் பாலதாய்
நவ்வியை அணிந்திடும் நாத னின்மலை
அவ்வலப் புறத்தினில் அளிப்ப தாமென
செவ்விய அரனடி சிரத்தில் பூண்டனன்.

இப்பூமியின் தெற்கிலும், மானைக் கரத்தில ஏந்திய சிவனின் கயிலை மலைக்கு வலப்பக்கத்திலும், வேள்வி மண்டபம் அமைப்பேன் என சிவனின் அடியைத் தலை மேற்கொண்டான் மயன்.

நவ்வி - மான்

249. சிவன் கயிலையில் அமர்தல்

அனைவரு முடன்வர அமரர் துந்துமி
தனதன எனஒலி தரணி தங்கிட
கனவுற கயிலையில் காத்தி ருந்தனர்
புனித வெற்பீன் றருள்பூவை யோடுமே.

சிவனும், பிரமன், திருமால், தேவர், கணங்கள் உடன்வர, துந்துபி ஒலி தனதன என பூமியில் ஒலிக்க, இமவான் மகள் பார்வதியுடன் சம்புமகாமுனி வேள்வி முற்றுப் பெறுவதை எதிர்நோக்கிக் கயிலையில் காத்திருந்தார்

தரணி - பூமி **புனித வெற்பு** - இமயமலை. **புனித வெற்பு ஈன்றருள் பூவை** - இமயமலை பெற்றெடுதத பெண், உமை

250. மயன் சிவனிடம் ஐயம் வினாதல்

அம்மலை தனில்மயன் அரனை ஏத்தியே
கொம்மை வெம்முலை கோதை பங்கனே
இம்மை யிலயன் பெரிதா இயம்புவர்
எம்மை இவ்வேலை செய்யென இசைப்பரோ.

அக்கயிலை மலையில் மயன் அரனைத் துதித்து, "கும்பத் தனங்களை உடைய உமை பங்கனே! இவ்வுலகில் படைக்கும் தொழிலுக்குப் பிரமனையே பெரிதாகச் சொல்வர் என்னை அழைத்து மண்டபம் அமைக்கக் கூறிய தேன்?" என வினவினான்

இம்மையில் - இப்பூமியில **அயன்** - பிரமன்

251. சிவன் விடை பகர்தல்

எனவுரைத் திடஎழில் ஈசன் எண்ணியே
தனிஇவன் ஆண்மையைச் சாற்றி நின்றனன்
இனிதுரை இயம்புவது இயற்கை யாமென
மனமதில் உவகையாய் வழுத்தி னானரோ.

மயன் கூறியதைக் கேட்ட ஈசன் "இவன் அகந்தை கொண்டான். இவனுக்கு இனியவுரை கூறவேண்டும்" என மனத்தில் மகிழ்ச்சியோடு கூறலுற்றான்

வழுத்தினான் - கூறினான்

252. பிரமனும் நீயும் ஒன்றெனல்

அயன்உயிர் யாக்கைசேர் அனைத்தும் நல்குவன்
செயமுள நகரினைச் சிருஷ்டி செய்கென
அயன்மயன் இருவர் ஒன்றாக ஆதலால்
நயமக சாலை நல்க வென்றனன்.

"பிரமன் உயிர் உடல் உள்ள பொருட்கள் அனைத்தையும் படைப்பவன் நீயோ வெற்றி பொருந்திய நகரங்களை அமைப்பவன் ஆகவே நீங்கள் இருவரும் சமம் நல்ல வேள்விச் சாலை அமைப்பாயாக" என்றான்

யாக்கை - உடல் **சிருஷ்டி** - படைப்பு, **மகசாலை** - யாக மண்டபம் **நல்க** - அமைதது்க கொடுப்பாயாக

253. மயன் சுவர் உத்திரவளை அமைத்தல்

பருவதம் அதன்வலப் பாரி சத்திலே
இருசமர் சதுரம் யோசனை இடத்தினில்
பெரியபொற் சுவரின்மேல் ஒளிர்பிளிர் வச்சிர
மரகத உத்திர வளைகள் பூட்டினான்.

மயன், கயிலை .மலையின் வலப்பக்கத்தில் இரு யோசனைச் சதுரத்தில பெரிய பொன் சுவர் அமைத்து அதில் வைரத்தாலும் மரகதத்தாலும் உத்திர வளைகள் அமைத்தான்.

பருவதம் - மலை, இங்கு கயிலை **பாரிசம்** - பககம, **வச்சிரம்** - வயிரம்

254. போதிகை தூண்கள் மேற்பரப்பு

பவளநற் றூணின்மேல் பதித்த போதிகை
அவிரொளி நவமணியி னால மைத்தனன்
புவியினில் அளவிடா புஷ்பரா கத்தினால்
சவிமிகு மேற்ப ரப்புகள் சமைத்தனன்.

பவளத்தினால் தூண்கள் அமைத்து அதன்மேல் நவரத்தினங்களால் போதிகை அமைத்தான். பூமியில் அளவிட முடியாத புஷ்பராகக் கற்களை எடுத்து மேற்பரப்புகள் அமைத்தான்

சவி - அழகு

255. ஓடுவேய்தல்

மெச்சுசெப் போடு மேலுற விந்தைசேர்
உச்சியின் வச்சிரக் கல்லுகள் ஒட்டினான்
பச்சை யிலகத் தளவரி பரப்பினான்
சிற்சபை யீதெனச் செம்மை செய்தனன்.

செம்பினால் ஓடு வேய்ந்து உச்சியில் வைரக்கற்களைப் பதித்தான் மரகதக் கற்களைத் தளவரிசையில் பரப்பி இறைவன் நடனமாடும் சிற்சபை இதுவோ என்று அதிசயிக்குமபடிச் சிறப்புச் செய்தான்

256. வேள்வி குண்டம் அமைத்தல்

சுற்றிய மண்டபம் துலங்கு முன்றிலில்
பத்தியாய் வேள்வி குண்டம் பண்ணினான்
நித்தில மாலைகள் நிறைய நாட்டினான்
சித்திர மணிகளால் கொலுவும் செய்தனன்.

சுற்றிலும் மண்டபங்கள் நடுவே முற்றம். அம்முற்றத்தில் பகதியுடன் யாக குண்டம் அமைததான் முத்துமாலைகளை மணடபமெங்கும் தொங்கவிட்டான் நவரத்ன மணிகளால் கொலுமண்டபமும் அமைத்தான்

துலங்கும் - விளங்கும, **முன்றில்** - முற்றம, **நித்திலம்** - முத்து, **கொலு** - சபை

257. அவ்விடத்துக்குப் பெயர் சூட்டுதல்

கண்ணனும் கமலனும் கடவுட் கூட்டமும்
எண்ணலர் ஏமமோ எனமனம் மகிழ்ந்திட
அண்ணலின் அருள்பெறும் அருந்த வத்தரின்
திண்ணிய சம்புவன் தேயம் என்றனர்.

திருமாலும, பிரமனும், கடவுளர், தேவர் அனைவரும் எண்ணற்றவர் தமக்குப் பாதுகாப்பு கிடைக்கும என மகிழ்ந்து, சிவனின் அருள் பெற்ற சம்புமாமுனிவரின் பெயரால் அவ்விடத்தைச் சம்புவன் தேசம என்று வழங்கினர்

கண்ணன் - திருமால், **கமலன்** - பிரமன், **ஏமம்** - பாதுகாப்பு

258. சம்பு முனிவர் தீர்த்தமாட எண்ணுதல்

அங்கவர் அனந்தநா ளதனை யேநிகர்
துங்கமா சம்புவுந் துலக்கம் எய்திட
சங்கரன் கோலமீ தாகு மென்னவே
கங்கைநீர் தோய்ந்திடக் கருத்தில் உன்னுவான்.

தேவர்கள் உய்யும் நாளையே ஒத்த சம்புமாமுனிவர் சிவனின் கருணையை நினைத்து இதுவே அவன் திருக்கோலம் என்று கங்கையில் நீராட எண்ணினான். (சம்பு முனிவரின் வேள்வியில் எழும் பாலகனே வாதாவியைக் கொல்வானாதலால் தாங்கள் உய்யும் நாளின் வடிவமே சம்பு என நினைத்தனர் சிவனின் கருணையால் மயன் சிருஷ்டித்ததனால் அம்மண்டபமே சிவன் என நினைத்தார் சம்பு.)

உன்னுவான் - எண்ணினான்

259. சம்புமாமுனி வேள்விச்சாலை புகுதல்

நவநதி ஆடினர் பூதி பூண்டனர்
தவவுரு மன்னினர் தழைத்த சிந்தையால்
பவவி னாசஞ்செய் பரமன் தன்னுடன்
நவமணி இழைமக சாலை புக்கினன்.

புனித நதியில் நீராடி, விபூதி அணிந்த சம்பு முனிவர் தவவேடம் பூண்டு, பிறவியை அழிக்கும் பரமனுடன், நவமணிகள் இழைக்கப் பட்ட யாக சாலையை அடைந்தார்

நவநதி - புதுமையான நதி **ஒன்பது நதி என்றும் சொல்லலாம்** **பவம்** - பிறவி **விநாசம்** - அழிததல, **மகசாலை** - வேள்வி மணடபம

260 வேள்விக்கு இடம் அமைத்தல்

காமதே னுவின்சாணம் கரைத்து மெழுகியே
பூமியைப் புண்ணியா சனங்கள் போற்றியே
நேமமாய்ப் பூரண கும்பம் நிறைத்து
வாமமான் உமையுடன் மகிழ்ந்தி ருத்தினன்.

காமதேனுவின் சாணம் கரைத்து மெழுகிப் பூமியைப் புனிதப் படுத்தி, நியமமாகப் பூரண கும்பம் வைத்து, இடப்பக்கத்தில் உமையோடு சிவனை இருத்தினார்

காமதேனு - தேவருலகப் பசு கேட்டதைத தருவது **நேமம்** - விதி, **வாமம்** - இடபபாகம

261. கடவுளர்களை இருத்துதல்

மேலவா யிலில்வி நாயகர் நாட்டினர்
வேலனும் கீழ்ப்புறம் விளங்க வைத்தனர்
சீலமாம் வயிரவன் தெற்கில் நிற்கவும்
தூலமாம் வடபுறம் துர்க்கை வைத்தனர்.

யாக குண்டத்தின் மேல்புறம் விநாயகர், கீழ்ப்புறம வேலன், தெற்கே வயிரவன, வடககே துர்க்கைக் கிடம்செய்தார்

இது யாகம செய்யும் முறை இபபடி இடம அமைதது நடுவில ஓமம செய்யும போது நானகு புறமும நானகு தேவதை நிறுததுவது மரபு உணமையிலேயே நாலவரும அங்கு வநது நிற்கவிலலை, பிரதிடடை செயயபபட்டனா அவவளவே

262. முனிவர்கள் யாகத்துக்கு வருதல்

குற்சன் ரோமனும் குருவ திட்டரும்
வற்சன் பதஞ்சலி வாம தேவனும்

நற்சன காதியர் நார தாதிபர்
மெச்சிய முனிவராங் கணங்கள் வந்தனர்.

குற்சன், ரோமன், வசிட்டா, வற்சர், பதஞ்சலி, வாமதேவர், சனகர், சனாதரர், சனந்தரர், சனற்குமாரர், நாரதர் எனப்பல மேன்மையுடைய முனிவர்கள் கூட்டம் கூட்டமாய் வந்தனர்.

263. சம்புமாமுனி வேள்வி தொடங்குதல்

அஷ்டபாலர் ஓமகுண்டம் சுற்றும் அண்டினர்
திட்டமாங் கடவுளர் செயங்கள் கூறினர்
மட்டிலா சம்பு மாமுனி மகிழ்ந்துளம்
இஷ்டமாய் வேள்வியை இயற்ற லுற்றனன்.

எட்டுத் திசைக் காவலர்களும ஓமகுண்டத்தைச் சுற்றி அமர்ந்தனர் எல்லோரும் வாழ்த்துக் கூறினர் சம்புமுனிவர் மகிழ்ந்து யாகத்தைத் தொடங்கினார்

செயம் - வெறறி, வாழ்தது

264. யாகப் பொருட்கள் நிறைத்தல்

ஆவின்நெய் அவிகளும் எள்ளும் வெல்லமும்
மாவுளோர் பாரமும் வளமும் கூட்டிய
நாவினால் துதிசெயும் நாளி கேரமும்
வாவிநீர் கமண்டலம் பொரியும் வைத்தனர்.

அவிக்கு வேண்டிய பசுநெய்யும், எள்ளும், வெல்லமும், பூமியில் உள்ளோர்க்கு வளம் அளிக்கும் தேங்காயும் கெண்டியில் நீரும், பொரியும் வைத்தனர்

அவி - யாகத்தில் இடும உணவு **ஆவின் நெய்** - பசு நெய், **ஆ** - பசு, **நாளிகேரம்** - தேஙகாய் **வாவி** - குளம் **கமண்டலம்** - கெணடி

265. திருமால் அக்னி ஏந்த நந்தி வாழ்த்துதல்

மாந்தளிர் குசையடைக் காயும் மன்னிட
பூந்துழாய் அணிந்தமால் புளகம் உற்றழல்
ஏந்திமேல் பாலினி விருப்ப நந்தியும்
சேர்ந்திருந் தார்மகம் செழிப்ப தாகவே.

மாந்துளிர், தருப்பை, வெற்றிலை பாக்கு இவற்றை நிரப்பி, துளசி மாலை அணிந்த திருமால் மகிழ்ச்சியுடன் நெருப்பை ஏந்தி மேற்குப் பக்கத்தில் நிற்க நந்தியும், "யாகம் செழிப்பதாக" என வாழ்த்தினார்

குசை - தர்பபை **அடைக்காய்** - வெற்றிலை பாக்கு **துழாய்** - துளசி **புளகம்** - மகிழ்வு **மேல்பால்** - மேற்குப் பககம **மகம்** - யாகம், வேள்வி

266. சம்புமுனி பூசை தொடங்குதல்

கணபதி பூசையும் கந்தன் பூசையும்
குணமுள வயிரவன் கோதில் துர்க்கையும்
இணையடி பூசை இசைத்து பாலகர்
துணையடி பூசையும் தொடர்வ தாயினான்.

விநாயகர், முருகன், பைரவர், துர்க்கை ஆகியோர்க்கு நான்கு வாயில்களிலும் பூசை செய்து திசைக் காவலர்க்கு எட்டுத்திசையிலும் பூசை செய்து யாகத்தைத் தொடங்கினார்

கோது - குற்றம்

267. யாகம் செய்தல்

மாலரன் அம்பிகை மகிழ ஏத்தியே
சீவமா மறை விதிப்படி செலுத்தினன்
மூலமாய் முளைத்திடும் முத்தன் தன்னெதிர்
சாலகுண் டத்தவி சார சார்த்தினன்.

திருமால், சிவன், உமை மகிழ வேத விதிப்படி யாகம் செய்த சமபு, சிவனெதிரில் யாக குணடத்தில் அவியை அளித்தான்

மால் - திருமால் **அரன்** - சிவன் **அம்பிகை** - உமை **சீலம்** - ஒழுககம **மறை** - வேதம் **முத்தன்** - சிவன **அவி** - உணவு

268.

அம்புய வேதன் வேதம் இசைத்திட
வெம்பிய முத்தழல் விளங்க வன்னியின்
கொம்புள சமித்தைக் கூட்டி வேதமும்
சம்புவும் உரைத்துளம் தழைப்ப தாயினார்.

தாமரை மலரில் உள்ள பிரமன் வேதம் ஓத, மூன்று தீ ஓங்கி உயர வன்னி சமித்தை இட்டு, வேதம் உரைத்து, சம்பு முனி வேள்வி செய்து மகிழ்ந்தார்

அம்புயம் - தாமரை **வேதன்** - பிரமன **முத்தழல்** - மூன்று தீ, அவை, ஆகவ நீயம், காருக பதயம, தட்சிணாக்கினியம் என்பன **வன்னி** - வனனிமரம **சமித்து** - குச்சி

11. வன்னிய ராஜாக்கள் உற்பத்திச் சருக்கம்

269. அத்திரி முனிவர்க்குச் சனகன் மேலும் கூறுதல்

அத்திரி முனியே அரன்விளை யாட்டை
அறைகுதல் ஆகுமோ அடியேன்
புத்தியில் உணர்ந்த மாத்திரம் புகல்வன்
புளகித முற்றிடக் கேட்பாய்
நித்தனால் மகமும் அமைத்திடும் முனிவர்
நீதிசேர் ராச்சியம் அதனால்
சுத்தமந் திரத்தோ டாகுதி புரியச்
சோதியாய் வளர்ந்தது தர்மம்.

"அத்திரி முனிவரே! சிவனின் விளையாட்டை அறியலாகுமோ? ஏதோ எனக்குத் தெரிந்த மட்டில் கூறுகிறேன் மகிழ்ச்சியோடு கேட்பாய் சிவன் கட்டளைப்படி முனிவர் யாகம் செய்ய நீதி நிறைந்த ராசசியம் ஆகையால் தர்மமே சோதியாய்க் கொழுந்து விட்டெரிந்தது"

புந்தி - புததி - அறிவு **புளகிதம்** - பக்தியினால தோன்றும் பரவசம **நித்தன்** - சிவன், **ஆகுதி** - வேள்வி

270. வன்னியன் தோன்றுதல்

பங்குனித் திங்கள் உத்திரந் தன்னில்
பரமன்முக் கண்ணழல் விழியில்
துங்கமா வேர்வை தோன்றிடக் கரத்தில்
தோய்ந்து செங்கழுநீரின் மலரைப்
பொங்கமா மகத்திலா குதிஇ யற்றிப்
புனிதனுக் குவகை ஈந்தார்
வங்கண வீரன் வன்னிய பூமன்
நற்பரி மீதுதோன் றினனே.

பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் சிவனின் நெற்றிக் கண்ணில் வியர்வை தோன்ற அதனைக் கையில் எடுத்து, செங்கழுநீர்ப் பூவுடன் வேள்வித் தீயில் ஆகுதி கொடுக்க, குதிரை மீது வன்னிய மகராசன் தோன்றினான் (என்றார் சனகர்.)

பொங்கம் - உயாந்த **ஆகுதி** - அர்ப்பணித்தல்

271. குதிரை ஏதென அத்திரி கேட்டல்

என்றுரை முனிவன் இதயமீ தெளியா
இயம்புவன் இவுளிஏ தென்ன
நன்றழல் விழிநீர் நாதனும் மலரை
நல்கிட இவுளியாய் உதிப்ப

தென்றுரை அதனால் இதமும் தேறியே
இனியியம் பெனஅழல் வீரம்
வென்றிசேர் புயமும் விந்தையும் நன்றாய்
வினவிடக் கேளென விசைப்பன்.

சனகன் கூறியதைக் கேட்ட அத்திரி முனிவர் மனத்தில் ஏற்பட்ட ஐயத்தால் "குதிரை ஏது?" எனக் கேட்க, "நெற்றிக்கண் வியர்வையைச் செங்கழுநீர்ப் பூவோடு கொடுத்ததால் குதிரையாய்த் தோன்றியது" என்று சனகர் கூற மனம் தேறிய அத்திரி மேலே சொல்லும்படி கேட்டார் சனகரும் "வன்னிய வீரனின் தோள் வலியைக் கூறுகிறேன் கேட்பாயாக" என்று கூறத் தொடங்கினார்.

தெளியா - தெளிவில்லாமல், **இவுளி** - குதிரை, **வென்றி** - வெறறி, **இசைப்பன்** - கூறுவான்

272. வன்னியனின் உருவம்

சென்னியில் மகுடம் சிலைகணைக் கரமும்
திணிஇருக் கேடயம் வேலும்
மின்னிய உரத்தின் முப்புரி நூலும்
மேகலா பரணமும் இருபால்
துன்னிய புயமும் அரிமுகத் தோடா
துவங்கிய கடகமும் துதித்த
வன்னமா மலர்த்தாள் வீரதண் டையுடன்
வளரம்பறாத் தூணியு மிலங்க.

தலையில் கிரீடமும், கைகளில் வில் அம்பு, வேல், கேடயமும், ஒளிவீசும் மார்பில் பூணூலும், இடையில் மேகலையும், நெருங்கிய புயங்களும், சிங்க முகத் தோடாவும், கடகமும், காலில் வீர தண்டையும், தோளில் அம்பறாத்துணியும

சென்னி - தலை **சிலை** - வில் **கணை** - அமபு **கரம்** - கை, **உரம்** - மார்பு **துன்னிய** - நெருஙகிய **அரி** - சிங்கம **தோடா** -

கைவளை **கடகம்** - மேலகையில அணிவது **வன்னம்** - அழகு **அம்பறாத்தூணி** - அமபு அறாத்தூணி - அம்பு வறறாத புட்டில்

273.

இருகுழை மகரகுண் டலமும் முருகோ (டு)
இந்துவின் நுதலில்வெண் ணீறும்
கருமுகில் குழலில் பின்னலு மிருபால்
கனத்தகட் டாரிவாள் இனமும்
கரங்கள் செங்கழுநீ ரார்ந்தொளிர் தோளும்
கனத்திடைக் கச்சைசல் லடமும்
பெருகுபொன் பீதாம் பரம்அணி கோவும்
பெட்புடன் பிறங்கினன் அன்றே.

காதில் மகர குண்டலமும், முருகும், பிறைநெற்றியில் வெண்ணீறும், மேகம் போல் தலையில் பின்னலும், இருபுறமும் கனமான கட்டாரிகளும், செங்கழுநீர் மாலையுடைய தோள்களும் வாளும், இடையில் கட்டிய கச்சையும், சல்லடமும், பொன்னாடையுமாக வன்னிய வீரன் தோன்றினான்

குழை - காதணி **முருகு** - காதணி. **இந்து** - சந்திரன் **நுதல்** - நெறறி **சல்லடம்** - காற்சட்டை

274. வீர வன்னியன் கல்வி

வேதநான் காறுசாத் திரமிகுத்து
விளங்கி கலைஅறு பதினான் (கு)
ஓதிய பதினெண் புராணமு முணர்ந்த
குகனவ னாமெனும் குணத்தோன்
நீதிசேர் நேம நிஷ்டையில் கருத்து
நீங்கிடா தவனெதி ரென்ன
பாதகர் ஆவி பதைத்திட உருக்கும்
பாணமும் பலிதமாய் வீரன்.

நான்கு வேதம், ஆறு சாத்திரம் அறுபத்து நாலு கலைகள், பதினெட்டு புராணம் ஆகியவற்றை உணர்ந்தவன், நேம நிஷ்டை தவறாதவன், தீயவர்களை அழிக்க பாணம் விட்டால் தோற்காதவன் அவ்வன்னிய வீரன்

வேதம் நான்கு - ரிக், யசுர், சாமம, அதர்வணம், **சாஸ்திரம் ஆறு** - சாஙகியம, தர்க்கம், மீமாமசம், யோகம், வியாகரணம, வேதாந்தம் தர்க்கம, வியாகரணம், சோதிடம், நிருத்தம், சந்தோபிசிதம், நிகண்டு என்பாரும் உளர் **நேம நிஷ்டை** - வேத விதிகளில் கூறபபட்ட ஒழுககங்கள், **பாதகர்** - தீயவர் **ஆவி** - உயிர் **பாணம்** - அம்பு **பலிதம்** - வெற்றி பெறுதல்

275. வீரவன்னியன் "என்னை அழைத்த காரணம் என்ன?" என்று சிவனிடம் கேட்டல்

அவுணர்க ளிடத்து கண்களும் புயமும்
துடித்திட அமரர்கள் வேதம்
புவியினில் புகல பூவையர் ஆட
புனிதமாய் துந்துமி ஒலிக்க
நவமெனும் கிரக பூசையும் நலங்க
நாயகன் வதனமும் நோக்கி
சுவலழல் எனையின் றழைத்ததே தென்று
சுடர்முடி இலங்கிடத் துதிப்பான்.

அசுரர் இடது கண்களும் புயமும் துடிக்கவும், தேவர்கள் வேதம் பூமியில் ஒலிக்கவும், நடன மங்கையர் ஆடவும், துந்துபி ஒலிக்கவும், நவக்கிரகங்கள் பூசை செய்யவும் சிவனை நோக்கி, வீரவன்னியன், "என்னை நெருப்பில் அழைத்த காரணம் என்ன?" என்று ஒளி பொருந்திய கிரீடம் அசையக் கேட்டான்

276.

ஆதியே மகமும் புரிந்ததில் அளித்து
 அருளுவீர் அமரரை அடிமை
சாதனம் கொள்ளவோ சமன்தனைக் கடிந்து
 தாரணிவாழ் உயிர்களைக் காத்து
சோதிசேர் மூவர் புரமெரித் ததுபோல்
 துகளவு ணாதிபர் அனைத்தும்
வாதைசெய் திடவோ வழுத்துமென் றுரைத்து
 மலரடி பணிந்தனன் மாதோ !

"மூலப்பொருளே ! யாகம் செய்து அதில் என்னையும் படைத்தீர் தேவர்களை அடிமை கொள்ளவோ? யமனை அழித்து உயிர்களைக் காக்கவோ? திரிபுரம் எரித்ததுபோல் இராட்சதர் அனைவரையும் வதைத்திடவோ? கூறுவீர்" என்று மலர் போன்ற பாதங்களை வணங்கினான்

சாதனம் - சாசனம ஒப்பநதப பததிரம **சமன்** - எமன **கடிந்து** - அழித்து **வாதை செய்திடவோ** - அழித்திடவோ **வழுத்து** - கூறும்

277. வீர வன்னியன் சிவனைத் துதித்தல்

அய்யனே ! சீவன் அனைத்தையும் அளித்தே
 அமுதளித் தன்பினில் காத்து
துய்யமாந் தோகை இடத்தினில் துலங்கும்
 சோதியே ! மான்மழு சூலம்
கையிலே அணிந்த கடவுளே ! நீல
 கண்டனே ! கயிலையில் உறையும்
மெய்யனே ! மதியும் கடுக்கையும் நதியும்
 வேணியில் அணிந்திடும் பரனே !

"அய்யனே ! இவ்வுலகனைத்தையும படைத்து, அமுதளித்து, அனபோடு காப்பவனே ! இடப்பாகததில் உமையைக் கொண்டவனே! கையில் மான், மழு, சூலம ஏந்தியவனே ! நீலகண்டனே ! கயிலையில் வாழ்பவனே ! சந்திரனையும், கொன்றை மாலையையும, கங்கையையும் சடையினில் அணிந்தவனே !"

கடுக்கை - கொன்றை **வேணி** - சடை

278. ஈசன் வன்னியனை அருகில் அழைத்தல்

என்றடி இறைஞ்ச ஈசனும் மகிழ்ந்து
இயம்புவன் அழலினில் உதித்த
மன்றலந் தொடைசேர் மார்பனே வீர
வன்னிய பூபனே மனத்தில்
இன்றுனை நினைத்த சூழ்ச்சியை உரைப்பேன்
இத்தழல் கண்டனேஎன் னருகில்
நின்றிடு மென்ன இவுளியும் தாவ
நேமிமேல் நின்றனன் மாதோ.

என்று இறைவனைத் துதிக்க, இறைவனும் மகிழ்ந்து "நெருப்பில் தோன்றியவனே ! மணம் மிக்க மாலையணிந்த மார்பை உடையவனே ! வன்னிய பூபதியே ! இன்று உன்னை நினைத்து அழைத்த காரணத்தைக் கூறுகிறேன் நெருப்பில நிற்பவனே ! என் அருகில் வந்து நில்" என்று கூறினான் அக்கினிக் குதிரை தாவ பூமியில் வந்து நின்றான் வன்னிய வீரன்

மன்றல் - மணம **இவுளி** - குதிரை **நேமி** - பூமி

279. சிவன் வன்னியனிடம் கூறுதல்

நாரியின் பாகனும் உரைப்பன்
நற்றழல் தனிலு தித்த

வீரவன் னியனே ! எங்கள்
வேதனை தீர்க்கும் கோவே !
ஆருயிர் புதல்வன் நீயே !
அன்னையும் தந்தையும் யாமே !
தாருகன் உயிர்க டிந்த
சாமுண்டி துணைய தாமே.

உமையிடப் பாகன் "நெருப்பில் உதித்தவனே ! வீர வன்னியனே ! எங்கள் துன்பம் தீர்க்கப் போகிறவனே ! எங்கள் புத்திரனும் நீ. உனக்குத் தாய் தந்தை நானும் பார்வதியும். தாருகன் உயிர் கவர்ந்த துர்க்கை உனக்குத் துணையாவாள்."

நாரி - பெண், உமை. **கடிந்த** - போக்கிய

280.

சம்புமா தவன்செய் வேள்வி
தன்னில் உதித்தாய் இந்த
அம்புவி தனிலே வேத
சம்புவின் மரபும் ஆனாய்
உம்பரர் களிக்க மான
வுதித்தவா தாவி சூரன்
கம்பிதம் அடக்க வென்று
கதிரொளி முடியாய் என்றான்.

"ஒளி வீசும் முடியை உடையவனே ! சம்புமகா முனிவர் செய்த வேள்வியில் தேன்றினாய் அதனால் சம்புவின் சந்ததி ஆனாய் வாதாவி என்னும் அரக்கர்களால் ஏற்பட்ட அச்சத்தை அடக்கித் தேவர்களைக் காக்கவே உன்னை அழைத்தேன்" என்று கூறினார் சிவன்.

அம்புவி - அழகிய பூமி **மரபு** - சந்ததி **உம்பரர்** - தேவர், **கம்பிதம்** - நடுககம

281. வன்னிய மகாராசன் அசுரனைச் சங்கரிப்பேன் எனல்.

அரன்உரைத் திடவும் மாலும்
அயனும் விண்ணவரும் மன்னா
வரமிகும் சூரன் ஆவி
வதைப்பதே கருமம் என்ன
கருணையும் மகிழ்வீர் உள்ளக்
கவலையை அகற்றும் வீரன்
சரமதால் அவுணர் சண்டை
சங்கரித் திடுவே னென்றான்.

சிவன் கூறியதும் திருமாலும், பிரமனும், தேவர்களும் " வன்னிய மகாராசனே ! வரமிகுந்த சூரனின் உயிரைப் போக்குவதே உங்கள் கடன்" என்றனர். வன்னிய மகாராசனும், "மனக்கவலை நீக்கி மகிழ்ந்திருங்கள் எனது அம்பால் அவுணர்களை அழித்திடுவேன்" என்றான்.

சரம் - அம்பு **சங்கரித்திடுவேன்** - அழிப்பேன

282. வீரவன்னியனைத் தேவர், முனிவர் போற்றுதல்

உரையிரு செவியில் தைக்க
உம்பர்கள் உவகை ஆகி
மருமலர் மாரி தூவி
நாவினால் துதிகள் ஏத்தி
இருவென இருத்தி சத்த
இருடியர் முனிவர் வானோர்
ஒருஇடர் தொடர்ந்தோன் வன்னம்
உறுதியாய் உரைக்க லுற்றார்.

வன்னிய வீரன் கூறியதைக் கேட்டதும், தேவாகள் மகிழ்ந்து, மணமிக்க மலர்களைத தூவி, இசைப்பாடல்கள பாடி, அவனை ஆசனத்தில் இருததினர், முனிவரும வானவரும், துன்பம் செய்யும அவ்அரக்கன் செயல்களைக் கூறத் தொடங்கினர்

மரு - மணம் **மாரி** - மழை **சத்த இருடியர்** - ஏழு முனிவர், அவர்கள ஆங்கீரசர், அத்திரி, வசிட்டர், கௌதமா, விசுவாமிததிரர், பரத்துவாஜர், ஜமதக்கினி

283. திருமால் வன்னிய வீரனுக்கேற்ற பெண் யாரெனக் கேட்டல்

தக்கன் வேள்வியைக் கடிந்த
தற்பரன் மகவ தான
அக்கினி உதித்த வீரன்
வன்னியன் எழிலுக் கேற்ற
மைக்குழல் மாது ஒன்றீ
மாலயன் பாலு ரைப்ப
திக்கினில் இவர்க்கு ஆன
தெரிவையர் உளரோ என்றான்.

"தக்கனுடைய யாகத்தை அழித்த சிவனின் .மகனான அககினியிலுதித்த வீர வன்னியனின் அழகுக்கேற்ற கரிய குழலழகி யார்?" எனத் திருமால் பிரமனிடம் கேட்க "இப்பூமியில் இவனுக்கான பெணகள் இல்லை" என்றான் பிரமன்

கடிந்த - அழித்த **தற்பரன்** - சிவன் **மகவு** - குழந்தை **மைக்குழல்** - கரிய கூந்தல் **தெரிவை** - பெண்

284. பிரமன் "தேவலோகப் பெண்தான் வன்னிய வீரனுக்கு மனைவி" எனல்

நாகலோ கத்து வேந்தன்
நாயகி சசிவ யிற்றில்

தோகையொன் றுதிப்பாள் அந்த
தோகை அளிப்பீ ரென்ன
ஆகமப் படியு ரைத்தே
அனைவரும் இருப்ப அந்நாள்
பாகுசேர் மொழியி னாளோர்
பாவையைப் பயந்தாள் மாதோ.

"தேவலோக அரசன் மனைவி இந்திராணியின் வயிற்றில் ஒரு பெண் பிறப்பாள் அந்தப் பெண்ணை வன்னிய வேந்தனுக்குக் கொடுங்கள்" என்று ஆகமவிதிப்படி கூறினான் பிரமன் எல்லோரும் அதை ஏற்றுக் கொண்டிருந்தனர் சிலநாள் கழித்துப் பாகுபோன்ற மொழியையுடைய சசி ஒரு பெண்ணைப் பெற்றாள்

நாகலோகம் - தேவருலகம **நாயகி** - மனைவி **தோகை** - பெண **சசி** - இந்திராணி **பாகு** '- வெல்லப் பாகு **பயந்தாள்** - பெறறெடுத்தாள்

285. தேவலோகப் பெண்ணின் அழகு

திருவெனும் மயிலோ வேதன்
தேவியோ உமையோ நாக
அரிவைமே னகையோ ரம்பை
மார்களும் மகிழ மாது
உருவசி அகலிகை முன்னாள்
ஒப்பிலா உருவ மானாள்
செருவிடை பாவை தன்னைச்
சீருடன் வளர்க்கும் நாளில்.

அப்பெண் இலக்குமியோ? பிரமனின் தேவியான கலைமகளோ? உமையோ? மேனகையோ? என்று தேவப் பெண்களும் விரும்பும்படியாக ஊர்வசி, அகலிகைககும ஒபபுச்

சொல்ல முடியாத அழகுடன் விளங்கினாள். அவளைச் சிறப்போடு வளர்த்து வரும் நாளில்.

திரு - இலட்சுமி **வேதன்** - பிரமன் **வேதன் தேவி** - சரஸ்வதி, கலைமகள். **மேனகை, ரம்பை, உருவசி** - தேவலோக நடனப் பெண்கள், **அகலிகை** - கௌதமர் மனைவி.

286. பெண்ணுக்கு மந்திரமாலை எனப் பெயர் சூட்டல்

அரன்மகன் மணந்த தெய்வ
யானையின் இளையாள் என்றே
முரசறைந் திடவும் வானோர்
பொழிந்துபூ மழைகள் பெய்ய
தருவில்வீற் றிருக்கும் கோமான்
அளித்திடும் தைய லின்பேர்
மருவுயர் மந்திர மாலை
எனவழுத் தினர்கள் மாதோ.

சிவன் மகன் முருகன் மணம் புரிந்த தெய்வயானையின் தங்கையென முரசறைந்தனர். வானவர் பூ மாரி பொழிந்தனர். கற்பகத் தருவின் கீழிருந்து அரசாட்சி செய்யும் தேவேந்திரன் மகளின் பெயர் மந்திரமாலை எனத் துதித்தனர்.

அரன்மகன் - சிவன் மகன். இங்கு முருகன். **தரு** - கற்பகத் தரு. **கோமான்** - அரசன். இங்கு இந்திரன். **தையல்** - பெண்.

287. தேவர்கள் சிவனை வணங்குதல்

தேவர் உள்ளம் செழிப்ப மலையருள்
பாவை பங்கன் பதந்தனை ஏத்தியே
மூவ ரின்முத லாகிய மூர்த்தியே
சீவ நாயக னேயெனச் செப்புவான்.

தேவர்கள் மனமகிழ்ந்து, இமவான் மகள் பார்வதி பங்கனாகிய சிவனின் பாதங்களை வணங்கி "மும்மூர்த்திகளில் முதல்வனே ! உயிர்களுக்குத் தலைவனே"

செழிப்ப - மகிழ. **மலையருள் பாவை** - பார்வதி. **சீவன்** - உயிர். **மூவர்** - திருமால், பிரமன், சிவன்.

288. சிவனிடம் தேவர்கள் "வீரவன்னியன் மனைவி யார்?" எனக்கேட்டல்

வீர வன்னிய வேந்தன ணைந்திடும்
பாரி எங்கு பரிந்தளிந் திட்டனை
கூறு மென்னக் குழகன் அருள்புரிந்
தார மாலைசூ டிடுவா னென்றார்.

"வீர வன்னியன் திருமணம் செய்யும் மனைவியை எங்கு படைத்துள்ளீர் கூறும்" என்று கேட்டனர். சிவன் "அவன் மாலை சூடுவான்." என்றார்.

பாரி - மனைவி. **பரிந்து** - அன்புடன். **குழகன்** - சிவன், **ஆரம்** - மாலை.

289. சிவன் "தேவப்பெண்ணே தகுந்தவள்" எனல்

பூத லத்துள பூவையர் ஈடல்ல
பாத லத்துறை பாவையர் பாங்கியர்
மாத வந்தழை வானவ ரேயொரு
கோதை யருள ரோஎனக் கூறுவார்.

"இப்பூமியிலுள்ள பெண்கள் அவனுக்கு ஈடாகமாட்டார்கள். பாதாள லோகத்துள்ளவர் தோழியருக்குத் தான் ஏற்றவர். மிக்க தவம் செய்யும் தேவருலகத்தில் பெண்ணிருக்கிறாளோ" என்று வினவினார்.

பூதலம் - பூமி. **பாதலம்** - நாகலோகம். **பாங்கி** - தோழி, பணிப்பெண், **பூவையர்**. **பாவையர்** - பெண்கள். **கோதையர்** - பெண்.

290. தேவர்கள் "தேவேந்திரன் மகள் உள்ளாள்" எனல்

நித்த னேநகை யால்புரம் நீற்றவுன்
மத்த னேவெண் மருப்புறை வாரணம்
உத்த வேந்தன் உவகை யுடனளி
தத்தை யாமென வானவர் சாற்றினார்.

"தேவர்கள், புன்னகையால் முப்புரம் எரித்த உன்மத்தனே ! வெள்ளையான தந்தங்களை உடைய வெள்ளையானையை உடைய தேவேந்திரன் மகிழ்ந்து பெற்ற பெண் உளாள்" என்றனர்.

நகை - சிரிப்பு **புரம்** - முப்புரம். **நீற்ற** - எரித்துச் சாம்பலாக்கிய, **உன்மத்தன்** - வெறியுடையவன். சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி ஆடுபவன், **மருப்பு** - தந்தம் **வாரணம்** - யானை, இங்கு வெள்ளை யானை. ஐராவதம், **தத்தை** - கிளி, கிளி போன்ற பெண்.

291. சிவன். "தெய்வானை தவிர வேறு பெண்ணுளாளோ" எனக் கேட்க தேவர் "இருக்கிறாள்" எனல்

அண்டர் கோனரு ளாயின ஒன்றினை
பண்டி லெந்தன் சுதன்கரம் பற்றினன்
ஒண்தொ டிக்கிணை யாருள ரோவென
வண்டு மொய்குழல் வஞ்சியொன் றுண்டென்றார்.

"தேவேந்திரனின் ஒரு பெண்ணை முன்பு என் மகன் கந்தன் கரம் பற்றினான். அவளுக்கிணையாக இன்னொருத்தி இருக்கிறாளா?" எனச் சிவன் கேட்க, தேவர்கள் "வண்டு மொய்க்கும் கூந்தலுடைய வஞ்சியொருத்தி இருக்கிறாள்" என்றனர்.

அண்டர் - தேவர். **அண்டர் கோன்** - தேவேந்திரன். **பண்டில்** - முன்பு **சுதன்** - மகன், இங்கு கந்தன். **ஒண்தொடி** - ஒளி பொருந்திய வளையலை அணிந்தவள். **வஞ்சி** - வஞ்சிக் கொடி போன்ற பெண்.

292. சிவன் அவள் அழகைப் பற்றி வினவுதல்

நீல கண்ட நிருபன் நவிலுவன்
சேலெ னும்விழி தேசினைச் செப்பென
பால னற்கறி யுண்ட பரமனுன்
கோலம் காண்குவ ரோவெனக் கூறுவான்.

நீலமான (நஞ்சுண்ட) கழுத்தையுடைய சிவன், "சேல் போன்ற விழியுடைய அவள் அழகைக் கூறுங்கள்" என, "குழந்தைக் கறி சாப்பிட்ட உன் திருவிளையாடலை நாங்கள் அறிவோமோ?" என்றனர்

நபிலுவான் - சொல்லுவான். **தேசு** - அழகு. **கோலம்** - திருவிளையாடல்.

293. கூந்தல் அழகைக் கூறுதல்

கொண்டல் சைவலம் கூந்தல் கருமுகில்
தண்டலைக் கொன்றை காய்த்த கத்தெழு
வண்டி னம்கரு மணலைப் பழித்திடா
மண்டி ருள்குழை யேசொலு மாதினாள்.

மேகம், பாசி, கூந்தல் பனை, காடு, கொன்றைக்காய், வண்டுகள், கருமணல் இவற்றைப் பழித்த இருள் போன்ற கூந்தலையுடையவள்.

கொண்டல் - மேகம் **சைவலம்** - பாசி. **கூந்தல்** - பனை. **கருமுகில்** - மேகம். **தண்டலை** - காடு, சோலை.

294. முக அழகைக் கூறுதல்

நிலவி னம்பிறை நெற்றி மதன்கழை
சிலையெ னப்புரு வம்விழி சேல்விடம்
கொலைசெய் கூற்றம் பிதோகுழை வள்ளை
நலமெ னும்குமி ழாமெனும் நாசியாள்.

நிலவின் இளம்பிறை நெற்றி. புருவம், மன்மதனின் கரும்புவில். விழி கெண்டை, நஞ்சு, கொல்லும் எமன், அம்பு. காது வள்ளைப்பூ. மூக்கு - குமிழம்பூ.

மதன் - மன்மதன். **கழை** - கரும்பு **சிலை** - வில் **விடம்** - நஞ்சு **கூற்று** - எமன். **கூற்றம்பிதோ** - கூற்று + அம்பு + இதோ. **குழை** - காதணி இங்கு குழையணிந்த காது. **வள்ளை** - வள்ளைப்பூ. **குமிழ்** - குமிழம்பூ. **நாசி** - மூக்கு.

295. கன்னம், பல், இதழ், கழுத்து

கஞ்சம் சாணைக் கபோல மென்பர்செம்
பஞ்சு தோய்ந்த பனிநகை யாள்மொழி
கொஞ்சு கின்ற குயிலரக் காமிதழ்
வஞ்சு கின்ற வளையென் றறிந்தனர்.

கன்னம் கண்ணாடியோ சாணைக்கல்லோ? செம்பஞ்சில் தோய்த்த பனி போன்ற சிரிப்பு (செம்பஞ்சு - ஈறு, பனிவெண்மை - பல்) குயில் போன்ற குரல், அரக்கு போன்ற இதழ், சங்குக் கழுத்து.

கஞ்சம் - கண்ணாடி. **கபோலம்** - கன்னம். **நகை** - சிரிப்பு. **பனி** வெண்மை. **வளை** - சங்கு. **இதழ்** - உதடு.

296. மார்பு வயிறு

கச்சி றுக்கி கனத்ததாய் தனத்தினை
மெச்சு கின்றனர் மேதினி மிக்கவர்
அச்ச மாக அறைகுவம் அத்தனே
இச்சை யாக வேகேள் என்றனர்.

கச்சை இறுக்கிக் கட்டிய மார்பை உலகத்தில் அறிவுடையோர் புகழுவர். நாங்கள் எப்படிக் கூறுவதென அஞ்சுகிறோம்.

கச்சு - மார்புக் கச்சு.

297. விருப்பத்துடன் கேள் என்றனர்

மாரன் தன்முடி யோமலை மத்தகம்
பூர ணக்குட மம்புயந் ....
சேரக் கோங்கரும் பென்னும் குமிழியின்
தாதும் ஓதினர் ஆவிலை உந்தியோ.

மன்மதன் கிரீடமோ, மலையோ, யானை மத்தகமோ, பூரண கும்பமோ, தாமரையோ, கோங்கின் அரும்போ, குமிழின் மகரந்தமோ என்பர். ஆவிலை போன்ற வயிறு.

தனம் - மார்பு. **மேதினி** - பூமி. **இச்சை** - விருப்பம் **மாரன்** - மன்மதன். **மத்தகம்** - யானைத்தலை. **அம்புயம்** - தாமரை. **தாது** - மகரந்தம்.

298. இடையழகு, கையழகு

இடையுண் டோஇலை யோவென் றியம்பிடும்
துடிய ணிந்தபொற் றூசின ளாமிவள்
கடக மன்னு கரமல ராமின்னின்
கொடியெ னாவளர் கொம்பனை யாளரோ.

இடையுள்ளதா இல்லையா எனத் தெரியாது. பீதாம்பரமணிந்த உடுக்கை இவள் இடை. கடகம் அணிந்த மலர் போன்ற கையை உடையவள். மின்னல் கொடி போன்றவள்.

துடி - உடுக்கை. **பொற்றூசு** - பொன்னாடை. **கரமலர்** - மலர் போன்ற கை.

299. உடல் அழகு

வாகை சூடும் வடிவ மதிக்கையில்
ஆக மத்திேனார் ஆய்ந்துரை செய்தனர்
ஊக மாந்தளிர் மேனி உரைத்திடில்
மேக லாபர ணத்தின்மின் னாளரோ.

வெற்றி பொருந்திய அவள் உடலழகைச் சொல்ல வேண்டுமானால் ஆகமம் கற்றவர் "மாந்தளிர் மேனி, மேகலை அணிந்த மின்னல்" என ஆராய்ந்து கூறினர்

வாகை - வெற்றி. **மேனி** - உடல்.

300. சிவன் தேவேந்தரனிடம் பெண் கேட்டல்

இப்படி அமரர் இயம்பிட ஈசன்
இதயமும் மகிழ்ந்து வாசவன்பால்
செப்பினர் எந்தன் சிறுவனுக் குனது
செல்வியை அளித்தருள் என்றே
மைப்படி கின்ற அரன்மல ரடியை
மனத்தில் துதித்து கை கூப்பி
அப்பனே உன்றன் அருட்படி செய்தால்
அலவென்ப தொருவர்கள் உண்டோ?.

மேற்கண்டவாறு தேவர்கள் கூறியதைக் கேட்ட சிவன் மகிழ்ந்து இந்திரனிடத்தில் "என் மகனுக்கு உன் மகளைக் கொடுத்தருள வேண்டும்" என, இந்திரனும் சிவனடியை வணங்கி, மனத்தில் துதித்துப் போற்றிக் கை குவித்து, "அப்பனே ! உன் திருவுளப்படி செய். நீ சொன்னால் இல்லையென்று சொல்வார் உளரோ?" என்றான்.

வாசவன் பால் - இந்திரணிடத்தில்.

301. பத்து பொருத்தம் பார்த்தல்

தசபொருத் தங்கள் தழைத்திருந் தாலென்
தையலை அளிப்பனென் றுரைப்ப
நிசப்பி ரமனையு' மழைத்தினி பொருத்தம்
நிகழ்த்திடு மெனவவன் உரைப்பான்
வசப்புள தாகும் வன்னிய குலமும்
மண்ணினில் பவிதமாய்த் தழைக்க

இசைத்தினி மணம்கூ றெனஇமை யவர்கோன்
இதயமோர்ந் தியம்பினன் அன்றே.

"பத்து பொருத்தங்களும் நிறைந்திருந்தால் என் மகளை அளிப்பேன்" என்று இந்திரன் கூற, சிவனும் பிரமனையே அழைத்து, பொருத்தம் பார்க்கச் சொன்னான். பிரமனும் "எல்லாப் பொருத்தமும் உள்ளன. இவளை மணம் செய்தால் வன்னிய குலம் தழைத்தோங்கும்" எனக்கூற இந்திரன் மனந்தெளிந்து ஒப்புக்கொண்டான்.

தசம் - பத்து. **தையல்** - பெண், வசப்பு - வளம்.

302. முகூர்த்த நாள் பார்த்தல்

முகூர்த்தநா ளென்று மொழியவே இடப
முதன்மைசேர் தேதியும் ஏழில்
மகத்துவம் அமர பட்சமும் மந்திரி
வாரமும் தசமியும் வளர்பூசம்
மிகுத்தகற் கடகம் நன்றென மொழிய
விண்ணவர் உளமெலாம் களிக்க
நகைத்துமுப் புரத்தை எரித்தவன் சம்பு
மாமுனி இசைந்திட நவில்வான்.

முகூர்த்த நாள் பார்க்கக் கூறினான், வைகாசி மாதம் ஏழாம் தேதி, தேய்பிறை, வியாழக்கிழமை, தசமி, பூச நட்சத்திரம், கடக ராசி நல்லதென பிரமன் கூற தேவர் மனம் மகிழ, சிரித்துத் திரிபுரம் எரித்த சிவன் சம்புமாமுனியிடம் கூறுவான்.

இடப மாதம் - வைகாசி. **அமர பட்சம்** - தேய்பிறை. **மந்திரி வாரம்** - குருவாரம், வியாழன்.

303. மாங்கல்யம் வடிவமைத்தல்

வன்னிய மரபில் வளரும் மங்கலம்
எவ்விதம் வழுத்துவீர் என்ன

உன்னி விஸ்வ கர்மனுக் குரைக்க
ஒளிவி நாயகனென அமைத்து
பொன்னி னாற்சரடும் புதுமையாய் அளித்துப்
புகலுவன் வீரவன் னியனே
வன்னிய மரபோர்க் கிதுபெரிதா மென்று
உரைத்திட மகிழ்ச்சிகூர்ந் தனனால்.

வன்னியர்களுக்கு மாங்கல்யம் எவ்வாறு வடிவமைக்க வேண்டுமென விஸ்வ கர்மனைக் கேட்க, அவன் விநாயக வடிவம் அமைத்துப் பொற்சரடும் அளித்து "வீர வன்னியனே! உங்கள் மரபுக்கு இதுவே பொருத்தம்" என்று கூற வன்னியன் மகிழ்ந்தான்.

304. பெண்ணை அழைத்துவரச் சொல்லுதல்

அத்தனும் அருள்வன் அஷ்டதிக்கி லுள்ள
அனைவரும் நமதுழை அடைந்தார்
ஒத்தநாள் ஆகும் உம்பர்கோ னேஉன
தோவிய மகள்தனை அழையென
நற்றவம் மிகுந்த வானவ ருடனே
அயனுட னேகியே பெற்ற
சிற்றிடைச் சியாளகம் உறவு உரைத்தே
சிறுமியைச் சிவிகையேற் றினரால்.

சிவனும் "தேவேந்திரா! எட்டுத் திசையிலும் உள்ளவர் இங்கு வந்து விட்டனர். இன்று நல்ல நாள் ஆகும். ஆகவே உனது அழகிய மகளை இங்கு அழைத்து வா" என்று கூறினார். தேவேந்திரன், தவமிகுந்த தேவர்களுடனும், பிரமனுடனும் சென்று, சிற்றிடை படைத்த தன் மகளிடம் திருமணம் பற்றிக் கூறி அவளைப் பல்லக்கில் ஏற்றினான்.

உழை - இடம் **நமதுழை** - நம்மிடம் **ஓவியம்** - அழகு **உறவு** திருமண உறவுச் செய்தி **சிவிகை** - பல்லக்கு.

305. மந்திரமாலை பல்லக்கில் வருதல்

சேடியர் இருபால் எழிலுடன் சூழ
இமையவர் முரசொலி இயம்ப
நாடக மின்னார் நடனமும் புரிய
நாரதர் கின்னரர் பாட
கூடிய யாழ்மத் தளசுரம் தாளம்
குமுறிட வெளிலுளம் தருவின்
தோடவிழ் மலரைச் சொரிந்துமங் களமும்
சோபன உரைகளும் துதித்தார்.

இருபுறமும் பணிப்பெண்கள் சூழ்ந்துவர, தேவதுந்துபி ஒலிக்க, நாட்டிய மாதர் நாட்டிய மாட, நாரதரும் கின்னரும் பாட, வீணை, மத்தளம், தாளம் ஒலிக்க, கற்பகத் தருவின் மலரைத் தூவி வாழ்த்துக் கூறிய வண்ணம் அனைவரும் பல்லக்கினுடன் வந்தனர்.

சேடியர் - பணிப்பெண்கள். **இருபால்** - இருபக்கம். **இயம்ப** - ஒலிக்க. **குமுறிட** - முழங்க. **தோடு** - இதழ் **அவிழ்** - விரியும் **சோபனம்** - வாழ்த்து.

306. மந்திரமாலை திருமண மண்டபத்தில் நுழைதல்

இந்திரன் உலகில் இருந்து நற்கயிலை
ஏகினர் இமையவர் குழாங்கள்
சுந்தர வெள்ளி மலையரு காகத்
தோன்றிய சம்புவின் நகரில்
சந்திர உதய மெனும்அரி யணையிற்
தாதி சிவிகைமீ திருந்து
மந்திர மாலை தனைஅழைத் தேகி
மகிழ்ச்சி கூர்ந்தனர் அன்றே.

இந்திர லோகத்திலிருந்து தேவர் கூட்டம் கயிலைக்குச் சென்றது. கயிலை மலை வலப்பக்கத்திலுள்ள சம்பு நகரில் பல்லக்கின்

அரியணையிலிருந்து தாதி மந்திர மாலையைச் சந்திரோதயம் புறப்பட்டது என்ற சொல்லும்படி அழைத்துக்கொண்டு வந்தாள். எல்லோரும் மகிழ்ச்சியாயிருந்தனர்.

307. வன்னிய வீரரை நீராட்டல்

சங்கரி ஈன்ற தநயன் வன்னியனைத்
தழுவியே முத்தமிட்டு உரைப்பார்
எங்கள் கண்மணியே இமையவர் கோனும்
இசைந்தனன் மருமகன் ஆக
துங்கமா தவமென் செய்தனை என்றே
துதித்துநன் நதியினில் ஆட்டி
மங்கள கோலங்கள் செய்தனள் மகவின்
வடிவினைப் பசுபதி கண்டார்.

பார்வதி தானீன்ற மகன் வன்னியனைத் தழுவி முத்தமிட்டு "என் கண்மணியே ! தேவேந்திரனும் உன்னை மருமகனாக அடைய ஒத்துக் கொண்டான். மேலான தவம் செய்தாய்" என்று கூறி நல்ல நதியில் நீராட்டி மங்கலமான திருமணக் கோலம் செய்வித்தாள். மகனின் வடிவத்தை உயிர்களுக்குத் தலைவனாகிய பசுபதி பார்த்தார்.

சங்கரி - பார்வதி. **தனயன்** - மகன். **துங்கம்** - உயர்ந்த. **பசு** - உயிர். **பதி** - தலைவன். **பசுபதி** - உயிர்களுக்குத் தலைவன், சிவன்.

308. திருமணச் சடங்குக்கு வேண்டியவற்றைத் திருமண மண்டபத்தில் நிறைத்தல்

வாசவன் பிரமன் மாலனை வோரும்
வரிசையாய்க் காவணம் உறைந்தார்
மாசிலா மறையி லுளவிதிப் படியே
மணவறை அமைத்து எதிராக
நேசமாம் அரசா ணியும்உட் பாலிகை
நிறைந்திடும் அம்மிகால் கரகம்

பாசமா நிரப்பி ஓமகுண் டத்தைப்
பந்தமுட் டூதெனப் பகர்ந்தார்.

இந்திரன், பிரமன், திருமால் அனைவரும் வரிசையாகப் பந்தலில் அமர்ந்தனர். வேதத்தில் கூறப்பட்ட சாஸ்திரப்படி மணவறை அமைத்து, அரசாணிக்கால் நட்டு, பாலிகை ஓடு நிரப்பி, அம்மி, பானை, குடம் ஆகியவற்றை வைத்து ஓமகுண்டத்தை அமைக்கும்படிக் குயவனிடம் கூறினர்.

காவணம் - திருமண மண்டபம் **அரசாணி** - அரசங்கிளையை நட்டு வைத்தல். **பாலிகை** - தானியங்களை முளைக்கப் போடும் மண் குடுவைகள். சிறு அகல் போல் இருக்கும். ஓமகுண்டம் கரகம், சால் இவற்றைக் குயவன் செய்தல் பந்தமூட்டி எனப்படும்.

309. முனிவர்கள் திருமணத்துக்கு வருதல்

எங்கணும் தீபம் ஏற்றினர் கீதம்
இசைத்தனர் இருடிமா தவரும்
அங்கிரர் வதிஷ்டன் குறுமுனி புலத்தியன்
அயன்மக வானும் ஆயி ரம்கண்
தங்கிட அளித்த கோதமன் வியாசன்
தவத்தின் மிக்கோரும் மணவறையில்
இங்கிதம் வேத சாரமும் ஒலிப்ப
எழிலுற இருந்தனர் அன்றே.

எங்கு பார்த்தாலும் விளக்குகள் ஏற்றப்பட்டன. பாடல்கள் பாடப்பட்டன. முனிவர்களில் அங்கிரர், வசிஷ்டர், அகத்தியர், புலத்தியர் இவர்களோடு இந்திரன் பிரமனும், இந்திரனுக்கு ஆயிரம் கண் கொடுத்த கௌதமரும், வியாச முனிவரும் இன்னும் தவத்தில் மிக்க முனிவர்களும், மணவறையில் வேதங்கள் ஒலிக்க அழகுற வீற்றிருந்தார்கள்.

இருடி - ரிஷி, முனிவர், **குறுமுனி** - அகத்தியர், **மகவான்** - இந்திரன், இந்திரனுக்கு ஆயிரம் கண் அளித்த கோதமன் - கௌதம முனிவரின் மனைவி அகலிகை. இந்திரன் அகலி. மீது ஆசை கொண்டான். கௌதமர் தினமும் விடியலில் சேவல் கூவியதும் ஆற்றுக்குக் குளிக்கப் போவார். ஒருநாள் விடியும் முன்பே சேவல் வடிவம் எடுத்துக் கூவினான் இந்திரன். முனிவரும் ஆற்றுக்குப் போய்விட்டார். அப்போது கௌதமர் வேடமெடுத்த இந்திரன் "இன்னும் விடியவில்லை திரும்பி விட்டேன்" என்று கூறி அகலிகையைச் சேர்ந்தான். கௌதமர் திரும்பி வரவே பூனை வடிவெடுத்து ஓடினான். சினம் கொண்ட முனிவர், "பெண்மீது ஆசைப்பட்டதால் உன் உடல் முழுவதும் ஆயிரம் பெண் குறி ஏற்படட்டும்" என்று சாபமிட்டார். இந்திரன் மன்னிப்பு கேட்கவே அது மற்றவர்க்குக் கண்ணாகத் தெரியும் என்றார். அகலிகையைக் கல்லாக மாறும்படி சாபமிட்டார். இராமர் பாதம்பட்டுச் சாபம் நீங்கினாள் அகலிகை.

310. அத்திரி பந்தல் இல்லையா எனல்

நற்றவச் சனகன் நவிலஅத் திரியும்
நல்லடி இறைஞ்சியே இசைப்பான்
உத்தம பந்தலில் வாதமங் களமிவ்
வுலகுள தோவென உரைப்பான்
பத்தரை மாற்றால் இழைத்தமண் டபமும்
பரிதிபோல் உதையமா யிருப்ப
புத்தியில் நினைத்தீர் பூதலப் புதுமை
பொன்னுல கேற்குமோ என்றான்.

சனகர் இப்படித் திருமணத்துக்கான ஆயத்தங்களையெல்லாம் கூற, அத்திரி முனிவர் சனகரை வணங்கி, "பந்தலில்லாத திருமணமும் உண்டோ" என்றார். பத்தரை மாற்றுப் பொன்னால் இழைத்த மண்டபம், சூரிய ஒளிபோல் மின்னும்போது நீங்கள் சொன்ன பந்தல் என்னும் இவ்வுலகப் புதுமை தேவருலகுக்குப் பொருந்துமோ?" என்றார் சனகர்.

311. மந்திர மாலையை நீராட்டுதல்

சீருடன் எனது செவிகுளிர்ந்த தினிமேல்
செப்பெனச் சனகனும் உரைப்பான்
வாரிசை மலரோன் மணவறை அதனில்
மகிழ்ச்சியாய் உறைந்தவன் னியன்தன்
பேரிசை செய்து கொலுவினில் இருத்திப்
பிழையிலாச் சடங்கினை முடித்து
நாரிமந் திரமா லையைநதி ஆட்டி
நன்மணக் கோலமும் புரிந்தார்.

"என்னுடைய செவி குளிர்ந்தது, இனிமேல் கூறுங்கள்" என்று அத்திரி கூறச் சனகனும் மேலே கூறத் தொடங்கினார். தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் மணவறையில் மகிழ்ச்சியாய் அமர்ந்திருந்த வன்னியனுக்கு மந்திரங்கள் உரைத்து, கொலுவில் அமர்த்திச் சடங்குகளை முடித்தார். மந்திர மாலையை நீராட்டி மணக்கோலம் செய்தார்கள்.

312. அணிகலன்கள் பூட்டுதல்

கோதிலாக் குழலில் சம்பங்கி எண்ணெய்க்
கூட்டியே அகில்புகை கொடுத்து
சோதியாய்ச் சீவி வகுத்துப் பின்னலுமே
சுடரென அணிகலன் அமைத்து
காதினி லணியும் கச்சுமே லணியும்
கரமணி இடைமணி கப்ப
பாதமேல் சதங்கை நூபுரம் ஒலிப்பப்
பசும்பொன் பட்டாடையும் அளித்தார்.

குற்றமற்ற கூந்தலில் சம்பங்கி எண்ணெய் தடவி, அகில்புகை ஊட்டி, கூந்தலை ஒளிபெற வாரி, வகிடு எடுத்துப் பின்னலிட்டு, தலையணிகள் அணிவித்து, காதணி, கழுத்தணி, கையணி, இடையணி

என எல்லா அணிகலன்களும் பூட்டி, பாதங்களில் சிலம்பு, பாடகம், தண்டை எனப்பலவகை அணிகளும் பூட்டிப் பட்டாடை உடுத்தினர்.

கோது - குற்றம். **குழல்** - கூந்தல்.

313. மலர்சூட்டி மையிட்டுப் பொட்டிடுதல்

அம்பிகை அணியும் அணிகலம் அனைத்தும்
அரிவையர்க் காமென அளித்தே
உம்பர்கோன் மகளுக்கு உகந்துநன் மலரால்
ஒளிபெற சூடினர் உளமும்
கம்பித மன்ன மூக்கினில் கண்ணில்
கறுத்தால் அஞ்சனந் தீட்டி
அம்புலி நுதலில் சிந்துரம் இலங்க
அருமண வறைஇருத் தினனால்.

அம்பிகையாகிய பார்வதியின் அணிகலன்கள் அனைத்தும் இப்பெண்ணிற்கே எனப்பூட்டி, தேவேந்திரன் மகளாகிய அம்மந்திர மாலைக்கு மலர் சூட்டி, மூக்கில் மூக்குத்தி அணிவித்துக் கண்ணில் கரிய மை தீட்டி, பிறை நெற்றியில் பொட்டு வைத்துத் திருமண அறைக்கு அழைத்து வந்து அமர்த்தினர்.

அஞ்சனம் - மை **அம்புலி** - பிறை. **நுதல்** - நெற்றி. **சிந்துரம்** திலகம்.

314. அக்கினியும் ஆகுதியும்

சேயிழை சடங்கு விதிமுறை செலுத்தி
சீருள வன்னியன் வலப்பால்
சாயலாம் மயிலின் பெடையெனு மாது
தழைத்திட தன்னிக ரில்லா
மாயவன் தன்மக னோம குண்டத்தின்
மந்திரமுரைத் தழல்வ ளர்த்து

நேயமாய் காம தேனுவின் நெய்யை
நீதியாய் ஆகுதி சொரிந்தார்.

பிரமன், பெண்ணுக்குரிய சடங்கு செய்து, வன்னிய வீரனின் வலப்பால் பெண் மயில் போன்ற சாயலை உடையவளை அமர்த்தி, ஓமகுண்டத்தில் மந்திரத்துடன் அக்னி வளர்த்துக் காமதேனுவின் நெய்யை ஆகுதியாய்ச் சொரிந்தார்.

சேயிழை - செம்மையான ஆபரணங்களை அணிந்த பெண் **சாயல்** - அழகு. **மயிலின் பெடை** - பெண் மயில். **அழல்** - அக்னி தீ **ஆகுதி** - வேள்விக்கு உணவு.

315. திருமாங்கல்யம் பூட்டுதல்

வானவர் பேரி முழங்கிட மலரோன்
வன்னியன் தாதை ஈசனையும்
பானலம் மகவான் இருபுறம் சூழ
சத்தியம் உரைப்பநீர் பரிந்து
சோனையின் மலர்போல் கற்பக மலரைச்
சொரிந்திடச் சுந்தர வீரன்
சானுமந் திரமாலை யின்நடுக் கழுத்தில்
சரடுசூழ் மங்கல மணிந்தான்.

தேவர்கள் பெரிய தோல்வாத்தியமாகிய பேரியை முழங்க, பிரமன், வன்னியன் தந்தையாகிய ஈசனையும், மந்திரமாலையின் தந்தையாகிய தேவேந்திரனையும் இருபுறமும் அழைத்து நிற்க வைக்கத் தேவேந்திரன் தன்மகளை நீர் வார்த்துக் கொடுக்க, அந்தணர் சோனை மலர் போல் கற்பக மலர்களைச் சொரிய, வீரனாகிய வன்னியன் இலக்குமியை ஒத்த மந்திரமாலையின் கழுத்தில் மாங்கல்யம் அணிவித்தான்.

பேரி - பெரிய தோல் வாத்தியம். **தாதை** - தந்தை. **சானு** - இலக்குமி.

316. சயந்தன் பொரியிடுதல்

வன்னியன் மந்திர மாலை செங்கரம்
தன்னுடை கரத்தினால் பிடித்துத் தையலை
மன்னிய நெற்பொரி மகவான் அளித்திடும்
தன்னது கரத்தினால் சயந்தன் சொரிந்தனன்.

வன்னிய வீரன், மந்திர மாலையின் சிவந்த கரத்தைத் தன்னுடைய கரத்தினால் பிடிக்க, இந்திரன் மகன் சயந்தன் தன் கையினால் நெல் பொரி இட்டு அவ்விருவர் கரம்பிடித்து வேள்வியில் சொரிந்தான்.

தையல் - பெண். **மகவான்** - இந்திரன். **சயந்தன்** - இந்திரன் மகன், மைத்துனன் பொரி இட வேண்டும் என்னும் விதிப்படி பொரி இட்டான்.

317. அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்

செம்மலர் திருவெனும் சேயிழைப் பாதம்
அம்மியில் இருத்தியே அருந்ததிப் பெயரைக்
கொம்மையாம் முலைவளர் கோதை கற்றிட
சிம்மா சனத்தில் செழிப்புடன் இருந்தனன்.

சிவந்த தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி போன்ற மந்திர மாலையின் பாதங்களை அம்மியில் இருத்தி அருந்ததியின் பெயரை அவள் கற்குமாறு உரைத்துச் சிம்மாசனத்தில் இருவரும் செழிப்போடு அமர்ந்தனர்.

318. நெற்றிப் பட்டம் கட்டுதல்

சங்கரன் அரியயன் தண்டு லத்தினால்
மங்கலச் சேஷைக ளிட்டு வாழ்த்தினர்
நங்கையின் நுதலினில் மாமன் பட்டமும்
இங்கித மாமியும் பட்டம் இயற்றினார்.

சிவன், திருமால், பிரமன் மூவரும் மங்கல அரிசியிட்டு வாழ்த்தினர். மாமனும் மாமியும் மங்கையின் நெற்றியில் பட்டம் கட்டினர்.

தண்டுலம் - சேஷை - அட்சதை, அரிசி

319. பூரிதானம் கொடுத்தல்

நன்னநல் வேளையில் நாரி பாகனும்
தன்னுளம் உவகையாய்த் தானம் ஈந்தனன்
வன்னிய பூபனும் மாதி டத்துறப்
பொன்மணி மண்டபம் புக்கி னானரோ.

நல்ல வேளையில் சிவனும் மகிழ்ந்து அனைவர்க்கும் தானம் அளித்தான். வன்னிய வீரன் மங்கை இடப்பக்கம் வர பொன்னாலான மணிமண்டபத்துள் நுழைந்தான்.

மாது - மங்கை மந்திர மாலை. **இடத்துற** - இடப்பக்கம் வர, **புக்கினான்** - நுழைந்தான். **அரோ** - அசை.

320. அனைவரும் வாழ்த்துதல்

சந்தனம் அணிந்து அடைக்காய்
தானவர் அருந்த வீரன்
சுந்தரக் கோல மன்னன்
சுரரடி இறைஞ்ச வேத
மந்திர முரைத்து வாழ்த்த
மகேஸ்வரன் உமையும் வாழ்த்தி
அந்தஅஞ் செழுத்தை ஓத
அரியயன் வாக்குப் பெற்றான்.

திருமணத்துக்கு வந்தவர் அனைவரும் சந்தனம் அணிந்து தாம்பூலம் பெற்றனர். அழகிய கோலம்பூண்ட வன்னிய வீரன்

தேவர்களை வணங்கினான். அவர்கள் வேத மந்திரம் கூறி வாழ்த்தினர் சிவனும் உமையும் வாழ்த்தி "நமசிவாய" என்ற ஐந்தெழுத்தை ஓதினர். அரியும் பிரமனும் நல்வாக்கு அளித்தனர்.

அடைக்காய் - தாம்பூலம். வெற்றிலை பாக்கு. **இறைஞ்ச** - வணங்க **சுரர்** - தேவர்.

321. நாகவல்லிச் சடங்கு

தேவர்கோன் தாளி றைஞ்சி
செப்பிய வாக்கு பெற்று
காவலர் கோலம் மன்னி
களிப்புற இருப்ப ஈசன்
தீவன மாக அன்னம்
திரட்டுப்பா லுடன ளிக்க
யாவரும் அருந்தி நாக
வல்லிகள் அனைத்தும் செய்தார்.

இந்திரன் அடியை வணங்கி, அவனுடைய வாழ்த்தையும் பெற்று. (திருமணக் கோலம் நீக்கி) அரச கோலம் பூண்டு மகிழ்ச்சியோடிருந்தான். இறைவன் திரட்டுப் பாலும், சோறும் அளித்தார். யாவரும் அருந்தி நாகவல்லி முகூர்த்தம் செய்தனர்.

தீவனம் - உணவு

322. மருவூட்டுதல்

சோதிசேர் உலுப்பை தன்னைச்
சொகுசுடன் மகவான் ஈய
ஆதியன் உவகை கூர்ந்தே
அழகுசம் பந்தம் பூண்டு
கோதிலாக் குகனும் வள்ளி
குஞ்சர மாது ஈசன்

நீதியாய் மணந்த மாது
நிறைந்தநற் தேவை யூட்ட.

ஒளி பொருந்திய காணிக்கைகளை இந்திரன் அளிக்க, சிவன் அவற்றை ஏற்றுச் சம்பந்தம் செய்தான். முருகனும், வள்ளி, தெய்வானையும், பார்வதியும் வீரவன்னியனுக்கும், மந்திர மாலைக்கும் மருவூட்டினார்கள்.

உலுப்பை - காணிக்கை. **குஞ்சரமாது** - தெய்வயானை, **தேவையூட்டுதல்** - மருவூட்டுதல்.

323. அனைவரும் அமராவதி செல்லுதல்

ஈசன்நல் அருளும் பெற்றே
இமையவர் குழாங்கள் சூழ
மாசிலாச் சிவிகை மீதில்
வஞ்சியாள் மகிழ வேலன்
பாசமாம் மயில்மீ தேறப்
பார்த்திப வீரன் தானும்
நேசமாம் புரவி மீது
நிறைந்திட ஏகல் உற்றார்.

இறைவனிடம் ஆசி பெற்று, தேவர்கள் சூழ, மந்திரமாலை பல்லக்கிலும், வேலன் மயில்மீதிலும், வன்னிய வீரன் அக்கினிக் குதிரையிலுமாகத் தேவலோகம் சென்றனர்.

324. சிவன் மைந்தர்களை அழைக்க வருதல்

துந்துமி முழங்க வீதி தோரணம் இலங்க மாதர்
அந்தஆ லாத்தி யேந்த ஆயிழை மாதர் ஆட
இந்திரன் கோயில் ஏகி எழிலமு துண்ட காலை
மந்திர கிரிவாழ் ஈசன் மக்களை அழைப்ப
தானான்.

தேவ துந்துபி ஒலிக்க. வீதியெங்கும் தோரணம் விளங்க, பெண்கள் ஆலத்தி சுற்றி, நடனமாட, இந்திரன் அரண்மனை சென்று விருந்துண்டனர். கயிலை ஈசன் தன் மக்களை அழைக்கப் புறப்பட்டார்.

கோயில் - அரண்மனை. **மந்திர கிரி** - கயிலை.

325. இந்திரன் வரிசை செய்தல்

பொன்னகர் உறைந்தான் தேவர்
பூபனும் எதிர்கொண் டேகி
அன்னவன் அடியைப் போற்றி
அழைத்துமே அமுது நல்க
மின்னிடை மாதர் சூழ
வேலன் வீரனும் களிக்க
நன்னயப் பணிகள் ஈய
நாரி பாகன்பாற் சென்றார்.

அமராவதி ஆளும் தேவேந்திரனும், ஈசனை எதிர் கொண்டழைத்து வந்து, அவனை வணங்கி விருந்தளித்தான். வேலனுக்கும், வன்னியர்க்கும், பெண்களுக்கும் ஆடைகள் நல்கினான். எல்லோரும் கயிலை திரும்பினர்.

மின் - மின்னல். **பணி** - ஆபரணம்.

326. வன்னியனுக்கு உருத்திர வன்னியன் என்று பெயர் சூட்டல்

கயிலையி லுறைந்த ஈசன்
காதலால் உரைப்பா னெந்தன்
ஒயிலுள வீரன் நேரு
ருத்திர வன்னியன் என்றே

இயல்புள நாமம் ஈய்ந்தேன்
இவ்வுல கினில்வா ழென்ன
குயில்மொழி மடந்தை சூழ
குழகனை நோக்கிக் கூறும்.

கயிலையில் வாழும் சிவன் அன்போடு வன்னியனை நோக்கி, "என்னை ஒத்த வீரன் நீ, எனவே உருத்திர வன்னியன் என்ற பெயர் அளித்தேன். இப்பெயரோடு இவ்வுலகில் நிலைத்து வாழ்" என்று கூற வன்னியன் குயில் போன்ற மொழியை உடைய தன் மனைவியோடு சேர்ந்து, சிவனை நோக்கிக் கூறுவான்.

ஒயில் - **அழகு. நாமம்** - பெயர். **குழகன்** - சிவன்.

327. வன்னிய வீரன் தனக்குப் பிள்ளைகள் வேண்ட சிவன் நான்கு பிள்ளைகள் அளித்தல்

நாதனே நடன பாதா
நற்சிறு பாலர் இன்று
தீதிலா தளிப்பை என்னத்
திங்கள்செஞ் சடையார் ஓம
வேதிகை அருகில் சார்ந்து
மிகஅன்பு புரிய பாலர்
சோதிசேர் நான்கு வீரர்
தோன்றியே தொழுது நின்றார்.

"தலைவனே ! நடனம் ஆடுபவனே ! நல்ல சிறிய பிள்ளைகளை எனக்கு அளிப்பாயாக" ! என்று வேண்டினான். திங்களைத் தலையில் அணிந்த சிவன் ஓம குண்டத்தின் அருகில் சென்று அன்புடன் அழைக்க நான்கு வீரர்கள் தோன்றி வணங்கினர்.

தீதிலாது - குற்றமில்லாது **அளிப்பை** - அளிப்பாய். **வேதிகை** - குண்டம்.

328. வீரர்களின் கோலம்

வான்ப ரியுடன ருளியும் மன்னிட
தேன்ப ரவுசெந் தாரணி தோளின்மேவ
கூன்சி லைக்குது கூற்றம் இலங்கவெங்
கோன டிக்கண் டிறைஞ்சிடக் கூறுவான்.

நான்கு வீரரும் நான்கு குதிரையுடன், தேன் நிறைந்த செங்கழுநீர் மாலை தோளில் விளங்க, வளைந்த வில்லுடன் எமன் போல சிவனடியைத் தொழுது நின்றார்கள்.

பரி - குதிரை **கூன்** - வளைந்த.

329. நால்வருக்கும் சிவன் பெயரிடுதல்

எந்தன் மைந்தன் இதயம் உவகையால்
வந்த பாலகர் நால்வ ரவர்பெயர்
முந்திய பாலகன் கிருஷ்ண னென்றாம்பின்
தந்த வன்பெயர் பிரம னென்றனன்.

330.

முத்த னாம்சம்பு மூன்றாம் புதல்வனாம்
சத்தி அக்கினி நாமமும் சாற்றினர்
பத்தி யாகிய பாரில் நால்வரும்
நத்த வத்துடன் நண்ணிய காலையில்.

சிவன் தன்னை வணங்கிய நால்வரையும் அருளுடன் நோக்கி, “என் மகன் மனம் மகிழ வந்த பிள்ளைகள் நீங்கள் நால்வர். மூத்தவன் பெயர் கிருஷ்ணன். இரண்டாமவன் பெயர் பிரமன். மூன்றாம் புதல்வன் சம்பு. நான்காம் புதல்வன் பெயர் அக்கினி” எனப் பெயர் வைத்தார் பிள்ளைகள் பக்தியுடனும், தவத்துடனும் வளர்ந்தனர்.

331. வேதம் அஸ்திரம் கற்றல்

நாலு வேதமும் நற்சிலை அஸ்திரம்
வேலன் ஓத வினவிய காலையில்
ஆல முண்டவன் அன்புக் குகந்தவன்
சீல காந்தமுனி அளித்த செல்வியாள்.

நான்கு வேதங்களையும், வில் வித்தை, அம்பு வித்தைகளையும், முருகன் ஓத உணர்ந்தனர். அப்போது ஆலவிடம் உண்ட சிவனின் அன்புக்கு உகந்தவனாகிய ஒழுக்கமுள்ள காந்தமுனி சுசீலன் என்பவரின் பெண்கள்.

சிலை - வில். **அஸ்திரம்** - அம்பு. **ஆலம்** - ஆலகாலவிடம், **சீலம்** - ஒழுக்கம்.

332. நால்வருக்கும் திருமணம் செய்தல்

இந்தி ராணி எழிலுள நாரணி
சுந்த ரிப்பெயர் தோகை சுமங்கலி
அந்த மாம்பெயர் நால்வரவர் தம்மைச்
சந்த வீரன் தனையர் மணந்தனர்.

இந்திராணி, நாரணி, சுந்தரி, சுமங்கலி என்ற நால்வரையும், வன்னிய வீரன் பிள்ளைகள் நால்வரும் மணந்தனர்.

சந்த - அழகு பொருந்திய

333. வன்னியர் படை பெற பஞ்சாட்சரம் உச்சரித்தல்

பஞ்ச வன்னியர் பார்த்திபர் பாங்கினை
பஞ்ச பாணனைப் பஸ்பம தாக்கிய
அஞ்செ ழுத்தின் பரமனைத் தேர்ந்துநல்
அஞ்செ ழுத்துச் சரிக்கப் படையென.

ஐந்து வன்னியர்களும், மன்மதனை எரித்த சிவனின் அஞ்செழுத்தைச் சிவனைப் பக்தியுடன் நினைத்து உச்சரித்தனர்.

பஞ்சம் - ஐந்து.

334. குதிரை, யானை, தேர்ப்படை பெருகுதல்

பந்தி பந்தியாய்ப் பாரில் நிறையும்
தந்தி மாவும் இரதமும் தாஷ்டியாய்
வந்த இலட்சம் படைகள் மயேஸ்வரன்
சிந்தை மெச்சச் சிருஷ்டிசெய் தானரோ.

யானை, குதிரை, தேர்ப்படைகளை வரிசை வரிசையாக இலட்சம் இலட்சமாகப் பூமியே நிறையும்படி மனம் மகிழப் படைத்தான் சிவன்.

பந்தி - வரிசை. **தந்தி** - யானை. **மா** - குதிரை. **இரதம்** - தேர். **சிருஷ்டி செய்தான்** - படைத்தான்

335. படைவீரர்கள்

புயமெ னும்தனு மன்னு புயத்தினர்
தயவி லாத மனத்தின் தானவர்
அயர்வு நீக்கும் அருஞ்சிலை வாளியும்
புயக ரத்தினில் பிடித்திடும் வீரரே.

மேகம் போன்ற புயத்தில் வில்லை ஏந்தியவர். கருணையே இல்லாத மனத்தை உடையவர். தளர்ச்சி நீக்கும் வில்லும் அம்பும் தோளிலும் கையிலும் பிடித்தவர்.

புயல் - மேகம். **தனு** - வில். **சிலை** - வில். **வாளி** - அம்பு. **அயர்வு** - தளர்ச்சி.

336. வீரர்களின் திறமை

ஃரே ழுபதி னாலு லகங்களில்
சேரு மாண்பரின் சென்னி ஒருகணை

ஓரம் பேகி உடைப்பர்கள் அண்டமும்
சூரர் வேரைத் தொளைத்திடும் வீரரே.

பதினாலு உலகங்களில் உள்ள அனைவரின் தலைகளையும் ஒரே அம்பால் கொய்வார்கள். ஒரே அம்பால் அண்டத்தையே உடைப்பார்கள். அசுரர்களின் வேரையே அறுக்கக் கூடிய வீரர்கள் அவர்கள்.

ஈரேழு பதினாலு உலகம் - மேல் ஏழு, கீழ் ஏழு உலகம், மேல் ஏழு - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மகாலோகம், தபோலோகம், சனலோகம், சத்தியலோகம். கீழ் ஏழு - அதல, விதல, சுதல, தராதல, மகாதல, இரசாதல, பாதாளம். **சென்னி** - தலை.

337. புய வலிமை

அட்ட குன்றை அருங்கரத் தண்டினால்
தட்டி நற்புயத் தாலதைச் சாய்ப்பவர்
மட்டி லாத அரக்கரை மண்டிநாய்க்
குட்டி யென்று கொலைசெயும் வீரரே.

எட்டு மலைகளையும் கையிலுள்ள கதையால் தட்டித் தங்கள் தோள்களால் சாய்ப்பர். அளவில்லாத அரக்கர் கூட்டங்களை நெருங்கி நாய்க்குட்டியை நசுக்குவது போல் நசுக்குவர்.

அட்ட குன்று - எட்டுமலைகள், அவை இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கயிலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தம்.

338. அம்பின் வலிமை

ஒருச ரத்தினில் உவரி சுவறும்இன்
னொருச ரத்தினில் உலகம் பொடியெழும்
ஒருச ரத்தினில் உதிர்ந்திடும் தாரகை
ஒருச ரத்தினில் உரகம் திடுக்கிடும்.

ஓர் அம்பு விட்டால் கடல் வற்றும். இன்னோர் அம்பு விட்டால் உலகம் பொடியாகும், ஓர் அம்பு விட்டால் விண்மீன்கள் உதிரும் ஓர் அம்பு விட்டால் பாம்பு திடுக்கிடும்.

உவரி - கடல். **சுவறும்** - வற்றும். **சரம்** - அம்பு. **தாரகை** - விண்மீன், நட்சத்திரம். **உரகம்** - பாம்பு.

339. உடல் வலிமை

அண்டர் லோகம் அதிர்ந்திடும் வாளும்
கொண்டல் ஏழு குதித்திடும் சூலமும்
சண்டன் பாசம் சாரங்கம் பினாகமும்
துண்டம் ஆகத் துணிக்கும்நல் வீரரே.

தேவ லோகத்தைப் பொடி செய்யும் வாளையும், ஏழு மேகம் பிளக்கும் சூலத்தையும், எமனுடைய பாசம், திருமாலின் சாரங்கம் என்னும் வில், சிவனின் பினாகம் என்னும் வில் ஆகியவற்றையும் ஒருநொடியில் துண்டித்து விடும் ஆற்றல் பெற்றவர் அவ்வீரர்கள்.

கொண்டல் - மேகம். **ஏழு மேகம்** - ஆவர்த்தம், சம்வர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், வானமுகி, நீலவருணம்.

340. முனிவர்களும் தேவர்களும் கவலை நீங்குதல்

சேனை சூழரன் சேயும் நற்பாலரும்
வானு ளோரும் அயனு மாலுடன்
கான கத்தி லுறைந்த முனிவரும்
தான கத்தி தயங்கித் தவிர்ந்தனர்.

சேனைகள் சூழ்ந்தவுடன் வீர வன்னியனும், அவன் பிள்ளைகளும், தேவர்களும், பிரமனும், திருமாலும், காட்டில் வாழும் முனிவர் அனைவரும் வாதாவியினால் ஏற்படும் துன்பம் நீங்கியது எனக்கவலை தீர்ந்தனர்.

சேனை - படை **பாலர்** - பிள்ளைகள். **கானகம்** - காடு **தான கத்தி** - அரக்கனால் ஏற்படும துன்பம்

341. உருத்திர வன்னியன் சிவனிடம் பேசுதல்

மன்னு ருத்திர வன்னியன் மாதுடன்
துன்னு பால ரினங்களும் சூழவே
அன்னம் ஏறும் அயனும் அறிகிலா
முன்ன வன்பதம் ஏத்தி மொழிகுவான்.

ருத்திர வன்னியன் தன் மனைவியும், குழந்தைகளும் சூழ அன்னப் பறவையில் ஏறும் பிரமனும், அறிய முடியாத சிவனின் பாதங்களை வாழ்த்திக் கூறுவான்.

342. சிவன் தனக்குக் கொடுத்ததைக் கூறுதல்

வன்னி யாலெனை வந்திடச் செய்தனை
பொன்ன கர்க்கிறை புத்திரி ஈந்தனை
குன்ன மின்றி குழந்தை அளித்தனை
நின்று செஞ்சர வீரரை ஈய்ந்தனை.

அக்கினியில் என்னைத் தோற்றுவித்தீர்கள். தேவலோக அதிபதியின் பெண்ணைக் கொடுத்தீர்கள். குறைவின்றிக் குழந்தைகளைக் கொடுத்தீர்கள். அம்பு வீசும் வீரரை அளித்தீர்கள்.

வன்னி - அக்னி. **பொன்னகர்** - தேவருலகம். **இறை** - தலைவன். **புத்திரி** - மகள். **குன்னம்** - குறைவு

343. இப்பூமியை ஆளவும் அருள வேண்டும் எனல்

வீர னெனப்புகழ் மேதினி மிக்கவர்
கூறி யேநதி பகுதி அளித்திட
பார மர்ந்து பலனுற உன்னருள்
தாரு மென்றுரை சாற்றினன் மன்னனும்.

"உலகில் உள்ளவர் 'வீரன்' என்று என்னுடைய புகழைக் கூறுமாறு, நதிப்பகுதி கிடைத்து நான் ராச்சியம் ஆள, உன்னருள் தர வேண்டும்" என்று வேண்டினான்.

மேதினி - பூமி **சாற்றினான்** - கூறினன்.

344. தேவர்கள் துன்பம் தீர்ந்த பின் உனக்குப் பூமியளிப்பேன் என்று சிவன் கூறுதல்

அத்தை நாமருள் செய்குவம் அரசரே
சித்தர் கின்னரர் தேவர் அரிஅயன்
மெத்த வாட்டும் மிடிகளைத் தீர்த்தபின்
பத்தி யாகஇப் பாரளிப் பேனென்றான்.

"சித்தர், கின்னரர், தேவர், திருமால், பிரமன் இவர்களை மிகவும் வாட்டும் துன்பம் தீர்ந்தபின் உனக்கு இப்பூமியை அளிப்பேன். அதனை நான் அருள் செய்வேன் நீ கவலைப் படாதே !" என்று சிவன் கூறினார்.

அத்தை - அதனை. **மிடி** - துன்பம்

345. உருத்திர வன்னியன் வாதாவியைக் கொல்வேன் எனல்.

உள்ளம் பூரித் துரைத்தனன் வீரர்கோன்
வள்ள லேஅவு ணாதி சிரத்தினை
துள்ள வெட்டித் துவசமும் சூடுவன்
எள்ளில் எண்ணெயாய் எங்கும் நிறைந்தவா.

மனம் மகிழ்ந்த உருத்திர வன்னியன், "எள்ளில் எண்ணெய் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பது போல் கண்ணுக்குத் தெரியாமல் எங்கும் நிறைந்திருப்பவனே ! வள்ளலே ! வாதாவியின் சிரத்தையும் அவனுடைய துணைவர்களின் சிரங்களையும் துள்ளும்படி வெட்டி வெற்றி பெறுவேன்" என்று உறுதி கூறினான்.

துவசம் - வெற்றிக்கொடி

346. பார்வதியின் உரை

ஈச னேஎன் றிறைஞ்சி எழிலுள
போச னமுண் டுள்ளமு மன்னிட
வாச வன்தரு மந்திர மாலையின்
நேச மாமி ஒன்று நிகழ்த்துவள்.

இறைவனே என வணங்கி, உணவுண்டு, மனமகிழ்ச்சியோடு இருக்கும் போது இந்திரன் மகள் மந்திர மாலையின் மாமியாரான பார்வதி கூறுவாள்.

போசனம் - உணவு.

347. பரமேஸ்வரி மந்திர மாலையை வாழ்த்துதல்

பெண்ம யில்பே டையின் சுரிகுழல்
தன்மை யாமலர்த் தாரணி தையலே
வண்மை யென்றன் சிறுவன் மணந்திடும்
கண்மணி யென்றும் காதலன் வாழ்கவே.

"மயில் போன்ற சாயலை உடையவளே! வளைந்த கூந்தலை உடையவளே! குளிர்ச்சி பொருந்திய மலர்மாலை அணிந்த பெண்ணே! வளமுடைய என் மகனை மணந்த கண்மணியே! வாழ்க. உன் கணவனும் வாழ்க!"

மயில் பேடை - பெண்மயில். **சுரி** - வளைந்த. **மலர்த்தாரணி** - மலர் + தார் + அணி, **தையல்** - பெண்.

348.

என்று முன்கிளை ஞோரிவ் வெழிலதாய்
மன்றல் தொடையோ டுவர்மண் ணின்மேல்
வென்றி சூடிய வீரன் விரும்பிய
பொன்தொ டியென்று உத்தமி ஓதினாள்.

"வெற்றி பொருந்திய வீரன் மணந்த பொற்றொடியே! உன் சுற்றத்தோர் என்றும் மணம் மிக்க வெற்றி மாலையோடு மண்ணின் மேல் நீண்டநாள் வாழ்வர்" என்று உத்தமியாம் பரமேஸ்வரி மந்திரமாலையை வாழ்த்தினாள்.

கிளைஞோர் - சுற்றத்தினர். **மன்றல்** - மணம். **தொடை** - மாலை. **வென்றி** - வெற்றி **பொன்தொடி** - பொன்னால் செய்யப்பட்ட வளையல், இங்கு அதனை அணிந்த பெண் **உத்தமி** - உயர்ந்தவள். இங்கு பார்வதி.

349. சிவன் திசைக் காவலர்களிடம் அவரவர் இடம் போகுமாறு கூறுதல்

அட்ட பாலரோ டையன் அறைகுவான்
துட்ட அரக்கரைத் தூளிதம் செய்பவன்
இட்ட மாம்உறை ஏகும் எனவவர்
மட்டி வாப்பதி ஏகி மகிழ்ந்தனர்.

அஷ்டபாலகரைப் பார்த்துச் சிவன், "வாதாவி அரக்கனையும் அவன் படையையும் அழிப்பான் வீர வன்னியன். நீங்கள் அவரவர் இருப்பிடம் சென்று கவலையின்றி வாழுங்கள்" என்றான். அவர்கள் தத்தம் நகரம் சென்று மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

தூளிதம் - பொடி.

350. சனகர் கதையைத் தொடர்தல்

இப்ப டிக்கவ தாரம் எடுத்தனர்
தப்பி லாமுனி யேயெனச் சாற்றினர்
கப்பு மேனிக் கயவர்கள் கதையெலாம்
செப்பு வோமெனச் சிந்தை வைத்தே.

"இப்படியாகத் தானே வன்னிய வீரன் தோன்றினான். குற்றமற்ற முனிவரே ! இன்னும் அந்தக் கயவராகிய அரக்கர் கதையெல்லாம்

கூறுவேன் மனம் பொருந்திக் கேளுங்கள்" என்று சனகர் அத்திரி முனிவரிடம் கூறுகிறார்.

12. சூறைச் சருக்கம்

351. வாதாவி அமைச்சர்களிடம் தேவர்களைக் காணவில்லையே எனல்

இமையவர் இப்படி இருக்க இயக்கர்
அதிபதி யானஇறைவ னன்பால்
அமையும் அமைச்சரை நோக்கி அமரர்
அயனரியும் அஷ்டபாலர் ஆனோர்
நிமைநேரம் அகலாமல் என்னேவல் செலுத்த
அவரை நெடுநாட் காணேன்
நமதுதவம் அவமா மோஎன் றுபுவி
நடுங்கவுரை நவிலல் உற்றான்.

தேவர்கள் இவ்வாறு கவலையில்லாமல் இருக்க, அரக்கர் தலைவனாகிய வாதாவி அன்புடைய அமைச்சரை நோக்கி, "தேவர், திருமால், பிரமன், அட்டதிக்கு பாலர் அனைவரும் நொடி நேரமும் அகலாமல் இங்கிருந்து நான் இட்ட ஏவல்களைச் செய்வார்களே ! நீண்ட நாட்களாக அவர்களைக் காணவில்லையே நம் தவம் வீணாகி விட்டதா" என்று பூமி நடுங்கக் கேட்டான்.

இயக்கர் - அரக்கர். **நிமைநேரம்** - நொடிநேரம். கண் இமைக்கும் நேரம்.

352. "பிறர் நகைக்கமாட்டார்களா?" எனல்

ஒருமுனி யல்வேன் தமையனை இழந்த
கோரமாய்த் தவமது செய்ய
எருதினில் ஏறி எனக்கருள் ஈந்த
இன்பமும் தவறின்றிப் பணிந்தேன்

அருவுரை அமரர் கோன்முத லாயித்
தரணியில் ஏவலே புரியும்
பெருமையை இழந்தால் பிறர்நகை யாரோ
பேசுவீர் அமைச்சரே என்றான்.

"நான் முனிவன் இல்லை. என் தமையனை இழந்த துன்பத்தால் கடுமையான தவம் செய்தேன் இறைவன் இடப வாகனனாய் எனக்கருள் புரிந்தான். அவனைப் பணிந்து இச்செல்வம் பெற்றேன். இப்போது தேவர்கள் எனக்கு ஏவல் புரிவது நீங்கினால் எல்லோரும் சிரிக்கமாட்டார்களா? அமைச்சரே ! கூறுவீர்" என்றான்.

353. அமைச்சர் "அவர்கள் சிவனருள் பெற்று இங்கிருந்து சென்று விட்டனர்" எனல்

அப்பொழு தமைச்சர் அரசனை ஏத்தி
அறைகுவர் அஷ்ட திக்கெலாம்
தப்பிலா உமது கீர்த்தியை நாட்டத்
தானவர் ஏவலுக் குகந்தார்
மைப்படி கண்ட அண்ணலின் அருளால்
வண்மைநம் பதியகன் றேகி
இப்பொழு திறைஞ்ச வந்தவர் இதயம்
இயம்பிட கருவமும் அடைந்தார்.

அமைச்சர் வாதாவியை வணங்கி "எட்டு திக்கிலும் உமது புகழை நிலைநாட்டும் வண்ணம் தேவர்கள் ஏவல் செய்தனர். சிவனின் அருளால் வளமான நம் நகரைவிட்டு அகன்று இப்பொழுது நம்மைப் பணிவதை விட்டதோடு கருவமும் அடைந்தார்கள்," என்றனர்.

கீர்த்தி - புகழ் **உகந்தார்** - விரும்பினார். **மைப்படி கண்டன்** - கருங்கழுத்தையுடையவன். சிவன்

354. வாதாவி "சிவன் வஞ்சகன் அல்லன் இது முருகன், திருமால் செயலாகத்தான் இருக்கும்" எனல்

மேருவில் உறையும் விமலன திதையம்
வெகுளிசூ தற்றது அன்றிக்
கூறிய வரமும் குறைத்திட அறியான்
கோதிலான் பழுதென லாகா
சீருடன் அளித்த சேயெனும் வேலன்
திணியதோ சீதரன் அருளி
லோரிரு வோரை யன்றிமற் றொருவரும்
அமரருக் கிடம்கொடா ரென்றான்.

(வாதாவி) "கயிலை மலையில் உறையும், குற்றமற்ற சிவனது இதயம் வெகுளித்தனமானது; அவன் சூது வாதற்றவன்; கொடுத்த வரத்தைக் குறைக்க மாட்டான்; குற்றமற்றவன்; அவன் மகன் முருகன் ஏதோ செய்திருப்பான். முருகனோ திருமாலோ இருவரில் ஒருவர் தவிர வேறொருவர் தேவர்க்கு இடம் கொடுக்க மாட்டார்" என்றான்.

சீதரன் - திருமால்.

355.

தந்தருள் வரமும் தற்பரன் அழித்தால்
தரணியில் புகழ்ச்சிகள் உளவோ
எந்தை யானவன் என்மீ தினில் பகைசெய்
திடரெனக் கீந்தன ஈந்தான்
மைந்தரின் தீதை தந்தை காப்பரென
மறையொலிப் பதுவென அமைச்சர்
புந்திதேர்ந் துரைப்பீர் எனஅவு ணன்தாள்
போற்றியே புகலுவ ரன்றே.

"கொடுத்த வரத்தை இறைவனே அழித்தால் இப்பூமியில் அவருக்குப் புகழேது? என் தந்தை அவர். என் மீது அவரே பகை கொள்ளுமாறு நான் என்ன தீங்கு செய்தேன்? அப்படியே தீங்கு செய்தாலும். மைந்தன் செய்த தீங்கைத் தந்தை பொறுப்பர் அல்லவா? அமைச்சர்களே! ஆராய்ந்து கூறுவீராக" என்றான். அமைச்சர்களும் வாதாவியின் திருவடியை வணங்கிக் கூறுவர்.

தற்பரன் - சிவன் **புந்தி** - அறிவு. **புகலுவர்** - கூறுவர்.

356. பரமசிவன் பெரியனல்லன் என அமைச்சர் கூறுதல்

நிருதர் பூண்டிருந்த நேமிமே லின்றி
நீக்கினார் உனதுதாய் இருந்தே
அருளின ஓரை பலன்தனா லிந்த
அவுனரின் கருவினை அணைந்தீர்
பெருமுடி அரசே எங்கள் பெம்மானே
பிதற்றிய இனிதுரை முழுவதும்
உருமையாக் கேளும் உரகவா பரணன்
உயர்ந்தவ னெனவுரை நீக்கும்.

"அரக்கர் ஆட்சியே பூமியில் இல்லாமல் வேரோடு நீக்கினார்கள். தாய் இருந்து உங்களைப் பெற்றாள். நீங்கள் பிறந்த வேளையின் பயனால் இந்த இராக்கத உருவையும். சேனையையும். ஆட்சியையும் அடைந்தீர்கள். நாங்கள் கூறுவதை முழுவதும் கேளுங்கள். பாம்பை ஆபரணமாகப் பெற்ற சிவன் பெரியவன் என்று கூறும் பேச்சை நீக்குங்கள்" என்றனர்.

நிருதர் - அரக்கர் **நேமி** - பூமி. **ஓரை** - நேரம். **உருமை** - உறுதி **உரக ஆபரணன்** - பாம்பை ஆபரணமாக உடையவன்.

357. பரமசிவனின் தீச்செயல்களைக் கூறுதல்

வேலனும் மாலும் வெகுணியாம் பகைஞர்
மீறிடா தவருயிர் சிதைப்பர்
சீலமுள் ளவனென் றுரைத்தரு ளரனின்
தீதினைச் செப்பிட வாகா
காலனை உதைத்தான் காமனை எரித்தான்
கதித்தமுப் புரங்களை முனிந்தான்
பாலனைத் தின்றான் பசுவதாய்ச் சோழன்
பரிந்தருள் சுதன்பழி கொண்டான்.

"முருகனும். திருமாலும். சினத்தினால் தன்னைப் பகைத்தவர்களைத்தான் அழிப்பர். ஆனால் நீர் ஒழுக்க முள்ளவனென்று கூறினீரே அந்தச் சிவன் செய்த கொடுமைகளை உரைக்கவே முடியாது. எமனை உதைத்தான். மன்மதனை எரித்தான். முப்புரங்களை அழித்தான்; ஒன்றுமறியாக் குழந்தையைத் தின்றான்; பசுவாக வந்து சோழனின் மகன் மேல் பழிபோட்டான்,"

பசுவதாய்ச் சோழன் மகனின் பழி கொண்ட கதை :

திருவாரூரில் ஒரு சோழன் நீதி தவறாமல் ஆண்டான். மறுநெறிப்படி ஆண்டதால் அவனுக்கு மனுநீதிச் சோழன் என்று பெயர். அவனுடைய ஒரே மகன் ஒருநாள் தேரேறி வரும்போது ஒரு பசுவின் கன்று சக்கரத்தின் முன் ஓடிவந்து விழுந்து உயிரை விட்டது. சோகம் தாங்காத பசு அரசனின் வாயிலில் கட்டியிருந்த மணியை அசைத்து நீதி கேட்டது. குறை சொல்வதற்காகக் கட்டப்பட்ட மணி அது. இதுவரை யாரும் எந்தக் குறையும் சொல்லாமல் அரசாண்டான் மனு இன்று ஒரு பழி வந்து விட்டதே என்று அமைச்சர்களைக் காரணம் கேட்க அமைச்சர் நடந்ததைக் கூறினர். மகன் மீது தவறில்லை. அரசன் தேர் வரக்கூடிய தெரு அது. அதுவும் ஒரே ஆரவாரத்தோடு உலா வந்தான். அப்படியும் ஓடிவந்து திடீரென விழந்தது கன்றின் தவறு. திடீரென விழுந்ததால் தேரை

நிறுத்தவும் முடியவில்லை. மகனின் மீது தவறில்லை யெனினும வேதங்களில் கூறப்பட்ட பிராயச் சித்தம் செய்து விடலாம் என்றனர். அமைச்சர் "உயிருக்கு உயிர்தான் நீதி பசு அடைந்த துன்பத்தை நான் அடைவதே முறை என் மகனைக் கீழே கிடததித் தேரை அவன்மீது ஏற்றுங்கள்" என்றான் அரசன். அமைச்சர் இளவரசன் மீது தேரை ஏற்றவும் முடியாமல். அரசனின் கட்டளையை மீறவும் முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். மன்னன் தானே தேரை நடத்தி மகனைக் கொன்றான். சிவன் காட்சி தந்து கன்றையும். மகனையும் அமைச்சரையும் உயிர்ப்பித்து இது தன் திருவிளையாடலே என்றார். மனுவின் நீதியை உலகுக்கு உணர்த்த சிவன் செய்த ஆடல் இது **சுதன்** - மகன்.

358.

அயன்முடி உகிரால் அரிந்தனன் அழலும்
அரவமும் சூலமும் மானும்
பயமின்றி அணிந்தனன் பருவிடம் மிடற்றில்
பாங்கென அருந்தினன் பண்டு
வயமதக் கரியின் உடலுரி அணிந்தனன்
வாதுசா மளையுடன் அடித்து
முயலகன் கலங்க மிதித்தனன் அவனை
முத்தனென் றுரைப்பது முறையோ.

பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைத் தன் நகத்தால் கிள்ளினான், நெருப்பையும். பாம்பையும் சூலத்தையும். மானையும் பயமின்றி அணிந்து கொண்டான், கொடிய நஞ்சைக் குடித்துக் கழுத்தைக் கருப்பாக்கினான், மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டான், பார்வதியுடன் வம்பு செய்தான் முயலகனைக் காலடியில் போட்டு மிதித்தான் அவனைப்போய் நல்லவன் என்று கூறுவது முறையாகுமா?

உகிர் - நகம். பிரமன் செருக்கடைந்தான் எனச் சொல்லி அவன் ஐந்து தலைகளில்ஒன்றை நகத்தால் கிள்ளினான் சிவன். இது சிவனின்

எட்டு வீரச் செயல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தஞ்சையை அடுத்த கண்டியூர் இச்செயல் நடந்த இடமென்பர் பிரமனை வதைத்ததால் பிரம ஹத்திதோஷம சிவனைப் பிடித்தது பிரமனின் மண்டையோடு கையோடு ஒட்டிக் கொண்டது. அதில் பிட்சை வாங்கி எப்போது அது நிறைகிறதோ அப்போது அத்தோஷம அகலும் எனச் சாப நிவர்த்தி பெற்றார். கண்டியூரிலுள்ள திருமாலுக்கு ஹரசாபம் தீர்த்த பெருமாள் என்று பெயர். பிட்சாடனராகத் திரிந்து இலக்குமி பிச்சையிட ஓடு நிறைந்து சாபம் நீங்கினார். திருச்சியை அடுத்த பிட்சாண்டார் கோயிலில் (உத்தமர் கோயில்) சிவன், திருமால், பிரமன் மூவரும் முத்தேவியரும் உள்ளனர் இங்குள்ள இலக்குமிதான் ஓட்டை நிறையச் செய்தாள் எனவே பூரவணல்லி எனப்பெயர் பெற்றாள் தாருகாவனத்து முனிவர் ஏவிய பாம்பு, மான். நெருப்பைக் கையில் ஏற்றார். யானை புலிகளை உரித்து ஆடையாக்கினார். முயலகன் என்ற மாயையாகிய அரக்கனைக் காலின் கீழ்போட்டு மிதித்தார். தேவர்களுக்காகப் பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டார், இவை சிவன் செயல்கள். **பண்டு** - முன்பு **வயம்** - வெற்றி. **சாமளை** - பார்வதி.

359.

பகைவர்க ளிடத்தில் உறவெனக் கெடுக்கும்
பரமனை பெருமையென அறையாச்
செகந்தனை அளித்துச் சீருடன் காக்க
சேதித்திட முத்தொழி லுடையோன்
தகைமைசேர் இளைஞர் அநுதினம் இறைஞ்சி
தசையுள ஆக்கைகள் அழியா
வகைவரம் அருளென் றவரிடம் உகந்த
வள்ளல். அந்தியத்தினில் வதைப்பான்.

பகைவர்களிடத்தில் உறவாடிக் கெடுக்கக் கூடிய சிவனைப் பெரியவன் என்றாய். இந்தப் பூமியைப் படைத்துக்காக்கும் அவனே அழிக்கின்றான். தகுதிவாய்ந்த இளைஞர்கள் தவம்செய்து உடலை வருத்தி நாள்தோறும் வேண்டினால் மகிழ்ந்து வரம் கொடுப்பான். கடைசியில் அவனே வதை செய்வான்.

செகம் - உலகம். **அளித்து** - படைத்து. **சேதித்திட** - அழிக்க. **ஆக்கை** - உடல். **அந்தியம்** - இறுதி.

360. "பரமசிவனே இந்திரன் முதலானோர் போகக் காரணம். தூதனால் அறிக" எனல்.

ஈசனால் இமையோர் இப்பதி அகன்றங்
கேகினர் எனஇதைப் பற்றி
யோசனை உறுவ தென்னனல் வீரன்
ஒற்றரை அவனுழை விடுக்க
மாசிலா மனத்தோன் மார்க்கமும் காண்பை
என்றிட அகத்தினில் ஓர்ந்து
நேசமாம் ஒற்றர் இனியொரு வனைஅந்
நிமலன்பால் ஏகவே விடுத்தான்.

"சிவனால்தான் இந்திரன் முதலான தேவர் இந்நகரம் விட்டு அவர்களிருப்பிடம் சென்றனர் என்று நாங்கள் கூறி என்ன பயன்? ஒற்றரை அனுப்பினால் குற்றமற்ற உன் ஈசனின் குணத்தைக் காண்பாய்" என்றனர். வாதாவியும் யோசித்து அன்புள்ள ஒற்றன் ஒருவனைச் சிவனிருப்பிடம் அனுப்பினான்.

ஓர்ந்து - உணர்ந்து **நிமலன்** - குற்றமற்றவன்.

361. ஒற்றன் கயிலை சென்று திரும்புதல்

வாயு வேகமென வெள்ளியங் கிரியில்
வந்தனன் உருவினை மாறி
மாய வனயன் தேவர் விண்ணோரும்
மட்டலர் தனையே மனதில்
தீய வுணனு ணர்ந்தே தன்பதியில்
சேர்ந்தபடி இறைஞ்சிச் செப்புவன்
பேய னாமாண்டி அவன்தனைப் பெரிதாய்ப்
பேசுவ தாகுமோ மன்னா.

வாயு வேகமாகப் புறப்பட்ட ஒற்றன் கயிலை மலை அடைந்து உருவம் மாறி, திருமால், பிரமன், தேவர் அனைவரும் கூட்டமாய் அங்கிருப்பதை அறிந்து தன் ஊர் வந்து வாதாவியிடம் "பேயனும் ஆண்டியுமாகிய அச்சிவனைப் பெரிதாகப் பேசலாமா?" என்றான்,

மாயவனயன் - மாயவன் + அயன்

362. சிவன் உன் குலத்தை அழிப்பான் எனல்

அரியயன் அமரர் அனைவரும் அவன்பால்
அணுகினர் நந்திபல வீரர்
திரைகடல் எங்கும் பெருகிய தென்ன
சேனைகள் உறைந்தனர் செப்ப
உருகுதென் னகமும் கிளைஞரின் பூண்டை
உக்கிர வாளியாங் கெற்றி
எரிவரென் றெண்ணம் இதயமீ துணர்ந்தேன்
இனியருள் செய்யென இசைத்தான்.

"திருமால், பிரமன், தேவர் அனைவரும் அவனிடம் சேர்ந்தனர். நந்தியும் பல வீரர்களும் கடல்போல் எங்கும் பெருகி படை வெள்ளமாய் உள்ளது. சொல்வதற்கே என் உள்ளம் உருகுகிறது, அவர்கள் உன் சுற்றத்தை வேரோடு தங்கள் அம்பால் அழித்து விடுவர் என நினைக்கிறேன், இனி என்ன செய்யவேண்டும்," என வினவினான்.

கிளைஞர் - உறவினர். **பூண்டு** - வேர்.

363. வாதாவி சினத்தல்

தூதனங் குரைத்த வாய்மை அம்பாகத்
தோன்றலின் இருசெவி துளைக்க
வாதனை இல்லா மனத்தழல் செனிப்ப
வாள்விழி குருதிகள் உரைப்ப

சோதனை சத்த சாகரம் சுவறச்
சுந்தர உடுக்கணம் உதிர்ப்ப
பூதலம் உறையும் உயிரெல்லாம் நடுங்க
பொருப்புகள் ஊடுறப் புகல்வான்.

தூதன் கூறிய உண்மை அம்புபோல் இரு செவிகளையும் துளைக்கத் துன்பமற்று இருந்த உள்ளத்தில் நெருப்பு பற்ற, கண்கள் இரத்தம்போல் சிவக்க, ஏழு கடல்களும் வற்ற, விண்மீன்கள் உதிர, பூமியில் உள்ள உயிர்களெல்லாம் நடுங்க, மலைகள் பொடியாகக் கூறத் தொடங்கினான்,

வாதனை - துன்பம் **செனிப்ப** - தோன்ற **குருதி** - இரத்தம் **சத்த சாகரம்** - ஏழு கடல் **சுவற** - வற்ற **சுந்தர** - அழகிய **உடுக்கணம்** - விண்மீன் கூட்டம் **பூதவம்** - உலகம் **உறையும்** - வாழும் **பொருப்பு** - மலை

364. "பரமசிவன் வரத்தை நம்பித் தேவர்களை அடிமை யாக்கினேன், இப்பொழுது அவ்வளவும் வீணாகி விட்டதே" எனல்.

சண்டனை உதைத்த சங்கரன் வரமும்
தவறின்றி யென்மனத் தோர்ந்தே
அண்டரை ஏவல் செயமனத் திண்மை
அடங்கலும் செலுத்தினன் அமரர்
ஒண்தொடி எனது முன்றிலைத் திருத்த
உரைத்தவா தாவியின் அடியில்
தெண்டனிட் டேத்த இருந்ததும் அவமாம்
செப்புவீர் அமைச்சரே யென்றான்.

"யமனை உதைத்த சிவன் வரம் தவறாது என மனத்தில் நினைத்துத் தேவரை அடக்க என் முழு மனத்தையும் செலுத்தினேன். இந்திராணி என் வாசலைத் துடைக்க, நான் சொல்லும்

கட்டளைகளைத் தேவர்கள் நிறைவேற்றினர். இவ்வளவும் வீணாயிற்றே! கூறுங்கள் அமைச்சரே!" என்றான்.

சண்டன் - எமன். **சங்கரன்** - சிவன் **அண்டர்** - தேவர் **முன்றில்** - முற்றம் **தெண்டனிட்டு** - வணங்கி. **அவம்** - வீண்

365. "சிவன் மீது போர் தொடுக்க வேண்டும்" என அமைச்சர் கூறுதல்

வெள்ளியங் கிரியில் வீற்றிடும் விமலன்
மிகுபடை அமைத்திடி லென்ன
வள்ளலே உனதீ டாவனோ அவனை
வளைந்துநம் வாளியைச் சொரிந்து
கள்வனைப் பிடித்து பந்தனம் செய்து
காவண வாயிலில் இருத்தி
தெள்ளிய தமிழின் இமையவர் ஏவலோ
செலுத்துவர் தீதிலா தென்றார்.

"வெள்ளிபோன்ற கயிலை மலையில் வீற்றிருக்கும் சிவன் மிகுந்த படை வைத்திருந்தாலென்ன? உனக்குச் சமம் ஆகிவிடுவானா? நாம் அம்புகளைச் சொரிந்து அவனை வளைத்துப் பிடித்து அத்திருடனைக் கட்டி நம் மண்டப வாசலில் இருத்தினால் தேவர்கள் தானே வந்து ஏவல் செய்வர்" என்றனர் அமைச்சர்.

ஈடு - ஒப்பு, சமம். **வாளி** - அம்பு **பந்தனம் செய்து** - கட்டி. **காவணம்** - மண்டபம்.

366. வாரதன் சிவனை நலிப்பது தவறு. தேவர்களைப் பிடிப்பதே சரியெனல்

மாத்தியர் உரைப்ப அரக்கர்கோன் துணைவன்
வாரதன் எழுந்து அடியிறைஞ்சி

கீர்த்திசேர் அரசே அறிவிலா நாயேன்
செப்புவ துறுதியாய் ஏற்பாய்
போந்த நற்றிரையைக் கவர்ந்தவ ரனைத்தும்
புடவிசூழ் நகரினிற் பொருந்திக்
கோத்திரம் விளங்கச் செய்வது கடனக்
குழகனை நலிப்பதோ வென்றான்.

அமைச்சர் கூற. வாதாவியின் தம்பியாகிய வாரதன் எழுந்து, அடிவணங்கி, "புகழ்மிக்க அரசே! அறிவில்லாத சிறுவனாகிய நான் கூறுவதைக் கேள். தேவர்களை வென்று அவர்களைத் திரை கட்டச் செய்து கடல் சூழ்ந்த இந்நகரில்வந்து ஏவல் செய்யச் சொன்னால் நம் கோத்திரம் விளங்கும். அதை விடுத்துச் சிவனைத் துன்புறுத்துவதால் பயனில்லை" என்றான்.

மாத்தியர் - அமைச்சர். **துணைவன்** - தம்பி கீர்த்தி - புகழ். **புடவி** - கடல் **குழகன்** - சிவன்

367. வாதாவி சிவன் வரத்தினால் கிரீடமணிந்தான் எனல்

மாதுலன் குலம ழிந்தே
மயங்கியே அன்னை யுன்னை
தீதிலா தளிப்ப எங்கும்
திரிந்து மாவிலங்கு தேடி
கோதுடன் அருந்தி நீங்கிக்
குழகன்தன் வரத்தி னாலே
சோதிசேர் முடிபு னைந்து
சொன்னகர் உறைந்த மன்னா.

"மாமனாகிய சூரனின் குலமழிந்து கலங்கிய அன்னையாகிய அசோமுகி உன்னைக் குற்றமின்றிப் பெற்றெடுக்க. நீ எங்கும் திரிந்து

விலங்கு வேட்டையாடி, அப்படியே தின்று வாழ்ந்தாய். சிவனின் வரத்தினால் குற்றம் நீங்கி, முடி புனைந்து, அரசனாகி, இந்த ரத்தினாபுரியில் வாழ்கிறாய்."

மாதுலன் - மாமன். **தீதிலாது** - குற்றமின்றி. **அளிப்ப** - பெற்றெடுக்க. **கோது** - தோல், எலும்பு. **சொன்னகர்** - சொர்னநகர், இரத்தினாபுரி.

368. "செருக்குக் கொண்டால் சூரியனைக் கண்ட பனிபோல் அழிவாய்" எனல்

உனக்கியல் உறுமோ உம்பரன்
உலகில் உறைந்த நம்பால்
இனத்துள நிதிய ளிப்பதே
அரசி யற்கை யென்றே
மனத்தினி லுதித்த வண்ணம்
வழுத்தினன் மதமும் கொண்டால்
பனிக்குலம் கதிரால் மண்தனில்
படிந்தது ஒக்கு மென்றான்.

"இது உனக்கு அழகாகுமா? தேவர்கள், பூமியில் வாழும் நமக்கு அங்குள்ள செல்வங்களைக் கப்பம் கட்டி வாழ்வது வேண்டுமானால் அரசியற்கை. செருக்கடைந்தால் சூரியனைக் கண்ட பனிக் கூட்டம் மண்ணில் விழுவதுபோல் விழுவாய்" என்று மனத்தில் பட்டதைக் கூறினான்.

உம்பரன் - தேவர் **கதிர்** - கதிரவன்.

369. "தேவர்கள் நம்மை மதிப்பதில்லை அதனால் அவர்கள் ஏவல் செய்வதே முறை" என வாதாவி கூறுதல்.

மதியுள்ள வாரதன் நீதி
வகுத்திட மனத்தின் ஓர்ந்தே

துதிகள் செய்வா தாவியோ
துணைவனைச் சுரர்கள் நம்மை
மதியுளோர் பொருளாய் எண்ணார்
வண்மைநம் பதிஇ ருத்தி
சதமுடன் ஏவல் கொள்ளல்
சம்மத மாகு மென்றான்.

அறிவுள்ள வாரதன் நீதி கூற, புகழப்பட்ட வாதாவி "தேவர்கள் நம்மை ஒரு பொருட்டாக எண்ணவில்லை, அதனால் நம் நகரில் வைத்து ஏவல் கொள்வதே சரி" என்றான்.

370. வாதாவி வாரதனைக் கொல்வேன் எனல்

மாதுலர் மரப ழித்த
வலிவினால் மதிம யங்கி
தீதுசெய் திடுவ தல்லால்
சிறுவய தான தம்பி
ஏதுன தகம் இளைத்த
தியக்கரின் பூண்ட கற்ற
ஓதிய கள்வா கொல்வேன்
உரைத்திட உரைக்க லுற்றான்.

"நம் மாமன் போரில் இறந்து விட்டதால், அமரர்கள் வலிமையுள்ளவர் என்று மயங்கித் தீமை பேசுகிறாய் தம்பி. சிறுவயதுடையவனே! ஏன் உன் மனம் சோர்ந்தது? அரக்கரின் வம்சத்தைப் பூண்டோடு அழிக்க வழி கூறினாய்! உன்னைக் கொல்கிறேன் பார்!" என்றான்.

மாதுலர் - மாமன்.

371. வாரதன் வாதாவியிடம் மன்னிப்பு கேட்டல்

நற்றவம் மிகுத்த அண்ணா
 நாயடி யேன்ந வின்ற
குற்றமும் பொறுப்ப தேவர்
 கூறென வலம்பு ரிந்து
பற்றிவா ரதனைக் கையால்
 பரிந்தெடுத் தணைத்து வேண்டும்
புத்திகள் உரைத்துப் பெற்ற
 புதல்வருக் கியம்ப லுற்றான்.

(இதனைக் கேட்ட வாரதன் வருந்தி) "தவம் மிகுந்த அண்ணனே! நாய் போன்ற சிறியேன் சொன்ன சொற்களில் குற்றம் இருந்தால் பொறுப்பது யார்? (நீதானே பொறுக்க வேண்டும்?" எனக் கூறி வலம் வந்து வணங்கினான். அவனைக் கையால் அன்போடு எடுத்தணைத்த வாதாவி வேண்டிய புத்திமதிகளைக் கூறிப் பிள்ளைகளை அழைத்துக் கூறலுற்றான்.

நவின்ற - கூறிய **ஏவர்** - எவர்.

372. வாதாவி புதல்வர்க்குக் கட்டளையிடுதல்

அண்டமும் கிடுகிடு என்றே
 அதிரஎண் திசையின் வெற்பும்
கொண்டலின் இடிக லங்க
 கொதித்திட வாரி ஏழும்
வண்டிய நாகம் எட்டும்
 வானவர் குழாம்ந டுங்க

திண்திறல் அவுணர் கோவும்
தீதுரை செப்பல் உற்றான்.

வானம் கிடுகிடு என்று அதிர, எட்டுத் திசையின் மலைகளும் நடுங்க, மேகத்தின் இடி கலங்க, கடல்கள் ஏழும் கொதிக்க, யானைகள் எட்டும் தேவர் கூட்டமும் நடுங்க வலிய அசுரர் தலைவனாகிய வாதாவி தீய சொற்களைக் கூறத் தொடங்கினான்.

அண்டம் - வான்வெளியும் அதிலுள்ள கோள்களும், **வெற்பு** - மலை, **எட்டு மலைகள்** - இமயம், ஏமகூடம், கந்தமாதனம், கயிலை, நிஷதம், நீலகிரி, மந்திரம், விந்தம். **கொண்டல்** - மேகம், **நாகம் - யானை, பாம்பு என்றும் சொல்லலாம். எட்டு நாகங்கள் - அனந்தன், கார்கோடகன், குளிகன், சங்கபாலன், நக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி. வானவர்** - தேவர் **குழாம்** - கூட்டம் **திண் திறல்** - வலிமை **மிகுந்த. கோ** - அரசன்

373.

கம்பனே கும்பா சம்பு
கசமுகா ககனம் மன்னும்
உம்பரை வயப்ப டுத்தி
உலகினில் சூறை யேத்தி
நம்பதி அடைவீர் என்று
நாயகன் தாள்இ றைஞ்சி
கும்பலா யவுணர் சூழ
கொடியரும் விஜய முற்றார்.

கம்பாசூரனே! கும்பனே! சம்புமாலி! கசமுகனே! ஆகாயத்திலுள்ள தேவர்களை யெல்லாம் வசப்படுத்தி உலகத்தைக் கொள்ளையடித்து வருவீர்களாக! என்று கூறினான். கேட்டவுடன் புதல்வரும் தந்தை தாளை வணங்கிக் கும்பலாய் அசுரர் சூழப் போருக்குப் புறப்பட்டனர்.

ககனம் - ஆகாயம். **மன்னும்** - நிலையெற்ற. **உம்பர்** - தேவர். **சூறை** - கொள்ளை. **பதி** - ஊர் **நாயகன்** - தலைவன். வாதாவி **தாள்** - திருவடி. **இறைஞ்சி** - வணங்கி **அவணர்** - அரக்கர். **விஜய முற்றார்** - புறப்பட்டார்.

374. படைகள் புறப்படுதல்

இரதமும் கரிகள் கோடி இவுளிகள் கோடா கோடி
பரவைகள் பரந்த தென்ன படிமிசை நிறைந்தார் சூறை
முரசென நாக பேரி முறையிடக் கவிகை துன்ன
வரிகுயத் துவச கால வட்டமும் அதிரச் சென்றார்.

தேர்களும், யானைகளும் கோடி, குதிரைகள் கோடி, கொள்ளை முரசென்று நாகபேரி முழங்க, குடைகள் நெருங்க, கொடிகளும் விருதுகளும் அசைய, அசுர வீரர் கடல் பரவி எழுந்தது போல் வரிசையாகப் பூமியில் நிறைந்தனர்.

இரதம் - தேர். **கரி** - யானை **இவுளி** - குதிரை. **பரவை** - கடல் **படி** - பூமி **சூறை** - கொள்ளை. **பேரி** - பெரிய முரசு. **கவிகை** - குடை. **துன்ன** - நெருங்க. **துவசம்** - கொடி. **ஆலவட்டம்** - விருதுகள் பொறிக்கப்பட்ட வட்டமான அட்டை போன்ற துணிகள்

375. தேவர் நடுங்குதல்

உரத்தினில் மிகுத்த சூரர்
உளத்தழல் வெம்மை யாலும்
பரித்திரள் இரதத் தாலும்
பராக்கிர முரசி னாலும்
அரிதுவ சங்கள் எங்கும்
ஆர்ப்பரித் திடுத லாலும்
சுரத்திரள் ஆகம் மற்றோர்
துடித்துளம் நடுங்கிற் றம்மா.

வலிமையில் மிக்க சூரர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட வெப்பத்தாலும். குதிரைக் கூட்டம். தேர்க் கூட்டம். செல்லும் ஓசையாலும், முரசு ஒலியாலும், கொடிகள் மொட மொடவென்று ஆரவாரிப்பதாலும் தேவர்கள் உடலும், உள்ளமும் நடுங்கினார்கள்.

உரம் - வலிமை **தழல்** - நெருப்பு. இங்கு கோபமாகிய நெருப்பு **பரி** - குதிரை. **துவசம்** - கொடி. **சுரத்திரள்** - தேவர் கூட்டம். **ஆகம்** - உடல்

376. கடல் மீன்கள் இறத்தல்

கொடியரின் சினத்தால் வாரி
கொதிப்பமீன் இனங்கள் உள்ளம்
துடித்துயிர் வானில் செல்ல
துகள்இராட் சதர்ஐந் நூறு
குடமது வந்து மீனைக்
குடங்கையால் அணைத்தே உண்டு
புடவிய கன்று வானோர்
புவிதனில் நிறைந்தார் மாதோ.

கொடியவரின் கோபத்தால் கடல் கொதிக்க மீன் இனங்கள் மனம் துடித்து உயிர் விட்டன. இராட்சதக் கூட்டம் ஐந்நூறு குடம் கொண்டுவந்து மீனை அள்ளிக் கையில் குடத்தை அணைத்து உண்டனர். கடல் விட்டுத் தேவலோகம் போய்ச் சேர்ந்தனர்.

வாரி - கடல் **துகள்** - கூட்டம் **புடவி** - கடல். **வானோர் புவி** தேவருலகம்

377. கம்பன் எமலோகத்தை முற்றுகையிடல்

இன்ன லான இயக்கர் அதிபனைத்
துன்னு மைந்தர் துடுக்கர்அந் நால்வரில்
மன்னு கம்பன் மறலி திசையினில்
துன்னு சூரர்கள் கோடியாய்ச் சூழ்ந்தனன்.

தீயவனான வாதாவிக்கு நால்வர் மைந்தர். அந்நால்வரில் கம்பாசூரன் என்பவன் எமனுடைய தென்திசையில் கோடி அசுரருடன் சூழ்ந்தான்.

துடுக்கர் - துஷ்டர். **மறலி** - எமன்.

378. எமபட்டணத்தைக் கொள்ளையிடல்

மயிட மூர்த்தி மனத்திடர் ஆகியே
புயலு ருக்கொடு வானம் புகுந்தனன்
நயமி லாதவ ரவுணர் நாடெலாம்
அயர்வ தாக அடித்தனர் சூறையே.

எருமையில் ஏறும் எமன் மனத்தில் துன்ப முற்று மேக உருவம் எடுத்து வானத்தில் நுழைந்தான். நன்மையில்லாத அரக்கர் நாட்டிலுள்ள மக்கள் துன்புறும் வண்ணம் நகரைக் கொள்ளையடித்தனர்.

மயிடம் - எருமை. **மயிட மூர்த்தி** - எருமையேறும் எமன். **இடர்** - துன்பம். **புயல்** - மேகம். **நயம்** - நன்மை. கருணை. **சூறை** - கொள்ளை

379. கும்பன் மேற்குத்திசையில் சூறையாடல்

கும்ப னுள்ளம் கொதித்துக் குடதிசை
பிம்ப ராணுக்கள் கோடியோ டேகியே
அம்பு விக்கண் அந்தமும் போக்கியே
செம்பொன் சூறை செய்திட லாகினன்.

கும்பாசூரன் என்பவன் கோபித்து. கோடி அரக்கருடன் மேற்குத்திசை சென்று பூமியிலிருக்கும் அழகையெல்லாம் அழித்து, பொன்னைக் கொள்ளையிடத் தொடங்கினான்.

பிம்பராணு - அசுரர் படை. **கும்பன்** - கும்பாசூரன். **குடதிசை** - மேற்குத் திசை.

380. வாயு பட்டணம் கொள்ளையிடல்

வாயு மண்டல மன்னி வாயுகோன்
தூய நற்பதி சூறைசெய் சம்புஓர்
ஆயி ரஞ்சக சூரர் அதிர்ந்திட
நேய உத்திர தேயம் நிறைந்தனர்.

வடமேற்குத் திசையில் வாயு மண்டலத்தில் சென்று வாயு தேவனின் ஊரைக் கொள்ளையடித்த சம்புமாலி ஆயிரம் அரக்கருடன் வடக்குத்திசை போய்ச் சேர்ந்தான்.

உத்திரதேயம் - வடக்குத் திசை.

381. குபேரன் பட்டணத்தைக் கொள்ளையிடல்

அளகை ஆளி அரனிடம் ஏகினன்
வளமெ லாம் சிறை மண்டிய ராக்கதர்
உளம கிழ்ந்த கஜமுக னுக்கிறை
தளமோர் கோடி தழைக்க நடந்தனர்.

வடக்குத் திசையில் அளகாபுரியை ஆண்ட குபேரன் அஞ்சிச் சிவனிடம் ஓடிவிட்டான். அங்கிருந்த செல்வங்கள் அனைத்தையும் சிறகுகளையுடைய அசுரர் கொள்ளையடித்தனர். உளமகிழ்ந்த கஜமுகனோடு ஒருகோடி அரக்கர் நடந்தனர்

அளகை - அளகாபுரி, குபேரன் இருப்பிடம்

382. கிழக்குத் திசை கொள்ளையிடல்

குணதி சைக்(கு)அதி பதியெனும் வாசவன்
பணதி யாடை பருத்த நிதிகளில்
மணியு மாழையும் மண்டுவ மென்றுசென்(று)
இணையி லாச்சிறை யிட்டிடல் ஆயினன்.

அவர்கள் கிழக்குத் திசைக்குத் தலைவனாகிய இந்திரனின் ஆடை, அணி, ரத்தினம், பொன் ஆகிய செல்வங்கள் எல்லாவற் றையும் கொள்ளையிடுவோமென்று சென்று கொள்ளையடித்தனர்.

குணதிசை - கிழக்குத்திசை. **வாசவன்** - இந்திரன். **பணதி** - ஆபரணம். **மணி** - ரத்தினம். **மாழை** - பொன்.

383. இந்திரன் குயிலுருவம் கொண்டு மேருமலை செல்லுதல்

நீல மேரு எழுந்த தாம்என
நிருதர் சேனைகள்
ஓல மிட் டிமை யோர்கள் உள்ளம்
ஒடுங்க அண்டமதில்
சாலை ஏகினர் மேக மூர்த்தி
தயங்கு கோகிலமாய்
ஆல முண்ட மேரு ஏகி
அகங்க லங்கினனே.

நீலமான மேருமலை எழுந்ததைப் போல் அரக்கர்கள் கூச்சலிட்டுத் தேவர் மனம் நடுங்க ஆகாயத்தில் சென்றனர். மேகங்களின் தலைவனான இந்திரன் குயில் வடிவம் எடுத்து விடமுண்ட இறைவனின் மேருமலைக்குச் சென்று உள்ளம் கலங்கினான்.

மலைபோன்று உருவம் படைத்தவர் ஆதலால் மேருமலை என்றார். மேரு பொன்னிறமானது. ஆனால் அரக்கர் கரியவர் அதனால் நீல மேரு என்றார். **நிருதர்** - அரக்கர். **இமையோர்** - தேவர். **ஓலமிட்டு** - கூச்சலிட்டு. **மேகமூர்த்தி** - மேகங்களுக்குத் தலைவனாகிய இந்திரன். **கோகிலம்** - குயில். **ஆலம்** - விஷம். **ஆகம்** - மனம்.

384. முனிவர். சித்தர் கின்னரர் அச்சம் அடைதல்

சத்த பாலகர் சித்து ரூப மதடைந் தனரே
நத்த வத்தினன் முத்த ருள்ளே நடுங்கி ஓடினரே
தத்தை மார்களும் ஏக சிற்றடி தத்த நின்றனரே
சித்தர் கின்னரர் கயிலை சென்று சினந்த
யங்கினரே.

அஷ்டதிக்கு பாலகரில் தேவேந்திரன் குயிலுவரும் கொண்டு கயிலாயம் சென்றதனால் மற்ற ஏழுபேரும் சிற்றுருவம் கொண்டனர். தவத்தையுடைய யோகிகளும் முத்தர்களும் உள்ளம் நடுங்கி ஓடினர். பெண்கள் ஓடமுடியாமல் அடிதளர்ந்து நின்றனர். சித்தரும் கின்னரரும் மனம் கலங்கிக் கயிலை சென்றார்கள்.

சத்த - சப்த, ஏழு, **பாலகர்** - காவலர். **சித்துரூபம்** - சிற்றுருவம் (சிறிய உருவம்) **உள்ளே** - உள்ளம் **தத்தை** - கிளி இங்கு கிளி போன்ற பெண்கள். **ஏக** - செல்ல **தத்த** - தடுமாற.

385. தேவருலகில் அரக்கர் அட்டகாசம்

காலன் அஞ்சிய கால ரக்கர் கனன்றெ ழும்பியிரு
ஞால மீதிமை யோர்க ளின்றி நகைத்தல் கண்டுசிறு
பால ராவி பதைக்க உண்க பரிந்த காவனமும்
வேலெனும் விழிமாதர் கற்பை விலக்கி நின்றனரே.

எமனே அஞ்சும் படியான எம இராட்சதர் சினந்து சென்று தேவருலகைப் பார்த்து யாரும் இல்லாததால் நகைத்த சிறுவர்களைக் கண்டு உயிர் பதைக்க உண்டனர். கற்பக மரங்களைப் பிடுங்கி எறிந்தனர். வேல்போன்ற விழியுடைய பெண்களைக் கற்பழித்தனர்.

இருஞாலம் - தேவருலகம் **பாலர்** - சிறுவர் **பரிந்த** - பிடுங்கப்பட்டன **காவனம்** - நந்தவனம் கற்பக மரங்களையுடைய வனம். ஆவி - உயிர்.

386. தேவருலகைக் கொள்ளையிடல்

யாக சாதனன் னேடை
சென்று பருத்த வச்சிரவாள்
நாக மாகிய நித்தி
லங்கள் அனைத்தும் வாரிநல
மாகும் ஈரிரு கெற்பம்
வார மாடு மேற்பொதியின்
றேகி வானவர் வீட்டைச்
சூறை இயக்கர் இட்டனரே.

தேவேந்திரன் வீட்டிலிருந்து பெரிய வச்சிரவாள், அழகிய முத்துகள் ஆகியவற்றை வாரிக் கொண்டு நல்ல நான்கு தந்தமுடைய வெள்ளை யானையாகிய ஐராவதத்தில் மாடு போல சுமைகள் ஏற்றித் தேவர்களின் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தனர்.

யாக சாதனன் - யாகத்தால் இந்திர பதவி அடைந்தவன் தேவேந்திரன். **நித்திலம்** - முத்து.

387.

மாட மாமதில் கூட மன்னு
மணிபரப் பினமும்
மீடை மாமழை நிதிச ரப்பளி
மலர்த வாளியுடன்
ஊட லுஞ்சு லொலிந்த தண்டை
உயர்ந்த பாதசரம்
மேடை யான விமான முஞ்சிலர்
கொண்டு மேவினரே.

மாடமாளிகை, மதில், கூடங்கள் எங்கும் கிடந்த மணிகளையும் (நவரத்னம்), மிக்க பொன்னையும், செல்வங்களையும், சரப்பளி, வாளி,

தண்டை, பாதசரம் போன்ற அணிகலன்களையும், ஊஞ்சல், மேடை, விமானங்களையும் சிலர் கொண்டு சென்றனர்.

388.

வான லோகமும் ஈன மாக
வருத்த முற்றதுசெந்
தேன ளித்திடு தாவ ரங்களின்
வேர்சிதைத் துப்பலர்
கான முந்திரு சோலையும்கள்
சாலை நீங்குமிரு
வேன லான விதங்கள் சொல்லவும்
நாஎனக் கில்லையே

தேவருலகமும் இழிவடைந்து வருத்தமுற்றது. தேனளிக்கும் தாவரங்கள் பிடுங்கப்பட்டன. கானகம், சோலை, மதுவனங்கள் எல்லாம் நீங்கி எங்கும் கோடையாகியது. இதனைப் பற்றி நான் இன்னும் என்ன சொல்வேன். சொல்லவும் நாவெழவில்லை.

ஈனம் - இழிவு.

389. முனிவர்கள் வருத்தமடைதல்

அங்கி ரர்சன காதி வேத
வியாசர் கோதமனும்
பொங்கு கோசிகன் நாக ரூபன்
புசுண்டன் வாமனனும்
மங்க லப்பு லிபாதன் வர்சன்
வசிஷ்டர் மச்ச முனி
துங்க மாகிய கும்ப மாமுனி
துன்பம் உற்றனரே.

அங்கிரசர், சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர், வியாசர், கௌதமர், விசுவாமித்திரர், பதஞ்சலி, புசுண்டர், வாமதேவர், வியாக்ரபாதர், வர்ச்சர், வசிட்டர், மச்சமுனி, கும்பமுனி ஆகிய அனைவரும் துன்புற்றனர்.

சனகாதி - சனகர் முதலிய நால்வர். **கோசிகன்** - விசவாமித்திரன் **நாகரூபன்** - பாம்புக்கால் முனிவர் பதஞ்சலி **புலிபாதன்** - புலிக்கால் முனிவர், வியாக்கிர பாதர் **வியாக்கிரம்** - புலி.

390. அரக்கர்கள் திரும்பி வாதாவியிடம் செல்லுதல்

திசைகள் எங்கும் அடர்ந்து சூறை
செய்க ளாகினார்கள்
தசைய ருந்தி மிகுந்த வேனல்
தணிந்த ராணுவெலாம்
துசம ணிந்து இரத்தி னாபுரி
சூழ்ந்தி யக்கர்கள் கோன்
பசிய வெற்புக் கழலே யீய்ந்த
பணதி உள்ளதெல்லாம்.

எல்லாத் திசையிலும் சென்று கொள்ளை அடித்த அரக்கர் அனைவரும், எங்கும் உள்ள உயிர்களைக் கொன்று தின்று, பசியடங்கி வெற்றிக்கொடி அணிந்து, இரத்தினாபுரி திரும்பி, ராட்சசர்களின் அரசனாகிய வாதாவியின் பசிய மலை போன்ற பாதங்களில் தாங்கள் கொள்ளை அடித்தவற்றை வைத்தார்கள்.

அடர்ந்து - நெருங்கி. **தசை** - இறைச்சி. **வேனல்** - பசி **ராணு** - படை **துசம்** - வெற்றி. **பணதி** - செல்வம்.

391. வாதாவி மகிழ்ந்து "தேவர்கள் வரவில்லையா" எனல்

கண்டனன் விழியி னாலே
களித்தனன் உள்ளஞ் சூறை
கொண்டிடும் அவுணர் மெச்சக்
கொடுத்தனன் நிதிஅ னேகம்
எண்திசை உள்ளோர் ஆண்மை
இலையினிப் பயமுண் டோநல்
அண்டவர்வந் திலரோ வென்னும்
அரசனுக் கறைவ தானார்.

செல்வங்களை யெல்லாம் கண்ணால் கண்ட வாதாவி உள்ளம் மகிழ்ந்தான். கொள்ளை அடித்த பொருள்கள் அனைத்தையும் அரக்கர் புகழுமாறு கொடுத்தான் "எட்டுத் திசையிலு முள்ளோர் ஆண்மை இழந்தனர். இனி அச்சமில்லை" என்று கூறி, "எங்கே அந்தத் தேவர்கள். வரவில்லையா?" என வினவினான் அசுரர்கள் பதில் கூறினார்கள்.

392. கம்பன் விடை கூறுதல்

பதிய கன்றொளித்தா ரந்தப்
பான்மைகண் டவனி உள்ளம்
நிதியினைக் கவர்ந்து வந்தோம்
நிருபனே வான லோகம்
சிதறின தாக வெல்லாம்
செப்பினேன் ஐயா வென்றே
மதியினாற் கம்பன் சொன்ன
வாய்மையான் மகிழ்ந்து ரைப்பான்.

"தேவர்கள் அனைவரும் தத்தமது நகரை விட்டு ஓடி ஒளிந்தனர். நாங்கள் அங்குள்ள செல்வத்தைக் கொள்ளையடித்தோம். வானுலகமே சிதறி விட்டது" என்று கம்பாசுரன் கூறினான். அது கேட்ட வாதாவி மகிழ்ந்து.

பதி - பட்டணம். **அவனி** - உலகம். **நிருபன்** - அரசன்

393. வாதாவி "புதல்வரால் மகிழ்ந்தேன்" எனல்

கணங்களில் மிகுந்த ஈசன்
கருணையில் எனத்து தித்து
வணங்கிடா மன்னர் கோடி
வருகிலும் கரத்தின் வாளிப்
பிணங்கள் ஆகுவர் என்னாவி
பலத்திடும் மகவே உங்கள்
குணங்களால் மிகுந்த வாழ்வும்
கோதிலாது அடைந்தேன் என்றான்.

"சிவகணங்களையுடைய ஈசன் கருணையினால் நமக்கு அடங்காமல் கோடி கோடி மன்னர் வந்தாலும் நம் கையிலுள்ள வாளால் பிணமாகுவர். என் உயிர் பலப்படும்; பிள்ளைகளே! உங்களால் நான் இக்குற்றமற்ற வாழ்வை அடைந்தேன்" என்று கூறினான்.

கரம் - கை **ஆவி** - உயிர். **மகவே** - பிள்ளைகளே! **கோது** + **இலாது** - கோதிலாது - குற்றமில்லாமல்.

394. "நம்மைப் போல் உலகில் யாருமில்லை" எனல்

இரணியன் குழாம்ம டிந்தார்
இராவணன் கிளைஞர் அற்றார்
வரமிகு சூர பன்மா
வளமெலாம் அழிந்து மஞ்ஞை

திரவுரு அமைந்தே ஈசன்
சேயினைச் சுமந்தான் இப்பால்
உரமிகு நமைப்போல் இந்த
உலகில்வே றுளரோ என்றான்.

"இரணியன் கூட்டத்தோடு மடிந்தான். இராவணன் சுற்றத்தினரும் அழிந்தனர். வரம்பெற்ற வளமிழந்த சூரபத்மனோ மயில் உருவம் எடுத்துச் சிவனின் மகனைச் சுமக்கிறான். நம்மைப்போல் வலிமை மிகுந்தவர் இவ்வுலகில் யாரேனும் உளரோ" என்று பெருமைப் பட்டான்.

குழாம் - கூட்டம் **கிளைஞர்** - சுற்றத்தினர். **மஞ்ஞை** - மயில் **ஈசன் சேய்** - இறைவன் மகன் - முருகன் **உரம்** - வலிமை

395. "தேவர்களையே வென்றேன்" எனல்

அண்டராண்(டு) ஆயி ரங்கள்
அரனளித் தனரிந் நாளில்
எண்திசை அடங்க வென்றே
இமையவர் அகத்தை நீக்கி
விண்தலம் அளவும் போக
விரும்பினேன் எனது கீர்த்தி
மண்டலத் துள்ளோர் ஏத்தும்
மகிழ்ச்சியும் உற்றேன் என்றான்.

"தேவர் ஆண்டில் ஆயிரம் ஆண்டு ஆயுள் அளித்தார் அரன். இவ்வாயுளில் எட்டுத் திசையும் வென்று விட்டேன். தேவர்கள் செருக்கை அடக்கி விட்டேன். என்னுடைய புகழ் ஆகாயம் வரை எட்டவேண்டும் என்று விரும்பினேன். இப்பூவுலகில் உள்ளோர் என்னை வணங்கும் மகிழ்ச்சியும் பெற்றேன்." என்றான்.

அண்டர் - தேவர். **இமையவர்** - தேவர். **அகம்** - கருவம். **கீர்த்தி** - புகழ் **விண்தலம்** - வானுலகம் **மண்டலம்** - மண் + தலம் - பூமி. **ஏத்தும்** - வணங்கும்

396. "முருகன் வந்தாலும் அழிப்பேன்" எனல்

அரனயன் அரிவந்து என்பால்
அளித்திடும் வரமும் பொய்யோ
முருகன்செங் கரவேல் தன்னால்
மூண்டமர் தொடங்கி னாலும்
ஒருகணை அதனைத் தாக்கி
உம்பரின் உலகில் ஏற்றி
இரத்தினா புரம்பு ரப்பது
இயற்கையே அமைச்ச என்றான்.

"சிவனும் விஷ்ணுவும். பிரமனும் வந்து எனக்குத் கொடுத்த வரங்கள் பொய்யாகுமோ? முருகனே வேல் கொண்டு வந்து போர் தொடங்கினாலும் ஒரே அம்பால் அவனைக் கொன்று வானுலகம் அனுப்பி வைத்து இரத்தினாபுரியைக் காப்பேன் அமைச்சரே! இதுவே இயற்கை" என்றான்.

அரன் - சிவன். **அயன்** - பிரமன். **அரி** -விஷ்ணு. **மூண்டு** - எதிர்வந்து. **அமர்** - போர். **கணை** - அம்பு. **உம்பர்** - தேவர் **இரத்தினாகரம்** - இரத்தினாபுரி. **புரப்பது** - காப்பது.

397. அமைச்சர் வாழ்த்துதல்

அப்பொழுது அமைச்சர் அண்ணல்
அடிபணிந்து உரைப்பார் உந்தன்
ஒப்புளர் ஒருவர் உண்டோ
உலகினில் உனது கீர்த்தி
வைப்பது கடினம் பண்டு
வரங்கொளும் ஓரை யாலே

இப்பதி ஊழி காலம்
இணையிலாப் புரப்பீர் என்றான்.

அப்பொழுது அமைச்சர் வாதாவியை வணங்கி "உங்களை ஒப்பவர் யாரும் உளரோ? உலகில் உம் புகழை வேறொருவர் பெறுவது கடினம். முன்பு நீவிர் வரம் பெற்றதனால் இப்பூமியை யுக முடிவு காலம் வரை ஆள்வீர்" என்றார்.

அண்ணல் - பெருமையுடையவர் இங்கு வாதாவி. **ஓரை** - நேரம். **ஊழி** - யுகம் முடிவு. **புரப்பீர்** - காப்பீர்

398. சிவனின் கயிலை தாழுதல்

இவ்வுரை இயம்பக் கேட்டு
இயக்கர்கோன் புளகம் ஆகி
அவ்வுரக் கரசும் நீதி
அளிப்பநற் கயிலை தாழ
நவ்வியும் மழுவும் எந்தும்
நாயகன் உள்ளம் ஓர்ந்து
செவ்விதழ் நகைபு ரிந்து
செப்புவர் உண்மை மாதோ.

மந்திரி மார்கள் கூறியதைக் கேட்ட வாதாவி மிகமிக மகிழ்ந்து நெடுங்காலம் தன்பட்டணத்தை ஆள, தேவர்களும் மற்றவரும் நீதி வேண்டிச் சிவனை அடைந்ததால் கயிலை தாழ்ந்தது. மானும் மழுவும் ஏந்தும் சிவன் புன்னகை புரிந்து உண்மை உரைப்பான்.

புளகம் - பெருமிதம் மகிழ்ச்சி. **நவ்வி** - மான்.

399. சிவன் கயிலை தாழக் காரணம் கேட்டல்

அண்டரே முனிவரே கின்ன
ரர்களே அயனே மாலே

இன்று நம்பதி தாழ்வுற் (று)
எமன்திசை உயர்வ தாக
முண்டுக ளுளதோ வென்பர்
மொழிதும் என்ன வானோர்
தெண்டனிட் டிதயம் சோர
செப்புவ தரனும் மாதோ.

"தேவர்களே! முனிவர்களே! கின்னரர்களே! பிரமனே! திருமாலே! இன்று நம் ஊர் தாழ்ந்து எமன் திசையாகிய தெற்கு உயரக் காரணம் என்ன? கூறுவீர்!" என்றார் சிவன். தேவர்கள் வணங்கி மனம் சோர்ந்து கூறுவர்

அண்டர் - தேவர். **முண்டு** - காரணம். சூழ்ச்சி **தெண்டனிட்டு** - வணங்கி.

400. தேவர்கள் சிவனைத் துதித்தல்

ஆரணம் அளவி டாத
அண்ணலே அரனே போற்றி
வாரணம் உரித்துப் போர்த்த
வள்ளலுன் மலர்த்தாள் போற்றி
நாரணன் விரிஞ்சன் காணா
நாதனே நம்பா போற்றி
காரணா கயிலை வாழும்
கடவுளே போற்றி போற்றி.

"வேதங்களாலும் அளவிட முடியாத அண்ணலே! பரமனே! போற்றி!. யானையை உரித்துப் போர்த்த வள்ளலே! உனது மலர்போன்ற பாதம் போற்றி! திருமாலாலும் பிரமனாலும் தேட முடியாத தலைவனே போற்றி! கயிலாயத்தில் வாழும் கடவுளே! எல்லாவற்றுக்கும் காரணமாய் இருப்பவனே போற்றி! போற்றி!

ஆரணம் - வேதம் **வாரணம்** - யானை **நாரணன்** - திருமால். **விரிஞ்சன்** - பிரமன்.

401. வாதாவியின் கொடுமை கூறல்

சூரபற் மாவ ளித்த
துகளினால் சுகம கன்றோம்
கூரயில் கரத்தோ னான
குகன்நம்மைக் காத்தான் இன்று
வாரியின் நகர ளித்து
வம்பன்வா தாவி யென்னும்
பேரினை உடையோன் ஆண்மை
பேசவும் முடியா தென்றார்.

சூரபன்மா கொடுத்த துன்பத்தால் சுகம் இழந்தோம். வேலையுடைய கையோன் ஆன முருகன் (சூரனை அழித்து) எங்களைக் காத்தான். இன்றோ கடல் நடுவே உள்ள இரத்தினாபுரியை ஆளும் வம்பு செய்யும் வாதாவி என்னும் பெயருடைய அரக்கனின் தீமை சொல்லவும் முடியவில்லை.

துகள் - குற்றம், தீமை. **கூர் அயில்** - கூர்மையான வேல். **குகன்** - முருகன் **வாரி** - கடல். **வாரியின் நகர்** - கடல் நடுவே உள்ள ஊர்.

402. வாதாவி படையெடுத்ததைக் கூறுதல்

இயவணி இயக்கர் வீரம்
இனியகற் றுவரி ருந்தால்
துகளிலா வீரன் வாளி
தொளைக்குமென் றுறுதி நல்கும்
வகையினால் பதிய டைந்து
மாதரோடு இருப்ப அன்னான்
சகமெல்லாம் நிறைந்தார் ஐயா
தியங்கின வெள்ளம் மாதோ.

"அசுரர்கள் கொடுமை இனியிருந்தால் அகற்றி விடுவோம். குற்றமற்ற வன்னிய வீரரின் அம்பு தொளைக்கும் " என்று உறுதி கூறியதால் நாங்கள் எங்கள் நகரங்களை அடைந்து எங்கள் மனைவி மாரோடு வாழ்ந்தோம். ஆனால் அவ்வரக்கர் பூமியெங்கும் வெள்ளம்போல் நிறைந்தனர்.

துகள் - குற்றம். **வாளி** - அம்பு.

403. வாதாவி சூறையாடியதைக் கூறல்

நாற்றிசைக் கடல்சூழ் நாட்டின்
நலத்தினைச் சூறை யாடி
கூற்றுவன் அஞ்ச விண்ணோர்
குவலயஞ் சிதற காணிற்
சீர்த்திசேர் முனிவர் உள்ளம்
தீர்ந்திடும் தவம்க வைந்தே
ஏற்றுவா கனனே இந்நாள்
இன்றுவந் தடைந்தோம் என்றார்.

அவர்கள் எல்லாத் திசையிலும் உள்ள நாடுகளின் வளங்களைச் சூறையாடினர். எமனும் அஞ்சி. ஓடினான். தேவருலகே சிதறியது இதனைக் கண்ட முனிவரும் தவம் கலைந்தனர். இடப வாகனமுடையவனே! அதனால் நாங்கள் இங்கு வந்தடைந்தோம்.

கூற்றுவன் - எமன். **குவலயம்** - உலகம். **ஏற்றுவாகனன்** - காளை மாட்டை வாகனமாக உடைய சிவன்.

404. இறைவனை அடைக்கலம் வேண்டுதல்

அண்டவோர் நிழலு மின்றி
ஆதரிப் பவரும் இன்றி
கண்டக அவுணன் தன்னால்
கனத்திறல் உடல்மெ லிந்து

மண்டிய சுகமி ழந்தோம்
மயேஸ்வரா மார்க்கண் டற்காய்
சண்டனை உதைத்த பாதா
தந்தருள் சுகமு மென்றே.

ஒதுங்குவதற்கு நிழலும் இல்லை. ஆதரிப்பவரும் இல்லை. அசுரன் கொடுமை கண்டு உடல் மெலிந்து சுகம் இழந்தோம் மகேஸ்வரனே! மார்க்கண்டனுக்காக எமனை உதைத்த பாதங்களையுடைவனே! நீதான் எங்களைக் காக்க வேண்டும்" என்று கூறினார்கள்.

405. "எங்களைக் காப்பாற்றும்" என வேண்டுதல்

திக்குனை யன்றி வேறோர்
திக்கிலை அவுணர் பாசம்
சிக்கிய இழைவி டுத்தே
தியக்கமும் தவிர்ந்திந் நாளில்
மிக்கவாழ்வு அளித்துன் ஐந்தக்
கரமனம் மிளிரச் செய்வீர்
நக்கனே இன்ன மென்ன
நலிவுசெய் குவனோ வென்றார்.

"தலைவரே! உம்மையன்றி ஆதரிப்பவர் யாருமில்லை. அசுரர்களின் வலையில் சிக்கி விட்டோம். நூலை அறுத்து எங்களை விடுவித்து வாழ்வளித்து பஞ்சாட்சரத்தின் பெருமையை நிலைநிறுத்துங்கள் இன்னும் இவ்வசுரன் என்னென்ன கொடுமைகள் செய்வானோ?" என்றனர்.

திக்கு - ஆதரவு. **பாசம்** - வலை. **இழை** - நூல். **தியக்கம்** - கலக்கம்

406. "நாங்கள் அனைவரும் இங்கு வந்ததனால் கயிலை தாழ்ந்தது" எனல்

அனைத்தையும் அளிப்பாய் காப்பாய்
அழித்திட வல்லாய் உந்தன்
மனத்தினை அறிவார் உண்டோ
மாநில முறைந்த சீவன்
உனைத்துதி செய்ய வேண்டி
உத்தர திசையின் நாட்டில்
கனத்தினால் கயிலை தாழ்வு
கண்டது கடவுள் தேவே.

"தேவ தேவனே! உலகம் எல்லாவற்றையும் படைப்பதும் நீ. காப்பதும் நீ அழிப்பதும் நீ. அப்படிப்பட்ட வல்லமையுடைய உன் செயலை யாரறிவார்?. எல்லா உலகத்திலுமுள்ள எல்லா உயிர்களும் அரக்கருக்கு அஞ்சி உன்னைத் துதி செய்வதற்காக வடக்கிலுள்ள உன்கயிலைக்கு வந்து விட்டன. அவர்களின் சுமையினால் கயிலை தாழ்ந்து விட்டது." என்றனர்.

உத்திரதிசை - வடக்குதிசை. **சீவன்** - உயிர்.

407. "நீங்கள் வராவிட்டால் வேறு வழியில்லை" எனல்

எள்ளினுள் எண்ணெய் ஆக
எங்கணும் உயிராய் நின்ற
வள்ளலே காமல் இன்றி
வதைப்பன்வா தாவி சூரன்
பிள்ளையின் வருத்தம் பெற்ற
பேதையர் அறிவார் உந்தன்
உள்ளமும் அறியும் அல்லால்
உலுத்தர்கள் அறிவ துண்டோ?

"எள்ளில் எண்ணெய் போன்று உயிருக்குள் உயிராய் நிற்பவனே! பிள்ளையின் வருத்தத்தைத் தாயே அறிவாள். எங்கள் துன்பத்தை நீ அறிவதன்றி தீயர் அறிவாரோ? நீ வராவிட்டால் அந்த வாதாவி சூரன் எங்களை வதைப்பான்"

உலுத்தர் - அறிவற்றவர். தீயவர்

408. "தெரியாததுபோல் கேட்கிறாயே" எனல்

தென்திசை உயர்ந்த சூழ்ச்சி
தெரிந்திடாது அறையும் என்றே
கொன்றைசூ டியனே உந்தன்
கூத்தினை அறிவார் உண்டோ
நன்றிலாக் கள்வன் ஆகி
நற்சுடர் பிடித்த கோலா
வென்றிமால் அயனை நோக்கி
வித்தகன் மகிழ்ந்து கூறும்.

"தென்திசை உயர்ந்த காரணத்தைத் தெரியாதது போல் கேட்கின்றீர். கொன்றை மாலை அணிந்த சிவனே! உம் திருவிளையாடலை யாரறிவார்? கள்வனும் நீரே யாகிக் கள்வனுக்கு விளக்குப் பிடிப்பவரும் நீரே யாகி விளையாடுகின்றீர்." என்று கூறிய பிரமனையும் திருமாலையும் பார்த்துச் சிவன் கூறுவார்.

அறையும் - சொல்லும். **கூத்து** - ஆடல். **வென்றி** - வெற்றி **அயன்** - பிரமன். **வித்தகன்** - அறிவு நிறைந்தவன். இங்கு சிவன்.

409. "வீரவன்னியரால் உங்கள் இடர் தீர்ப்போம்" என்று சிவன் அபயம் அளித்தல்

வானு ளோரிடர் வன்னியர் வாளியால்
ஈன மன்னும் இயக்கரை வீழ்த்துவோம்
வான கத்துறை மாதவ ரேகதி
தான ளிப்பன் தழைத்திரு மென்றனர்.

"இழிவு நிறைந்த அரக்கரை வீரவன்னியன் அம்பினால் வீழ்த்தித் தேவர்களின் துன்பத்தைப் போக்குகிறேன். காட்டில் வாழ்கின்ற முனிவர்களே! உங்களுக்கு நற்கதி அளிப்பேன். கவலைப்படாமல் மகிழ்ந்திருங்கள்". என்றார்

வானி - அம்பு **இடர்** - துன்பம் **ஈனம்** - இழிவு. **கானம்** - காடு **தழைந்த்திரும்** - மகிழ்ந்திரும்.

410. சிவன் திருமாலிடம் உபாயம் கேட்டல்

வண்டு ழாய்மார் பில்திரு மாதுறை
புண்ட ரீகம் பொருந்தும் விழியினாய்
கண்டன் நாடு சமதை ஆகிட
மண்டு உபாயம் வகுத்திடும் என்றனர்.

"வளப்பம் பொருந்திய துளசி மாலை யணிந்த இலக்குமி வாழ்கின்ற மார்பையும். தாமரை போன்ற கண்ணிணையும் உடைய திருமாலே! தெற்குத் திசையாகிய அவ்வரக்கனின் திசையும் வடக்குத் திசையும் சமமாக ஓர் உபாயம் சொல்" என்றார்.

வண்மை + துழாய் - வண்டுழாய் - வளமான துளசி. **திருமாது** - இலக்குமி **உறை** - தங்குகின்ற. **புண்டரீகம்** - தாமரை. **சண்டன்.** அரக்கன். **சமதை** - சமம். **உபாயம்** - வழி. **வகுத்திடு** - கூறு.

411. திருமால் விசுவகர்மனை அழைத்துக் கேட்போமெனல்

பசுபதி பரமா னந்த னேயென
விசுவ கர்மன் விளம்புவன் சூழ்ச்சிகள்
உசித மாக உழுவை அதள்தனைக்
கசிய ருள்பொழி காரண என்றனர்.

"உயிர்களுக்குத் தலைவனே! மேலான இன்பத்தைத் தருபவனே! புலியின் தோலை உடுத்தவனே! அருள் மிகுந்தவனே! விசுவகர்மனை அழைத்தால் உபாயம் சொல்வான்" என்றார் திருமால்.

பசு - உயிர் **பதி** - தலைவன் **உழுவை** - புலி **அதள்** - தோல

412. சிவன் விஸ்வகர்மனை நினைக்க அவன் வந்து "என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டல்.

கருத்தில் விஸ்வ கர்மனை நாடினன்
எருத்தில் ஏறி விடையவன் ஏகியே
திருத்த மாகிய சிந்தை நினைந்திடும்
பருத்த சூழ்ச்சி உளதோ பகரென்றான்.

எருதில் ஏறும் சிவன் தன் மனத்தில் விஸ்வ கர்மனை நினைக்க, அவன் வந்து, "உங்கள் மனத்தில் நினைத்த எண்ணத்தைக் கூறுங்கள்" என்றான்.

எருத்து - எருது காளைமாடு ரிஷபம் **விடையவன்** - இடப வாகனம் உடையவன். **ஏகி** - வந்து பகர் - கூறு.

413. "தென்திசையைத் தாழ்த்து" எனல்

வம்ப னாம்அவு ணாதிபன் வாதையால்
அமபு விக்கண் அமர்ந்த தவரெலாம்
நம்ப திக்கண் நாட தாழ்ந்தது
தென்புறம் உயர்ந்திட் டதுதாழ்த் தென்றான்.

"வம்பு செய்யும் அரக்கனின் கொடுமையால் பூமியில் உள்ளவர் அனைவரும் இங்குவந்து விட்டனர். அதனால் நம்திசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது அதனைத் தாழ்த்து" என்றார் சிவன்.

வாதை - கொடுமை **அவுணாதிபன்** - அரக்கர் தலைவன். **அம்புவி** - அழகிய பூமி

414. "பொதிகையில் உனக்குச் சமமானவர் போனால் தென்திசை தாழும்" எனல்

நதிய ணிச்சடை நாதனே யுன்மலை
பொதிகை யும்மொரு பொன்நிறை ஆதலால்

அதிலு றைந்து உனக்கிணை யாகுவோர்
அதிவி ருப்ப அழுந்துமென் றோதினான்.

"கங்கையணிந்த சடையை உடையவனே! பொதிகை மலையும் உன்மலையும் சமம் ஆதலால் உனக்குச் சமமானவர் அதில் போயிருந்தால் அழுந்தும்" என்றான் விசுவகர்மன்.

நதி - கங்கை **பொதிகை** - தெற்கேயுள்ள மலை

415. சிவன் "எனக்கிணை யார்" எனலும் விஸ்வகர்மன் 'அகத்தியர்' எனலும்

வரம ளிக்கும் மயேஸ்வரன் ஆனவர்
திரமொ ருத்தர் இச்செ கத்தினில்
உரைசெய் வாயெனும் அத்தனை நோக்கியே
அருகும் பத்து முனியிணை என்றனன்.

கேட்டவர்க்குக் கேட்ட வரங்களை அளிக்கும் சிவனானவர், "எனக்கிணையானவர் இவ்வுலகில் யார்?" என்று கேட்டார். விஸ்வகர்மனும், "கும்பத்தில் பிறந்த அகத்தியன் உனக்கிணை" என்றான்.

அத்தன் - சிவன். **கும்பத்து முனி** - அகத்தியன்.

416. பிருகு முனிவர் கோபம் கொள்ளுதல்

கருமன் வண்ணம் கருத்தில் பொதிந்திட
பிருகு மாமுனி பேசுவன் எந்தனை
இருமை யானவுன் சிந்தையில் எண்ணிடா
திரம கன்றங் குஷ்டனைச் செப்பினை.

விஸ்வகர்மன் கூறியதைச் சிவன் கருத்தில் கொண்டான். அதுகேட்ட பிருகுமுனி "என்னுடைய பெருமையை எண்ணாமல் குட்டையான அவ்வகத்தியனைக் கூறினாய் விசுவர்கமனே! "

கருமன் - விசுவகர்மன் **அங்குஷ்டன்** - குட்டையானவன

417.

பெருவி ரல்முனி பேரில் உயர்ந்தவன்
அருகி ருந்தவர் ஆண்மை சிறுத்ததோ
தரும நீதி தவறுமுனை மண்ணுளே
கரும னென்று கழறுவ தாகினை.

"பெருவிரல் அளவு கூட இல்லாத அம்முனிவனோ உயர்ந்தவன்? உன் அருகில் உள்ள இவ்வளவு பேரின் ஆண்மை சிறுத்ததோ? தரும நீதி தவறுகின்ற உன்னைப் பூமியிலுள்ளவர்கள், கருமன் என்று எப்படிச் சொல்லுகிறார்களோ தெரியவில்லை" என்றான்.

பெருவிரல் முனி - பெருவிரல் அளவே உள்ள அகத்தியர். **கழறுவது** - சொல்லுவது

418. விஸ்வகர்மன் தராசில் ஏறச் சொல்லுதல்

இம்மொழி சொன்ன இருடியை நோக்கியுன்
வெம்மை தீர விளம்புவன் என்கரச்
சும்மை யான தராசினில் தூக்கவும்
கம்மி தம்அறி வாயெனக் காட்டினன்.

இப்படிச் சொன்ன பிருகு முனியை நோக்கிய விஸ்வகர்மன் "உன் கோபம் தீரச் சொல்கிறேன். என் கையிலுள்ள தராசில் தூக்குகிறேன். நீ குறையென்றுணர்" என்றான்.

இருடி - ரிஷி. முனிவர் **கம்மிதம்** - குறைவு.

419. இறைவன் தட்டு தாழ பிருகு தட்டு உயர்தல்

எம்பி ரானோர் தடையில் ஏறினர்
சம்ப டர்பிரு கோர்புறம் தாங்கினர்

கம்பி தங்குறை பட்டநற் தடையினில்
அம்பு விக்கண் அழுந்தின தாகையால்.

சிவன் ஒரு தட்டில் ஏறினார். கர்வமுடைய பிருகு ஒரு தட்டில் ஏறினார். (இறைவன் ஏறின தட்டு) பூமியில் தாழ்ந்ததால் பிருகு ஏறிய தட்டு எடை குறைந்து அசையாமல் நின்றது.

சம்பு - கர்வம்: **தடை** - தட்டு **கம்பிதம்** - அசைவு.

420. பிருகின் ஆணவம் அழிந்தமை

பிருகின் ஆண்மை அகன்றது பரமனும்
குருகு டத்து முனிக்கிவை கூறினான்
ஒருமை யாமித் தராசில் உறையென
இருவ ரும்சம னாக இருந்தனர்.

பிருகு முனிவர் ஆணவம் அழிந்தார். சிவன் கும்பமுனியிடம் "இந்தத் தராசில் ஏறு" என்றார். கும்ப முனி ஏற சிவனும், அகத்தியனும் சமமாக இருந்தனர்.

குடத்து முனி, கும்பமுனி - அகத்தியர்.

421. கும்பமுனியை எல்லோரும் புகழ்தல்

அரிய யன்முனி வோர் முதல் தேவரும்
தரும னாதியர் சத்த இருடியர்
குருகு டத்து முனியும் குழகனும்
பெருமை யானவர் என்றுரை பேசினார்.

திருமால், பிரமன், முனிவர்கள், தேவர்கள், எமதர்மன், சப்தரிஷிகள் ஆகியோர் கும்பமுனியும் இறைவனும் பெருமையில் ஒத்தவர் என்று பாராட்டி மகிழ்ந்தனர்.

அரி - திருமால் **அயன்** - பிரமன் **சத்த** - சப்த - ஏழு. **குழகன்** - சிவன்.

422. முனிவன் விஸ்வகர்மனைச் சபித்தல்

நம்பரன் அடியைப் பரவ நாட்டினன் உளத்தில்
தென்பதி யிலேக துதிசெய் விஸ்வ கன்மன்
அம்புவி யுள்ளோர் பணிகள் செய்குவை அளித்த
செம்பொன் நசித்து சிறுவனுக் கெளிமை யாவை.

“சிவனை உள்ளத்தில் போற்றி அவனருகில் இருந்த என்னைத் தென்திசைக்குப் போகுமாறு செய்த விசுவகர்மனே! நீ பூமியில் சென்று எல்லோருக்கும் பொன் வேலை செய்து அவர்கள் கொடுக்கும் கூலியாகிய பொன்னை அழித்து எளியவனாக வாழ்வாய்.”

ஏக - செல்ல. **அம்புவி** - அழகிய பூமி. **நசித்து** - அழித்து **சிறுவன்** - எளியவர்.

423.

அயனும் மயனும் ஒன்றெனப் பகரலாலே
உயர்வினை அணைந்த உன்கிளை அனைத்தும்
கயவர்கரு வித்துலக மன்னி கதிகுன்றி
நயமுள சிருஷ்டியும் அகன்று நலிகொள்வாய்.

“பிரமனும் நீயும் ஒன்று” என்று கூறியதால் உயர்வடைந்த உன் சுற்றத்தார் அனைவரும் கயவராய்ப் பெருமை குன்றி உலகமெங்கும் பரவிப் படைக்கும் தொழிலும் இழந்து நலிவடைவீர்” என்று சாபமிட்டார் அகத்தியர்.

அயன் - பிரமன், **மயன்** - விஸ்வகர்மன் **பகரல்** - சொல்லுதல். **கிளை** - சுற்றம். **கருவித்து** - பிறப்பெடுத்து. **மன்னி** - நிலை பெற்று. **கதி** - பெருமை சிறப்பு. **சிருஷ்டி** - படைப்புத் தொழில்

424. விசுவகர்மன் பதில் சாபமிடுதல்.

என்னுமுனி சாபம் இதையத்தில் உறைகன்மா
தன்னிகரில்லா முனிதனக்குச் சாபம் ஈய்வன்
மன்னகரில் ஆலயமும் பூசனையும் இன்றி
வின்னம்அடை வாய்என இகழ்ச்சிகள்
உரைத்தான்.

"மேற்கூறியவாறு முனிவர் சாபமிட்டதும் அது மனத்தில் தைக்க விசுவகர்மன் தன்னிகரற்ற முனிவருக்குச் சாபம் கொடுப்பவனாய் உனக்கு எந்த நகரிலும் கோயிலும் பூசையும் இன்றி இகழ்ச்சியடைவாய்" என்று சாபமிட்டான்.

கன்மா - விசுவகர்மன். **வின்னம்** - இகழ்ச்சி, குறைபாடு.

425. சிவன் அகஸ்தியனிடம் கூறுதல்

ஆதி யெனும்தமிழ் அகஸ்தியனை நோக்கி
தாதவிழ் கடுக்கைமலர் தார்புனையு மப்பன்
ஓதுவன் எமக்கிணை ஒருவரும் இங்கில்லை
நீதி பொதிகையில் உனைநிறுத்த நினைகின்றேன்.

முதன் முதலில் தோன்றியது எனப்படும் தமிழைத் தோற்றுவித்த அகத்தியனை நோக்கி. மகரந்தம் நிறைந்த கொன்றைமலர் மாலையணிந்த சிவன் "எனக்கு ஒப்பு இங்கு யாருமில்லை. பொதிகை மலையில் உன்னை நிறுத்தி வைக்க நினைத்துள்ளேன்" என்றார்.

ஆதி - முதல். **தாது** - மகரந்தம். **கடுக்கை** - கொன்றை. **தார்** - மாலை

426. அகஸ்தியர் போற்றுதல்

எள்ளுதனில் எண்ணெயென எங்கணும் நிறைந்த
வள்ளல்சரு வேஸ்வரனோ டென்னையிணை
வைத்தாய்

தென்னுதமி ழானதிரு வாசகம் அறிந்து
வெள்ளிமலை மேவும் அரவிந்த நடனத்தாய்.

"தெளிந்த தமிழாலான திருவாசகத்தை அறிந்து கயிலையில் வீற்றிருக்கும் தாமரை போன்ற நடன பாதத்தை உடையவனே! எள்ளில் எண்ணெய் போல் எங்கும் நிறைந்த உனக்கு என்னை ஒப்பாக்கினாய்."

வெள்ளிமலை - கயிலைமலை

427.

குண்டனை உதைத்து மிருகண்டன் மதலைக்கே
பண்டுமை விரும்புமொரு பாகமும் அளித்தாய்
தண்டக வனத்துரி ஷிதந்திரம் சிதைத்தாய்
அண்டமெரி ஆலம்தனை ஆசையற உண்டாய்.

"எமனை உதைத்து மிருகண்ட முனிவன் பிள்ளையாகிய மார்க்கண்டனுக்கு. முன்பு உமை விரும்பிய இடப்பாகத்தை அளித்தாய். தண்டக வனத்து முனிவர்களின் தந்திரங்களை அழித்தாய். உலகத்தையே எரிக்கக் கூடிய ஆலகால விடத்தை ஆசை நீங்குமாறு உண்டாய்."

குண்டன் - எமன். **மிருகண்டன்** - மார்க்கண்டன் தந்தை. **பண்டு** - முன்பு. தண்டக வனத்து முனிவர்களின் மனைவியர் தாங்களே பத்தினி என்று கர்வம் கொண்டனர். அவர்களுடைய செருக்கை அடக்க எண்ணிய சிவன் பிட்சாடனராய் ஆடை கூட இன்றி வந்தார் பத்தினிகள் அவர் பின்னே சென்றனர். அதனால் கோபம் கொண்ட முனிவர்கள் யாகம் செய்து புலி, யானை, மான் ஆகியவற்றைச் சிவனைக் கொல்ல ஏவினர். சிவன் புலியையும், யானையையும் தோலை உரித்து ஆடையாகவும் போர்வையாகவும் கொண்டார் மானைக் கையில் ஏந்தினார். எனவே **தண்டக வனத்து முனி தந்திரம் சிதைத்தாய்** என்றார். **ஆலம்** - ஆலகாலவிடம். **அண்டம்** - உலகம்.

428.

அடியவர் களுக்கெளிய னாகவரு வோயுன்
அடிமுடி அறிந்திலர் அயனும் மாலும்
அடிபரவ யானறிய னாகிலன் நடித்த
அடிமுய லகன்முது கறிந்தது அறிவேனே.

அடியவருக்கு எளியவனாக இருப்பனே! உன் அடியையும் முடியையும் திருமாலும். பிரமனும் அறியாததுபோல் நானும் உன் அடியைத் துதிக்க அறிவில்லாதவன் ஆயினேன். ஆனால் உன் தூக்கிய திருவடியின் கீழ் முயலகன் முதுகு உன் அடியை அறிந்தது போல் அறிந்தேன்.

நடித்த - நடனமாடிய. **முயலகன்** - ஓர் அரக்கன். நடராசரின் பாதத்தால் அடக்கப் பட்டவன் இதனை மாயை என்பர். நடராசர் மாயையை அழித்தார். உடுக்கையிலிருந்து ஒலிபிறக்கும் உடுக்கையைக் கையிலேந்தியமை ஆக்கலையும், எரியைக் கையிலேந்தியமை அழித்தலையும், முயலகனை மிதித்தமை (மாயையை அழித்தல்). அருளல் தொழிலையும் குறிக்கும் என்பது தத்துவ விளக்கம். பிறையை அணிந்து சந்திரனைக் காத்தது காத்தல் தொழிலையும், கங்கையைத் தலையில் மறைத்தது மறைத்தல் தொழிலையும் குறிக்கும் ஆக்கல், காத்தல், அழித்தல் மறைதத்தல் அருளல் என்பன இறைவனின் ஐந்து தொழில்கள்

429.

பஞ்சமுக மாகிய பரமபரனே நாயேன்
பஞ்சதனு வுந்தன் இணையென்று பகர்கின்ற
அஞ்சலருள் பெய்துவளர் அண்ணல் எளியேனுக்கு
அஞ்சல்புரி உன்மகிமை யாரறிய வல்லார்.

ஐந்து முகமுடைய அண்ணலே! அடியேனின் உடல் உனக்கு இணையென்று கூறுகின்றவனே! அஞ்சேல் என்று எனக்கு அருள் தருகின்றவனே! எளியேனுக்கு அடைக்கலம் தருகின்றவனே! உன்

பெருமை யாரே அறிய முடியும்? (என்று அகஸ்தியர் சிவனைப் போற்றினார்)

பஞ்சமுகம் - ஐந்து முகம் ஈசானம், தத்புருடம், வாமதேவம், அகோரம், சந்யோஜாதம் என்னும் ஐந்து முகங்கள் இறைவனுக்குரியவை **நாயேன்** - நாய் போன்ற அடியவன். **பஞ்சதனு** - பஞ்சபூதங்களாலன உடம்பு **இணை** - ஒப்பு.

430. அகத்தியர் சிவனிடம் கங்கை தரும்படி வேண்டுதலும், சிவன் அளித்தலும்

துங்கமத வாரணம் உரித்தணி சுளுப்ப
துங்கசடை மன்னுமதி தும்பைமலர் உய்யும்
கங்கைநறு மாலைவளர் கண்ணுதல் அளிக்க
கங்கை தருவாயென கங்கை அளித்தார்.

மதம் பொருந்திய யானையை உரித்துப் போர்த்துக் கொண்டவனே! மேலான சடையில் சந்திரனையும், தும்பை மலர் மாலையையும், கங்கையையும் சூடியவனே! நெற்றிக் கண்ணையுடையவனே! இவ்வுலகம் பிழைக்குமாறு கங்கையை எனக்கு அளிப்பாய்" என அகத்தியர் வேண்ட அவ்வாறே சிவன் கங்கையை அளித்தார்.

துங்க - மேலான, **வாரணம்** - யானை. **மன்னும்** - நிலைபெற்ற. **மதி** - சந்திரன் **கண்ணுதல்** - நுதல்கண் - நெற்றியில் கண்ணையுடையவன்

431. அகத்தியர் கங்கையைக் கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு 'வன்னிய வீரனைத் துணையாக அனுப்பு' என வேண்டுதல்.

அத்தன் அளிகங்கை கமண்டலம் அடைத்தே
சித்தம்மகிழ் வாகமுனி செப்புவன் அளித்த
புத்திஅவு ணாதிபர் பொதிகையெனத் தேடார்
அத்திர மிகுந்தழல் வீரனை அனுப்பும்.

இறைவன் அளித்த கங்கையைப் பெற்றுக் கொண்டு கமண்டலத்தில் அடைத்து மனம் மகிழ்ந்த அகத்தியர் "உங்களால் வரமளிக்கப்பட்ட வாதாபி அரக்கன் துன்பம் தருவான் என்று பொதிகை மலைக்கு யாரும் வரமாட்டார்கள். எனவே கேடுதரும் ஆயுதங்களை உடைய வன்னிய வீரனை எனக்குத் துணையாக அனுப்புங்கள்" என்றார்

அத்தன் - தலைவன் சிவன். **அஸ்திரம்** - ஆயுதம் **அழல்வீரன்** - அக்னியில் உதித்த வன்னிய வீரன்

432. பிரமனும் விஷ்ணுவும் இதுவே சிறந்தது எனல்

அய்ய னேஎன விறைஞ்ச அண்டரும்
துய்ய னேஇது சூழ்ச்சி என்றனர்
பைய ரவணைத் துயில்வோன் வெண்பங்கயத்
தையலின் கொழுநனும் தருண மென்றனர்.

அகத்தியர் வேண்ட தேவர்கள் "இதுவே தக்கது" என்றனர். நச்சுப்பையை உடைய பாம்பாகிய படுக்கையில் துயிலும் விஷ்ணுவும், வெண்மையான தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளின் துணைவனாகிய பிரமனும் "இதுவே சமயம்" என்றனர்.

இறைஞ்ச - வேண்ட. **அண்டர்** - தேவர். **துய்யனே** - தூய்மையானவனே! **சூழ்ச்சி** - செய்யத் தகுந்த செயல். **பையரவு** - நச்சுப்பையை உடைய பாம்பு. **அணை** - படுக்கை. **துயில்வோன்** - பள்ளி கொள்ளும் திருமால். **வெண்பங்கயம்** - வெள்ளைத் தாமரை **தையல்** - பெண். சரஸ்வதி. **கொழுநன்** - கணவன் **தருணம்** - தக்க சமயம் (நேரம்).

433. சிவன் வீரவன்னியனிடம் அரக்கனை அழிக்குமாறு வேண்டுதல்.

வீரவன் னியன்முகம் விமலன் நோக்கியே
பாரினில் பரவிய பாழரக் கர்கள்

சூரி கொண்டனர் சுரர்கள் வாடினர்.
தாரணி மன்னனே தருணங் காரென்றார்.

மலங்கள் அற்ற சிவன் வீரவன்னியனைப் பார்த்து "பூமியில் பரவிய அரக்கர்கள் எங்கும் கொள்ளை யடித்தனர். இதனால் தேவர்கள் மனம் வாடினர். செங்கழுநீர் மாலை அணிந்த வன்னிய வீரனே! இதுவே தக்க சமயம் அரக்கரை அழித்துத் தேவர்களைக் காப்பாற்று" என்றார்.

மலம் - ஆவணம், கன்மம், மாயை ஆகிய முக்குற்றம், **மலன்** - குற்றமுடையவன் **விமலன்** - குற்றமற்றவன். **சூரி** - சூறை - கொள்ளை **தார்** + **அணி** - தாரணி. **தார்** - மாலை. **தாரணி** - செங்கழுநீர் மாலை அணிந்த **கார்** + காப்பாற்று

434. சிவன் வாதாவியின் இருப்பிடம் கூறுதல்

தென்திசை மேற்புறம் செழித்த வாரியில்
துன்னிய ரத்தினா கரந்து லங்கிடும்
நன்னுநன் னகரில் வாதாவி நாயகன்
மன்னனும் தொடையணிந் தரசுசெய் கின்றான்.

"தென்மேற்கில் கடல் நடுவே ரத்னாகரம் என்னும் நகரில் வாதாவி அரக்கன் மாலை யணிந்து ஆட்சி செய்கிறான்."

வாரி - கடல். **தொடை** - மாலை

435. சிவன் வாதாவியின் வலிமை கூறுதல்

கணக்கிலா அவுணர் சுங்கனு மளித்தனன்
பணத்திணி புயங்களும் பாண மிக்கவர்
குணத்திகழ் ஆகுவர் கொடிய பாதகர்
இணைக்குனை யன்றி வேறொருவர் இன்றியே.

கணக்கற்ற அரக்கர்களைச் சுக்கிராசாரியார் அளித்தார். அவர்கள் பணைத்த பெரிய தோள்களையும் வலிய ஆயுதங்களையு

முடையவர். குணத்தில் கெட்டவர் கொடியவர். அவர்களுக்கு உன்னையன்றி யாரும் இணையில்லை.

அவுணர் - அரக்கர். **சுங்கன்** - சுக்கிரன், **பணத்திணி** - பெருத்த, திண்ணிய. **பாணம்** - அம்பு. **இணை** - ஒப்பு.

436. "அவர்களை அழித்து வா" எனல்

உன்னிட தனயரும் உயர்தர வீரரும்
அன்னக ரடைந்தவன் ஆண்மை நீக்கியே
என்னடி இறைஞ்சுவ தியற்கை வானவர்
மன்னனே யெனவுரை வழுத்தி னானரே.

தேவர் தலைவனே! நீயும் உன் பிள்ளைகளும் வீரர்களும் அங்கே சென்று அவன் வீரத்தை அழித்து என்னுடைய திருவடிகளை வந்து வணங்குவதே உங்களுக்குப் பொருந்தும்" எனக் கூறினார் சிவபெருமான்.

தனயர் - பிள்ளைகள். **வழுத்தினான்** - கூறினான். **அன்னகர்** - இரத்தினாபுரி. **அந்நகர்** எதுகைக்காக **அன்னகர்** ஆயிற்று.

437. வீரவன்னியன் சிவனைப் புகழ்தல்

எந்தை யினடி வலம்புரிந் திறைஞ்சியே
விந்தைசேர் மலருறை விரிஞ்சன் கண்டிலாச்
சுந்தர முடிவளர் சோதி யன்புகழ்
பைந்தமிழ் அளவிடாப் பகரு கின்றிலேன்.

சிவபெருமானின் திருவடிகளை வலம் வந்து வணங்கிய வீரவன்னியன், "வியக்கத்தக்க. மலரில் வாழும் பிரமனும் கண்டறியாத அழகிய முடியையுடைய. ஒளியையுடையவனே! உன்னுடைய புகழைத் தமிழாலும் முழுவதும் சொல்ல முடியாது முடிந்தவரை கூறுவேன்" என்றான்.

விரிஞ்சன் - பிரமன் **சுந்தர** - அழகிய **பகருகின்றிவேன்** - சொல்ல முடியாது

438.

நஞ்சணி அத்தனே நாரணி பாகனே
செஞ்சயி லந்தனில் செயித்த நாதனே
அஞ்செமுத் தாகிய ஆதி மூர்த்தியே
பஞ்ச பாணனை அழல்செய் தெழுப்பினை.

"நஞ்சுண்ட கண்டனே! உமையிடப் பாகனே! மேருமலையை வில்லாக்கி முப்புரத்தை எரித்தவனே! நமசிவாய என்னும் ஐந்தெழுத்தாய் விளங்குபனே! மா, நீலம், அசோகு, முல்லை, தாமரை என்னும் ஐந்து அம்புகளையுடைய மன்மதனை எரித்து மீண்டும் எழுப்பினாய்"

அத்தன் - தலைவன். **நாரணி** - உமை. **செஞ்சயிலம்** - சிவந்தமலை; பொன்மலை, மேருமலை. **பஞ்சபாணன்** - ஐந்து அம்புகளையுடைய மன்மதன்.

439.

மான்மழு சூலமும் மதியும் கங்கையும்
தேனலர் கொன்றையும் சடையும் சீருடை
யூன்வளர் மேதியை உரித்த ணிந்தனை
யோனிவாள் அரவா பரணம் பூண்டனை.

"மானும், மழுவும், சூலமும், சந்திரனும், கங்கையும், தேனிறைந்த கொன்றையும் அணிந்த சடையை யுடையவனே! சிறப்புப் பொருந்திய உடலையுடைய யானையை உரித்துப் போர்த்துக் கொண்டவனே! புற்றிலிருக்கும் கொடிய பாம்பை அணியாக அணிந்தவனே!"

மதி - சந்திரன். **ஊன்வளர்மேதி** - மாமிசம் நிறைந்த யானை. **யோனி** - புற்று

440.

திரிபுர தகனனே செய்ய தாளனே
தெரியவூ னருந்திபின் சிறுவன் ஆக்கினை
ஒருமுனி மகவினுக்கு உகந்து சண்டனை
தரணியில் உற்ற என் தந்தை யென்றனன்.

"முப்புரத்தை எரித்தவனே! சிவந்த திருவடிகளை உடையவனே! பிள்ளைககறியைப் படைக்கச் சொல்லிவிட்டுப் பின் சிறுவனைக் கொண்டு வந்தாய் மிருகண்ட முனிவரின் மகன் மார்க்கண்டேயன் சிவபூசைக்கு மகிழ்ந்து யமனைப் பூமியில் வீழ்த்தினாய்! என் தந்தையே" எனப் பலவாறு போற்றினான்

திரிபுரம் - முப்புரம ஆகாயத்தில் திரிநத தாரகாட்சன், கமலாட்சன், விதயுன்மாவி என்ற மூனறு அரக்கர்களின் பொன, வெள்ளி, செமபுக கோடடைகள் மேருமலையை விலலாககித் திருமாலை அம்பாககி ஆனால் அவற்றைப் பயனபடுததாமல் சிரிததே இந்கோடடைகளை எரித்தா சிவபெருமான இது நிகழந்த இடம திருஅதிகை. சிவபெருமான் காபாலிகராக வந்து சிறுததொணட நாயனாரிடம் பிளளைககறி கேட்க, அவா் தம் குழந்தையைக் கறி சமைததுக கொடுததா சிவபெருமான் குழந்தையை வரவழைத்தா

உகந்து - மகிழ்ந்து **மகவு** - குழந்தை மார்ககணடன் **சண்டன்** - எமன

441. சிவபெருமான் வீரவன்னியனுக்கு "அம்பு தருவேன்" எனல்

தோத்திரம் புரிந்திடும் சுதனை முத்தமிட்டு
ஏற்றுவா கனமுறை இசைப்பன் உன்றனை
நாற்றிசையி லுள்ளவர் நவின்று இறைஞ்சிட
பார்த்திப உனக்கிசை பாணம் நல்குவன்.

தன்னைத் துதித்த மகனை முத்தமிட்ட காளையேறும சிவபெருமான் "உன்னை நான்கு திசையிலு முள்ளவர் போற்றி வணங்க உனக்குப் பொருந்திய அம்பு தருவேன்". எனறார்

சுதன் - மகன **ஏறு** - காளை **இசைப்பன்** - கூறினான **நான்கு + திசை** - நாற்றிசை **நவின்று** - புகழநது **இறைஞ்சிட** - வணஙக **பாணம்** - அமபு

442. ஆயுதங்களின் பெயர்கள்

நாகமும் கருடனும் நவத்த கீரியும்
தோகை மஞ்ஞைதேன் துளிக்கும் அஸ்திரம்
வேகமாம் பிரமனும் விண்டு சக்கரம்
யாக சாதனன் நற்படையும் சூலமும்.

நாகாஸ்திரம், கருடாஸ்திரம், கீரியாஸ்திரம், தோகையுடைய மயில் அஸ்திரம், தேன் சொட்டும் பாணம், வேகமான பிரமாஸ்திரம, விஷ்ணுவின் சக்கரப்படை, தேவேந்திரனின் வசசிராயுதம், சிவனின் சூலம,

மஞ்ஞை - மயில், **விண்டு** - விஷ்ணு, திருமால **யாக சாதனன்** - இநதிரன

443.

பிண்டிபாலம் கதை பெருத்த கேடயம்
கொண்டலின் இடியெனக் கொதித்த சாரங்கம்
சண்டனத் திரமுடன் சக்தி வேலும்வாள்
எண்டிசை எரிக்கும் விச்சுளியும் ஈந்தனன்.

பிணடி, பாலம், கதை, கேடயம், மேகம் போல ஒலிக்கும் வில், யமாஸ்திரம், சக்தி, வேல், வாள், எட்டுத்திசையையும் எரிக்கும் விச்சுளி இவற்றைக் கொடுத்தார் சிவபெருமான்

பிண்டி பாலம் - **எறிஆயுதம்**. பாலம - **மழு கொண்டல்** - மேகம **சாரங்கம்** - வில **சண்டன்** - எமன **சண்டனத்திரம்** - எமனின் பாசம **விச்சுளி** - அககினி அஸ்திரம

444.

கெசமுக நரசிங்கம் கிளர்ந்தெழு பாணமும்
பசுபதி பினாகமும் பாசு பாணமும்
விசயநா ராயணன் விருச்சி காஸ்திரம்
முசுகுந்தம் மோகனம் முதலாய் ஈந்தனர்.

யானை முகமுடைய அம்பு, சிங்கமுக அம்பு, இறைவனின் வில்லாகிய பாசுபதம், திருமாலின் அம்பு, வெற்றி பொருந்திய தேள் அம்பு, ஈட்டி, மோகனாஸ்திரம் ஆகியவற்றையும் கொடுத்தார்

யானைமுக அம்பு - யானைபோல் படையை அழிக்கும அமபு சிஙகமுக அம்பு சீறிப்பாயும மோகனாஸ்திரம எதிரிகளை மயக்கமடையச் செய்யும **விருச்சிகம்** - தேள் **குந்தம்** - ஈட்டி

445.

அஞ்செழுத் தாகிய அஸ்தி ரத்தினால்
செஞ்சரத் துயர்பவஞ் செய்யுஞ் சூலதிரம்
பிஞ்சிள மதிநுதற் பிள்ளை யாகிய
பஞ்சவன் னியர்க்குப் பரனார் ஓதினார்.

நமசிவாய என்ற அஞ்சசெழுத்து ஆகிவிடும் அம்பினால் மீண்டும் பிறக்கச் செய்யும் மந்திரத்தைப் பிறை போன்ற நெற்றியுடைய பிள்ளைகளாகிய ஐது வன்னிய வீரர்க்கும் சிவபெருமான் ஓதினார்

சரம் - அமபு **பவம்** - பிறப்பு **பிஞ்சு இளமதி** - பிறை **நுதல்** - நெறறி **பஞ்சவன்னியர்** - ஐநது வன்னியர் **பரனார்** - சிவபெருமான்

446. உமாதேவி வீரவன்னியனுக்குக் கூறுதல்

உலகினை ஈன்றவள் ஒளிம லர்க்கழல்
சொலுமி றைஞ்சிட செயித்த பார்வதி
தலைகடல் இனிதுறை அவுணர் சார்பெலாம்
உலகினில் இரிந்திட உண்மை ஓதுவாள்.

இவ்வுலகை ஈன்ற உமாதேவியின் ஒளிபொருந்திய மலர்போன்ற பாதங்களை வீரவன்னியர் வணங்க வெற்றியுடைய உமாதேவி கடலில் வாழும் அரக்கர் கூட்டம் அழிய உபாயம் கூறினாள்.

அவுணர் - அரக்கர் **சார்பு** - கூட்டம **இரிந்திட** - நீங்க, அழிய

447. வழியில் துர்க்கை உள்ளாள் எனல்

எந்தன் மகவான இலஞ்சியமே கேளாய்
சிந்தை துயர்செய் அவுணா தியருக்கு
இந்தப் பதியேறு தடநடுவினில்
விந்தை யெனுந்துர் கைவிளங் கிடுவாள்.

"என் பிள்ளையான இலஞ்சியமே கேள்! மனத்தைத் துன்பப் படுத்தும் அரக்கர்களுருக்கு இவ்வூரிலிருந்து செல்லும் வழியில் நடுவே துர்க்கை இருக்கிறாள்"

தடம் - வழி

448. அவளை வழிபட்டால் உதவுவாள் எனல்

சமரித் திடும்சரம் அளித்தாள் தொழுதால்
விமலி அருளிய விருப்பமுடன் வருவாள்
இமையவர் ஏத்தும் சிகர மணிநீ
அமருக் கிசைவாய் அழல்மன் னவனே!

"பகைவரைப போரிட்டு அழிக்கும் அம்பு அளிக்கும் துர்க்கையைத் தொழுதால் அவள் உங்களுக்குத் துணைவருவாள் தேவாகள் போறறும் முடிமணியாகிய நெருப்பின் மைந்தனே! போருக்குப புறப்படுவாயாக" என்றாள்

சமரித்திடும் - போர் புரியும **சரம்** - அமபு **விமலி** - குறறமறறவள, துர்கைக **இமையவர்** - தேவர் **சிகரம்** - முடி **அமர்** - போா **அழல்** - நெருபபு

449. போருக்குப் புறப்படு எனல்

சோதித் தெழுசூ லமும்வேல் சுரிகை
ஈதித் தினமுன் கரமீந் தனனித்
தீதுற் றவுணா தியைச்சே தித்திடவிப்
போதுத் திரளோ டையில்போ குதியால்.

"ஒளி பொருந்திய சூலம், வேல், வாள் ஆகியவற்றை இந்நாளில் உன்கையில் அளித்தேன். தீமை பொருந்திய அரக்கர்களை அழிக்க இப்போதே சேனைகளுடன் புறப்படு" என்றாள்

சோதித்தெழு - ஒளிரும், **சுரிகை** - வாள் **கரம்** - கை **ஈந்தனன்** - கொடுத்தேன் **சேதித்திட** - அழிகக **ஓடை** - சேனை

450. திருமால் கோதண்டம் அளித்தல்

என்றாள் பதம் இறைஞ் சினனாய்
நின்றான் நெடுமால் அயனும் இவ்வர்
குன்றாம் அவுணாதி குழாம் அமல்
சென்றால் இடர்தீர்ப் பதும்இச் சிலையே.

கூறிய உமாதேவியை வணங்கினான் வன்னியன். திருமாலும் அயனும் வந்தனர் " குன்று போன்ற அரக்கர் நடுவில் சென்றால் துன்பம் தீர்ப்பது இவ்வில்லே"

பதம் - பாதம **குழாம்** - கூடடம **அமர்** - போா **இடர்** - துன்பம - **சிலை** - வில்

451. வில்லைக் கொடுத்து வென்று வரும்படி வாழ்த்துதல்

எனவே பிரசண்ட கோதண்டமும் ஈய வானோர்
அனல்மா முனியே அவுணா திபர்அ னைத்தும்
வென்ற தினமிங் குறைவா யெனமிகச் செயங்கள்
கூற குனிவிற் கரம்கூப்பி உறைந்திடு கோயில்
சார்ந்தான்.

என்று கூறி வலிய கோதண்ட வில்லைக் கொடுத்து, "வன்னியரே! அரக்கர்கள் அனைவரையும் அழித்துப் பின் இங்கு வருக" என வாழ்த்துக் கூறினர் வன்னியரும் வளைந்த வில்லேந்திய கையுடன் வணங்கித் தாங்கள் தங்கியிருந்த அரண்மனை அடைந்தனர்.

பிரசண்ட - வலிமை பொருத்திய **கோதண்டம்** - வில் **வானோர்** - தேவர் **அவுணாதிபர்** - அரக்கர் தலைவர் **செயம்** - வாழ்த்து, வெற்றி **குனிவில்** - வளைநத வில்லையுடைய

452. தன் மனைவியிடம் வன்னியமகராசன் செய்தி கூறுதல்

காருற்ற குழல்மடவார் கட்கரசி கேளிய
பேருற்றிடு தென்திசைமேற் பால்பரந் தரக்கர்
சீருற்றனர் அங்கினி ஏகி செயங்கற்றே
பாருற்ற வீர ரனைவோரும் உன்பாதம்
அணைவோம்.

"மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்களுக்கு அரசியே! கேள் பெயர்பெற்ற தென்திசைக்குச் சென்று அங்கு சிறப்புப் பெற்றிருககும் அரக்கரோடு சண்டையிட்டு வெற்றி பெற்று வீரர்கள் அனைவரும் வந்து உன்பாதம் அடைவோம்" என்றான் வீரவன்னிய மகாராசன

கார் - கேம **குழல்** - கூந்தல **மடவார்** - பெண்கள **கேளிய** - கேள **செயங்கள்** - வெற்றி

453. மனைவி வேண்டுகோள்

பருமாமுடி சென்னி இலங்க
இப்பார் புரக்க
வருகாலம் இக்கோவில் இருப்பது
வளமென் றோது
நிருபன் கழலெற்றி அமரின்
நிணங்கள் உண்ணும்
பெருவேற் பிடிகரம் இன்புய
நங்கள் பிரானே.

"அசுரன் கால்களை எற்றிப் போரில் மாமிசம் உண்ணும் வேலைக் கையில் பிடித்த இனிய புயங்களையுடைய பெருமானே! பெருமைமிக்க கிரீடம் தலையில் விளங்க இப்பூமியைக் காத்துத் திரும்பிவரும்வரை இங்கே இருப்பது நலம் எனறீர்".

பரு - பெரிய, பெருமை மிகக **சென்னி** - தலை **புரக்க** - காப்பாற்ற **கோவில்** - மண்டபம், அரண்மனை **நிருபன்** - அரக்கன் **அமர்** - போர் **நிணம்** - மாமிசம **நங்கள்** - எங்கள் **பிரான்** - தலைவன்

454.

அவுணாதிபர் ஆண்மை மிகுந்தவர் கையாலுன்
குவவஸ்திர தோள்கள் நலிவான குறிகள்
கவையாகிய சோதனை ஈந்தருட் கோவென்ன
நவமாமணி மொய்க்கும் முடிநயன் நவில்வான்.

"அவ்வசுரர்கள் ஆண்மை மிக்கவ அவர்கள் கையால் உன் அம்பு தொங்கும் தோள்களுக்கு அபாயம் ஏற்பட்டால் அதனை நான் அறிய அறிகுறி தாரும்" என்று மனைவி கூற நவமணி பொலியும் கிரீடம் அணிந்த வீரவன்னியன் கூறுவான்

அவுணாதிபர் - அரககர் தலைவா **குவவு அஸ்திர** - அமபு தொங்கும்

455. வன்னிய ராசன் குறிகள் சொல்லுதல்

கொந்தார் குழல்மாதே அவுணர் கொதித்தெழுந்து
சிந்தா குலம்செய் திடுநாளில் செழுந்தீபம்
நிந்தாகிச் சங்குமுழங்கும் நிறைந்த மாலை
இந்தா இதுவாடும் மிகசூழ்ச்சி இதையமுற்றால்.

"கொத்தாகப் பூசசூடிய கூந்தலையுடைய பெண்ணே! அசுரர் சினந்து போர்செய்யும போது எனக்குத தீங்கு நேர்ந்தால் இவ்விளக்கு அணையும். இச்சங்கு முழங்கும்; மாலை வாடும்"

கொந்து - கொத்து **குழல்** - கூந்தல் சிந்தாகுலம் சிந்தைக்குததுன்பம, தீஙகு **நிந்து** - அணைதல

456.

அப்போது அழல்வீழ்வை எனஅரசன் இயம்ப
இப்பால் இவனீன்ற தனையர் இசைப்பமாதோ
வெற்பாம் அவுணாதி கரத்தின் மெலிவடைந்தால்
சொற்பால் அளித்திட்ட சுவானம்உன் பாலில்சூழும்.

"அப்போது நீ நெருப்பில் மூழ்கி இறப்பாய்" என்றான். அவனுடைய பிள்ளைகள் கூறுவர். "மலைபோன்ற அரக்கர் கையால் நாங்கள் மடிந்தால் நாம் வளர்க்கும் நாய்களில் ஒன்று உன்னிடத்தில் திரும்பிவரும"

அழல் - நெருபபு **தனையர்** - பிள்ளைகள் **வெற்பு** - மலை **மெலிவடைந்தால்** - இறந்தால் **சுவானம்** - நாய்

457. நீராடி உணவுண்ணல்

அன்றே மலரறுவை யென்றுரைத் தவர்கூடிச்
சென்றே நதியாடி விபூதி சிறப்பணிந்து

கொன்றையணி கூத்தனைப் போற்றினர் கோயில்
சார்ந்து நன்றமு துண்டு சுகந்தநலம் அணைந்தார்.

"அப்போதே நீங்கள பூக்களிழந்தீர்கள்" என்று கூறி நான்கு புதல்வரும் சேர்ந்து சென்று நதியில் நீராடித் திருநீறு பூசிக் கொன்றை மாலை சூடும் சிவபெருமான கோயில் சென்று, அவனை வணங்கி வந்து உணவுண்டு நறுமணப் பொருள்களைப் பூசிக் கொண்டனர்.

சுகந்தம் - நறுமணம

458. ஆபரணம் தரித்தல்

அணிகின்ற கலனணிந்தே துவர்க்காய் அருந்தி
மணிகொண்ட கொடிசிரம் மின்ன மலர்கள்துன்ன
திணிகொண்ட புயங்களைக் கூடு செம்பட்டுஇலக
இணையெவ் வுலகில் இல்லையெனு முழங்கிய
அன்றே.

ஆபரணங்கள் பூட்டித் தாம்பூலம் தரித்துக் கொண்டு, மணிகள் இழைக்கப் பட்ட முடி கவித்த தலை மின்னவும், வெட்சிமலர் மாலை சூடிய பருத்த தோள்களில் அம்பறாத் தூணியும், செம்பட்டும் விளங்கவும், இவ்வுலகில் இவர்க்கு யாரும் இணையில்லை யென்று சொல்லும்படி,

கலன் - அணிகலன் ஆபரணம **துவர்க்காய்** - பாக்கு **துன்ன** - நெருங்க **திணி** - நெருங்கிப்பருத்த **கூடு** - அமபறாத்தூணி

459. வாத்திய முழக்கம்

மலரின்கரம் அம்பொடு வில்லும் வளரவானோர்
கலையோதி நற்கர வண்முழை மாரிதூற்றப்
பலமாகிய தானை பயண பயணமென்றே
பொலிபேரி குடமுழை சங்கும் உறுமிதுன்ன.

மலர்போனற கைகள் அம்புமு வில்லும் ஏநத, தேவர் வேதம் ஓதி, தழைகளையுமு மலர்களையுமு மாரிபோல பொழிய, பலம பொருந்திய படைகளின் பயணம் கூறி பேரி, குடமுழா, சங்கு, உறுமி ஆகிய வாததியங்கள் முழங்கின

கலை - வேதம் **மாரி** - மழை **தூற்ற** - பொழிய **தானை** - படை **பேரி குடமுழா, உறுமி** - அடிக்கப்படுமு இசைக்கருவிகள **சங்கு** - ஊதுமு கருவி

460.

அண்டங்கள் கிடுகிடு வென்ன அசுவம் துன்ன
கொண்டாடு சங்காயலகு சாயும்கொம் பூத வீணை
மண்டாடும் தம்பூருடன் மத்தள தாளம் ஆர்ப்பத்
திண்டோள் புயவீரன் புகழைச் செயங்கள் பன்ன.

எல்லா அண்டங்களும் கிடுகிடுவென நடுங்கவும், குதிரைகள் சூழவுமு, திண்ணிய தோளையுடைய வன்னிய வீரனின் புகழைக் கூறி வெற்றி வெற்றியெனச் சங்கும் கொம்பும் ஊதின தம்பூரா வீணை ஒலித்தன தாளம், மத்தளம் கொட்டின

461. வாதாவியின் இடது தோள் துடித்தல்

குண்டோ தரன்பொற் றடிகொண்டு விருதுகூற
எண்டிக் கினுமுள்ளோர் செவிடாகி யக்கரின்
மண்டிச் சிறைகொள்ளுவ ரோவென் றறிவேறா
துண்டர் அவுணாதிபர் இடத்தோள் துடித்த தன்றே.

குண்டோதரன் போன்ற பலர் பொன்தடியால் தட்டி வன்னிய வீரரின் பட்டங்களைக் கூற எட்டுத் திக்கிலுமுள்ளோர் காது செவிடாகி அரக்கர் சிறைப்படுவாரென ஐயுற்றனர் அப்போது அரக்கர் தலைவன் வாதாவியின் இடதுதோள் துடித்தது

விருது - படடபெயர் **துண்டர்** - துஷ்டர் **அவுணர்** - அரக்கர்

462. வன்னிய வீரன் சிவனிடம் விடைபெறுதல்

கைப்படை மன்னவன் கண்ணு தல்விடை
செப்பிட மக்களும் சேனை சூழ்ந்திட
மைப்படி கண்டனை இறைஞ்சி மக்களை
ஒப்புர வாகவே உறுதி கூறினன்.

கையில் ஆயுதம் ஏந்திய வன்னிய வீரனுக்கு நெற்றிக் கண்ணுடைய சிவபெருமான் விடை கூற, மக்களும படையும் சூழ்ந்திட, வன்னியன் கண்டம் கறுத்த இறைவனை வணங்கி 'மக்களைக் காப்பேன்' என உறுதி கூறினான்

கண்ணுதல் - நுதல - நெறறி நெற்றியில் கண்ணுடைய சிவன் **மை** - கருமை **கண்டன்** - கழுத்தையுடையவன் **மைப்படி கண்டன்** - கருமை படிந்த கழுததுடையவன் ஆலகால விடத்தை உண்ணும்போது பாாவதி தடுக்க விடம கழுத்திலேயே தங்கியதால் கண்டம் மட்டும கறுத்தது **ஒப்புரவு** - காப்பாறறுதல்

463. சிவன் வாழ்த்துல்

வன்னியில் தோன்றிய வரிசை மாமணி
மின்னிய அவுணரை அழித்து மீண்டபின்
இன்னகர் அனைத்தையும் புரக்கும் ஏந்தலாம்
இன்னருள் ஈந்து தாளிதமும் ஈந்தனன்.

"அக்கினியில் தோன்றிய இவ்வன்னிய வீரன், செருக்கடைந்த அரக்கரை அழித்துத் திரும்பிய பின் இந்நகரம் அனைத்தையும் காப்பான்" என்று அருள்மொழி கூறிய சிவபெருமான் திருநீறும அளித்தான்.

வன்னி - அக்னி **வரிசை** - சிறப்பு **அவுணர்** - அரககர் **புரக்கும்** - காககும **ஏந்தல்** - பெருமைக்குரியவன் **தாளிதம்** - திருநீறு

464. உமையிடம் வாழ்த்துப் பெறுதல்

உமையடி இறைஞ்சினர் உவகை யாகவே
சமர்கொடு மீளுவீர் தானைகா ளெனவே
கமலநேத் திரனயன் கடவு ளின்கழல்
அமைவுடன் இறைஞ்சினர் அவரும் வாழ்த்தினர்.

உமாதேவியை வனனிய வீரர் வணங்கினர் அவரும் மகிழ்ச்சியோடு "படைகளே! போாபுரிந்து வெறறியோடு மீளுவீர்" என வாழ்த்தினார் தாமரை போனற கணணுடைய திருமால், பிரமனின் பாதஙகளையும் அடக்கத்துடன் வணஙகினர் அவர்களுமம வாழ்த்தினர்

உவகை - மகிழச்சி **சமர்கொடு** - போர்செயது **தானைகாள்** - படைகளே! **கமலம்** - தாமரை **நேத்ரம்** - கண **நேத்திரன்** - கணணையுடையவன திருமால **அயன்** - பிரமன் **கழல்** - பாதம **அமைவு** - அடககம

465. மயன் தேர் அமைக்க ஏறுதல்

அனைவரின் விடைகொளும் அரச வீரனும்
மனதினில் மயன்தனை நினைப்ப வந்தனன்
தினகரன் ஒளிர்இர தஞ்சிருஷ்டி செய்யின்
றெனஇர தமுமயன் அளிப்ப ஏறினன்.

எல்லோரிடமும் விடைபெற்ற வன்னிய மகாராசன் மனத்தில் மயனை நினைக்க அவனும் வந்தான் "சூரியன்போல் ஒளி வீசும் இரதம் (தேர்) ஒன்று சிருஷ்டிசெய்" எனக்கூற அவனும் அவ்வாறே அளிக்க அதன்மீது எறினான்

மயன் - தேவதசசன் **தினகரன்** - சூரியன **இரதம்** - தோ **சிருஷ்டிசெய்** - உணடாககு

466. சனகன் அத்திரிக்குக் கூறுதல்

மாதவன் உயர்ந்த மாமுனிகள் ஏத்திய
காதலத் திரியெனக் காதல் உன்னியிடப்
பூதல விசையமாம் பூப சரிதையைப்
போதக சனகனும் உரைக்க லுற்றனன்.

உயர்ந்த தவமுடைய முனிவர்கள் போற்றும் அன்புடைய அத்திரி மகரிஷி என்பதால் அவரிடம் அஃ்பு கொண்டு இப்பூமியில தோன்றிய வன்னிய ராசனின் வரலாற்றை ஞானமுடைய சனக முனிவரும் தொடர்ந்து கூறுகின்றார்

மாதவன் - மிக்க தவத்தையுடைவன் **உன்னி** - நினைத்து **விசையம்** - தோன்றிய **போதகம்** - ஞானம்

13. வீரவன்னியர்கள் படையெழுச்சிச் சருக்கம்.

467. வீரவன்னியன் புறப்படுதல்

அன்னை யேஎங் கய்யனை இறைஞ்ச
அன்புடன் விடைகொடுத் தனுப்ப
உன்னிய முரசு காகளம் ஆர்ப்ப
உம்பரும் முனிவரும் களிப்ப
மின்னிய தேரும் வேழமும் பரியும்
இலக்கவீ ரர்களும் சூழ
சென்னியின் மவுலி இலங்கிடப் புரிந்தான்
சிவன்மகன் வீரவன் னியனும்.

அன்னையையும் தந்தையையும் பணிந்து அவர்கள் விடைகொடுக்க முரசும். வாத்தியங்களும் முழங்க. தேவரும் முனிவரும் மகிழ. ஒளிவீசும் தேரும். யானையும். குதிரையும் இலட்சம்

வீராகளும் சூழ தலையில் மகுடம இலஙகச் சிவன் மகன் வீர வனனியன் புறப்பட்டான்

காகளம் - எககாளம **உம்பர்** - தேவர் **வேழம்** - யானை **பரி** - குதிரை **இலக்கம்** - இலடசம **சென்னி** - தலை **மவுலி** - மகுடம

468. தென்திசை நோக்கி நடத்தல்

தனயர்கள் நால்வர் இருபுறம் நெருங்கத்
தந்திர அமைச்சரும் இறைஞ்ச
குனிசிலை வீரர் கவரிகள் இரட்ட
கோதிலார் காளாஞ்சிகள் ஏந்த
புனிதமாம் கிரண நறும்புகை சூழ
பொற்கோ லம்இரு பாலில்
இனிதுற பக்கத் தீவட்டியும் இலங்க
அந்தகன் திசையினில் நடந்தான்.

பிள்ளைகள் நால்வரும் இருபுறமும நெருங்கி நடக்க, அமைசசர் பணிய, வளைந்த வில்லையுடைய வீரர் கவரி வீச, குற்றமறறவர் தாம்பூலம் உமிழும் கிண்ணிகளை ஏந்த, புனித நறுமணப் புகைசூழ, இருபக்கமும் பொற்கோலங்கள் விளங்க, தீவட்டியும் இருபுறம் எரிய, எமன் திசையான தென்திசை நோக்கி நடந்தான்,

தனயர் - பிள்ளைகள **தந்திரம்** - ஆலோசனை **குனி** - வளைந்த **சிலை** - வில் **கவரி** - சாமரம **இரட்ட** - வீச **கோது** - குறறம **காளாஞ்சி** - தாமபூலம் உமிழும கிண்ணம **அந்தகன்** - யமன்

469.

எமன்திசை யான தெற்குத்திசை கொம்பு
எக்காளம் குடமுழா யாழும்
குயிலு வத்தை சிந்துரக் கவிகை
செழித்ததோர் அசுவ கேதனமும்

அம்புவி யரசர் வந்தனை செலுத்த
வனப்பரி இனங்களும் ஆர்ப்ப
கும்பமா முனியும் கோதிலாத் தமிழைக்
கூறவும் நடந்தனன் மாதோ.

தென்திசை நோககி எக்காளம், குடமுழா, யாழ் போனற கருவிகள் முழங்க, குடைகவிகக, நெறறியில் சிந்துரப் பொட்டுடன, அசுவக்கொடி பிடித்து, பூமியில உள்ள அரசர் வணங்க, குதிரைகள் கனைக்க, அகத்தியர் தமிழை ஓத நடந்தான் வீரவன்னியன்

அஸ்வம் - குதிரை **கேதனம்** - கொடி **கவிகை** - குடை **கும்பமாமுனி** - அகத்தியா குமபத்தில் தோன்றியதால் இபபெயா பெறறாா

470. கயிலை மலை நீங்கிச் செல்லுதல்

அழலினில் உதித்த வீரவன் னியரும்
அரன்மலை அகன்றிட அமரர்
குழுவுடன் அவனி புரந்திடும் நாதன்
கோயிலில் ஏகியே இறைஞ்சி
விழைவுள புதுமை அனைத்தையும் ஓர்ந்து
வெகுநகர் அகன்றனர் கீதம்
பழமுறைப் படியே பாடிநற் றவமும்
பலிவுற நடந்தனர் அன்றே.

நெருப்பில் உதித்த வீரவன்னியர் ஐவரும் சிவன் மலையாகிய கயிலை நீங்க, தேவர் கூட்டத்துடன் இப்பூவுலகைக் காககும் சிவன் குடியிருக்கும் பல ஆலயங்களைத் தரிசித்து வணங்கிப் பல புதுமைகளைக் கண்டு, பலநகரங்களைக் கடந்து பாடல பாடித் தவம பலிக்க நடந்தார்கள்

அரன்மலை - சிவன்மலை, கயிலை **குழு** - கூட்டம **அவனி** - உலகம் **புரந்திடும்** - காத்திடும **இறைஞ்சி** - வணஙகி **ஓர்ந்து** அனுபவித்து **விழைவுள** - விருபபம தரும

471. பல தலம் கடந்து சீர்காழி அடைதல்

வாரணாபுரி காளத்தியும் காஞ்சி
மலைமருந் தெனவளர் பதியும்
சீருடன் ஏகியே விடைஅத்தன்
செய்யபொற் கழலிணை இறைஞ்சி
நீரினையாடி நேமியை அகன்று
நிறைந்தநல் தில்லையை வணங்கி
தாரணி சம்பந்தர்க் கருளீந்த
தற்பரன் முன்றிலில் சார்ந்தார்.

காசி காளததி, காஞ்சி திருவணணாமலை எனப் பல தலம தரிசித்து ரிஷபததின் மேலேறிய சிவனை வணங்கி, நீராடி, கடலோரம நீங்கிப பாடலிபுரம கடநது, திலலையடைந்து வணங்கி மாலையணிநத சமபந்தர்ககருள் செய்த தோணிபுர நாதரின் கோயிலை அடைநதனா

வாரணாபுரி - காசி **மலைமருந்து** - அணணாமலையான **விடை** - காளை **அத்தன்** - தலைவன **கழல்** - பாதம **நேமி** - கடல தாா + அணி - மாலை அணிநத **தற்பரன்** - இறைவன

472. அகத்தியர் கமண்டலத்தைக் கவிழ்க்க எண்ணுதல்

அத்தனைக் கருத்தினில் உன்னியே வேளூர்
அண்ணலின் கழலிணை சாற்றி
பத்தியாய் ஏகிக் குருமுனி செய்ய
பருவதம் சார்ந்துமே நிற்க
குத்திரம் நினைக்கும் விச்சுவ கர்மன்
குருமுனி கமண்டலம் கவிழ்க்க
சித்தமீ துணர்ந்தான் தேவரும் இசைய
சிந்தையில் உவகை ஆகின்றான்.

சீர்காழி இறைவனை வணஙகி வைததீஸ்வரன பாதம போறறி அகததியர் இருபபிடம அடைந்து அவா கமண்டலத்தைக கவிழக்க விசுவகர்மன் நினைககத் தேவரும சமமதிகக விசுவகர்மன் மகிழ்ந்தான

அத்தன் - இறைவன **பருவதம்** - மலை **குருமுனி** - அகத்தியா **குத்திரம்** - சூழச்சி **உவகை** - மகிழச்சி

473. இந்திரன் விநாயகரை வேண்டுதல்

பொற்கய முகன்பால் புகலுவன் முனிவன்
புனிதநற் சடையினில் உறையும்
நற்புனல் கவிழ்த்து நடந்தன் னைதனை
நானிலந் தனில்கவிழ்த் திடவே
அக்கணம் மகவான் அருளுவன் அவுணர்
ஆண்மையால் அவனிகள் செழியா
துக்கமும் கங்கை யாற்றிடச் சோழன்
தொன்னகர் செழிப்புறு மென்றான்.

விசுவகர்மன் யானைமுகனை நோக்கி, "அகத்தியன், சிவனின் சடையில் தங்கும கங்கையைக கமண்டலத்தில் வைத்துள்ளான் அதனைப் பூமியில் கவிழ்த்து விடு அப்போது இந்திரன் அருளுவான் அரக்கரின் கொடுமையால் பூமி வறண்டு நீரின்றித் துக்கமாயுள்ளது இத்துக்கத்தைக் கங்கை நீக்கும்படி இந்நீர் சோழனின் நகரில் பாய்ந்து செழிக்கட்டும்" என்றான்.

கயமுகன், கஜமுகன் - யானைமுகன் **நானிலம்** - நானகு + நிலம் - முலலை குறிஞ்சி, மருதம, நெயதல் எனற நான்கு வகை நிலம பூமி **மகவான்** - இந்திரன **அருளுவன்** - கூறுவான்

474. விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்த்தல்

அன்னையாம் கங்கை குறுமுனி குண்டி
அடைந்ததால் உவகையை அடைந்தே

மன்னியன் பாலில் சென்றிடா தேகும்
மார்க்கமும் மனத்தினில் உதிக்க
கன்னிக் கொடியாய் ஏகுற சபையிற்
கயமுகன் குண்டிமே விருந்து
பொன்னதி சாயப் பூதல மீதில்
போக்கிடச் செய்தனன் புனிதன்.

கங்கை அகத்தியர் குண்டிகையை அடைந்ததால் மகிழ்சசி அடைந்து, வெளியே வந்து, தெற்குப் பக்கத்தில் ஓடும் ஆசை மனத்தில் உதிகக, இருக்கும நேரத்தில் விநாயகர் குண்டிகை மேல் அமர்ந்து கங்கைநதியைப் பூமியில் கவிழ்த்தார்

குண்டி - குணடிகை - கமண்டலம **மார்க்கம்** - வழி **பொன்னதி** - பொன்னிநதி, காவிரி கங்கை காவிரியாயிற்று **பூதலம்** - பூமி

475. காவிரி பெருகுதல்

வாவியம் கவரும் வாரிபோல் எங்கும்
வளர்ந்துமே திரைகளும் பொங்கி
காவின வரையைச் சாடியே கடலிற்
கலந்துற காசினி செழிப்ப
யாவரும் புகழப் பவமெலாம் அகற்றும்
அருள்நதி காவிரி எனவே
பாவினில் புகல பரமுனி இந்தப்
பாங்கினைக் கண்டுரம் சோர்ந்தார்.

பொருள்களை அடித்துச் செல்லும் கடல்போல் எங்கும் பரவி, அலை பொங்கச் சோலைகள், மலைகள் கடந்து, கடலில் கலக்க, பூமி செழிக்க, பாவம போக்கும் அருள்நதி காவிரி என்று பாடல்கள் புகழும்படி கங்கை காவிரியாய்ப் பெருக்கெடுத்தோட, இதனைக் கண்ட அகத்தியர் மனம் கலங்கினார்

வாவியம் - பொருள் **வாரி** - கடல் **திரை** - அலை **கா** - சோலை **வரை** - மலை **காசினி** - பூமி **பவம்** - பாவம். **பரமுனி** - அகத்தியர் **உரம்** - மனம்

476. அகத்தியர் பொதிகை அடைய வீரவன்னியன் மாயூரம் அடைதல்

வீரவன் னியனை விடுத்திட உரைத்த
விதத்தினால் குண்டியைக் கவிழ்த்திப்
பாரெலாம் பரவு நதிகலந் தேக
பாக்கியம் பெற்றிலன் என்னக்
காரண முனிவன் தண்டினால் கீறிக்
கங்கையும் தானும்அப் பொதிகை
சீருடன் உறைந்தார் இனிபுய வீரன்
செழிப்புறு மயூரம் சார்ந்தனனால்

வீரவன்னியன் கூறியதால் விநாயகர் கமண்டலம் கவிழ்க்க, கங்கை பூமியில் நதியாய்ப் பரவி ஓட "கங்கையை வைத்திருக்கும் பாக்கியம் இல்லாது போனது" என்று முனிவர் கலங்கிக் கையிலிருந்த தண்டத்தால் தரையைக் கீறி விட்டு. எஞ்சிய கங்கையும் தானுமாய்ப் பொதிகைமலை போனார். வன்னிய வீரனும் செழிப்புமிக்க மாயூரம் அடைந்தான்.

குண்டி - குண்டிகை, கமண்டலம். **தண்டு** - தண்டம். **மாயூரம்** - மயிலாடுதுறை. குடந்தை சீர்காழி இடையில் உள்ள தலம்.

477. மாயூரம் கடந்து பலதலம் தரிசித்தல்

மயிலினை உமையாள் உற்றிடும் பதியின்
மயேஸ்வரன் அடியிணை இறைஞ்சி
பயணமாய் அரசன் தென்திசை நோக்கிப்
பதிவளம் அனைத்தையும் ஓர்ந்து

தயவுடன் ஈன்ற தனையரும் சூழ
தாரணியைக் கண்டுபோந் தனனால்
வயலுள வளமும் மலைவளம் முழுதும்
மக்களுக் குரைத்தனன் மாதோ.

உமையம்மை மயிலுருவம் எடுத்துப் பூஜித்த தலத்தில் சிவபெருமாள் அடியை வணங்கிய வன்னிய ராசன், தென்திசை நோக்கிப் பலபதியும் கண்டிறைஞ்சி, அவற்றின் வளங்களை நுகர்ந்து தான் பெற்ற பிள்ளைகள் சூழப் பூமியைக் கண்டு வயல், வளம், மலைவளம் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துரைத்தான்.

உமையம்மை மயில் வடிவம் எடுத்து இறைவனைப் பூஜித்த தலங்கள் இரண்டு. ஒன்று மயிலாடுதுறை. இன்னொன்று மயிலாப்பூர் (திருமயிலை) மயூரம் என்ற வடசொல்லுக்கு மயில் என்று பொருள். **பதி** - ஊர். **ஓர்ந்து** - ஆராய்ந்து **தனையர்** - பிள்ளைகள்

478. முல்லை நிலச் சிறப்பு

முல்லையில் அதிதே வதைஎன விளங்கும்
முண்டகக் கண்ணனுக் குகந்த
வல்லியர் மாயர் கண்களி கூர்ந்து
மணமிகு பாலன மளித்து
வல்லதோர் குரவைக் கூத்துகள் ஆடும்
நன்மையை உளத்தினில் உணர்ந்து
சொல்லுவன் தனயர்க் கிதுபுதி தாக
தொன்னகர் உறைந்தனம் என்றான்.

முல்லை நிலக் கடவுளான தாமரை போன்ற கண்ணுடைய திருமாலுக்கு, இடைச்சியர் மனமகிழ்ந்து மணமிக்க பால்சோறு படைத்து, குரவைக் கூத்தாடுவதன் நன்மையை அறிந்த வீரவன்னியன் தன் பிள்ளைகளுக்கு "இந்நகரின் புதுமையைக் காணுங்கள்" என்றான்.

அதிதேவதை - கடவுள **முண்டகம்** - தாமரை **முண்டகக் கண்ணன்** - திருமால **உகந்த** - பிடிநத **பால் + அனம் + அளித்து** - பாலமைளிதது **வல்லியர்** - பெணகள

479. மருதநிலச் சிறப்பு

அன்னிலம் அகன்று மருதநல் நிலத்தில்
அணுகினன் மாதுல னான
மன்னவன் களிக்க மாதர்கள் சுகந்த
மலரினால் தேசினை நிரப்பி
உன்னிய விழவு மொழிந்திட விளங்கும்
உண்மையும் கண்டு நற்பூமி
குன்னமில் லாத குறிஞ்சியைச் சார்ந்தான்
குறவரின் தொகுதிகள் அனைத்தும்.

முல்லை நிலம் கடந்து மருதநிலம் அடைநதனர் முருகனின மாமனான இந்திரன் மகிழுமாறு பெணகள மலரால ஒளியை நிரப்பி விழா எடுத்ததைக கண்டு மகிழ்ந்து குறைவற்ற குறிஞ்சி நிலம அடைந்தனர் குறவா கூடடம அனைததும.

மாதுலன் - மாமன **சுகந்த** - மணமுடைய **தேசு** - ஒளி அழகு **விழவு** - விழா **குன்னம்** - குறைவு

480. குறிஞ்சி நெய்தல் நிலச்சிறப்பு

அறுமுகன் களிக்கத் தேன்தினை மாவும்
அளந்துநற் பூசைகள் அளித்து
வெறியெனு மாடல் பழவினை உணர்ந்து
விருப்பமாம் அந்நிலம் அகன்று
திருவுள நெய்தல் நிலந்தனில் வருண
தேவனை நுளையர்கள் துதித்து
நறவுசேர் முன்றில் சுறவமுள் நாட்டி
நேரு பந்தரு மளித்தார்.

குறிஞ்சி நிலக கடவுளான முருகனுக்குத் தேனும தினைமாவும் படைத்துச பூசை செய்து வெறியாடி மகிழ்வதைக் கணடு. அநநிலம் அகன்றனா நெய்தல் நிலம அடைந்து. அந்நிலக கடவுளான வருணதேவனைத துதிதது மீனவர் விழா எடுப்பதைக கண்டனர் மீனவர்கள தேன் நிறைந்த முற்றத்தில் சுறாமுள்ளை நட்டுப பந்தல போட்டனர்.

நுளையர் - மீனவர் **முன்றில்** - வீட்டின் முன்

481. பாலை நிலச் சிறப்பு

வந்தனை அணங்கா டென்னும் கூத்தாடும்
வளத்தினைக் கண்டு அதிசயித்து
நிந்தைசேர் பாலை நிலந்தனில் ஏக
நிறைவுள பட்டணங் களில்போய்
அந்தமாம் பொருளைக் கவர்ந்துபங் கிட்டே
ஆளி வாகினிக்கு அளிமறவர்
உந்தியில் வகையாய்ப் புலிவிளை யாடும்
உண்மையும் கண்டு அதிசயித்தான்.

அவர்கள் வணக்கமாக அணங்காட்டம ஆடியதைக கண்டு வியந்து. இழிவான பாலை நிலம் அடைந்தனர் அங்குளள மறவர் செல்வம நிறைந்த ஊர்களுக்குச் சென்று கொள்ளையடித்த பொருளைப் பங்கிட்டுக் கொண்டு. தங்கள் தெயவமான சிங்க வாகனத்தையுடைய காளி தேவிக்கு விழா எடுத்ததையும. அவர்கள வயிற்றில் புலிக்குட்டி விளையாடுவதையும் கண்டு வியந்தனர்

நிந்தை - இழிவு **அந்தம்** - அளவற்ற **ஆளி** - சிஙகம **வாகினி** - வாகனததை உடையவன் **உந்தி** - கொபபூழ

482. காளியிடம் பூதப்படை வருதல்

பஞ்சநன் னிலத்தின் வளங்களை ஓர்ந்த
பார்த்திபன் நடந்திடம் பண்டு

நஞ்சணி மிடற்றான் நடனம் ஆடும்
நாயகி விளங்கிய முன்றில்
செஞ்சடை குலுங்க சிங்கமும் இலங்க
சேல்விழியினில் பொறி பறக்க
சஞ்சல மில்லாப் பூதங்கள் இனமும்
சாமையும் சமயமீ துரைக்கும்.

ஐந்து நிலங்களின் வளஙகளைக கணடு வன்னிய ராசாக்கள் நடகக. முன்பு நஞசுண்ட கணடனுடன நடனமாடிய காளி சிவந்த சடை குலுஙக, சிங்க வாகனம விளஙக, மீன்போன்ற கண்களில் பொறிபறக்க நிறகும் கோயில் வாசலில் பூதப்படைகள் வந்து கூறத் தொடங்கின

பஞ்சம் - ஐநது **பஞ்சநன்னிலம்** - முல்லை, குறிஞ்சி, மருதம, நெயதல பாலை எனனும ஐவகை நிலங்கள **ஓர்ந்த** - பார்தத **பார்த்திபன்** - அரசன் வனனியராசா **பண்டு** - முனபு **நஞ்சு** - ஆலகாலவிடம **மிடறு** - கழுதது **முன்றில்** - கோயில் வாயில **சேல்** - சேல்மீன் **சஞ்சலம்** - கலககம

483. பூதங்கள் தாங்கள் பசியால் வாடினோம் எனல்

தாயென வளர்த்த தயாபரி நடன
சாமளி நடன சங்கரி
தூயநற் றிரிசூலம் கையில் வளையும்
சுரிகையும் அணிந்த சிங்காரி
பேயின மான எங்களுக்கு இரைகள்
பேணில தெம்மிட வயிறு
காயுதென் றரற்றிக் கழலடி பணிந்து
கண்ணினீர் கசிந்திட உரைக்கும்.

"எங்களைத தாயபோல வளாதத கருணையுளளவளே! நடனமாடும சியாமளியே! சஙகரியே! தூயமையான திரிசூலம சஙகம வாள ஆகிய வறறை ஏநதியவளே! அழகியவளே! பேயக கூடடமான எஙகளுககு உணவிலலை வயிறுகாயகிறது" எனறு அரறறிக காளியின் பாதங்களை வணஙகிக கணணீா விடடுக கதறி மேலும கூறின

தயாபரி - கருணையுளளவள **சாமளி** - கருநிற மானவள **வளை** - சஙகு **சுரிகை** - வாள **சிங்காரி** - அழகானவள **இரை** - உணவு **பேணில** - கிடைககவிலலை

484. "சூரசம்ஹாரத்துக்குப்பின் வேறு உணவு கிடைக்க வில்லை" எனல்

திரிபுரா திகளை நகையினால் எரித்த
சிவன்மகன் சூரனைச் செயித்து
பெருவிருந் தளிக்க உண்டுள மகிழ்ந்தோம்
பின்னொரு வரம்அளித் திலையால்
அருமை யாகிய உன் மக்களைக் காக்க
அகமிரங் கிடுவை நீ யென்ன
பரிமள சுகந்த பங்கய பதத்தில்
பரிந்தருள் பார்வை தந்துரைப்பாள்.

"முபபுர அசுரர்களைச் சிரித்தே அழித்த சிவனின், மகனான முருகன சூரபத்மனை வெனற போர்க்களத்தில் வேண்டிய மடடும உணவுணடு மகிழ்ந்தோம, அதறகுபபின் இன்னும் ஒருவரம அளிக்க வில்லை நீ உன் மககளின் பசியைப் போககி அருள மனம இரங்கிடு" எனறு மணம் மிகுந்த தாமரைப் பாதத்தில் பணியக காளி தேவி அருள பார்வை பார்த்து உரைப்பாள்

திரி - மூனறு **புரம்** - கோடடை **முப்புரம்** - ஆகாயததில சுறறும பொன வெளளி செமபினாலான மூனறு அரககர்களின

கோட்டைகள **அகம் இரங்கிடு** - மனம இரஙகுவாய **பரிமள சுகந்தம்** - மணம **பங்கயம்** - தாமரை

485. "வன்னியன் அசுரருடன் போர் செய்வான் அப்போது பசியாறுவீர்" என துர்க்கை கூறுதல்.

திக்கினை ஒடுக்கும் அவுணன் மாதேவி
செழிப்பினை அழித்திட முத்தன்
முக்கணன் நடுக்கண் தன்னிலே முளைத்த
முதல்வனாம் வன்னியன் என்போன்
புக்குவ னவனுக்கு உகந்தருள் பொழிந்து
போர்செயும் விதமெல்லாம் உரைத்தே
அக்கணம் அவுணர் நிணம்தசை உதரம்
அன்புடன் அளிப்பே னென்றுரைத்தாள்.

"எட்டுத் திசைகளையும ஒடுக்கும் அசுரனின் மனைவி மங்கலம் அழிக்க, மூன்று கணணுடைய சிவனின் நெற்றிக்கண்ணாகிய அகினியிலே உதித்த வன்னியன் வருவான் அவனுக்கு அருள் செய்து போா செய்யும் வழி கூறுவேன். அப்போது அரககர்களின் மாமிசம், தசை, ரத்தம் இவற்றை உங்களுக்கு அன்போடு அளிப்பேன்" என்று துர்க்கை கூறினான்.

திக்கு - திசை **அவுணன்** - அரககன் **மாதேவி** - மனைவி **செழிப்பு** - மஙகலம **முத்தன்**, தலைவன் **முக்கணன்**, மூன்றுகணணையுடையவன், சிவன் **நடுக்கண்** - நெறறிக்கண வலது இடது கண்கள சூரிய சந்திரா் நடுக்கண் அககினி **நிணம்** - **தசை** - மாமிசம **உதிரம்** - ரத்தம

486. வன்னியர் துர்க்கையை வணங்குதல்

அமலி ஈதுரைப்ப அலகைகள் மகிழ
அரசனும் அமைச்சரும் சூழ
சமரி பாலையினில் கீழ்த்திசை நதியில்
சார்ந்திட வெம்மணல் அழலில்

தமதகம் நீந்துப் பாதநோய் உறவே
தாரணி மார்பனும் தனையர்
உமையவள் முன்றில் தேரிழிந் தேகி
ஒளிமலர்ப் பதம்இறைஞ் சினனால்.

துர்க்கை இவ்வாறு கூறவும் பேய்கள் மகிழ்ந்தன. வன்னியனும் அமைச்சர் சூழ, பாலை நிலம் வந்து நதியைக் கடந்து மணலில் வந்து விட்டதால் பாதம் சுட, தன் மைந்தருடன் துர்க்கை கோயில் வாசல் முன் தேரில் இருந்து இறங்கிக் கோயில் புகுந்து அம்மையை வணங்கினான்.

அமலி - துர்க்கை. **அலகை** - பேய். **அழல்** - நெருப்பு **அகம்** - செருக்கு. **தார் + அணி** - மாலையணிந்த.

487. துர்க்கை அருளை வேண்டுதல்

கங்கு லென்னும் இருளைக் கடிந்தெழும்
திங்கள் செஞ்சடைத் தேவி செழிப்புறும்
பங்கயப் பதங்கள் மீது பணிந்திடும்
எங்களுக் கருளை ஈயென் றிறைஞ்சினான்.

"இரவாகிய இருளை ஓட்டும் சந்திரன் போன்று ஒளிரும் சடையுடைய தேவியின் தாமரைப் பாதங்கள் மீது பணியும் எங்களுக்கு அருள்க" என வேண்டினான்.

கங்குல் - இரவு. **கடிந்து** - நீக்கி. **திங்கள்** - சந்திரன் **பங்கயம்** - தாமரை. **ஈ.** - கொடு.

488. துர்க்கையைப் போற்றுதல்

வீரி யென்னும் விமலி நமேநமோ
தாருகன் மலர் தாளி நமோநமோ
மாரி யென்னு மதங்கி நமோ நமோ
நாரி பாகர் இடத்தில் நமோ நமோ.

வீரி என்றும் விமலி என்றும் பெயர் படைத்தவளே போற்றி! போற்றி! தாருகாசுரனை உன் மலா போன்ற பாதங்களினால் மிதித்திருப் பவளே போற்றி போற்றி ! மாரியென்று சொல்லப்படும் மதங்கியே போற்றி போற்றி! பெண்ணை இடப்பாகம் கொண்ட சிவனின் இடப்பக்கத்தில் இருப்பவளே போற்றி போற்றி!

வீரி - வீரத்தை உடையவள் **விமலி** - குற்ற மற்றவள் **தாளி** - பாதஙகளை உடையவள் **நாரி** - பெண், இங்கு உமை **இடத்தி** - இடப்பககததில் இருப்பவள சிவன் கோயில்களில் இடது கோஷ்டத்தில் துர்கையும, வலது கோஷ்டத்தில் தட்சிணா மூர்த்தியும அமைப்பது மரபு

489.

அறம் வளர்த்தருள் அன்னையே நமோநமோ
நறவு துன்னும் நளினத்து இருந்திடும்
மறமஞ் சாத மனத்தி மயேஸ்வரி
பிறப்பில் லாத வெழிலி நமோநமோ.

முப்பத்திரண்டு தர்மங்களையும் வளர்ப்பவளே! தேன் நிறைந்த தாமரை மலரில் இருக்கும் போருக்கு அஞ்சாத மனத்தையுடைய மகேஸ்வரியே! இறப்பு என்பதே இல்லாத அழகியே ! உன்னை வணங்குகிறோம்

நறவு - தேன், **துன்னும்** - நிறைந்த **நளினம்** - தாமரை **மறம்** - போர் **எழிலி** - அழகுடையவள்

490. துர்க்கை வாழ்த்துதல்

என்றி றைஞ்சும் வீரனை நோக்கியே
மன்ற லந்தொடை மாரி வழுத்துவள்
தென்றிசைக் கதிபதி தீய அவுணரை
வென்றி கொண்டருள் வீரர்கள் வாழியே.

வணங்கிய வீர வன்னியனை நோக்கி மலர்மாலை அணிந்த துர்க்கை, "தெற்குப் பக்கத்துக்கு அதிபதியாகிய தீய அரக்கரை வெற்றி கொள்ளச் செல்லும் வீராகளே வாழ்க!" என்றாள்

மன்றல் - மணம **அம்** - அழகிய **தொடை** - மாலை **வழுத்துவள்** - கூறுவாள் **தெற்கு + திசை** - தென்றிசை **அதிபதி** - உரியவா, தலைவர் **வென்றி** - வெறறி

491. "உன் அம்பால் அரக்கனை அழிப்பாய்" எனல்

இன்ன வான இயக்கர் இடரினால்
பொன்னி நாடும் புவனமும் வாடின
மன்ன வாஎன் மகனுன் வாளியால்
சின்ன நீசனைச் சேதிப்பை யென்றனள்.

"கொடிய அரக்கர் செய்த துன்பத்தால், காவிரி நாடும், உலகமும் வாடிப் போயின என்மகனே! மன்னவா! உன் அம்பினால் அவ்விழிந்த அரக்கனை அழிப்பாய்" என்றாள்

இயக்கர் - அரககர் **பொன்னி** - காவிரி **புவனம்** - உலகம் **வாளி** - அமபு **நீசன்** - இழிந்தவன **சேதிப்பை** - அழிப்பாய்

492. "இராமேஸ்வரத்துக்குக் கிழக்கே போயிருங்கள் நான் வருவேன்" எனல்.

சேது கீழ்த்திசை சென்றால் படையுடன்
தீதி லாமல் செழிப்புறும் காலையில்
பூதம் துன்ன நடனம் புரிகுவன்
சோதி மாமுடி தோன்றலே என்றனள்.

"ஒளி பொருந்திய மகுடம் அணிந்தவனே! இராமேஸ்வரத்துக்குக் கிழககே படையுடன் சென்று தஙகு. அங்கு பூதங்களுடன் வந்து நான் நடனமாடுவேன்" என்றாள்

சேது - இராமேஸவரம் **துன்ன** - நெருங்க **சோதி** - ஒளி

493. வன்னியன விடைபெற்றுத் தேரேறுதல்

வாமி யின்னருள் மன்னிய மன்னவன்
தாமம் கொண்டவள் தாளை இறைஞ்சிநல்
ஏமம் துன்னு மிரதத் தேறினன்
சோம சேகரன் என்றருள் தோன்றலே.

துர்ககையின் அருள் கிடைககப் பெற்ற, இறைவன் அருளால் தோன்றிய வனனிய வீரர்கள மாலையணிந்த துாக்கை பாதங்களை வணங்கிப் பாதுகாவல் நிறைந்த தேரினில் ஏறினாாகள

வாமி - துர்ககை, பாாவதி **வாமம்** - இடபபாகம ாசனின் இடப்பாகததில இருபபவள ஆதலால வாமி எனபபட்டாள **தாமம்** - மாலை **ஏமம்** - பாதுகாபபு **சோமசேகரன் - சோமன்** - திஙகள சநதிரன **சேகரன்** - அணிந்தவன சநதிரனைத தலையில அணிந்து அழியாமல காததவன் சோமசேகரன சந்திரன 27 பெண்களை மணநது ரோகிணியிடம மடடும மிகக அனபு செலுததியதால மாமனாரிடம சாபம பெறறுத தேயத் தொடஙகினான அப்போது சிவன தலையில அணிநது தேயவதும வளாவதுமாகச செயதான எனபது புராணம **தோன்றல்** - சிறபபுடையவன

494. திருவாரூர் அடைதல்

பேரி மத்தளம் தாளமும் பேசிட
வாரி யென்ன முழங்கி வரும்படை
வீரி முன்றை அகன்று விநோதமாம்
ஆர வாரணம் நாடி அடைந்ததே.

பேரிகை மத்தளம தாளம முழங்க கடல்போல் பெருகி வரும படை துாககை முனபு கடந்து திருவாரூரை அடைந்தது

வாரி - கடல **ஆரவாரணம்** - திருவாரூா

495. சோழன் எதிர் கொள்ளுதல்

வன்னியர் அந்தத் தியாகர் அமர்பதி
துன்ன நன்னகர் போந்திடச் சூரிய
மன்னன் மந்திரி மாருடன் ஏகியே
தன்னுழை யேஅழைத் தேகினன் தாரனே.

வன்னியர்கள் தியாகேசர் அமர்ந்த திருவாரூரை அடைந்ததும், சூரியகுலத்தில் உதித்த சோழன் மந்திரிகளுடன் வந்து அழைத்துச் சென்றான்

துன்ன - நெருங்க, அடைய **மந்திரி** - அமைச்சர் **உழை** - இடததில **தாரன்** - மாலையணிந்தவன, சோழன்

496. மண்டபத்தில் அமர்தல்

நித்தி லங்கள் நிறைந்திடும் முன்றில்சூழ்
வெற்றி மண்டபம் மீதில் விளங்கினன்
பற்றி யான அமைச்சர் படையினம்
சுற்று மண்டபம் சூழ்ந்தன ராமரோ.

முதது்க்கள் நிறைந்த முற்றம் சூழ்ந்த வெற்றி மணடபத்தின் மீதில் வன்னிய வீரன அமர அமைச்சரும படைகளும் சுற்று மண்டபததில் அமர்ந்தனர்

நித்திலம் - முதது **முன்றில்** - முறறம

497. "இங்கு வந்த காரணம் யாது?" என சோழன் வினவுதல்

நேரி வெற்பன் பதியில் நிறைந்திடும்
வீரன் சேனை களிக்க விருந்தளித்து
ஆரை மாடை நிதியும் அளித்தபின்
தீர ணப்பதி சார்ந்ததென் செப்பென்றான்.

சோழன் வன்னிய அரசரும் வீரரும் படைகளும் களிக்க விருந்தளித்து, பொன்னும் செல்வமும் அளித்தபின் "இப்பட்டணம் வந்த காரணம் யாது?" என வினவினான்.

ஆரை, மாடை - பொற்காசுகள். **நிதி** - செல்வம்.

498. வன்னியர் விடை கூறுதல்

மிக்க வேள்வியில் தோன்றிய வீரர்கள்
திக்க டங்கலும் செயங்கொள் அவுணரை
வெற்றி கொள்ள விமலன் அனுப்பினர்
இத்தி சைக்கண் ஏகின மென்றனன்.

"வேள்வியில் தோன்றிய வீரர்கள் நாங்கள். எல்லாத் திசைகளையும் வெற்றி கொண்ட அரக்கர்களை வெற்றி கொள்ள இறைவன் அனுப்பினார். எனவே இத்திசை வந்தோம்" என்றான் வன்னிய வீரன்.

499. சோழன் வேண்டுதல்

செய்ய தாளினில் செங்கரம் கூப்பிநல்
ஐய அவு ணாதிபன் ஆண்மையால்
வைய மெங்கும் வளர்மனு வாடினர்
துய்ய முத்துயர் துடைத்தருள் என்றனன்.

சிவந்த பாதங்களில் கை கூப்பி, "ஐயனே அரக்கர்களால் இப்பூமியில் வாழும் மனிதர் அனைவரும் துன்புற்றனர். அவர்கள் துன்பத்தைப் போக்குவீர்களாக" என வேண்டினான்.

வையம் - உலகம். **மனு** - மனிதர்.

500. அவுணரை அழிப்பேன் எனல்

பரிதி கண்ட பணிஅவு ணாதியர்
குருதி யெங்கும் பரவிக் குணதிசைக்

கருநிறக் கடல் சேரக் கரமதில்
உரவும் வேலின் றொழிப்பனென் றோதினன்.

“சூரியனையும் ஏவலனாக்கிய அசுரர்களின் இரத்தம் பரவிக் கிழக்குத்திசையிலுள்ள கரிய நிறக் கடலில் சேருமாறு என்கையிலுள்ள வேலை இன்று விடுவேன்” என்று உறுதி கூறினான் வன்னியன்.

பரிதி - கதிரவன். **குருதி** - இரத்தம் **குணதிசை** - கிழக்குத்திசை

501. சோழனிடம் விடைபெற்று முக்கூடல் அடைதல்

வளவன் தன்விடை பெற்று வலிமைசேர்
தளமும் சூழ தயங்கா மனத்தினோன்
அளவி லாப்புகழ் ஆரூர் அகன்றுமின்
ஒளி மிகுந்த முக்கூடல் உறைந்தனன்.

சோழனிடம் விடைபெற்று வலிமை மிக்க படைசூழ தயக்கமில்லாத மனத்தை உடைய வன்னிய வீரன் அளவற்ற புகழையுடைய திருவாரூரை விட்டு ஒளிமிகுந்த மதுரை அடைந்தான்.

வளவன் - சோழன் **தளம்** - படை **முக்கூடல்** - மதுரை

502. பாண்டியன் எதிர் கொள்ளல்

சார்ந்தி யம்பிடத் தாரணி மார்பனும்
வாய்ந்த தானையோ டேகி மருவிவான்
தோய்ந்த கோயில் உறைந்திடத் தோதிநூல்
ஆய்ந்த மன்னற் கமுதளித் திட்டனன்.

வீரவன்னியன் வருகிற செய்தியைப் பாண்டிய அரசனுக்குக் கூற. மாலையணிந்த பாண்டியனும் தன் சேனையோடு வந்து எதிர்கொணடு வானை முட்டும் அரண்மனையில் நூல் ஆராய்ந்த மன்னனுக்கு விருந்தளித்தான்

இயம்பிட - கூற **தானை** - படை **மருவி** - வநது **ஆய்ந்த** - ஆராயநத **அமுது** - உணவு

503. பாண்டியன் வீரவன்னியனை வணங்குதல்

நற்ற வந்தரு நாதனாற் பாலரும்
சுற்றி மன்னிய சேனையர் சூழ்ந்திட
கொற்ற வன்தன் கோயிலமு துண்ணும்
சத்தியின் மலர்த் தாள்துதித் தோதுவான்.

பாணடிய மன்னன், நல்ல தவமுடையவனும், குழந்தைகளும் சேனைகளும் சூழத தன் அரணமனையில் அமுதுண்ணுபவனும் ஆன வீரவன்னியன் தாள்களை வணங்கிக் கூறுவான்

நாதன் - தலைவன, வீரவன்னியன **பாலர்** - மைந்தா **சேனை** - படை **கோயில்** - அரணமனை **சத்தி** - வீரவன்னியன்

504. பாண்டியன் வந்த காரணம் வினவுதல் வன்னியன் விடை கூறுதல்

நாயி னேன்உறை மாநகர் நாடியே
தூய னேவந்த சூழ்ச்சி அருள்எனத்
தீய னான வாதாவியைச் சேதிக்க
ஆயு தத்தோ டவன்பதி நாடியே.

"அடியேன் தங்கும் இந்நகரம நாடி வந்த காரணம் என்ன? தூயவனே! கூறுக" என்று பாண்டியன் கேட்க, வன்னியன், "தீயவனான வாதாவியை அழிக்க ஆயுதததுடன் அவன் ஊர் நோக்கிச் செல்கிறேன்" என்றான்

நாயினேன் - நாய்போனற அடியேன **உறை** - தங்கும **மாநகர்** - பெரிய நகரம் சிறந்த நகரம் **சூழ்ச்சி** - காரணம **சேதிக்க** - அழிகக **பதி** - ஊர

505. பாண்டியன் எங்கள் துன்பம் அகற்று எனல்

காலன் அஞ்சும் கயவவு ணாதிபன்
வேலை சூழுல கோரை அழித்தனன்
ஆல முண்டோன் அளித்தருள் அய்யநின்
சூலத் தாலெங்கள் துன்பமகற் றென்றான்.

"யமனே அஞ்சக் கூடிய அசுரன் கடல சூழ்ந்த உலகோரை அழித்தான். விடமுண்ட கண்டனால் உருவாக்கப்பட்ட ஐயனே! உன் சூலத்தால் எங்கள் துன்பம் நீக்குங்கள்" என்று பாண்டியனும் வேணடினான்

காலன் - எமன் **அவுணாதிபன்** - அசுரா் தலைவன் **வேலை** - கடல் **ஆலம்** - ஆலகால விடம் **சூலம்** - சூலாயுதம

506. வன்னியர் விடைபெறுதல்

அஞ்சல் அத்தம் அளித்து விடைகொள
செஞ்ச டைச்சிவன் கோயிலில் சென்று
நஞ்ச ணிந்த மிடறுடை நாதனே
தஞ்ச முன்சர ணாகதி யென்றனர்.

அபயகரம் அளித்து விடைகொண்ட வன்னியன் சிவந்த சடையை உடைய சிவன் கோயில் சென்று விடமுண்ட கழுத்தை யுடைய சிவனிடம் "உன் பாதமே கதி, அடைககலம் கொடுப்பாய்" என்று வேண்டினான்

அஞ்சல் - அஞசாதே! **அத்தம்** - ஹஸதம - கை **மிடறு** - கழுதது **தஞ்சம்** - அடைக்கலம் **சரணம்** - பாதம் **சரணாகதி** - பாதமே கதி

507. மதுரையகன்று இராமேசுவரம் பணிதல்

பாண்டிநா டுறையும் பரமனை இறைஞ்சிப்
பரசிவை கௌரியைப் பரவி
நீண்ட கோபுரமும் மதிலெலாம் அகன்று
நிறைந்தனன் தானையோடு அவனி
தாண்டிய மன்னன் சேதுநீ ராடித்
தசரதன் மகவினால் தழைத்த
தூண்டிடா தீபச் சுடரொளி ராமே
சுரமுறை நாதரைத் தொழுதான்.

பாண்டி நாட்டுப்பரமனை வணங்கி, மீனாட்சி தேவியையும் துதித்து, உயர்ந்த கோபுரங்களையும் மதிலையும் கடந்து, சேனைகளோடு பல ஊர் தாண்டிய மன்னன், இராமேசுவரம் கடலில் நீராடி, தசரதன் மகன் இராமனால் பூஜிக்கப்பட்ட ஒளிபொருந்திய இராமநாதரைத் தொழுதான்

பரவி - துதித்து **தசரதன் மகன்** - இராமன்

508. மயனளித்த மாளிகையில் தங்குதல்

சேதுவின் தோயம் ஆடியே கீழ்பாற்
சென்றுதன் தானையும் சூழ
நீதிசேர் அழலில் உதித்திட வந்த
நித்தனி னருளினான் மயனும்
சோதிசேர் விடுதி அளித்தனன் அதனிற்
சுதனனை வோருறைந் திருப்ப
நாதனோ டாடும். நாயகி யாரும்
ஆடினள் அலகைகள் நடிக்க.

நெருப்பில் உதித்த வன்னியன், சேதுவில் நீராடி, படைகள் சூழ, மயனால் அளிக்கப்பட்ட மாளிகையில் தங்கினான், அங்கு இறைவனோடு ஆடிய துர்க்கை தன் பேய்களோடு வந்து ஆடினாள்.

தோயம் ஆடி - உடல நீர் ஆடி **சுதன்** - மகன் **அலகைகள்** - பேய்களள **நடிக்க** - நடனமாட

509. தேவியிடம் அவுணனின் இருப்பிடம் செல்ல அனுமதி வேண்டுதல்

அம்மையின் அடியை அன்புடன் துதித்தே
அவுணரின் அவனியில் ஏக
நன்மையாம் தடமும் நவிலென உரைத்த
நாயகன் வதனமும் நோக்கி
இம்மையிற் செய்த மகத்தினில் உதித்த
இறைவனே இக்கணம் அவனி
சும்மையைத் தீர்ப்பா யென்றுரை செய்யத்
தோன்றினன் நாரதன் அன்றே.

இறைவியின் பாதங்களை அன்புடன் வணங்கி, "அசுரர்கள் இருப்பிடம் செல்ல நல்லவழி சொல்க" என்று கேட்ட வன்னியனை நோக்கி, "இப்பிறப்பில் செய்த யாகத்தில் தோன்றியவனே! இப்பொழுதே பூமியின் துன்பத்தைத் துடைப்பாய்" என்றாள் அப்போது நாரதன் தோன்றினான்

அவுணரின் அவனி - அசுரர் ஊர், இரத்தினாபுரி **தடம்** - வழி **நவில்** - சொல **நாயகன்** - தலைவன வனனியன் **வதனம்** - முகம் **இம்மை** - இபபிறவி **மகம்** - வேள்வி, யாகம **உதித்த** - தோன்றிய **சும்மை** - கலககம

510. நாரதனைப் பணிதல்

முனியடி இறைஞ்சி மொழிந்தவன் உணர
மூர்க்கமும் தீர்க்கமும் அவனி
செனிமையு முள்ள செருக்குநன் னடத்தைச்
செலுத்திடா விதமுரை சாற்றும்

எனவழல் நிருபன் இயக்கன் வாதாவி
எந்தையின் வரத்தினால் வலுத்தான்
கனிவுடன் கேளென் றுரைத்தன னீதிசூழ்
கஞ்சம துறைந்தவன் சுதனும்.

நாரதன திருவடி வணங்கிய வனனியன், "மூர்க்கமும தீர்க்கமும் செருககும உடைய அவ்வரக்கன இப்பூமி முழுவதும ஆளுமை செலுததுகின்றான் அதை நீககும் வழி கூறுக" என வேண்டினான் "சிவனின் வரத்தால் வாதாவி வலிமை பெற்றான் அவனை வெல்லும் வழியைக் கனிவுடன் கேள" என்றான் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனின் மகனான நாரதன

அவனி - உலகம **உரை சாற்றும்** - கூறும **எந்தை** - சிவன் **கஞ்சம்** - தாமரை **கஞ்சமீது உறைந்தவன்** - பிரமன **சுதன்** - மகன **பிரமன் சுதன்** - பிரமனின் மகன நாரதன

511. நாரதர் முன்பு நடந்த கதை கூறுதல்

தக்கனன் மகத்தில் தானவர் பெற்ற
சாபமும் தயித்தியர் உதிப்பும்
உக்கிரவேலன் அவுணரைப் பிடித்தே
உம்பரின் இடுக்கண் அகற்றியதும்
துக்கமும் மிகுந்த சோமுகி அணைந்து
துருவாசர் இருசுதன் அளிக்க
அக்கிரம் மிகுந்த வில்வலன் அகத்தை
அடக்கினன் குருமுனி யன்றே.

தககன சிவனை அழைககாமல் யாகம் செயய, தேவாகள் அதற்குச் சென்றதால் சிவனிடம் சாபம பெறறனா சிங்கமுகன், தாருகாசுரன். சூரபத்மன், அசோமுகி தோன்றி அககிரமம் செய்ய வேலன் அவாகளைத் தணடித்துத தேவாகளைக காத்தான் சகோதரர்களை இழந்த அசோமுகி துருவாசருடன் கூடி வாதாவி,

விலவலன் என்ற இரு அரக்கரை ஈன்றாள் அவர்கள் இருவரும் முனிவர்களைக் கொன்று புசித்து அக்ரமம் செய்ததால் அகத்தியர் வில்வலனை அழித்தார்

தக்கன் - தாடசாயணியாகிய உமையின் தகப்பன், சிவனின் மாமனார் **மகம்** - யாகம **தானவர்** - தேவர் **தயித்தியர்** - அரககர் **உதிப்பு** - தோற்றம் **உக்கிரம்** - சீற்றம், கோபம் **உம்பர்** - தேவர் **இடுக்கண்** - துன்பம **அசோமுகி** - சூரபதமன் தங்கை **குருமுனி** - அகத்தியன்

512.

வாதவு ணாதி அகத்தினில் அரன்தன்
மலரடி துதித்துவான் உறையும்
சோதியாம் கம்ப மீதினில் சென்னி
பொருந்திடக் கழலிணை தாக்கிக்
கோதிலாத் தவமும் புரிந்திடக் குழகன்
கொடுத்தநல் வரத்தினால் மயனே
மாதுல னென்றே உறவுகொண் டாட
மகள்தனை ஈய்ந்தனன் மகிழ்வால்.

வாதாவி மனத்தில் இறைவனின் திருவடி நினைத்து நெருப்புக் கம்பத்தில் தலைவைத்துக் கால்களை உயரத்தூக்கிக் குற்ற மற்ற தவம் செய்ய, சிவன் கொடுத்த வரத்தால் மயன் தன் மகளைக் கொடுத்து மாமனாகினான்

அரன் - சிவன **சோதி** - நெருப்பு **சென்னி** - தலை **கோது** - குற்றம **குழகன்** - சிவன **மாதுலன்** - மாமன்

513.

நகரம் ஒன்றளித்தான் சுங்கனு மநேகர்
ராக்கதர் தேருடன் குதிரைத்

தொகையிலாக் கோடி அவரிடம் முளைக்க
துஷ்டர்கள் சுரர்பதி நாடி
பகைவனென் றவனி பலமெல்லாம் கவரும்
பான்மையார் பரமனிது உணர்ந்தே
சகமதில் துதிக்கும் சம்புவின் மகத்தில்
தகையாய் உனைஅளித் தனனால்.

மயன் நகரளிக்க, வாதாவி, அரக்கர், தேர், குதிரை, யானைப் படைகளை அளவில்லாமல் பெற்று, தேவர்களையும் மற்றவர்களையும் பகைவராக நினைத்துக் கவர்ந்து துன்புறுத்தி உலகத்தையே நாசமாக்கினான் இதனை அறிந்த சிவன் சம்புமகரிஷி யாகத்தில் உன்னைத் தோற்றுவித்தான்.

சுங்கன் - சுக்கிரன் **அவனி** - உலகம்

514. வன்னியவீரன் அரக்கரிடம் தூதனுப்புவேன் எனல்

உனதுகைச் சரத்தால் உயிரிழந் திடுவர்
ஒளிமலர்ப் பதமெனும் கோவே
எனவுரை யனைத்தும் இறையவன் உளத்தில்
இருத்தியே இயம்புவன் அவன்பால்
தனிமையாம் தூதொன் றனுப்பியே அவர்கள்
பலமதைப் பரற்சிபின் தக்க
சினையடு படையாற் சென்னி வீழ்ந்திடவே
செய்வன் இதுபெருஞ் சரதம்.

“உன்னுடைய கை அமபால் அவர்கள் உயிரிழந்திடுவர் ஒளிமிக்க மலர்போன்ற பாதங்களை யுடையவனே!” என நாரதன் கூற அவற்றை மனத்தில் கொண்ட வன்னியன் “அவவரககனி டத்தில், தூதனுப்பி அவர்கள் பலத்தை அறிந்து பிறகு என் படையால் வீழ்த்துவேன் இதுவே சரி” எனறான்

சரம் - அமபு **இறைவன்** - வனனியன **சென்னி** - தலை **சரதம்** - முறை

515. யாரைத் தூதனுப்புவாய் எனல்

என்றுரை வீரன் இயம்பநா ரதனும்
இயம்புவன் அழலினி துதித்த
மன்றவந் தொடைசேர் மார்பனே உனது
வாய்மையை மனத்தினில் ஓர்ந்து
நன்றுரை நவிலா நான்மறைப் படியே
நன்மைதூ தனுப்பிட நினைத்தீர்
வென்றிசேர் புயத்தாய் யாவரை அனுப்ப
வினவிநீ ருரையென விளம்பும்.

வன்னியன் இவ்வாறு கூறவும நாரதன் "நெருப்பில உதித்தவனே! மணம் பொருந்திய மாலை அணிந்தவனே" உனது நேர்மையை அறிந்தேன் வேதவிதிப்படி நனறு கூறினாய! வெற்றி பொருநதிய தோள்களையுடைவனே! யாரை அனுப்பலாம கூறு" என்று கேட்டான்

அழல் + இனிது + உதித்த - அழலினிதுதிதத நெருபபில இனிதே தோனறிய **மன்றல்** - மணம **அம்** - அழகிய **தொடை** - மாலை **மறை** - வேதம **வென்றி** - வெறறி **விளம்பும்** - கூறும

516. யார் யார் போனால் என்ன நேரும் எனல்

பிரமவன் னியனைப் போவென விடுத்தால்
போயவுண ரைப்பலன் அகற்றி
வருவனென் றொருவர் வாதுரை மொழியார்
மாலய னேவிட அவுணன்
உரைசெய்வன் உம்பர் உரைத்திடார் அடியேன்
உண்மையாய் ஏகுவன் அவுணர்

திருக்கயம் நினைப்பர் இதற்கொரு வண்ணம்
செப்பெனத் தொகுத்தனன் செம்மல்.

"பிரம வன்னியனை அனுப்பினால் அவன் அவர்களை வீழ்த்தி வருவான் மற்ற பிள்ளைகளை அனுப்பினால் அவர்கள் வாதம் செய்ய மாட்டார்கள் பிரமன், விஷ்ணுவை அனுப்பினால் அசுரன சினப்பான் தேவர்கள் அஞ்சி ஒன்றும் கூறமாட்டார் நானே போனால் என்னை இழிவாக நினைப்பான் இதற்கு ஒரு வழி கூறுவீர்" என வீரவன்னியன் நாரதரிடம் வேண்டினான்

திருக்கயம் - இழிவாக

517. நாரதர் நான் போய் வருவேன் எனல்

ஆழிசை முனிவன் அறைகுலன் அடியேன்·
அவணர்கோ னிடத்தினில் சென்று
தாழ்விலா முனிவர் உலகுளோர் அனைத்தும்
சண்டைசெய் யாவுரை சாற்றி
வாழ்கென அவுணன் வம்புரை செய்தால்
மண்டிய சமர்க்கிசை யென்றே
ஆழியை அகற்றிங் குறையுவ னென்றே
அரசனும் இசைந்தனன் மாதோ.

யாழிசையில் வல்லவனான நாரதன், "நான் போய் அவ்வரககனிடத்தில் 'இவவுலகிலுளள முனிவர்கள் அனைவரோடும் சண்டை செய்யாமல் வாழ்வாயாக' எனக் கூறுவேன அவன் இசையாவிட்டால் 'போருக்கிசைவாயாக' என்று கூறிக் கடல் கடந்து வருவேன் அதுவரை இங்கு தங்கு" என்று கூற, வன்னியனும் சமமதிததான

ஆழ் - யாழ் **ஆழிசை முனிவன்** - யாழ் வாசிககும நாரதன்
ஆழி - கடல்

518. அத்திரி சனக முனிவர் உரையாடல்

சனகனை இறைஞ்சிச் சாற்றுவன் அவுணர்
தந்திர முனிவரைச் சாட
நினைகுவ ரோவென் றுரைப்பவும் உரைப்பன்
நிறைவுள மூப்பினோர் தூதர்
வருகினும் அவரை வதைத்திடார் இன்னம்
மற்றுள அரசரென் றுரைக்கும்
பனிமலர்ச் சடையோன் அருள்பெறு முனியே
பாரெனத் தூதினைப் பகர்வான்.

கதை கேட்கும் அத்திரி முனிவர் சனகரை வணங்கி "அரக்கர் நாரதரை ஏதேனும் செய்வரோ" என வினவினார். சனகரும் "தூதர்கள், வயதானோர் ஆகியோரைத் துன்புறுத்தமாட்டார்கள். சிவனருள் பெற்ற முனிவரே! இன்னும் கேளுங்கள்" என நாரதர் தூது போன கதையைக் கூறத் தொடங்கினார்.

சாற்றுவன் - கூறுவான் **சாட** - அழிக்க **மூப்பினோர்** - வயதானவர். **பனி** - குளிர்ந்த. **பகர்வான்** - கூறுவான்

14. நாரதர் வாதாவியினிடம் தூதுபோன சருக்கம்

519. நாரதர் அரக்கன் அவை அடைதல்

செந்தழல் உதித்த தேவனும் அனுப்ப
செயம்பெறு நாரத முனிவன்
முந்திய உவரி கடந்தனன் முதலா
மூர்க்கன் வாதாவியின் னகரில்
வந்தன காவல் அவுணர்கள் இறைஞ்ச
மந்திரத் தலைவர்கள் வணங்க
இந்திரன் நானே எனவுரை பகர்ந்த
இயக்கர்கோன் கொலுவிருந் தனனால்.

அக்னியில் பிறந்த வன்னியன் அனுப்ப வெற்றி பொருந்திய நாரதர் கடல் கடந்து வாதாவி நகர் அடைந்தார் அந்நகரில், காவல் அரக்கர் வணங்க, அரசியல் அறிஞர் வணங்க, "நானே இந்திரன்" என்னும் செருக்கோடு அமர்ந்திருந்தான் அரக்கன் வாதாவி

செந்தழல் - சிவந்த நெருப்பு **செயம்** - வெற்றி **உவரி** - கடல் **இயக்கர்** - அரககா

520. நகரச் சிறப்பு

கரிபரி யிரதம் கடலென முரசும்
காகள மார்த்திடும் ஒருபால்
சுரிகுழல் மடந்தை பரத நாடகமும்
துதித்திட இலங்கிடும் ஒருபால்
இருவிரு கரத்திலா வாத்திகள் ஏந்தி
செயம்பெற வாழ்த்துவர் ஒருபால்
நறுமலர் என்னும் கற்பக் காயை
நாடியே உதிர்த்திடும் ஒருபால்.

யானை, குதிரை, தேர், முரசங்கள் முழக்கம் ஒருபக்கம். நெனிந்த கூந்தலையுடைய பெண்கள் பரத நாட்டியம் ஒரு பக்கம் இரண்டிரண்டு கைகளிலும் ஆரத்திகள் ஏந்திப் பெண்கள் வாழ்த்துதல் ஒருபக்கம் நல்ல மலரையுடைய கற்பகங்கள் காயை உதிர்க்கும் ஒருபக்கம்

கரி - யானை **பரி** - குதிரை **இரதம்** - தேர் **காகளம்** - ஆரவாரம் **சுரி** - நெளிந்த, சுருண்ட **குழல்** - கூந்தல்

521. அவுணனின் தோற்றம்

கதிருத யம்போல் கனநவ மணியே
களங்கிலா மழையினின் இழைத்து
இதிநுதல் உயர்ந்த சென்னியிற் பதித்த
மவுலியும் மார்பணி கலனும்

பொதிகையி லுறைசந் தனமணி புயமும்
புகழ்பெற அணிந்த அவுணாதி
உதய மேருவினில் விளங்கிய சமுகத்
துயர்முனி நாரதன் உதித்தான்.

சூரிய ஒளிபோல் நவமணிகள் இழைக்கப்பட்ட குற்றமற்ற பொன்னாலான கிரீடம் பிறை போன்ற நெற்றியில் சூழ, மார்பில் ஆபரணம் தரித்து, பொதிகையில் வளர்ந்த சந்தனத்தைப் பூசிக் கொண்ட தோள்களுடன் மேருமலை போன்ற சிம்மாசனத்தில் வீற்றிருந்த அரக்கன் சபை முன் நாரதர் தோன்றினார்

கதிர் - சூரியன். **மழை** - பொன் **மதி** - பிறை. **மவுலி** - முடி. **கலன்** - ஆபரணம். **சமுகம்** - சபை

522. நாரதர் தோற்றம்

கின்னரி மீட்டி கெவித்திசங் கிதமும்
கிளர்ந்தவென் னுருவதும் ஆகி
மன்னிய புலித்தோல் கமண்டலம் காவி
வத்திரம் மார்பில் முந்நூலும்
மின்னிய சடையும் விளங்கிடும் நுதலும்
கோவிந்தன் பதத்தையும் விடுத்த
துன்னிய திரிபுண் டரமது அணிந்து
துய்யனும் மாசிலா(து) உறைந்தான்.

யாழை மீட்டி, இசைபாடி, கிளர்ந்த உருவத்துடன், புலித்தோல், கமண்டலம், காவி உடையுடன் மார்பில் முப்புரிநூல் அணிந்து ஒளிவீசும் சடையுடன், நெற்றியில் பாதமில்லாத நாமம் போட்டு. தூய்மையான நாரதர் குற்றமில்லாமல் தோன்றினார்.

கின்னரி - யாழ். **வெந்நுருவம்** - கடிய உருவம் **வத்திரம்** **வஸ்திரம்** - துணி, ஆடை **திரிபுண்டரம்** - நாமம்

523. அரக்கன் நாரதரை "நீர் யார்?" என வினவுதல்

கடவுள் நாரதனைக் கண்டனன் அவுணன்
கண்ணினில் கனல்கலந்து எழும்ப
புடவிகள் சுவறப் பூதலம் நடுங்க
புகலுவன் புனிதனார் முதலென்
இடமதில் உறையும் இதயமும் இல்லார்
எவ்விடம் வளர்பவன் உன்தன்
அடலெல்லாம் உரைசெய் என்றிடும் ஆண்மை
அருமுனி கேட்டுரை மகிழ்வான்.

அரக்கன் தெய்வத் தன்மை பொருந்திய நாரதரைக் கண்டான் கண்களில் தீப்பொறி பறகக கடல்கள் வற்ற, பூமிநடுங்க, "கடவுள் முதல் என்னிடம் இருப்பவர் யாரும் என்னிடம் பேச ஆண்மை இல்லாதவர் ஆவர் ஆனால் நீ என் முன் வந்தாய், நீ எங்குள்ளாய்? உன் வலிமையெல்லாம் கூறு" என்று செருக்கோடு கூறினான். இதனைக் கேட்ட முனிவர் மகிழ்ந்து கூறுவார்.

கனல் - நெருப்பு **புடவி** - கடல் **சுவற** - வற்ற **பூதவம்** - உலகம் **இதயம்** - வலிமை **அடல்** - வலிமை ஆண்மை - செருக்கு

524. நாரதர் "நான் தூதன்" என விடை கூறுதல்

நிருதருக்கு அதிக நிருபனே நெடுமால்
உந்தியினில் நிறைமலர் அதனில்
வருபிர மன்தன் மதலைநான் என்பேர்
வழுத்துவர் நாரதர் எனவே
சுருதிநூல் உணர்ந்தோன் சுரத்தின் மிகுந்தோன்
துகளிலா மனத்தினில் அமரர்
பெருமையை இடர்செய் பிரபலர் தூது
பேசவந் தனனெனப் புகன்றான்.

"அரக்கர்களுக்கெல்லாம் பெரிய அரக்க மன்னனே! திருமால் கொப்பூழில் உள்ள தாமரை மலரில் அவதரித்த பிரமனின் மகன் நான். என் பெயர் நாரதர் என்பர் வேதம் கற்றவன். ஏழுஸ்வரங்களிலும் வல்லவன். குற்றமற்ற மனத்தையுடைய தேவர்களின் பெருமையை அழிக்கும் பிரபலமான அரக்கனாகிய உனனிடம் தூது பேச வந்தேன்" என்றார் நாரதர்

நிருதர் - அரக்கர் **நிருபன்** - மன்னன். **உந்தி** - கொப்பூழ் **மதலை** - மகன். **சுருதி** - வேதம **சுரம்** - ஸ்வரம. இசை **துகள்** - குற்றம் **இடர்** - துன்பம் **பிரபலர்** - பெருமை பெற்றவர்

525. "தூதுச் செய்தி கூறுக" எனல்

அப்பொழுது அவுணன் அறைகுவன் அமரர்
அரிஅயன் அரன்முனி வோர்கள்
செப்பியே விடுத்த தூதனோ அன்றிச்
சிறுவய தாகிய குமரன்
கைப்படை பலத்தால் விடுத்ததூதோ என்முன்
கழறுஎனக் களங்க மிலாதான்
இப்படி அடங்கும் சூறைகொள் இயக்கர்
இறைவனே கேளென இசைப்பான்.

"தேவர்கள், திருமால், பிரமன், சிவன், முனிவர் ஆகியோர் விடுத்த தூதுவனோ? அல்லது சிறுவயதுச் சிறுவனாகிய முருகன் படைபலத்தோடு விடுத்தவனோ? செய்தியைக் கூறு" என்று அரக்கர் தலைவன் சொல்ல, எல்லா இடங்களையும் கொள்ளை அடித்த அரக்கனே! அப்படிக் கேள்" என்று கூறினார் நாரதர்

அவுணன் - அரக்கன், **அறைகுவன்** - கூறினான், **அமரர்** - தேவர் **அரி** - திருமால் **அயன்** - பிரமன் **அரன்** - சிவன் **கழறு, ஓது** - கூறுக **களங்கம்** - குற்றம். **சூறை** - கொள்ளை **இயக்கர்** - அசுரர் **இறைவன்** - தலைவன், அரசன்.

526. நாரதன் வன்னிய வீரன் உதித்ததைக் கூறுதல்

திரிபுர தகனன் விடுத்த தூதுவன்
செங்கண்ணனும் செப்பிய தல்ல
பிரமனோ டும்பர் வேலனும் உன்பால்
பேசினி விடுக்கவந் திலன்நான்
எரிஉலை அதனில் அயமென இயக்கர்
இனங்களை இணங்கவே உருக்கி
திரமதாய் வாட்டுஞ் சம்மட்டி என ஓர்
தீரன்வந்து உதித்தனன் என்றே.

"முப்புரம் எரித்த சிவன் அனுப்பிய தூதனல்லன் நான், சிவந்த கண்ணையுடைய திருமால் அனுப்பிய தூதனும் அல்லன் நான் பிரமனோ, தேவர்களோ, முருகனோ உன்னிடம் பேச அனுப்பியவன் அல்லன் நான். எரிகின்ற உலையில் அரக்கர் கூட்டங்களை இட்டு உருக்கி அடிக்கச் சம்மட்டி போன்று ஒரு வீரன் பிறந்துள்ளான்" என்றார் நாரதர்

திரிபுரம் - முப்புரம். **தகனன்** - எரித்தவன் **செங்கண்ணன்** - திருமால். **உம்பர்** - தேவர் **வேலன்** - முருகன் **அயம்** - இரும்பு **இயக்கர்** - அரக்கர் **சம்மட்டி** - இரும்பை அடிக்கும் கருவி

527. வீரவன்னியன் திருமணம் பற்றிக் கூறுதல்

வீரவன் னியர்கோன் விமலன் நன்னுதலில்
வீற்றிடும் அனல்விழி அதனில்
சோரின வியர்வை சம்புவின் மகத்தில்
சொரிந்திட இவுளியோடு உதித்த
சூரனுன் கிளையை வேர்பறித்து அறுக்க
துவசம்கொண் டமரர்கோன் சுதையைத்
தாரணி குழலாள் மந்திர மாலை
தனந்தழுவும் தீவுரத்திரம் தழைத்தோன்.

"வீரவன்னியன் என்போன் சிவபெருமானின் நெற்றியில் உள்ள தீக்கண்ணில் உள்ள வியாவை சம்புமா முனிவர் வேள்வியில் விழ அதில் குதிரையோடு தோன்றியவன் உன் சுற்றத்தை வேரோடு பறித்து வெட்ட உறுதி எடுத்துக் கொண்டவன், தேவர் தலைவன் இந்திரனின் மகள் மாலையணிந்த கூந்தலையுடைய மந்திரமாலையை மணம் புரிந்து கொண்ட மார்பு வலிமை உடையவன்"

விமலன் - குற்றமறறவன், சிவன் **நுதல்** - நெறறி **சோரின** - துளிர்த்த. **மகம்** - யாகம் **சொரிந்திட** - விழ **இவுளி** - குதிரை **கிளை** - சுற்றம் **துவசம்** - உறுதி **அமரர்கோன்** - தேவர்தலைவன இந்திரன் **சுதை** - மகள். **தார்** - மாலை **உரம்** - மார்பு **திரம்** - வலிமை

528. வன்னியனின் வீரம் பற்றிக் கூறுதல்

ஒருசிலை யதனால் உவரியும் உம்பர்
உலகமும் நெடியவன் ஊரும்
நறுமலர் வதனன் நகரமும் கயிலை
நாற்றிசை ஆயிரத் தெட்டண்
டரைகொள் அண்டமும் ஆகாயமும் தூளது
ஆக்குவன் தயிரியம் மிகுந்த
பெருமையு முள்ளோன் பிள்ளைகள் நால்வர்
புகழெவன் பேசிட முடியும்?

"வன்னிய வீரன் தன் ஒரு வில்லால் கடல் ஏழையும், தேவர் உலகத்தையும், திருமாலின் வைகுண்டத்தையும், தாமரை மலரோனின் சத்திய லோகத்தையும், கயிலையையும் நான்கு திசைகளையும் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆகாயத்தையும் தூள் ஆக்குவான், தைரியம் மிகுந்தவன்; பெருமை மிகுந்தவன்; அவன் பிள்ளைகள் நான்குபேர் அவர்களுடைய புகழை யார்தான் பேச முடியும்?"

சிலை - வில். **உவரி** - கடல் **உம்பர்** - தேவர் **நெடியவன்** - திருமால் **மலர் வதனன்** - மலர் போன்ற முகமுடையவன். பிரமன். **தயிரியம்** - மனஉறுதி

529. வீரவன்னியன் படைபலம் கூறுதல்

வேலனுக்கு உகந்த லக்க வீரர்களின்
மிகுத்திடு திணிபுய வீரர்
ஆலகா லத்தை உண்டுகொப் பளிப்பார்
அவுணர் செங்கரச் சிலைய னைத்தும்
மாலையாய்ப் பூண்பார் மந்தர கிரியை
மதத்தினால் பிடுங்கிப் பந்தடிப்பார்
சூல பாணியன் அருளில் உதித்த
சூரரும் பரவிய துங்கன்.

சூலத்தைக் கையிலேந்திய சிவபெருமான் அருளால் உதித்தவன். வீரர்களும் போற்றும் வீராதிவீரன் வன்னியன். (அவனுடைய வீரர்) முருகனின் இலட்ச வீரர்களைக் காட்டிலும் மிகுந்த தோள்வலிமை படைத்தவர்கள், ஆலகால விடத்தையே உண்டு கொப்பளிப்பார்கள், அரக்கர் கையிலுள்ள விற்களை மாலையாகப் பூண்பார்கள். வலிமையால் மந்தர மலையையே பிடுங்கிப் பந்துபோல் விளையாடுவார்கள்.

வேலன் - முருகன் **லக்க** - லட்சம் **சிலை** - வில் **சூலபாணி** - சூலத்தைக் கயையில் ஏந்தியவன், சிவபெருமான் **துங்கன்** - உயர்ந்தவன் மேலானவன்

530. வீரவன்னியன் கடற்கரையில் இருப்பதைக் கூறுதல்

துடுக்கெனும் அவுண ரெனும்மச கத்தைத்
துலங்கிய கரத்தினால் பிசைந்து
படித்தலம் மீதில் பரப்புவம் என்றே
பகருவர் பனிமதி தன்னைப்

பிடித்தமுது அருந்தும் பிரபல ருடனே
பிஞ்ஞகன் மலையினின் றேகீழ்க்
கடற்கரை யதனில் விடுதியொன் றமைத்துக்
காவலன் வீற்றிருந் தனனால்.

செருக்கு மிகுந்த அரக்கராகிய கொசுக்களைக் கையால் பிடித்துப் பிசைந்து, பூமியில் எறிவோம் என்று கூறுவார்கள் குளிர்ச்சி பொருந்திய சந்திரனைப் பிடித்து அமுது குடிப்பார்கள். அத்தகைய வீரருடன் கயிலை மலை விட்டு வந்து கீழக் கடற்கரையில் மாளிகை அமைத்துத் தங்கியுள்ளான் வீர வன்னியன்

துடுக்கெனும் - துஷ்டத்தனம் மிகுந்த தீய **மசகம்** - கொசு **படித்தலம்** - பூமி **பகருவர்** - கூறுவர் **பனி** - குளிர்ச்சி **பிரபலர்** - வீரா **பிஞ்ஞகன்** - சிவன் **பிஞ்ஞகன் மலை** - கயிலை மலை **விடுதி** - மாளிகை **வீற்றிருந்தனன்** - தங்கியுள்ளான்.

531. வீரவன்னியன் செய்தியைக் கூறுதல்

எனைஉனது அருகில் தூதென விடுத்தே
இயம்பினன் இமையவர் முனிவர்
தனையிடர் செய்யாது உன்னகர் அனைத்தும்
தாட்டியாய்ப் புரப்பது உன்கடனாம்
எனவுரை அகற்றி இமையவர்க் கிடுக்கம்
இடுகுவ னெனஇயம் புவனாம்
முனிவுள அமருக் கிசைந்தருள் என்ன
மொழிந்தனர் உணர்ந்திடும் என்றான்.

"என்னை உன்னிடத்தில் தூதாக விடுத்தான். செய்தி என்ன வென்றால், தேவர், முனிவருக்குத் துன்பம் தராமல் உன்னுடைய நகரத்தைக் காப்பது உன் கடமை, அவ்வாறன்றித் தேவர்களுக்குத் துன்பம் தருவேன் என்றால் போருக்குத தயாராக இரு என்று சொல்லி அனுப்பியுள்ளான். இதனை நீ உணர்வாயாக" என்றார் நாரதர்.

தாட்டி - வீரம **இடுக்கண்** - துண்பம **முனிவு** - கோபம **அமர்** போா

532. அரக்கன் அமைச்சரிடம் கூறுதல்

உரைத்த வாசகம் உளத்தினில்
ஓர்ந்திடும் அவுணன்
பருத்த சென்னியை அசைத்துரை
பகருவன் அமைச்சே
உரைத்த நாரதன் உரையெலாம்
உளத்தில் உன்னுதியேல்
தரைக்கு மானிடர் என்னிடம்
இகல்செயத் தகுமோ?

நாரதர் கூறிய உரைகளைக் கேட்டு மனத்தில் கொண்ட அரக்கன், தன் பெரிய தலையை அசைத்து "அமைச்சர்களே! நாரதர் கூறியவற்றைக் கேட்டீர்களா? மனத்தில் கொண்டீர்களா? (கேவலம்) இப்பூமியின் (அற்ப) மானிடர் என்னோடு போர் செய்ய இயலுமோ?" என்றான்

ஓர்ந்திடும் - உணர்நத **பருத்த** - பெரிய **சென்னி** - தலை **பகருவன்** - கூறுவான **உன்னுதியேல்** - நினைப்பீர்களேயானால் **மானிடர்** - மனிதர் **இகல்** - போர்

533.

மேரு வாகிய எனக்கொரு மேவலர் உளரோ
மூரி முப்புரம் எரித்தவன் அளித்திடும் முறைமை
பேரும் ஊரும்என் பிரபலம் அவமென்றால் பித்தன்
ஓரம் செய்தவன் எனஉல கோர்இக ழாரோ.

மேருமலை போன்ற எனக்கு ஒரு பகைவன் உண்டா? முப்புரங்களைச் சீறி அழித்தவன் அளித்த பேரும், ஊரும், புகழும்

வீணென்றால் அவன் வஞ்சனை செயதவன் என உலகோர் இகழ மாட்டார்களா?

மேவலர் - பகைவர் **மூரி** - சினந்து **பிரபலம்** - புகழ **அவம்** - வீண் **பித்தன்** - சிவன் **ஓரம்** - வஞ்சனை

534. தேவரும் எமனும் நம் கைவசம் எனல்

அரிபின் னால்வரும் அறுமுகவனும் அமரரும்
என்பால்
உரிமை யாகிய ஏவலை இசைந்தனர் உலகோர்
அருமை யாகிய மறலியும் எனதடி வணங்கி
சரிய லாகின னசையெலா நமதுகை வசமாம்.

"நாராயணன், அவன்பின் வந்த முருகன், தேவர் யாவரும் என்னிடத்தில் உரிமையோடு பணி செய்ய இசைந்தனர் இந்த உலகோர் அஞ்சும் எமனும் என் பாதம் வணங்கித் துன்புறுகின்றார். எல்லாமே நமது கை வசம்"

அரி - திருமால். **அறுமுகவன்** - முருகன் **அமரர்** - தேவர் **ஏவல்** - கட்டளையை நிறைவேற்றல் **மறலி** - எமன் **நசை** - விருப்பம

535. தன் பெருமை கூறுதல்

அளவிடாத அண்டர் ஆண்டெனக்கு அளிக்கப்
பெற்றேன்
வளமி குத்திடும் வாழ்வினில் வலுத்திட வளர்ந்தேன்
நலமி குத்தநற் காவனப் புதுமையை அணிந்தேன்
இளமை யாகிய இயக்கர்கோ னெனமகிழ்ந்
திருந்தேன்.

" தேவர்கள் ஆண்டில் அளவிட முடியாத ஆண்டுகளை ஆயுளாகப் பெற்றேன். வளமிகுந்த வாழ்க்கையில் வலிமையாக

இருந்தேன் நன்மை தரும் கறபகச் சோலை போன்ற புதுமைகளைப் பெற்றேன் இளமையான அரககர் தலைவனாக மகிழ்ந்திருந்தேன்"

அண்டர் - தேவா **நற்காவனம்** - கறபகச் சோலை

536.

கயவ ராகிய கடவுளர் கவியினைக் கவர்ந்த
புயமி குத்திடும் அவுணர் கோனெனப்
புகழ்நினையார்
பயமு ரைத்திடும் நாரதன் பகருவது அவமாம்
வயஞ்சி னத்திடம் மதகரி பின்னுறை வதுவே.

"கடவுளர்க்குரிய பாடல்களைப் பெற்றுத் தோள்வலிமையுடைய அரக்கன் என என் புகழ் நினையாமல் நாரதன் கூறுவது வீணான சொற்கள் வெற்றி பெற்ற சிங்கத்திடம் மதமுடைய யானை நிற்குமோ?"

கயவர் - கீழானவர் **கவி** - போற்றுதல் **பகருவது** - கூறுவது **அவம்** - வீண. **வயஞ்சினம்** - சிங்கம் **கரி** - யானை

537. அமைச்சர் பதில்

என்ன அமத்தியர் இயம்புவர் இறைவனே முனிவன்
இன்ன வாகிய வண்ணமும் இயம்பினன் ஈசன்
மன்னு பாலனைப் பெருமையா வழுத்தினன்நம்பால்
துன்று தானையின் திணிபுயம் உணர்ந்திடாத்
துகளோன்.

என்று அரக்கன் கூற அமைச்சர் கூறுவர் " இறைவனே! நாரதன் குற்றமுள்ள சொற்களைக் கூறினான். சிவபெருமானின் மகனாகிய வன்னிய வீரனின் புகழைக் கூறினானே தவிர நம்முடைய படைபலம் சிறிதும் உணர மாட்டான்."

அமத்தியர் - அமைச்சர் **இன்னல்** - குறறம **வழுத்தினன்** - போற்றினான் **நம்பால்** - நம்மிடத்தில **துன்னு** - நெருங்கிய **தானை** - படை **திணிபுயம்** - தோள வலிமை **துகளோன்** - குறறமுள்ளவன்

538.

அமரருக்கு அதிக சூரனாம் ஆண்மையில் அதிகம்
விமலனுக்கு அதிக வீரனாம் மேதினி உள்ளோர்
நமனும் அஞ்சினன் நானிலத் தோர்நலி வடைந்தார்
மமதை நாரத மானிட னும்வழுத் தினனால்.

"தேவர்களை விடப் பெரிய சூரனாம், ஆண்மை மிகுந்தவனாம். சிவனுக்கும் பெரிய வீரனாம் எமனும் அஞ்சினானாம். பூமியில் உள்ள அனைவரும் துன்புற்றனராம். அதை நீக்க வந்தவனாம். செருக்குள்ள நாரதனும் வணங்குகிறான்".

விமலன் - சிவபெருமான் **மேதினி** - உலகம் **மமதை** - செருக்கு

539.

ஒன்ன லார்முடி யுதிர்த்து லகினிற் பரவி
மின்னு ரத்தினா கரமதின் வேந்தனென் றுதித்த
மன்ன னேஒரு மானிடனும் மதமத் திடனாம்
என்ன கீர்த்தியை அடைந்தனம் இதையம்
தேறரசே.

"பகைவர் முடிகள் உலகில் சிதறிப் பரவி மின்னும், இரத்தினாகரத்தின் மன்னனாக விளங்குபவனே! ஒரு மனிதன் வந்து உங்களை எதிர்ப்ப தென்றால் நாம் என்ன பெரிய புகழை அடைந்து விட்டோம்? இதயம் தேறுதல் அடை"

ஒன்னலார் - பகைவர் **இரத்தினாகரம்** - அசுரனின் தலை நகரம்

540. இராவணன் பற்றிக் கூறுதல்

பண்டு இலங்கையின் அதிபன்நற்று ணைவனைப்
பகைக்க
விண்டு பாலினன் வீற்றுதந் திரமதை விளம்பி
மண்டு போரினால் மடித்தனன் மன்னவன்
துணைவர்
கண்டு மைப்பகைத் திலர்உள மாவதென் காணாய்.

முன்பு இலங்கை அரசன் இராவணன் தன் தம்பியைப் பகைத்ததனால் அவவீடணன் இராமனிடத்தில் அண்ணனின் இரகசியங்களைச் சொல்லிப் போரில் அழித்தான். உன்னுடைய துணைவர் யாரும் உன்னைப் பகைக்க மாட்டார்கள். பின் ஏன் கலங்குகிறாய்?

பண்டு - முன்பு **இலங்கை அதிபன்** - இராவணன். **விண்டு** - விஷ்ணு - இராமன் **பால்** - இடத்தில் **மண்டு** - மூண்ட **உளமாவது** - கலங்குவது

541. நாங்கள் வன்னியனை அழிப்போம் எனல்

மேவ லார்சிரம் வீழ்ந்திட அமரிசைத் திடுவம்
நாவு பொய்த்திடாது அண்ணலே நம்பனார் ஈன்ற
காவ லவனுளக் களிப்பினைக் கவரிடா வீரர்
சீவன் வாழ்ந்துமென் செகத்தினில் மடிந்துமென்
தெளியே.

“பகைவர் தலை கீழே சிதறப் போர் புரிவோம். என் சொல் பொய்க்காது சிவனின் மகனான வீர வன்னியனின் உள்ளக் களிப்பைக் கவராத நாங்கள் உயிர் வாழ்ந்தா லென்ன? இறந்தால் என்ன? தெரிந்துகொள்”

மவலர் - பகைவர் **அமரிசைத்தல்** - போர்புரிதல **நம்பனார்** - சிவ ள **கவரிடா** - கவராத. **சீவன்** - உயிர **செகம்** - உலகம **தெளி** - தெரிந்துகொள்

542.

உனது மக்களும் துணைவரும் உற்ற சுற்றநற்
றனுமி குத்த இளைஞனும் சூரனும் தயங்கா
மனமி குந்தநந் தானையை யேகுது மடித்த
எனது திண்புய வாளியால் இடறுவன் என்றான்.

"உன்னுடைய பிள்ளைகளும், தம்பிகளும், சுற்றமும், படைகளும் சென்று அவனை வீழ்த்தட்டும் இல்லையேல் என்னுடைய வலிய அம்பினால் கொல்லுவேன்" என்றார்

தனு - வில், **தானை** - படை. **வாளி** - அம்பு **இடறுவன்** - அழிப்பேன்

543. வாதாவி நாரதனிடம் செய்தி கூறுதல்

உரிமை மாற்றிய மண்ட லீகன்உரை உளத்திற்
சொருக மன்னவன் துதிப்பனற் சுடர்முடி வீரன்
பரிதி வேலென தடிபர விடுமென் பாலுணர்ந்த
அருந்த வத்தினாய் அவனிடத் தென்உரை
யுரையே.

மண்டலீகன் என்னும் அமைச்சனின் உரை உள்ளத்தில் தைக்க மன்னன் வாதாவி "ஒளி மிகுந்த முடியணிந்த வன்னியனின் ஒளி மிகுந்த வேல் எனது அடியில் வந்து வணங்கும். அரிய தவத்தையுடையவனே! அவனிடத்து என் சொல்லைச் சொல்" என்று கூறினான்

பரிதி - சூரியன் சூரியன் போன்ற ஒளியுடைய

544.

அடங்கி டாப்படை மிகுந்த அவண ரின்திறம்
புடவி சூழ்உல கினைச்சுமந் தோன்பகர்ந் திலனால்
மடங்கல் மும்மத கரிகொடு வரிவத னத்தோர்
விடங்கொள் வாளியால் விண்ணுல கடைவர்
அவ்வீரர்.

"படைமிகுந்த எங்கள் வலிமையை கடல் சூழ்ந்த உலகைச் சுமந்த ஆதிசேடனும் சொல்ல முடியாது. சிங்கமுகம், மூன்று மதமுடைய யானை முகம், கொடிய புலி முகமுடைய எங்கள் வீரரின் நஞ்சு தோய்ந்த அம்பால் உங்கள் வீரர் தேவருலகு அடைவர்"

புடவி - கடல் **உலகினைச் சுமந்தோன்** - ஆதிசேடன் **மடங்கல்** - சிங்கம **மதகரி** - யானை **கொடுவரி** - கொடியபுலி. **வாளி** - அம்பு.

545. "சிறுவன் செய்தியை என் சபையில் கூறுவதோ" எனல்

மாற்றலர் வலிமை மனதினில் தெளிந்துரை வழுத்தி
கீர்த்தி கொள்வ தியற்கை அச்சிறுவர்
சொற்கிசைந்து
நாற்றி சைப்படை நடுங்குமென் சபையினில் நாடி
போற்று கின்றவன் புத்தியைப் பிறர்நகை யாரோ!

"பகைவர்கள் தனக்குத்தானே பெரிதாக நினைப்பது இயற்கை. அதற்காக அச்சிறுவன் சொற்கேட்டு நான்குதிசைப் படைகளும் நடுங்கக் கூடிய என் சபையில் வந்து அவனைப் புகழ்வதை யாராவது பார்த்தால் சிரிக்க மாட்டார்களா?" என்றான்.

மாற்றவர் - பகைவர் **கீர்த்திகொள்வது** - பெருமை கொள்வது **நகையாரோ** - சிரிக்க மாட்டார்களோ?

546. "நாற்பது வயதுக்கு மேல் புத்திகெடும்" எனல்

முத்தி யாழ்உணர் முனிவனே முன்னவர் உரைத்த
புத்தி வீணென புத்தியில் ஓர்ந்தனன் ஊர்தீர்
வித்தி ளமைபோய் விளைந்திடு நாற்பதாண்
டின்மேல்
சித்த ஞானியின் குணமெனச் செப்புவ துண்மை.

"முதறியாகிய வீணையை வாசிககும நாரதரே! பெரியோர் சொன்ன புத்தி வீணென இதுவரை நினைத்திருந்தேன். இன்றுதான் உண்மை உணர்ந்தேன் இளமை போய் நாறபது வயதானால் சித்த ஞானிபோல் குணம் மாறிவிடும் என்று சொல்வது உண்மைதான்"

புந்தி - புத்தி **ஓர்ந்தனன்** - அறிநதேன்

547. "போனால் போகிறது எனப் பொறுத்தேன்" எனல்

சிறியவர் செய்வது பெரியவர் பொறுப்பர்எனச்
செப்பும்
உறுதி யால்இவை ஓதினேன் ஒருகணை அதனால்
அறுதி யாகிடச் செய்வன்முன் ஆண்டவன்
வரத்தால்
மறுகு வாழ்ந்த தால்மனம் ஒத்தனன் மறைமுனியே.

"சிறியவர்கள் செய்த சிறுபிழை எல்லாம் பெரியவர் பொறுப்பர் என்ற மொழியால் அச்சிறுவன் சொன்னதைப் பொறுத்துக் கொணடேன். இல்லையென்றால் ஒரே அம்பால் அவன் தலையைக் கொய்து விடுவேன். சிவனின் வரத்தால் வாழ்கிறேன் சிவன் மகன் எனபதால் பொறுத்தேன். வேதம் கற்ற முனிவரே"

கணை - அம்பு **அறுதி** - அழிவு **ஒறுத்தனன்** - பொறுத்தேன் **மறை** - வேதம்

548. வன்னியனைத் திரும்பிப் போகச் சொல்லுதல்

நன்றி செய்தவன் மகவினை நலிசெய்வ தவமாம்
கொன்றை யோனவர் மகவுஎன் றிவ்வுரை குறித்தேன்
வென்றி பூணுவம் என்னும் வினாவகற்றி வேலையி
னின்றி வர்முழை ஏகென அறைந்தருள் என்றான்.

"எனக்கு நன்மை செய்த சிவன் மகனுக்கு நான் தீமை செய்வது பாவம். கொன்றை மாலை சூடிய சிவன்மகன் என்பதால் இதனைச் சொல்கிறேன் வெற்றி பெறுவோம் என்னும் எண்ணத்தை நீக்கிக் கடற்கரையிலிருந்து அவன் இருப்பிடம் போகுமாறு கூறுங்கள்" என்றான்

மகவு - குழந்தை **அவம்** - பாவம **வென்றி** - வெறறி **வேலை** - கடல். **முழை** - குகை, இருப்பிடம்

549. நாரதர் "வீரவன்னியன் கையால் அரக்கர் உயிரிழப்பர்" எனல்

பணிக்குழாம் கருடன் காண
பதைத்துயிர் இழப்ப தல்லால்
திணிச்சமர் இழைப்ப துண்டோ
தினகரன் கிரணம் கண்டால்
பிணிப்பனி பெய்வ தோஇப்
பேயவு ணாதி யாக்கை
மணிச்சிலை வீரன் கையால்
மடிவதே திண்ணம் என்றான்.

இதுகேட்ட நாரதர் "பாம்புக் கூட்டம் கருடனைக் கண்டால் பதைத்து உயிர் இழக்குமே யன்றிப் போராட இயலுமா? கதிரவன் கிரணம் கண்டால் நோய் தரும் பனி பெய்யுமோ? அதுபோல் பேய்

போன்ற இவ்வரக்கர் கூட்டம் அழகிய வில்லையுடைய வன்னிய வீரன் கையால் மடிவது உறுதி" என்றார்

பணிக்குழாம் - பாம்புக் கூட்டம் **சமர்** - போர் **தினகரன்** - சூரியன், கதிரவன் **கிரணம்** - கதிர்கள், **யாக்கை** - உடல் **மடிவது** - இறப்பது **திண்ணம்** - உறுதி

550. "வன்னிய வீரன் உன் கூட்டத்தை அழிக்கவே சிவனை வணங்கி வந்தான்" எனல்

அழுக்கக அவுணர்க் கெல்லாம்
அரசனே அழலு தித்தோன்
புழுக்களாம் உனது சுற்றம்
புந்திதென் திசையிற் போக்கி
ஒழுக்கமாம் உம்பர்க் குற்ற
ஊழ்வினை அகற்ற வேண்டி
மழுக்கர வாமன் தாளை
வணங்கியிங் குறைந்த தன்றே.

மேலும், "வஞ்ச மனத்தையுடைய அரக்கர்களுக்கு அரசனே! நெருப்பில் உதித்த வன்னியன் புழுக்களாகிய உனது சுற்றத்தினர் உயிரை எமனுலகு அனுப்பி, ஒழுக்கமுடைய தேவருக்கு வந்த துன்பம் நீக்க வேண்டியே மழுவைக் கையில் ஏந்திய சிவபெருமான் திருவடிகளை வணங்கி விடைபெற்று இங்கு வந்துள்ளான்."

அழுக்கு + அகம் - அழுககககம - வஞ்ச மனம், **அவுணர்** - அசுரர் **அழல்** - நெருப்பு **புந்தி** - உயிர் **தென்திசை** - எமனுலகு **உம்பர்** - தேவர் **மழு** - அனல் **வாமன்** - சிவன்

551. "நீ பெரியவன் ஆயினும் அச்சிறுவனால் மடிவாய்" எனல்

தண்டெனத் திரண்ட தோளும்
தைத்தெழும் சினமும் யாக்கை

எண்டிசைக் கிரியி ணைந்தது
இயம்பிடாப் பருமன் என்ன
மண்டியென் அவமாம் கொல்லன்
வடித்தசிற் றுளியால் வானில்
முண்டிய வரையை வாட்டும்
முறையெனப் படுவது திண்ணம்.

தண்டு போல் திரண்ட தோளும், கோபமும், எட்டு மலை சேர்ந்தது போல் பருமனான உடலும பெற்று என்ன பயன்? அவையெல்லாம் வீண்தான் கொல்லன் வடித்த ஒரு சிறிய உளி வானளாவிய மலையைச் சிறிது சிறிதாகப் பேர்ப்பது போல் அச்சிறுவன் உன்னை அழித்து விடுவான்

யாக்கை - உடல் **எண்திசை** - எட்டுதிசை **கிரி** - மலை **அவம்** - வீண் **வரை** - மலை **படுவது** - இறத்தல் **திண்ணம்** - உறுதி

552. "சிறியவன் என இகழ வேண்டாம்" எனல்

சீலமாம் செம்மல் ஈன்ற
வீரன்மேல் சினந்து சின்ன
பாலனென் றுரைத்தாய் அந்த
பாலனால் மடிவது திண்ணம்
ஆலம்வித் தென்ன நொய்தாம்
அதன் முளைப் படரும் மிக்க
தாலம்வித் தென்ன நீழல்
தழைத்திடாது அறிவை மன்னா.

ஒழுக்கம் உடைய சிவனீன்ற வீரன் மேல் கோபித்து அவனைச் சிறுவன் என்றாய் அச்சிறுவனால் நீ அழிவது உறுதி. ஆலம் விதை எவ்வளவு சிறியது? அது முளைத்தால் எவ்வளவு பெரிய நிழல் தருகிறது பனம்பழம் எவ்வளவு பெரியது? எங்கேயாவது நிழல் தருகிறதா?

சீலம் - ஒழுக்கம் **செம்மல்** - சிவன் **ஈன்ற** - பெற்ற **பாலன்** - சிறுவன். **ஆலம்** - ஆலமரம் **நொய்து** - சிறியது **படரும் மிக்க** - பெரிதாக வளரும **தாலம்** - பனை

553. "வன்னியனை இகழ்ந்தாய்" எனல்

துங்கமெனும் வீரர்புகழ் தூசென ஒழித்த
பொங்குமவு ணாஅவர் புகன்றதை அகன்றாய்
வெங்கரி மதங்கொளச் சிரத்தின்மண் விழுந்த
சங்கைதெளி வாய்விதி தரும்பயனி தென்றான்.

உயர்ந்த வன்னிய வீரனின் புகழைத் தூசெனக் கருதினாய் கோபம் கொண்டு அவன் தூது சொன்னதைச் செய்ய மறுத்தாய். மதங்கொண்ட யானை தன்தலையில் மண் அள்ளிப் போட்டுக் கொள்வதை அறிந்துகொள் உன் விதிப் பயன் இது என்ன செய்வது?

துங்கம் - மேன்மை, உயர்வு **கரி** - யானை **சிரம்** - தலை **சங்கை** - செய்தி

554. "இரணியன், இராவணன், சூரன் பட்டதை அறியாயோ" எனல்

பண்டிர ணியனும் பட்டசெய்தி அறியாயோ
விண்தலம் மிகுந்தமரர் மேன்மை கவர்ந்து
கண்டனைசெய் இராவணன் கனத்தசூர பன்மன்
மண்டுபுகழ் எங்ஙனம் மறைந்ததுணர் மன்னா!

முன்பு இரணியாசுரன் (நானே கடவுள் என மமதை கொண்டு நாராயணனை இகழ்ந்து நரசிம்மரால்) வதைசெய்யப் பட்டதை அறியாயோ? தேவருலகத்தைக் கவர்ந்து தேவர்களின் பெருமையை அழித்துத் துன்பம் செய்த இராவணன், சூரபத்மன் ஆகியோருடைய புகழெல்லாம் மறைந்தது எவ்வாறு யோசித்துப்பார்

பண்டு - முன்பு **பண்டு இரணியன்** - பண்டிரணியன் **பட்ட** - இறநத **விண்தலம்** - தேவருலகம **கண்டனை** - தீங்கு **மண்டு** - நிறைந்த

555. "உன் பெருமை எதனால் வந்தது" எனல்

உன்னுறுதி என்னவா னுற்றவரு ளாயிம்
மன்னவன் எனப்பெருமை மண்டினம் எமக்கோர்
இன்னலறி மேவலர்கள் இல்லையெனும் சூரர்
வன்னியன் உதித்தனன் அதன்களை யகற்ற.

உன்னுடைய சிறப்பு என்ன? சிவன் அருளால் வரம் பெற்று மன்னவன் எனப்பெருமை கொண்டு எங்களுக்குத் துன்பம் செய்யும் பகைவர் இல்லை என்றாய். அப்படிப்பட்ட அசுரர்களாகிய உங்களைக் களையெடுக்க வன்னிய வீரன் தோன்றினான்.

இன்னல் - துன்பம் **மேவலர்** - பகைவர்

556. "கடற்கரையில் இருப்பவன் இங்கு வந்து போரிடுவான்" எனல்

செய்யகரம் மீதிலுறை வேலுனைச் சிதைக்க
வெய்யஅழல் கக்கல் விதங்கள் உணராயுன்
வய்யமது உறைந்தவர் வளைந்தமர் விளைந்து
மையுடல் சிதைப்பர் அவுணாதிபர் மன்னா.

வன்னியனின் சிவந்த கையிலுள்ள வேல் உன்னை அழிக்க நெருப்புக் கக்கி வருவதை அறிய மாட்டாய் கடற்கரையில் தங்கியுள்ள அவர்கள் உன் இடத்தைச் சூழ்ந்து போர் செய்து உங்கள் கரிய உடலைச் சிதைப்பர். அரக்கர் தலைவனே! (இதை உணர்வாய்)

செய்ய - சிவந்த. **கரம்** - கை. **கக்கல்** - கக்குதல் வெளிவிடுதல். **அழல்** - நெருப்பு. **வய்யம்** - பூமி இங்கு கடற்கரை. **மை** - கரிய.

557. "உங்கள் உடல்களைக் காகம், கழுகு, பசாசு தின்னும்" எனல்

உற்ற கிளைஞர்களும் உனைப்பணி அமைச்சரும்
இற்ற உடலிற்குருதி எங்கணும் நிரம்ப

செற்றபின் பந்தத் தசைதினும் கழுகு காகம்
சுற்றிய பசாசின் சுகம் பெருகும் மன்னா.

உன்னுடைய சுற்றம், உன்னைப் பணியும் அமைச்சர் ஆகியோர் இறந்தவுடன் உடலிலிருந்து இரத்தம் பெருகச் செத்த உடலைக் காகமும் கழுகும் கொத்தப் பேய்க் கூட்டம் சுகமாக உலாவும் அரசே!

கிளைஞர் - சுற்றத்தினர். **இற்ற** - இறந்த **குருதி** - இரத்தம். **பசாசு** - பேய்.

558. தட்சன் பட்டது கூறுதல்

தக்கன் இடுகின்றது தற்பரன் உணர்ந்தே
அக்கணம் அழித்தனன் அளித்த திணிவீரன்
மிக்கமொழி தூதன் விடுக்க அவமென்றுன்
மக்கள்திணி தோளினை வழுத்தவை கள்மன்னும்.

"தட்சன் செய்த குற்றத்துக்காகச் சிவபெருமான் அக்கணமே அவனை அழித்தனன். அவன் மகன் வன்னிய வீரன் கூறிய தூதினை ஏற்காமல் அவற்றை வீணென்று உன் பிள்ளைகள் தோள் வலிமை கூறுகிறாய். அதனை நிறுத்து."

தக்கன் - தட்சன். தாட்சாயிணியின் தந்தை. சிவபெருமானின் மாமனார். அவன் சோம யாகம் செய்து சிவபெருமானை அழைக்காமல் அவமதித்தான். எனவே சிவபெருமானால் அழிக்கப்பட்டான். **அவம்** - வீண். **மக்கள்** - பிள்ளைகள். **வழுத்தவை** - போற்றியது.

559. நாய்க்கு என்ன செய்தாலும் அதன் குணம் போகாதெனல்.

என்னமொழி விள்ளினும் உன்மனதில் கொள்ளாய்
மன்னவ சுவானமதை வண்ணமதி யாட்டி

சொன்னபணி ஆடைகள் துலங்கிட அளித்து
மன்னர் சுகம்கொடினும் அதன்குணம் விடாதே.

என்ன சொன்னாலும் நீ கேட்க மாட்டாய், மன்னா! நாயைக் குளிப்பாட்டிப் பொன் ஆபரணம் பூட்டித் தூய ஆடைகள் உடுத்தி மன்னன் போல் சுகம் கொடுத்தாலும் அதன் குணம் விடுமா?

விள்ளினும் - கூறினும். **சுவானம்** - நாய். **சொன்னம்** - தங்கம். **பணி** - ஆபரணம். **துலங்கிட** - விளங்கிட.

560. "நட்சத்திர ஒளி பெரிதல்ல சந்திரன் ஒளியே பெரிதெனல்"

ஆயிரம் உடுக்கள் அமைந்த கிரணத்தில்
தூய மதியின் சுடர்துலங்கும் இழிவான
பேயவுணர் மிக்கவர் எனப்பரிந் துரைத்த
வாயின் மண்ணளிப்பான் மண்டிடுவை என்றான்.

ஆயிரம் விண்மீன்கள் கூடி ஒளி வீசினாலும் ஒரு தூய வெண்மதியின் ஒளியே பெரிதாக இருக்கும். 'இழிவான பேய்க் குணம் கொண்ட அரக்கர் பெரியவர்' என்று கூறும் உங்கள் வாயில் மண்போடுவான். உண்ணுங்கள்" என்றெல்லாம் கூறினார்.

உடு - விண்மீன். **சுடர்** - கிரணம். ஒளி. **மண்டிடு** - உண்ணுவாய்.

561. அரக்கன் சினம் அடைதல்

இவ்வண்ணம் முனிஇ யம்ப
இயக்கர்கோன் இதையம் பொங்கி
பௌவ மன்னுலகில் யாரும்
பயமின்றி எனது பக்கம்
இவ்வுரை பகர்ந்த துண்டோ
இவனுரைத் தனன்சி ரத்தை

நவ்வியொன் றதனாற் சேர்க்க
நாரியை வளைத்தான் மன்னோ.

இவ்வாறு நாரதர் கூறியதைக் கேட்ட அரக்கன் கோபம் கொண்டு "கடல் சூழ்ந்த உலகில் யாரும் அச்சமின்றி என்னுடன் இப்படி பேசுவார்களா? இவன் பேசினான். இவனது தலையை ஓரம்பால் வாங்குவேன்" என்று வில்லை வளைத்தான்.

பௌவம் - கடல். **சிரத்தை** - தலையை. **நவ்வி** - அம்பு. **நாரி** - வில்.

562. "தூதனைக் கொல்லாதே" என அமைச்சர் அறிவுரை கூறல்

மாத்தியர் உரைப்பர் மன்னா
மண்ணின்மேல் இகழ்ச்சி யாகும்
தூத்தனோ ரெதிரென் றெண்ணி
துணிபவர் உலகில் உண்டோ
கூத்துவ னாக வந்த
கோனெனும் வீரம் கொண்ட
சீத்தியைச் சிதையா துந்தன்
சினையகற் றிடுவை யென்றார்.

இதைக் கேட்ட அமைச்சர் "அரசே! தூதனை எதிர் என்று கொல்பவர் பூமியில் யாரேனும் உண்டா? இது மிகவும் இழிவான செயல். எமன் போன்ற அரசன் என்னும் வீரமுடைய உன் புகழைச் சிதைக்காதே! சினத்தை நீக்கு" என்றனர்.

மாத்தியர் - அமைச்சர். **தூத்தன்** - தூதன். **துணிபவர்** - கொல்பவர். **கூத்துவன்** - கூற்றுவன் - எமன். **சீத்தி** - கீர்த்தி - புகழ்.

563. "நாரதரைப் பொறுத்துக் கொள்" எனல்.

நாரியர் விருத்தர் சீலர்
நற்சிறு பாலர் மன்னர்

வீரிய அவையுள் மன்னார்
விருத்தனோ சிறிய வனான
பூரிய தூது ரைத்த
போதினைப் பொறுத்து நின்றால்
காரியம் இயம்ப வெங்கும்
கதிப்புறும் அவுணர் மன்னா.

"பெண்கள், முதியோர், முனிவர், சிறுவர் ஆகியோரை மன்னர் அவையில் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார். இம்முனிவனோ ஒரு சிறுவனின் தூதினை உரைக்க வந்துள்ளான். இவனைப் பொறுத்துக் கொண்டு பதில் கூறி அனுப்பினால் அசுரர்களுக்குப் பெருமை உண்டாகும்" என்று கூறினார்கள்.

நாரியர் - பெண்கள். **விருத்தர்** - வயோதிகர். **சீலர்** - முனிவர். **வீரிய** - பெருமை மிக்க. **பூரிய** - அற்பமான. **கதிப்புறும்** - பெருமை பெறுவர்.

564. "வன்னியனைச் சிறைபிடிப்போம்" எனல்

அரன்மகன் விடுத்த தூதன்
அவனிடத் தாண்மை என்னா
அரசனே உந்தன் சூரம்
அருமுனிக்கு அளிப்பது தீதாம்
வரமினிக் கொள்வை இந்த
வன்னி யன்தனைப் பிடித்து
சிறைசெயின் சிறுவர்க் காக
செம்மல்நம் கோயில் சார்வான்.

"சிவன் மகன் விடுத்த தூதனிடம் ஆண்மையை எதற்குக் காட்ட வேண்டும்? அரசனே! உன் வீர தீரத்தை முனிவரிடம் காட்டுவது தீமையாகும். அவ்வன்னிய வீரனைப் பிடித்துச் சிறையில் அடைத்தால் அச்சிறுவனை விடுவிப்பதற்காகச் சிவன் நம்முடைய

அரண்மனைக்கு வருவான். அவ்வாறு வந்தால் இன்னும் வரம் பெறலாம்" என்று கூறினார்கள்.

அரன் - சிவன். **அரன்மகன்** - வன்னிய வீரன். **செம்மல்** - சிவபெருமான். **கோயில்** - அரண்மனை.

565. "வன்னிய வீரனைப் போருக்கழைக்கலாம்" எனல்.

அழிவில்லா மிசைய ளிப்ப
யாவரும் மிகவி டாமல்
குழகணி கோயில் வாயில்
கொலுவிரும் எனஇ ருத்தி
அழிவிலாப் பெருமை உன்னும்
எங்கள் நா யகனே வலினால்
முழையினை அணுகிப் போர்செய்
யுறுதியை உரைப்பாய் என்றான்.

"நமக்கு அழிவில்லாமல், யாரும் பகையில்லாமல், நம்மை இங்கு இருத்தி வைத்தான் இறைவன். அதனால் நமக்கு வெற்றியே வருமன்றித் தோல்வி வாராது. எனவே அச்சிறுவன் தங்கியிருக்கும் இடம் சென்று அவர்களைச் சண்டையிட்டுப் பிடித்து வரும் செய்தி கூறி அனுப்புக" என்றனர்.

மிசை - ஆயுள். **மிகவிடாமல்** - பகையின்றி, தம்மைவிட அதிக வலிமையின்றி. **முழை** - வன்னிய வீரன் இருப்பிடம்.

566. அரக்கன் மகிழ்ந்து நாரதரிடம் கூறுதல்.

அவுணர்கோன் புளகம் மன்னி
அமைச்சரைத் தழுவிப் பற்றி
திவவொளி மணியும் பொன்னும்
திகட்டிட நல்கி மிக்க

அவையினில் தந்தி ரங்கள்
அறைந்தனை உறுதி என்றே
தவமுனி வதனம் நோக்கி
நாடியே போற்ற லுற்றான்.

அரக்கர் தலைவன் வாதாவி மிகவும் மகிழ்ந்து, அமைச்சர்களைத் தழுவிக் கொண்டு, ஒளி வீசும் பொன்னையும் மணியையும் திகட்டுமளவு அளித்து, "சபையில் பல ஆலோசனை கூறினீர்கள்" என்று கூறி நாரத முனிவரை நோக்கிக் கூறலுற்றான்.

புளகம் - மகிழ்ச்சி. **மன்னி** - அடைந்து.

567. "வன்னியனுடன் போர் புரிவேன்" எனல்

வானவர் முனிவர் சித்தர்
மண்ணிள மான்ப ருத்த
தேனவிழ் பொழிலுஞ் செம்பொன்
திரளினைக் கவர்வ தன்றி
ஊனனாம் ஒருவன் வாய்மைக்கு
இசைந்திலன் இதமில் லாத
மானிட னிப்பார் புக்கி
மண்டமர் வளைத்தும் என்றான்.

"தேவர், முனிவர், சித்தர், மானிடர் ஆகியோரின் தேனிறைந்த சோலைகள், செம்பொன் ஆசியவற்றைக் கவர்வேனேயன்றி இழிவான ஒரு மானிடன் சொல்லுக்கு இசைய மாட்டேன். இம்மானிடனை எதிர்த்துப் போர் புரிவேன்" என்றான்.

வானவர் - தேவர். **பொழில்** - சோலை. **புக்கி** - புகுந்து. **மண்டு + அமர்** - மண்டமர், போர்.

568. "சிவனையும் அவனைச் சுற்றியுள்ளவர்களையும் சிதைப்பேன்" எனல்

கயிலைநா யகனைச் சுற்றிக்
கடிந்துவா னவரை மிக்க

அயிலணி குளவன் மாயன்
அனைவரும் உளம்பு ழுங்க
தயிரியம் மிகுந்த வாளி
தாக்கினி தரணி சேர்ப்ப
திமையெ என விளம்பக் கேட்ட
எழில்முனி நகைத்துரைப்பான்

"கயிலை நாயகனாம் சிவனையும் அவனைச் சுற்றியுள்ள தேவர்களையும், வேலேந்திய முருகனையும், திருமாலையும் மனம் புழுங்கும்படி அம்பு விட்டுப் பூமியில் மடிப்பேன்" என்று அரக்கன் கூறியதைக் கேட்ட, அழகிய நாரத முனிவன் சிரித்துக் கொண்டே கூறலுற்றான்.

கயிலை நாயகன் - சிவன். **கடிந்து** - தாக்கி. **வானவர்** - தேவர். **அயில்** - வேல். **குளவன்** - முருகன். **மாயன்** - திருமால். **வாளி** - அம்பு. **தரணி** - பூமி. **விளம்ப** - கூற. **எழில்** - அழகு. **முனி** - நாரதன். **நகைத்து** - சிரித்து. **உரைப்பான்** - கூறுவான்.

569. நாரதர் பதில் "வன்னிய வீரன் உன்னிடம் தோற்க மாட்டான்" எனல்

திக்கி னைச்செய முண்ட திணிபுயம்
மிக்க அவுணரின் வேந்த விடந்தனைக்
கக்கும் வாளி மிகுத்த கடவுள்கை
சிக்கு வானெனும் சிந்தையை நீக்குவை.

"எல்லாத் திசைகளையும் வெற்றி கொண்ட பெருமை மிக்க தோள்களை உடைய அசுர வேந்தனே! விஷம் கக்கும் அம்புடைய வன்னிய வீரன் உன்னிடம் தோற்பன் என்ற எண்ணத்தை நீக்குவாய்"

திக்கு - திசை. **செயம்** - வெற்றி. **விடம்** - நஞ்சு. **வாளி** - அம்பு.

570. "சிவனும் அவன் சுற்றமும் உன்னையும் உன் சுற்றத்தையும் அழிப்பர்" எனல்

அளவி டின்முடி யாதவன் தன்புகழ்
அளவி டின்முடி யாதவன் மாலினால்
எளிமை யாக இயம்பிய வேந்தை
கிளையின் ஓடி இளைஞரைச் சேதிப்பார்.

"அளவிட முடியாத புகழை உடைய சிவபெருமானை உன் மயக்கத்தினால் எளியவன் என நினைத்துக் கூறினாய். உன்னை அவர் தன் சுற்றத்தோடு வந்து அழிப்பார்"

மாலினால் - மயக்கத்தால். **கிளை** - கிளைஞர் - சுற்றம். சேதிப்பார் - அழிப்பார்.

571. "எத்தனை சொல்லியும் நீ திருந்த மாட்டாய்" எனல்

அடிக்க டிக்கக் கிளம்பிய பந்தென
துடித்து னக்குந் துரோகி யுனக்கியா
னிடித்தி டித்தும் இயம்பி னன்மணி
முடிக்கு செந்தீ முளைத்தது மூண்டதே.

"அடிக்க அடிக்கத் திரும்பவும் எழும்பும் பந்து போல் எவ்வளவு இடித்துக் கூறியும் துரோகியான உனக்கு அறிவில்லை. உன் தலைக்குத் தீ மூண்டு விட்டது."

இடித்துக் கூறுதல் - வற்புறுத்தி அறிவுரை கூறுதல்

572. "அமைச்சன் சொல்லைக் கேட்டு இராவணன் அழிந்தான்" எனல்

மாலி யன்முன் வழுத்த மகோதரன்
பாலி லங்கப் பார்த்திபன் பட்டனன்

கால மும் தொடு கின்ற கஞ்சமர்
தூல கற்பு அழித்தது என்றனன்.

"மாலியவான் சொல்லைக் கேளாமல் மகோதரன் சொல்லைக் கேட்டு இராவணன் போரில் இறந்தான். சீதையின் கற்பு அவனை அழித்தது"

மாலியன் - மாலியவான், இராவணன் பாட்டன். மகோதரன் - இராவணன் அமைச்சன். **கஞ்சமர்** - தாமரையில் அமர்ந்த சீதை.

573. "இராவணன் தம்பி சொல் கேட்கவில்லை" எனல்

தம்பி யென்னும் விபீஷணன் சாற்றுரை
வம்பென் றெண்ணி மடித்திலன் மாயனே
நம்பினன் சிரஞ்சீவி பெற்றனன் அந்நகர்
செம்பொன் மாமுடி சூடிச் செழித்தனன்.

"தம்பியாகிய விபீஷணன் சொல்லை இராவணன் கேட்கவில்லை. அவன் நல்லவன் ஆனதால் இராமன் அவனை அழிக்காமல் சிரஞ்சீவி வரம் கொடுத்தான். விபீஷணனும் முடிசூடி இலங்கைக்கு அரசனானான்"

574. இரணியன் மடிந்ததைக் கூறுதல்

பிரக லாதன் பேணிய மாயனை
இரணி யன்இழி வாக விளம்பினன்
நரஅ ரிப்பெயர் ஆயவன் நாடியே
வரம ழிந்து மடிந்தனன் மன்னனே.

"பிரகலாதன் வணங்கிய திருமாலை இழிவாகப் பேசினான் இரணியன். நரசிம்ம மூர்த்தியான திருமாலால் வரமெல்லாம் இழந்து மடிந்தான்"

இரணியன் பல ஆண்டுகள் தவம் செய்து, வானிலோ, மண்ணிலோ உள்ளேயோ, வெளியிலோ, மனிதனாலோ, மிருகங்களாலோ, ஆயுதங்களாலோ இறக்கக் கூடாது என வரம் பெற்றான். வரம் பெற்ற செருக்கால் இறைவனை மறந்து, தன்னையே எல்லோரும் வணங்கவேண்டும் என்று கட்டளையிட்டான். தேவர்களையும், முனிவர்களையும் ஏவலர்கள் ஆக்கினான். அவனை அழிப்பதற்காக அவன் மகன் பிரகலாதன் கருவில் இருக்கும் போதே நாரதரால் நாராயண மந்திரம் உபதேசிக்கப் பெற்று நாரயணனையே கும்பிட்டான். கோபம் கொண்ட இரணியன் அவனுக்கு நஞ்சு கொடுத்தான். அவனை மலையுச்சியிலிருந்து உருட்டி விட்டான். யானையால் இடறச் செய்தான். சிறையில் அடைத்துப் பட்டினி போட்டான். கடலில் தள்ளினான். "நாராயணாய நமஹ" என்னும் எட்டெழுத்து மந்திரத்தை உச்சரித்து அனைத்திலும் மீண்டான் பிரகலாதன். கோபம் கொண்ட இரணியன் "நாராயணன்" என்கிறாயே அவன் எங்குள்ளான்? அவன் என்னைக் காட்டிலும் பெரியவனோ? என்றான். அதற்குப் பிரகலாதன் அவன் தூணிலும் உள்ளான் துரும்பிலும் உள்ளான். என்றான். "இந்தத் தூணில் இருப்பானா?" எனக் கேட்ட இரணியன் ஒரு தூணை உதைக்க அதிலிருந்து மனிதனும் இல்லாமல் மிருகமும் இல்லாமல் இரண்டும் சேர்ந்த நரசிம்மம் வெளிப்பட்டுப் பகலிலும் இல்லாமல் இரவிலும் இல்லாமல் பகலும் இரவும் கூடிய அந்தி சந்தி நேரத்தில், வெளியிலும் இல்லாமல் உள்ளேயும் இல்லாமல் வாயில்படியில், பூமியிலும் இல்லாமல், வானிலும் இல்லாமல் மடியில் வைத்து ஆயுதம் இன்றி நகங்களால் மார்பைப் பிளந்து வாயினால் குடலைப் பிடுங்கி இரத்தம் குடித்து அழித்தது. பிள்ளை சொல்லைக் கேளாத இரணியன் அழிந்தான். இதுவே இரணியன் வரலாறு. **நரம்** - மனிதன். **அரி** - சிங்கம்.

575. சூரபத்மன் அழிவு கூறுதல்

உந்தன் மாதுலன் உக்கிர வேலினால்
சிந்தை நொந்து சித்தம் உணர்ந்துமுன்
நிந்தை எண்ணியும் நேமி இருப்பதோ
விந்த வீரன் அடியை விரும்புவை.

"உன்னுடைய மாமனாகிய சூரபத்மன் செருக்கடைந்து கந்தனின் வேலினால் மயிலாகவும் சேவலாகவும் மாறியும் உனக்கு அறிவு வரவில்லையே! வன்னியனை இழிவாக நினைத்தால் உன் அரசாட்சி பிழைக்காது. வன்னிய வீரனை வணங்கிப் பிழை."

மாதுவன் - மாமன், சூரன். **உக்கிர** - கொடிய. **சிந்தை** - மனம். **சித்தம்** - அறிவு. **நிந்தை** - இகழ்ச்சி. **நேமி** - அரசாட்சி. **விந்த வீரன்.** வன்னிய வீரன்.

576. வன்னிய வீரன் சிறப்பை மீண்டும் கூறுதல்

அண்ட ருக்கப யத்தம் அளித்தவன்
எண்டி சைக்க திபதி எழிலுளன்
கண்டை மன்னும் கழலினன் அத்தழல்
மண்டெ ழும்பும் தவமுமன் னின்னதே.

"தேவர்களுக்கு அபயகரம் அளித்தவன். எட்டு திக்குக்கும் தலைவன். அழகானவன். கெண்டைக் காலில் வீரக்கழல் கட்டியவன் நெருப்பில் உதித்த தவமுடையவன்."

அண்டர் - தேவர். **அபயம்** - பாதுகாப்பு. **அத்தம்** - கரம் கை. **அதிபதி** - தலைவன். **தழல்** - நெருப்பு. **கண்டை** - கெண்டைக்கால். வீரகண்டாமணி அணிந்த பாதங்களையுடையவன் என்றும் கூறலாம்.

577. வன்னியன் பெயர்கள்

தேவ ராயன் செழித்த நயினான்
காவலுக் குடையான் உன்க ளேபரம்

தாவி வெட்டும் சம்மட்டி பண்டாரம்
பாவை பாலன் பகர்ந்த பெயரினன்

"தேவராயன், நயினார், காவலுக்கு உடையான். உன் செருக்கை அடக்கும் பண்டாரம் எனப் பல பெயருடையவன் அவ்வுமையாளீன்ற மகன்"

களேபரம் - செருக்கு, திமிர். **சம்மட்டி** - இரும்பை அடிக்கும் கருவி **பாவை** - உமை. **பகர்ந்த** - சொல்லப்பட்ட

578. "வன்னியனைத் தொழுதலே உனக்கு நல்லது" என்று கூறுதல்

கரிமுகன் குகன் காதலன் சீதரன்
மருமகன் போதன் மைத்துனன் மகபதிக்
குரிய தேஉம் பருக்குஅனு கூலனாம்
பரவுவாய் தாளில் பலமுடை மன்னனே.

"யானைமுகன், முருகன், இருவருக்கும் தம்பி, திருமால் மருமகன், சயந்தன் மைத்துனன், இந்திரன் மருமகன், தேவர்களுக்குத் துணைவன். அவன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினல் நீ பிழைப்பாய். பலமுண்டய அரக்கனே!" என்று நாரதர் அறிவுரை கூறினார்.

கரிமுகன் - யானைமுகன், கணபதி. **குகன்** - முருகன். **காதலன்** - அன்பு பொருந்திய சகோதரன். **சீதரன்** - திருமால். **போதன்** - சயந்தன். இந்திரன் மகன். **மகபதி** - இந்திரன். **தே** - தெய்வம். **உம்பர்** - தேவர். **அனுகூலன்** - உதவி செய்பவன்.

15. வீரவன்னியன் துர்க்கையுடன் கடல் தாண்டு சருக்கம்

579. வன்னியன் துர்க்கையிடம் கடல்தாண்ட வழிகேட்டல்

ஆளிவா கினிபொன் அடிதனை இறைஞ்சி
அறைகுவன் அர(சு)அம் புயத்தின்

தாளிநா யகியே தயித்தியன் நகரம்
சார்ந்திடும் சூட்சிவிள் ளென்னத்
தூளிவாய் பேய்கள் சூழ்ந்திட அமர்செய்
சுடரயிற் கரத்தினாய் உன்றன்
தாளினாற் கரிய வேலையை நீந்தத்
தகாதெனச் சாற்றினாள் கௌரி.

சிங்கத்தை வாகனமாக உடையவளின் திருவடிகளை வணங்கிய வன்னிய வீரன் "தாமரை போன்ற பாதங்களை உடையவளே! அசுரனின் நகரை அடையும் தந்திரம் சொல்" என்றான். பெரிய வாயையுடைய பேய்கள் சூழ போர் செய்யும் ஒளி வீசும் சூலாயுதம் கொண்ட துர்க்கை "உன் கால்களால் கடலைத் தாண்ட முடியாது" என்றாள்.

ஆளி - சிங்கம், **வாகினி** - வாகனமாயுடையவள். **அறைகுவன்** - கூறினான். **அம்புயம்** - தாமரை **தயித்தியன்** - அசுரன். **சூட்சி** - தந்திரம். **விள்** - சொல். **தூளி** - பெரிய. **அமர்** - போர். **சுடர்** - ஒளி. **அயில்** - வேல், சூலம். **கரம்** - கை. **வேலை** - கடல். **சாற்றினாள்** - கூறினாள். **கௌரி** - துர்க்கை.

580. படை நடத்தல்

கொண்ட லிடியா மென்று
குலாவியே முரச திர்ப்ப
மண்டிய படைக்கு ழாங்கள்
உடனென்பால் வருவீ ரென்ன
முண்டிய அலகை சூழ
முதல்வரும் ஏனை யோரும்
தண்டணி கால்க ளார்ப்ப
சாம்பவி ஏக லுற்றாள்.

நாங்கள் தான் மேகங்கள் என்று முரசம் இடிபோல் ஒலிக்க, "நெருங்கிய படைகள் என்னோடு வாருங்கள்" என்று கூறிப் பேய்கள் சூழ வன்னியருடனும் படைகளுடனும் கால்களில் அணிந்த தண்டை ஒலிக்கத் துர்க்கை நடக்க லுற்றாள்.

கொண்டல் - மேகம். **அதிர்ப்ப** - ஒலிக்க. **மண்டிய** - நெருங்கிய. **குழாம்** - கூட்டம் **அலகை** - பேய். **தண்டு** - தண்டை. **சாம்பவி** - துர்க்கை.

581. படைகள் கடலைத் தாண்டுதல்

அம்பிகை முன்னால் செல்ல
அரசரும் பின்னால் செல்ல
வெம்பிய சேனை மாவும்
மிகுத்திடும் இரதம் துன்ன
கம்பித வலைகள் வீசும்
கடலுமுன் சுவற பின்னால்
வெம்பித நீர்சு ரக்க
ஏகினர் தளங்கள் மாதோ.

துர்க்கை முன்னால் செல்ல, அரசர்கள் பின்னால் செல்ல, யானை, குதிரை, காலாள், தேர் என்ற நாற்படைகளும், அலை வீசும் கடல் முன்னே வற்றி இடம் கொடுக்கப் பின்னே நீர் சுரக்கக் கடலைக் கடந்தன.

மா - குதிரை, யானை. **இரதம்** - தேர். **சுவற** - வற்ற. **தளங்கள்** - படைகள்.

582. தென்கிழக்கு நோக்கி நடத்தல்

காளையாம் வீர பாலர்
களின்சு வானத்தி லொன்று
நீளிரு ளுவரி ஏக
நின்றிடத் தானை யெல்லாம்

யாளிநா யகிபின் செல்ல
அலகையின் படைகள் ஆர்ப்ப
கூளிபேய் இனங்கள் ஆடக்
குணதென்மேற் கடல்பால் சென்றான்.

வீரவன்னியர்களின் நாய்களில் ஒன்று இருளில் கடல் கடக்காமல் நின்றுவிடப் படைகள் எல்லாம் துர்க்கையின் பின்செல்ல பேய்ப்படைகள் ஆரவாரிக்க, மற்ற பேய்கள் ஆடக் கிழக்கு, தெற்கு, 'மேற்குக்கடலில் சென்றனர்.

சுவானம் - நாய். **உவரி** - கடல். **தானை** - படை. **ஆளிநாயகி** - துர்க்கை. **அலகை** - பேய். **குண** - கிழக்கு.

583. பேய்கள் மீன்களை உண்ணுதல்

கடற்சலம் வற்றும் போது
கடலுள மீனி னங்கள்
துடிதுடித் திடவே கண்டு
துர்க்கையின் பேயி னங்கள்
அடவுடன் அருந்தி வீரன்
அளித்திடும் அமுத மென்று
திடமுடன் ஆடிப் பாடி
தீரமாய் ஏகிற் றம்மா.

கடலில் நீர் வற்றும்போது கடலில் உள்ள மீன்கள் துடிதுடிக்க, துர்க்கையின் பேய்க் கூட்டங்கள் அவற்றை வன்னிய வீரன் அளித்த அமுதம் என்று அருந்தி, ஆடிப்பாடிக் கடந்தன.

சலம் - நீர். **அடவுடன்** - திருப்தியாக. **தீரம்** - வீரம்.

584. தேவர்கள் வானிலிருந்து பார்த்தல்

அண்டர்கள் முனிவர் சித்தர்
அயன்அரி அனைவோர் கூடி

திண்திறல் வீரன் சூரன்
தெளிந்திடக் காண்போ மென்று
கொண்டலூர் தியன்வி மானம்
கோதிலா திருந்து வானில்
அண்டொணா சிந்து பாடி
அகமகிழ்ந் துரைக்க லுற்றார்.

தேவர்கள், முனிவர், சித்தர், பிரமன், திருமால் ஆகிய அனைவரும் வன்னிய வீரனைக் காண்பதற்காக மேகத்தை வாகனமாகக் கொண்ட இந்திரன் விமானத்தில் ஏறினர் வானத்திலிருந்து பார்த்துப் பாடி மகிழ்ந்து கூறத் தொடங்கினர்.

அண்டர் - தேவர். **அயன்** - பிரமன். **அரி** - திருமால். **கொண்டல்** - மேகம். **ஊர்தி** - மேகம். **கோதிலாமல்** - குற்றமில்லாமல்.

585. வீரர்கள் செல்வதைக் கண்டு கூறுதல்

அந்தரத் தமரர் எல்லாம்
அம்பிகை அருளால் ஆழி
முந்தியே சுவறப் பின்னால்
மூர்க்கமாச் சுரப்பக் கண்டோம்
சுந்தர மலர்கள் தூற்றி
சூரியன் அடியைப் போற்றி
மந்திர வீர வாளால்
மடிகுவர் அவுணர் என்றார்.

வானிலுள்ள தேவர்கள் எல்லாம் அம்பிகை அருளால் கடல் வற்றிப் பின்னால் கரப்பதைப் பார்த்து மலர் தூவிக் கதிரவனை வணங்கி 'வன்னியனின் வீர வாளால் அசுரர்கள் இறப்பது திண்ணம்' என்று நினைத்தனர்.

அந்தரம் - ஆகாயம். **அமரர்** - தேவர். **ஆழி** - கடல்

586. தேவர்கள் வன்னியரைப் புகழ்தல்

இலங்கையில் அவுணர் மாள
இராமனும் கிரிக ளாலே
துலங்கிய வினையுண் டாக்கித்
துட்டரைக் கடிந்தான் வீரி
நலங்கொளும் கருணை யாலிந்
நற்கடல் வற்றச் செய்த
பெலங்களை உரைக்க லாமோ
பெருமைவிண் ணவரும் என்றான்.

"இலங்கையில் இராவணன் முதலிய அரக்கர்களை அழிப்பதற்காக இராமன் மலைமேல் மலை போட்டுச் சேது பாலம் கட்டிக் கடலைக் கடந்து பகைவரை அழித்தான். ஆனால் நீயோ துர்க்கை அருளால் கடலையே வற்றச் செய்து இதில் நடக்கின்றாய். உன் வலிமை தேவர்களாகிய எங்களாலும் கூற இயலாது" என்று தேவர்கள் வன்னியனைப் புகழ்ந்தனர்.

அவுணர் - அரக்கர், இங்கு இராவணன் முதலியோர். **மாள** - இறக்க. **கிரி** - மலை. **துட்டர்** - தீயர். **வீரி** - துர்க்கை. **பெலம்** - பலம், வலிமை. **விண்ணவர்** - தேவர்.

587. அத்திரி முனிவருக்குச் சனகர் துர்க்கை பெருமை கூறுதல்

அனைத்தையும் படைத்தும் காத்தும்
அமரினால் ஒடுக்கும் நீலி
கனத்தைநாம் கழற லாமோ
கதித்தவத் திரியே முன்னோர்
நினைத்திடும் வரங்கள் ஈயும்
நிமலியே பிரமம் அல்லால்
இனிபிர மங்க ளுண்டோ
இயம்பிட முடியா தென்றார்.

"எல்லாவற்றையும் படைத்தும், காத்தும், போரினால் அழித்தும் வருகின்ற துர்க்கையின் பெருமை நம்மால் கூற இயலுமா? அத்திரி முனிவரே! முன்னோர்கள் நினைத்த வரங்களைக் கொடுத்தவள் இவளல்லவா? இவளன்றி வேறு பிரமம் உள்ளதா? இவள் பெருமை கூற இயலாது," என்றார் சனகர்.

அமர் - போர். **ஒடுக்கும்** - அழிக்கும். **நீலி** - துர்க்கை **கனம்** - பெருமை. **கழறல்** - கூறுதல். **நிமலி** - குற்றமற்றவள், துர்க்கை. **இயம்பிட** - சொல்ல.

588.

ஆதியில் ஆணும் பெண்ணும்
அலியெனும் அரன்மால் தேவர்
தீதிலா தளித்து மீண்டும்
தேவியாம் அவர வர்க்கே
நீதியா நிறைந்தி ருந்து
நெடுமக வாகிய பின்னும்
சோதியாய் எங்கும் நின்ற
சூழ்ச்சியை அறிவ துண்டோ.

"முதலில் ஆண், பெண், அலி, சிவன், விஷ்ணு, தேவர் எனப்படைத்தவளே மீண்டும் அவரவர்க்குத் தேவியாகவும், பெண்ணாகவும் அவதாரம் எடுத்து, ஒளி மயமாய் எங்கும் பரவிய சூழ்ச்சியை அறிய முடியுமோ?"

ஆதி - முதல். **அலி** - ஆண் பெண் இருதன்மையும் உடையவர். **மகவு** - குழந்தை. **சோதி** - ஒளி.

589. முத்தேவர் தேவியர் உற்பத்தி கூறுதல்

முதலினாள் மூன்று வான
முட்டையைப் பகிர்ந் தளிக்க

அதிலுமை அரியும் வேதன்
மலர்கமக ளாக வாணி
இதமுடன் உதித்தார் ஈசன்
இறையும் அத்திரு மாலும்
விதிமறை மாது இந்த
விதமணம் புரிந்த வாறே.

"ஆதி பராசக்தியானவள் மூன்று முட்டையைப் படைத்தாள். பச்சை முட்டையில் அரியும் பார்வதியும் தோன்றினர். மஞ்சள் முட்டையில் பிரமனும் திருமகளும் தோன்றினர். வெள்ளை முட்டையில் சரஸ்வதியும் மகேஸ்வரனும் தோன்றினர். ஈசன் உமையையும், திருமால் திருமகளையும், பிரமன் சரஸ்வதியையும் மணந்தனர்."

அரி - திருமால். **வேதன்** - பிரமன். **வாணி** - சரஸ்வதி. **ஈசன் இறை** - சிவன். **விதிமறை** - பிரமன்.

590. சத்தியின் மிகுதி வேறு இல்லை எனல்

சத்தியே பிரமம் ஆகும்
அதில்பர சிவம டங்கும்
முத்தியின் நெறிய ளிக்கும்
மொழிந்திடின் முதல்வர் ஆனோர்
நித்தமும் அவளைப் பூசை
நிறைவுடன் அளிப்ப தல்லால்
சத்தியில் அதிகம் உண்டோ
தரணியில் எனவே சாற்று.

"சக்தியே பிரமம். பரமசிவனும் சக்தியில் அடக்கம். முக்தி அளிப்பவளும் சக்தியே. பெரும்பாலும் உலகில் முதன்மை யானவர் பலரும் சக்தியையே பூசை செய்வர். பூமியில் சக்தியின் மிக்க தெய்வம் வேறில்லை."

நித்தம் - நாள்தோறும் **தரணி** - பூமி

591. தேவர்கள் வன்னிய வீரன் போரைக் காண ஆவலாய்க் காத்திருத்தல்

மாரியாம் துர்க்கை சூழ்ச்சி
வானவர் மனத்தில் உன்னி
பேரிகை முரசொ லிப்பப்
பித்தனார் அருளி னாலே
வீரிய குழாங்கள் சூழ
வீரவன் னியன்பாற் சென்று
போரினைக் காண்போ மென்று
புளகம்உற் றிருந்தார் மாதோ.

மாரியன்னையான துர்க்கையின் சூழ்ச்சியை மனத்தில் நினைத்துப் "பேரிகை, முரசு இயம்ப, வீரர்கள் சூழச் செல்லும் வன்னியனுடன் சென்று சிவனருளால் போரைக் காண்போ" மென்று தேவர்கள் மகிழ்வுற்றிருந்தார்கள்.

வானவர் - தேவர். **உன்னி** - நினைத்து. **பேரிகை** - பெரிய முரசு. **பித்தன்** - சிவன் **குழாங்கள்** - கூட்டம். **புளகமுற்று** - மகிழ்ச்சியுற்று, இன்பம் உற்று.

592. வீரர் இரத்தினாபுரம் அடைந்து தங்குதல்

அந்தரி அருளி னாலே
அலைகடல் வீரர் கூட்டம்
துந்துமி ஒலிப்ப ஆங்கோர்
சுனைவளர் பொழிலைக் கண்டு
மந்திர வரத்தி னாலோர்
மண்டபம் அமைத்து வானில்
இந்திரன் எனஇ ருந்தார்
இரத்தினா புரத்தில் அம்மா.

சத்தியின் அருளினால் அலைகடல் போன்ற வீரர் கூட்டம் (கடலைத் தாண்டி) இரத்தினாபுரம் அடைந்தது. தேவர் துந்துபி முழங்க. சுனையுள்ள ஒரு சோலையைக் கண்டு. அங்கே மந்திர பலத்தால் ஒரு மண்டபம் அமைத்துத் தேவலோக இந்திரன் போல் தங்கினர்.

அந்தரி - துர்க்கை. **துந்துமி** - தேவவாத்தியம். **பொழில்** - சோலை. **சுனை** - நீர்நிலை. **இரத்தினாபுரம்** - வாதாவியின் நகரம்.

16. விநாயகர் காவற் சருக்கம்

593. வன்னியன் விநாயகரை வணங்குதல்

வெஞ்சமன் இவனாம் என்று
மிகுத்தவா தாவி நாட்டில்
செஞ்சடா முடிபு னைந்து
சிலையவன் இருப்ப இப்பால்
குஞ்சர முகத்தோன் ஆன
கோவில் வீற் றிருப்பக் கண்டே
அஞ்செழுத் துச்ச ரிக்கும்
அரசனும் பணிந்து ரைப்பான்.

கொடிய எமன் இவனாம் என்று சொல்லத்தக்க வாதாவியின் நாட்டில், சடாமுடி புனைந்து. வீரவன்னியன் வீற்றிருக்கும் போது. யானை முகத்தோன் கோயிலைக் கண்டு பஞ்சாட்சரம் உச்சரிக்கும் அவன் பணிந்து வணங்கி வேண்டினான்.

சமன் - எமன். **சிலையவன்** - வில்லுடைய வன்னியன். **குஞ்சரம்** - யானை. **அஞ்செழுத்து** - நமசிவாய என்னும் பஞ்சாட்சரம்.

594. வன்னியன் அரக்கர் பூமியை அடக்க வழி கேட்டல்

முடிகம்மே லூர்ந்து வரும்
முக்கண்ணா மூர்க்கர் பூமி

நாடின சூழ்ச்சி யென்பால்
நவின்றிடும் நாதி என்ன
நீடிய ஐங்க ரன்பின்
நிகழ்த்திவா தாவி யூடே
நாடியே கரியாய் இந்த
நகரினைக் காத்தேன் என்றார்.

"மூஞ்சூறு வாகனத்தில் ஏறியுள்ள முக்கண்ணனே! இந்த அரக்கர் பூமிக்கு நீ வந்த காரணம் கூறுவாயாக" என்று வீரவன்னியன் கேட்க, விநாயகர் "வீரவன்னியனே! கெட்டவனான இவ்வாதாவியுடைய பட்டணத்தை நான் காவல் செய்து கொண்டிருக்கிறேன்", என்று கூறினார்.

மூடிகம் - மூஷிகம், மூஞ்சூறு. **மூர்க்கர்** - அரக்கர். **சூழ்ச்சி** - தந்திரம். **நவின்றிடும்** - கூறுவீர். **நாதி** - வழி. **ஐங்கரன்** - ஐந்து கைகளையுடைய விநாயகன்.

595. வன்னியன் அரக்கன் பற்றிக் கேட்டல்

நகரினைக் காப்பேன் என்ற
நாதனே வானோ ருக்கும்
பகையெனும் சூரன் வாய்மை
பகருவாய் என்னத் தேறி
நகையினால் புரமெ ரித்த
நாயகன் அளித்த வீரன்
முகமதைப் பரிந்து பார்த்தே
மோதகன் மொழிய லுற்றான்.

"வன்னியன் நகரைக் காப்பேன் என்ற நாதனே! தேவர்களுக்குப் பகையான அரக்கனின் தன்மை கூறுவாய்" என்று கேட்க, விநாயகர் மனம் தேறி சிரிப்பினால் முப்புரத்தை எரித்த சிவன் மகனான வன்னிய வீரன் முகத்தை அன்போடு பார்த்துக் கூறத் தொடங்கினான்.

பகருவாய் -கூறுவாய். **நகை** - சிரிப்பு. **பரிந்து** - அன்போடு. **மோதகன்** - விநாயகன்.

596. விநாயகன் தான் காவல் செய்யும் காரணம் கூறுதல்

கெசமுக அவுணன் தன்னைக்
கெலித்தவன் எனவு ணர்ந்தே
அசைவிலா வரத்தால் என்னை
அருமையாய் அழைத்தி ருத்தி
உசிதமாம் பூசை நல்கி
உலகினைக் காரும் என்றே
இசைந்துமே நெடுநா ளாக
இப்புவி இருந்தேன் என்றான்.

"கெசமுகாசுரனைச் செயித்தவன் நான் என்று கேள்விப்பட்டு, தவம் செய்து, பெற்ற வரத்தால் அரக்கன் என்னை அன்புடன் அழைத்துப் பூசை செய்து, என் நகரத்தைக் காக்க வேண்டும் என வேண்டிக் கொண்டான். அன்று முதல் நீண்ட காலமாக இந்நகரத்தைக் காக்கிறேன்" என்றார் விநாயகர்.

கெசமுக அவுணன் - கெசமுகாசுரன். **கெலித்தவன்** - செயித்தவன். **உசிதம்** - மனத்துக் குகந்த. **இப்புவி** - இரத்தினாபுரி.

597. நானும் காளியும் வாதாவிக்குத் துணை எனல்

கன்னியோர் பாகம் துன்னும்
கடவுளின் வரத்தி னாலே
மன்னன்வா தாவி இந்த
மண்ணினில் வலிமை ஆனான்
அன்னவன் இடத்தில் யானும்
அக்கினி காளி யாரும்

முன்னியே காக்க வானோர்
யாவரும் அடைந்த தென்றார்.

"உமையை இடப்பாகம் வைத்த சிவன் கொடுத்த வரத்தினால் வாதாவி வலிமை பெற்றான். அவனுக்கு நானும் அக்கினி காளியும் காவல் செய்கிறோம். இதனால் தேவர்கள் துன்பம் அடைந்தனர்."

கன்னி - உமை **கடவுள்** - சிவன். **வானோர்** - தேவர்.

598. வாதாவியின் நகரம்

மன்னனாம் அவுணன் முன்றில்
மாணிக்கத் தாலே மேய்ந்த
சொன்னத்தால் தூண்கள் நாட்டி
சோர்விலா மாழை யாலே
பின்னிய பொதிகை சேர்த்து
விண்ணவர் பதியும் நாண
அன்னமும் பொன்னி னாலே
அழகுற எங்கும் வைத்தார்.

"வாதாவி அரக்கனின் வாசலில் மாணிக்கம் பதித்த பொற்றூண்கள் வைத்து நல்ல பொன்னால் ஆன மேற்கட்டி அமைத்து, தேவருலகமும் வெட்கப்படும்படி பொன்னாலான அன்னப் பறவைகளும் அழகுற வைக்கப்பட்டுள்ளன".

முன்றில் - வீட்டின் முன்புறம். **மேய்ந்த** - பதிக்கப்பட்ட. **சொன்னம்** - சொர்ணம், **மாழை** - பொன். **பொதிகை** - மேற்கட்டி. விதானம். **விண்ணவர்** - தேவர். **பதி** - நகரம். **விண்ணவர் பதி** - தேவர் பட்டணம் அமராவதி.

599. வாதாவியின் மாளிகை

எங்கும்பொன் மதிலால் சூழும்
இரத்தினா புரத்தி னுள்ளே

அங்கொரு தாழ்வு மில்லா
வாதாவி வாழ்வைக் கேளீர்
பொங்குமேல் கடலில் வீடு
பொற்கிரி என்னச் சூழும்
எங்குமே இல்லை யென்றே
இலங்கிட இருப்ப தானான்.

"பொன் மதிலால் சூழப்பட்ட இரத்தினாபுரியினுள் ஒரு குறையுமில்லாத வாதாவியின் வாழ்வைக் கேட்பீர்களாக. மேலைக் கடல் நடுவில் மேருமலை போன்ற மாளிகையில் இது போன்ற மாளிகை எங்குமில்லை என்று சொல்லும்படி வாழ்ந்திருக்கிறான்."

பொற்கிரி - மேருமலை. **இலங்கிட** - விளங்கிட.

600. வீதி அழகு மாடமாளிகைகள்

எண்ண வொண்ணா எழிலான வீதியும்
விண்ணு லாவிய உப்பரி மேடையும்
பண்ணு லாமொழி யார்கள்பந் தாடவும்
அண்ண லார்தன் பதியினை ஒக்குமே.

"எண்ண முடியாத அழகான வீடுகள். ஆகாயத்தைத் தொடும் உப்பரிகைகள், மேடைகள். இன்னிசை போன்ற மொழியுடைய பந்தாடும் பெண்கள். இவை இறைவனின் பரமபதத்தை ஒக்கும்"

உப்பரி மேடை - மாளிகை மேல்தள மேடை. **பண்** - இசை. **பதி** - ஊர்.

601. வாதாவியின் உடல் மனைவி மக்கள்

ஒக்க நல்ல வாதாவி உடம்புடன்
மிக்கு மாயிரங் காதம் மிகுந்தவன்
ஒக்க மாந்தர் உலாவும் பொற்கொடி
ஒக்கும் மாதர் ரதியென ஒக்குமே.

"வாதாவியின் உடல் ஆயிரம் காதம் அகலம். அவன் பிள்ளைகளும் அவனைப் போன்றவர். மனைவிகள் ரதியை ஒத்தவர்".

மாந்தர் - பிள்ளைகள். **பொற்கொடி** - பொற்கொடி போன்ற பெண்கள். **ரதி** - மன்மதன் மனைவி. அழகில் சிறந்தவள்.

602. வாதாவி கொலுவிருத்தல்

மங்கை மார்கள் மருவு நூறாயிரம்
துங்க வெம்பரி தேர்கரி சேனைகள்
புங்க வன்படை போல இலங்கிய
சிங்க வாகனத் தேயிருந் தானரோ.

"நூறாயிரம் பெண்கள் மருவ, மேலான குதிரை, இரதம், யானை, சேனைகளுடன் சிம்மாசனத்தில் தேவேந்திரன் போல் கொலுவிருப்பான்."

துங்க - மேன்மையான. **பரி** - குதிரை. **கரி** - யானை. **சேனை** - படை **புங்கவன்** - தேவேந்திரன்.

603. அரக்கர் கூட்டம்

அங்க ணன்வங் கணன்திருச் சாகரன்
செங்க ணன்சங் கொலிச்சிறப் பின்றென
சிங்க மான சிவந்தகண் பார்வையர்
எங்கும் சேனைய ராக இருந்தனர்.

"அங்கணன், வங்கணன், திருச்சாகரன் என்ற பெயருடைய அரக்கர்கள் திருமாலின் சங்கொலியை விட முழக்கம் செய்பவர். சிவந்த கண்ணையும் கொடிய பார்வையும் உடையவர். எங்கும் படை வீரர்களாயுள்ளனர்."

செங்கணன் - திருமால். **சேனையர்** - படைவீரர்.

604. மந்திரிமார்கள்

வீர சூரர்கள் வீர்கடல் போல
மார மந்திரி மார்பணிந் தேற்றியே
தூர வோலக்கம் சொல்லவொண் ணாதுகாண்
சேர எட்டுத் திசையும் இருப்பரால்.

"வீர சூரர்கள் கடல் போல் பரவ, மந்திரிமார் பணிய, அவனுடைய கொலு சொல்ல முடியாது. எட்டுத்திக்கும் சுற்றி வருவர் அவன் வீரர்கள்".

ஓலக்கம் - சபை

605. கணிகையர் ஆடல்

காண எட்டுத் திசைக்கணி கைகளே
பூணு மத்தளம் சல்லரி பூரியும்
வேணு பார்வையோர் ஆடலும் மேன்மையாம்
வாணன் ஆகிய வாதாவி வாழ்குவன்.

எட்டுத்திசையிலிருந்து வரும் நடனப் பெண்கள், மத்தளம், சல்லரி, பூரி முதலியவை தாளம் முழங்க நடனமாட, வாணாசுரன் போல் வாதாவி வாழ்ந்து வருகிறான்.

கணிகை - நடனமாதர்.

606. வாதாவியின் வாழ்வு

வாழ்வு தான்சொல வானவர் மேவலர்
ஈழம் கொல்லம் இலங்கையும் கோசலை
ஆழ மான கடலுள அவனியின்
மூழ்கி நித்தலும் உதித்த வென்பவே.

அரக்கனின் வாழ்வைக் கூற வேண்டு மென்றால் தேவர் நகரம், பகைவர் நகரம், இலங்கை, கொல்லம், கோசலம் ஆகிய

நகரங்கள் அனைத்தும் கடலில் மூழ்கி உதித்ததுபோல் அவன் நகரம் விளங்கும்.

மேவலர் - பகைவர். **அவனி** - உலகம். **நித்தலும்** - நாள்தோறும். **உதித்த** - தோன்றின.

607. வாதாவியின் செல்வம்

முத்தும்நவ ரத்தினமும் முன்குவியல் செய்யும்
கொத்துடைய நற்பவளம் கொண்டு பணியாக
மற்றொ ருவரும் நிகரில்லா அவுணாதி
இத்தன்மை யோடவன் இலங்கிட இருந்தான்.

அவன் வாயிலில் முத்தும், நவரத்னமும் கொட்டிக் கிடக்கும் பவளங்கள் திரையாக அளக்கப்படும். அவனுக்கு மற்றொருவர் நிகரில்லை என்னும்படி அவ்வாதாவி விளங்கினான்.

பணி - திரை, கப்பம்.

608. சிவனிடம் வரம் பெற்றவன் எனல்

கூற்றனிவ னாமெனவே கொள்ளைகொள்ளும்சூரன்
ஏற்றிலுறை ஈசனும் இயம்பிய வரத்தால்
நாற்றிசை நடுங்கப்பல நலங்களைக் கவர்ந்தே
பார்த்திப னெனஇருந்த பான்மைஇது வென்றான்.

"எமன்போல் எல்லோர் உயிரையும் கவர்வான். காளை வாகனமுடைய இறைவன் கொடுத்த வரத்தால் நான்கு திசையும் நடுங்கப் பல வளங்களையும் கவர்ந்து வந்து பேரரசனாக வாழ்கிறான்" என்றார் விநாயகர்.

கூற்றன் - எமன் **ஏறு** - காளை. (இடபம்). **பார்த்திபன்** - பேரரசன்.

609. "சிவன் அளித்த ஆயுள் முடியப் போகிறது" எனல்

அன்றரன் அளித்தவய தானது அழல்காளி
கொண்ட சினத்தோடு கொதித்தெழுவாள் உன்றன்
மண்டு சிலையால் மடிவள் மைந்தவிது திண்ணம்
பண்டமு தெனக்களியு மென்றுரை பகர்ந்தான்.

"அன்று சிவன் அளித்த ஆயுள் முடியும் நேரம் நெருங்கிவிட்டது. காளி சினத்தோடு உன்னை எதிர்ப்பாள். உன்கை வில்லால் அவள் அழிவாள். இது உறுதி. எனக்கு உணவு படை." என்றார் விநாயகர்.

சிலை - வில். **திண்ணம்** - உறுதி

610. "அரக்கன் என் பசி ஆற்றவில்லை" எனல்

அந்தமுள என்பசி ஆற்ற அறிவில்லான்
உந்திக் கமலத்தில் எழும்பசி உன்னாலே
சிந்தை மகிழாக சிதைத்திடுதி யானால்
பந்தந் துணையாகிப் பரிந்தருள்வன் என்றான்.

"இவ்வளவு சிறப்பிருந்தும் ஆற்றக் கூடிய என் பசியை ஆற்றும் அறிவு அவனுக்கில்லை என் வயிற்றில் எழும் பசியைச் சிதைத்து என் மனம் மகிழச் செய்தால் நான் உனக்குத் துணையாவேன்" என்றார் விநாயகர்.

அந்தமுள - ஆற்றக் கூடிய **உந்திக் கமலம்** - வயிறு.

611. பிள்ளையாருக்கு உணவு படைத்தல்

அக்கணம் அதிரசம் மோதகமோடு அப்பம்
சர்க்கரை எள்ளுண்டையும் சமைத்துடன் அளிக்க
முக்கணனும் உண்டுபசி ஓட்டி முனிவில்லா
மிக்கமகிழ் கூர்ந்துவரம் வீரனுக் குரைப்பான்.

உடனே வன்னியன் அதிரசம், மோதகம், அப்பம், சர்க்கரை எள்ளுருண்டை ஆகியவற்றை அளிக்க விநாயகனும் உண்டு பசியாறி மிக மகிழ்ந்து சினமின்றிச் சிறுவனுக்குக் கூறுவான்.

மோதகம் - கொழுக்கட்டை. **முனிவு** - சினம்.

612. 'உன் படையை அழை' எனல்

மங்கை உமை பாகன் மகவான சகாயா
கங்குலைக் கடிந்த கதிரென அவுணராதி
அங்கம்உன் நற்சிலையின் அம்புவதை செய்யும்
பங்கம்இலை உன்றனது படைஅழையு மென்றார்.

"உமையை இடப்பாகம் கொண்ட சிவன் மகனானவனே! இரவைப் போக்கும் கதிரவன் போல் அரக்கர்களின் அங்கத்தை உனது வில்லின் அம்பு வதை செய்யும் குற்றம் இல்லை. உன் படையை அழைத்துவா" என்றான்.

உமைபாகன் - சிவன். **மகவு** - குழந்தை, மகன், **கங்குல்** - இரவு. **கதிர்** - சூரியன். **அவுணர்** - அசுரர். **பங்கம்** - குற்றம். **அங்கம்** - உடல். **சிலை** - வில். **வதை** செய்யும் - அழிக்கும்.

613. வன்னிய வீரன் துர்க்கையிடம் கூறுதல்

கரிமுகன் இயம்பவும் கருத்தின் மகிழ்கூர்ந்தே
இருகரம் குவித்துப் பணிந்தேத்தி எழுவீரன்
முரசதிரு முன்றிலில் புகுந்துமையின் முன்னர்
அரிமருகன் சொன்னதோர் அடைவுகள்உரைத்தான்.

யானைமுகன் கூறியதைக் கேட்ட வன்னியன் மகிழ்ந்து கை குவித்துப் பணிந்து திரும்பி வந்து துர்க்கையின் முன் நின்று யானைமுகன் கூறியவற்றைக் கூறினான்.

கரிமுகன் - விநாயகன். யானைமுகன். **அரி** - திருமால். **மருகன்** - மருமகன். இங்கு யானைமுகன் **அடைவு** - செய்தி.

17. துர்க்கை சோதனைச் சருக்கம்

614. துர்க்கை வன்னியனிடம் பேசுதல்

மாசிலா ஈச னார்தன்
மாவருள் படைத்த வீரன்
தேசுலாப் படைக ளோடு
சென்றவன் உரைப்பக் கேட்டு
ஏசிலாய் இரங்க வேண்டாம்
இப்பொழு தசுரன் பாற்போய்
நாசமா மாறு சொல்லி
நானிவண் வருவேன் என்றாள்.

குற்றமில்லாத பரமேஸ்வரனுடைய அருள் பெற்ற வன்னிய வீரன் ஒளிபொருந்திய தன் படைகளோடு சென்று கூறியதைக் கேட்ட துர்க்கை "குற்றமற்றவனே! வருந்தாதே! இப்பொழுது நான் சென்று அவ்வாதாவி அசுரனை நாசமாகும்படி சபித்து விட்டு வருகிறேன்" என்று கூறினாள்.

மாசு - குற்றம். **தேசு** - ஒளி. **ஏசு** - பழி. **இவண்** - இங்கு.

615. துர்க்கை, இடைச்சி வேடம் பூண்டு பால், மோர் விற்றல்

ஆய்ச்சியர் உருவம் மன்னி
அருஞ்சிரம் மீதின் மோர்சால்
காய்ச்சிய பசும்பொன் மோரை
கரந்தனில் துலங்க ஏந்தி
பேய்ச்சியாம் துர்க்கை யாரும்
பிறங்கவா தாவி நாட்டில்

கூச்சமில் லாமல் மோரு
கொள்ளுவீர் எனவு ரைத்தாள்.

பேய்களுக்குத் தலைவியான துர்க்கை, இடைச்சி வேடம் பூண்டு மோர்ப் பானை ஏந்தி, காய்ச்சிய பசும்பால் மோரைக் கையில் ஏந்தி, வாதாவி நாட்டில் சென்று "கூச்சமில்லாமல் மோர், பால் வாங்குவீர்" என விற்றாள்.

ஆய்ச்சி - இடைச்சி. **சிரம்** - தலை. **சால்** - பானை. **கரம்** - கை.

616. மோரை அறியாய விலை கூறுதல்

பால்கொள்ளும் மோர்கொள்ளும் பாவையரே
எனக்கூறும்
ஓலமதில் அவுணராதி நங்கையர்கள் ஓடிவந்தே
வேல்பொருதும் விழிமானாய் விலைசொல்வீர்
பாலெனவே
மாலினிளை யாளுரைப்பாள் மாணிக்கம்
ஒருமோகை.

"பால் வாங்குங்கள், மோர்வாங்குங்கள்" என்று துர்க்கை கூவ, அசுரப் பெண்கள், "வேல் போன்றும் மான் போன்றும் கண்ணுடையவளே! விலை சொல்" என்று கேட்டனர். திருமாலின் தங்கையான துர்க்கை " மாணிக்கம் ஒன்று கொடுத்தால் ஒரு சிரட்டை ஊற்றுவேன்" என்றாள்.

ஓலம் - சப்தம். **பொருதும்** - ஒப்பான. **மோகை** - ஒருசிறு பாத்திரம்.

617. அரக்கப் பெண்கள் 'ஆணிப்பொன் தருகிறோம்' என துர்க்கை மறுத்து வேறு தெரு போதல்

மாணிக்கம் நெய்தயிர்பால் மாற்றவுமே என்றுரைக்க
ஆணிப்பொன் அஞ்சுவிலை ஆகாதோ எனக்கேட்ப

பூணும்பூண் ஆதிகளும் பூவையரே ஆகாதென
நாணிச்சென் றரசநல் வீதியினிற் கூவுவளே.

"நெய்தயிர் பாலுக்கு மாணிக்கம் விலை" என்று துர்க்கை கூற, "ஆணிப் பொன்னில் ஐந்து தருகிறோம் போதாதா?" என்று அரக்கப் பெண்கள் கேட்க, "நீங்கள் போட்டிருக்கும் ஆபரணம் முழுவதும் தந்தாலும் போதாது" என்று கூறி அரச வீதிக்குச் சென்றாள் துர்க்கை.

பூணும் - அணியும். **பூண்** - ஆபரணம். **பூவையரே** - பெண்களே!

618. வாதாவி "என்ன சத்தம்?" எனக் கேட்டல்

நன்னுதலாள் விலைகூற நானிலங்கள்
அதிர்ந்திடவே
மன்னவனாம் வாதாவி மாசெவியில் தாக்கிடவும்
என்னவொலி என்றிடவும் இலகுமமைச்
சருக்குரைப்பான்
அன்னவரில் வாய்மை யறிந்துரைப்பேன்
எனவாங்குற்று.

நல்ல நெற்றியை உடைய துர்க்கை கூவிய கூவல் உலகமே அதிரக் கேட்டது. வாதாவி செவியில் இவ்வொலி தாக்கவும் அவன் "என்ன சத்தம்" என்று அமைச்சரைக் கேட்க அமைச்சரில் ஒருவன் "நான் தெரிந்து வருகிறேன்" என்று கூறிப் போனான்.

நன்னுதலாள் - நல்ல நெற்றியை உடையவள். **நானிலம்** - நான்கு + நிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்களால் ஆன பூமி, உலகம். **அதிர்ந்திட** - நடுங்கிட. **வாய்மை** - உண்மை.

619. அமைச்சர் துர்க்கையை அசுரனிடம் அழைத்துச் செல்லுதல்

கூறியசொல் மூவுலகும் கொண்டலிடி போலார்ப்ப
நாரியிவள் யாரெனவே நாயகன்பால் கொண்டேக

சீரிலவு ணாதிபனும் செப்புவான் நீயார்உன்
பேரெது ஊரெது பிசகாமல் பேசென்றான்.

துர்க்கை கூவிய ஒலி மூவுலகிலும் மேகத்தின் இடிபோல் கேட்க, "யார் இப்பெண்" என்று, வாதாவியிடம் அழைத்துச் சென்றான் அமைச்சன். சிறப்பில்லாத அசுரர் தலைவனும் "நீ யார்? உன் பெயர் எது? உன் ஊர் எது? பொய்யில்லாமல் கூறு" என்று கேட்டான்.

கொண்டல் - மேகம். **நாரி** - பெண். **சீரிலவுணாதிபன்** - சீர் + இல் + அவுணன் + அதிபன். **சீர்இல்** - சிறப்பில்லாத. **அவுணாதிபன்** - அசுரர் தலைவன் - வாதாவி. **செப்புவான்** - கூறுவான். **பிசகாமல்** - பொய்யில்லாமல்.

620. துர்க்கை "ஈசன் பசுமேய்க்கும் இடைச்சி நான்" எனல்

வாதாவி மன்னவனே வடகயிலை ஈசருட
நாதாந்தப் பசுமேய்க்கும் நல்லிடைச்சி நானெனவே
சூதான வார்த்தையது சொற்றனையே மாதரசே
காதரச் சொல்லுமெனக் காத்திரமாய்க் கூறுவனே.

"வாதாவி அரசனே! வடக்கேயுள்ள கயிலை நாதருடைய பசுக்களை மேய்க்கும் இடைச்சி நான்" என்றாள் துர்க்கை. "சூழ்ச்சியாகப் பேசுகிறாய் உண்மையைச் சொல்" என்று கோபமாகக் கேட்டான் வாதாவி.

சொற்றனை - கூறினாய். **காத்திரம்** - சினம்.

621. "வன்னியருக்குத் துணையாய் வந்தேன்" எனல்

வந்தவகை கேளுமினி வன்னிய ரென்றுசிலர்
இந்தநகர் அழித்திடவே வந்தார் அவர்பின்னே
அந்தமுள பெருஞ்சேனைக்கு ஆர்துணையாய்
வந்துற்றேன்

மந்தமதி யாலுரைக்கும் மாதிவளை
வதையென்றான்.

"வந்தவழியைக் கேளும் வாதாவியே! வன்னிய வீரரெனச் சிலர் இந்நகரை அழிக்க வந்துள்ளார்கள் அவர்களோடு அவர்களுடைய அளவற்ற பெரிய படைக்குத் துணையாக நான் வந்தேன்" என்றாள் துர்க்கை. "அறிவு கெட்டுப் பேசும் இவளை அழியுங்கள்" என்றான் வாதாவி.

சேனை - படை. **மந்தமதி** - குறைந்த அறிவு. **வதை** - துன்புறுத்து.

622. வன்னியனால் உன்தலை உருளும் எனல்
வதைசெய்யும் என்றுரைத்த வாதாவி மன்னவனே
இது உனக்கு நன்றாமோ என்பெயரும் துர்க்கை
யென்பார்
மதியணியும் சடையண்ணல் மகவான
வன்னியர்கோன்
உதையினால் உனதுசிரம் உருண்டழியுந் தவறாதே.

"என்னைத் துன்புறுத்தக் கூறிய வாதாவியே! இது உனக்கு அழகா? என் பெயர் துர்க்கை என்பார். சந்திரனை அணிந்த சடையை உடைய சிவனின் மகனான வீரவன்னியன் காலால் உதைக்கப்பட்டு உன் தலை உருளப் போகிறது. இது தப்பாது" என்றாள் துர்க்கை.

623. உன் சுற்றம் அழியும் எனல்
சொன்னவாய் தனைஅறுப்பேன் தொன்னகரைத்
தீயினால்
துன்னியழிந் திடச்செய்வேன் சுற்றமொடு
நின்சுகமும்
மன்னவனால் நாளை மடியும்போ தெனதுமொழி
இன்னலெனும் நன்மையெனும் இரண்டுமே
அறிவையென்றாள்.

"என்னை வதை செய்யுமாறு கூறிய உன் வாயை அறுப்பேன். இப்பழைய நகரை அழிப்பேன்; சுற்றமும் சுகமும் நாளை வன்னியனால் அழியும். அப்போது என் சொல்லின் தீமையும் நன்மையும் அறிவாய்" என்றாள்.

தொன்மை + நகர் - தொன்னகர். **இன்னல்** - துன்பம்.

624. வாதாவி கோபத்துடன் துர்க்கை கூந்தலைப் பிடிக்கத் துர்க்கை மறைதல்

நாக்குதனை அறுத்து நடுவறவே உன்னைவெட்டி
காக்கைகழுகு பேயருந்த கதித்துவிருந்
தளிப்பேனென
மூர்க்கனவன் வாதாவி முன்கோப மாயெழுந்தே
பூக்கமழும் குழல்பிடித்தான் பொக்கெனவே
மறைந்தனளே.

"உன் நாக்கை அறுத்து உன்னை வெட்டிக் காக்கை கழுகு பேய்க்கு விருந்து படைப்பேன்" என்றாள் துர்க்கை. மூர்க்க குணம் படைத்த வாதாவி முன்கோபத்துடன் எழுந்து பூமணம் வீசும் துர்க்கையின் கூந்தலைப் பிடித்தான் அக்கணமே துர்க்கை மறைந்தாள்.

குழல் - கூந்தல். **பொக்கென** - திடீரென.

625. துர்க்கை வன்னியனிடம் சென்று அரற்றல்

பொய்யாளர் போலேகிப் புழுதிதனை மேற்பூசி
மையாரும் விழிமடவாள் வன்னியர்கோன்
முன்புற்றே
கையார எனைஅடித்தான் கண்டீர்காள்
மைந்தர்களே
ஐயகோ என்செய்வேன் ஆருடன் அரற்றுவனே.

கரிய விழியுடைய துர்க்கை உடல் முழுதும் புழுதி பூசி வன்னியனிடம் வந்து “என்னை வாதாவி அடித்து விட்டான். மைந்தர்களே! பாருங்கள்! நான் என்செய்வேன் யாரிடம் கூறுவேன்?” என்று பொய்யாக அரற்றினாள்.

மையாடும் - கரிய, மை பூசப்பட்ட.

626. “என்னை யடித்த வாதாவி தலையை வாங்குங்கள்” என்று துர்க்கை முறையிடல்

மோர்சாடி தனையுடைத்து மோதியென்னை
அடிக்கலுற்றான்
மார்க்கமில்லாச் செய்யுமென்ற வாதாவியின்
தலையை
தீர்க்கமுறு சிலையாலே சேதிப்பீர் என்றுரைக்க
போர்க்கழகு செய்யுமெனப் பொங்கியெழுந்
திருந்தனனே.

“மோர்ப் பானையை உடைத்து என்னை அடித்தான். எனக்கு வழியில்லாமல் செய்த வாதாவியின் தலையை வில்லாலே அறுப்பீர்களாக” என்றாள். இது கேட்ட வன்னியன் பொங்கியெழுந்து “உடனே போருக்கு ஏற்பாடு செய்யுங்கள்” என்றான்.

மார்க்கம் - வழி. **சிலை** - வில். **சேதிப்பீர்** - அழிப்பீர்.

18. மந்திராலோசனைச் சருக்கம்

627. வாதாவியை அழிப்பேன் என வன்னியன் சூளுரைத்தல்

இவ்வண்ணம் துர்க்கை சொல்ல
இறையவன் கோப மாகி
பவ்வம்சூழ் உலகிற் சூறை
பற்றிய அவுணர் தன்னை

கல்விடச் சிலையான் மாட்டி
காலன்கை அளிப்பேன் தாயே
எவ்வுரை மனம்தே றென்று
இருப்பவா தாவி சொல்வான்.

துர்க்கை கூறியதைக் கேட்டுக் கோபம் கொண்ட வன்னியன் "கடல் சூழ்ந்த உலகைச் சூறையாடிய வாதாவியை என்னுடைய வில்லால் வென்று எமனுக்குக் கொடுப்பேன். என்பேச்சை நம்புங்கள்" என்று கூற இரத்தினாபுரியில் வாதாவி கூறுவான்.

இறையவன் - அரசன், வன்னிய வீரன். **பவ்வம்** - கடல். **சூறை** கொள்ளை. **மாட்டி** - கொன்று. **காலன்** - எமன். **தேறு** - நம்பு.

628. வாதாவி "நாரதன் கூறியது பலித்தது" எனல்

மண்டியே கடல்க டந்தே
வந்திடும் வன்னி யன்தன்
அண்டையிற் செல்லும் துர்க்கை
அறைந்திடும் சூழ்ச்சி யெல்லாம்
முண்டிய சினத்தி னாலே
மொழிகுவன் அமைச்சன் தூது
பண்டுநன் முனியு ரைத்த
பலனும்வந் தொத்த தென்றான்.

கடல் கடந்து வந்துள்ள வன்னியனின் பக்கம் சென்ற துர்க்கை கூறியதையெல்லாம். அமைச்சன் வந்து கூறினான். "நாரதன் கூறிய வேளை வந்து விட்டது" என்றான்.

பண்டு - முன்பு. **நன்முனி** - நாரதன்.

629. வாதாவி "போருக்குப் போவேன்" எனல்

இடைச்சிபோல் உருவம் மன்னி
இயம்பிய துர்க்கை பான்மை

படப்பொதி ஆலம் தாங்கும்
பாரினில் கண்ட தில்லை
திடத்துடன் வந்த வீரன்
திறமையான் அறிய வேண்டும்
கடத்தினன் மதுவை யுண்டு
கடுஞ்சமர்க் கேகு வேனே.

"இடைச்சிபோல் உருவம் கொண்டு வந்த துர்க்கை கூறியதுபோல் படம் பொருந்திய ஆதிசேடனால் தாங்கப்பட்ட இப்பூமியில் எங்குமே நான் கண்டதில்லை. மனவுறுதியோடு வந்த வீரனின் திறமையை நான் காண வேண்டும். குடத்திலுள்ள மதுவை உண்டு கொடிய போருக்குப் புறப்படுவேன்" என்றான் வாதாவி.

மன்னி - தாங்கி. **இயம்பிய** - கூறிய. **படப்பொதி ஆலம்** - படத்தையுடைய விடமுடைய ஆதிசேடன். **கடம்** - குடம். **மது** - கள். **கடுஞ்சமர்** - கொடியபோர்.

630. அமைச்சன் "காளி துணையிருந்தால் நாம் வெற்றி பெறுவோம்" எனல்

ஏகுவேன் என்ற வார்த்தை
இசைந்தமந் திரியு மங்கு
பாகுபோல் மொழியின் மின்னாள்
பருமுலை அணையும் மன்னா
தோகையாம் அனலின் காளி
துணைநமக் கிருக்க வுன்றன்
வாகுதோள் வலியு றாது
வருந்தலை ஒழியு மென்றான்.

போருக்குச் செல்வேன் என்று கூறிய வார்த்தைக்கு ஒப்புக் கொண்ட மந்திரி "வெல்லப்பாகுபோல் இனிய மொழியையும் மின்னலை ஒத்த இடையையும், பெரிய மார்பையும் உடைய

பெண்களைச் சேரும் மன்னனே! அக்கினி காளி நமக்குத் துணையாக இருக்கும்போது வெற்றி பொருந்திய தோள் துன்புறாது. வருந்தாதே" என்றான்.

பரு - பெரிய. **அனல்** - தீ. அக்கினி. **வாகு** - வெற்றி

631. அசுரன் காளியை நினைத்தல்

சூழ்ச்சியை இசைப்பக் கேட்டுச்
சொல்லுவான் அவுணர் கோனும்
மாட்சியா யுரைத்தா யன்றே
அமைச்சனே நமது பக்கல்
காட்சிதந் திடவே காளிக்
கருளுவோம் வருவி ரென்ன
தாட்சியில் லாத முன்றில்
சமரியை வணங்கல் உற்றான்.

அமைச்சனின் அறிவுரை கேட்ட அசுரன் "நன்று கூறினீர் நம்மிடம் காட்சி கொடுக்கக் காளியை வேண்டுவோம்" என்று வாசல் வந்து காளியை மனத்தில் நினைத்தான்.

சூழ்ச்சி - அறிவுரை. **அவுணர்கோன்** - அசுரர் தலைவன். மாட்சி நன்மை. **தாட்சி** - தாழ்ச்சி. **சமரி** - துர்க்கை.

632. காளியை வேண்டுதல்

மந்திரி கௌரி முக்கண்
மயேஸ்வரி மதங்கி வீரி
கந்தரி அரியில் ஏறும்
தோகைமா மயிலே இந்நாள்
எந்தனைக் காக்கும் தாயே
இப்பதிக் கிடறும் ஈசன்
மைந்தர்கள் வந்தார் உந்தன்
மனப்படி மாளச் செய்வாய்.

"மந்திரியே! கௌரியே! மூன்று கண்ணுடைய மகேஸ்வரியே! மதங்கியே! வீரியே! கந்தரியே! சிம்ம வாகனம் ஏறும் தோகையுடைய மயில் போன்றவளே! என்னைக் காக்கும் தாயே!, இந்நகர் வந்திருக்கும் இறைவன் மகனை அழிப்பாய்"

அரி - சிங்கம். **மாளச் செய்வாய்** - கொல்வாய்.

633.

கருணைவைத் தென்னை யாளும்
காரணி கமலி நீலி
அருமையா யெனக்கு கந்த
அன்னையே அவனி தன்னை
ஒருகணை அதனால் வீழ்த்தி
உவரிமேற் போடு வேனென்
றரன்மகன் கொதித்து வந்தான்
அடியனைக் காரும் என்றான்.

"கருணையோடு என்னை ஆளும் கமலியே! நீலியே! அருமை அன்னையே! இந்நகரை ஒரம்பால் வீழ்த்திக் கடலில் போடுவேன் என்று சிவன் மகன் வந்தான். என்னைக் காப்பாற்று" என்று வாதாவி காளியிடம் வேண்டினான்.

அவனி - உலகம். இங்கு அசுரன் நகரம். **கணை** - அம்பு. **உவரி** - கடல். **அரன்** - சிவன்.

634. காளி ஆறுதல் கூறுதல்

என்றுரை மனத்தில் ஓர்ந்தே
இயம்புவள் ஆவி மன்னா
குன்றுபோல் புயமும் துன்னக்
கோதிலா துன்னைக் காப்பேன்
மன்றலை அணிவல் உந்தன்
மனத்துயர் அகற்று மென்று

வென்றிவேல் விமலி சொல்ல
வேந்தனும் பணிந்து ரைப்பான்.

அரக்கன் கூறியதைக் கேட்டு, "குன்றுபோன்ற உன்தோள் வெற்றி பெறுமாறு குற்றமின்றி உன்னைக் காப்பேன். வெற்றிமாலை அணிவேன். உன் மனத்துயர் நீக்கு" என்று வெற்றி பொருந்திய வேலையுடைய காளி சொல்ல அரசனும் பணிவோடு கூறுவான்.

கோது - குற்றம். **மன்றல்** - மாலை. **விமலி** - குற்றமற்றவள், காளி.

635. நான் உனதுபக்கம் வருவேன் எனல்

வீரனுக் குகந்த துர்க்கை
மேவினள் அவன்பின் னாக
தீரனா மெனது பக்கல்
தேவிநீ வருவாய் என்று
கூறிய மாற்ற மெல்லாம்
கொற்றியும் அறிந்து மன்னா
போரினில் உனது பக்கம்
புகழ்ந்துயான் வருவேன் என்றாள்.

"வன்னிய வீரனுக்குத் துர்க்கை துணையாக வருகிறாள். தீரனாகிய என்னுடைய துணையாக நீ வா" என்று கூறினான் வாதாவி. "அதனை அறிந்த காளி போரில் நான் உனது பக்கம் வருகிறேன் கவலையுறாதே" என்றாள்.

மாற்றம் - சொல். **கொற்றி** - காளி

636. வாதாவி மகிழ்தல், வன்னியன் அரனை நினைத்தல்

அம்மையார் உரைத்த வாய்மை
அவுணர்கோன் உளம்பூ ரிக்க

சம்மதி யாகிக் கோயில்
சார்ந்தனன் அரனார் ஈன்ற
வெம்மையாம் வீரன் தானும்
மிகுத்திட விண்ணோர் சூழ
செம்மலி அரனை நோக்கிச்
செபித்திருந் தானப் போதில்.

காளி உரைத்ததைக் கேட்டு வாதாவி மனம் மகிழ்ந்தான் சம்மதித்து அரண்மனை அடைந்தான். சிவன் ஈன்ற அக்கினி வீரனும் தேவர்கள் சூழ அரனைச் செபித்தான். அப்போது,

அம்மையார் - காளி. **அவுணர்கோன்** - அசுரர் தலைவன். **பூரிக்க** - மகிழ்ச்சியடைந்து. **சம்மதியாகி** - ஒப்புக்கொண்டு. **கோயில்** - அரண்மனை. **சார்ந்தனன்** - அடைந்தான். **அரன்** - சிவன். **ஈன்ற** - பெற்ற. **வெம்மை** - அக்கினி. **விண்ணோர்** - தேவர்.

637. வன்னிய வீரன் படை முழக்கம் வாதாவி கேட்டல்

அக்கரை ஏகும் வீரர்
ஆர்ப்பரித் தொலிக்கும் பேரி
மிக்கவே யதிர வானும்
மிகுந்தபேய்க் குரலின் சத்தம்
திக்கெனச் சூறை கொண்டு
செயல்பெறும் அவுணன் காதில்
தக்கவே மனம்து டித்துத்
தாட்டியாய் உரைக்க லுற்றான்.

அக்கரையில் புறப்படும் வீரனின் முரசு முழக்கம் மிகுந்து ஒலிக்க, பேய்களின் கூக்குரல் வானை முட்ட, எட்டுத் திசையும் கொள்ளையடித்த அசுரன் காதில் விழுந்த ஒலி கேட்டு மனம் துடித்துக் கோபத்தோடு கூறத்தொடங்கினான்.

பேரி - பெரிய முரசு. **சூறை** - கொள்ளை. **தாட்டி** - ஆத்திரம்.

638. "எதிரி வராத நம் ஊரில் வீரனின் பேரி சத்தம் நுழைந்தது எவ்வாறு?" என வாதாவி கேட்டல்

மதியுடை அமைச்சரே என்றன்
மாய்கையாம் பதியில் வேறோர்
எதிரிலா வாக மன்னும்
எதிரிலா வீரன் பேரி
அதிரநற் காதில் தைத்தது
அறிந்துரை செப்பு மென்னா
மதியிலா அவுண னுக்கே
மந்திரி உரைக்க லுற்றான்.

"அறிவுடைய அமைச்சர்களே! மாயம் நிறைந்த நம் முடைய ஊரில் எதிரிகளே வரமாட்டார்களே! அப்படி இருக்கும் போது இணையற்ற வீரன் என்று சொல்லப்பட்ட வன்னியனின் பேரிகை முழக்கம் காதைத் துளைக்கிறது எப்படி? அறிந்து கூறும்" என்றான் வாதாவி. அறிவற்ற அவ்வாதாவிக்கு அமைச்சர் கூறுவான்.

மதி - அறிவு. **பதி** - நகரம். **மாய்கை** - மாயை. **பேரி** - பேரிகை. **செப்பும்** - சொல்லும்.

639. "வன்னியவீரன் வந்து விட்டான்" என அமைச்சன் கூறுதல்

மடங்கவே றனையாய் ஒன்று
வழுத்துலன் தவத்தோன் சொன்ன
திடங்களைப் பழுதா மென்று
சினத்தது நமது மெய்யா
படர்ந்தது பரமன் சேயின்
படைஇப் பதியை நாடி

அடர்ந்தன ஒற்ற ராலே
அறிவது திண்ணம் தானே.

"ஆண்சிங்கம் போன்றவனே! நாரதன் சொன்ன வார்த்தைகளைக் குற்றமென்று கோபித்தீரே! அது உண்மையாகி விட்டது. சிவன் மகனின் படைகள் இவ்வூரை அடைந்து விட்டன. ஒற்றரால் உண்மை அறிவோம்" என்றான் அமைச்சன்

மடங்கல் - சிங்கம். **ஏறு** - ஆண். **தவத்தோன்** - நாரதன். **பழுது** - குற்றம். **சேய்** - மகன்.

640. "சிவனுக்கும் அழிவு காலம் வந்துவிட்டது" வாதாவி கூறுதல்

அப்பொழுது அவுணர் கோனும்
அனல்விழி பொறிப றக்க
செப்புவான் நமது சேனை
திறமது தெளிந்தி டாமல்
மைப்படி கண்ட தொண்டன்
மைந்தன் மறதி விண்டே
வைப்பனோ அவதி காலம்
மயேசனும் கடந்த தென்றான்.

இதைக் கேட்ட வாதாவி கண்களில் பொறி பறக்க "நம்முடைய படைபலம் தெரியாமல் நீலகண்டன் புதல்வர்கள் இங்கு வந்தார்கள், சிவனுக்கும் துன்ப காலம் வந்து விட்டது போலும்" எனச் சீறினான்.

மை - கருமை. **படி** - படிந்த. **அவதி** - துன்பம்.

641. "நாரதன் வந்து சொன்னபோது அலட்சியமாய் இருந்து விட்டோம்" எனல்

நாரதன் உரைத்த போது
நாரினால் சேர்த்தி டாமல்

சோரவே இருந்த நம்மால்
துகளுவந் துதித்த(து) அந்தோ
பாரினைச் சூறை கொண்ட
பலமிருந் தென்ன பெற்றோம்
பேருள அரசர் இல்லாப்
புவியெனப் பேச லொக்கும்.

"நாரதன் கூறிய போதே அவனை வதைக்காமல் அலட்சியமாயிருந்து விட்டோம். இப்போது குற்றம் வந்து சேர்ந்து விட்டது. உலகமெல்லாம் கொள்ளையடித்து என்ன பயன்? பெயர் இல்லா அரசன் என்று உலகம் பழிக்கும்" என்றான் வாதாவி.

நாரினால் - கயிற்றால். **சோர** - அலட்சியமாக **துகள்** - குற்றம். **பார்** - உலகம். **சூறை**- கொள்ளை.

642. "மானிடர் சானகியைச் சிறை மீட்டதை இன்று உணர்ந்தேன்" எனல்

மானிடர் ஆண்டு நூறு
வலுத்ததே கங்கள் எல்லாம்
வானுறை ஆழி புக்கு
மந்திரி முதலோர் பண்டு
கானகக் குரங்கால் மாய்த்துக்
கடலினை அணையாய்க் கட்டி
சானகிச் சிறையை மீட்ட
சரிதைநூல் உணர்ந்தேன் அம்மா.

"நூறு வயது வாழும் உடலுடைய மனிதர்கள். கடலில் புகுந்து அணைகட்டிக் காட்டுக் குரங்குகள் உதவியால் சானகியைச் சிறை மீட்டு அசுரர்களை அழித்த வரலாற்றை இன்று மெய்யென உணர்ந்தேன்" என்றான்.

ஆழி - கடல். **பண்டு** - முன்பு. **கானக** - காட்டு. **சரிதை** - வரலாறு.

643. வன்னிய வீரனைப் புகழ்தல்

நரனென நவிற்ற லாகா
நாரிபா கனும ளித்த
வரமிகுத் தவரைத் தேவ
மக்களால் அஞ்ச வானோர்
அரசனும் மகளை ஈந்தது
ஆகையால் அமரர்க் கெல்லாம்
சூரனாம் இவனாம் எங்கும்
துதிவிளங்கிடுவ தென்றான்.

"இவனை மனிதன் என்று சொல்லக் கூடாது உமையொரு பாகன் அளித்த வரத்தால் தேவரும் மனிதரும் அஞ்சத்தக்க வலிமை பெற்றவன். ஆதலால்தான் தேவேந்திரனும் தன் மகளைக் கொடுத்தான். எனவே இவன் சூராதி, சூரனாக இருக்க வேண்டும்" என்றான்.

நரன் - மனிதன். **நாரி** - பெண், உமை. **வானோர் அரசன்** - இந்திரன். **அமரர்** - தேவர். **துதி** - புகழ்.

644. வன்னியவீரன் பற்றி அறிந்து வர தூதனுப்புதல்

அலைகடல் அணையு மன்றி
ஆண்மையாற் பரவை தாண்டும்
வல்வினை கள்போ மென்று
வானிடி என்னக் கூவி
நலமுள வேந்தன் நானே
நரர்புகழ் அறிவன் என்றே

பலமறி யொருத்த ருக்குப்
பான்மையாய் உரைக்க லுற்றான்.

"அணை எதுவுமில்லாமல் அலைகடலை ஆண்மையோடு தாண்டிய இந்தத் தீவினையை அழிப்போம்" என்று உரக்க இடிபோல் கூவினான் வாதாவி. "பலம் பொருந்திய வேந்தனான நான் இம்மானிடர் புகழை அறிய வேண்டும்" என்று நினைத்து ஒரு தூதுவனை அழைத்துக் கூறத் தொடங்கினான்.

பரவை - கடல். **நரர்** - மானிடர்.

645. ஒற்றன் வன்னிய வீரனிடம் செல்லுதல்

திணிபுய மிகுந்த ஒற்றா
சிவனளி சேயின் பக்கல்
கணிதமாம் படையின் தீரம்
கண்டிங்கண் உரையாய் என்ன
இணையிலா அவுணன் பாதம்
இறைஞ்சியே விடைகொண் டேகி
தணிவிலா வன்னிய பூபன்
சாரலில் சார்ந்தான் மாதோ.

அசுரன், "வலிமை மிகுந்த தோள்களையுடைய ஒற்றனே! அச்சிவன் மகனிடம் சென்று அவன் படைபலத்தை அறிந்துவந்து சொல்" என்றான். ஒற்றனும் இணையற்ற வாதாவியின் பாதம் வணங்கி, விடை பெற்று வன்னிய வீரன் தங்கியிருந்த இடம்சென்று சேர்ந்தான்.

திணி - வலிமை. **கணிதமாய்** - கணக்காக. **சாரல்** - இடம்.

646. வன்னிய வீரன் படைகளைக் காணுதல்

கதிப்புறும் இலக்கம் வீரர்
கடுமையாம் பேயி னங்கள்

உதித்திடும் விழியில் தீயும்
உம்பர்கோன் உளக்க ளிப்பும்
மதித்திடா முடிபு னைந்த
வன்னிய பூபன் வெற்பும்
கொதித்தசெஞ் சரமும் கண்டு
குற்றம்வந் துற்ற தென்றான்.

இலட்சம் வீரர்களின் கொடுமையையும், பேய்க் கூட்டங்களின் விழியில் நெருப்பையும், தேவர்களின் மனமகிழ்ச்சியையும், மதிக்க முடியாத பெருமையுடைய முடி சூடிய வன்னிய வீரனின் மலை போன்ற வில்லையும், அம்புகளையும் கண்ட ஒற்றன் "ஆ! தீங்கு வந்து விட்டது" என்றான்.

உம்பர் - தேவர். **உம்பர்கோன்** - தேவர் தலைவன், இந்திரன். **வெற்பு** - மலை. **சரம்** - அம்பு.

647. உருத்திர வன்னியன் தூதனை யாரெனக் கேட்டலும் தூதன் விடை கூறுதலும்

தூதனை யரசன் கண்டு
துரிதமாய் அழைத்து நீயார்
தீதுசெய் அவுணர் தந்த
சேதியேது உரைசெய் என்ன
பாதமும் பணிந்து மன்னா
பலத்தவா தாவி சூரன்
தூதனென் பெயரு முண்டன்
தூயனே எனவு ரைத்தான்.

வந்த தூதனைப் பார்த்து வன்னிய ராசன் விரைந்து அவனை அழைத்து "நீ யார்? தீமையுடைய அரக்கர் சொன்ன செய்தி என்ன?" என்று கேட்டான். தூதனும் வன்னியன் பாதம் பணிந்து "தூயவனே! மன்னா! பலமுடைய வாதாவி அசுரனின் தூதன் யான், என் பெயர் முண்டன்" என்றான்.

துரிதம் - விரைந்து. **உரைசெய்** - கூறு

648. வாதாவி பற்றித் தூதன் கூறுதல்

விந்தையாம் தூதன் சொன்ன
விதத்தினால் அவுணர் கோனும்
சிந்தையிற் றுயர மாகித்
தேவர்கள் முரசொ லிப்ப
நிந்தையை அறிவ தென்றே
நிருபனும் அளிக்கப் பின்னும்
உந்தனற் பாதம் கண்டேன்
உம்பர்கள் அரசே என்றான்.

"தேவர்களுக்கரசனே! நாரதன் சொன்ன தூதால் துயரம் அடைந்த வாதாவி தேவர்களின் முரசொலி கேட்டு, செய்தி அறிந்துவரச் சொன்னான். உனது பாதம் கண்டேன்" என்று கூறினான் தூதன்.

அவுணர்கோன் - அரக்கர் தலைவன். **நிருபன்** - அரக்கன். **உம்பர்கள்** - தேவர்கள்

649. ஒற்றனிடம் வன்னியன் கூறுதல்

ஒற்றனு முரைப்ப வீரன்
உரைப்பன் வாதாவி சூரன்
கற்றைவார் சடையோ னான
கண்ணுதல் எந்தன் தந்தை
புத்தியால் புகழ நீந்தி
பூதலம் அனைத்தும் சூறை
பெற்றனன் அவனை வாய்க்கப்
பெருமையா யுற்றே மென்றான்.

வாதாவியின் ஒற்றன் கூறியதைக் கேட்ட வன்னிய வீரன். "சடைமுடியோனான, நெற்றிக்கண்ணுடைய சிவன் என் தந்தை

அவனிடம் பெற்ற வரத்தால் வாதாவி சூரன் செருக்கடைந்து பூமியனைத்தையும் ஏழுலகையும் கொள்ளை யடித்தான். அவனை அழிப்பதற்கு வந்ததை நான் பெருமையாய்க் கருதுகிறேன்" என்றான்.

கண்ணுதல்- நெற்றிக்கண்ணுடைய சிவன். **நுதல்** - நெற்றி.

650. வாதாவியின் கொடுமையைக் கூறுதல்

வானவர்க் கிடர ளித்தான்
வளமெலாஞ் சூறை கண்டான்
தேனெனும் அரம்பை மாதைச்
சேடிய ரெனம டித்தான்
தானவர் புகழும் மாலை
தனபதி பணிசெய் யென்றான்
ஈனனாம் அவன்தன் ஆண்மை
இதயத்தில் இருத்தி னேனால்.

தேவர்களுக்குத் துன்பம் அளித்தான். அவர்களுடைய வளத்தையெல்லாம் கொள்ளை கொண்டான். தேன் போன்ற தேவ மாதரைப் பணிப்பெண்களாக வைத்துக் கொண்டான். தேவர்கள் கொண்டாடும் திருமாலையும், குபேரனையும் ஏவலராக்கினான். இழிந்த அவனுடைய ஆண்மையை மனத்தில் இருத்தியுள்ளேன்.

இடர் - துன்பம். **அரம்பை** - தேவமாதர். **சேடி** - பணிப்பெண். **தனபதி** - குபேரன். **ஈனன்** - இழிவானவன்.

651. நாரதனைத் தூதனுப்பினேன் எனல்

நாரத முனியால் தூது
நவின்றனன் அவனும் சென்று
பாரினில் சூறைசெய் யாமல்
பரிவாய் அரசர் நீதி
தீரமாய் உனது பாரைப்
புரப்பது செங்கோல் வானோர்

பேரினில் பகைசெய் யாமல்
பெருமையா யிருப்ப் வென்றே.

நாரத முனிவரைத் தூது அனுப்பினேன். அவரும் சென்று. 'உலகைக் கொள்ளை அடிக்காமல் உன்னுடைய நாட்டை மட்டும் அன்போடு காப்பாய் தேவர்களோடு போரிடாதே' என்று கூறினார்.

நவின்றனன் - கூறினேன். **பார்** - பூமி. **சூரை** - கொள்ளை. **வானோர்** - தேவர்.

652. நான்தான் வீரவன்னியன் எனல்

உரைத்தனன் தூதா கேளாய்
உரம்பெறு சமர்செய் யென்ற
வரத்திறம் அறிய வேண்டி
வந்தனன் மாயன் காணா
கருநிறக் கண்டத் தண்ணல்
கழலிணை பரவி வாளி
திருத்தமாய் அளிக்கப் பெற்ற
சிலைமன்னன் யானே என்றான்.

"தூதனே! கேள். போர்புரி யென்று அவன் கூறிய வரத்தை அறிவதற்காக வந்தேன். திருமாலால் காண முடியாத பாதங்களையுடைய நீலகண்டன் திருவடிகளை வணங்கி, அம்பும் வன்னியச் சிலையும் பெற்ற வன்னிய வீரன் நானே" என்றான்.

உரம் - வலிமை. **சமர்** - போர். **மாயன்** - திருமால் **கண்டம்** - கழுத்து. **கழல்** - கழல்கட்டிய பாதம். **இணை** - இரண்டு. **பரவி** - துதித்து. **வாளி** - அம்பு. **சிலை** - வில்.

653. துர்க்கை வந்தும் உணர்ந்திலன் எனல்

அந்தரி நிமலி யெங்கள்
அன்னையின் தானை சூழ

சிந்துவும் சுவறச் செய்து
செயமுர சறைந்து வந்தேன்
கந்தனின் முன்னோன் சூழ்ச்சி
கருத்தினில் உணர்ந்து தேவி
வந்தவன் பாலுரைத்த
வகையனைத் துணரி லானே.

"எங்கள் அன்னையாகிய துர்க்கையின் பூதப்படை சூழக் கடலை வற்றச் செய்து வெற்றி முரசு கொட்டி வந்து முருகனின் அண்ணனாகிய விநாயகனிடம் அறிவுரை பெற்றேன். துர்க்கை வாதாவி நகரம் வந்து மோர் விற்று அவனிடம் கூறிய விபரங்களெல்லாம் அவன் உணரவில்லை" என்றான்.

அந்தரி, நிமலி - துர்க்கை. **தானை** - படை. **சிந்து** - கடல். **சுவற** - வற்ற. **கந்தனின் முன்னோன்** - முருகனின் அண்ணன், விநாயகன். **சூழ்ச்சி** - அறிவுரை. **தேவி** - துர்க்கை.

654. "தேவர்களிடம் பகையை விட்டால் வாதாவியை விட்டுவிடுவேன்" எனல்.

இரத்தினா கரம்பு ரக்கும்
இறைஅவு ணாதி பக்கல்
திறமுற உரைப்பாய் வானில்
செழித்திடும் புதுமை யான
தருவினை அளித்து பாதம்
தனைத்தொழுது இகலை விட்டால்
உரமுள சரத்தி னாலே
உனைத்தொடே னென்று ரைத்தான்.

இரத்தினாகரப் பட்டணத்தைக் காக்கும் வாதாவியிடத்தில் "வானிலுள்ள கற்பகத் தரு முதலிய செல்வங்களைத் தேவர்களிடம்

திருப்பிக் கொடுத்து தேவேந்திரன் பாதம் வணங்கிப் பகையை விட்டால் அம்பினால் உன்னை வதைக்கமாட்டேன் என்று சொல்" என்றான் வீரவன்னியன்.

புரக்கும் - காக்கும். **இறை அவுனாதி** - அரசன் வாதாவி. **தரு** - கற்பகம். **இகல்** - பகை **சரம்** - அம்பு.

655. "சண்டை செய்தால் அழிப்பேன்" எனல்

சாற்றிய உரையு ணர்ந்தே
சம்மதி ஆனான் ஆகில்
தீற்றி யாவரும் செய்யும்
தீமையை அடைந்தால் ஆக்கை
கூற்றுவ ருலகில் ஏகக்
கொருப்படைக் குழாம்து திக்க
பாற்றிவ னன்பால் உற்றால்
பலனளித் திடுவன் என்றான்.

"நான் சொன்னதைக் கேட்டுச் சம்மதித்தான் ஆகில் அவனை இங்கு அழைத்து வா, என்படை போற்ற, அவனுக்கு அபயம் அளிப்பேன். மீறி அவன் தீமை செய்தால் அவனை எமனுலகு அனுப்புவேன்" என்றான் வீர வன்னியன்.

சாற்றிய - சொல்லிய. **உரை** - பேச்சு. **சம்மதி** - இசைவு. **ஆக்கை** - உடல். **கூற்றுவன்** - எமன். **குழாம்** - கூட்டம்.

656. தூதுவன் வாதாவியிடம் சென்று செய்தி கூறுதல்

மேவலர் அடக்கும் செய்ய
வேந்தனும் உரைப்பக் கேட்டு
ஏவலன் வேக மாக
இயக்கர்கோன் சமுகம் நாடி

காவலர் கயிலை ஆளி
களித்தநல் புதல்வர் வாய்மை
ஆவலால் கேளு மென்றே
அறைந்தவு ணாதி பக்கல்.

பகைவர்களை அடக்கக் கூடிய வன்னிய வீரன் கூறியதைக் கேட்ட தூதுவன் வாதாவியிடம் விரைந்து சென்று "கயிலை நாயகன் மகன் கூறியதைக் கேளுங்கள்" என்றான்.

மேவலர் - பகைவர். **வேந்தன்** - இங்கு வீரவன்னியன் **ஏவலன்** - தூதுவன். **இயக்கர்கோன்** - அசுரர் தலைவன். **சமுகம்** - சபை. **கயிலை ஆளி** - சிவன்.

657. தூதன் உரை கேட்ட வாதாவி சினந்து "போருக்கு வரச்சொல்" எனல்

கேட்டனன் அவுணன் உள்ளம்
கெடுமதி கோபம் ஆகி
தாட்டியாய் உரைஅ ளித்தான்
தனயனாம் சிவன்தன் பாலன்
வாட்டவோ வந்தான் அந்த
மானிடன் முடியைக் கொய்து
தாட்டியாய் வருவேன் இன்று
தளம்வரச் செய்வாய் என்றான்.

அசுரன் கேட்டான். அறிவு கெட்டதினால் சினம் அடைந்து "என்னைத் துன்புறுத்தவா அவன் வந்தான்? அந்தச் சிவன் மகனைப் போருக்கு வரச் சொல். அவன் தலையை வெட்டுவேன்" என்று ஆணையிட்டான்.

பணித்தான் - கட்டளையிட்டான். **தாட்டியாய்** - கம்பீரமாய். **தளம்** - போர்க்களம்.

658. தம்பிகளையும் புதல்வர்களையும் அழைத்தல்

தம்பிவார தனேம கோனெனத்
தழைத்த குண்டலனே யுள்ளம்
நம்பியம கோத ராயென்
நற்றவ மகனே கெம்பா
சம்புமா லிகனே கும்பா
தழைகஜ முகனே உங்கள்
கம்பிதத் தாலே துன்ன
கணத்தினில் வருக வென்றான்.

"தம்பிகளே! வாரதனே! மகோனே! குண்டலனே! என் உள்ளம் நம்பும் மகோதரனே! புதல்வர்களே! கெம்பா! சம்புமாலி! கும்பா! கஜமுகனே! ஒரு கணத்தில் வருக!" என்றான்.

659. அமைச்சர்களைப் போருக்குப் புறப்படக் கூறுதல்

அமைச்சர்காள் நமது தானை
அடங்கலும் அமரின் கோலம்
அமைத்தொருப் படுவீர் பேரி
அதிர்ந்திட என்று ரைப்ப
இமைப்பொழு தினில்த ளங்கள்
எங்கிலும் பரவக் கண்டு
தமக்கெதி ரில்லா சூரன்
தைரியம் உரைக்க லுற்றான்.

"அமைச்சர்களே! நமது படைகளைப் போர்க்கோலம் செய்யுங்கள்! முரசறையுங்கள்" என்று வாதாவி கூற ஒரு நொடியில் படைகள் எங்கும் பரவுவதைப் பார்த்து தனக்குப் பகையில்லாத வாதாவி படைகளுக்கு வீரம் ஊட்டத் தொடங்கினான்.

தானை - படை. **அமர்** - போர். **பேரி** - முரசு. **தளம்** - படை. **சூரன்** - அசுரன்.

660. வன்னிய வீரனைக் கொல்லும்படி ஆணையிடுதல்

தேசிகன் சுக்ரன் தந்த
திரள்படைக் குழாங்கள் தீரம்
ஈசனான் மிகவும் காணா(து)
இயம்பினன் அவனைக் கொல்வீர்
நேசமிக் குடையீ ரென்றே
நிருபமும் அளிக்கத் தம்பி
பாசவா ரதனும் கண்டு
பரிந்துரை பகர லுற்றான்.

"நம்முடைய குரு சுக்ராசாரியார் அளித்த மிகப்பெரிய படைக் கூட்டத்தை வன்னிய வீரன் காணாததால் இவ்வாறு கூறினான். என்மீது அன்பு கொண்டவரே அவனைக் கொல்லுங்கள்" என்று ஓலை கொடுக்க, பாசமிக்க தம்பி வாரதனும் அதனைக் கண்டு கூறத் தொடங்கினான்.

தேசிகன் - குரு. **ஈசனான்** - வீரவன்னியன். **நிருபம்** - கடிதம், ஓலை. **பரிந்துரை** - அன்புடன் கூறிய உரை.

661. வாரதன் "படைவேண்டாம் நான் மட்டும் போகிறேன்" எனல்

வரமிகு மன்னா ஒன்று
வழுத்துவன் மகிழ்ந்து கேளும்
நரரின்மேல் படையெடுப்ப
நானிலத் தோர்ந கைப்பார்
உரமிகும் எனது வாளி
ஒன்றினால் வெல்வன் சேனைத்

திரள்வர வேண்டா மென்று
தீயனுக் குரைப்ப தானான்.

"மிகுந்த வரங்கள் பெற்ற மன்னனே! ஒன்று கூறுவேன் மகிழ்ச்சியோடு கேளுங்கள். மனிதர் மீது படையெடுத்தால் இப்பூவுலகில் சிரிப்பார்கள். என்னுடைய வலிய அம்பு ஒன்றினாலேயே வெல்லுவேன். இத்தனை படைவேண்டாம்" என்று கூறினான் வாரதன்.

வழுத்துவன் - கூறுவேன். **நரர்** - மனிதர். **நானிலத்தோர்** - பூமியல் உள்ளவர். **உரம்** - வலிமை. **வாளி** - அம்பு. **சேனைத்திரள்** - படைக் கூட்டம். **தீயன்** - தீயவன், வாதாவி.

662. "எனக்கு ஒரு வெள்ளம் சேனை கொடு" எனல்

வரையினில் குலவும் ஈசன்
மக்களோ லக்கம் வீரர்
திரமதாய்ச் செயிப்போ மென்னச்
சிந்தையில் தெளிந்து ரைத்தான்
ஒருகணை அதனால் வெல்வன்
உதவியோர் வெள்ளம் வீரர்
தருவையென் றுரைத்த சீத்தி
தம்பிபால் இசைப்பன் மாதோ.

"கயிலை மலையில் இருக்கும் சிவனுடைய வீரர் லட்சம்பேர். அவர்களை எளிதாக வெல்வேன். என்னுடைய ஓர் அம்பால் வன்னிய வீரனைக் கொல்வேன். எனக்கு உதவியாக ஒரு வெள்ளம் வீரர் தருவாயாக" என்று வாரதன் ஆராய்ந்து கூறத் தம்பியைப் பார்த்து வாதாவி சொல்வான்.

வரை - மலை. இங்கு கயிலை மலை **லக்கம்** - இலட்சம். **கணை** - அம்பு. சீத்தி - புகழுடைய.

663. வாதாவி சேனை அளித்தல்

மசகமேல் படையெ டுத்தல்
மனுநெறி இயற்கை யல்ல
நிசமுள மொழியு ரைத்த
நிலைமையினி லேகு மென்று
உசிதமா பணிகள் நல்கி
ஒருவெள்ளம் படையும் தேரும்
பிசகிடா தளிக்கப் பெற்றான்
பேய்மதி அவுணன் அன்றே.

"கொசுக்களின் மேல் படையெடுத்தல் மனுநீதியல்ல; உண்மை கூறினாய்; ஒரு நொடியில் புறப்படு." என்று ஆபரணங்களும் ஒரு வெள்ளம் படையும், தேரும் கொடுத்தான் பேயுள்ளம் படைத்த வாதாவி.

மசகம் - கொசு. **நிசம்** - உண்மை. **உசிதம்** - தேவையான. **பணி** ஆபரணம்.

664. வாரதன் தேரேறிப் புறப்படுதல்

பொருந்தும் மல்லருக் கேற்ற
பூமியெக் காளம் துன்ன
விரிந்ததேர்க் கொடிகள் ஆல
வட்டமும் விண்ணி லார்ப்ப
எரிந்தசெவ் விழியி யக்கர்
எப்புறம் ஆர்ப்ப ரிக்க
திறம்தரும் பூகம் பூண்ட
தேரின்மேல் ஏறிச் சென்றார்.

வீரர்களுக்கேற்ற பூமியில் எக்காளம் ஒலிக்கத் தேர்க்கொடிகளும் விருதுக் கொடிகளும் ஆகாயத்தில் பறக்க, சிவந்த

விழிகளையுடைய அரக்கர் எல்லாப் பக்கத்திலும் ஆரவாரம் செய்ய. பாக்குக் குலைகள் கட்டப் பட்ட தேரின்மேல் ஏறி வாரதன் புறப்பட்டான்.

மல்லர் - வீரர். **ஆலவட்டம்** - விருதுக் கொடி **இயக்கர்** - அரக்கர். **ஆர்ப்பரிக்க** - ஆரவாரம் செய்ய. **பூகம்** - பாக்கு.

19. முதல் நாள் வாரதன் யுத்தச் சருக்கம்

665. சனகர் வாதாவி மடிந்த கதையைக் கூறத் தொடங்குதல்

ஆதியாய் அறம்வ ளர்த்த
அம்பிகை மலர்த்தா ளேத்தி
சோதிமா முடிபு னைந்த
சுகவீர வன்னி யன்தன்
கோதிலாச் சரங்கள் ஏவி
கொடும்பகை அவுணர் உள்ளந்
தீதுசெய் புனிதக் கதையைச்
செப்புவன் சனகன் மாதோ.

முப்பத்திரண்டு அறமும் வளர்த்த உமையம்மையின் மலர்போன்ற பாதங்களை வணங்கி, ஒளி பொருந்திய முடியை அணிந்த வன்னிய வீரன், குற்றமற்ற அம்புகளை ஏவி, கொடிய பகைவரான அரக்கர்களின் உள்ளம் துன்புறுமாறு வதைத்த வரலாற்றைச் சனகன் கூறுவான்.

ஆதி - முதல். **சோதி** - ஒளி. **கோது** - குற்றம். **சரம்** - அம்பு. **அவுணர்** - அரக்கர். **செப்புவன்** - கூறுவான்.

666. நாரதன் வாரதன் வருவதை வன்னியனுக் குரைத்தல்

நாரதன் அவுணன் வார
நலத்தினை மனத்தில் ஓர்ந்து

வீரவன் னியன்பா லேகி
வேந்தனே அவுணன் தம்பி
வாரதன் அமரின் கோலம்
மண்டியிங் குறைப்ப லுற்றான்
தீரனே உனது கோலம்
செய்யென உரைத்தான் அன்றே.

நாரதன், வாரதன் வரும் தன்மையை மனத்தில் ஆராய்ந்து வீர வன்னியனிடத்தில் சென்று "அரசனே! அரக்கன் தம்பி வாரதன் போர்க்கோலம் பூண்டு இங்கு வருகிறான். நீயும் போர்க்கோலம் பூணுக" என்று கூறினார்.

வார - வருகிற. **நலம்** - தன்மை. **அமர்** - போர் **மாருதன்** - வாரதன்.

667. வன்னிய வீரர் போர்க்கோலம் பூணுதல்

பஞ்ச வன்னியர் இயக்கன்
படையுடன் வருகை கண்டே
செஞ்சடா டவியை ஏத்திச்
சிவதிரு நீறு சாத்தி
நஞ்சணி மிடற்றோன் தாளை
நாவினால் பரவி ஏத்தி
வெஞ்சமர்க் கோலம் கொண்டார்
இலக்கவீ ரருமந் நாளில்.

ஐந்து வீர வன்னியரும் அரக்கன் படையுடன் வருவது கண்டு, சிவந்த சடையுடைய சிவபெருமானைப் பணிந்து, தீருநீறு அணிந்து, விடமுண்ட கழுத்தையுடைய சிவபெருமான் திருப்பாதங்களை நாவால் துதித்து, இலட்ச வீரர்களும் போர்க்கோலம், கொண்டார்கள்.

செஞ்சடாடவி - செம்மை + சடை + அடவி. சிவந்த சடையாகிய காடு. **நஞ்சணி** - விடத்தை அணியும் **மிடற்றான்** - கழுத்தையுடையவன் **பரவி, ஏத்தி** - துதித்து.

668. வன்னியன் தேரேறுதல்

கருடவி யூகமே முன்னில்
கடலென முரசொ லிப்ப
விருதுபம் பைகளு மார்ப்ப
விண்ணவர் செயங்கள் கூற
தருமதே வதைகள் வாழ்த்த
தயங்கிடா படைகெர்ச் சிக்க
பெரியதோர் இரதம் ஏறி
மேருவில் கரம்பி டித்தான்.

கருடவியூகமாகப் படை முன்னேவர, முரசுகள் ஒலிக்க, வாழ்த்தொலிகள் விண்ணை முட்ட தேவர்கள் வெற்றி கூற, தருமதேவதை வாழ்த்த, படை முழங்க, பெரிய தேரில் ஏறிய வன்னிய வீரன், இமயமலை போன்ற பெரிய வில்லைக் கையில் பிடித்தான்.

கருடவியூகம் - கருடப் பறவைபோல் அமைக்கப்பட்ட அணி வகுப்பு. **செயங்கள்** - வாழ்த்துக்கள். **கெர்ச்சிக்க** - முழங்க. **இரதம்** - தேர்.

669. வாரதன் வருகை

அப்பொழுது அவுணர் சேனை
அதிர்ச்சியாக அரன்சேய் வீரர்
கப்பிய ஒலியாற் சத்தம்
கடலுற நீர்கள் வற்ற
செப்பிட விண்ணும் மண்ணும்
சிறந்தநால் திசைந டுங்க
மைப்படி கிரியாம் என்றே
வாரதன் வந்தான் அன்றே.

அப்பொழுது அசுரர் படைகள் அதிர்ச்சியுற, வன்னிய வீரர்கள் செய்த ஒலியால் கடல் நீர்வற்ற, ஆகாயமும், பூமியும், திசைகளும் நடுங்க, கரிபடிந்த மலைபோல வார்தன் வந்தான்.

கிரி - மலை.

670. உருத்திர வன்னியன் வந்தவன் யாரெனக் கேட்டலும் நாரதர் விடையும்

உருத்திர வன்னியன் கண்டே
உற்றநா ரதனை நோக்கி
கருக்கிரி யென்ன வந்த
வயவனா ரென்று கேட்க
திருத்தமாம் அமர சூரன்
திணிபுயச் சோதரர் நான்கில்
ஒருத்தன்வா ரதன்பேர் உள்ளோன்
உக்கிரம் உரைக்க லாகா.

வாரதனைக் கண்ட உருத்திர வன்னியன் நாரதரை நோக்கி "கரிய மலை போல் வந்த வீரனான இவன் யார்" எனக் கேட்க, "வாதாவியின் தம்பிகள் நால்வரில் ஒருவன் இவன், வாரதன் என்று பெயர் இவனுடைய கொடுமையை உரைக்க முடியாது.

கருக்கிரி - கரியமலை. **வயவன்** - வீரன். **சோதரர்** - சகோதரர். **உக்கிரம்** - கொடுமை.

671. நாரதர் வாரதன் கொடுமையைக் கூறுதல்

விண்ணொரு கரத்தால் சாய்ப்பான்
மேருவைப் பந்தா மென்ன
மண்ணினில் சூழலா லெற்றி
வருணனைப் பிடித்து ருக்கி
உன்னுமவ் மீனி னத்தை
உலகினைச் சூறை கொள்வன்
அண்ணலின் மகவே உந்தன்
அருங்கலை துணிக்கு மென்றே.

"ஆகாயத்தை ஒரு கையால் சாய்ப்பான். மேருமலையைப் பந்துபோல் மண்ணில் சுழற்றி எறிவான். வருணனாகிய கடலைப் பிடித்து உருக்கி மீன்கள் முழுவதும் உண்பான். உலகையே கொள்ளை அடிப்பான். சிவன் மகனே! உன்னுடைய அம்பினால் அவன் தலையை வெட்டுவாயாக"

வருணன் - கடல் தெய்வம். **மகவு** - மகன். **கலை** - அம்பு.

672. வாரதனும் வன்னியனும் போரிடுதல்

நன்றென சிரச சைத்து
நாரியை வளைக்கு மோசை
நின்றிடும் நிருதர் கேட்டு
நேமிய மெய்ந டுங்க
குன்றினைப் பிடுங்கி வீரன்
குழாங்களைச் சாட யூகம்
கண்டியே உடைய வந்த
கயவன்மேற் கடிந்தான் வீரன்.

"நல்லது" என்று கூறித் தலையசைத்த வன்னியன் வில்லை வளைக்கும் ஓசை கேட்ட அரக்கர்கள் உடல் நடுங்கினர். வாரதன் மலையைப் பிடுங்கி வன்னிய வீரர்களைத் தாக்கினான். கருட வியூகம் உடைந்தது. வாரதன்மேல் அம்பு விட்டான் வன்னிய வீரன்.

சிரசு - தலை. **நாரி** - வில். **நிருதர்** - அசுரர். **கடிந்தான்** - அம்பு விட்டான்.

673. வன்னிய வீரர் ஆயுதங்களை வீசுதல்

பற்கணம் கடித்து உள்ளம் பதறிடக்
கொக்கரித் துக்குதித் துத்தண் டாயுதம்
தக்க சூலம் தனுசக்கி ராயுதம்
மிக்க எய்தனர் விண்ணவர் வீரரே.

வன்னிய வீரர்கள் தங்களுடைய பல்லை நறுநறெனக் கடித்து. உள்ளம் பதற. ஆரவாரம் செய்து. குதித்து. தண்டாயுதம். சூலம். வில். சக்கரம் ஆகிய ஆயுதங்களை மிகுதியாக வீசினர்.

தனு - வில். **விண்ணவர் வீரர்** - வன்னிய வீரர்.

674. ஆகாயம் செந்நிற மாதல்

அரியுடன் கரியாக் கிரமம் கொண்டதென
நிருத ரானவர் நெருங்கி அமர்செய
விரியு மண்டர் விலங்கினர் விண்ணின்மேல்
குருதி யோடிக் குணதிசை ஒத்ததே.

சிங்கத்துடன் யானை மோதுவது போல் அசுரர் வன்னிய வீரருடன் நெருங்கிப் போர் செய்ய வன்னிய வீரரும் எதிர்த்துப் போரிட்டனர். அப்பொழுது ஆகாயத்தில் இரத்தம் பாயச் செந்நிறமாய்க் கீழ்வானத்தை ஒத்தது.

அரி - சிங்கம். **கரி** - யானை. **நிருதர்** - அரக்கர் **அமர்** - போர். **குருதி** - இரத்தம். **குணதிசை** - கிழக்குத் திசை

675. உடல்கள் மலைபோல் குவிதல்

வீர வீரரும் வேலவன் வீரரும்
சாரி சாரியாய்த் தாக்கினர் அத்திரம்
நீறு நிறுறென நேமி படிந்திட
மேரு வாக விளங்கி யிருந்ததே.

அரக்கன் வீரரும். வன்னிய வீரரும் ஒருவரையொருவர் ஆய்தத்தால் வரிசையாய்த் தாக்கினர். ஆய்தங்கள் எரிந்து சாம்பலாகிப் பூமியில் விழுந்து மலைபோல் குவிந்தன.

வேலவன் - வன்னியன். **சாரி** - வரிசை **அத்திரம்** - ஆயுதம். **நீறு** - சாம்பல் **நேமி** - பூமி. **மேரு** - மலை.

676. வன்னிய வீரர் அசுரர்மேல் அம்பெறிதல்

தோர்வை யின்றித் துகள்செய்யுஞ் சூரரின்
தீரம் கண்டு சினத்துடன் கைச்சிலை
நாரி யேற்றி நலத்த கணையினால்
வீரன் பாலர்மே வலர்மேல் எய்தார்.

அசுர வீரர் தோல்வியில்லாமல் போர் செய்யும் வீரம் பார்த்துக் கோபத்துடன் கையிலுள்ள வில்லினால் நாணேற்றி அவர்கள்மேல் அம்பெய்தனர் வீர வன்னியர்.

தோர்வை - தோல்வி. **துகள்** - பொடி. **சிலை** - வில். **நாரி** - கயிறு, நாண் **கணை** - அம்பு. **மேவலர்** - பகைவர்.

677. அசுரர் படைகளை வன்னியர் அழித்தல்

அக்கினிக் கணையால் அவுணன் படைகள்
நெக்கு விட்டு நிலத்தில் படியவும்
கொக்குவின் திரளைச் சாடும் ராசாளிபோல்
தக்க வன்னியர் தாட்டியாய்ச் சாடினார்.

தீக்கணையால் எரிந்து அசுரன் படைகள் கீழே சாய, கொக்குக் கூட்டங்களைச் சூறையாடும் ராசாளிப் பறவை போல் வன்னியர் ஆவேசத்துடன் அவர்களைத் தாக்கினர்.

கணை - அம்பு. **திரள்** - கூட்டம். **ராசாளி** - பெரிய கழுகு. **தாட்டி** - வலிமை, ஆவேசம், வெறி.

678. வாரதன் மனம் துடித்தல்

தொட்டி டும்கணை உள்ளம் துளைக்கவும்
பட்ட மாமரம் என்னப் படிந்தனர்
திட்ட வாருதி சேரும் குருதிகண்டு
துட்ட வாரதன் உள்ளம் துடித்தனன்.

வன்னிய வீரர் விட்ட அம்புகள் அசுரர்கள் உடல்களை ஊடுருவின. அசுரர் பட்டுப்போன மாமரம் போல் சாய்ந்தனர். கடலில் சேரும் ரத்தம் கண்டு கொடிய வாரதன் மனம் துடித்தான்.

வாருதி - கடல். **குருதி** - இரத்தம். **துட்ட** - தீய.

679. வாரதன் வன்னியன் குதிரைமேல் அம்புவிடல்

சூத னைத்தேர் துரிதாய் நடத்தென
கோத ரக்கன் கொதித்திரு வாளியை
நாத வீரன் மாவின் மேனாட்டிட
தாத விழ்மல ரென்னத் தணிந்ததே.

பாகனைத் தேரை வேகமாக ஓட்டு என ஆணையிட்ட வாரதன் வன்னிய வீரன் குதிரைமேல் அம்பு விட அது குதிரைமேல் மலரென விழுந்தது.

சூதன். - தேர்ப்பாகன். **துரிது** - வேகம். **கோது** - கொடிய. **வாளி** - அம்பு. **மா** - குதிரை. **தாது** - மகரந்தம், மணம்.

680. சுக்கிரனின் அத்திரத்தைக் கிருஷ்ணனின் அம்பு எதிர்த்தல்

கிருட்டி ணன்சிலை கெர்ச்சித் தவுணனை
அரிட்டம் செய்ய அனற்பொரி யண்டிட
சிருட்டியாற் சுக்ரன் ஈந்ததோர் செஞ்சரம்
அரிட்டம் செய்யா தவனி படிந்ததே.

கிருஷ்ண வன்னியனின் வில் பேரிரைச்சலுடன் வளைய, நெருப்பைக் கக்கிச் சென்ற அஸ்திரம் அசுரர்களை அழித்தது. ஆனால் சுக்கிராசாரியார் அளித்த அம்புகள் வன்னியரைத் தாக்க இயலாமல் பூமியில் விழுந்தன.

சிருட்டி - உண்டாக்குதல். **செஞ்சரம்** - நல்ல அம்பு **அவனி** - பூமி

681. வாரதன் தேர் பிளத்தல்

மாய னாக விளங்குவன் வாளியால்
பேயன் வாரதன் தேரும் பிளந்திட
ஆயி ரம்ரதம் ஏறும் அவுணனை
காயும் நாகக் கணையாற் கடிந்தனன்.

திருமாலைப் போல் விளங்கும் கிருஷ்ண வன்னியன் அம்பினால் பேய் போன்ற வாரதனின் தேர் பிளந்தது. மறுபடியும் மறுபடியும் ஆயிரம் தேரில் ஏறி வந்த அசுரன்மேல் கிருஷ்ண வன்னியன் பாம்புக் கணை விட்டான். தேர்கள் அழிந்தன.

மாயன் - திருமால். **வாளி** - அம்பு. **கணை** - அம்பு.

682. வாரதனின் வாள் அழிதல்

தேரும் இன்றிச் சிலைகள் இன்றியே
வீரவாள் ஒன்று வீசி எறிந்தனன்
தீர வாளைச் சிதைத்தொரு செஞ்சரம்
பார டர்ந்து பதைத்திட் ஏவினன்.

தேரும் இல்லாமல், வில்லும் இல்லாமல் நின்ற வாரதன் வீரவாளை வீசி எறிந்தான். அவனுடைய வீரவாளைக் கிருஷ்ண வன்னியன் அம்பு அழித்தது. உலகம் பதைக்கும்படி தீ அம்பு ஒன்றை ஏவினான் கிருஷ்ண வன்னியன்.

சிலை - வில். **சரம்** - அம்பு.

683. வாரதன் சிரம் அறுபடல்

பாரும் விண்ணும் படிந்தழல் மண்டிட
வாரதன் சிரம் மண்ணில் உருண்டிட
கூர ழற்கணை கொற்றவன் பாலினில்
சீருடன் செயங் கொண்டு சேர்ந்ததே.

கிருஷ்ண வன்னியன் ஏவிய அக்கினிக் கணை ஆகாயம் பூமி எங்கும் படிந்து நெருப்பைக் கக்க வாரதன் தலை மண்ணில் உருண்டது. நெருப்பு அம்பு வெற்றியுடன் திரும்பவும் கிருஷ்ண வன்னியனிடம் சென்று சேர்ந்தது.

பார் - பூமி. **விண்** - வானம். **சுழல்** - நெருப்பு. **அழற்கணை** - அக்கினி அஸ்திரம், தீக்கணை. **கொற்றவன்** - கிருஷ்ண வன்னியன். **செயம்** - வெற்றி.

684. தேவரும் சிவனும் மகிழ்தல்

கூற்றும் அஞ்சக் கொடுமைசெய் வாரதன்
தூற்றன் சேனை உயிரினைத் தூதர்கள்
சீற்றிக் கொன்றனர் தேவர் மகிழ்ந்தனர்
ஏற்று வாகனன் இன்பம் பொழிந்தனன்.

எமனும் அஞ்சக் கொடுமை செய்த வாரதனையும், அவனுடைய சேனைகளையும் வன்னிய வீரர் அழித்து விட்டனர். தேவர்கள் மகிழ்ந்தனர். காளை வாகனமுடைய சிவபெருமான் மகிழ்ச்சி அடைந்தார்.

கூற்றன் - எமன். **தூற்றன்** - தூர்த்தன் - கொடியவன். **ஏற்றுவாகனன்** - காளை வாகனமுடையவன்.

685. வன்னிய வீரர் மகிழ்ச்சி

உதவி யானவோர் வெள்ளம் தானையும்
பதித னாகிய வாரதன் பட்டனன்
அதிபன் வீரனின் தானையும் ஆர்ப்பரித்து
இதயம் தேறி இருந்தன ராமரோ.

கெட்டவனாகிய வாரதனும் அவனுக்கு உதவியாக வந்த ஒரு வெள்ளம் சேனையும். அழிந்தனர் என்று வன்னிய வீரனும் அவனுடைய படையும் ஆரவாரம் செய்து மனம் மகிழ்ந்தனர்.

தானை - படை. **பதிதன்** - கெட்டவன்.

686. பூதப்படைகளின் மகிழ்ச்சி

நாயும் பேயும் நரிகளும் காகமும்
தீய ராக்கதர் தசைக்களைத் தின்றிட
நாயகன் புடை ஆடினான் நாரணி
தூய பூதப் படைகள் சுகித்ததே.

கொடிய அரக்கர் பிணங்களை நாயும், பேயும், நரிகளும், காக்கைகளும் தின்றன. சிவன் நடுவில் ஆட துர்க்கையின் பூதப் படைகள் மகிழ்ந்தன.

நாரணி - துர்க்கை, **சுகித்தது** - மகிழ்ந்தன.

687. வன்னியன் விருந்தளித்தான் என மகிழ்தல்

ஓரிநாய் குரலொ லிப்ப
உவகைபே யினங்கள் ஆட
வாரதன் உடலைக் கவ்வி
மங்களக் கொடிகள் ஆட
வீரவன் னியன்ந மக்கே
விருந்தளித் தனனி வன்போல்
தீரனு முண்டோ வென்று
செயந்துதித் திருந்தனர் அன்றே.

நரிகள் ஊளையிட்டன; நாய்கள் குரைத்தன; பேய்கள் ஆடிக்கொண்டே வாரதன் உடலைக் கவ்வின. "மங்கலக் கொடிகள் ஆட வீர வன்னியன் நமக்கு விருந்தளித்தான்; இவன்போல் யாரும் உண்டோ?" என்று அவன் வெற்றியைப் பாடின.

ஓரி - நரி. **உவகை** - மகிழ்ச்சி

688. தூதர்கள் வாதாவியிடம் கூறுதல்

குருதிவெள் ளங்கள் ஓடிக்
குணதிசைக் கடலிற் சேர

விருதொடு முரசி னங்கள்
மிதந்திட அவுணர் ஓடம்
பெருமையாந் தெப்பம் என்னப்
பிதற்றிட வாய்மை ஏத்த
கருவிழி அதனால் கண்டே
கயவருக் குரைத்தா ரன்றே.

இரத்த வெள்ளம் ஆறாக ஓடிக் கிழக்குத் திசைக் கடலில் சேர, விருதுகளும், முரசுகளும் ஓடம்போல் மிதக்க, அசுரர் உடல்களும் தெப்பம் போல் மிதக்க, இதனைக் கண்ட அரக்க தூதர்கள் வாய் பிதற்றி வாதாவியிடம் சென்று கூறினர்.

குருதி - இரத்தம். **குணதிசை** - கிழக்குத்திசை. **கயவன்** - வாதாவி.

689. வாதாவி மற்ற தம்பியரை அனுப்புதல்

ஏவலர் உரைக்கக் கேட்ட
இயக்கர்கோன் இதயம் பொங்கி
தீவினைச் சூறை மண்டி
செயம்பெறும் தம்பி மாய்ந்தும்
காவலர் இருப்ப துண்டோ
கனத்த குண்டலன் மகோனே
பாவமின் மகோதரனும்
படையெடுத் தேகு மென்றான்.

"தூதர்கள் கூறியதைக் கேட்ட வாதாவி கோபம் கொண்டு, தீவினையால் கொள்ளை அடித்து வெற்றி பெறக் கூடிய தம்பி இறந்தும் நாம் உயிர் வாழலாமோ? குண்டலனே! மகோனே! மகோதரனே! படையெடுங்கள்!" என்று ஆணையிட்டான்.

ஏவலர் - தூதர். **இயக்கர்கோன்** - அசுரர்தலைவன். வாதாவி. **ஏகும்** - செல்லுங்கள்.

20. இரண்டாவது நாள் குண்டலன் யுத்தச் சருக்கம்

690. தம்பிகள் போருக்குச் செல்லுதல்

கேட்டனர் அவுணர் மூவர்
கேசரத் துரகம் சூழ
மேட்டியாய் இரதம் ஏறி
விருதுபம் பைகள் ஆர்ப்ப
தாட்டிவா ரதனைக் கொன்ற
தயிரியன் எவனோ அவனை
வாட்டுவன் எனவு ரைத்து
வளைந்தமர் மண்ட லுற்றார்.

வாதாவி கூறியதைக் கேட்ட குண்டலன், மகோன், மகோதரன் மூவரும், யானை, குதிரை, காலாள் சூழ, மேன்மையாய் ரதத்தில் ஏறி, விருதுக் கொடிகள் அசைய, பம்பைகள் ஆரவாரம் செய்ய, எங்கள் அண்ணன் வாரதனைக் கொன்றவன் எவனோ அவனைக் கொல்வோம் எனப் புறப்பட்டனர்.

கேசரம் - பிடரிமயிர். **துரகம்** - குதிரை.

691. அசுரர் மரங்களைப் பிடுங்கி எறிதல்

அவுணன் சேனை குழாங்கள்
ஐம்பது நூறு வெள்ளம்
கவியவே மரங்கள் தன்னைக்
கரத்தினால் பிடுங்கிச் சாட
தவமுள பிரம வன்னியன்
தளமரத் துடன்க விந்து
சிவன்கணை அதனால் தட்டித்
தீயரைக் கொல்ல லுற்றான்.

அசுரர் படைக் கூட்டம் ஐயாயிரம் வெள்ளம் திரண்டு வந்து பெரிய பெரிய மரங்களைக் கையினால் பிடித்து எறிந்தன. பிரம வன்னியன் பரமசிவன் அம்பினால் தீயவரைக் கொல்லத் தொடங்கினான்.

ஐம்பது நூறு - ஐயாயிரம். **சாடி** - எறிய.

692. அரக்கர் வன்னிய வீரரைச் சுற்றித்தாக்குதல்

கானவர் வலைபோல் சுற்றி
கவர்ந்திடும் அவுணர் எய்யும்
ஈனமான தண்டு சூலம்
எறியும் சக்க ரங்கள்
வானின்மேற் றூள தாகி
மண்ணினிற் படியத் தாக்கி
ஈனராக் கதரொ ருத்தருக்
கிருசரம் எய்ய லுற்றார்.

வேடுவர் வலைபோல வன்னியரைச் சுற்றிப் பின்னிய இழிவான அரக்கர் எறியும் தண்டாயுதம், சூலம், சக்கரம் ஆகியவற்றை வன்னிய வீரர் வானத்தின் மீது தூளாக்கி, பூமியில் வீழ்த்தினர். ஒரு அரக்கருக்கு இரு அம்பு வீதம் விட்டனர்.

கானவர் - வேடர். **சரம்** - அம்பு

693. அரக்கர் மாண்டு விழுதல்

பருவமா மரம சைக்க
பலபல வெனவிழும் போல
விரியெனும் அவுணர் ஆக்கை
மேதினிப் படிய ஏகி
எரித்திடும் பகல் நிரப்ப
இமையவர் முரச திர்ப்ப

பிரமனோர் மறலி யென்ன
பெருத்தவீ ரங்கள் பூண்டான்.

நல்ல பழுத்த பெரிய மரங்களை அசைத்தால் பலபலவெனப் பழங்கள் உதிர்வது போல் அசுரர் உடல்கள் பூமியில் உதிர்ந்தன. அவை பகலை நிரப்பி இரவைத் தொடங்கின (கரிய உடல்கள் ஆதலால் இருள்பரவியது). தேவர்கள் முரசுகள் அதிர்ந்தன. 'பிரம வன்னியனே எமன்' என்று எல்லோரும் பாராட்டினார்.

ஆக்கை - உடல். **மேதினி** - பூமி. **மறலி** - எமன்.

694. குண்டலன் இறத்தல்

குண்டலன் அவுணன் கோபம்
கொண்டொரு தனுவ ளைத்தே
மண்டுய வாயு வாளி
வருஷிக்கப் பிரமன் கண்டோன்
தண்டினால் அதைத்த டுத்துத்
தயித்தியன் சிரசின் மோத
துண்டமாய்ப் புவியில் வீழத்
துகள்மகோன் வந்தெ திர்ந்தான்.

குண்டலன் கோபம் கொண்டு ஒரு வில்லை வளைத்து வாயுவஸ்திரம் எறிந்தான். பிரமன் தண்டினால் அதைத் தடுத்துக் குண்டலன் தலைமேல் மோத அவன் தலை பூமியில் விழுந்தது. உடனே மகோன் வந்து எதிர்த்தான்.

தனு - வில் **வாயு வாளி** - வாயு அம்பு. **வருஷிக்க** - பொழிய.

21. மூன்றாம் நாள் மகோன் யுத்தச் சருக்கம்

695. மகோன் நாகவாளியை எய்தல்

நகைமகோன் எனும்அவு ணன்நாக
வாளியைச் சிலையில் ஏற்றி

பகையெனும் பிரமன் மீதில்
பதித்திடத் தெறிய வாளி
புகையுடன் ஆலம் பொங்கி
பூந்தெனக் கவிய வீரன்
வகையறக் கிருஷ்ணன் போல
வன்னியன் வந்தான் மாதோ.

மகோன் என்னும் அசுரன் நாகாஸ்திரத்தை வில்லில் வைத்துப் பிரம வன்னியன்மேல் எறிய, அவ்வம்பு புகையையும் விஷத்தையும் கக்கிக் கொண்டு பிரமவன்னியன்மேல் குவிய, அவன் மயங்கினான். உடனே கிருஷ்ண வன்னியன் வந்தான்.

ஆலம் - விஷம்

696. மகோன் இறத்தல்

துணைவனைக் கோபம் செய்த
துஷ்டனை வளைந்து வேத
கணையினை உச்ச ரித்து
கடுமையாய் இறைப்ப வாளி
இணையில் மகோன் உளத்தை
ஈர்ந்துவான் கங்கை யாடி
மணிமுடி வன்னி யன்பால்
வந்தமர்ந் திருந்த தன்றே.

தன் சகோதரனுக்குத் தீங்கு செய்த மகோன்மேல் பிரமாஸ்திரத்தைக் கடுமையாய் உச்சரித்து எய்தான் கிருஷ்ண வன்னியன். அவ்வஸ்திரம் இணையற்ற மகோன் உள்ளத்தைப் பிளந்து ஆகாயம் சென்று கங்கையில் மூழ்கி மணிமுடி அணிந்த கிருஷ்ண வன்னியனிடத்தில் வந்தது.

வேதக் கணை - பிரமாஸ்திரம். **வாளி** - அம்பு. **ஈர்ந்து** - பிளந்து.

22. நாலாநாள் மகோதரன் யுத்தச் சருக்கம்

697. மகோதரன் கிருட்டிணனைத் தாக்குதல்

மகோதரன் என்னும் சூரன்
வளைந்துவெஞ் சிலைவ ளைத்தே
நிகரிலா மாயன் பாணம்
நிருபன்மேல் தெளிப்ப வாளி
தகதக வென்று மார்பில்
தாக்கிடக் கிருட்டி ணன்தன்
அகமெலி வடைந்து மூர்ச்சை
ஆகியே ரதத்தில் சாய்ந்தான்.

மகோதரன் என்னும் அசுரன் கொடிய வில்லை வளைத்து நிகரற்ற வலிமையான விஷ்ணு அஸ்திரத்தைக் கிருட்டிண வன்னியன் மேல் விட அவ்வம்பு கிருட்டிணன் மார்பில் தாக்க அவன் உள்ளம் தளர்ந்து மயக்க மடைந்து தேரில் சாய்ந்தான்.

மாயன்பாணம் - விஷ்ணு அஸ்திரம். **நிருபன்** - அரசன்.

698. சம்பு வன்னியனைத் தாக்குதல்

கண்டனன் சம்பு வன்னியன்
காதலன் துணைவன் மூர்ச்சை
கொண்டனன் எனவே சீறிக்
கொப்பென இரதம் ஏறிக்
கண்டித்து அவுணன் மெய்யில்
அக்கடுஞ் சரம் தொடுப்ப
மண்டுமோர் சூலம் தொட்டான்
வன்னியன் மூர்ச்சை யுற்றான்.

இதனைக் கண்ட சம்பு வன்னியன், தன் சகோதரன் மூர்ச்சையானான் என்று சீறி, இரதம் ஏறி, அசுரன் மேல் அம்பு விட,

மகோதரன் சம்பு வன்னியன் மேல் சூலாயுதத்தை ஏவினான். சம்பு வன்னியன் மூர்ச்சை யானான்.

காதலன் - அன்புடையவன். **தொட்டான்** - விட்டான்

699. வன்னியன் படைகள் வீரவன்னியனிடம் சென்று கூறுதல்

வீரராம் இலக்கம் சேனை
வீரவன் னியன்பால் ஏகி
தீரனே மதலை மூவர்
திணியமெய் மூர்ச்சை யுற்றார்
சூரனும் கொடிய பாணம்
தொடுத்தனன் அவனை வெல்லும்
வீரர்கள் உளரோ வென்று
மெய்மறந் துரைத்தா ரன்றே.

வன்னியருடைய இலட்சம் சேனை வீரரும் வன்னிய வீரனிடத்தில் போய் "வீரனே, உம் மூன்று குழந்தைகளும் மூர்ச்சையுற்றார்கள். அசுரன் கொடிய அம்பு தொடுத்தான். அவனை வெல்லும் வீரர் உளரோ" என்று மெய்மறந்து கூறினார்கள்.

மதலை - பிள்ளைகள்.

700. வீரவன்னியன் துர்க்கையை வேண்டுதல்

தானைகள் உரைப்ப வீரன்
தாருகை செற்றும் வீரி
தேனெனும் மலர்த்தா ளேத்திச்
சிவனிடத் தாடும் அம்மை
ஞானநா யகியே பாலர்
நலிவடைந் தனரி யக்கன்
வானுல கடையச் சூழ்ச்சி
வழுத்தென உரைத்தான் மாதோ.

"படைகள் சொன்னதைக் கேட்டதும் வீரவன்னியன், தாருகாசூரனை வதைத்த துர்க்கையின் மலர்போன்ற பாதங்களைப் போற்றி. "சிவனோடு ஆடும் அம்மையே! துர்க்கையே! என் குழந்தைகள் மூர்ச்சையடைந்து விட்டனர். அவ்வசுரன் வானுலகமடைய எனக்குத் தந்திரம் உரைப்பாய்" என்று வேண்டினான்.

தாருகை - தாருகாசுரன். **சூட்சி** - தந்திரம். **வழுத்து** - கூறு.

701. துர்க்கை அக்கினி வன்னியனை அனுப்பும்படி கூறுதல்

எனக்குரிய மகனே அந்த
இயக்கன் அக்னி சரத்தான்
மனத்துயர் அடைவன் உந்தன்
மதலை அக்கினியை ஏவ
சினத்தினால் செயங்கொள் வானென
செப்பஅக் கினிய மன்னன்
கனத்த கோபங்கள் உன்னி
கயவனோ டெதிர்த்தா னம்மா.

"என்னுடைய மகனே! அவ்அசுரன், அக்னி அம்பால் துயரம் அடைவான். எனவே உன் மகன் அக்கினி வன்னியனை அனுப்பு. அவன் இம்மகோதரனை வெல்வான்" எனத் துர்க்கை கூற அக்கினி வன்னியன் கோபத்தோடு மகோதரனை எதிர்த்தான்.

கயவன் - தீயவன். இங்கு மகோதரன்

702. மகோதரன் உடல் உருளுதல்

அண்டமும் கிடுகி டென்ன
அவுணன் உளம்து டிப்ப

எண்டிசை களும்ந டுங்க
எடுத்தொரு சூலம் ஏவ
மண்டிய வெம்மை யாக
மகோதரன் மார்பில் தைக்க
அண்டரின் உலகை உற்ற
ஆக்கையும் உருண்டிற் றம்மா.

உலகம் கிடுகிடுக்க, அசுரன் மனம் துடிக்க, எட்டுத்திசைகளும் நடுங்க அக்கினி வன்னியன் ஒரு சூலாயுதம் விட்டான். அது கொடுமையாக மகோதரன் மார்பில் தைத்தது. அவனுடைய உடல் தேவருலகில் சென்று உருண்டது.

அண்டம் - உலகம் ஆகாய வெளி. **அண்டர்** - தேவர்

703. படைகள் அழிதல்

அவுணருக் கதிக சூரன்
அருந்துணை நால்வர் மண்மேல்
கவின்களாற் சேனை மண்டி
கடுஞ்சமர் அளிக்க மன்னன்
குவிவளை வாயு வாளி
குன்றுபோல் தெறிப்ப சேனை
புவியின்மேற் படிந்தார் விண்ணோர்
பூமழை பொழிந்தார் அன்றே.

வாதாவியின் துணையான தம்பிகள் நால்வரும் இறந்தனர். அவர்களுடைய படைகள் கடுமையாகப் போர் செய்ய அக்கினி வன்னியன் வாயு அஸ்திரம் விட எல்லாப் படைகளும் அழிந்தன. தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

704. மூர்ச்சையுற்ற மூன்று வன்னியர் எழுதல்

திணிபுய வீரர் மூவர்
மூர்ச்சையி னின்று தேறி

மணிமுடி புனைந்து மன்னன்
மனத்தினில் மகிழ்ச்சி கூர்ந்தே
இணையிலா துர்க்கை பாதம்
இறைஞ்சினர் கதிரோன் மேற்பால்
அணைந்தனன் செக்கர் வானம்
அந்தரத் தெழுந்த தம்மா.

கிருஷ்ண வன்னியன், பிரம வன்னியன், சம்பு வன்னியன் மூவரும் மயக்கம் தெளிந்து எழுந்து முடிபுனைந்தனர். வீரவன்னியன் மகிழ்ச்சியுற்றான். எல்லோரும் மகிழ்ச்சியோடு இணையற்ற துர்க்கை பாதம் வணங்கினர். கதிரவன் மேற்றிசையில் வீழ்ந்தான். வானம் சிவப்பு நிறம் ஆனது.

705. வீரர்கள் திரும்புதல்

எழுந்திடும் செக்கர் வானம்
இயக்கரின் குருதி யெல்லாம்
எழுந்துவான் தோய்ந்த தென்ன
இமையவருக் குரைத்தார் விண்ணில்
செழும்பரி வீரர் சேனைத்
திரளெலாம் செயங்கள் உன்னி
எழுந்தனர் சோலை நாடி
இருந்தனர் அந்நாள் அன்றே.

செக்கர் வானம் எப்படி இருந்த தென்றால் "அரக்கரின் இரத்தம் வானத்தில் தோய்ந்தது போல் இருந்தது" என்று தேவர்கள் கூறினர் வன்னிய வீரர் படைகளெல்லாம், "வெற்றி பெற்றோம்" என்று மகிழ்ந்து சோலை நாடி வந்தனர்.

இயக்கர் - அரக்கர் **குருதி** - இரத்தம்

706. வீரர்கள் ஓய்வெடுத்தல்

அந்திவந் தடைய வீரர்
அருள்நதி தீர்த்தம் ஆடி
சந்தியின் முறைசெ லுத்தி
சம்பிரமாய் அமுது அருந்தி
இந்திரன் எனஇ ருப்ப
இயம்பிடாப் படை அனைத்தும்
விந்தையாய்ப் பாது காத்து
வீற்றிருந் தனர்கள் மாதோ.

மாலைக் காலம் வந்ததும் வீரர்கள் நதியில் நீராடி, சந்தியா வந்தனம் செய்து, முறைப்படி உணவருந்தி, இந்திரன் போல் இருந்தனர். படைகள் இரவு முழுவதும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அந்தி - மாலைக்காலம். **தீர்த்தமாடி** - குளித்து. **சந்தியின் முறை** - மாலைக்கால அனுஷ்டானம். **சம்பிரமம்** - முறையாக.

707. இரவு வருதல்

ஆரணி வீரி மாரி
அகோரி கங்கண கபாலி
நாரணி வடுகி சூலி
நடன சாமளி வராகி
காரணி சமைய மென்ன
காலபூ தங்கள் என்ன
தாரணி முழுதும் ஓடி
தழைத்தது கங்குல் அம்மா.

வேதங்களைப் படைத்தவள், வீரமுடையவள், மாரிக்குக் காரணமானவள், கோரமில்லாத வடிவம் படைத்தவள், கங்கணம்

அணிந்தவள். கபாலம் ஏந்தியவள். நாரணன் தங்கை. சூலம் ஏந்தியவள். நடனமாடுபவள். கரிய நிறமுடையவள் ஆகிய துர்க்கையின் பூதங்கள் போல் பூமி முழுதும் ஓடி இரவு பரவிற்று.

தாரணி - பூமி. **கங்குல்** - இரவு.

708. வாதாவி வருந்துதல்

கரியுருவ அவுணரைக் கடிந்த நீல்நிறம்
விரிகதிர் மறைத்தமா விளைத்த தென்னவே
பெரும்புவி அனைத்திருள் அடைய பேயனாம்
எரிஉருவ அவுணர்கோன் இதையம் வாடினான்.

கருமை நிறமுடைய அசுரரை அழித்தபோது அவர்களுடைய நிறம் முழுவதும் சூரியனை மூடி மறைத்ததுபோல் பூமி முழுவதும் இருள் படர்ந்தது. அப்போது தீயவனாகிய அசுரர் தலைவன் வாதாவி மனம் வருந்தினான்.

விரிகதிர் - சூரியன். **வாடினான்** - வருந்தினான்.

709. வாதாவி "இனி எனக்கு யார் பலம்" எனல்

எனக்குறூஉம் துணைவர் காள்எனைத் தவிக்கவிட்டு
அளப்பரிய வீரரால் ஆவி நீக்கிட
சினத்துயர் அடைந்தனன் சகவ சியம்செய்
இனிபெலம் யாரெனக் கின்று என்றனன்.

"என்னுடைய துணைவர்களே! தம்பிகளே! இந்த உலகத்தையே அடக்கி ஆளக்கூடிய பலமுடைய நீங்கள் வன்னிய வீரரால் உயிர் நீங்கி விட்டீர்கள். நான் மிக்க கோபமும். துயரமும் அடைந்துள்ளேன். இனி எனக்கு யார் பலம்?" என வாதாவி வருந்தினான்.

710. மனைவியர் அழுதல்

கோவென அரற்றுவன் கொதித்து எழும்புவன்
ஆவலாந் துணைவருக் குவமை யாரென
பாவையர் அரற்றவும் பசும்பொன் மாமுடி
காவலன் துயரமும் கழறல் ஆகுமோ?

தம்பியரை இழந்த வாதாவி கோவென்று அரற்றுவான். கொதித்து எழுவான். தம்பியர் மனைவியரோ "எங்கள் கணவருக்கு இணையாக யாருளர்?" என்று அரற்றுவர். பசிய பொன்னாலான முடி அணிந்த அரக்கனின் துயரமும் மனைவியர் துயரமும் கூற முடியுமோ? முடியாது.

கழறல் - கூறுதல்.

711. வீரர்களின் மனைவியர் கூற்று

இரத்தினா கரமுள இயக்கர் மாதர்தம்
இரத்தினம் அணிந்தகோன் அடர்ந்த சேனையை
பெருத்திடும் வீரர்கை ஒப்பிப் பெய்தனன்
திருக்கலம் இழந்தனம் என்று செப்பினர்.

இரத்தினாகரத்திலுள்ள இறந்த அரக்கரின் மனைவியர், "மணிமுடி புனைந்த வாதாவி நம் அரக்கர் சேனையை வன்னிய வீரர்களிடம் அனுப்பி அவர்கள் கையில் ஒப்படைத்தான். அதனால் நாம் மாங்கல்யம் இழந்தோம்" என்றனர்.

இயக்கர் - அசுரர். **சேனை** - படை **திருக்கலம்** - மாங்கல்யம்

712. அரக்கியர் எல்லோரையும் அழைத்தல்

கணவரைக் கடிந்துளம் களித்த வீரரைப்
பிணமெனக் குவித்துப் பேருலகில் உண்ணுவம்
இணையிலா அரக்கியர் இனங்க ளேயினி
குணமுடன் வருகுவீர் என்னக் கூறினார்.

கணவனை இழந்த அரக்கியர் சிலர் "நம்முடைய கணவரைக் கொன்று மகிழ்ந்த வீரரைப் பிணங்களாக்கி உண்ணுவோம்: இணையற்ற அரக்கியர் கூட்டங்களே! வாருங்கள்!" என்று அழைத்தனர்.

கடிந்து - கொன்று.

713. நம் கணவரைக் கொன்ற வன்னியரைக் கொல்வோம் எனல்

அந்தகர்க்கு அஞ்சிடா அவுணர் ஆவியை
நிந்தைசெய் தழித்த நிமலன் சேய்களை
இந்திருள் அகலுமுன் னேஇகல் பொருது
இந்திரப் பதவி ஈந்திடுவம் என்றனர்.

"எமனுக்கே அஞ்சாத அரக்கர் உயிரை இகழ்ந்து அழித்த சிவபெருமான் பிள்ளைகளை இன்றிரவு நீங்குமுன் போர்செய்து இந்திர லோகம் அனுப்புவோம்" என்றனர்.

அந்தகர் - எமன். **ஆவி** - உயிர். **நிந்தை** - இகழ்ச்சி. **நிமலன்** - குற்றமற்றவன். **சேய்கள்** - பிள்ளைகள் **இகல்** - போர். **பொருது** - போர் செய்து. **ஈந்திடுவம்** - அளிப்போம்.

714. ஆதிசேடனுக்குத் தலைவலி

பலபல விதமொழி பகர்ந்த பாவையர்
ஒலியெழ உரகர்கோன் உள்ளமும் வாடினன்
தலைவலி எழும்பின தாங்க வொண்ணிடா
வலியவு ணாதிபர் மடிவ தின்றியே.

இப்படிப் பலவிதமாய் அரற்றிய அரக்கியர்கள் ஒலியினால் ஆதிசேடனும் வருந்தினான். இவ்வளவு வலிமை படைத்த அசுரர்களை எப்படி மாய்ப்பது என்று தாங்க முடியாமல் அவனுக்கே தலைவலி ஏற்பட்டது.

உரகர் - பாம்பு. **உரகர்கோன்** - ஆதிசேடன்.

715. ஆதிசேடன் திருமாலிடம் தலைச்சுமை அகற்றுமாறு வேண்டுதல்

இச்சுமை அகலுநாள் என்று காண்கிலன்
பிச்சையேற் றுண்ட வன்பெரு அரக்கரைப்
பிச்சையென் றளித்தனன் எனக்குச் சீருற
அச்சுதா முடிசுமை அகற்று மென்றனன்.

"இந்தத் தலைபாரம் என்று நீங்குமோ தெரியவில்லை. பிச்சையேற்றுண்ணும் பரமன் அரக்கரைப் பிச்சையாக அளித்தான். திருமாலே என் தலைச் சுமையை அகற்றுங்கள்" என்று வேண்டினான் ஆதிசேடன்.

பிச்சை ஏற்றுண்டவன் - சிவன். சிவன் பிரமனின் செருக்கை அடக்க அவனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி விட்டான். அத்தலை கையிலேயே ஒட்டிக் கொண்டு பிரமஹத்தி தோஷம் ஏற்பட்டது. அம்மண்டையோட்டில் பிச்சை வாங்கி உண்டு என்று அது நிரம்புகிறதோ அன்று தோஷம் நீங்க வேண்டும் என்று சாப நிவர்த்தி பெற்றான். அதனால் பிச்சை வாங்கிக் கொண்டே வந்தான். அதுநிரம்பவே இல்லை. இறுதியில் மகாலட்சுமி கையால் பிச்சை வாங்க பாத்திரம் நிரம்பி மண்டையோடும் கையிலிருந்து நீங்கியது. இது பிட்சாடன மூர்த்தி வரலாறு. **அச்சுதன்** - திருமால்.

716. வாதராவி இப்பூமியில் இருப்பது எவ்வாறு எனல்

ஃதுரை உரகர் கோன்இசைத் திருப்பவன்
தீதவு ணாதிபன் சிந்தை தேறிவந்து
வாதனை உயர்த்தவன் ஆகமொடு ஏகஇம்
மேதினி இருப்பது எவ் விதமென்று உசாவினான்.

இவ்வாறு ஆதிசேடன் கூற தீயவாதாவி மனம்தேறி துக்கத்தோடு "என் தம்பியர் இறக்க நான் மட்டும் இப்பூமியில் உடம்பை வைத்துக்கொண்டு எவ்வாறு வாழ்வேன்?" என்று புலம்பினான்.

வாதனை - துக்கம். **ஆகம்** - உடம்பு. **மேதினி** - பூமி **உசாவினான்** - கேட்டான்.

717. வாதாவியின் மனைவி கூறுதல்

இடியென அரற்றிய இயக்கன் மூர்ச்சையாய்ப்
படிமிசை வீழ்ந்தனன் பார மேருவின்
அடிமுடி சாய்ந்ததென்று அவுணன் தேவியக்
கொடுமைகள் ஏற்றனை கொற்றவ என்றனள்.

இடிபோல் அரற்றிய அசுரன் மயக்கமாகிப் பூமியில் விழுந்தான். மேருமலை வீழ்ந்தது போலிருந்தது. அவனுடைய மனைவி சொக்க கன்னி என்பவள், "கொடுமைகள் செய்தாயோ கொற்றவனே" என்றாள்.

இயக்கன் - அசுரன். **படி** - பூமி. **கொற்றவன்** - அரசன்.

718.

முடிவிலா புகழணி முத்தன் நல்கிய
படிமிசை புரந்து மிப்பலன டைந்தனை
கொடிய பாதகமிது குவவுத் தோளினாய்
மடிவ னுன்னுட னெனமனது சோர்ந்தனள்.

"முடிவில்லாப் புகழையுடைய சிவன் கொடுத்த இரத்தினாபுரியை ஆண்டும் இப்படி ஒரு கதி ஏற்பட்டது. பெரிய தோளையுடையவனே! மிகக் கொடிய பாதகம் இது. நானும் உன்னுடனே சாவேன்" என்றாள்.

முத்தன் - சிவன் **படி** - பூமி. **மடிவன்** - இறப்பேன்

719. அமைச்சர் மயக்கம் தெளிவித்தல்

துடியிடை சொக்க கன்னியின் மனத்துயர்
அடைவதை அகற்றியே அமைச்சர் மன்னனை
துடிமலர் அணைவணை துய்ய சாமரை
கடுமையாய் இரட்டவும் கனன்றெ ழும்பினன்.

உடுக்கை போன்ற இடையையுடைய சொக்க கன்னியின் மனத்துயரை அகற்றிய அமைச்சர்கள் மன்னனை மலரணைமேல் படுக்க வைத்து வேகமாகச் சாமரை வீசினர். அரசன் சினத்தோடு எழுந்தான்.

துடி - உடுக்கை. **துய்ய** - வெண்மையான. **சாமரை** - கவரி. **கடுமையாய்** - வேகமாக. **இரட்ட** - வீச. **கனன்று** - சினந்து.

720. 'சோர்வடையாதீர்' என்று கூறுதல்

அப்பொழுது அமைச்சர்கள் அங்கை கூப்பியே
செப்புவார் அரசர்கள் தீரம் சோர்வுறார்
இப்படிக் கோபமுற்றிட இயற்கையோ
மற்பொரு திரள்புய அவுணர் மன்னனே.

அப்போழுது அமைச்சர்கள் கைகூப்பி. "மற்போர் செய்யும் திரண்ட தோள்களையுடைய அசுர மன்னனே! வீரமன்னர்கள் சோர்வடைய மாட்டார்கள் என்று கூறுவர். இப்படிச் சினமடைவது இயற்கையாகுமோ" என்று கேட்டனர்.

அம்கை - அழகியகை. **மல்** - மல்யுத்தம்

721.

அபசுபம் இரண்டையும் அநுப் விப்பதே
தபநெறி யாமென சாற்றுநூல் பொய்க்குமோ

இபமுரி போர்த்திய ஈசன் செயல்வலி
உபயமோ வெஞ்சிலை உருக்கு மன்னனே.

"அரசே! தோல்வி, வெற்றி (சுகம் துக்கம்) இரண்டையும் ஒன்றாக ஏற்றுக்கொள்வதே தவம் என்று நூல்கள் கூறுவது பொய்யாகுமோ? யானையை உரித்துப் போர்த்திய இறைவன் செயல் வலிமையைக் கொடிய வில்லால் உருக்குவோம்" என்று கூறினர்.

அபம் - தோல்வி, துக்கம். **சுபம்** - வெற்றி, சுகம். **இபம்** - யானை. **உரி** - தோல்.

722. நாங்கள் வன்னிய வீரரை அழிப்போம் எனல்

முடிவிலாச் சேனையை முடித்த வீரரைப்
படிமிசை யினிற் படியச் சேர்த்தியே
முடியுனக் களிப்ப மெம்மொழி தப்பாதெனக்
கடுமையாய் அமைச்சரும் கழறினாரரோ.

"நம்முடைய முடிவற்ற படையை அழித்த வீரர்களைப் பூமியில் விழச்செய்து உனக்கு முடி சூட்டுவோம். இது தப்பாது" எனக் கடுமையாய் அமைச்சர் கூறினர்.

முடித்த - அழித்த. **படி** - பூமி. **கழறினார்** - சபதம் கூறினார்.

723. பிள்ளைகள் இருக்கப் பயமேன் எனல்

தனயர் ஈரிருவரின் தனுவு பொய்க்குமோ
கனபுவி சூறைசெய் கவர்ந்த திணிபுயம்
அனைவரும் செழித்திட அயர்வ தென்னவுன்
மனமுறு துயரமும் மாற்று மென்றனன்.

"உன் புதல்வர் நால்வரின் வில் தோற்குமோ? எல்லா உலகங்களையும் கொள்ளையடித்த அவர்களுடைய வலிய தோள்கள்

இருக்கையில் ஏன் சோர்வடைகிறாய்? உன் மனத்துயரத்தை மாற்றிக்கொள்" என்றனர்

தனயர் - பிள்ளைகள். **ஈரிருவர்** - நால்வர் **கனபுவி** - பெரிய பூமி.

724. சேனைகளை அழைத்தல்

இப்படி அமைச்சர்கள் இயம்பக் கேட்டகோன்
செப்பிடும் நமது சேனைக் குழாங்களை
தப்பிடா தழையென சாரணர்க் கோதிட
அப்பொழு தவுணர் சேனை அடைந்ததே.

இவ்வாறு அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட அசுரன் "நம்முடைய படைகளை அழையுங்கள்" என்று தூதர்க்குச் சொல்ல உடனே சேனைகள் வந்தன.

இயம்ப - சொல்ல. **குழாம்** - கூட்டம். **தப்பிடாது** - தவறாது. **சார்ணர்** - தூதுவர். **அவுணர்** - அசுரர். **சேனை** - படைகள்.

725. அரக்கர் சேனை வந்து சூழ்தல்

கரிமுகம் புலிமுகம் கழுதை நாய்முகம்
பரிமுகம் எலிமுகம் பசாசு வின்முகம்
அரிமுகம் ஆயிரம் அடைந்த ராக்கதர்
இரத்தினா புரமதில் அடைந்து சூழ்ந்தனர்.

யானைமுகம், புலிமுகம், கழுதைமுகம், நாய்முகம், குதிரை முகம், எலிமுகம், பேய்முகம், சிங்கமுகம் எனப் பல்லாயிரம் முகம் படைத்த அரக்கர் பலர் இரத்தினாபுரம் வந்து அடைந்தனர்.

கரி - யானை. **பரி** - குதிரை. **அரி** - சிங்கம்.

726.

மூலபல மென்னவும் முளைத்திடும் இயக்கர்
ஞாலமிசை எங்கணும் நவின்றிட வொணாத

சூலமொடு பாலம் சூரிதனு வும்கண்டு
காலர்இவ ரெனவும் கணத்தில் நிறைந்தனர்.

மூலபலப் படையெனச் சொல்லப்படும் அரக்கர், உலகில் எங்கும் சொல்ல முடியாத அளவுக்குப் பெருக சூலம், பாலம், சூரி, தனு, பிண்டி எனப் பல ஆயுதங்களோடு எமன் என்று சொல்லத்தக்க அளவில் வந்து நிறைந்தனர்.

ஞாலம் - உலகம். **மிசை** - மேல் **காலர்** - எமதூதர். **கணம்** - நொடிப்பொழுது.

727. படையெழுச்சி

சத்த சமுத்திரம் பொங்கிட சினப்ப
சுத்தரவ நாயகன் சுடிகையும் நெளிய
நற்ற அட்ட நாகமும் நடுங்க
புற்றீ சலெனப் புவிநிறைந் தாரரோ.

ஏழு கடலும் பொங்கிச் சினமடைய, ஆதிசேடனின் ஆயிரம் தலையும் நெளிய, எட்டுத் திக்கு யானை நடுங்க, (எட்டுத் திக்கு மலைகளும் நடுங்க என்றும் எட்டு பாம்புகளும் நடுங்க என்றும் சொல்லலாம்) புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் அரக்கர் சேனை புறப்பட்டது.

சத்த - சப்தம் - ஏழு. **சமுத்திரம்** - கடல். **சுடிகை** - படம். தலை **அட்டம்** - எட்டு. **நாகம்** - பாம்பு, யானை, மலை.

728. படைகண்டு வாதாவி மகிழ்ச்சி

வந்தவுணர் சேனையை வாதாவி கண்டுரைப்பான்
இந்தவுண ருக்கிணை இயம்பிட ஒண்ணாதால்
சிந்தை களிகூர்ந்து பலசிறுவர் முகநோக்கி
அந்திரு ளகன்றது மமர்பொருது மென்றான்.

வந்த அரக்கர் சேனையைக் கண்ட வாதாவி "இந்த அரக்கருக்கு ஒப்புக் கூற இயலாது" என மகிழ்ந்து பிள்ளைகள் முகம்பார்த்து "இந்த இரவு முடிந்து பகல் வந்ததும் போரிடுங்கள்" என்றான்.

இயம்பிட - சொல்ல. **பொருதும்** - போரிடுங்கள்.

729. *பிள்ளைகள் சூளுரைத்தல்*

தாதை முகநோக்கி அருதனயரும் உரைப்பார்
போதுமதி சூடுபுனி தன்புதல்வன் என்கை
வாதையுரு வாளியென மண்டமர் செய்தே
மேதினியு றைவனிது மெய்யென உரைத்தான்.

தந்தை முகம் பார்த்துப் பிள்ளைகள், "கொன்றையும் சந்திரனும் அணிந்த சடையுடைய சிவபெருமானின் புதல்வர்களை எங்கள் கையிலுள்ள துன்பம் தரும் அம்புகளால் போரிட்டு அழித்துத் திரும்புவோம். இது சத்தியம்" என்றனர்.

தாதை - தந்தை. **தனயர்** - பிள்ளைகள். **போது** - மலர், கொன்றை. **மதி** - சந்திரன். **வாதை** - துன்பம். **வாளி** - அம்பு. **மேதினி** - உலகம்.

730. *"வன்னியரை வெல்லாவிடில் உயிர் விடுவோம்" எனல்*

விண்ணதிர மண்ணதிர மேதினி நிறைந்த
திண்புய மன்னரைச் சினத்துஜெய முறாவிடில்
குண்ணென உதித்தசடக் கொடுமையவன் என்று
மண்ணதிவிருந் தென்னபயன் மடிந்திடுவம்
என்றார்.

"ஆகாயம் பூமி அதிரப் போர்செய்யும் வலிய தோள்களையுடைய வன்னிய வீரரைக் கோபித்து வெற்றி பெற்று வராவிட்டால் குன்று போன்ற உடலுடன் கொடியவர் என்ற

பேரெடுத்துப் பூமியில் இருந்து என்ன பயன்? இறந்திடுவோம்" என்றனர்.

குண்ணென - குன்றுபோல். **சடம்** - உடல்.

731. சந்திரன் தோன்றுதல்

அந்தியுறு காலமற மலர்மதி முளைத்த
விந்தை முடி வீரர்கள் விடுஞ்சிலை யினாலி
னிந்தை அவுணாதி பனேமி யிலகற்றும்
தந்திர மெனாமதி தழைத்தது விண்மீதில்.

அந்திக்காலம் முடிந்ததும், வன்னியவீரர் விட்ட வில்லினால் பூமியில் அசுரர்கள் அழிக்கப்படும் தந்திரம் போல வானத்தில் சந்திரன் தோன்றியது.

அந்தி - மாலை. **விந்தை முடி வீரர்** - வன்னியர். **நேமி** - பூமி. **மதி** - சந்திரன்.

732. சந்திர ஒளி

பிஞ்சிள மதிச்சடை அணிந்தருளும் பெம்மான்
அஞ்செழுத் தோதிபணி அடியார்கள் தம்பால்
துஞ்ச லணுகாதென துறந்தவர் உரைத்தார்
இஞ்சலென வானின் இலங்கியது அன்றே.

"பிறைச் சந்திரனைச் சடையில் அணிந்த பெருமானின் திருஐந்தெழுத்தை ஓதிப் பணியும் அடியார்களிடத்தில் இறப்பு நெருங்காது" எனப் பெரியோர் கூறுவர். அது சரி என்று காட்டுவது போல் சந்திரன் ஒளி வீசியது.

பிஞ்சிளமதி - பிறை. **துஞ்சல்.** - இறப்பு.

733.

கங்குலவு ணர்குழாம் அமர்ந்ததென மொய்ப்ப
திங்களுயர் வாளியால் சிகைக்கும் ஒளிவீரன்
வெங்கணைய தாமென விளங்குவன கண்டே
கங்குலு மகன்றதென கலைமதி முளைப்ப.

இருளானது அசுரர் கூட்டம்போல் இருந்தது. அசுரர் கூட்டத்தை அழிக்கும் வீரவன்னியன் அம்புபோல் இருட்டை நீக்கும் சந்திரன் கிரணங்கள் விளங்கின. இவ்வாறு இருளை அகற்றச் சந்திரன் தோன்றியது.

கங்குல் - இரவு. **மொய்ப்ப** - நெருங்க. **சிகைக்கும்** - அழிக்கும். **வாளி**. **கணை** - அம்பு. **கலை** - ஒளி, கிரணம்.

734. சுக்கிரன் முளைத்தல்

பற்றிய குணதிசைப் பளிங்கனும் முளைப்ப
நற்றவம் புரிஅவுண னானிலஞ் செழிப்ப
கத்தனரு ளாலவுணர் காசினி நிறைந்தே
சித்தமகிழ வின்றினி தீதுகள் அடைந்ததே.

கீழ்த்திசையில் சுக்கிரன் தோன்றியது. "நல்லதவம் புரிந்த வாதாவி இவ்வுகலம் செழிக்க வாழ்வான் என பரமசிவன் அருளால் பூமி நிறைய அசுரர்களைப் படைத்தோம்; இறுதியில் தீமையாகப் போயிற்றே" என்று வருத்தப் படுவதுபோல் இருந்தது.

பளிங்கன் - சுக்கிரன். **கத்தன்** - பரமசிவன் **காசினி** - பூமி. **தீது** - குற்றம்.

735. கதிரவன் தோன்றுதல்

இத்தினம் அரக்கர் மடிவா ரெனவிளங்க
அத்தனை அழைக்கும் அதிர்க்குரல்
போலவென்ன

தத்ததொரு வாரணம் தாழ்த்து மனைதொறும்
கத்துஒலி கேட்டிடக் கதிரவன் முளைத்தான்.

இன்று அரக்கர் மடிவார் எனச் சிவனை அழைப்பது போல் ஒவ்வொரு வீட்டிலும் சேவல் கூவ அவ்வொலி கேட்டுச் சூரியன் தோன்றினான்.

இத்தினம் - இன்று. **மடிவார்** - இறப்பார். **வாரணம்** - சேவல். **மனை** - வீடு. **கதிரவன்** - சூரியன்.

736.

பதைத்திட வதைத்தவுணர் பாரினில் இராமல்
சதைத்த கிரணச்சிலை சமைந்ததென விண்ணோர்
துதித்திட பசும்பரி சுமந்திடு ரதத்தில்
உதித்தனன் குணதிசை ஓங்குபுகழ் வெய்யோன்.

உலகம் முழுவதும் பதைத்திடும்படி துன்புறுத்திய அசுரர் பூமியில் இல்லாமலே போகும்படி கிரணங்கள் எழுந்தன என்று தேவர்கள் துதிக்க. ஏழு குதிரை பூட்டிய ரதத்தில் கிழக்குத் திசையில் தோன்றினான் சூரியன்.

737. தாமரை மலர்தல்

மதிகுளிர் பொருந்திட மரைமலர்கள் வாட
கதிர்சுடர் பொருந்திட களிக்கு முதஞ்சோர
நதியினில் முகடுகள் நளினமு மலர்ந்தது
உதயவன் முளைப்ப மதியோரடி மறைந்தான்.

குளிர்ந்த சந்திரன் உதித்ததால் தாமரை மலர்கள் வாடின. சூரியன் உதித்ததால் மீண்டும் நதிகளில் தாமரை மலரச் சந்திரன் மறைந்தான். அல்லி மலர்கள் வாடின.

மரை - தாமரை. **குமுதம்** - அல்லி. **நளினம்** - தாமரை **உதயவன்** - சூரியன். **மதி** - சந்திரன்

23. ஐந்தாம் நாள் கெம்பாசுரன் யுத்தச் சருக்கம்

738. பஞ்சவன்னியர் காலைக்கடன் முடித்துத் துர்க்கையை வணங்குதல்

பகலவன் துலங்கிடப் பஞ்ச வன்னியர்
அகமகிழ் வாகஅந் நதியில் ஆடியே
முகலியாக் கடன்களை முடித்து வீரியின்
சுகமலர்க் கழலிணை தொழுதிட் டாரரோ.

சூரியன் உதித்ததும் ஐந்து வன்னியரும் மகிழ்ச்சியோடு நதியில் நீராடிக்காலைக் கடன்களை முடித்துத் துர்க்கையின் பாதங்களைத் தொழுதனர்.

பகல்வன் - சூரியன். **துலங்கிட** - உதிக்க. **வீரி** - துர்க்கை.

739. துர்க்கை வாழ்த்துதல்

நற்றவ பூதியை நங்கை நல்கினள்
தத்துவான் பரியினில் தழைத்த வீரனே
புற்றினில் ஈசல்போல் பொங்கி ராக்கதர்
இத்தனை மகுடவர் ஈர்த்தி டென்றனள்.

துர்க்கை திருநீறு கொடுத்து, "குதிரையோடு தோன்றிய வீரனே புற்றீசல் போல் பொங்கிவரும் இராட்சதர்களை அழித்துவிடு" என்றாள்.

பூதி - திருநீறு. **பரி** - குதிரை. **ஈர்த்திடு** - அழித்திடு.

740. வன்னியன் போர்க்கோலம் பூணுதல்

காரணி மலர்ப்ப தம் கருத்தில் எண்ணியே
வாரணி யூர்மக வான்ம ருகனும்
சீரணி நற்புயச் சேனை சூழ்ந்திடக்
கூரமர்க் கோலமும் கொண்டு நின்றனன்.

துர்க்கை பாதத்தைக் கருத்தில் நினைத்து வெள்ளை யானை ஏறிய இந்திரன் மருகனான வன்னியன், வலிய புயங்களுடைய படைகள் சூழ போர்க்கோலம் கொண்டான்.

வாரணி - வெள்ளை யானை. **மகவான்** - இந்திரன்.

741. அசுரரும் போருக்கு வருதல்

அளவிடாக் கருவியை அணிவ குத்துளம்
களியுடன் இருப்பஅக் கயவர் ஏறின
தளங்கரு வரையெனச் சமரை நாடியே
கிளம்பின முகிலிடி கெர்ச்சித் தென்னவே.

படைகளை அணிவகுத்து வீரவன்னியன் மகிழ்ச்சியோடு இருந்தான். அரக்கர் ஏறிய யானைகள் கரியமலை போல் போரை நாடி மேகம் போல் கர்ச்சித்துப் புறப்பட்டன.

கயவர் - அசுரர். **தளம்** - யானைப்படை **கருவரை** - கரியமலை **முகில்** - மேகம்.

742. அசுரர் வன்னிய வீரனை வளைத்தல்

குணதிசைப் பரவைகள் கொதித்தெ ழும்பியே
தணிபுவியி லனைத்தையும் சாடுதல் மானவே
திணிபுய அவுணரும் சினமுடன் எழும்பி
மணிமுடி வீரனை வளைந்து கொண்டனர்.

கிழக்குத் திசைக் கடல்கள் கொதித்து எழும்பிப் பூமியிலுள்ள அனைத்தையும் பற்றி எறிதல் போல் பருத்த தோள்களையுடைய அசுரர் சினம் கொண்டெழும்பி முடிபுனைந்த வன்னிய வீரனை வளைத்துக் கொண்டனர்.

பரவை - கடல்.

743. இருவரும் போர் புரிதல்

வந்திடும் கயவரை மன்னன் சேனைகள்
பந்திகள் திரட்சியாய்ப் பலரை வாளியால்
சிந்தினர் அவுணரும் சீறித் தண்டினால்
அந்தர மழையென அமர்செய் தாரரோ.

வந்த அசுரர் கூட்டங்களை வன்னியன் படைகள் வரிசை வரிசையாக அம்பினால் சாய்த்தன. அசுரர்களும் ஆகாயத்திலிருந்து மழைபொழிவது போல் தண்டாயுதத்தால் போரிட்டனர்.

கயவர் - அசுரர். **சேனை** - படை. **பந்தி** - வரிசை. **அந்தரம்** - வானம் **அமர்** - போர்.

744.

ஒருவருக் கொருவர் பின்னோடி டாமலமர்
பொருதுவர் ஒருகணப் பொழுதின் முன்னமே
கருமுகில் அவுணரைக் காற்றிற் பூளையென்
றுருகிட எய்தனர் உக்கிர வீரரே.

ஒருவருக்கொருவர் தோல்வியடையாமல் போர் செய்தனர். ஒரு கணத்தில் வன்னிய வீரர் கரிய மேகம் போன்ற அசுரரைக் காற்றில் பூளைப் பூப் பறப்பதுபோல் பறக்கச் செய்தனர்.

முகில் - மேகம். **உக்கிர வீரர்** - வன்னியர்.

745. அசுரர் வீழ்தல்

மதியணி சடையான் வரத்தில் தோன்றிய
கதிசிலை வீரரின் கனத்த வாளியால்
பதியவு ணப்படை பாரில் வீழ்ந்திட
அதிபகட் டொலியென அவுணர் ஓடினார்.

சந்திரனைத் தலையில் அணிந்த சிவபெருமான் கொடுத்த வரத்தினால்தோன்றிய வன்னிய வீரரின் அம்பினால் ஊரிலுள்ள அசுரப்படை அவ்வளவும் இறந்துபட, கடல் ஒலியென அசுரர்கள் ஓடினார்கள்

மதி - சந்திரன். **பகட்டொலி** - ஆரவாரம்

746. கெம்பாசுரன் அம்பு மழை பொழிதல்

கண்டனன் கெம்பனும் கண்சி வந்திட
சண்டனா மென்னலே தனுவ ளைத்துவான்
அண்டரும் நடுங்கிட அழலி னன்றிரள்
கொண்டலின் மழையெனக் கொதிப்ப
பெய்தனன்.

இதைப்பார்த்த கெம்பாசுரன் கண்சிவக்க சண்டனைப் போலவே வில்லை வளைத்து வானத்திலுள்ள தேவரும் நடுங்க, மேகத்திலிருந்து மழை பொழிவது போல அக்கினி அம்பு மழை பொழிந்தான்.

தனு - வில். **அண்டர்** - தேவர். **கொண்டல்** - மேகம்.

747. வன்னிய வீரன் எதிர்த்தல்

கூற்றுவன் அவுணரின் கொடிய வெஞ்சரம்
சீற்றிய விழியினால் கண்டு நீறெழ
நாற்றிசை அதிர வான்தேர் நடத்தியே
பாற்றிப வீரனப் பதிதன்முன் சென்றான்.

எமன்போன்ற அசுரரின் கொடுமையான அம்புகளைப் பார்த்து விழிகளிலே சீற்றம் எழ, நான்கு திசையும் அதிரத் தேர்நடத்தி வன்னிய வீரன் அவ்வசுரன் முன் சென்றான்.

கூற்றுவன் - எமன். **சரம்** - அம்பு **வெஞ்சரம்** - கொடிய அம்பு. **பார்த்திப வீரன்** - வன்னிய வீரன். **பதிதன்** - இழிவானவன். அசுரன்.

748. இருவரின் யுத்தம்

கடுஞ்சிலை வளைத்த ழற்கணை தொடுத்துவிண்
ணடுங்கிட வக்கினிச் சரமொன் றெய்தனன்
கொடுந்தொழி லவுணனும் கொதித்தி டுங்கணை
படிந்திடச் செய்தொரு வாளி எய்தனன்.

கொடிய வில்லை வளைத்து நெருப்புக் கணை தொடுத்து ஆகாயம் நடுங்கிட ஒரு அக்கினி அம்பை விட்டான் வன்னியன். அசுரனும் அவ்வக்கினி அம்பை அடக்குவதற்கு ஒரு அம்பு எய்தான்.

சிலை - வில். அழல்கணை, **அக்கினிச்சரம்** - தீ அம்பு. **கணை, வாளி, சரம்** - அம்பு.

749.

வந்த வெஞ்சரம்தனை மன்னர் வீரனும்
சிந்திட வருண வாளியைத் தெரிந்தனன்
அந்திரு ளாகிய அரக்க னும்பெரிய
மந்தர மொன்றிளை மன்னன்மே லெய்தனன்.

வன்னிய வீரன் வந்த கொடிய அம்பு கீழே விழுமாறு வருணாஸ்திரம் விடுத்தான். இருள் போன்ற அரக்கன் பெரிய மலையொன்றைப் பிடுங்கி வன்னியன் மேலெறிந்தான்.

வெஞ்சரம் - கொடிய அம்பு. **வருண வாளி** - மழை அம்பு. **மந்தரம்** - மலை.

750. கெம்பாசுரன் இறத்தல்

வரையென வொலிபட வீரன் வாடிட
கருவிதண் டாயுதம் கணத்தில் ஏவினன்
விரிவுள சக்கரம் வீச தண்டினைப்
பொருதிகெம் பீரனைப் பிளந்தெ றிந்ததே.

அசுரன் விட்ட மலையைப் பிளந்தான் வன்னியன் அசுான் தண்டாயுதத்தை ஒரு நொடியில் விட்டான். வன்னிய வீரன் சக்ராயுதம் வீச அது தண்டாயுதத்தை அழித்துக் கெம்பாசுரன் உடலைப் பிளந்து எறிந்தது.

வரை - மலை.

751. மற்ற அசுரரும் அழிதல்

கெம்பவு ணன்சிரம் கெஞ்சித் தேவிழ
பம்புசெ யுவணரை வாளி யொன்றினால்
கும்ப லாகக் குவிக்க கெம்பனின்
தம்பியாங் கெசமுகன் சமருக் கேகினன்.

கெம்பாசுரன் தலை அலறிக்கொண்டே கீழே விழ, தீங்கு செய்யும் அசுரர்களை ஓரம்பு விட்டு கும்பலாகக் குவித்தான் வன்னியன். இதனைக் கண்ட கெம்பனின் தம்பி கெசமுகன் போருக்கு வந்தான்.

சமர் - போர். **ஏகினன்** - வந்தான்.

24. ஆறாம் நாள் கெஜமுகாசுரன் யுத்தச் சருக்கம்

752. கெஜமுகாசுரன் அம்பு விடுதல்

மானிடன் ஒருவனால் மடிந்த ராக்கத
சேனையிற் கரந்திடும் தீயர் சூழ்ந்திட
வானுலகு அதிர்ந்திட வளைந்து வெஞ்சிலை
வேனையின் வாளியை விடுத்திட் டானரோ.

ஒரு மனிதனால் அழிந்த அரக்க சேனையில் எஞ்சிய அசுரர் சூழக் கெஜமுகாசுரன் வானுலகம் அதிர வில்லை வளைத்து அம்பை விட்டான்.

மானிடன் - மனிதன். **கரந்திடும்** - ஓடி ஒளிந்து எஞ்கிய.

753. கெஜமுகாசுரன் தேர் அழிதல்

வீரன்மேல் விடுஞ்சரம் வெம்மை யாகஇப்
பாரெலாம் எரிந்திடும் பான்மை கண்டுளம்
சீறியோர் சூலமும் தெரிப்ப சாடியே
தேரினை உடைத்திடத் தீரன் கண்டனன்.

வன்னிய வீரன்மேல் விட்ட அம்பு வெப்பமாகிப் பூமியெல்லாம் எரியக் கண்ட வன்னிய வீரன் கோபம் கொண்டு சூலாயுதம் ஒன்றை எறிந்தான், அது கெஜமுகாசுரன் தேரைப் பிளந்தது. இதனைக் கண்டான் கெஜமுகன்.

சாடி - விட்டு. **தீரன்** - கெஜமுகாசுரன்

754. இன்னொரு தேரும் உடைதல்

மற்றொரு தேரில் அவுணன் நண்ணவும்
அற்றையும் உடைத்தனன் அழகன் சீறியே
குற்றம்ஆன கெஜமுகன் கொம்பில் வானரம்
பற்றிப்பாய்ந் ததுஎன ரதத்தில் பாய்ந்தனன்.

வேறொரு தேரில் அசுரன் வர அதையும் உடைத்தான் வன்னியன். கெஜமுகன், கொம்பில் குரங்கு பாய்வது போல் வன்னியனின் தேரில் பாய்ந்தான்.

நண்ண - வர. **அற்றையும்** - அதையும். **கொம்பு** - மரக்கிளை. **வானரம்** - குரங்கு. **ரதம்** - தேர்.

755. மீண்டும் போர் செய்தல்

ஆயிரம் இரதம்மேல் அவுணன் ஏறவும்
காயும்வெஞ் சிலையினால் கடிந்த வீரன்மேல்
பேய்முகம் பினாகமாம் பகழி தூற்றிட
நேயமாம் பிண்டி பாலத்தில் தடுக்கினான்.

ஆயிரம் ரதமேல் அசுரன் மீண்டும் மீண்டும் ஏற வன்னியன் அத்தனையும் தன் அம்பால் அழித்தான். அசுரன் பேய்முக வில்லினால் அம்பு விட வன்னியன் பிண்டி, பாலம் ஆகியவற்றால் தடுத்தான்.

பினாகம் - வில். **பகழி** - அம்பு

756. கஜமுகாசுரன் இறத்தல்

அங்குசா யுதந்தனை எடுத்து வீரன்மேல்
சங்கரன் கணையினால் தடுத்துத் தன்சரம்
துங்கவான் உலகில் துள்ளி விழுந்திட
கங்குலாம் கஜமுகன் கணத்தில் மாய்ந்தனன்.

கெஜமுகன் அங்குசாயுதத்தை வன்னிய வீரன்மேல் விட வன்னியன் சங்கரன் அம்பினால் தடுத்தான். தன் அம்பை ஏவ, வானுலகில் துள்ளி விழுந்து இருள் போன்ற கஜமுகன் ஒரு நொடியில் இறந்தான்.

துங்க - மேன்மையான **கங்குல்** - இரவு.

757. அரக்கர் இனம் மடிதல்

அந்தோ எனச்சூரன் அழுதிடவும்
குந்தா யுதம்கோடி தெரித்திடவும்
சிந்தா குலமாகிய தீயரினம்
பந்தாக வந்திருந்து மடிந்ததுவே.

அசுரர்கள் "ஐயோ" என்றலறவும், ஈட்டி போன்ற ஆயுதங்கள் கோடி. கோடியாய் உடைந்திடவும், துயரம் அடைந்த அசுரர்கள் கூட்டம் கூட்டமாய் வந்து இறந்தனர்.

குந்தம் - ஈட்டி. **சிந்தாகுலம்** - துயரம்.

758. வன்னிய வீரன் சிங்கம்போல் காட்சியளித்தல்

முண்டங்கள் உருண்டிட முத்தன் மகன்
கொண்ட னனொரு கோளரி ஆர்த்தென
கண்டோர் இவனொரு கால வயிரவனென
அண்டா திருக்க அதிசினம் ஆகினனே.

அசுரர்களின் முண்டங்கள் தரையில் உருளவும், வன்னிய வீரன் ஒரு சிங்கம் கர்ச்சித்தது போல் முழங்கினான். பார்த்தவர்கள் இவன் ஒரு கால பைரவன் என்று சொல்லும்படி மிகவும் கோபா வேசத்துடன் காணப்பட்டான்.

கோளரி - சிங்கம்.

25. ஏழாம்நாள் கும்பாசுரன் யுத்தச் சருக்கம்

759. கும்பாசுரன் பிரமாஸ்திரம் விடுதல்

கும்பா சூர னென்னும் கொடுமதி
அம்போ ருகமென ஒருஅஸ் திரமும்
சம்பே சன்தன யன்மேல் எய்திடவும்
செம்பா ரெனும்தே வர்திகைத் தனரே.

கும்பாசுரன் என்பவன் கொடுமையான மதி படைத்தவன். பிரமாஸ்திரம் எடுத்து செபித்துச் சிவன் மகனான வன்னியன்மேல் வீசிடவும் தேவர்கள் திகைப்படைந்தனர்.

அம்போருகம் - தாமரை. இங்கு தாமரையில் வீற்றிருக்கும் பிரமன் **அஸ்திரம்** - அம்பு. **சம்பேசன்** - சிவபெருமான். **தயைன்** - மகன். **செம்பார்** - செம்மையான பூமி நல்வபூமியில் வாழ்பவர் என்று சொல்லப்படும் தேவர்கள்.

760. நாகக்கணை விடுதல்

சஞ்சீவி எனும்கணை சாற்றிடவும்
பஞ்சாகிப் பரந்திப் புவிபடிய

நஞ்சாமென நாகக் கணைதொடவும்
செஞ்சாய கலுழனாற் சேதித்தனனே.

வன்னிய வீரன் சஞ்சீவி அஸ்திரம் தொடுக்கப் பிரமாஸ்திரம் பஞ்சாய்ப் பறந்து, பூமியில் விழுந்தது. கும்பாசுரன் நஞ்சு கக்கும் கொடிய நாகாஸ்திரத்தை விட வன்னியன் கருடாஸ்திரத்தால் அதனை அழித்தான்.

தொட - விட. **கலுழனாற்** - கருடாஸ்திரத்தால். **சேதித்தனன்** - அறுத்தான்.

761. கும்பாசுரன் இறத்தல்

பாந்தட் கணையால் அரவம் பரவக்
காந்திக் கலுழன் கணையால் மடிய
வேந்தன் பிரமாஸ் திரம்வீ சிடவே
பேர்ந்தான் உயிர்பில் வியனென அவுணன்.

பாம்புக்கணை விட்டதும் பல பாம்புகள் பரவ, ஒளி வீசும் கருடக் கணையால் அவை அனைத்தும் மடிய வன்னிய வீரன் பிரமாஸ்திரம் விட அசுரன் நீசனாகி உயிரிழந்தான்.

பில்லியன் - நீசன். **பாந்தள்** - பாம்பு.

762. சம்புமாலி வருகை

அத்தன் தருமஸ் திரம்வீர மதாம்
சுற்றும் படைதூ ளதுசெய் திடவே
சித்தம் கொடுசம் புமாலி யனும்
குத்தங் கனிதா மெனகுன் றினனே.

வன்னிய வீரன் விட்ட அஸ்திரங்களால் அசுரர்கள் படை தூளாகி விடவே சம்புமாலி என்னும் அரக்கன் "ஆ! குற்றம் வந்து விட்டது" எனச் சண்டை செய்ய வந்தான்.

அத்தன் - சிவன். **சம்புமாலி** - வாதாவியின் மகன்.

26. எட்டாம்நாள் சம்புமாலி யுத்தச் சருக்கம்

763. தந்தையின் செருக்கினால் தீமை வந்தது எனச் சம்புமாலி உணர்தல்

தாதைத்தவ மண்டிய தாஷ்டியினால்
தீதுற்றனம் என்று சினந்திடஇப்
போதிற்படை போக்கினன் போதனெழுத்
தீதுற்றன வோஎனும் சிந்தையினான்.

"என் தந்தை தவம் செய்து வரம் பெற்றதினால் செல்வமும் படைகளும் பெற்றான். தேவர்களுக்குத் துன்பம் செய்ததனால் சிவன் கோபமுற்று வன்னியனை அனுப்பி இப்படைகளை அழித்தான். பிரமன் எழுதிய எழுத்து இது போலும்" என்று நினைத்தான் சம்புமாலி.

தாதை - தந்தை. **தாஷ்டி** - செருக்கு. **போதன்** - பிரமன்.

764. ஆணவம் ஆகாதெனக் கூறுதல்

சதியான அமைச்சர் உரைத்தவிதம்
மதிகேடனன் வானவர்பா லிடர்செய்
ததினால கன்றிட்ட தாண்மையென்றும்
சதமல்ல வெனாவுரை சாற்றினனே.

"சூழ்ச்சியுள்ள அமைச்சர்கள் சொல்கேட்டு, தன்மதியில்லாத தந்தை தேவர்களுக்குத் துன்பம் செய்தான். (அதனால் இத்துன்பம் நேரிட்டது) யாருக்குமே ஆணவம் நிலையான தன்று" என்றான் சம்புமாலி.

சதி - சூழ்ச்சி. **மதிகேடனன்** - தன்னறிவின்றிப் பிறர் சொல் கேட்டுக்கெட்டும் போகிறவன். **வானவர்** - தேவர் **இடர்** - துன்பம். **ஆண்மை** - ஆணவம். **சதம்** - நிலை. **சாற்றினன்** - கூறினான்.

765. "சிறியதந்தையர் இறந்து விட்டனர் சகோதரர் மூவரும் இறந்தனர். நான் மட்டும் பிழைத்து என்னபயன்" என்று கூறுதல்

சிறுதந்தையர் நால்வரைச் சாடினபின்
பெருகும் தளமொன்றும் பிழைத்தில
உரியதுணை மூவர் மடிந்தனர்யான்
ஒருவன் தனித்தென்ன உயிர்பிழையோம்.

"சிறிய தந்தையர் நால்வரும் இறந்து விட்டனர். பெரிய படையும் அழிந்து விட்டது. கெம்பன், கெஜமுகன், கும்பன் ஆகிய மூன்று சகோதரரும் அழிந்துவிட்டனர். நான் ஒருவன் மட்டும் பிழைத்து என்ன பயன்?" என்றான் சம்புமாலி.

சாடின - அழித்த. **தளம்** - படை

766. தேவர்கள் மகிழ்ந்தனர் எனல்

வீரன்திணி தாணுவர் சேர்ந்திலர்விண்
பாரில்களி கூர்ந்தனர் பட்டவுணர்
சோரிக் கடலோடிச் சுற்றக் கடலில்
நீரிற் கலத்தல் நிண்ணயமே.

"வீரவன்னியன் படைகள் யாரும் மாளவில்லை வானில் தேவர்கள் மகிழ்ந்தனர். அசுரர்கள் மட்டும் இறந்து அவர்கள் இரத்தம் ஆறாக ஓடிக் கடலில் கலந்தது" என்றான்.

767. வன்னியனே வலிமையானவன் எனல்

ஆதாளி யெனுமவு ணாதியரை
தாதை சதிசெய்து தழைத்தனனால்
போதார் மதிசூடும் புனிதன்தரு
நாதன் வலியே நலமாமென்னே.

"பேய்முகமுடைய அசுரர் கூட்டம் தந்தை சதியால் வளர்ந்தது. பிறை சூடும் பெருமானின் மகன் வலிமையால் அழிந்தது. வன்னியனின் வலியே சிறந்தது" என்றான்.

ஆதாளி - பேய். **தாதை** - தந்தை. **மதி** - பிறை. **புனிதன்** - சிவன். **நாதன்** - வன்னியன்.

768. நாமும் இறப்பதே நலமெனல்

எண்ணிலா அவுணர் இறந்த னர்துணை
எழிலினை அகன்று விண்போந்தார்
கண்ணினிற் கண்டு கடிந்திடா திருப்ப
காசினியோர் இகழ் சைப்பார்
அண்ணல் வாதாவி சூரனோ டுரைப்ப
அகங்கொதித் தாக்கினை அளிப்பன்
திண்ணமா போர்செய் திவன்கரத் தாலென்
சீவனை இழப்பதே செயமாம்.

"எண்ணற்ற அரக்கர் இறந்தனர். துணைவர்கள் அழகிழந்து வானுலகம் அடைந்தனர். இவற்றையெல்லாம் கண்டும் நாம் சண்டை செய்யாமல் போனால் பூமியில் உள்ளவர் இகழ்வர். பெருமைக்குரிய தந்தையிடம் கூறினால் அவர் சினந்து தண்டனை அளிப்பார். வீரத்தோடு போர்புரிந்து இவ்வன்னியன் கையால் இறப்பதே நலமாம்" என்றான்.

அவுணர் - அரக்கர். **விண்போந்தார்** - இறந்தார். **கடிந்திடாதிருப்ப** - போர் செய்யாமல் இருக்க. **காசினி** - பூமி. **அகங்கொதித்து** - சினந்து. **ஆக்கினை** - தண்டனை. **சீவன்** - உயிர்.

769. சம்புமாலி போரைத் தொடங்குதல்

என்றுரைத் துணர்ந்தோர் இரதமே லேறி
இணையிலாச் சிலைதனை வளைத்து

குன்றினை யுருக்கும் கொடியவேல் நாட்டி
கோதிலான் உருவினைச் செபித்து
வென்றிசேர் வீரன் உரமதில் நாட்ட
வீரனவ் வேலினைத் தடுத்து
நன்று சூலம் எடுத்துவிட் டெறிந்தான்
நடுங்கின நாற்றிசை மாதோ.

இவ்வாறு பலவும் கூறிய சம்புமாலி அறிவு தெளிந்து ஒரு தேரில் ஏறினான். ஒப்பற்ற வில்லை வளைத்து மலையைப் பிளக்கக் கூடிய ஓர் வேலாயுதத்தைப் பூட்டி நாணேற்றி குற்றமற்ற கடவுளின் மந்திரத்தைச் செபித்து, வெற்றி பொருந்திய வன்னிய வீரனின் மார்பில் எய்தான், அவன் வேலைத் தடுத்து, ஒரு சூலத்தை விட்டெறிந்தான். நான்கு திசைகளும் நடுங்கின.

இரதம் - தேர். **சிலை** - வில். **கோது** - குற்றம். **உரம்** - மார்பு **நான்கு + திசை** - நாற்றிசை

770. சம்புமாலி இறத்தல்

விடுத்த சூலமும் மாவனல் கொதித்தெழுந்து
மேவல் சம்புமா லியனை
நடுக்கியே சென்னி துடித்திட வாட்டி
நன்றிடர்த் தீயரை நறுக்கி
வடுப்பட வீரர் வலக்கரத் துறைய
வானவர் பூமலர் பொழிய
இடுக்கமற் றிருந்தார் இவர்கள் இங்கிருப்ப
இயக்கர்கோன் இயலினை இசைப்பாம்.

வன்னியன் விட்ட சூலம் நெருப்பைக் கக்கிக் கொண்டு வலிய சம்புமாலியனை நோக்கி வந்து அவன் தலை துடிக்க அறுத்து மற்ற அரக்கர்களையும் அழித்து வன்னிய வீரனின் வலக்கரத்தில் வந்தது வானவர் பூமாரி பொழிந்தனர். வன்னிய வீரர் துன்பமில்லாமல்

இருந்தனர். இவ்வாறு இவர்கள இங்கு இருக்க வாதாவியின் நிலையைப் பார்ப்போம

சென்னி - தலை **இடுக்கம்** - துன்பம **இயக்கர்கோன்** - அரககன, வாதாவி

771. வாதாவி பிள்ளைகள் இறந்த செய்தி அறிதல்

பேசிடா மூலபலம் எனும் படையும்
பிள்ளையும் மடிந்தனர் என்றே
நேசமாம் ஒற்றர் உரைத்திடக் கேட்டு
நீனிற மலையெனும் வாதாவி
பாசமும் அற்றுப் பலமெலாம் ஒடுங்கி
பதித்திடும் மணிமுடி தெறிப்ப
ஆசமாம் புதல்வர் எழிலினை நினைந்தே
அரற்றுவன் அந்தரம் நடுங்க.

அளவிட முடியாத மூலபலப் படையும், பிள்ளைகளும் இறந்தார்கள் என்று உண்மையான ஒற்றர்கள் கூறக்கேட்ட, நீலமலை போன்ற உருவுடைய வாதாவி, பாசமும் இல்லாமல் பலமும் இழந்து, தலையில் உள்ள முடி தெறித்து விழ,புதல்வர்களை நினைத்து ஆகாயமும் நடுங்க அரற்றினான்

நேசம் - அன்பு மிகுந்த **அந்தரம்** - வானம்

772. பிள்ளைகளை நினைத்து அரற்றுதல்

என்னுயிர்த் துணைவர் இறந்தனர் எனவே
எழிலகற் றிதயமும் சோரும்
முன்னமே வலிமை மிகுந்திட உரைத்து
முடிபுனைந் திரதமேற் கொண்டு
தன்னிணை யில்லா ரதகஜ துரக
தளத்துடன் ஏகிய களிப்பால்

இன்னலை அகற்ற எண்ணினன் கோடி
எரிகணை மூட்டினீர் என்றான்.

என் உயிர் போன்ற பிள்ளைகள் இறந்தனர் என்று மனம சோர்ந்த அசுரன் "உங்கள் வலிமை யெல்லாம் கூறி முடி சூடடித் தேரேறி இணையற்ற தேர், யானை, குதிரை, காலாட் படைகளுடன் நீங்கள் புறப்பட்டதைப் பார்த்து மகிழ்ந்து துன்பம் நீங்கியதென நினைத்தேன் என் வயிற்றில் நெருப்பை மூட்டி வீட்டீாகளே" என்று அழுதான்

ரதம் - தேர் **கஜம்** - யானை **துரகம்** - குதிரை **தளம்** - காலாட்படை

773.

குன்றெனும் தோளும் கோரமா முகமும்
குனிசிலை கரமதின் எழிலும்
வென்றிசேர் மலரும் வீரமும் அவனி
மிகுத்திடும் சூறையும் விடுத்து
இன்றமர் புரிந்தே இணையிலா நரனால்
இடருற லாகுமோ மகனே
நன்றுரை இனிமேல் நவின்றிடா ஒருவர்
நானிலத் திலையென உரைத்தான்.

"குன்றை யொத்த தோளும், பயங்கரமான முகமும், வளைந்த வில்லைப் பிடித்த கையின் அழகும், வெற்றி பொருந்திய முகமும், வீரமும், உலகமெலாம் கொள்ளை அடிக்கும் தொழிலையும் விடுத்து ஒரு மனிதனிடம் போர்புரிந்து இறந்தீர்களே! எனக்கு இனிமேல் நல்லது சொல்ல யாருமே இல்லையே!" என்று புலம்பினான்

குனிசிலை - வளைந்தவில் **வென்றி** - வெறறி **அவனி** - உலகம **சூறை** - கொள்ளை **அமர்** - போர் **நரன்** - மனிதன **இடர்** - துன்பம் **நானிலம்** - பூமி

774.

பண்டு வில்வலனைப் பரமுனி முடிக்க
பசுபதி மலரடி பணிந்தே
அண்டொணா தரணி அருந்தவம் புரிந்து
அதிலுற்ற வலிமையான் பெற்றேன்
நன்றுள நகரய்யன் அளித்த பின்னர்
நலமிகு சுங்கனால் உமைப்பெற்றேன்
பொன்தொடி மனைவியர் அளித்திட அவனும்
உலகினில் நிரம்பிட மிகுந்தேன்.

முனிவர் வில்வலனைச் சீரணம் செய்தவுடன், சிவனைப் பணிந்து நான் சொல்ல முடியாத கடுமையான தவம் செய்து பெருமை மிகு வரங்களைப் பெற்றேன் இரத்தினாகரம் நகரை அவன் அளித்தபின்னர் சுக்ரனால் உங்களைப் பெற்றேன் அச்சுக்ரனே பொன்னாலான வளையல் அணிந்த பல மனைவியரை அளிக்க மகிழ்ச்சியோடு வாழ்ந்தேன்

பண்டு - முன்பு. **பரமுனி** - அகஸ்தியர் **பசுபதி** - சிவபெருமான் **அண்டொணா** - செயய இயலாத **தரணி** - பூமி **சுங்கன்** - சுக்ரன்

775. "ஆணவம் அடங்கினேன்" எனல்

அட்ட பாலகரும் அமரரும் அரியும்
அயனும் உலகினில் அடக்கி
மட்டிலா தேவர் தொழில்புரிந் தேத்த
மணிமுடி புனைந்தர சுற்றேன்
இட்ட பாக்கியமும் குறைவிலா தளித்த
என்னுடைய செல்வமே இனியென்
கொட்டமு மடங்கிக் குன்றினேன் அந்தோ
கோதிலாச் சிறுவரே யென்றான்.

"எட்டுத் திசைக் காவலர்களையும், தேவர்களையும் திருமாலையும், பிரமனையும், அடக்கினேன் தேவர்கள் எனக்கு ஏவல் புரிய அரசு வீற்றிருந்தேன் எல்லா பாக்கியங்களையும் குறைவிலாது அளித்த என் செல்வங்களே! குற்றமற்ற சிறுவர்களே! இன்று என் ஆணவம் அடங்கிக் குன்றினேன்" என்றான்

அட்டபாலகர் - எட்டுத்திசைக் காவலா **அரி** - திருமால் **அயன்** - பிரமன் **கொட்டம்** - ஆணவம்

776. "பிள்ளையில்லா வீடு பயனற்றது" எனல்

நகரிருந் தென்ன நவமணி அமைச்சர்
நங்கையர் அரசுக ளென்ன
பகைவரைக் கடிந்தென் பலமிகுத் தென்ன
பரிசையென் பாலர்கள் இல்லா
அகமிருந் தென்ன அவமென உரைப்பார்
அறிவுள ஆகம நெறியோர்
உகமை மெய்யாகத் தெளிந்தன ளென்றே
ஒளிவுள தனயரே என்றான்.

"நகரிருந்தாலென்ன? நவமணிகள் இருந்தாலென்ன? அமைச்சர், மனைவியர், அரசு இவையெல்லாம் இருந்தென்ன? பகைவரை அழித்து என்ன பயன்? பலமிருந்து என்ன பயன்? பிள்ளைகள் இல்லா வீடு இருந்தாலும் வீணென உரைப்பார்கள் நல்ல நூல் உணர்ந்தோர். இப்பேச்சு உண்மையென்பதை இப்போது உணர்ந்தேன் பிள்ளைகளே!" என்றான்

கடிந்து - அடக்கி **அகம்** - வீடு **அவம்** - வீண் **ஆகமம்** - நூல் **உகமை** - உவமை

777. "நானிதோ வருகிறேன்" எனல்

கரிபரி இரதம் கணக்கில்லா தளமும்
கணத்தினில் கயிலையோன் அளித்த

பெருமைசேர் பாலர் அருமையைத் தள்ளி
பேருல கதனில் நானிருந்தேன்
இருசிற கில்லாப் பறவைபோல் ஆனேன்
எனக்கொரு துணைகளு மில்லா
அரசிருந் தென்ன அடுக்குமோ மகனே
யானிதோ வருகின்றே னென்றான்.

"யானை, குதிரை, தேர், அளவற்ற காலாட்படைகளையும் ஒரு நொடியில் சிவபெருமான் அளித்த பெருமை மிகுந்த புதல்வர்களான வன்னியர்கள் அழித்தார்கள். இப்போது இருசிறகுமற்ற பறவையானேன். துணையில்லா அரசிருந்து என்ன பயன்? இது அடுக்காது, நானும் இதோ போருக்கு வருகிறேன்" என்றான்.

கரி - யானை. **பூரி** - குதிரை. **இரதம்** - தேர். **தளம்** - படை.

778. மந்திரிகள் தேற்றுதல்

மன்னன் வாதாவி மனத்துயர் அடைய
மந்திரி மார்களும் தேற்றி
நன்னெறி உரைப்பாய் நாதனே என்ன
நடத்தை செய்திருந்தது மானால்
சின்னவா னவரும் நரர்களும் நகைப்பார்
திணிபுயம் அகன்றிட லாமோ
பன்னகா பரணன் பாலனைக் கொன்று
பதிவுள மகிழ்ச்சி சேரென்றான்.

அரசன் வாதாவி இவ்வாறு பலவிதமாக அரற்றக் கண்டு அமைச்சர்கள் தேற்றி "என்ன காரியம் செய்தீர்கள் மன்னரே! இவ்வாறு சோர்வடைந்து அரற்றினால் தேவர்களும், மனிதர்களும் நகைக்க மாட்டார்களா? தோள்வலி குறையலாமா? பாம்பை அணிந்த பரமனின் பிள்ளைகளைக் கொன்று மகிழ்ச்சி அடைவீர்களாக!" என்றனர்.

வானவர் - தேவர் **நரர்** - மனிதர். **பன்னகம்** - பாம்பு. **பன்னகாபரணன்** - பாம்பை அணிந்தவன்.

779.

வீரமு மகன்ற வேந்தரைக் காணேம்
மேதினி புரந்தனர் அனேகர்
தீரமு மிகுத்த கீர்த்தியை உணர்ந்து
சிந்தனை அடைவதோ இன்றென்
சூரமும் அறிந்து கழியுவை உன்றன்
துயரமும் அகற்றுவீர் இந்த
தாரணி முழுதும் உன்கரத் திடுவேன்
தனுவின் வலிமையா லென்றான்.

"இந்தப் பூமியை அநேகர் ஆண்டுள்ளார்கள். வீரம் அகன்றவர் யாருமில்லை. தீரம் மிகுந்த நீங்கள் உங்கள் புகழை உணர்ந்து கொள்ளாமல் சிந்தனையும் துயரமும் அடையலாமா? அதனை அகற்றுங்கள். எங்கள் வில்லின் வலிமையால் இவ்வுலகம் முழுவதும் உங்கள் கையில் போடுவோம்" என்று கூறினார்கள்.

மேதினி - உலகம். **புரந்தவர்** - காப்பாற்றியவர். **தாரணி** - பூமி. **தனு** - வில்.

780. சூரபத்மன் வலிமை கூறுதல்

உந்தனா மாமன் சூர பத்மன்தன்
உடலி ழந்திட மனஉரஞ்செய்
தந்தவே லிரக மஞ்ஞை ஆக்கந்தன்
தயங்கவே சித்திபெற்றது கண்டும்
இந்தநாள் நிரையம் அழுங்குவ துளதோ
இன்பமும் துன்பமு மிரண்டும்
வந்ததை அநுப விப்பது செயங்கொல்
மனுநெறி இயற்கையா மென்றார்.

"உன்னுடைய மாமன் சூரபத்மன் தன் உடலை இழந்தும் மனவலிமையுடன் முருகன் கை வேலால் பிளக்கப்பட்டு மயிலாகிச் சித்தி பெற்றான். அதைக் கண்டும் இந்த நாள் நீ கவலைப்படலாமோ? இன்பமோ துன்பமோ வருவதை அநுபவிப்பது மனுநீதி யாகும்" என்று கூறினார்கள்.

உரம் - வலிமை. **நிரையம்** - கவலை. **அழுங்குவது** - மூழ்குவது.

781. "பகைவரை வென்று வா" எனல்

அண்டரின் பகைவர் அவுணரை அடக்க
அரனளித் தனுப்பினார் உனது
மண்டலத் தணுகி மரபமர் பொருதி
மாலையை அணிந்தவர் இருப்ப
அண்டொணா துயரம் அடைந்தனை இன்றே
அவரிடம் ஏகியமர் பொருதி
தண்டனை அளித்துத் தரணியைப் புரந்தால்
தனயரும் இன்பம் பெறுவார்.

"தேவர்களின் பகைவராகிய அசுரரை அடக்கச் சிவன் வன்னியர்களை அனுப்பினார் அவர்கள் இங்கு வந்து போர் புரிந்து வெற்றி மாலை சூடியிருக்க நீ சொல்ல முடியாத துயரத்தோடு அமர்ந்திருக்கலாமோ? இப்போதே அவர்களோடு போர் புரிந்து அவர்களைத் தண்டித்து இப்பூமியை ஆண்டால் இறந்த உன் புதல்வரும் இன்பம் அடைவர்" என்றனர்.

பொருதி - போர் செய்து. **புரந்தால்** - காத்தால்

782. வாதாவிமனம் தேறிப் போருக்குப் புறப்படுதல்

அமைச்சர்கள் உரைக்க அவுணர்கோன் இதயம்
அனல்மெழுக் காமென உருகி
தமக்கதி வீரர் பூமியில் உளரோ
தயாபரன் மகனைச் சதித்தே

நிமையினிற் கோயில் அணுகுவன் நிருதர்
நேமியில் இறந்தனர் அல்லால்
சமர்செயும் மூல பலந்தனை அழைத்தே
தளமெடுத் தேகென விசைத்தான்.

அமைச்சாகள் கூறியதைக கேடடதும் வாதாவியின் இதயம் நெருபபில் பட்ட மெழுகாய் உருகியது "என்னை விட வீரன் உலகில் இருக்கிறானா? அமபரமசிவன மகனைக கொன்று ஒரு நொடியில் திரும்புவேன் என்று கூறி, போரில் இறந்தவர் போக எஞ்சியுள்ள மூல பலப்படையை அழைததுப போருககுப் புறப்படுக" என்றான்

சதித்து - கொனறு **நிமை** - இமைப்பொழுதில் **கோயில்** - மாளிகை **தயாபரன்** - சிவன் **நிருதர்** - அரக்கர் **அமர்** - போர் **தளம்** - படை

27. ஒன்பதாம் நாள் மூலபலச் சண்டைச் சருக்கம்

783. மூலபலப் படை திரளுதல்

தாதாவின் சிரத்தை ஏந்தும்
தாணுவின் அருளி னாலே
வேதா வியங்கி வீரன்
விடுஞ்சிலை மாரிக் கஞ்சி
வாதா விகிளை களெல்லாம்
மடிந்ததோர் வாறு கேட்டு
தீதாய மூல மொன்றுஞ்
சேனைகள் செனித்த தன்றே.

பிரமனின் தலையைக் கையில் ஏந்தும சிவனின் அருளால் வன்னிய வீரன் விடும் அம்பு மழைக்கு அஞ்சி வாதாவி சுறறமெல்லாம் இறந்ததைக் கேட்டு எஞ்சியிருந்த மூலப்படைகள் ஒன்று திரண்டன

தாதா - பிரமன **சிரம்** - தலை **தாணு** - சிவன **வேதா** - வேதம **மாரி** - மழை **கிளை** - சுறறம் **செனித்த** - பிறபபெடுத்தன இஙகு ஒன்று திரண்டன.

784. மூலபலப்படைத் தலைவன்

மூலபலம் தனக்கதிபன்
முகவீர சிங்கன்என்பான்
காலவிடம் போலெழுந்து
கண்சிவந்து நிலம்நோக்கி
கோலமுடன் ஆர்ப்பரித்து
குஞ்சிரிப்புக் கொண்டுமிக
நீலநெருப் பாமெனவே
நிற்பனமேற் களித்து நின்றான்.

மூலபலப்படைக்குத் தலைவன் முகவீர சிங்கன் என்பவன் ஆலகால விடம்போல் எழுந்து கண்சிவக்க நிலத்தைப் பாாத்து, ஆரவாரம் செய்து, சிரித்து, நெருப்புப் போல் மகிழ்ந்து நின்றான்.

காலவிடம் - ஆலகாலவிடம்

785. வீரசிங்கன் சேனைகளை வாதாவி காணுதல்

பாரமருஞ் சூரர்களும் பரிகரித்தேர் வெள்ளமுடன்
ஓரணியாய்ச் சூழ்ந்துகொண்டே ஒருவர்களும்
திகையாமல்
சேரவெங்கும் சூழ்ந்துகொண்டு சிலமன்னர்
திடுக்கிடவே
வீரசிங்கன் தானைகளை மிகுந்தவா
தாவிகண்டான்.

அசுரர்கள் ஒரு வெள்ளம் சேனை ஓரணியாகத் திரண்டு மன்னர் அஞ்சும்படி நின்றனர் இவ்வாறு திரட்டிய வீரசிங்கன் சேனைகளை வாதாவி பார்த்தான்.

786. "மூலபலப்படைகளை போருக்கேகுங்கள்" எனல்

வேலையெனும் தீவுகளில் மிகமூல பலங்களையும்
காலனிவ னாமென்றே களித்தசிங்கன்
தனைநோக்கி
சூலமழு வாளினால் தூளாக்கி வன்னியரை
ஞாலமதில் வாருமென்றே நவின்றிடவே
ஏகலுற்றான்.

கடல் சூழ்ந்த தீவுகளில் உள்ள எல்லா மூலபலங்களையும் சேர்த்து எமன் போல் நின்ற வீரசிங்கனை நோக்கி, வாதாவி "உங்கள் சூலம், மழு, வாட்களால் வன்னியரைத் தூளாக்கி வாருங்கள்" என்று கூறினான் மூலபலப்படைகள் புறபபட்டனர்

வேலை - கடல **காலன்** - எமன **ஞாலம்** - உலகம

787. மூலபலப் படைகளின் ஆரவாரம்

கொக்கரிகள் கொட்டிவண் கோவென்
றுதிர்த்திடுவம்
மிக்கவட வாக்கினியின் விழிபொறிகள் சிந்திடுவம்
மைக்கடலில் நீர்கொதிக்க மனத்தீய்கள்
எழுப்பிடுவம்
திக்குகளைக் கையேந்தித் தீண்டிடுவம் என்பாரும்.

"கொக்கரி கொட்டிக் கோவென்ற ஆரவாரத்துடன் செல்வோம் வடவைத்தீ போல் விழிகளில் நெருப்பு சிந்திடுவோம். கடலில் உள்ள நீர் கொதிக்கும்படி மனத்தில் நெருப்பு பொங்க எல்லாத் திக்குளையும் கையில் ஏந்தித் தீண்டிடுவோம்" என்று கூறுபவரும்.

788.

எத்தியெத்தி எறியுமென்பர் ஈசன்மகன் ஆனவனைக்
குத்திகுத்தி ஆவிதனைக் கூற்றுவன்பால்
அனுப்புமென்பார்

கத்திக்கத்திச் சேனையெல்லாம் தூள்கள்ஆக்கிட
வாரீர்
கைத்தலத்தின் படையேவி களிபுரி வீரென்பாரும்.

"ஈசன் மகனான வன்னியனை எத்தி எத்தி எறியுங்கள்! குத்திக்குத்தி அவனுடைய உயிரை எமனிடத்தில் அனுப்புங்கள்! சேனைகளைத் தூள் தூளாக்குஙகள்! கையிலிருக்கும் அம்பை ஏவுங்கள்" என்று சொல்பவரும்

எந்தி - உதைத்து **கூற்றுவன்** - எமன

789.

இடிஇடியு மவனையென எல்லோரும் ஏகியே
பிடிபிடியு மென்று பிதற்றியே அலைவாரும்
குடிகுடியும் வந்துதிரம் கொடும்தாகம்
தீருமென்று
அடிஅடியும் என்பாரும் அளவிலா மூலபலம்.

"வீரவன்னியனைப் பிடித்து இடியுங்கள்,! பிடியுங்கள்! எனப் பிதற்றுபவரும்,. வந்து இரத்தம் குடியுங்கள், தாகம் தீருங்கள்! அடியுங்கள்!" என்பவரும், அளவிலா மூலபலப்படையினர்.

உதிரம் - இரத்தம

790. மலைகளைப் பிடுங்குதல்

சிங்கமுகம் புலிமுகமும் செந்நாயும் தகரியும்
தங்கள்தங்கள் இனத்துடனே சத்தசமுத் திரமென்ன
பொங்கிஎழுந்திட அமரர் புந்தியெல்லாம்
சோர்ந்திடவே
அங்கையால் மலையனைத்தும் அடியோடே
பிடுங்குவாரும்.

சிங்கமுக அசுரர், புலிமுக அசரர், செந்நாய் முக அரசுரர் ஆட்டுமுக அசுரர் ஆகியோர் தங்கள் தங்கள் கூட்டத்துடனே ஏழு கடல் போல சத்தம் போட்டுக கொணடு பொங்கியெழுந்து வந்து விட்டார்கள். தேவர்கள் எல்லாம் சோர்ந்து போய்விட்டார்கள் அசுரர்கள் கையினால் பெரிய பெரிய மலைகளைப் பிடுங்கி வீசத் தொடங்கினார்கள்

சத்தம் - சபதம் - ஏழு **சமுத்திரம்** - கடல **அமரர்** - தேவர்

791. மேகத்தைப் பிழிதல்

ஆவென்று வாய்திறந்து ஆகாரம் இல்லையென்று
கோவென்று வாய்திறந்து கொண்டலினைப்
பிழிவாரும்
சீவன் துடிக்குதென்று சிவன்படையைத்
தின்கவென்றும்
போவென்றும் வாவென்றும் பூதலம்தூள்
ஆக்குவோரும்.

ஆவென்று வாய் திறந்து "உணவு இல்லையே" என்று வாயினால் மேகத்தைக் கடித்துப் பிழிவார்கள். "ஐயோ உயிர் போகுதே! சிவனுடைய படையைத் தின்போம் வாருங்கள்!" என்பார்கள் போ, வா என்று பூமியைத் தூளாக்குவார்கள்.

ஆகாரம் - உணவு **கொண்டல்** - மேகம் **பூதலம்** - பூமி

792. "யாரடா அவன்? உன்னைக் கொல்வேன்" எனல்

ஆரடா என்பாரும் அரன்சேயே வாருமென்றும்
பாரடா என்வலியைப் பஞ்சுபோல் நசுக்குமென்றும்
போரடா செய்ய வந்தாய் பொன்னுலகில்
உயிர்போக்கித்
தாரடா அணிவனென்றும் சாற்றியே நெருங்கினரே.

"யாரடா அவன்? சிவன் மகனே! வா! எனவலிமையைப் பாரடா! பஞ்சுபோல் நசுக்குவேன் போரடா செய்ய வந்தாய்? உன்னுடைய உயிரைச் சுவர்க்கத்துககு அனுப்பி மாலை அணிவேன்" என்று கூறி வன்னியன் படையை நெருங்கினர்

பொன்னுலகு - சுவர்க்கலோகம **தார்** - மாலை **சாற்றி** - கூறி

793. வன்னியன் இராமபாணம் விடுதல்

மன்னவர்கள் திடுக்கிடவே வாரியென வளைந்து
கொண்டு
உன்னிஉயர் வீரசிங்கன் உக்கிரமாய்க்
கணைதெரிப்ப
மன்னவரும் வானோரும் மாவிராமன்
கணைதெரிப்ப
வன்னரக்கர் சேனையெல்லாம் மறிந்துபொடி
ஆக்கியதே.

அரசர்கள் திடுக்கிடும்படியாக, கடல்போல் வளைந்து வீரசிங்கன் அம்பு விட வன்னியரும், தேவரும் இராமபாணம் விட அசுரர்சேனைகள் பொடிப்பொடியாய் நொறுங்கின.

வாரி - கடல் **உக்கிரம்** - கோபம

794. அசுரர்கள் மலைகளையும் உலக்கைகளையும் எறிதல்

அத்திரமும் சிலைவரையும் ஆக்கிரம் உலக்கைகளும்
பக்தியுடன் அவுணாதி படையேவ பார்த்திபனும்
சுத்திவரும் கணைநெறிய தொகுத்திசிலை
அவரவரைக்
குத்திகுத்தி யெறிந்திடவும் கோடையிடிபோல்
வீழ்ந்தார்.

அததிரங்களையும். வில்லையும விட்டதல்லாமல் மலைகளையும், உலக்கைககளையும் எறிந்தார்கள் அசுரர்கள். வன்னியனும் வரிசையாக அம்புகளை விட்டு அவரவரைக் கொல்ல எல்லோருமம கோடையிடிபோல் விழுந்தார்கள்.

அத்திரம் - அமபு **சிலை** - வில **வரை** - மலை

795. அரக்கர் சேனை அழிதல்

தாவிய கணைக ளொன்றால்
தானைகள் சோரி தேங்க
தீவினில் அடைந்த சேனை
சென்னிகள் உருண்டு ஓட
ஆவியும் சோர்ந்து மாய
அவுணரும் கணைகள் ஏவ
பாவினம் புகழும் வீரன்
பகழியாற் பட்ட தன்றே.

வன்னிய வீரனின் கணை ஒன்றினாலேயே அசுரர்களின் குருதி பெருக, இடையில் தீவிலுள்ள படைகளின் தலைகள் மிதக்க, உயிர் சோர்ந்து இறக்கும் அசுரர்கள் மீண்டும் கணைகள் ஏவ பாக்கள் புகழக் கூடிய வீர வன்னியன் அம்பினால் அவை அழிந்தன.

கணை, பகழி - அம்பு **சோரி** - இரத்தம **சென்னி** - தலை **ஆவி** - உயிர் **பட்டது** - அழிநதது

796. வீரசிங்கன் எதிர்த்தல்

அடர்ந்ததோர் சேனை எல்லாம்
அரைக்கணம் தனில்ம டிக்க
திடம் சொலும் வீரசிங்கன்
சிலைதனை வளைத்து வாளி
படிந்திட வீரன் மீதில்
பாணங்கள் சொரியக் கண்டே

நடந்திவன் எதிரோ வென்றே
நயனனும் நடப்ப தானான்.

வந்தபடைகள் எல்லாம் அரைநொடியில மடிய அதுகண்ட வீரசிங்கன வில்லை வளைத்து அமபு பூட்டி வன்னிய வீரன மேல சொரிந்தான் "இவன நமககுச சமமாவானோ" என்று வன்னிய வீரன் நடநதான்

நயனன் - வன்னியன்

797. வன்னியனும் வீரசிங்கனும் போர்புரிதல்

கரியுடன் அரியெதிர்த்த கதையெனப்
படையினாலே
இருவரும் பொருதவீர னிவன்மகா தீரனென்ன
பரியதில் ஏறும்வீரன் பாலனிவ னாமென்றே
இருநில விசும்புதன்னில் இயம்பியே இருந்தாரம்மா.

யானையுடன் சிங்கம் எதிர்த்த கதைபோல இருவரும் சண்டையிட, தேவர்கள், "ஆகா இவ்வீரன் மகாதீரன் குதிரையில் ஏறும் இக்சிறுவன் தான் வன்னிய வீரன்" என்று கூறினார்கள்

கரி - யானை **அரி** - சிங்கம். **பொருத** - போர்செய்ய **பரி** - குதிரை **இருநிலம்** - பூமி **விசும்பு** - ஆகாயம்

798.

இருவரும் பகழிஏவ இயக்கனாம் வீரசிங்கன்
பருவுடல் அழுந்தச்சீறி பார்த்திபன் மீதெதிர்ப்ப
குருதியும் பெருகிஓடக் கொண்டனன்
வரையதென்ன
பொருதியே அமர்புரிந்து பொங்கியே
கோபம்ஆனார்.

வீரசிங்கனும் வன்னிய வீரனும் ஒருவர்மேல் ஒருவர் அம்பு விட, அரக்கனாகிய வீரசிங்கன் பெரிய உடலில் அம்புதைக்க அவன் சினந்து எதிர்த்தான் அவன் உடலிலும் இரத்தம் பெருகி ஓடியது. இருவரும் மலைபோல மோதிச் சண்டை செய்து கோபம் ஆனார்கள்

பகழி - அமபு **இயக்கன்** - அரக்கன் **பரு** - பெரிய **குருதி** - இரத்தம **பொருதி** - போர்புரிந்து

799. வீரசிங்கன் வன்னியனை அறைகூவல்

ஆகாயம் தனில்மறைந்தே அசுரனும் ஆர்ப்பரித்து
போகாதே வன்னியனே பொருகவா
என்றுசொல்லி
ஏகோபித் தசுரருடன் ஏவுகின்ற பகழிதன்னை
ஓகாரம் தன்னுடனே உருத்திரனும்
துணித்துவிட்டான்.

ஆகாயத்தில் மறைந்த வீரசிங்கன் ஆரவாரம செய்து "வன்னியனே போகாதே! போர்செய்ய வா" என்று அழைத்து அம்பு விட, வன்னியனும அதை ஓவென ஒரு நொடியில துணித்து விட்டான்

பொருக - போர்செய்ய **பகழி** - அம்பு **உருத்திரன்** - வன்னியன்

800. வன்னியன் மீண்டும் அம்பு விடல்

வந்துவந்து வளைந்துகொண்டு
வலியசண்டை விளைத்திடவே
அந்தரத்தேர் உடையதொரு
அக்கினியில் வரும்வீரன்
சந்திரனை அணிந்தசிவன்
தந்தகொடுங் கணைதெரித்தே
மந்திரத்தை உன்னிவிட
மாரியெனச் சொரிந்ததுவே.

மீண்டும மீண்டும் வந்து வளைந்து வலிய சண்டையிட்டான் வீரசிங்கன் ஆகாயத்தில் நிற்கும் தேருடைய வன்னியனும் சந்திரனை அணிந்த சிவன் கொடுத்த அம்புகளை ஆராய்ந்து அவற்றில் ஒன்றைச் செபித்துவிட மழைபோல் பொழிந்தது.

அந்தரம் - ஆகாயம் **மாரி** - மழை

801. வீரசிங்கன் இறத்தல்

சொரிந்ததுவே கணைமாரி துஞ்சினரே சூரரெலாம்
அரிந்தனவே வீரசிங்கன் அடல்பொருத வயிறழிந்து
சரிந்ததுவே குடர்நசுங்கித் தரணிதனில் அபயமென
வரிந்திடவே சிரமுருள மகிழ்ந்தனரே வானவரும்.

அம்புமழை பொழிந்தது அசுரர்கள் இறந்தனர். வீரசிங்கனின் வலிமை வாய்ந்த வயிறுகிழிந்து குடல் நசுங்கிச் சரிந்து அபயம் எனப் பூமியில் விழுந்தான் வன்னியனின் தலைகீழே உருள தேவர் மகிழ்ந்தனர்

கணைமாரி - அமபுமழை **அடல்** - வலிமை **தரணி** - பூமி

802. யானை, குதிரை, அசுரர்கள் அழிதல்

அரிந்தமுடி உருண்டிடவே அசுரனுட னேசிவந்த
சிரங்களுடன் களிறுபரி தேர்முரிந்து கலகலென
உரம்கிழிந்து குடர்சரிய ஓங்கியவாள் பிடித்திருந்த
கரங்கள்துணித் திடஅவுணர் கால்மாடாய்
வீழ்ந்தனரே.

வீரசிங்கனின் அரியப்பட்ட தலை உருண்டவுடன். யானை. குதிரை தலைகளும் சிவந்த குருதியுடன் உருண்டன தேர் கலகல என முரிந்தது மார்பு கிழிந்து. குடர் சரிந்து. வாள் பிடித்த ஓங்கிய கைகள் வெட்டுப்பட அசுரர்கள. கால்பக்கமும் தலைப்பக்கமும் மாறி மாறி விழுந்தனர்

களிறு - யானை **பரி** - குதிரை **மாடு** - பககம

803. பூதங்கள் ஆர்ப்பரித்தல்

ஊரவுணர் உலகிருப்ப உகாந்திரமாய் வந்தபடை
தூரிவரும் மதயானை சுந்தரத் தேர்களுமே
வீறிட்டுப் படுகளத்தில் மிகமுறிந்து தானோடக்
கூறியவர் விருதூத கொக்கரிக்கும் சிலபூதம்.

முன்பு வந்த அசுரர் படை இறந்து போக, யுகமுடிவு காலம்போல் மேன்மேல் பெருகிவரும் படைகளும், மதயானைகளும், வீறிட்டு அழிய, தேர்கள் முறிந்து ஓட, வீரவன்னியனை வாழ்த்தி ஒலிக்கும் ஒலிகளைக் கேட்டுத் துர்க்கையின் பூதங்கள் கொக்கரித்தன

உகாந்திரம் - யுகமுடிவு **சுந்தரம்** - அழகிய

804. பேய்களின் ஆட்டம்

கொட்டிசில பேயாடக் குருதிப்புனல் பேயிருக்க
கெட்டியிந்தப் பிணங்களென்று கெலிப்பாகும் சிலபூதம்
கட்டியங்கள் தான்கூறிக் களிப்புடனே நின்றாடி
திட்டமுடன் கைகொட்டிச் சிரித்துநிற்கும் சிலபூதம்.

சில பேய்கள் கைகொட்டி ஆடின சில பேய்கள் இரத்த வெள்ளத்தில் நீந்தின சிலபேய்கள் இந்தப் பிணம் கெட்டியாய் உள்ளது என்று கெக்கலித்தன கட்டியம் கூறி களிப்போடு கைகொட்டிச் சிரித்து நின்றன சில பூதங்கள்

குருதிப்புனல் - இரத்தவெள்ளம் **கெலிப்பு** - எககாளமிடுதல் வெற்றி முழக்கமிடுதல்

805. பேய்களின் மகிழ்ச்சி

துத்தியன்றோ நமக்கென்று சொல்லியது சிலபூதம்
மெத்தவுமே சோறுகறி வெகுசமைய வாச்சுதென்று

சித்திரமாய் ஆர்ப்பரித்துச் சீறிமகம் வெவ்வேறாய்
பத்திரமாய் அசுரர்மிகப் பாசமுடன் சமைத்தனரே.

அசுரர் உடலைத் துத்தியாக வாயில் வைத்து ஊதிய சிலபூதங்கள "ஆ! நமக்குத் துத்தி கிடைத்தது" என்றன "சோறு, கறி சமையல் கிடைத்தது" என்றன. "வெவ்வேறாக நமக்கு அசுரன் படைத்து வைத்தான்" என்றன.

துத்தி - ஊதுகருவி

806. பேய்கள் விருந்து படைத்தல்

சோறுகறி யெனவுரைத்துச் சுருக்கெனவே
பந்திவைத்து
வீறுபெறும் பூதம்பால் விருந்திடுமாம் சிலபூதம்
பார்கழுகு பறந்தாடப் பரிதிதனை மறைத்தேகி
நாறுமலர் அணிவீரன் வாழியென நவின்றிடுமே.

சில பூதங்கள் சோறு கறியெனப் பெரிய பூதங்களுக்குப் பந்திவைத்து விருந்து படைத்தன சில பூதங்கள் கழுகுகள் பறக்கச் சூரியனை மறைத்து "மணம் வீசும் மலரணிந்த வீரவன்னியன் வாழ்க" வென வாழ்த்தின

வீறு - பெருமை **பரிதி** - சூரியன் **நாறும்** - மணம் வீசும்

807. எமதூதர் சோர்வில்லாமல் பணி செய்தல்

வன்னியர்கள் நமக்கின்று வயிறார விருந்தளித்தார்
என்னுஞ்சில பூதமாம் ஏவலர்கள் கரஞ்சலிக்க
மன்னவுணன் உயிர்தனையே வளர்பாசத்
தாலணைந்து
சொன்னசமன் தொல்லுகில் சோர்வின்றிச்
சேர்த்தனரே.

வன்னியர்கள் இன்று நமக்கு வயிறார உணவளித்தனர் என்று கூறின பூதங்கள் எமதூதர்கள் கைவலிக்க வலிக்க அசுரர் உயிர்களைப் பாசக்கயிற்றால் கடடி, எமனுலகில் சோர்வில்லாமல் சேர்த்தார்கள்

ஏவலர் - எமதூதர் **சலிக்க** - களைததுப்போக **கரம்** - கை **பாசம்** - பாசக்கயிறு **சமன்** - எமன்

808. நரிகள் தாளம் போடுதல்

அம்பலவர் கூத்தெனவே அதிபூதம் தானாட
வம்புகூகை பாடிடவே வலிமையுள நரியினங்கள்
சம்புமகம் தனிலுதித்த தந்திரனைச் செயம்கூறி
இன்பமுற கைத்தாளம் இசைத்துப் புகழ்ந்தனவே.

நடராசப் பெருமான் கூத்தைப் போல் பூதம் கூத்தாட கோட்டான், ஆந்தை அலற, வலிமையான நரிகள் சம்பு முனிவர் யாகத்தில் உதித்த வன்னிய வீரனின் வெற்றி கூறிக் கைத்தாளம் போட்டுப் புகழ்ந்தன

கூகை - ஆந்தை **மகம்** - யாகம் **தந்திரன்** - வன்னியன்

809. தூதர்கள் வாதாவியிடம் கூறுதல்

பூதமது பரிசுதவ பொருதுமிக சூரருட
ஓதைஎங்கும் சிவந்ததென உதிரவெள்ளம் தனைப்பற்றும்
நாதனருள் வன்னியரால் நலம்கலைந்தோம் எனமொழிந்து
காதகன்வா தாவியிரு கழலடியில் பரவிநின்றே.

அசுரர் இரத்தம் வெள்ளமாய் ஓட அதைச் சில பூதம் சில பூதங்களுக்குப் பரிசாக அளிக்க, பெற்றுக் கொண்ட பூதங்கள் அதைப் பற்றிக் கொண்டன. "வீர வன்னியனால் நாம் நலமிழந்தோம்" எனத் தூதர்கள் கொடிய வாதாவியிடம் சென்று கூறினர்

ஓதை - ஓசை **காதகன்** - கொடியவன

810. இனி நமக்கு நல்லகாலம் இலையெனல்

வேலையென எழுந்துவந்த வீரசிங்கன் தன்னுடனே
மூலபல சேனையெல்லாம் முடிந்தனவன் னியராலே
காலம்நமக் கிலையெனவே கழறுகின்ற வாய்மை
நீலவிழி பொறிபறக்க நிருதர்கோன் இயம்புவனே.

கடல்போல் எழுந்துவந்த வீரசிங்கனுடன் மூலபல சேனை முழுவதும் அழிந்தது இனி நமக்கு நல்ல காலம் இல்லை என்றனர் தூதர். இதைககேட்ட வாதாவி தன்னுடைய நீலவிழியில் நெருப்புப் பொறிபறக்கக் கூறுவான்

வேலை - கடல **கழறுகின்ற** - கூறுகின்ற **நிருதர்கோன்** - அசுரர் தலைவனான வாதாவி

811. வாதாவி காளியை அழைத்தல்

துணைவர்களும் காதலரும் சுற்றமுடன் இறந்துவிழ
பணைபுயத்தோன் நான்காண பரமனிட
பாலர்களும்
கணைஏவினார் இனிமேல் காளிதனை
அழையுமென
இணையிலாத் தூதர்சொல ஏகினார் மாகாளி.

"தம்பியரும, பிள்ளைகளும், சுற்றமும் இறந்துவிழ பருத்த தோளையுடைய நான்காண பரமசிவனின் பாலர்கள் அம்பு விட்டனர் இனிமேல் காளியை அழையுங்கள்" என்று கூறினான் வாதாவி தூதர்கள் சென்று காளியிடம் சொல்லக் காளி புறப்பட்டாள்

துணைவர் - தம்பியர் **காதலர்** - பிள்ளைகள **பணை** - பருத்த

812. வாதாவி காளியிடம் தான் போருக்குப் போக வரம் கேட்டல்

கண்டடியில் விழுந்தவுணன் கழறுவான் என்தாயே
அண்டரென நமைக்காத்தே ஆரமுதம் அளித்தாயே
இண்டுசிறு பாலரினால் இயக்கர்மடிந் தாரினிமேல்
மண்டமரில் யானேக வரந்தருக வெனப்பணிந்தான்.

"காளியின் திருவடியில் விழுந்த அசுரன் என்தாயே! தேவர்போல் எம்மைக் காத்தாய். அமுதம் அளித்தாய். இன்று இவ்வன்னியச் சிறுவனால் அசுரர் மடிந்தனர் நான் போருக்குச் செல்ல வரம்தா" என்று கேட்டான்

மண்டு + அமர் - முளுமபோர்

813. காளிபடையெடுக்க உத்தரவு அளித்தல்

என்னசொன்னாள் மாகாளி
எதிரான படைதோற்கும்
சொன்னவிதி முக்கணனார்
தோகையெனு மீன்மடவாள்
தன்னுடைய கிருபையினால்
தாரணியில் சார்ந்துவந்த
வன்னியர்மேல் படைஏவி
மண்டமர்செய் திடுவம்என்றாள்.

காளி என்ன கூறினாள்? "நமக்கு எதிரான படை தோற்கும முக்கண்ணனாகிய சிவனின் மனைவியாகிய துர்க்கை அருளால் பூமியில் படையெடுத்து வந்த வன்னியர் மேல் படையெடுப்போம்" என்றாள்

முக்கணன் - மூனறு கண்ணையுடையவன் சிவன்.

28. பத்தாம் நாள் காளிக்கும் துர்க்கைக்கும் யுத்தச் சருக்கம்

814. காளி வன்னியரை அழிப்பேன் எனக் கூறுதல்

மன்னவனும் மகிழ்ந்திருப்ப மாகாளி ஓடிவந்து
பன்னரவம் சூடியருட் பாலகரின் சேனையெல்லாம்
சின்னமற வேயமரர் சேர்த்துவிடு வேனெனவே
வன்னியரும் கண்டிதென மாய்கையென
மனத்தோர்ந்தார்.

வாதாவியும் மனமகிழ்ந்திருக்க, மகாகாளி "பாம்பு சூடும் பரமனின் பாலனையும் அவன் படைகளையும் இருந்த இடம தெரியாமல் வானுலகம் சேர்த்து விடுவேன்" என்று ஓடிவந்தாள் இது கண்ட வன்னியா. "இது என்ன மாயமோ?" என்று மனத்தில் நினைத்தனர்.

பன்னரவம் - பாமபு **சின்னம்** - உரு அடையாளம **மாய்கை** - மாயை

815. துர்க்கையிடம் வன்னியன் கூறுதல்

துர்க்கையிடம் போயணைந்து சூழ்ச்சியென்ன
சொல்தாயே
மைக்கடல் போலெழுந்த அவுணன் மாயையிதோ
வெனக்கூற
நக்கனருள் பாலகனே நாரியெனும் மாகாளி
மிக்கவமர் செய்திடவே வெகுண்டுற்றான்
இக்கணமே.

காளி வருவதைக் கண்ட வன்னியன துர்க்கையிடம் சென்று, "கரிய கடல்போல் வருகிறதே! இது என்ன சூழ்ச்சி? அசுரன் மாயையா?" என்று கேட்க, துர்க்கை "பரமசிவன் அருள் பாலகனே! மகாகாளி போர்செய்வதற்காக வருகிறாள்" என்றாள்

நக்கன் - சிவன

816. துர்க்கை "நீ இங்கே இரு நான் போர் செய்வேன்" எனல்

பாலகனே படையெடுப்பேன் பரிந்திருப்பாய்
இவ்வாறே
காலனென எழுந்திருந்து கடியதுர்க்கை கோபமுடன்
ஞாலமெங்கும் படர்ந்ததென நல்கிமா காளியின்
மேல்
சூலமதை ஏவிவிடத் துலங்குகடல் சுவறியதே.

"பாலனே! நான் போரிடுகிறேன். அதுவரை இங்கேயே இரு" எனக் கூறிய துர்க்கை, எமனைப்போல் கோபமடைந்து, ஒரு சூலத்தை எடுத்து உலகம் முழுவதும் படர்ந்தது போல் காளியின்மேல் விட்டாள் கடல் நீர் வற்றியது

காலன் - எமன் **ஞாலம்** - உலகம் **சுவறியது** - வற்றியது

817. துர்க்கை காளி யுத்தம், பேய்கள் ஓடல்

துர்க்கையுட னேகாளி தொடர்ந்துயுத்தம்
செய்திடவே
பக்கமெல்லாம் பலகோடி பரந்தந்த அலகைவர
அக்கணமே தான்பார்த்தே அடைந்ததுர்க்கை
உரம் நாடி
சக்கரத்தை விட்டேவ சரிந்தலகை முறிந்ததுவே.

துர்க்கையும் காளியும் யுத்தம் செய்ய துர்க்கை பக்கத்தில் துணையாகப் பலகோடி பேய்கள் வந்தன இதைக் கண்ட காளி அவற்றின் மார்புக்குச குறிவைத்துச் சக்கரப் படையை ஏவினாள் பூதங்கள் அஞ்சி ஓடின

அலகை - பேய் **உரம்** - மார்பு **முறிந்தது** - ஓடின

818. காளி கடலில் ஒளிதல்

முறிந்தலகை தானோட முடிகிளந்த மாகாளி
எறிந்த திகி ரியுமார்ப்ப இடிகளெனப் புவிநடுங்க
செறிந்தவொரு திகிரிதனைச் செஞ்சரத்தால் விலக்கிவிட
எறிந்ததுபோல் மாகாளி ஏகியே கடலொளித்தாள்.

பேய்கள் ஓடியதும் செம்பட்டை மயிர் படைத்த காளி, எறிந்த சக்கரத்தின் முழக்கம் இடிபோல் கேட்க பூமி அதிர, சக்கரத்தைத் துர்க்கை ஒரு அம்பால் விலக்கிவிட, எறியப்பட்டது போல் காளி கடலிலே போய் விழுந்தாள்

819. காளி மீண்டும் எழுந்து வருதல்

கடலினில் கரந்தகாளி கலக்கமுற் றெழுந்திருந்தே
அடலினில் பொருதிவெல்ல லாமென்றே அறிந்துகொண்டே
தடமுலையோ டிடையாடத் தணல்விழிகள் சிவக்க
கொடியஆலம் போல்கூடி கொக்கரித் தார்ப்பரித்தாள்.

கடலில் ஒளிந்த காளி கலக்கத்துடன் எழுந்து ஏதாவது செய்து வெல்வோம் என்று மார்பும் இடையும தள்ளாடி, விழிசிவக்க, ஆலகாலவிடம்போல் சீறிவந்தாள்

கரந்த - ஒளிந்த **ஆலம்** - விடம்

820. காளி ஆய்தம்விடத் துர்க்கை சக்கரம் விடுதல்

நெடும்படைக் கரத்தி லேந்தி
நெருப்பென விழிவி ழித்தே

இடிகள்போல் ஒலிப்ப ஏவ
எத்திசை யுள்ளோ ரேங்க
கடியவா னவரும் உள்ளம்
கலங்கிடத் துர்க்கை கண்டே
நொடியினிற் படையை நீக்கி
நொறுங்கிடத் திகிரி விட்டாள்.

ஆய்தத்தைக் கையிலேந்தி தீப்போல் விழித்து இடிஇடிப்பதுபோல் ஏவினாள் காளி. எல்லாத் திசையிலும் உள்ளவர் நடுங்க, வானவரும் உள்ளம் அஞ்ச, அப்படையைக் கண்ட துர்க்கை அதை நொறுக்கச் சக்கரத்தை ஏவினாள்.

படை - ஆயுதம **ஏங்க** - கலங்க **திகிரி** - சக்கரம்.

821. காளி திருநீறு தூவுதல்

திகிரிமா காளி தன்னைத்
திகைத்திடக் கொய்யும் போது
வகையிலா உடலும் சோர
மாழ்கியே எழுந்த காளி
பகைஅவு ணாதி தன்னைப்
பரிவுடன் எழுப்ப வேண்டி
நகையுடன் சங்கு நீற்றை
நானிலம் தூவி நின்றாள்.

சக்கரம் காளிதலையைக் கொய்யும்போது உடல் சோர்ந்து எழுந்த காளி இறந்த அரக்கர்களை எழுப்புவதற்காகத் திருநீற்றை மந்திரித்துச் சுற்றிலும் தூவினாள்

திகிரி - சக்கரம **சங்குநீறு** - திருநீறு

822. அரக்கர் உயிர் பெற்றெழுந்து மீண்டும் வன்னியனால் மடிதல்

நீற்றினால் நிருதர் சேனை
நேமியில் படிந்த தெல்லாம்
காத்திர மாயெ ழுந்தே
காவலன் மீதெ ரிப்ப
பார்த்திபன் அவர்கள் தம்மைப்
பருங்கணை அதனால் கொய்து
சீற்றமாங் காளி மீதில்
சிலையென வளைக்க லுற்றான்.

காளி விடுத்த திருநீற்றால் பூமியில் இறந்து கிடந்த அசுரர் சேனைகளெல்லாம் வலிமையோடு எழுந்து வன்னியன்மேல் பாய வன்னியன் அவர்கள் மீது அம்பு விட்டு அழித்துக் காளிமேல் வில்லை வளைத்தான்

நேமி - பூமி **காத்திரம்** - வலிமை **பார்த்திபன்** - வனனியன **பருங்கணை** - பெரிய அம்பு

823. காளி ஒளிதல், ஒற்றர்கள் வாதாவியிடம் கூற வாதாவி சோர்தல்

சிலைதனை வளைத்துவாளி
தெரித்திட சினந்த காளி
நலமுள சரத்தைச் சாட
நடுங்கிவிண் ஒளிப்பக் கண்ட
அலைகடல் ஒலிபோல் பேரி
அறைந்திட அவுணர் கோமுன்
நலமுள ஒற்றர் சொல்ல
நடுங்கியே மண்மேல் சோர்ந்தான்.

வில்லை வளைத்து அக்கினி அம்பு விட்டதைக் கண்டு காளி அக்கினி அம்பை எதிர்க்கப் பயந்து வானில் சென்று ஒளிந்தாள். இதனைக் கண்ட வன்னியர் சேனை அலைகடல் ஒலிபோல் பேரியை முழக்கினர் ஒற்றர்கள் சென்று வாதாவியிடம் இவற்றைச் சொல்ல வாதாவி சோர்ந்து வீழ்ந்தான்.

சரம் - அக்கினி அமபு **பேரி** - பெரியபறை

29. பதினோராம் நாள் வாதாவி யுத்தச் சருக்கம்

824. அமைச்சர் தேற்றுதல்

சோர்ந்தபின் அமைச்ச ரெல்லாம்
சூழ்ந்தவு ணாதி தம்மை
பாந்தமாய் உபச ரித்தே
பருஞ்சோபம் அதனைத் தேற்றி
வேந்தனே இதுநன் றாமோ
மேவலர் நகைத்தி டாரோ
சாந்தணி புயத்தாய் என்று
சாற்றிட அவுணன் சொல்வான்.

வாதாவி சோர்ந்ததும் அமைச்சர்கள் சூழ்ந்து கொண்டு வாதாவியை உபசரித்து, அவன் சோகத்தை அகற்றி "அரசனே இது நன்றாகுமா? பகைவர் சிரிக்க மாட்டார்களா? சந்தனம் பூசிய தோள்களை உடையவனே!" என்று சொல்ல வாதாவி கூறுவான்

பாந்தமாய் - முறையாக **சோபம்** - சோர்வு **மேவலர்** - பகைவர் **சாந்து** - சநதனம்

825. வாதாவி "போர் செய்ய இயலா" தென அமைச்சர்கள் "படையுளது" எனல்

மிக்கமா காளி அம்மை
விண்ணினில் அடைந்தாள் என்றே

தக்கசே னைகளு மின்றித்
தாஷ்டிக அமர்தான் செய்ய
ஒக்குமோ அமைச்சே யென்ன
உத்தம அரசே யென்று
மைக்கடல் போன்ற சேனை
வரவழைத் திடுவே மென்றார்.

“மாகாளி ஆகாயத்தில் மறைந்து விட்டாள் படைகளும் அழிந்து விட்டன. இனி போர் செயய முடியுமா அமைச்சே” என்று வாதாவி ஐயப்பட, அமைச்சர்கள் “உத்தம அரசே! கரிய கடல் போன்ற சேனைகள் மிகுதியாக உள்ளன. வரவழைக்கலாம்” என்றனர்

826. வாதாவியை அமைச்சர் போருக்கு அனுப்புதல்

மதியிலா அமைச்சர் ஐம்பதின்மரும் இருபால்
வணங்கியே ரணமுரச திர்ப்ப
கதியிலா இயக்கர் தளத்தினைச் சேர்க்க
கணக்கொரு வெள்ளமே யன்றி
பதியினிற் பாவை இருப்பதிண் புயத்தோர்
பதியெடுத் தேகென உரைத்தே
அதிக வாதாவி சூரனுக்கான
ரதத்தினை எழிலுடன் அமைத்தார்.

அறிவற்ற அமைச்சர் ஐமபது பேரும் இருபக்கமும் வணங்கி போர் முரசை அதிர்விக்க வேறு வழியின்றிப் படைகள் சேகரிக்கப்பட்டன ஒரு வெள்ளம் சேனையே வந்தது “பெண்களைத் தவிர மற்றவர்கள் புறப்படுக” எனச சொல்லி வாதாவிக்குத் தேரை அலங்கரித்தனர்.

மதி - அறிவு **பால்** - பக்கம் **ரணமுரசு** - போர் முரசு **கதி** - வழி. **பதி** - ஊர் **பாவை** - பெண்

827. தேரை அலங்கரித்தல்

ஆயிரம் அலகை பூட்டிய ரதத்தில்
ஆளியின் துவசமும் அமைத்து
தூயபால் விருது சுருட்டியும் கவிகை
துலங்கிட அவுணர்கோன் களிப்ப
பேயராம் அமைச்சர் உரைத்திடத் தேறி
பெருமுடி சிரத்தினில் மின்ன
வேயணி தோளில் புயங்களும் பணியும்
மிகுத்திடப் பூண்டனன் மாதோ.

ஆயிரம் பேய்கள் பூட்டிய ரதத்தில் யாளிக்கொடி அமைத்தனர் தூயவிருதுக் கொடிகளைத் தொங்க விட்டனர். குடை அமைத்தனர். அசுரன் மகிழ்வன எல்லாம் செய்து பேய் போன்ற அமைச்சர்கள் கெடுமதி கூற வாதாவியும் மனம் தேறித் தலையில் பெரிய முடியைக் கவித்துத், தோளில் ஆபரணம் அணிந்தான்.

அலகை - பேய். **துவசம்** - கொடி **கவிகை** - குடை **சிரம்** - தலை **பணி** - ஆபரணம்

828. வாதாவி அணிமணி பூண்டு ரதமேறுதல்

பெருத்திடு நுதலிற் சிந்துரம் தீட்டி
பெரியபீ தாம்பரம் போர்த்துக்
கரத்தினில் தனுவும் கணையுறைக் கூடும்
கனத்திடை யணிந்திரு குழையிற்
தரித்திடு மகர குண்டலம் இலங்கத்
தரணியில் கருவரை மீதில்
உருத்தெழு கதிரோன் எனரதம் ஏற
உத்தமி மயன்மகள் உரைப்பாள்

நெற்றியில் செந்துரம் தீட்டினான் பீதாம்பரம் போர்த்துக் கொண்டான். கையில் வில்லும், தோளில் அம்புக் கூடும் அணிந்து

கொண்டான் இரு செவிகளிலும் மகர குண்டலம் அணிந்து மலையில் உதிக்கும். சூரியனைப் போல் ரதம் ஏறினான் அப்போது அவன் மனைவியாகிய மயன்மகள் உரைப்பாள்

நுதல் - நெற்றி **சிந்துரம்** - பொட்டு **குழை** - செவி **கருவரை** - கரியமலை

829. மனைவி "போர் புரியாதே" எனல்

எனது நாயகனே இயக்கரின் தேவே
இறையவன் மலரடி புரிந்தே
கனமுரைத் தனனே கண்டனன் கனவு
கடுஞ்சமர் அளித்திடல் ஆகா
திணித மதிலி லிருந்து வானவரின்
இடுக்கணும் அகற்றுவது இயற்கை
எனவுரை மொழிந்தேன் ஏந்திழை யாளே
இகழ்ச்சியென் றெண்ணிடா தென்றாள்.

"என் தலைவனே! அசுரர் தலைவனே! இறைவனை எண்ணித் தவம்புரிந்தவனே! தீய கனவு கண்டேன். எனவே போர் புரிய வேண்டாம் தேவர்களின் துன்பத்தை நீக்கி விடுங்கள், பெண் சொல்கிறாளே என்று இகழ்ச்சியாய் எண்ணாதீர்கள்" என்றாள் மயனின் மகள்

திணிதமதில் - அரணமனை வாசல் **இடுக்கண்** - துன்பம் **ஏந்திழை** - பெண்

830. மனைவி தான் கண்ட கனவைக் கூறுதல்

குறைத்தலைக் கவந்தம் கூத்துகள் ஆட
குளிர்ந்த பூதங்களும் பாட
பரித்திடும் ஓரி நாயினம் வந்து
பதியினில் நிறைந்திட மாதர்

விரித்திடும் தலையோ டோலமிட் டலற
வெஞ்சமன் தூதரும் ஆடத்
திருத்தமாங் கல்யமும் இழந்திடக் கண்டேன்
தீதுவந் தடையுமே என்றாள்.

"தலையிலலாத முண்டங்கள் கூத்தாடவும் பூதங்கள் பாடவும், நரி, நாய்கள் ஊர் முழுவதும் நிறையவும், பெண்கள் விரித்த தலையோடு அலறி அழவும், எமதூதர்கள் நிறையவும், மாங்கல்யம் இழக்கவும் கனவு கண்டேன். தீமையே வந்தடையும்" என்றாள்.

ஓரி - நரி **வெஞ்சமன்** - கொடிய எமன்

831. "இங்கேயே இருங்கள்" எனல்

சுற்றமும் துணையும் சுதரினம் அமரில்
துணிந்திடக் கருத்தினில் உன்னி
மத்தக மருப்பு வார ணமுறும்
மகபதிக் கிடரினை அளித்தே
அத்தனன் மகவால் அருமுடி இழக்க
அமைச்சரின் போதனை உணர்ந்து
கத்தனே இனியான் காண்பது முளதோ
கருணை வைத்திருப்பதே கடனாம்.

"சுற்றத்தினரும், துணைவரும், குழந்தைகளும் போரில் இறந்து விட்டார்கள். இதனைக் கருத்தில் கொள்ளுங்கள். வெள்ளை யானையுடைய இந்திரனுக்குத் துன்பம் அளித்துச் சிவனின் மகனால் முடி இழக்க நேரிடும். அமைச்சரின் போதனையால் போர் புரியப் போகிறீர்கள் இனியான் உங்களைக் காண இயலுமோ? என் மீது கருணைவைத்து இங்கேயே இருங்கள்" என்றாள்

துணை - தமபிகள், **சுதர்** - பிளளைகள் **அமர்** - போர் **மத்தக மருப்பு வாரணம்** - வெள்ளை யானை **மகபதி** - இநதிரன **இடர்** துன்பம் **அத்தன்** - சிவன்

832. "தூதனுப்பிப் படையைத் திரும்பச் சொல்லுங்கள்" எனல்

மனைவிசொல் இகழா மெனமனத் துணரா
மண்ணினில் இருப்பதே அழகாம்
பனகபூ ஷணன்சேய் படைஎடுத் திடவும்
பகையிலா தூதினை அனுப்ப
கனவில துரைத்த கருத்தினை அறிய
கடல்கண் டேகியிங் குறைந்த
புனிதன் மேலெதிர்க்க பூமிமேற் சிரமும்
புரண்டிடும் பூபதி யென்றாள்.

"மனைவிசொல் கேட்பது இகழ்ச்சி என்று எண்ணாமல் இங்கேயே இருப்பது அழகாகும் பாம்பணி அணிந்த பரமன் மகன் படைகளை அனுப்பப் பகையின்றித் தூதனை அனுப்புங்கள் கனவில் வந்ததை அறிந்து நடவுங்கள் கடல் கடந்து இங்குவந்த தூயவன்மேல் எதிர்த்துச் சென்றால் தலை கீழே உருளும்" என்றான்

பனக பூஷணன் - பாம்பணிந்த சிவன் **பூபதி** - அரசன்

833. மனைவி சொல்லை மறுத்து வாதாவி புறப்படுதல்

துணைவரை இழந்து சுதனையும் அனுப்பத்
துணித்தனன் அரன்மகன் ஆனோன்
இணையிலா துனையும் மாற்றுவன் எனவே
எண்ணின எண்ணமும் அறுத்து
மணமலர் அணையும் மாதரின் அரசே
மாற்றல ருடனெதிர்க் காமல்
தணிவுடன் இருந்தால் இகழ்ச்சியாம் எனவே
தனித்ததேர் இவர்ந்துமே சார்ந்தான்.

"தம்பியரை இழந்து மகன்களை அனுப்ப அவர்களையும் கொன்றான் அரன்மகன். எனவே ஒப்பற்ற உன்னையும் கொல்வான் என்ற உன் எண்ணத்தை நீக்கி விடு மலரணை பொருந்தும் பெண்ணே! பகைவரை எதிர்க்காமல் உன்னுடன் இருந்தால் இகழ்ச்சியாம்" என்று சொல்லித் தேரேறிப் புறப்பட்டான் வாதாவி.

துணித்தனன் - வெட்டினன் **மாற்றுவன்** - வெல்வன **மாற்றலர்** - பகைவர் **இவர்ந்து** - ஏறி

834. வாதாவி வர நாரதன் அவனைக் கொல்லும்படி கூறுதல்

துந்துபி பேரி காளமும் அதிர
தூளிகள் எழும்பிட அதிர்ப்ப
மந்திரித் தலைவர் இரதமேற் கொண்டு
மதிலகன் றேகினன் விண்ணோர்
சிந்தையும் நடுங்கச் செய்ய நாரதனும்
திணிபுய வீரவன் னியன்பால்
வந்துரை செய்வன் மகிபன் வாதாவி
வந்தனன் மடித்திடும் என்றான்.

துந்துபி, பேரி, எக்காளம் ஆகியவை அதிர, தூசிகள் எழும்ப, மந்திரிகள் அமைத்த ரதத்தில் ஏறி, மதில்கடந்து, தேவர்கள் நடுங்கப் புறப்பட்டான் வாதாவி வருவதைக் கண்ட நாரதன் வீரவன்னியனிடம் "வாதாவி வந்துவிட்டான் கொன்றுவிடு" என்றார்.

தூளி - தூசி **மகிபன்** - அரசன்

835. அரக்கர் தோற்றம்

ஆயிரம் சிரமும் ஈராயிரம் கரமும்
ஆகக் காத்திரமலை நாக்கும்
பேயெனும் முகமும் பெருமலை மூக்கும்
கருவிழி பொறியனல் பெருக

வாயுமா வென்ன வானை முட்ட
வளர்சிகை காடென மன்ன
தீயஅஸ் திரங்க ளங்குசம் திரட்டி
சிவபடை உலக்கையோ டுற்றார்.

அரக்கர்கள், ஆயிரம் தலைகளும, இரண்டாயிரம கைகளும் மலைபோல் நாக்கும், பேய்போன்ற முகமும, மலை போன்ற மூக்கும் உடையவராய், விழிகள் தீ கக்க, ஆவென்று வாயைத் திறந்தால வானை முட்ட, தலை மயிர் காடென விளங்க, தீய அஸ்திரங்களுடன், அங்குசம், வேல், சூலம், உலக்கை எனப் பல படைகளோடு வந்தார்கள்

சிரம் - தலை **கரம்** - கை **சிகை** - தலைமயிர் அஸதிரங்கள் + அங்குசம் + திரட்டி.

836. வீரவன்னியன் துர்க்கையை வேண்டுதல்

பொங்கர வணிந்த புனிதன் புதல்வன்
உள்ளமகிழ் பொங்கியிரு செங்கைகுவி
கங்கண கபாலிதிரி சூலிசமரி வீரிஎதிர்
தாருகனை வென்ற அமலி
பங்கய பதம்பரவி யெங்களிடர் தீரவரு
பந்துமுலை மங்கை எழிலி
சங்கர னிடத்தில்வளர் அம்பிகைவா தாவிஉயிர்
சண்ட னுலகாள அருள்வாய்.

பாம்பணிந்த பரமனின் புதல்வனான வீரவன்னியன் மனம், மகிழ்ச்சி பொங்க இரு கைகளையும் குவித்து, "கங்கணமணிந்த கபாலி, திரிசூலி, சமரி, வீரி, எதிர்த்த தாருகனை வென்றவளே! தாமரை போன்ற உன் பாதத்தைத் துதித்தோம். எங்கள் துன்பம் தீர்க்க வந்த பந்து போன்ற மார்பையுடைய அழகிய மங்கையே! சங்கரனின் இடப்பாகத்தில் இருக்கும் அம்பிகையே! வாதாவியை எமனுலகு அனுப்ப அருள்வாயாக!" என்றான்,

பொங்கு + அரவு + அணிந்த + புனிதன் - பாமபணிநத சிவன். **கபாலி** - கபாலத்தை ஏநதியவள் **திரிசூலி** - திரிசூலத்தை ஏநதியவள் **அமலி** - குறறமறறவள **பங்கயம்** - தாமரை, **சண்டன்** - எமன

837. துர்க்கை அபயம் அளித்தல்

என்ற மகனைக் கரமெடுத்துமை இயம்புவள்
இயக்கரை வதைத்தல் அரிதோ
குன்றென வருங்கய வன்நின்ற நிலையாமென
குறிக்கவு மொணாது நயினா
வென்றிபெறு முன்கரம் மிகுத்த வடிவேல்விடும்
இருசும வனஞ்ச விடுவை
உன்றனுடன் நின்ற உமையின் செயமிருப்ப
இடரேது உனக்கு அஞ்சேல்.

என்று கூறிய மகனைக் கையெடுத்து அபயமளித்து துர்க்கை கூறுவள் "இவ்வளவு அசுரர்களையும் வதைத்தது பெரிதல்ல. குன்றுபோல் வரும் வாதாவியின் நிலைமை சொல்ல முடியாது வெற்றிபெறும் உனது கையினால் வாதாவி அஞ்ச வடிவேலை விடுவாய். உன்னோடு இருக்கும் என்னுடைய வெற்றியிருக்க உனக்குத் துன்பமேது? அஞ்சாதே!" என்றாள்

நயினா - அப்பா **வென்றி** - வெற்றி **இருசுமவன்** - வாதாவி **இடர்** - துன்பம் **அஞ்சேல்** - அஞ்சாதே!

838. வன்னியன் பிள்ளைகளைப் போருக்கழைத்தல்

இந்தமொழி அந்தரி இயம்ப உடல்விம்மி
மகிழெய்தி எழில்மைந்த ருடனே
அந்த நளனும்கயவர் புந்தி யிடைசூழ்
அரசனின்று அமர்செய்யு முனமே

சிந்தை தளர்வின்றி நம்சேனை அணிசெய்து
வலிதேரில் உறைவீரென்னு முரையை
விந்தையென வென்றிதனை வீறிட தளங்கள்
ஒலியின் முரசியங்க நிறைவர்.

இவ்வாறு துர்க்கை கூற வன்னியராசன் மகிழ்ச்சியடைந்து. உடல் புளகமுற்று. நான்கு பிள்ளைகளையும் அழைத்து. "இருள்போன்ற கயவர்கள் போதனையால் போர்செய்ய வந்திருக்கும வாதாவி நம்மிடம் வந்து போர்செய்யு முன்பே. நம்முடைய சேனையை அணிவகுத்துத் தேரில் ஏறுவீர்" என்றான், "இதென்ன விந்தையாயிருக்கிறது" என்று பிள்ளைகள், முரசு ஒலிக்க, படைகள வெற்றிமுழக்கம் இடப் புறப்பட்டனர்

அந்தரி - துர்க்கை **இயம்ப** - சொலல

839. வாதாவி இறந்த அரக்கர்களைக் கண்டு
"வன்னியன் வலிமையுள்ளவன் தான்" எனல்

வரையென மடிந்தவுணர் குருதிகடல் பொங்கிமுடி
வம்ப னிருகண் சொரியவே
எரியழல் எழும்பிஎனக் கிணையிலர் நற்கணையில்
இயக்கரை உருக்கி வலிமை
தரையினில் இறந்தளவு அரனருள் புரிந்தசிறு
தனய னிவனே மிகுத்த
உரமுடைய னாகுவனென மகுடசிரம்
அசைத்தேசெல்
அதிவீர சூரனுரை செய்வான்.

மலையென அசுரர் கூட்டம் மடிந்திருப்பதையும், இரத்தம் கடல்போல் பெருகி இருப்பதையும் பார்த்த வாதாவியின் இருகணகளிலும் கண்ணீர் பெருகியது. கண்களில் தீயெழும்ப "எனக்குச் சமமில்லாத மனிதர்கள் அசுரர்களைத் தரையில் விழுமாறு

அழித்து வலிமையோடுள்ளார்கள் என்றால் அரன் அருள் புரிந்த மகன் வலிமையுள்ளவனாகத்தான் இருக்க வேண்டும்" என மகுடமணிந்த தன் தலையை யசைத்துக் கூறினான்

வரை - மலை **குருதி** - இரததம **வம்பன்** - வாதாவி **தனயன்** - மகன் **மகுடம்** - முடி **சிரம்** - தலை

840. வாதாவி வன்னியனைப் புகழ்தல்

அச்சம தகற்றி ஆண்மை மிகுத்த
பச்சை யெனும்பு தல்வர் பகர்தற்கே
அச்சுத னுக்கிணை யாமென உள்ளம்
மெச்சினன் உன்பெயர் வீரனே என்றான்.

"அச்சம் இல்லாமல் ஆண்மை மிகுந்த பிள்ளைகளே! திருமாலுக்கிணையானவர் நீங்கள் என்று மெச்சினேன். உன்பெயர் வீரனே!" என்றான் வன்னியனை நோக்கி வாதாவி.

அச்சம் - பயம் **பகர்தற்கு** - சொல்லுதற்கு **அச்சுதன்** - திருமால **மெச்சினன்** - புகழ்ந்தேன்

841. வாதாவி தான் அரசனானதைக் கூறுதல்

கறைமிடற் றண்ணல் கருத்து களித்தே
அறையுவர் இப்புவி யன்றி வலிந்தே
நிறையவு ணர்படை நேமிகள் சூழ
இறையென மன்னி இருந்தனன் என்றே.

"நீலகண்டன் மனமகிழ்ந்து எனக்களித்த வரத்தினால் இப்பூமியில் அசுரர்படை சூழ நிலையாக இறைவனைப்போல் அரசு வீற்றிருந்தேன்"

கறை - நஞ்சுண்டதால் ஏற்படட நீலநிறம் **மிடறு** - கழுதது **நேமி** - பூமி. **மன்னி** - நிலையாக

842. எல்லாத்திசையிலும் கொள்ளை அடித்ததைக் கூறுதல்

திக்கினில் ஏகி செயம்பெறும் சூறை
மிக்க விரைந்து விண்ணவர் பணிசெய்
தக்கவா தாவி எனப்பெயர் மன்ன
துக்க மில்லாமல் சுகந்தம் அணைந்தே.

"எல்லாத் திசைகளுக்கும் சென்று கொள்ளை அடித்து வெற்றி பெற்றுத் தேவர்களை ஏவலர்களாக்கி வாதாவி தகுதியுடையவன் என்ற பெயரோடு புகழ் மணத்துடன் துக்கமில்லாமல் நிலைபெற்று வாழ்ந்தேன்"

திக்கு - திசை. **செயம்** - வெற்றி **சூறை** - கொள்ளை **விண்ணவர்** - தேவர் **சுகந்தம்** - மணம்

843. "திக்கு பாலரை அடக்கினேன்" எனல்

அட்ட திசைக்கதி பாலர்கள் உள்ளம்
கொட்ட மடக்கிக் குளிர்ச்சி அணைந்தேன்
சிட்டர் இறைஞ்சிய தேவர்கள் இன்றென்மேல்
விட்ட விறல்வீரனே மேவலர் ஆனீர்.

"எட்டுத்திசைக் காவலர்களின் ஆணவத்தையும் அடக்கி மகிழ்ச்சியாய் இருந்தேன். தேவர்கள் கும்பிட்டுச் சிவனை வேண்டியதால் அவன் என் மேல் விட்ட வீரவன்னியர்களே! நீங்களே எனக்குப் பகையானீர்கள்"

அட்ட - எட்டு **பாலர்** - காவலர் **கொட்டம்** - ஆணவம் **சிட்டர்** - சிவன **மேவலர்** - பகைவா

844. உங்களை மன்னித்தேன் எனல்

தனயர்செய் குற்றம் தாதை பொறுப்பர்
எனது அவுணப்படை எங்கும் மடித்தீர்

புனித நற்சிறு பிள்ளைக ளென்றே
மனதி லிரங்க மகிழ்ச்சி உரைத்தேன்.

"பிள்ளைகள் செய்த குற்றம் தந்தை பொறுப்பான் என்னுடைய அசுரப்படை அனைத்தையும் மடித்து விட்டீாகள் இருப்பினும் புனிதனாகிய சிவனின் சிறு பிள்ளைகள் நீங்கள் என்பதால் மனத்தில இரக்கம் கொண்டு மகிழ்ச்சியோடு கூறுகிறேன்"

தனயர் - பிள்ளைகள் **தாதை** - தந்தை **புனித நற்சிறு பிள்ளை** - சிவனின் பிளளை

845. "தேவர்களைச் சிறைவைத்து உனக்கு மகுடம் சூட்டுவேன்" எனல்

வான வரைச்சிறை வைத்துனை விண்ணோர்
கோனெ னாமுடி கோதில் அளிப்பன்
தானை யுடன்வரு வீரெனச் சாற்றும்
ஈன வுணனுக் கெழில்வீரன் உரைப்பான்.

"தேவர்களைச் சிறைவைத்து உன்னைத் தேவர்களுக்கு அரசனாகக் குற்றமில்லாமல் முடி சூட்டுவேன். படையோடு வாருங்கள்" என்றான் இழிந்தவனாகிய வாதாவி. வன்னிய வீரன் அவனுக்குத் விடை கூறுவான்.

வானவர் - தேவர் **விண்ணோர்** - தேவர் **கோன்** - அரசன் **விண்ணோர் கோன்** - தேவேநதிரன் **தானை** - படை **ஈன** - இழிந்த

846. வாதாவிக்கு வன்னியன் கூறும் விடை

புத்தியில் லாமல் உரைத்திடும் புல்லனே
அத்தன் அலர்ப்பதம் மன்னிய வானோர்
சித்தம் உரைப்படி செஞ்சிலை யாலுன்
நத்தவ மெய்யை நடுக்கிட வுற்றேன்.

"அறிவில்லாமல் கூறும் அற்பனே! தேவர்கள் சிவன் அடியைத தஞ்சம் புகுந்தனர் சிவன் சொற்படி வில்லால் உனது உடலை நடுங்கச் செய்யவே வந்தேன்" என்றான்

புல்லன் - அறபன் **மன்னிய** - அடைந்த **வானோர்** - தேவர் **அத்தன்** - சிவன் **சித்தம்** - மனம்

847. வன்னியன் தன்புகழ் உரைத்தல்

கசஅவு ணாதியைக் கனலில் உருக்கி
வசமுற வாட்டும் சம்மட்டி என்பேர்
நிசமென நீள்கடல் நேமியின் மிக்கோர்
உசித மெனப்பு கழ்ந்திடும் வீரன்.

"அரக்கர்களை நெருப்பில் உருக்கி வாட்டும் சம்மட்டி என்பது என்னுடைய பெயர் பெரிய கடல் சூழ்ந்த பூமியில் பெரியோர்களால் சிறந்தவன் எனப் புகழப்படும் வீரன் நான்"

கச - பெரிய **கனல்** - நெருப்பு **நேமி** - பூமி **உசிதம்** - தக்கவன்

848. "தேவர் துன்பம் தீர்க்கவே பிறந்தேன்" எனல்

தானவர் வாதை தவிர்த்திட வென்றே
ஞான தயாபரன் நல்லுளம் ஓர்ந்து
மோன முறுங்கோ மான்முனி வேள்வி
ஆனதில் எம்மை அளித்தனன் என்றான்.

"அரக்கர் துன்பம் தவிர்க்க வேண்டியே சிபெருமான், ஆராய்ந்து தவம் செய்த சம்புமாமுனி யாகத்தில் என்னைக் கொடுத்தான்"

தானவர் - தேவர் **வாதை** - துன்பம **ஞானதயாபரன்** - சிவன் **மோனம்** - தவம் **கோமான்முனி** - சம்புமாமுனி. **வேள்வி** - யாகம்

849. "சிவன் உன்னைக் கொல்ல ஏவினான்" எனல்

அக்கினி மாவும் அருஞ்சிலை வாளும்
மிக்களித் திரள் மேன்மை யளித்தே
மைக்கரு கண்டன் வழுத்தினர் உன்னை
இக்கணம் ஈர்ந்து எழுந்தருள என்றான்.

"அக்கினிக் குதிரையும. வில்லும். வாளும். கொடுத்து நீலகணடனாகிய சிவபெருமான் உன்னை இக்கணமே கொன்று வரும்படிக் கூறினான்"

மா - குதிரை **சிலை** - வில் **மைக்கடுகண்டன்** - விடத்தினால் கரிய கழுததையுடையவன் **வழுத்தினர்** - கூறினாா **ஈர்ந்து** - பிளநது, கொன்று

850. "நாரதரைத் தூது விட்டேன்" எனல்

வீரர் இலக்கம் விளங்கிட விண்ணோர்
சீரரி மன்னர் செழித்தனன் நால்வர்
ஆரணி காளி அருந்துணை கொண்டே
நாரதர் தூதனை நண்ண இசைத்தேன்.

"இலட்சம் வீரர் துணையாக விளங்க, என் குழந்தைகள் நால்வருடன் துர்க்கையை அருந்துணையாகப் பெற்று நாரதரை உன்னிடத்தில் தூதாக அனுப்பினேன்"

இலக்கம் - இலட்சம் **விண்ணோர்** - **தேவர்**. மன்னர் - **அரசர் (பிள்ளைகள்). இசைத்தேன்** - கூறினேன்

851. நாரதன் உரையை மறுத்ததைக் கூறல்

மாமுனி யுள்ள மறுத்துரை கூறி
பூமலி நீழல் புரந்தரர் வாதை

நேமி விடோமெனு நின்னுரை யாலுன்
பூமியில் வந்தமர் புக்கினேன் என்றான்.

"நாரதர் உரையை மறுத்து கற்பகத்தரு நிழலில் வாழும் தேவர்களுக்குத் துன்பம் செய்வதைப் பூமியில் விடமாட்டோ மென்று நீ கூறியதால் உன்னிடம் சண்டை செய்ய வந்தேன்" என்று கூறினான்.

மாமுனி - நாரதர். **பூமலி நீழல்** - கற்பகமர நிழல் **புரந்தரர்** - தேவேந்திரன். **வாதை** - துன்பம். **நேமி** - பூமி.

852. "உன்னை ஓரம்பால் மாய்ப்பேன்" எனல்

வரையெனத் திரண்ட தோளும்
வானுலாக் கரமும் வில்லும்
பருமணி மகுடம் சென்னி
பாரினில் உருளக் காலம்
திரமிவை அதனால் அண்டர்
கோவென ஈய்வே னென்ன
உரைசெயும் உலுத்தா உன்னை
ஒருகணை மாய்க்கு மென்றான்.

"மலைபோன்று திரண்ட தோளும். வானம் வரை நீண்ட கையும் வில்லும். மணிகள் பதித்த முடி அணிந்த தலையும் பூமியில் உருளக் காலம் வந்தது. அதனால் தான் எனக்குத் தேவேந்திர பதவி அளிக்கிறேன் என்றாய். உலுத்தனே உன்னை ஓரம்பால் மாய்ப்பேன்" என்றான்

வரை - மலை **மகுடம்** - கிரீடம **சென்னி** - தலை **அண்டர்கோ** தேவர்தலைவன், தேவேந்திரன் **ஈய்வேன்** - தருவேன் **உலுத்தன்** - கீழமகன்

853. "நீ தரும்வாழ்வு நாய் சிங்கத்துக்குத் தருவது போலாம்" எனல்

அளித்த என்தாதை இந்த
அருளெனக் கிருப்ப உள்ளம்

களித்தனன் அநேக காலம்
காசினி அரசன் ஆகி
வளத்தினை அணைவன் நீபோய்
வான்முடி அளிப்பை ஞமலி
அளித்திடும் அரசும் வாழ்வும்
அரிதனக் கொக்கா தென்றான்.

"என் தந்தை பரமசிவன் அளித்த அருள் எனக்கு இருக்கும்போது நான் பல காலம் பூமியில் மகிழ்ந்து அரசனாக வாழ்ந்து தேவலோக சுகத்தை இங்கேயே பெறுவேன். அப்படி இருக்க நீ போய் எனக்குத் தேவேந்திர பதவி அளிப்பதா? நாய் தரும் அரசும் வாழ்வும் சிங்கத்துக்கு ஏற்குமோ?" என்றான்,

தாதை - தந்தை. **காசினி** - பூமி உலகம். **ஞமலி** - நாய். **அரி** - சிங்கம். **ஒக்காது** - ஏற்காது.

854. "என் மாமன் தேவேந்திரன் நினைத்தால் தேவருலகைச் சீதனமாகவே கொடுப்பான்" எனல்

மாதுலன் மகவான் ஈன்ற
மகள்தன் மருமகன் என்றே
சீதனமாத் தேவ ருலகைச்
செழிப்புற அளிப்பன் நீயோ
சோதிமா முடிய ளிப்பாய்
துஷ்டனுன் நாவை வாளால்
கோதுவன் என்று உள்ளம்
கொதித்துரை கூற லுற்றான்.

"என் மாமன் தேவேந்திரன் தான் பெற்ற மகளின் கணவன் என்பதால் சீதனமாகவே தேவருலகை எனக்குக் கொடுப்பான் நீயோ கொடுப்பாய்? துஷ்டன் உன் நாக்கை அறுப்பேன்" என்று உள்ளம் கொதித்துக் கூறினான்,

மாதுலன் - மாமன் **மகவான்** - தேவேநதிரன **மருகன்** - மருமகன் **கோதுவன்** - அறுப்பேன

855. "உன்னைக் கொல்லவே நான் வந்தேன்" எனல்

பாரிய முடியைச் சேதித்துப்
பதியினைத் தூள தாக்கி
பேருள வரைக்கும் யார்க்கும்
பெருந்தணல் அளித்தே உந்தன்
சீரெலாம் சூறை செய்து
செகமெலாம் துதிக்க வென்றே
வீரனா னுன்பா லுற்றேன்
விருதுகள் ஒலிப்ப மாதோ.

உன் பெரிய தலையை வெட்டி உன் ஊரைத் தூளாக்கி அரக்கர் என்ற பேர் உள்ளவரைக்கும் நெருப்பை அளித்து, உந்தன் செல்வமெல்லாம் கொள்ளை அடித்து, உலகம் முழுவதும் துதிக்கும்படி வாழவே விருது முழங்க நான் உன்னிடம் வந்தேன்.

பாரிய - பெரிய **சேதித்து** - வெட்டி

856. அசுரன் உருவைப் பழித்தல்

பேயெனும் வதன மீசை
பெருத்திடும் கோரை யென்ன
வாயினி லீறுமண் வெட்டி
வானிடி ஒலியாம் வார்த்தை
காயமு வரைய தொக்கும்
கண்டவர் உளம்ப தைக்கும்
தீயென உனது தீரம்
செலுத்தியின் றமர்செய் என்றான்.

“பேய்போனற முகம் கோரைப்புல் போன்ற பெரிய மீசை. மண்வெட்டி போன்ற பெரியபல் இடி போன்ற சொல். மலை போன்ற உடல் கண்டவர் உள்ளம் பதைககும. உன் வீரத்தைச் செலுத்தி என்னோடு போர்செய்” என்றான்.

வதனம் - முகம **ஈறு** - பல் **காயம்** - உடல்.

857. “என்னோடு போர்செய்ய வலிமையில்லா விட்டால் என்னைத் தொழு” எனல்

பகட்டினால் மிரட்ட லாமெனப்
பசையுரை பகர்ந்தாய் தீரம்
மிகுத்தவன் ஆனாய் என்றே
வெஞ்சமர் விளைப்ப வந்தேன்
அகத்தையு மடக்க வென்றே
அரனளித் தனுப்ப வந்தேன்
நிகர்செய் வலியில் லாக்கால்
நீஎனைத் தொழுதிடு என்றான்.

“என்னை ஆடம்பரத்தால் மிரட்டலாம் என்று நினைத்தாய் வானுலகளிப்பதாக ஆசை வார்த்தை கூறினாய். வீரம் மிகுந்தவன் என்று தான் உன்னுடன் போர் செய்ய வந்தேன் உன் அகந்தையை அடக்கச் சிவன் அளித்து அனுப்ப வந்தேன் போர் செய்ய வலிமையிலலா விட்டால் என்னை வணங்கு” என்றான்.

பகட்டு - ஆடமபரம **பசை** - ஆசை **அகம்** - ஆணவம் **வலி** - வலிமை

858. “தம்பிகள், பிள்ளைகள் அழிந்தும் நீ தவறு செய்கிறாய்” எனல்

ஆதியில் படையெ டுத்து
அருந்துணை வனும்பட் டானென்(று)

ஓதினர் ஒத்த வாய்மை
உளத்தினில் உறுத்தா தென்ன
தீதுகள் அளித்தை உந்தன்
சிறுவரை மதிக்கக் கண்டு
கோதுகள் அளிக்க வந்த
குலவனு லோமா என்றான்.

"முதலில் உன் தம்பியரை அனுப்பினாய். அவர்கள் இறந்தார்கள் என்று தூதர் ஓதினர். அதன் உண்மை மனத்தில் உறுத்தாமல் மீண்டும் உன் பிள்ளைகளையும் தீயவழியில் செலுத்தினாய் உன் பிள்ளைகளை நான் அழித்ததைப் பார்த்தும் மீண்டும் தவறு செய்கிறாய். அனுலோமன் என்னும் அரக்கனே!" என்றான்.

ஆதி - முதலில் **துணைவன்** - தம்பி **சிறுவர்** - பிள்ளைகள் **மதிக்க** - அழிக்க **கோது** - குற்றம் **அனுலோமன்** - அரக்கன்

859. மேலும் பல சான்று கூறுதல்

இன்னமும் கேளும் கைம்பெண்
ணீன்ற கோளகனே ஆகும்
துன்னி வேற்றோர்க்குப் பெற்ற
சுதனும் குண்டகனே ஆகும்
கன்னிகை மணம்செய் யாமல்
களவினின் ஈன்றோன் கானினன்
என்னமுன் னோரு ரைத்த
எழில்மறை இயம்பு தென்றான்.

"வாதாவியே கேள்! கைம்பெண் ஈன்ற மகனுக்குக் கோளகன் என்று பெயர் வேறு கணவனுக்குப் பெற்ற மகன் கண்டகன் எனப்படுவான் ஒரு பெண் திருமணம் செய்யாமல் திருட்டுத் தனமாய்ப் பெற்ற பிள்ளை கானினன் எனப்படுவான்." என்று முன்னோர் கூறிய நூல்கள் சொல்கின்றன.

860. "நீ அரக்கன் மரபல்ல" எனல்

தாதையர் இன்னார் என்றே
　　தன்னுளத் துணராய் செங்கோல்
ஆதியாய் செலுத்தி வந்த
　　அவுணரின் மரபு மல்வாய்
மாதர சோமுகி யும்துரு
　　வாசனை மருவி ஈன்ற
பாதிநா ளையினில் இந்த
　　பவிஷடைந் தனைநீ என்றான்.

"தந்தை யார் என்றே உனக்குத் தெரியாது. முதலிலிருந்து செங்கோல் செலுத்தி ஆண்ட அரக்கன் வம்சத்தில் நீ வரவில்லை. அசோமுகி ஏமாற்றித் துருவாசனைச் சேர்ந்ததால் பிறந்தவன் நீ. இடையில் இந்தச் செல்வம் படைத்தாய்."

தாதை - தந்தை. **ஆதி** - முதலில். **மருவி** - சேர்ந்து. **பவிஷு**- செல்வம், பதவி.

861. வன்னியன் தன்மரபு கூறுதல்

விமலனாம் எனது தாதை
　　வீரவன் னியனா மென்பேர்
சமலியென் துணையாம் சம்பு
　　தழைத்தநற் குலமாம் அன்னை
உமையவ ளாகும் உம்பர்
　　உற்றசம் பந்த மான
குமரனற் றுணைவ ரென்றே
　　குவலயம் கூறும் என்றான்.

"சிவபெருமான் எனது தந்தை; வீரவன்னியன் எனது பெயர்; துர்க்கை என் துணை; என் குலம் சம்பு குலம்; என் அன்னை

உமையவள்; சம்பந்தம் செய்தவர் தேவர், முருகன் தம்பி என்று உலகமே கூறும்."

விமலன் - சிவன். **சமலி** - துர்க்கை. **உம்பர்** - தேவர். **குவலயம்** - உலகம்.

862. வன்னியன் தன் பேர்களைக் கூறுதல்

செகமதில் தேவ ராயன்
செழித்தர சுடையான் என்றும்
நகையின் முப்புரம் எரித்தோன்
நயனத்தால் நயினார் என்றும்
உகமையாம் அவுணன் ஆக்கை
உருக்கியசம் மட்டி என்றும்
பகவன் பேயாண்டி பாலன்
பண்டாரத் தாரு மானேன்.

"(இன்னும் கூறுகிறேன் கேள்) தேவர்களுக்கு உதவியாக வந்ததால் தேவராயன் எனது பெயர். அரசாள்வதால் அரசுடையான் எனது பெயர். சினத்தால் முப்புரம் எரித்த சிவனின் நெற்றிக்கண் அம்சமானதால் நயனார் எனது பெயர். அசுரர் உடலை உருக்குவதால் சம்மட்டி என்று பெயர். பேயாண்டியாகிய சிவன் மைந்தன் என்பதால் பண்டாரத்தான் என்று பெயர்."

செகம் - உலகம். **நகை** - சிரிப்பு. **முப்புரம்** - ஆகாயத்தில் சுற்றும் அசுரனின் மூன்று கோட்டைகள். **நயனம்** - கண். **ஆக்கை** - உடல். **பகவன்** - சிவன்.

863. வாதாவி சினம் கொண்டு நாகாஸ்திரம் விடுதல்

இவ்வுரை வீரன் கூற
இயக்கர்கோன் இதயம் பொங்கி

பவ்வம்சூழ் உலகோர் ஏங்கப்
படுஞ்சிலை வளைத்து நாணி
கவ்விடத் தணைந்து நாகக்
கணையினுக் குருசெபித்து
திவ்விய வீரன் சென்னி
செற்றிடத் தெரித்தான் மாதோ.

இவ்வாறு பலவும் கூறினான் வீரவன்னியன். இதனைக் கேட்ட வாதாவி கோபம் கொண்டு கடல் சூழ்ந்த உலகம் அஞ்சத் தன் வில்லை வளைத்து நாகாஸ்திரம் செபித்து வன்னிய வீரன் தலையை அறுக்கத் துணிந்தான்.

இயக்கர் கோன் - அரக்கர் தலைவன், வாதாவி. **பொங்கி** - சினந்து, கோபித்து. **பவ்வம்** - கடல். **நாணி** - கயிற்றை இழுத்து **கவ்விடம்** - தனியிடம்.

864. வன்னியன் கருடாஸ்திரத்தால் அதனை அழித்தல் நாராயணாஸ்திரத்தால் அசுரன் மயக்கம் அடைதல்

அரவாத் திரத்தின் ஆண்மை
அரன்மகன் வீரன் கண்டு
கருடாத் திரங்கள் ஏயக்
கண்டமாய் அரவம் சோர
நரனெனும் வீரன் நாரா
யணன்கணை தெரிப்பச் சூரன்
உரமதில் உருகச் சோபம்
உற்றன னிரதம் மீதே.

பாம்புக்கணையின் வேகம் பார்த்து வன்னியன் கருடாஸ்திரம் விட பாம்புக்கணை சோர்ந்தது. மனிதனாகிய வன்னியன் நாராயணாஸ்திரம் விட அசுரன் வலிமை இழந்து இரதத்தின் மீதே மயக்கமுற்று வீழ்ந்தான்.

அரவாத்திரம் - பாம்புக்கணை. **கணை** - அம்பு. **தெரிப்ப** - விட. **உரம்** - வலிமை. **சோபம்** - மயக்கம். **இரதம்** - தேர்.

865. மோகனாஸ்திரத்தால் அமைச்சர் இறத்தல்

கண்டனர் அமைச்சர் உள்ளம்
கனலெழக் கண்சி வக்க
முண்டியே சிலைவ ளைத்தே
மோகாஸ் திரம்தெ ரிப்ப
முண்டிய வீரர் என்ன
முளைத்தனர் அநேகர் கவ்வ
மண்டிய அமைச்சர் சென்னி
மண்ணினில் உருண்ட தம்மா.

இதனைக் கண்ட அமைச்சர் மனத்தில் நெருப்பெழ வில்லை வளைத்து அம்புவிட வன்னியன் மோகனாஸ்திரம் விட்டான். அப்போது அநேகம் வீரர் தோன்றிப் போர் செய்ய ஒவ்வொரு அமைச்சர் தலையும் மண்ணில் உருண்டது.

மண்டிய - நிறைந்த. **சென்னி** - தலை.

866. அசுரர் அழிதல்

வாயினில் குருதி சோர
மண்ணையும் கவ்வ வீரன்
பேயனென் றுரைத்த நாவும்
பெருகிய வலைபோல் நீண்ட
நாயினம் நிணம் அருந்த
நரியினம் மூளை உண்ண
பேயினர் தலையைத் தின்றே
பெறுவதே செபித்த தன்றே.

வாயில் ரத்தம் பெருக, உடல் மண்ணைக் கவ்வ பேய் என்று கூறிய நாக்கும் பெரிய வலைபோல் நீண்டது. நாயும் நரிகளும்

பிணங்களை அருந்தின. நாய் கொழுப்பை அருந்த நரிகள் மூளையுண்டன. பேய்கள் தலையைத் தின்றன.

குருதி - ரத்தம். **நிணம்** - கொழுப்பு.

867. அசுரர் பல ஆயுதங்களை எறிதல்

வேயெனும் தோளி பங்கன்
மிகவரும் சுங்கன் தந்த
தீயவு ணாதி சேனை
திரளொரு முகமா மண்டி
ஆயுத வகையாஞ் சூலம்
கதையுடன் பிண்டி பாலம்
ஓய்விலாத் திகிரி தண்டம்
ஓங்கியே எரித்தான் மாதோ.

மூங்கில் போன்ற தோளை உடைய உமாதேவியை இடப்பாகத்தில் உடைய சிவபெருமான் அருளால் சுக்ரன் உண்டாக்கிய தீய அரக்க சேனைகள் மீண்டும் எழுந்து ஒரு முகமாய்ச் சேர்ந்து சூலம், கதை, பிண்டிபாலம், சக்ரம், தண்டம் எனப் பல ஆயுதங்களை எறிந்தன.

வேய் - மூங்கில். **சுங்கன்** - சுக்கிரன். **பிண்டிபாலம்** - ஓர் எறி ஆயுதம். **திகிரி** - சக்கரம்.

868. வன்னியன் வாயுவாஸ்திரத்தால் ஆயுதங்கள் சிதறல்; அசுரர் மலையை எறிதல்.

வந்தஆ யுதக்கு ழாங்கள்
மன்னிட வாயு வானி
சிந்திட ஆடித் திங்கள்
இலையெனச் சிதறி யோட

விந்தையாம் குன்ற னேகம்
வீறிட விண்ணில் தாவி
சுந்தர வீரன் சேனை
துடித்திட வந்த தன்றே.

அசுரர் வீசிய ஆயுதங்களை நோக்கிய வன்னிய வீரன் வாய அம்பு விட்டான். ஆடிக் காற்றில் அகப்பட்ட இலைகள் போல அவை சிதறி ஓடின. அசுரர்கள் ஆகாயத்தில் தாவிப் பெரிய பெரிய குன்றுகளை எடுத்து வீசினர். அவை வன்னிய வீரன் சேனைகள் துடிதுடிக்க வந்தன.

வாயு வாளி - வாயு அஸ்திரம்.

869. வச்சிராயுதத்தால் மலைகள் பொடியாதல். அரக்கர் ஆகாயத்தை மறைத்தல்

வரையினம் பொடிக ளாக
வச்சிரா யுதம்தெ ரிப்ப
நிரைநிரை எனநெ ருங்கி
நீளிரு விசும்பிற் றூற்ற
பரவிலா நிறைந்த தியக்கர்
பரவிய இருளா மென்ன
கருவிய மாய்கை செய்ய
கதிர்முக வீரன் கண்டான்.

மலைகள் தூளாகும்படி வச்சிராயுதம் விட்டான் வன்னியன். உடனே அசுரர்கள் வரிசை வரிசையாய்க் கூட்டம் கூட்டமாய் ஆகாயத்தில் நிறைந்தனர். சூரியனை மறைத்துப் போர்க்களமே தெரியாமல் இருட்டாகி விட்டதுபோல் மாயையை ஏற்படுத்தினர். இதனைச் சூரியன் போல் ஒளி பொருந்திய வன்னிய வீரன் பார்த்தான்.

வரை - மலை. **நிரை** - வரிசை. **விசும்பு** - ஆகாயம். **கதிர்** - சூரியன்.

870. வன்னிய வீரன் சூரியக்கணையினால் இருளை ஓட்டிச் சக்கரத்தால் தலையறுத்தல்

கதிரெனும் கணையி னாலே
கங்குலைக் கடிந்த கற்றி
சதிசெயும் அவுணர் ஆக்கை
தரணியில் உருள ஆழி
அதிரவே தெரிப்ப விண்ணில்
அடைந்தவு ணாதி சென்னி
பதியினிற் பனங்காய் என்ன
பலபலவென் றுதிர்ந்த தன்றே.

சூரியக்கணையினால் இருளை ஓட்டினான் வன்னியன். சூழ்ச்சி செய்யும் அசுரர் உடல் பூமியில் உருளுமாறு சக்கரப் படையை விட்டான். அது ஆகாயத்தில் அடைந்து அசுரர் தலையை அறுக்க தலைகள் பூமியில் பலபலவென்று பனங்காய்போல் உதிர்ந்தன.

கதிர் - சூரியன். **கங்குல்** - இருள். **கடிந்து** - நீக்கி. **சதி** - சூழ்ச்சி. **ஆக்கை** - உடல். **தரணி** - பூமி. **ஆழி** - சக்கரம். **சென்னி** - தலை. **பதி** - ஊர்.

871. தலைகள் விழுதல்

குருதியின் கடலில் மூழ்கிக்
குதித்திடும் மீனினங்கள்
இருவிசும் பதனில் தாவி
இணையில்லா நீந்திற் றென்ன
பெருமையாம் அவுணர் ஆக்கைப்
பருவரை முடியைச் சாடி
பரவையில் அளித்த வாயு
பந்தனம் ஆன தன்றே.

இரத்தத் கடலில் மூழ்கிக் குதிக்கும் மீன்கள் ஆகாயத்தில் தாவி நீந்தியது என்று சொல்லும்படி ஆகாயத்தில் நீந்திய அசுரர்களின் தலைகளை வன்னியன் உதிர்த்தவுடன் அவை பூமியில் விழுந்தது எவ்வாறு இருந்த தென்றால் வாயுவும் ஆதிசேடனும் தர்க்கம் செய்த போது வாயுவால் பேருமலை மூன்று துண்டாக உதிர்ந்து விழுந்தது போலிருந்தது.

குருதி - இரத்தம். **விசும்பு** - ஆகாயம். **பருவரை** - மேருமலை. **சாடி** - தகர்த்து. **பரவை** - கடல். **வாயுபந்தனம்** - வாயுபகவானின் கட்டு.

"ஒருமுறை ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக்கும் போட்டி ஏற்பட ஆதிசேடன் மேருமலையைச் சுற்றி மூடுவதெனவும். வாயு அம்மலையைத் தகர்ப்பதெனவும் முடிவாயிற்று. ஆதிசேடன் அவ்வாறே மூடிக்கொள்ள வாயு மிக வேகமாக வீசியும் பயனில்லை. வாயுவின் வேகத்தைத் தாங்க முடியாமல் தேவர்கள் ஆதிசேடனை வேண்டிக் கொள்ள ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளில் ஒருதலையை மட்டும் எடுத்தான். வாயு வேகமாக வீசியதில் மேருமலையின் 1008 கோடி சிகரங்களில் மூன்று சிகரங்கள் தென் கடலில் போய் விழுந்தன. ஒன்று இலங்கை. ஒன்று மகேந்திரபுரி. ஒன்று இரத்தினாபுரி" என்பது புராணம்.

872. அரக்கர் ஆணவத்தால் அழிதல்

இறந்தவ ரல்லால் மண்ணில்
இடுமிய அரக்கர் மெய்யில்
உரந்தனால் கரத்தை நீட்டி
உருத்திர நயனன் சேனை
உரத்தவே அடிப்பன் என்று
உறுத்துமே கவிய மன்னன்
உரத்தனம் வலிவின் றன்னால்
உருக்கினன் உருகா நின்றார்.

இறந்தவர் போக பூமியில் இருந்த அரக்கர் தங்கள் உடல் வலிமையினால் கையை நீட்டி உருத்திர வன்னியன் சேனையை அடிப்பேன் என்று கவிந்தனர். உருத்திர வன்னியன் தன்னுடைய வலிமையினால் அவர்களை உருக்கி விட்டான். எல்லோரும் இறந்தனர்.

உரம் - வலிமை. **நயனன்** - வன்னியன். **கவிய** - சூழ.

873. அரக்கர் முழுவதும் அழிதல்

அகத்தினில் செந்நீர் பொங்கி
அவுணரின் பூண்டில் லாமல்
தகித்திடத் தணலின் வாளி
தனுவினில் பூத்த தாகப்
புகைத்தெழும் ஊழி மயங்கி
யாமென எழும்பிப் பொங்கி
முகூர்த்த மொன்றினில் இயக்கர்
முடிந்தனர் மண்மேல் தானே.

வீரவன்னியன் மனத்தில் கோபம் பொங்கி, அரக்கரின் வேர்கூட இல்லாமல் பூண்டோடு அழிய அக்கினி அஸ்திரம் விட்டான். அது ஊழித்தீப் போலப் பொங்கி ஒரு முகூர்த்த நேரத்தில் (மூன்றே முக்கால் நாழி - ஒன்றரை மணி நேரம்) அரக்கர்கள் மண்மேல் அழிந்தனர்.

செந்நீர் - இங்கு கோபம் **பூண்டு** - வேர், அடி. **தணலின் வாளி** - அக்கினி அம்பு. **தனு** - வில். **முகூர்த்தம்** - மூன்றேமுக்கால் நாழிகை ஒரு முகூர்த்தம். ஒரு நாளைக்கு 60 நாழிகை. 24 மணி நேரம். எனவே ஒரு மணிக்கு இரண்டரை நாழிகை. மூன்றேமுக்கால் நாழிகை - ஒன்றரை மணி நேரம்.

874. இறக்கும் அவுணர் கூக்குரல்

ஆவென வாய்தி றப்பார்
அருந்தநீர் தாரு மென்பார்

கூவென்று குரலொ லிப்பார்
குருதியைக் கொப்ப ளிப்பார்
பாவியால் மடிந்தோ மென்பார்
பருங்கரம் கடித்தே வீழ்வார்
தீவினில் அவுணரின்றிச்
சிதறியே மாய்ந்தோ மென்பார்.

கீழே விழும் அசுரர்கள் ஆவென்று வாயைப் பிளப்பார்கள். "தாகம்; தாகம்; தண்ணீர்" என்பார்கள். 'கூ' வென்று குரல் எழுப்புவார்கள். ரத்தத்தைக் கொப்பளிப்பார்கள். "பாவி வீரவன்னியனால் இறந்தோ" மென்பார்கள். பெரிய கைகளைக் கடித்துக் கொண்டே வீழ்வார்கள். "இந்த இரத்தினாபுரியில் ஓர் அசுரர் கூட இல்லாமல் சிதறிவிட்டோம்" என்பார்.

875.

நகைக்கெனக் கடிப்பார் இந்த
நரன்கணை வலிய தென்பார்
வகையில்வா தாவி யெம்மை
மடித்தனன் அந்தோ வென்றே
யுகமுடி வான காலம்
ஒத்ததோ அவனால் என்பார்
சகமெலாம் படைத்த வேணி
சடையனே அருள்தா வென்பார்.

பல்லைக் கடிப்பார். "இந்த மனிதனின் அம்பு வலியது" என்பார். "இந்த வாதாவி எம்மை அழித்தான், ஐயோ! யுகம் முடியும் காலம் போல் வந்ததே அவனால்" என்பார். "இந்தப் பூமியைப் படைத்த சிவனே அருள்தா" என்பார்.

நரன் - மனிதன். **கணை** - அம்பு. **சகம்** - உலகம். **வேணி** - சடை.

876. இறக்கும் வீரரின் செயல்கள்

அழிவுள மெய்யில் தைத்த
அம்பினை அகற்றி மாய்வார்
விழிபிதுங் கிடவே வீழ்வர்
வீரரின் தளத்தைச் சாடி
பழியறு வானோ வாதாவி
பருமுடி உருளச் செற்று
செழுநறு மலரின் மாலை
அணிவனோ சிவன்சே யென்பார்.

சிலர் அழிகின்ற உடம்பில் தைத்த அம்பைப் பிடுங்கிக் கொண்டே சாய்வார். சிலர் விழிபிதுங்க வீழ்வார். "வன்னிய வீரனின் படையை அழித்துப் பழியை நீக்குவானோ வாதாவி அல்லது வாதாவியின் பெரிய கிரீடம் உருளுமாறு அவனை அழித்துச் சிவன் மகனான வன்னியன் கற்பகமலராலான வெற்றிமாலை சூடுவானோ" என்பார்.

தளம் - படை. **சாடி** - அழித்து. **செற்று** - அழித்து. **செழுந்தரு** - கற்பகமரம்.

877. வாதாவி மூர்ச்சை தெளிதல்

வானவர்க் கிடர்செயும் வாதாவி மூர்ச்சைதேர்ந்து
தானையும் அமைச்சரும் தாரணி மாய்ந்தபின்
வேனலாம் விழியென வெகுண்டு வீரனை
வானுல கேத்தவில் வளைப்ப தாகினான்.

தேவர்களுக்குத் துன்பம் செய்யும் வாதாவி மயக்கம் தெளிந்து, பண்டகளும் அமைச்சரும் இறந்து கிடப்பதைக் கண்டு விழிகள் நெருப்பெனச் சிவக்குமாறு கோபித்து "வன்னிய வீரனை வானுலகுக் கனுப்புவேன்" என வில்லை வளைத்தான்.

வானவர் - தேவர். **இடர்** - துன்பம். **தானை** - படை. **ஏத்த** - அடைவிக்க.

878. வாதாவி வன்னிய வீரனைக் கொல்வேன் எனல்

பெருவீர விறையெனும் பிள்ளை யாமென
மருமனம் இரங்கினன் வலுத்த சேனையைக்
குருதியின் கடலெழக் கொன்ற உன்சிரம்
இருவிசும் பேறிட வீழ்த்துவேன் என்றான்.

"வீரனே! சிறுபிள்ளையாக இருக்கிறாயே என்று மனம் இரங்கினேன். என் வலிய படையைத் கொன்று இரத்தக் கடலை உண்டாக்கி இருக்கிறாய். உன் தலை பெரிய ஆகாயம் ஏறுமாறு கொல்வேன்" என முழங்கினான்.

சிரம் - தலை. **விகம்பு** - ஆகாயம்

879. சிறுபிள்ளையென நினைத்தேன் எனல்

குலிச பாணிஅனு கூல மாகவே
நலமுள ரத்தினா புரியை நாடினன்
வலிவிலாப் பாலரென மனத்தில் ஓர்ந்திட
மெலியவன் மேற்கணை வீசு கின்றனை.

"வச்சிரப் படையைக் கையில் உடைய இந்திரனுக்குப் பரிந்து கொண்டு இரத்தினாபுரிக்கு வந்திருக்கிறான். வலிமையற்ற பாலகன் என நினைத்தேன். ஆனால் நீயோ மெலியவர் மேலெல்லாம் அம்பு வீசினாய்" என்றான்.

குலிசம் - வச்சிரப்படை. **பாணி** - கை. கையை உடையவன். (உ.ம்) தண்டபாணி, சக்கர பாணி, சாரங்கபாணி, பினாகபாணி. **அனுகூலம்** - நன்மை. **ஓர்ந்திட** - நினைத்திட.

880. வாதாவி "உன்னைக் கொல்லாவிட்டால் நான் வாதாவி இல்லை" எனல்

உன்திணி புயமென் றுளத்தின் ஓர்ந்தனன்
இன்றுன தாவியை ஈர்ந்து வீரரைக்
குன்றுரு வேலினால் கொலைசெய் யாவிடில்
வென்றிவா தாவியான் அல்லன் என்றனன்.

"நீ வலிமை பொருந்திய தோள்களையுடையவன் என்று புரிந்து கொண்டேன். இன்று உன் உயிரைக் கவர்ந்து உன் வீரர்களைக் குன்றைப் பிளக்கும் வேலினால் கொலை செய்யாவிட்டால் வெற்றி பொருந்திய வாதாவி நான் அல்லேன்" என்றான்.

ஓர்ந்தனன் - உணர்ந்தேன். **ஈர்ந்து** - பிளந்து. கவர்ந்து. **வென்றி** - வெற்றி.

881. வீரவன்னியன் சினந்து கூறுதல்

கோரமாய் உரைத்திடும் கொடிய சூரனை
வீரனும் கண்டுரை வெகுண்டு விள்ளுவன்
தாரணி அவுணரும் தம்பி மக்களுன்
தீரமும் வாட்டின திணிபுயம் கண்டிலாய்.

யாவரும் அஞ்சுமாறு கூறிய கொடிய அசுரனைக் கண்ட வன்னிய வீரனும் கோபம் கொண்டு, "இப்பூமியில் உள்ள அரக்கர் அனைவரையும், உன் தம்பிகளையும், பிள்ளைகளையும், உன்னையும் துன்புறுத்திய என் தோள்வலி உனக்குத் தெரியவில்லை."

கோரம் - அச்சம் தருமாறு. **விள்ளுவன்** - கூறுவன். **தாரணி** - பூமி.

882. "எல்லோரையும் இழந்து நீ மட்டும் தனித்து வந்தாய்" எனல்

ஒண்டியாய் இரதம் இவர்ந்து நின்றனை
அண்டையில் துணையிலா தவலம் ஆகினை

பண்டரன் அளித்திடும் வரமும் குன்றினை
சண்டனும் உன்னுயிர் தழைத்து நின்றனன்.

"தனியாகப் பக்கத்தில் துணையில்லாமல் தேரின் மேல் ஏறி நிற்கும் அவல நிலை அடைந்தாய். முன்பு சிவன் அளித்த வரமும் இழந்தாய். எமனும் உன்னுயிர் கிடைக்கப் போகிறதென மகிழ்ந்து நிற்கிறான்"

ஒண்டி - தனியாக. **இரதம்** - தேர். **இவர்ந்து** - ஏறி **பண்டரன்** - பண்டு + அரன் - முன்பு சிவன். **சண்டன்** - எமன்.

883. "படைகள் அழிந்தும் ஆணவம் நீங்கவில்லை" எனல்

முத்தனீந் திடுமிசை முடிவ தாகிய
வித்தையை உணர்ந்திலா வீரம் கூறினாய்
சுற்றமும் தானையும் சூழ்ந்திடும் மக்களும்
அற்றுமுன் ஆண்மைகள் அடங்க வில்லையே.

"சிவபெருமான் கொடுத்த ஆயுள் முடிந்திடும் காலம் வந்ததை அறியாமல் வீரவுரை கூறினாய். உன் சொந்தமும், படைகளும், மக்களும் மடிந்தும் கூட உன் அகந்தை அடங்கவில்லையே?"

முத்தன் - சிவன். **இசை** - ஆயுள், புகழ். **அற்றும்** - இறந்தும்.

884. தற்பெருமை பேசுகிறாய் எனல்

தவவலி மிகுந்தவர் தாஷ்டி கூறிலார்
பவகுல மானதாற் பலிதங் கூறினை
நவமெனும் வாயிலில் நாடி யற்றிட
அவமென மடிகுவை அவுணனே என்றான்.

"தவவலிமை யுடையவர் தற்பெருமை பேசமாட்டார். அசுர குலமானதால் பெருமை கூறினாய். உன்னுடைய ஒன்பது

துவாரங்களிலும் நாடி அற்றுப் போகும்படி வீணாக மடியப் போகிறாய் அசுரனே!"

தாஷ்டி - வீரம், தற்பெருமை. **பவகுலம்** - இழிந்தகுலம். **பலிதம்** - சபதம். **நவம்** - ஒன்பது. **ஒன்பது துவாரங்கள்** - கண்கள், காதுகள், மூக்குத்துவாரங்கள், வாய், சிறுநீர், மலத்துவாரங்கள்.

885. உன்படை தோற்றதே எனல்

அளவிலாத் தானையை அனுப்ப வந்துபோர்க்
களமதில் மடிந்ததைக் கண்ணில் கண்டனை
வளமுறும் என்படை நலிவும் உற்றதோ
களங்கம் முன்கதிர் கண்படக் கூறினாய்.

"அளவற்ற உன் படையை அனுப்பினாய். போர்க் களத்தில் அனைவரும் மடிந்ததைக் கண்ணால் கண்டாய். என்னுடைய படை ஏதாவது நலிவுற்றதா? பனிமேல் சூரியன்பட்டது போல் உன் பேச்சால் பயனில்லை"

நலிவு - தளர்ச்சி. **களங்கம்** - பனி.

886. "சிவன் வரத்தால் உன்னைக் கொல்வேன்" எனல்

அல்லலை அகற்றிடும் அரன்தன் ஆண்மையால்
செல்வமும் பெருகுவர் சேரி யாதினோர்
வல்லமை யால்நலம் வருகு மோபரன்
நல்வரத் தாலுனை நலிசெய்வேன் என்றனன்.

"துன்பத்தைப் போக்கும் சிவன் வரத்தால் செல்வம் பெறுவர். அல்லது வல்லமையால் நலம் வருமோ? சிவனிடம் பெற்ற வரத்தால் நானுன்னை அழிப்பேன்" என்றான்.

அல்லல் - துன்பம். **நலிசெய்வேன்** - அழிப்பேன்.

887. "உன்னைக் கொல்லாவிடில் நான் அரன்மகன் இல்லை" எனல்

கங்குலென் றுரைத்திடும் கதித்த ஆக்கையை
வெங்கணை ஈந்திட வினைசெய் யாவிடில்
திங்களை அணிஅரன் சேயன் அல்லன்யான்
அங்கயற் கண்ணியாள் அறிய என்றனன்.

"இரவு போன்ற கருத்த பருத்த உடல்மேல் நான் அம்பு எய்ய நீ இறக்காவிடில் அழகிய கயல்மீன் போன்ற கண்ணுடைய மீனாட்சி அறிய நான் சந்திரனை அணிந்த சிவன்மகன் அல்லேன்" என்றான்.

கங்குல் - இரவு இருள். **ஆக்கை** - உடல். **திங்கள்** - சந்திரன். **சேயன்** - பிள்ளை. **அம்** - அழகிய.

888. வாதாவி சினந்து அம்பு விடுதல்

என்றுரை பகர்ந்த வன்னிய வீரன்மேல்
குன்றெனும் அவுணனும் கொதித்து எழும்பியே
வென்றி ஆயிரம் கணைவிடுப்ப தேரினை
ஒன்றுதல் இன்றியே உடைத்தெ றிந்ததே.

இவ்வாறு கூறிய வன்னிய வீரன்மேல் குன்று போன்ற அசுரன் கோபித்து ஆயிரம் அம்பு விட்டான். அவை வன்னியனின் தேரினை அச்சு வேறு ஆணி வேறாக உடைத்தன.

889. வீரர்களும் பிள்ளைகளும் விழுதல்

மற்றொரு தேரின்மேல் மன்னன் ஏறுமுன்
பற்றி ஆயிரம் பாணம் ஏவினன்
சுற்றிய சூரரும் சுதரும் மூர்ச்சையாய்ப்
பற்றிய புவியினில் படுப்ப தாகினான்.

வீரவன்னியன் மற்றொரு தேரின்மேல் ஏறுவதற்குமுன் ஆயிரம் பாணம் விட்டான் வாதாவி. அதனால் சுற்றிலும் உள்ள

வீரர்களும் பிள்ளைகளும் மூர்ச்சை அடைந்து பூமியில் விழுமாறு செய்தான்.

பாணம் - அம்பு. **சூரர்** - வீரர். **சுதர்** - பிள்ளைகள்.

890. தண்டாயுதத்தால் அசுரன் மகுடம் கீழே விழுதல்

துண்டவா தாவியின் துடுக்கைக் கண்ணினால்
கண்டொரு தண்டினைக் கரத்தில் ஏந்தியே
முண்டியே தெரித்திட மூர்க்கன் சென்னியின்
மண்டியே மணிமுடி மண்ணில் வீழ்ந்ததே.

துட்டனாகிய வாதாவியின் கெட்ட தன்மையைக் கண்ணினால் கண்ட வன்னிய வீரன் தண்டத்தைக் கையில் ஏந்தி விடுதல் செய்ய அத்தண்டம் வாதாவியின் தலையில் இருந்த மணிமகுடத்தை மண்ணில் வீழ்த்தியது

துண்ட - துஷ்ட, கெட்ட. **துடுக்கை** - கெட்ட தன்மையை. **சென்னி** தலை.

891. வாதாவி சினந்து வில்லை ஒலித்தல்

முடிதெ ரித்திட அவுணாதி மூண்டெழு
வடவை யனலென மனத்தில் வெம்பியே
இடிஇடித்தது என இமையோர் அஞ்சிட
கடுஞ்சிலை குணத்தொனி கணத்திற்
செய்தனன்.

மகுடம் தெரித்ததும் வாதாவி வடவாமுகாக்கினி போல் கொதித்து, இடிஇடித்தது என்று தேவர் அஞ்சும்படி வில்லின் நாணினை வளைத்து ஒலி செய்தான்.

இமையோர் - தேவர். **தொனி** - ஒலி.

892. இருவரும் மாறி மாறி அம்பு விடல்

விந்தை கிரியென வந்த அவுணரின்
வில்லின் வலிவினை மன்னனும்
சிந்தை தனிலுணர்ந் தந்த மாகிய
சிலைக ரத்தில் அம்பினை
முந்தி ஆயிர மேவு மூர்க்கனு
முண்டு கணைவதில் ஏவலும்
அந்தி பகலென ஒழிவி லாமலே
அமர்பு ரிந்திட லாகினார்.

விந்திய மலைபோல வந்த அசுரரின் வில்லின் வலிமையை வன்னிய வீரன் மனத்திலுணர்ந்து ஆயிரம் அம்பை எய்ய, அசுரனும் பதிலுக்கு ஏவ, இரவும் பகலும் ஒழியாமல் இருவரும் போர்புரியலாயினர்.

விந்தைகிரி - விந்திய மலை. **அந்தம்** - யுகமுடிவு. **கரம்** - கை. **வதில்** - பதில். **அந்தி** - இரவு.

893.

வடவை அழலென இருவர் விழியினில்
வளரும் அழலினை வடவைகண்டு
உடலும் நவிவுற உவரி சுவறிட
உரக்ர் சுடிகையின் மணிதெரித்து
இடிகள் ஒலியென அதிர குணரதொலி
இரத கொடிமுர சதிரவும்
கொடிய னுடலன லுருக அமர்செய்
குறைவி லமர்பொரு தினரரோ.

வடவா முகாக்கினி போல இருவருடைய விழியிலும் வளரும் தீயைக் கண்டு வடவைத் தீயின் உடலே மெலிந்தது. கடல் வற்றியது.

நாகலோகத்திலுள்ள நாகர்களின் உச்சிமணி தெரித்து விழுந்தது. வில்லின் நாணை ஒலிக்கும் ஒலியும், தேரில் கட்டிய மணியின் ஒலியும், முரசதிர்வும் இடியெனக் கேட்டன. வாதாவி உடல் நெருப்பென உருக இருவரும் தோல்வியின்றிப் போர் செய்தனர்.

நலிவுற - மெலிய. **உவரி** - கடல். **சுவறிட** - வற்றிட. **உரகர்** - பாம்பு, நாகர். **குணர்** - வில்நாண்.

894. இராமனும் இராவணனும் போல் போரிடல்

குசன் சுழல்பவ திகிரியென வலமிட
சாரி ரெண்டென இரதமேற்
கசட வவுணனும் இணையில் சிவமகனும்
கடியசர மழைபொ ழியவும்
தசையி லுதிரமெழ நதிகளென வொழுகித்
தரணி யுறதயி ரியம்விடா
விசய ரகுபதி யுடனே தசமுகன் எதிர்த்தென
விளம்ப சமர்செய் தனரரோ.

குயவனின் சக்கரம் சுழல்வதுபோல் குற்றமுள்ள, அரக்கனும் இணையற்ற சிவன் மகனும் தேரின் மேலேயே இடப்புறமாகவும், வலப்புறமாகவும் சுழன்று சுழன்று, கொடிய அம்புகளை மழைபோல் பொழிந்து, சதையில் ரத்தம் பெருக்கெடுத்து நதிகள் போல் பூமியில் ஓடவும், தைரியத்தை இழக்காமல் இராமனை இராவணன் எதிர்த்தது போல் விடாமல் யுத்தம் செய்தனர்.

குசன் - குயவன். **திகிரி** - சக்கரம். **சாரி** - பக்கம். **கசட** - குற்றமுள்ள. **சரமழை** - அம்புமழை. **தசை** - சதை. **உதிரம்** - இரத்தம் **விசய ரகுபதி** - வெற்றி பொருந்திய இராமன். **தசமுகன்** - இராவணன் (பத்து முகங்களையுடையவன்)

895. வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் சென்று போர் புரிதல்

வாயு வருணனும் மதியி னுலகினில்
மன்னி பகழி சொரிந்தனர்
காயு கதிருல கடைய அவனி
கலங்க வலிமை கழறுவார்
பாய தெனவிரி புவியி லதர
பவனி புரிந்தனன் மிசைஒரு பத்துநாள்
ஓய்வி லுணர்விலா துயிலு மின்றியே
ஊக்க மோடமர் செய்தனர்.

வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம் எங்கும் சென்று அம்புமழை பொழிந்தனர், சூரிய மண்டலம் சென்று பூமி கலங்கத் தம் வலிமையைப் பேசுவர். பாய்போல் விரிந்த பூமியெங்கும் பவனி வந்தனர். இவ்வாறு பத்துநாட்கள் ஓய்வின்றி, உணவின்றித் தூக்கமின்றி ஊக்கமோடு போர் செய்தார்கள்.

பகழி - அம்பு. **கதிருலகு** - சூரியமண்டலம். **அவனி** - பூமி **துயில்** - தூக்கம்.

896. வாதாவியின் தேர் பூமியில் விழுதல்

அலகை இரதமும் அசுவ இரதமும்
ஆண்மை ஒன்றென அமரரும்
இலகி உரைசெய அழலில் உதிப்பவன்
இணையில் திகிரியை ஏவவும்
அலகை சிரமதை அரிய இரதமும்
அவனி யினிலிடி யெனவிழ
புலவு மிகுஉடல் அவுணன் உளமழல்
பொலிய புவியினில் நின்றான்.

"பேய் பூட்டிய இரதமும். குதிரை பூட்டிய இரதமும். இரண்டு இரதமும் வீரத்தில் ஒன்றாயிருக்கிறது" என்று தேவர்களே புகழ்ந்தனர். அக்கினியில் உதித்த வன்னிய வீரன் பேய் பூட்டிய ரதத்தில் சக்ராயுதத்தை விட. பேயின் சிரம் அறுந்தது. தேர் இடியெனத் தரையில் விழுந்தது. மாமிசம் மிகுந்த உடலையுடைய அரக்கன் உள்ளத்தில் கோபம் மிக பூமியில் நின்றான்.

அலகை - பேய். **அசுவம்** - குதிரை. **அவனி** - பூமி. **திகிரி** - சக்கரம் **புலவு** - மாமிசம் **உளம் + அழல்** - உள்ளத்தில் கோபம்.

897. வாதாவி இருகைகள் அறுபடல்

இரதம் இன்றி அவுணன் வெகுகணை
எய்து மனமது நையவும்
புரமும் எரிசெயும் புனிதன் மகனும்
பொருதி அழலுதிர் கணைதொட
வரையின் இருசிற கரிவ தெனபடை
வலிய இருகரம் அரியவே
பெரிய குரலொலி அதிர அவனியில்
புரண்டு ருண்டு திரிந்தனன்.

தேர் இல்லாமல் அசுரன் பல அம்புகளை விட்டு மனம் வருந்த. முப்புரம் எரித்த சிவனின் மகன், அக்கினிக் கணையை ஏவ மலையின் இருசிற கரியப்படுவதுபோல் வாதாவியின் வலிய இரண்டு கைகளும் வெட்டுப்பட இடிபோன்ற குரலொலியுடன் பூமியில் உருண்டு புரண்டான்.

நைய - வருந்த **வரை** - மலை.

898. வாதாவி சிரம் அறுபடல்

வீரர் படையை அறுத்து வெஞ்சினம்
விட்டு தன்னுயிர் விண்ணினில்

சேர வதுதுணி வாகு மென்று
செழித்த புவியுமோ ரம்மியும்
சூர னொருகுழ வியுமென புரண்டு
துஷ்ட னுடலுயிர் விட்டிடக்
கூர யிற்கணை யேவ வாங்கி
கொதிப்ப சென்னியைக் கொய்ததே.

வன்னிய வீரர்களின் படைகளை அழித்துத், தன் சினத்தை விட்டு, உயிரை விடுவதே சிறந்தது என்று பூமி அம்மியும் தான் குழவியும் எனப் பலமுறை உருண்டு புரண்டு அசுரன் உயிர் விடுமாறு கூர்மையான இலையையுடைய வேலாயுதம் அவன் தலையை அறுத்தது.

கூர் அயில் - கூர்மையான வேலாயுதம். **கொய்தது** - அறுத்தது.

899. எமதூதர் வாதாவியின் உயிரைப் பிடித்தல்

முடிய கற்றிட முண்டம் துடித்திடக்
கொடிய வெஞ்சினக் கூற்றுவன் தூதரும்
கடுமை ஆகிய கயவனின் ஆவியை
துடிய தாகத் துரத்திப் பிடித்தனர்.

தலை துண்டிக்கப் பட்டதும் முண்டம் துடிக்க, கொடிய சினமுடைய யமனுடைய தூதரும். கொடியவனாகிய வாதாவியின் உயிரை வேகமாகத் துரத்திப் பிடித்தனர்.

கூற்றுவன் - எமன். **ஆவி** - உயிர். **துடியதாக** - விரைவாக.

900. தேவர்கள் பூமாரி பொழிதல்

வண்ட ராக்கதன் மண்ணின் மடிந்திட
அண்டர் கண்டு அகமும கிழ்ந்துபூ
மண்ட மர்க்கள மன்னிடத் தூற்றியே
விண்டலம் விட்டு வீரனை மேவினார்.

கொடிய அரக்கன் பூமியில் மாண்டதும், தேவர்கள் மனம் மகிழ்ந்து பூமாரி பொழிந்து புஷ்பக விமானத்துடன் தேவருலகம் விட்டு வீரனை அடைந்தனர்.

வண்டன் - துட்டன். **அண்டர்** - தேவர். **தூற்றி** - பொழிந்து. **விண் + தலம்** - விண்டலம். **மேவினர்** - பொருந்தினர்.

901. வீரர் உயிர் பெறுதல்

சூர னாலுயிர் சோர்வுறும் வீரரும்
வீரன் மக்களும் மீறி எழுந்தனர்
மாரி என்னும் வராகி மலரடி
சீரு டன்துதி செய்து செழித்தனர்.

வாதாவியால் உயிர் மயங்கியிருந்த வீரர்களும், வன்னியன் பிள்ளைகளும் மீண்டும் எழுந்து மாரி என்று சொல்லப்படும் வராகியின் மலர்போன்ற அடிகளைத் துதித்து மகிழ்ந்தனர்.

சூரன் - வாதாவி. **வீரன்** - வன்னியன்.

902. பேய்கள் ஆடுதல்

கொற்றி பூதம் குளிர்மனம் உன்னியே
செத்த அரக்கர் செழுந்தசை தின்றிட
வெற்றி மங்கள வீரனை ஏத்தியே
நித்த மாடியும் நேமி இருந்ததே.

துர்க்கையின் பூதங்கள், துர்க்கையின் குளிர்ச்சியான மனத்தை எண்ணி, இறந்த அரக்கரின் செழுமையான சதையைத் தின்று, வெற்றி பெற்ற வீர வன்னியனைத் துதித்து, ஆடிக்கொண்டு பூமியில் மகிழ்ந்தன.

கொற்றி - துர்க்கை. **செத்த** - இறந்த. **நித்தம்** - நிருத்தம். ஆட்டம் **நேமி** - பூமி.

903. கழுகு காகம் தசை உண்ணுதல்

கவந்தம் ஆட கழுகுகளும் காகமும்
சிவந்த சோரி கடல்தீர்த்தம் ஆடியே
தவநி ணங்களைத் தசையைப் பறியுண
அவுண வாதாவி ஆவி இழந்தனன்.

முண்டங்கள் ஆட, கழுகுகளும், காகமும், சிவந்த இரத்தத்தில் குதித்துக் கடல் தீர்த்தமென நீராடி கொழுப்புகளைப் பறித்துண்ண வாதாவி உயிரிழந்தான்.

கவந்தம் - தலையிழந்த உடல். **சோரி** - இரத்தம். **நிணம்** - தசை. **ஆவி** - உயிர்.

904. வானவர் "சிவன் மகனால் இது நடந்தது" எனல்

ஓரி பாடவும் உற்றபேய் ஆடவும்
சூர முண்டம் துடித்திட வானவர்
பேரி நின்ற பித்தன்செய் வாளியால்
சோரி யின்குடர் சூழ்ந்தது என்றனர்.

நரி ஊளையிட, பேய் ஆட, முண்டம் துடிக்க, தேவர் பேரி முழங்க, "சிவன் மகனால் இரத்தம் சூழ்ந்து" என வானவர் கூறினர்.

ஓரி - நரி. **பித்தன்** - சிவன். **வாளி** - அம்பு. **சோரி** - இரத்தம்

905. கடல்நீர் சூரியன் போல் தோன்றுதல்.

லவண மென்னும் ஆழ்கடல் நடுவினில்
அவுண ராக்கை நிறைத்தசெந் நீரெலாம்
பவமி லாத இளங்கதிர் பான்மைபோல்
துவைந்து துவைந்து தோன்றின தென்றனர்.

"உப்பு நிறைந்த ஆழமான கடலில் அரக்கர் உடல் நிறைந்த இரத்த நீரெலாம் கலந்து பாவமில்லாத இளஞ்சூரியன் போல் தோன்றியது" என்றனர்.

லவணம் - உப்பு **செந்நீர்** - இரத்தம் **பவம்** - பாவம். **துவைந்து** - கலந்து.

906. அரக்கர் உறுப்புகள் மீன், நுரை, ஓடமென விளங்குதல்

விழிகள் கயலின மாக விளங்கவும்
கழலடிக் கணைக்கால் வரால் மீனென
அழிவெனும் நிணம் அந்நதி வெண்ணுரை
குழிகண் கள்திமி லமெனக் கூறினார்.

"இரத்தக் கடலில் அசுரரின் விழிகள் கயல் மீன் போலவும், கணுக்கால்கள் வரால் மீன்போலவும், கொழுப்பு நுரை போலவும், குழிந்த கண்கள் ஓடம் போலவும் உள்ளன" என்றனர்.

நிணம் - கொழுப்பு. **திமிலம்** - ஓடம்.

907. பாய்மரம் - தாமரை இலைகள்

பருந்துவசம் பாய்மர மானசெஞ்
சரமுடன்சிலை தாஷ்டிகம் போலவெண்
தருசரீரமும் பங்கயத் தின்தளிர்
உருவமானவ ரிடைப்பா ரென்றார்.

"பெரிய கொடிகள் பாய்மரமாக விளங்குகின்றன. சிவந்த அம்புகளும் வில்லும் பக்க மரங்களாக உள்ளன. அரக்கர் உடல்கள் தாமரை இலையெனத் தோன்றுகின்றன. இப்படி இரத்தக் கடலில் அசுரர் உடல்களைப் பாருங்கள்" என்றனர்.

பரும் - பெரிய. **துவசம்** - கொடிகள். **தாஷ்டிகம்** - பக்க மரம். **பங்கயம்** - தாமரை. **தளிர்** - இலை.

908. இரதங்கள் - மலைகள்

இரத மானது இலங்கிய மேருவாம்
பரவு சோரியும் பரிதித் திசையினில்
கரவி லாமல் கவிழ்ந்தெழுந் தோடின
குருதி யிற்கடல் கோலமீ தென்றனர்.

"இரதங்கள் மலைகள் போல் இருந்தன. இரத்தமும் கிழக்குத் திசையில் வழிந்தோடியது. கடலின் கோலம் இது" என்றனர்.

மேரு - பெரிய மலை. **சோரி** - இரத்தம். **பரிதி** - சூரியன். **பரிதித்திசை** - கிழக்குத் திசை. **கரவு** - ஒளிவு. **கோலம்** - அழகு.

909. வன்னிய வீரன் விடுதிக்குச் செல்லல்

விண்ண வர்உயிர் மீற விளங்கின
அண்ணல் வீரன் அவுணரைச் சேற்றியே
நண்ணு கோயிலில் நாடினன் தானையும்
திண்ண மாகச் செயமுற் றிருந்தனர்.

வானவர் உயிர் பிழைத்தனர். வன்னிய வீரன் அரக்கரை அழித்துத் தான் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றான். அவன்படைகளும் வெற்றி பெற்றதால் மகிழ்ச்சியோ டிருந்தனர்.

கோயில் - மாளிகை. **செயம்** - வெற்றி.

910. வீரர்கள் துர்க்காதேவியுடன் மகிழ்தல்

செம்மல் வீரன் செயஞ்செய மென்னவே
மும்முர சதிர குழாங்கள் முழங்கிட
அம்மை யாகிய அந்தரி யாருடல்
விம்மி டத்தொழு தேத்தி விளங்கினார்.

"வன்னிய வீரனுக்கு வெற்றி வெற்றி" யென முரசங்கள் அதிர, வாத்தியங்கள் முழங்க, துர்க்கா தேவியுடன் வீரர்கள் உடல் புளகமுற்று மகிழ்ந்து இருந்தனர்.

செம்மல்வீரன் - வன்னிய வீரன். **செயம்** - வெற்றி. **அம்மை** - தாய். **அந்தரி** - துர்க்கை.

911. வாதாவியின் மனைவி சொக்ககன்னி அமர்க்களம் வருதல்

ஈங்கிவர் இருப்ப மாய்ந்த
இயக்கர்கோன் தேவி பக்கம்
பாங்குள வொற்றர் கூறப்
பருஞ்சமர்க் களத்தை நாடி
ஓங்கிய வரையா மென்னும்
உடலினை விழியாற் கண்டு
தாங்கிடாத் துயர முற்றுத்
தயங்கியே அறைய லுற்றாள்.

இவ்வாறு இவர்கள் இருக்க, இறந்த வாதாவியின் மனைவியிடத்தில், வாதாவியின் ஒற்றர்கள் சென்று, செய்தி கூற, அவள் போர்க்களம் வந்து, மலையென உயர்ந்த தன் கணவனின் உடலைக் கண்களாற் கண்டு துயரத்துடன் கூறுவாள்.

912. சொக்க கன்னி புலம்பல்

எனதுநா யகனே உந்தன்
எழிலையும் புயமும் கண்டேன்
மனதினில் உவகை யுற்று
மருவின சுகம்ம கிழ்ந்தேன்
புனிதனாம் அரன்சேய் வேலால்
புவியினில் ஆவி போந்து
தனயர்பால் சார்ந்தி ருந்த
சதியறி கிலேனே என்றாள்.

"என்னுடைய தலைவனே! உன் அழகையும் தோள் வலிமையையும் கண்டு மகிழ்ச்சியோடு உன்னைச் சேர்ந்து

சுகமுற்றேன். சிவன் மகனின் வேலால் இவ்வுலகில் உயிரை விட்டுப் பிள்ளைகளுடன் போன செய்தி அறியாத பாவியானேன்" என்றாள்.

ஆவி - உயிர். **தனயர்** - பிள்ளைகள்.

913. "உன்பெருமை மறந்து உயிரிழந்தாய்" எனல்

எண்திசை வென்றே கீர்த்தி
இயம்பிய உனது பக்கம்
சண்டனும் தூதர் மன்னத்
தரணியே வலைஇ சைப்ப
அண்டரும் அஞ்ச அந்த
அரிவையாய்ப் பாணி ஈய்ந்த
மண்டலம் பிறந்த தெங்கே
மறந்துயிர் இழந்தாய் என்றாள்.

"எட்டுத்திசையையும் வென்று புகழ் பெற்ற உன்னிடத்தில் இயமனும் தூதரோடுவந்து ஏவல் செய்தான். தேவரும் அஞ்சினர். தேவ மாதரும் பணி செய்தனர். இப்படிப் பட்ட ராஜ்ஜியத்தை மறந்து உயிர் இழந்தாயோ" என்றாள்.

சண்டன் - எமன். **அண்டர்** - தேவர். **அரிவை** - தேவப்பெண்கள்.

914. "என்னை விட்டுப் போனாயோ" எனல்

மயனெனும் எனது தாதை
மாதவம் இசைத்த ளித்து
புயவலி சூரன் கையைப்
பொருந்தவே அளிப்ப உள்ளம்
அயர்விலா திருந்த் என்னை
அந்தர மாவி டுத்தே
செயமுறு மறலி பக்கம்
செழித்தி ருந்தையோ வென்றாள்.

"எனது தந்தையாகிய மயன் தவம் புரிந்து பெற்ற என்னைத் தோள்வலியுடைய வீரனாகிய உன்கையில் கொடுத்தார். நானும் மகிழ்ந்து மனத்தில் கவலையே இல்லாது இருந்தேன். அப்படிப்பட்ட என்னை ஆதரவில்லாமல் விட்டுவிட்டு எமனிடத்தில் போனாயோ" என்றாள்.

அயர்வு - தளர்வு. **அந்தரம்** - நடுவில், ஆதரவின்றி. **மறலி** - எமன்.

915. "பிள்ளைகளை எழுப்பத் தவம் புரிய வானுலகம் சென்றாயோ" எனல்

மக்களைப் பிடித்த வீரன்
மாதுலன் உலகில் சார்ந்தே
தக்கமாய்ப் பொருந்தி நீபோய்த்
தனயரை எழுப்ப வென்றே
மைக்கண்ட முடையன் தாளில்
மாதவம் புரிகின் றாயோ
துக்கசா கரத்த முந்தும்
தோகையான் அறியேன் என்றாள்.

"உன்மைந்தர் உயிரைப் போக்கிய வீரனின் மாமன் உலகில் போய் உன்மக்களை எழுப்புவதற்காக நீலகண்டன் பாதங்களை நினைத்துத் தவம்புரிகின்றாயோ? கவலையில் ஆழ்ந்திருக்கும் நான் அறிய மாட்டேன்" என்றாள்.

மாதுலன் - மாமன். இங்கு இந்திரன். **துக்க சாகரம்** - துயரக்கடல்.

916. சொக்க கன்னியின் துயரம்

சேடியர் அரற்ற மாது
சிந்தையில் துயரம் உன்னி
வாடியே மண்மேல் சோர்ந்து
மார்பினில் அறைந்த றைந்தே

ஓடுவ ளவுணர் சோரி
உடலினில் தோய வாயால்
பாடுவள் வாய்தி றந்தே
படியுரை பகர லுற்றாள்.

தோழியர்களும் அரற்றினர். சொக்க கன்னி மனதில் துயரம் அடைந்து வாடி மண்ணில் அமர்ந்து மார்பில் கையால் அறைந்து கொள்வாள். ஓடுவாள். அசுரர் குருதி உடலில் பட வாயால் அரற்றிப் புலம்புவாள்.

சேடியர் - தோழியர். **சோரி** - இரத்தம். **படியுரை** - குற்றமான சொற்கள்.

917. "தேவர்களை விடமாட்டேன் என்று உயிரிழந்தாயோ" எனல்

நரரினை வதைத்தி டாமல்
நலிவடை மன்னா பண்டு
வரங்கொ டுபல னோவுந்தன்
மகத்தினால் அடைந்த தீதோ
வரம்செயும் அமரருக் கேக
ஒண்ணா தென்ற வெஞ்சொல்
லுரைத்திங்கண் உறைந்தே உள்ளம்
துடித்துயிர் இழந்தாய் என்றாள்.

"மனிதனாகிய வீர வன்னியனைக் கொல்லாமல் நலிவடைந்தாய். முன்பு தவம் செய்து வரம் பெற்றதால் அடைந்த தீமையோ? 'தேவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருக்க முடியாது' என்று கூறி இங்கு வந்து உள்ளம் துடித்து உயிரிழந்தாய்" என்றாள்.

நரர் - மனிதர். **பண்டு** - முன்பு. **மகம்** - யாகம்.

918. "ருத்ரன் உனக்கு முடிவு காலமோ" எனல்

ஆழியோன் கணைதி ருத்த
அனங்கனும் எழில ளிக்க
வாழிவா னவர்கள் ஏத்த
வாக்கினான் மறைவ ழுத்த
காடுறை முனிக லங்கக்
கலைத்திடு முனைவ தைக்க
ஊழிகா லங்க ளென்ன
உருத்திரன் உதித்தா னன்றே.

"திருமால் சக்கரம் அளிக்க, மன்மதன் அழகு தர, தேவர்கள் போற்ற, பிரமன் சாஸ்திரம் கற்பிக்க, முனிவரும் கலங்க, அவர்களைத் துன்புறுத்தி வாழ்ந்த உமக்கு முடிவு காலமாக உருத்திரன் வந்தானோ?" என்றாள்.

ஆழியோன் - சக்கரப் படையுடைய திருமால். **கணை** - அம்பு. **அனங்கன்** - உருவமில்லாதவன் மன்மதன். **வானவர்** - தேவர். **வாக்கினான்** - பிரமன். **மறை** - வேதம். **வழுத்த** - சொல்லித்தர. **உருத்திரன்** - ருத்ர வன்னியன்.

919. "தவம் செய்து வரம் பெற்ற நீ எப்படி இறந்தாய்" எனல்

தவம்செயும் வலிமைக் காகத்
தற்பரன் வரங்கள் ஈந்த
தவமென் போயிற் றையா
தக்கதோ மொழிவாய் இன்று
புவியினில் இகழ்ச்சி துன்ன
புகன்றிடு முனது வீரம்
அவல மானது மென்ன
அறிகிலே னரசே என்றாள்.

"நீ தவம் செய்த ஆற்றலைக் கண்டு சிவனே வரங்கள் கொடுத்தான். அந்தத் தவம் எங்கே போயிற்று? இந்த பூமியில் உனது வீரம் இகழ்ச்சியடைந்ததற்கு என்ன காரணம் அறியவில்லையே" என்று புலம்பினாள்.

920. நாரதர் பேச்சைக் கேட்கவில்லை எனல்

அமரருக்(கு) இடர ளிக்கா(து)
அவனியைப் புரப்பை என்றே
விமலன்சேய் உரைத்தோர் தூது
விடுத்தனன் அதைவெ குண்டே
சமர்செய இசைந்தாய் அதனால்
தரணியில் சார்ந்தே பொல்லா
அமரளித் துனைவ தைத்தே
அலரணிந் திருந்தா ரென்றாள்.

"தேவர்களுக்குத் துன்பம் தராமல் பூமியைக் காப்பாய் என்று சிவன்மகன் தூது விட்டான். அதைக் கேட்காமல் கோபித்துப் போருக்கு இசைந்தாய். அதனால் இங்கு வந்த சிவன்மகன் போர்புரிந்து உன்னை வதைத்து வெற்றிமாலை அணிந்தான்" என்றாள்.

அமரர் - தேவர். **இடர்** - துன்பம். **அவனி** - உலகம். **புரப்பை** - காப்பாற்றுவாய். **விமலன்** - குற்ற மில்லாதவன், சிவன். **சேய்** - குழந்தை. **வெகுண்டு** - கோபித்து. **சமர்** - போர். **தரணி** - பூமி. **அமரளித்து** - போர்செய்து. **வதைத்து** - துன்புறுத்தி. **அலர்** - வெற்றி மாலை.

921. "நீண்டநாள் இருப்பாய் என நினைத்தேனே" எனல்

எண்ணினேன் அநேக காலம்
இருந்திட எனது வாயில்
மண்ணினை அளிக்க வீன்ற
மகனுடன் நீயும் மாண்டே

விண்ணுல கடைந்தாய் உந்தன்
வீரமும் அவல மாக
பண்ணினோர் பரமன் பாலர்
பார்த்திப அரசே என்றாள்.

"நீண்ட நாள் வாழ்ந்திருப்பாய் என்று நினைத்தேன். எனது வாயில் மண்ணைப் போட உன் மகன்களுடன் நீயும் இறந்து விண்ணுல கடைந்தாய். உனது வீரம் தோற்றுப்போகச் செய்தவன் சிவன்மகன் அரசே" என்றாள்.

922. "மலர்ப்படுக்கையை விட்டு இறப்பதற்காகப் படுகளம் வந்தாயோ" எனல்

உரிமையா யிருந்த தெல்லாம்
ஒளித்தனை உஃது வீரம்
பருமமாம் உடலும் சென்னி
பாரினில் புழுதி மண்டிச்
சிறுமையா யிருந்த தெல்லாம்
செம்மலர் அணையில் துஞ்சும்
பரிவினை அகன்றே இந்தப்
படுகளம் சேர்ந்தா யென்றாள்.

"உரிமையோடு நாம் வாழ்ந்ததை யெல்லாம் மறந்து உன்னுடைய வீரத்தையும் பருமையான உடலையும் தலையையும் பூமியில் மண்படும்படி வீழச் செய்தாய். மலர் போன்ற படுக்கையில் தூங்கும் பாக்கியத்தை விட்டு இந்தப் படுகளம் வந்து சேர்ந்தாய்" என்றாள்.

ஒளித்தனை - மறந்தாய். **பருமம்** - பெரிய. **சென்னி** - தலை. **துஞ்சும்** - தூங்கும்.

923. "இப்பூமியைக் காக்க வேறு யாரும் இல்லையோ" எனல்

கலந்தணைந் திருப்போ மென்றென்
　　கருத்தினில் உணர்ந்த தெல்லாம்
நலிவுறச் செய்தாய் இந்த
　　நானிலம் தனிலி ருந்தே
குலவுவ துளதோ இந்தக்
　　குவலயம் புரப்ப வேறோர்
பலமுள பாலரு முண்டோ
　　பாவையென் செய்வல் என்றாள்.

"நீண்டநாள் நாம் கலந்து வாழ்வோம் என்று நினைந்திருந்தேன்; வீணாக்கினாய். நீ இறந்த பிறகு நான் இந்தப் பூமியில் வாழ்வேனோ? இல்லை இப்பூமியைக் காக்க வேறு ஒரு பலமுள்ள பிள்ளையாவது உள்ளானா? பெண் நான் என்ன செய்வேன்?" என்று புலம்பினாள்.

குவலயம் - பூமி. **புரப்ப** - காக்க. **பாலர்** - பிள்ளை.

924. "நான் அரற்றலாமோ" எனல்

தருமமாய் புவிபு ரக்கத்
　　தன்மனத் துணரா மன்னா
கரமுடன் சிரமு மற்ற
　　களேபரம் குருதி சோர
மருமல ரணைய கற்றி
　　மாநிலம் படுத்த உந்தன்
அரிவையான் அரற்ற லாமோ
　　அரசனே அந்தோ வென்றாள்.

"தருமத்தோடு பூமியைக் காக்க உணராத மன்னனே! கையும், தலையுமற்று உடல் இரத்தம் பொங்க, மணம் மிகுந்த மலரணையை

விட்டு, பூமியில் படுத்த உன் மனைவி நான் புலம்பலாமோ அரசே! ஐயோ!" என்றாள்.

கரம் - கை. **சிரம்** - தலை. **களேபரம்** - முண்டம். **குருதி** - இரத்தம். **சோர** - வழிய. **மரு** - மணம். **அரிவை** - பெண். இங்கு மனைவி.

925. "உன் அரசு என்னை அரற்ற வைத்தது" எனல்

தானவர் மலர்கள் தூற்ற
தையலர் கவரி வீச
பானெனும் மாதர் யாழைப்
பக்கமாய் இருந்து மீட்டக்
கோனென இருந்த மன்னா
கோதுள அமர்க்க ளத்தில்
யானரற் றிடவைத் தாயுன்
அரசெலாம் அபஜெயம் என்றாள்.

"தேவர்கள் மலர்கள் தூவ, தேவமகளிர் கவரி வீச, மற்றும் தேவப் பெண்கள் யாழ் மீட்ட, அதனைப் பக்கமிருந்து கேட்ட மன்னா! போர்க்களத்தில் என்னை அரற்ற வைத்துப் போனாய். உன் அரசு தோல்வியடைந்தது" என்றாள்.

தானவர் - தேவர். **தையலர்** - பெண்கள். **கோது** - குற்றம். **அபஜெயம்** - தோல்வி.

926. சொக்ககன்னி தீப்பாய்தல்

சொக்க கன்னியில் வாறு
துக்க சாகரத்தில் ஆழ்ந்து
பக்கவாழ் பாங்கி யர்க்கே
பகருவாள் அனல் வளர்த்தே

துக்க மருந்து மென்ன
சுடரினை வளர்ப்பக் கண்டே
அக்கணம் வலம்பு ரிந்தே
அருந்தணல் புகுந்து மாய்ந்தாள்.

சொக்க கன்னி துக்கத்தில் ஆழ்ந்து பக்கத்திலுள்ள தோழிகளிடம் நெருப்பு வளர்க்கும்படி கூறினாள். தோழிகள் தீவளர்த்ததும் தீயைவலம் வந்து அதனுள் புகுந்து மடிந்தாள்.

சாகரம் - கடல். **துக்க சாகரம்** - துயரக் கடல். **பாங்கியர்** - பணிப்பெண்கள்.

927. அரக்கியர் வீடுதிரும்பல்

அப்பொழுது அவுண மாதர்
அரிவையர் வீட்டில் ஏகி
எப்படிப் பிழைக்கு மாறென்
றிருந்தனர் தனியே யன்று
ஒப்புள வீரன் தானும்
ஒளிமலர்ப் பதமி றைஞ்சி
செப்புவன் அவுணர் வாதை
தீர்ந்ததோ வெனவு ரைத்தான்.

அரக்க மகளிர் தங்கள் தங்கள் வீட்டுக்குச் சென்று, இனி எப்படிப் பிழைக்கப் போகிறோம் என்று தனியே கலங்கினர். வன்னிய வீரன் தேவர்களிடம் சென்று, "இனி அரக்கர்களால் ஏற்பட்ட துன்பம் நீங்கியதோ" எனக்கேட்டான்.

அரிவையர் - பெண்கள். **வாதை** - துன்பம்

928. தேவர்கள் வன்னிய வீரனிடம் கூறுதல்

களங்கமும் விண்டோம் மன்னா
கயவர்கள் சூறை கொண்ட

வளங்களை எமக்க ளித்தாய்
மனத்திலோர் சூழ்ச்சி யுண்டு
களங்கமில் லாமற் கேளும்
கடவுளர் கோனே என்ன
உளங்கரைந் துவகை யான
உவரியில் அழுந்திச் சொல்வார்.

"தீமைகள் நீங்கினோம் அரசே! தீயவர் கொள்ளை கொண்ட செல்வங்களை எமக்குக் கொடுத்தாய். மனத்தில் ஒரு செய்தி உள்ளது. கடவுளர் அரசனே!" என்று மகிழ்ச்சிக் கடலில் அழுந்திக் கூறினர்.

களங்கம் - தீமைகள். **விண்டோம்** - நீங்கினோம். **கயவர்** - தீயவர். அரக்கர். **சூறை** - கொள்ளை. **உவரி** - கடல்.

929. "சிவனிடம் செல்" எனல்

அவுணரால் அடைந்த தீமை
அகற்றினை அரசே எங்கள்
புவியெலாம் செழிப்ப வென்று
புகழ்ச்சியை அடைந்தோ மிப்பால்
அவனியர் அறியச் சூரன்
அஸ்தியை இரத மாக்கி
பவவிநா சங்கள் செய்யும்
பரமன்பால் ஏகும் என்றார்.

"அரசே! அரக்கர்களால் அடைந்த துன்பத்தை நீக்கினாய் எங்கள் பூமி செழித்தது. புகழ் பெற்றோம். இப்பூமியில் உள்ளவர் அறியுமாறு வாதாவி அசுரனின் எலும்பை ஓர் இரதமாக்கிப் பிறப்பை அறுக்கும் சிவபெருமானிடம் செல்" என்றனர்.

அவுணர் - அசுரர். **அவனியர்** - பூமியில் உள்ளவர். **அஸ்தி** - எலும்பு. **பவம்** - பிறவி. பாவம். **விநாசம்** - அழித்தல். **ஏகும்** - செல்லும்.

930. வன்னியன் மயனிடம் தேரமைக்கச் சொல்லுதல்

வீரனும் மயனைக் கூவி
விளம்புவன் அவுணர் ஆக்கை
பாரமாம் பழுவெ லும்பும்
பருங்கழல் கரஎ லும்பும்
கூருளி அதனால் வாட்டி
கொடுங்கையோ டிரத மொன்று
தீரமாய் அளிப்பை என்னத்
தேரினை அமைக்க லுற்றான்.

வன்னிய வீரன் மயனை அழைத்து, "அசுரனின் விலா எலும்பு, கால் எலும்பு, கை எலும்பு, எல்லாவற்றையும் உளியால் செதுக்கி ஒரு ரதம் அமைப்பாய்" என வேண்ட மயனும் தேர் அமைக்கத் தொடங்கினான்.

கூவி - அழைத்து. **பழு** - விலா. **கழல்** - கால். **கரம்** - கை.

931. மயன் தேரமைத்தல்

கரவெலும்பு அச்ச தென்ன
கதிக்கநாற் சதுரம் ஆக்கி
பருமனால் கால்நி றுத்தி
பருவளை மேல.மைத்து
திரமுறும் நடுக்கால் நான்கில்
சிகைகொடுங் கையும் வரிந்தே
இருபுற எலும்பி னாலே
இழைத்தனன் இரதம் அன்னர்ன்.

கை எலும்புகளை அச்சாக்கி நான்கு சதுரம் அமைத்து, நான்கு புறமும் கால் எலும்புகளைக் காலாக்கி, மேலே வளையம் அமைத்து

நடுவில் நான்கு கால்கள் மேல் தலைமயிரினால் கொடுங்கையும் அமைத்து விலா எலும்புகளால் இரதம் அமைத்தான் மயன்.

கர எலும்பு - கை எலும்பு. **அன்னான்** - மயன்

932. தேவர்கள் புகழ்தல்

அசுரனோடு துணைவன் சென்னி
ஐந்தையும் கலச மென்ன
உசிதமாய் அளிக்கக் கண்டு
உம்பரும் உவகை உன்னி
பசியபொற் கழலோன் ஆன
பார்த்திபன் மரபி னோர்க்கே
விசிதமாய் வகுத்தீ ரென்ன
விளம்பினர் அமரர் மாதோ.

வாதாவியின் தலையும், தம்பிகள் தலைகளும் ஆக ஐந்தையும் கலசங்கள் ஆக்கி, இரதத்தை உருவாக்கி மயன் அளித்ததைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து "பசுமையான, பொன்னாலான கழலணிந்த வீர வன்னியன் மரபில் வந்தவர்க்கு விசித்திரமான தேர் அமைத்தீர்" என்று புகழ்ந்தனர்.

933. வன்னிய வீரன் துர்க்கையை வணங்குதல்

புலாலவு ணர்கள் மாள
போரளித் திட்ட வீரன்
அவகைநா யகியை ஏத்தி
அந்தரி அருளால் இந்த
வலியுள அசுரன் ஆவி
வதைத்தனன் எனவ ழுத்தி
நலமுறும் மண்ட பத்தில்
இருந்துரை நவிலல் உற்றான்.

புலால் நாற்றம் நாறும் அசுரர்கள் இறக்குமாறு போர் புரிந்த வன்னிய வீரன் பேய்களுக்குத் தலைவியான துர்க்கையைப் போற்றி "உன் அருளால் இந்த வலிமையுள்ள வாதாவியை வதைத்தேன்" எனத் துதித்து, நலமான மண்டபத்தில் அமர்ந்து கூறத்தொடங்கினான்.

புலால் - மாமிசம். **அலகை** - பூதம், பேய். **அந்தரி** - துர்க்கை. **வழுத்தி** - போற்றி, துதித்து. **நவிலலுற்றான்** - கூறத்தொடங்கினான்.

934. "நகரைக் கொள்ளையடிப்போம்" எனல்

இகல்செயும் அவுணர் சென்னி
ஈந்தனம் இயக்கர் வாழ்வும்
நகரினைத் தூள தாக்கி
நங்கையின் கருவ றிந்தே
தொகையிலா மணியும் பொன்னும்
சூறைகொண் டரன்பால் செல்ல
புகழுறும் எனவு ரைத்தே
புளகமுற் றிருந்தார் அன்றே.

"போர்புரிந்த அரக்கர்கள் தலையையும், அசுரர் வாழ்வையும் அழித்தோம். நகரைத் தூளாக்கிப் பெண்களின் கருவையும் அழித்து, மணியும் பொன்னும் கொள்ளை கொண்டு பெருமானிடம் செல்வதே புகழ்" என்றான் வன்னிய வீரன். வீரர் மகிழ்ச்சி யோடிருந்தனர்.

இகல் - போர். **சென்னி** - தலை. **இயக்கர்** - அரக்கர். **சூறை** - கொள்ளை. **புளகம்** - மகிழ்ச்சி.

935. சனகர் மேலும் கூறுதல்

தத்துவப் பொருளு ணர்ந்தே
தற்பரன் அடியைப் போற்றும்
அத்திரி முனியே இன்னம்
அளவிலா வீரன் செய்ததைச்

சத்தியமாய்ச் சொல்வேன் கேளும்
என்றுநற் சனகன் கூறி
ரத்தினா பதிய ழிக்கும்
நடத்தையை நவில லுற்றார்.

"தத்துவப் பொருள்களை உணர்ந்து சிவனின் திருவடியைப் போற்றும் அத்திரி முனிவரே! இன்னும் வன்னிய வீரன் செய்த செயல்களைக் கூறுகிறேன் கேளும்" என்று கூறிய சனக முனி, இரத்தினாபுரியை வன்னிய வீரன் அழித்த விதம் கூறத் தொடங்கினார்.

30. நகரழித்த சருக்கம்

936. நகரை அழிக்க வன்னியன் துர்க்கையை வேண்டுதல்

ஆனந்த நடராசன் அருளான எழில்வீரன்
அதிவீ ரர்புடை சூழவே
தேனுந்தி மலர்மன்னும் திரிசூலி கொலுவிற்
செழித்தே இறைஞ்சி மொழிவன்
ஆனந்த கௌமாரி கிருபாகரிப் பார்வை
ஆகின்ற அமலி அவுணர்
கூனுந்து முரசுன்னு மதிலான நகரைக்
கொடுந்தூ ளெனச்செய் யென்றான்.

ஆனந்த தாண்டவம் ஆடும் நடராசன் அருளிய வீரன், வீரர்கள் பக்கங்களில் சூழ, தேன்நிறைந்த மலர்மாலையணிந்த துர்க்கை கொலுவிருந்த இடத்தில் சென்று வணங்கி "கௌரி, கிருபாகரி, அமலி, அரக்கர்களின், பிறையை முட்டும் மதில் சூழ்ந்த நகரைத் தூளாக்க அருள்செய்" என்று வேண்டினான்.

கூன் - பிறை, சந்திரன்.

937. துர்க்கை அருள் செய்தல்

அதிவீரர் துதிசெய்யும் அரசே உனக்கருள்
அளித்தேன் என்ஆளி யுடனே
சுதன்நால் வரதி றாணுவுடன் ஏகிபதி
தூளெழும்பத் துணித்தி டுமெனச்
சதியான அவுணாதி பதிமாசு மன்ன
தளத்தோடு நகரின் அணுகி
மதிபானு வலமன்னு மதில்சூழ் இரும்பதியில்
மாசூறை கொள்ளல் உற்றார்.

"வீரர்கள் போற்றும் அரசனே! உனக்கு நான் ஆசி அளித்தேன். என் பூதப்படைகளுடன், உன்பிள்ளைகள் நால்வருடன், உன் படைகளையும் அழைத்துச் சென்று அரக்கனின் இரத்தினாபுரி தூளாகும்படி அழியுங்கள்" என துர்க்கை ஆசி வழங்க, வன்னியர்கள், வாதாவி இகழ்ச்சியடையும்படி படைகளோடு இரத்தினாபுரி அடைந்து, சந்திரனும் சூரியனும் வலம் செய்யும் உயர்ந்த மதிலுடைய பெரிய நகரைக் கொள்ளை அடிக்கலுற்றனர்.

ஆளி - பூதப்படைகள். **சுதன்** - பிள்ளைகள். **தாணு** - படை **பதி** - ஊர். **துணித்திடும்** - அழித்திடும். **சதி** - சூழ்ச்சி. **மாசு** - இகழ்ச்சி. **அணுகி** - அடைந்து. **மதி** - சந்திரன். **பானு** - சூரியன். **இரும்பதி** - பெரியநகர். **சூறை** - கொள்ளை.

938. கொள்ளை தொடங்குதல்

திக்கினில் ஏகி செயம்பெறும் வானோர்
துக்கம் அகற்றி சூள்கள் அணிந்தே
மிக்க நிதிப்பணி வெண்தர ளங்கள்
உக்கிர வீரர் கவர்ந்திடல் உற்றார்.

எட்டுத் திக்கிலும் சென்று வெற்றி பெறும் தேவர்களுடைய துக்கத்தை நீக்கிய கோபமுடைய வீரர்கள் செல்வங்களையும், ஆபரணங்களையும், வெண்முத்துகளையும், கவரத் தொடங்கினர்.

செயம் - வெற்றி. **வானோர்** - தேவர். **துக்கம்** - துன்பம். **நிதி** - செல்வம். **பணி** - ஆபரணம். **வெண்தரணம்** - வெண்மையான முத்துக்கள். **உக்கிர** - கோபமான.

939. சுரங்கங்களில் கொள்ளை அடித்தல்

சுரங்க இடுக்குகள் தோறும் வளைந்தே
நெருங்கிக் குப்பை நிதிக்குவை அனைத்தும்
அருஞ்சிலை வீரர் அடைந்து கவர்ந்தே
பரிகரி மீதினில் பரும்பொதி யிட்டார்.

வில்லேந்திய வீரர், சுரங்கங்கள் பொந்துகள் எல்லாவற்றிலும் புகுந்து செல்வங்கள் அனைத்தையும். கவர்ந்து பெரிய பெரிய மூட்டை கட்டி யானை மேலும் குதிரை மேலும் போட்டனர்.

குப்பை - செல்வம். **பரி** - குதிரை. **கரி** - யானை. **பொதி** - மூட்டை.

940. பெண்களின் வீரம்

அடைந்திடும் நீளம் ஐஞ்ஞூறெனும் காதம்
திடபெரு மாளிகை சென்றிடும் வீரர்
அடங்க லுணர்ந்த இராக்கத மாதர்
படர்ந்து நெருங்கி பராக்கிரம முற்றார்.

ஐந்நூறு காதம் நீளமுள்ள மாளிகைக்கு வீரர் வந்ததை அறிந்ததும் இராட்சசப் பெண்கள் அருகில் நெருங்கி வந்து வீரத்தோடு நின்றனர்.

ஐஞ்ஞூறு - ஐந்நூறு - இடைப்போலி. **படர்ந்து** - சூழ்ந்து. **பராக்கிரமம்** - வீரம்.

941. அரக்கப் பெண்கள் விழுங்க வருதல்

பேய்முக மாதர் பெரும்படை மொய்த்து
காய்கதி ரென்னக் கன்னம் பெருத்த
வாயினிற் கொள்ள வளைந்திட வீரர்
ஆயுதம் ஏவ அதிர்ந்திலர் அன்றோ.

பேய்முகம் படைத்த அரக்கப் பெண்கள், படைகளைச் சூழ்ந்து கொண்டு. சூரியன்போல் சினந்து, பருத்த கன்ன முடைய வாயில் போட்டு விழுங்க வந்தனர். வீரர்கள் ஆயுதம் ஏவ அவர்கள் அஞ்சவில்லை.

காய்கதிர் - சினமுடைய சூரியன். **அதிர்ந்திலர்** - அஞ்சவில்லை.

942. அரக்கியர் வீரர் விட்ட அம்புகளைத் தேய்த்தல்

பருத்திடும் மெய்யிற் பதிந்த சரங்களைக்
கரத்தினில் பிடித்துக் ககனம் எறிந்தே
உரத்தொளி காட்டி உகாந்தனம் வீசி
செருத்த தென்னத் தேய்த்தொழித் தாரே.

பருத்த உடம்பில் தைத்த அம்புகளைக் கையால் பிடித்து வானில் எறிந்தனர். ஒளி பொருந்திய அக்கினி அம்புகளைப் பூமியின் கோடிவரை எறிந்து சிறிய அம்புபோல் தேய்த்து ஒழித்தார்கள்.

மெய் - உடல். **சரம்** - அம்பு. **கரம்** - கை. **ககனம்** - ஆகாயம். **உகாந்தனம்** - பூமியின் எல்லை.

943. அம்புகளைத் தடுத்தல்

சண்ட மாருதம் என்ன விடும்சரம்
மண்டி டாமல் கையால் தடுத்திட

கண்டு சூலம் அயிலுடன் சக்கரம்
மொண்டு பெய்ய முனிந்து தடுத்தனர்.

புயற்காற்று போல விடும் அம்புகளைத் தங்களைத் தொட முடியாமல் தடுத்தனர். இதனைக் கண்ட வன்னிய வீரர். சூலம், வேல், சக்கரம் என்ற பெரிய ஆயுதங்களை எறிய அவற்றையும் வலிந்து தடுத்தனர்.

சண்ட மாருதம் - புயல் காற்று. **அயில்** - வேல். **முனிந்து** - சினந்து.

944. அரக்கியர் செயலை வன்னியர் காணல்

தீர மான சிலையின் மிகுத்திடும்
வீரன் சேனை விடுஞ்சரம் மண்டிட
கோரம் செய்து கொதித்திடும் மாதரை
வீரன் பாலர் விழியினாற் கண்டனர்.

வலிமையான வில்லையுடைய வன்னிய வீரனின் படைகள் விடும் அம்புகளை வீணாக்கி அழிக்கும் பெண்களை வீர வன்னியன் மைந்தர் பார்த்தனர்.

சிலை - வில். **சேனை** - படை. **மண்டிட** - மிகுதியாக. **கோரம் செய்து** - வீணாக்கி

945. வன்னிய வீரர் வியத்தல்

கொதித்திடும் சினக் கூற்றுவ னாமென
அதித்தெ ழுந்த அவுணரின் ஆண்மையை
சிதைத்த செஞ்சரத் தீமைத் தெரிவைமார்
மதித்திடா தென்ன மாயமென் றெண்ணினார்.

கொதிக்கும் எமன்போல் வந்த அரக்கர்களின் ஆண்மையையே சிதைத்த இந்த அக்கினி அம்புகளை

இப்பெண்கள் மதிக்காமல் இருப்பது என்ன மாயமோ என்று எண்ணினர்.

கூற்றுவன் - எமன். **தெரிவை** - பெண்கள்.

946. வன்னிய வீரர் அரக்கியர் உறுப்பை வியத்தல்

கங்கு லென்னக் கடிந்திடும் மெய்யினர்
தங்கிடும் மயிர் தண்டக மாம்விழி
பொங்கி நின்றழல் பொறி மண்டிட
கொங்கை நீளமும் கூறவொண் ணாதென்றார்.

"இருட்டுப் போன்ற உடல்; காடு போல் அடர்ந்த மயிர்; கண்களில் தீப்பொறி. மார்புகள் நீளமோ சொல்ல முடியாது" என்றனர்.

கங்குல் - இருள். **தண்டகம்** - காடு. **கொங்கை** - மார்பு.

947. "இவர்கள் அரக்கரின் மிஞ்சியவர்" எனல்

அவுணர் ஆண்மைக் கதிக மெனுமிவள்
அவுண ருக்குள் அடங்கி இருப்பளோ
புவன மீன்ற புனிதனிம் மாதரை
அவனி மீதில் அளித்திடல் ஆகுமோ.

"அரக்கரின் ஆண்மையை விட இவர்கள் வலிமை அதிகம். இவர்கள் எப்படி அரக்கருக்கு அடங்கி நடப்பர்? பூமியைப் படைத்த பரமன் இப்பெண்களைப் படைக்கலாமோ" என்றனர்.

புவனம், அவனி - உலகம், **புனிதன்** - இறைவன். **அளித்திடல்** - படைத்தல்

948. துணிவை வியத்தல்

தாண்டி யேயகம் கர்ச்சிப்பாள்
அதத்தினைக் கரத்தாற் சுற்றி
மூண்டெழும் வீரர் மீதில்
மோதுவாள் மார்க்க மில்லா

வேண்டிய கெட்ட வார்த்தை
விளம்புவாள் விண்ணோர் தம்மை
மாண்டிட வைப்போ மென்ற
மாதரின் துணிவைக் கண்டார்.

அரக்கியர், ஆகாயத்தைத் தாண்டிக் கர்ச்சிப்பர். மார்பைக்; கையால் திருகி வீரர்கள்மேல் அடிப்பர். கெட்ட வார்த்தை கூறுவர். தேவர்களை அழிப்போ மென்பர். இத்தகைய துணிவை வியந்தனர் வன்னியர்.

அதம் - மார்பு. **விளம்புவாள்** - கூறுவாள். **விண்ணோர்** - தேவர்கள். **விண்** - வானம்.

949. அடக்க மில்லாதவர் எனல்

கொங்கைமேல் துகிலு டுத்தார்
கூறவும் அடக்கம் இல்லார்
சங்கரன் பால னென்றே
தன்னுளத் துணராப் பேயர்
எங்கிலும் திரிவர் இன்பம்
இயம்பினால் இடரிது என்றே
பொங்குவர் அவுண மாதர்
புதுமையைப் புகல வாமோ.

"மார்பில் துணி உடுத்தவர். அடக்க மில்லாதவர். சிவன் மகன் என்றே உணராதவர். எங்கும் திரிவர். இன்பம் என்று யாராவது கூறினால் இது துன்பம் என்பர். இவரது புதுமையைக் கூற முடியாது?" என்றனர்.

துகில் - ஆடை. **இடர்** - துன்பம். **புகலல்** - கூறல்.

950. அயர்வடைதல் (சோர்வுறல்)

ஆணின்மேல் அமர்அ ளிப்ப (து)
அரிவையர்க் கழகி தென்று

நாணமென் னளவு மின்றி
நவின்றிடும் மொழியைக் கண்டே
பாணியில் உறைந்த வாளி
பலத்தினால் அடங்கா ரென்றே
வேணியன் தனைநி னைந்தே
வீரரும் மயக்க முற்றார்.

ஆண்களோடு போர் செய்வது பெண்களுக்கு அழகு என்று நாணம் சிறிதும் இல்லாமல் கூறியதைக்கண்டு "இவர்கள் அம்பினால் அடங்கார்" என்று பரமசிவனை நினைத்து மயங்கினார்கள்.

பாணி - கை. **வாளி** - அம்பு **வேணியன்** - சிவன். **வேணி** - சடை.

951. அரக்கியர் வீடுகளுக்குத் தீ மூட்டுதல்

மாருத மென்ன வாளி
வருஷிக்க மனம்சோ ராமல்
பாரிய நடத்தை உண்ணும்
பாவையர் ஆவி நீங்க
வீரரை அகலு மென்றே
விளைவழல் எங்கும் மூட்டி
பாரும்விண் நிறையச் செய்த
பரிவினால் உள்ளம் சோர்ந்தார்.

வாயு வாஸ்திரம் போடவும் மனம் சோராமல் இருந்த பெண்களின் உயிர் போகும்படியாகத் தன் வீரர்களை அப்பால் செல்லும்படி கூறிவிட்டு அவர்கள் வீடுகளில் நெருப்பு மூட்டினார். அது வானுக்கும் பூமிக்குமாக எரிய அரக்கிகள் உள்ளம் சோர்ந்தார்கள்.

மாருதம் - காற்று, வாயு. **வாளி** - அம்பு. **வருஷிக்க** - போட. **பாரிய நடத்தை** - வீரச்செயல். **அழல்** - நெருப்பு. **பார்** - பூமி.

952. அரக்கியர் புலம்பல்

சுத்திய புகையி னாலும்
சுடரெரி வண்மை யாலும்
குத்திர அவுண மாதர்
குன்றிஓ என்று அரற்றி
இத்தினம் மடிந்தோம் என்பார்
இவன்கணை வலிதாம் என்பார்
ரத்தினா கரத்தின் வண்மை
நலிவடைந் திடும தென்பார்

சுற்றிலும் புகையும் நெருப்பும் ஏற்பட்டதால் அரக்கியர் மனம் சோர்ந்து 'ஓ' வெனக் கதறி "இன்று நாம் இறந்தோம்; இவன் அம்பு வலியது; இரத்தினாபுரி இனி நலிவடைந்தது" என்று புலம்பினர்

சுத்திய - சுற்றிலும் சூழ்ந்த. **குன்றி** - மனம் சோர்ந்து. **ஓ என்று அரற்றி** - 'ஓ' எனக் கதறி. **மடிந்தோம்** - இறந்தோம். **இத்தினம்** - இந்நாள், இன்று. **நலிவடைந்திடும்** - அழிந்திடும்.

953. அரக்கியர் புலம்பல்

வெஞ்சமன் இவனா மென்பர்
மெய்யெலாம் புழுங்கி மாய்வர்
பஞ்சினில் பொறியாம் என்ன
பருஞ்சிகை பொசுங்க நாற்றம்
மிஞ்சிட அவுண மாதர்
வெம்படை அனைத்தும் உள்ளம்
சஞ்சலம் உன்னி மாயத்
தந்திரம் அளித்து மாய்ந்தார்.

"இவன்தான் எமன்" என்றனர். உடல் புழுங்கி இறந்தனர். பஞ்சில் நெருப்புப் போல் தலைமயிர் தீப் பிடிக்க மயிர் பொசுங்கும் நாற்றம்

மிகுதியாக. வீரன் படை அனைத்தும் நினைத்து நினைத்து மாயும்படி தந்திரம் செய்து இறந்தனர்.

வெஞ்சமன் - கொடிய எமன். **பொரி** - தீப்பொறி. **பருஞ்சிகை** - பெரிய தலைமயிர். **மிஞ்சிட** - மிகுதியாக

954. வீரனின் வலிமை

வடவைக்கன லென்ன வளைந்தஅனல்
துடியற்றிடுந் தோகையர் ஆவிகள்மண்
பொடியுற்றிட பொங்கின பூபதிசெய்
கொடுமைக் கணையின் துணை கூறுவதே.

வடவா முகாக்கினி போல் சுற்றிய தீயினால் இடையற்ற அரக்கிகள் ஆவி போகச் செய்த வண்ணியர்களின் அம்புகளின் வலிமையைக் கூற இயலுமோ?

துடி - துடி போன்ற இடை. இடையற்ற என்பது இடைபெருத்த என்று பொருள்படும். **ஆவி** - உயிர். **கொடுமைக் கணை** - வலிய அம்பு. **துணை** - அளவு.

955. அரக்கர் கருவை அறுத்தல்

வருமவு ணாதிபர் மாதரினம்
கருவுண்டு கொலோமொழி கணையாய்
உரமுற்றிடு நாணி ஒலித்திடவெஞ்
சரமுற்றனர் தாரணி யெங்கணுமே.

அரக்கர்களின் பெண்களின் கருவுண்டோ என்று தேடி வலிமையான நாண் ஒலிக்க மந்திரித்துக் கொடிய அம்பு விட்டனர்.

உரம் - வலிமை. **நாணி** - வில்லில் கட்டப்படும் நரம்பு.

956. "நகரை அழிப்போம்" எனல்

அவுணாதி கருக்கள் அரிந்தனமின்
னவமா மணிசேர் நகரம்சிதற

கவர்வீர் எனவீரர் களிப்புறவே
குவுவுத்திரள் தோள்வலி கூறினரே.

அரக்கர்களின் கருவை அரிந்தோம். ஒளி வீசும் நமவணிகள் பதிக்கப்பட்ட நகரத்தை அழிப்போம் என வீரர்கள் தோள்வலிமை கூறினர்.

மின் - ஒளி

957. செல்வங்களைக் கொள்ளை அடித்தல்

வானோர் தருவும் பணியும் வளமும்
மானா அளகா பதிஅந் தமுடன்
கூனா முரசும் குழுவினங்க ளோடும்
தானோ ரிடம்தந் தனர்தா ணுவரே.

தேவலோகக் கற்பக மரமும் பணியும் வளங்களையும், குபேரபுரி போன்ற செல்வங்களையும், முரசங்களையும், வாத்யங்களையும் கவர்ந்து வந்தனர் வீரர்.

வானோர் தரு - கற்பக மரம். **அளகாபதி** - குபேரன் ஊர். **தாணுவர்** - படை வீரர்.

958. மதில்களை இடிப்போம் எனல்

இருப்பு லக்கை யையெடுத்
திடித்திடும் என்பார் எந்தன்
கரத்தினால் இடிப்போம் என்பார்
கழலினால் எற்றும் என்பார்
பருத்திடும் நகர்க்கு மீதில்
பதித்திடும் விருதி னங்கள்
நெரித்தனன் அதைக்க வர்ந்தே
நிருபனுக் களிப்ப தென்றே.

இரும்புலக்கையால் இடிப்போம் என்பார். கையினால் இடிப்போம் என்பார். காலால் உதைப்போம் என்பார். பெரிய நகர்க்கு மேலே கட்டப்பட்ட விருதுகளைக் கவர்ந்து வன்னியனுக்கு அளிப்போம் என்பார். இவ்வாறு நகரை அழிக்கச் சென்ற படை வீரர் பலவாறு கூறத் தொடங்கினர்.

விருதினங்கள் - பட்டப் பெயர் எழுதப்பட்ட பலகைகள். **நிருபன்** - வன்னியன்

959. கொடிகளைக் கவர்தல்

வானுயர் மதில்மேல் ஏறி
மண்டினர் பஞ்ச வர்ணத்
தானரவ முடனே யாளி
தணிவிலாச் சிங்கம் ஆனை
நானில இடபம் மன்ன
நரிமயில் கலுழன் சேவல்
தானனு மனும்செங் காவித்
தழைத்தவான் புலியும் பூதம்.

வானாளவிய மதில்மேல் ஏறிய வீரர் பஞ்ச வர்ணக்கொடி, பாம்புக்கொடி, ஆளிக்கொடி, சிம்மக்கொடி, ஆனைக்கொடி, இடபக்கொடி, நரிக்கொடி, மயில்கொடி, கருடக்கொடி, சேவல்கொடி, அனுமக்கொடி, செங்காவிக்கொடி, புலிக்கொடி, பூதக்கொடி.

அரவம் - பாம்பு. **இடபம்** - காளை. **கலுழன்** - கருடன்.

960.

முரசுசெங் கவிகை யான
சுருட்டியும் மொய்ப்பக் கண்டே
பருமையை அடைவோம் என்ன
பகைவர்க ளகம கிழ்ந்தே

விரிமதி லகன்றவ் வீரன்
விரல்சிறு பாலன் முன்பு
கரமதில் அளிக்கக் கண்டு
களித்தனர் துவசம் துன்ன.

முரசக்கொடி, குடைகள் எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு வீரர்கள் பெருமை அடைவோம் என்று மதில் கடந்து வன்னிய வீரன் கையில் கொடுக்க அவன் மனம் மகிழ்ந்தான்.

கவிகை - குடை. **பருமை** - பெருமை. **துவசம்** - கொடி.

961. ஊரை அழித்த மகிழ்ச்சி

பதினெட்டு விருதும் சூழஅப்
பதிதனைப் பிடித்து வந்தான்
சதிர்கொலுக் கூடம் சாலை
தைத்தியர் விடுதி ஏகி
நிதியினைக் கவர்ந்து காண்போர்
நீணிறக் கடலினில் தள்ளி
அதிபதி வீரன் தானும்
அகம்களி கூர்ந்தி ருந்தார்.

பதினெட்டு கொடிகளும் சூழ நகரை அழித்துக் கொலுமண்டபம், சாலைகள், விடுதிகள் ஆகியவற்றிலுள்ள செல்வங்களைக் கவர்ந்து, காண்பவர்களை நீலக்கடலில் தள்ளி வன்னிய வீரனும் படைகளும் மகிழ்ச்சியோடிருந்தனர்.

பதி - நகரம். **தைத்தியர்** - அரக்கர். **நீணிறம்** - நீலநிறம் **கூர்ந்திருந்தார்** - மிகுதியோடிருந்தார்.

962. அரக்கியர் நால்வர் மானிட உருவில் வருதல்

வானுயர் மதிலின் கோட்டை
வாயில்வான் பரிகள் துன்னும்

கோனுறை நகரம் சாடி
கொளுத்திடும் வீரன் முன்பு
ஈனமுற் றியக்கர் மாதர்
இனங்களில் நால்வர் மண்மேல்
மானிட உருவம் மன்னி
மாட்சியுற் றிருக்க லுற்றார்.

வானளாவிய கோட்டை வாயிலில் வானத்துக் குதிரைகள் செல்லக் கூடிய வாதாவியின் நகரை அழித்துத் தீயில் கொளுத்திய வன்னிய வீரன் முன்பு இழிந்த பிறப்பான அரக்கியர் நான்குபேர் மானிட உருவில் வந்தனர்.

வான்பரி - சூரியனின் குதிரைகள். **கோன்** - அரசன். வாதாவி. **சாடி** - அழித்து. **ஈனம்** - இழிவு.

963. நால்வரும் வன்னிய வீரனிடம் வருதல்

கலன்நிறை மடந்தை யொன்று
கார்குழல் மாதர் ஒன்று
பலமுள மாத ரோடு
பணைத்தநீள் முலையாள் ஒன்று
நலமுள மாதர் நால்வர்
நாடிட மாய்கை காணார்
தலைவன்ாம் வீரன் பாலர்
சார்ந்துமே சிறிது சொல்வார்.

நிறைய ஆபரணம் அணிந்த பெண் ஒருத்தி, கரிய கூந்தலையுடைய பெண் ஒருத்தி, பலமுள்ள பெண் ஒருத்தி, பருத்து நீண்ட மார்பகங்களை உடைய பெண் ஒருத்தி நால்வரும் வன்னிய வீரரிடம் வந்தனர். அவர்கள் இம்மாயை கண்டு கூறத் தொடங்கினர்.

கலன் - அணிகலன். **குழல்** - கூந்தல். **பணைத்த** - பருத்த.

964. வன்னிய வீரர்கள் "பெண்கள் யாரோ" வெனல்

மானிட மகளி ரான
வனிதையர் அவுணன் மண்ணில்
தேனுறச் செழிப்ப துண்டோ
தீயவர் மாய்கை யாமோ
தானவர் மாது மன்றித்
தைத்தியர் மகளு மின்றி
ஈனமா மலையி லங்கும்
ஏந்திழை எவரோ என்றார்.

"மானிடப் பெண்கள் அரக்கருடைய நாட்டில் வாழ்வதுண்டோ? அரக்கரின் மாயையோ? தேவப்பெண்களுமில்லாமல் அசுரப் பெண்களுமில்லாமல் இந்த மலையில் வந்த பெண்கள் யாரோ" என்றனர் வன்னிய வீரர்கள்.

அவுணன் - அரக்கன். **தானவர்** - தேவர். **தைத்தியர்** - அரக்கர்.

965. அரக்கியர் உருவை வருணித்தல்

வதுவையோ டுற்றாள் மேனி
மாநிற மார்க்க நல்லாள்
முதுகுழல் இருண்ட தாகும்
மொழியிலட் சணமே யுற்றாள்
அதிர்நடை விழிவிரட்ட
அந்தமும் செறியக் கண்டு
இதுகளென் சதியோ வேதன்
இப்படி இழைத்தா னன்றே.

"திருமணமான இவள் மாநிறம் உடையவள்: இவள் இருள் போன்ற கூந்தலுடையவள். இவள் இலக்கணமாகப் பேசுகிறாள் இவள்

அதிரும் நடையுடையவள்; அழகும் உடையவள்; இது என்ன சூழ்ச்சி? பிரமன் இப்படிப் படைத்தானே" என்று வன்னிய வீரர் நால்வரும் திகைத்தனர்.

வதுவை - திருமணம். **மேனி** - உடல். **குழல்** - கூந்தல் **அந்தம்** - அழகு. **சதி** - சூழ்ச்சி **வேதன்** - பிரமன்

966. அரக்கி அழகை ஒருவன் புகழ்தல்

கார்குழல் மேனி யள்தாள்
கரமலர் பார்க்கக் கண்கள்
சேரவே பெற்றி லேன்யான்
செய்திறம் என்ன வென்றே
ஈரமாம் வார்த்தை காட்டி
இருந்திடக் கண்ட மற்றோர்
தீரனே வேதன் செய்கை
தேர்ந்திலாய் கொல்லோ வென்றார்.

"கரிய கூந்தலையுடைய இவருடைய கால், கைகளைப் பார்க்கக் கண்கள் பெறவில்லை. நான் என்ன செய்வேன்?" என்று பரிவோடு ஒருவன் கூற மற்றவர், "வீரனே பிரமனின் செயலை அறியாய் போலும்" என்றனர்.

ஈரம் - அன்பு.

967.

பலமுள மாதின் பார்வை
பசியநீ லோற்ப லந்தான்
சலமிலாள் போலத் தோன்றி
நின்றனள் சரியாய் இங்கு
குலமணி எவளோ தேறேம்
கொடுமையோ வினையின் கூற்றோ

அலர்மணி இடையாள் சீரை
ஆற்றவும் போமோ வென்றார்.

"பலமுள்ள இவள் கண்கள் நீலோற்பல மலர்கள். வஞ்சனை இல்லாதவள் போல்தான் தோன்றுகின்றாள் குலமகள் போன்ற இவள் யாரெனத் தெரியவில்லை. கொடுமையோ தீவினையாகிய எமனோ? அழகிய இடுப்பையுடைய இவள் சிறப்பைக் கூறவும் இயலுமோ?" என்றனர்.

பசிய - பசுமையான. **சலம்** - வஞ்சனை. **தேறேம்** - தெரிந்துகொள்ளாதவர் ஆனேம். **சீர்** - சிறப்பு தன்மை. அழகு.

968. "இவள் அரக்கிதான் இங்கு எதற்கு வந்தாளோ" எனல்

இடுதொழில் இயற்ற வந்த
ஏந்திழை எழிலி ருந்தும்
தொடுபுலால் நாற்றம் ஓடும்
சொற்றிடில் அவுணர் என்ப
படுமிவர் மண்ணின் மீது
பயின்றவர் அலவோ இன்று
நாடின தென்னோ இங்கு
நவின்றனர் நான்கு வீரர்.

"இங்கு செயல்புரிய வந்த இப்பெண்கள் அழகிருந்தும் மாமிச நாற்றம் வீசுவதால் அரக்கியர் தான். இறந்த அரக்கர் நிலத்தில் வாழ்ந்தவர். இங்கு எதற்கு வந்தாரோ?" என்றனர் நான்கு வீரரும்.

ஏந்திழை - ஆபரணம் அணிந்தவள்; பெண். **புலால்** - மாமிசம். **சொற்றிடில்** - கூறினால். **நவின்றனர்** - கூறினர்.

969. நால்வரும் நான்கு பெண்களையும் அழைத்துப்போதல்

வன்னமாம் தேவி மாதர்
வழுத்து வேலைகள் செய்ய
தன்னகத் தினில்கொண் டேகத்
தகுமெனக் கிருட்ண னுந்தான்
நன்னயக் கலனார் பெண்ணும்
நறுங்குழல் கன்னி யோடும்
மன்னிய பலத்தோள் சம்பு
வளர்முலை அழலோன் கொண்டான்.

“இவர்கள் நமக்குப் பணிவிடை செய்யப் பயன்படுவர். நம் அரண்மனைக்குக் கொண்டு செல்வோம்” என்று நால்வரும் கருதினர். கிருஷ்ண வன்னியன் திருமணமான பெண்ணையும், பிரமவன்னியன் கரிய கூந்தல் உடையவளையும், சம்புவன்னியன் அதிர்ந்த நடையுடையவளையும், அக்னி வன்னியன் பருத்த முலையுடைய பெண்ணையும் அழைத்துச் சென்றனர்.

வன்னம் - அழகு. **வழுத்தும்** - ஏவும். **அகம்** - இல்லம். **கலன் ஆர் பெண்** - மாங்கல்யம் அணிந்த பெண். **அழலோன்** - அக்கினி வன்னியன்.

970. கடல் பொன்னாதல்

கூற்றுவன் ஒப்பார் மனனும்
கோயிலும் கோதை மாரும்
நாற்றிசை அறியத் தீயை
மூட்டிநற் பலன்க ளெல்லாம்
ஏற்றிய சூறை யாடி
இரத்தினா புரியைக் காற்றில்

தூற்றிட வேலை தன்னில்
தூயபொன் படிந்த தன்றே.

எல்லா வளங்களையும் கொள்ளை அடித்தபின் நான்கு திசைகளும் அறிய நகரம் தீமூட்டப்பட்டது. அத்தீயினால் அரண்மனையும், மாதர்களும் எரிந்து பொன் சாம்பலாக ஆயினர். இரத்தினாபுரியைக் காற்றில் தூற்றினார்கள். அச்சாம்பல் கடலில் படிந்ததால் கடல் அடியில் பொன் படிந்தது.

கூற்றுவன் - எமன் **மன்னும்** - நிலைபெற்ற. **கோயில்** - அரண்மனை. **சூறை** - கொள்ளை. **வேலை** - கடல். **தூய** - தூய்மையான.

971. நதிகளிலும் பொன்துகள் கலத்தல்

பொங்கிய அனலான் வெந்த
புலிப்பு ழுதியும் பொன்துகளும்
கங்கிருள் கடலில் தாவ
கதிந்தலை கொழிய லாகி
எங்கணும் கருமண் ணாகி
இலங்குபொன் தூசு மன்னி
அங்கண்மா நிலங்கள் சூழும்
அருநதி அடைந்த தம்மா.

நெருப்பால் வெந்த புழுதியும் பொன் தூளும் கரிய கடலில் பெருகி, அலைகள் அவற்றைக் கொழித்துக் கரையில் சேர்த்து, ஒதுக்குவதால் கடற்கரையில் எங்கும் கரிய மண்ணும் பொன் துகளும் கலந்தது அவை அகன்ற பூமியில் ஓடும் நதிகளிலும் எதிர்த்து வந்தன.

துகள் - தூள். **கங்கிருள்** - இரவின் இருள். **கொழியல்** - ஒதுக்கல்.

972. வீரர்கள் வெற்றியுடன் உருத்திர வன்னியனிடம் வருதல்

அரக்கரின் மதில டைந்தே
ஆர்ப்பரித்து துவச மான

பருத்தபன் னெட்டும் சூழ
பராக்கிர மான வீரர்
உரத்துடன் உருத்தி ரன்பால்
உவகையாய் ஏகக் கண்டே
விரித்தசெஞ் சடையாள் பக்கல்
விளம்பினன் வீரன் வேந்தன்.

அரக்கர்களின் மதிலையடைந்து தம் வசமாக்கிய செல்வங்கள் அனைத்தும், பதினெட்டு விருதுகளும் சூழ வீரர்கள், வலிமையுடன் உருத்திர வன்னியனிடம் வந்தனர். உருத்திர வன்னியன் துர்க்கையிடம் துதிக்கிறான்.

உரம் - வலிமை. **உவகை** - மகிழ்ச்சி

973. துர்க்கையைப் போற்றுதல்

அந்தரி ஆல காலி
அம்மணி அமலி நீலி
கந்தரி கமலி வேத
காரணி கதித்தெ ழுந்த
மந்தரி வராகி வீரி
வடுகி மாதங்கி மாரி
எந்தரி மயிடன் காய்ந்த
எழிலிஎன் றியம்பல் உற்றான்.

"அந்தரியே! ஆலகாலத்தை உண்டவளே! அமலியே! நீலியே! கந்தரியே! கமலியே! வேதங்களுக்குக் காரணமானவளே ! மந்திரங்களுக் கிருப்பிடமானவளே! வராகியே! வீரியே! வடுகியே! மாதங்கியே! -மாரியே! மகிடாசுரனை அழித்த எழிலுடையவளே" என்று உருத்திர வன்னியன் கூறத் தொடங்கினான்.

மயிடன் - மகிடாசுரன். **காய்ந்த** - அழித்த

974. சிவனிடம் செல்ல விடை வேண்டுதல்

நிருதரின் கருஅ ரிந்தே
நேமியின் இடுக்கண் தீர்த்தேன்
விருதொடு வெற்றி உன்னால்
விரும்பினன் விமலன் வாழும்
வரையினி சார்தல் வேண்டும்
வரமளி எனம கிழ்ந்தே
தரணியை அசைத்துக் காத்த
சாம்பவி இசைந் துரைப்பாள்.

"அரக்கர்களை வேரோடு அழித்துப் பூமியின் துன்பம் தீர்த்து விட்டேன். உன்னால் விருதும் வெற்றியும் அடைந்தேன். சிவன் வாழும் கயிலை மலையை அடைதல் வேண்டும். அதற்கு விடை கொடு" என வேண்ட, பூமியைக் காக்கும் துர்க்கை இசைந்து கூறத் தொடங்கினாள்.

நிருதர் - அரக்கர். **கரு அரிதல்** - வேரோடு அழித்தல். **நேமி** - பூமி. **இடுக்கண்** - துன்பம். **விமலன்** - சிவன். **வரை** - மலை. **தரணி** - பூமி.

975. துர்க்கை "கடல் கடப்போம்" எனல்

மடங்கலே றனைய வானோர்
மதமடக் கியவா தாவி
அடங்கலும் அழித்த உந்தன்
அத்திரம் சிலையும் வாழ்க
தடமெனும் தானை சூழ
தானவர் முரசொ லிக்க
தடங்கடல் கடப்போ மென்றே
சாற்றினாள் அமலி அந்நாள்.

"ஆண்சிங்கம் போன்ற தேவர்களின் பெருமையை அடங்க்கிய வாதாவியை வேருடன் அழித்த உந்தன் அம்பும் வில்லும் வாழ்க! படைகள் சூழ முரசொலிக்கக் கடலைக் கடப்போம்" என்றாள் துர்க்கை.

மடங்கல் - சிங்கம். **ஏறு** - ஆண் **வானோர்** - தேவர். **மதம்** - பெருமை. **அத்திரம்** - அம்பு. **சிலை** - வில். **தானை** - படை. **தடம்** - பெரிய.

976. தேவர்கள் கயிலை செல்ல விரும்புதல்

உம்பரும் ஏது ரைப்பார்
உருத்திர வன்னி யோனும்
அம்பரம் தன்னில் மன்னும்
அசுரரை அழித்த வாய்மை
நம்பவும் மாட்டார் காணும்
நாங்களே சொல்வே மென்று
செம்பொன்னார் கயிலை நோக்கித்
தேவரும் ஏகல் உற்றார்.

தேவர்கள் "உருத்திர வன்னியன் ஆகாயத்தில் நிலைபெற்ற அவ்வசுரர்களை அழித்ததைத் தூதர்கள் போய்ச் சொன்னால் நம்ப மாட்டார்கள். நாமே சொல்வோம்" என்று கயிலை நோக்கிச் செல்லத் தொடங்கினார்.

உம்பர் - தேவர். **அம்பரம்** - ஆகாயம். **ஏகலுற்றார்** - செல்லத் தொடங்கினர்.

977. தேவர்கள் கயிலாயம் சென்று வாதாவி அழிந்த செய்தி கூறுதல்

தேவரும் ஏகி ஆங்கே
சிவகயி லாயம் புக்கி

மூவரும் ஆகி நின்ற
முதல்வனார் அடியை ஏத்தி
யாவரும் எட்டொ ணாமல்
இருந்தவா தாவி தன்னைத்
தீவிர மாய ழித்தே
செயம்பெற்றார் வீரர் என்றார்.

தேவர்கள் சிவனுடைய கயிலாயம் சென்று பிரம்மா, சிவன் விஷ்ணு, மூவரும் ஒருவன் ஆன சிவபெருமானை வணங்கி, "யாராலும் அடக்க முடியாத வாதாவியை அழித்து வெற்றி பெற்றனர் வீரர்" என்று கூறினர்.

தீவிரமாய் - ஒரே குறிக்கோளோடு, விடாமல். **செயம்** - வெற்றி.

978. சனகர் அத்திரிக்குக் கூறுதல்

அண்டர்கள் வண்மை கூற
அலகையும் படையும் துன்ன
சண்டனை உதைத்தோன் பாலர்
சாம்பவி உடனே சென்று
தெண்டிரை கடந்தார் அப்பால்
சிறுவர்கள் வாழ்க்கைக் குற்ற
ஒண்தொடி மாதர்க் குற்ற
ஊழ்வினை உரைக்கல் உற்றேன்.

தேவர்கள் இவ்வெற்றியைச் சொல்லிக் கொண்டிருக்க, பேயும், பூதங்களும், படையும் சூழ, எமனை உதைத்த சிவனின் பிள்ளைகளாகிய வன்னிய வீரர், துர்க்கையுடன் கடல் கடந்தனர். வன்னிய வீரர்களை மணந்த ஒளி பொருந்திய வளையலை யணிந்த நான்கு பெண்களுக்கும் நேர்ந்த விதியைக் கூறுகிறேன்" என்று சனகர் அத்திரிக்குக் கூறினார்.

அண்டர் - தேவர். **அலகை** - பேய். **துன்ன** - நெருங்க. **சண்டன்** - எமன். **சாம்பவி** - துர்க்கை **தெண்திரை** - தெளிந்த அலை. **ஒண்தொடி** - ஒளி பொருந்திய வளையல்.

31. மீட்சிச் சருக்கம்

979. வன்னிய வீரர் கடல் கடக்க நாய் பெண்களிடம் செல்லுதல்

முக்கண்ணி அருளால் வேலை
முன்வற்ற பின்சு ரக்க
தக்கவா தாவி சூழும்
தரணியில் செல்லும் காலை
மக்களின் சுவான மொன்று
வாரிதி ஏகா நிற்ப
நக்கனார் பதியில் ஏக
நாயகி யார்கள் நால்வர்.

துர்க்கையின் அருளால் கடல் முன்னால் வற்ற பின்னால் சுரக்க வாதாவியின் இரத்தினாபுரி இருந்த இடத்துக்கு வன்னியர் சென்றபோது அவர்கள் வளர்த்த நாய் மட்டும் கடலைக் கடக்காமல் நின்றதல்லவா? அது மனைவியர் நால்வர் இருந்த இடத்தை அடைந்தது.

முக்கண்ணி - துர்க்கை. **வேலை** - கடல் **தரணி** - பூமி. **சுவானம்** - நாய். **வாரிதி** - கடல்.

980. நான்கு பெண்களும் தீயில் விழுதல்

கண்டனர் உளம்க லங்கி
காவலர் மடிந்தா ரென்று
வண்டணி குழலார் ஆன
மாதர்கள் எரியில் வீழ

தண்டமிழ் வாணி மைந்தன்
தந்திர நார தரும்
அண்டர்கோன் அளித்த மாதின்
அரும்பதி ஏகிச் சொல்வான்.

நாயைக் கண்டதும் மனம்கலங்கி வன்னிய வீரர்கள் இறந்தனர் என்று நினைத்து வண்டு மொய்க்கின்ற கூந்தலையுடைய மனைவியர் நால்வரும் தீயில் விழுந்து இறந்தனர். சரஸ்வதியின் புதல்வனாகிய தந்திரத்தில் வல்ல நாரதர் தேவேந்திரனின் மகளின் ஊருக்குச் சென்று சொல்வார்.

காவலர் - வன்னிய வீரர். **மடிந்தார்** - இறந்தனர். **வாணி** - சரஸ்வதி **அண்டர்** - தேவர். **கோன்** - தலைவன். இந்திரன். **மாது** - பெண். இங்கு மந்திர மாலை.

981. நாரதர் மந்திர மாலையிடம் பொய் கூறுதல்

மணங்கமழ் குழலாள் உந்தன்
மகவினர் இறந்தார் என்றே
இணங்கிய மாதர் கூடி
எரியினில் விழுந்தார் இன்று
நிணங்கமழ் இலைக்க ரத்தன்
நிருபதி வீரன் தன்னை
பிணங்கிவா தாவி கொன்றான்
பிழையிலை எனவு ரைத்தான்.

"மணம் வீசும் கூந்தலை உடையவளே! உன் பிள்ளைகள் இறந்தனர் என்று அவர்களுடன் வந்த மனைவியர் தீயில் விழுந்தனர். புலால் நாற்றம் வீசும் வேலைக் கையில் ஏந்திய உருத்திர வன்னியனை வாதாவி கொன்றான். இது பொய்யில்லை" என்று நாரதர் மந்திர மாலையிடம் கூறினார்.

மகவினர் - பிள்ளைகள். **நிணம்** - மாமிசம், கொழுப்பு, புலால் **இலை** - வேல். **பிழை** - பொய்.

982. மந்திரமாலை "என் கணவர் இறக்க வில்லை" எனல்

அடங்கலும் மடிந்தார் என்ன
அமரர்கோன் மகளிர் தானும்
விடந்தனை யுண்டோன் ஈன்ற
வேதனும் ஈந்த மாலை
அடங்கலும் வாட வில்லை
அச்சங்கு முழங்க வில்லை
மடங்கலா சனத்தின் மன்னன்
மடிந்திலன் எனவு ரைத்தாள்.

"படைகள் முழுதும் அழிந்தன" என்று நாரதர் கூறியதைக் கேட்ட மந்திர மாலை, "விடத்தை உண்ட சிவபெருமான் ஈன்ற வன்னியன் கொடுத்த மாலை வாடவில்லை; சங்கு முழங்கவில்லை. எனவே அரியாசன மன்னனாகிய என் கணவன் இறக்கவில்லை" என்றாள்.

வேதன் - வன்னிய வீரன். **மடங்கல்** - சிங்கம், சிம்மம். **மடிந்திலன்** - இறக்கவில்லை.

983. உருத்திர வன்னியன் திரும்புதல்

சாந்தமார் முனிவர் ஈன்ற
தக்கபெண் நான்கு பேரும்
ஆய்ந்துணா ராமல் தானே
அக்கினி வீழ்ந்தி றந்தார்
வேந்தனும் வீரன் தானும்
மிகுந்திடும் குழாங்கள் சூழ

வாய்ந்தவா தாவி யாண்ட
மாநகர் அழித்து மீண்டார்.

சாந்த முடைய சுசீல முனிவர் பெற்ற நான்கு பெண்களும் ஆராயாமல் நெருப்பில் வீழ்ந்து இறந்தார்கள். உருத்திர வன்னியனும் வீரர்களும் வாதாவியின் நகரை அழித்துத் திரும்பினர்.

குழாங்கள் - வீரர் கூட்டம்

984. கடல் கடந்து கரையில் வந்ததும் வன்னியன் துர்க்கை அருளை நினைத்தல்

சுந்தரி துர்க்கை அம்மன்
தோன்றல்முன் சென்று வேலை
பந்தமாம் முன்னே வந்த
பார்த்திபர் எனந டப்ப
பிந்தியே கடல் சுரப்பப்
பெருமையாய்க் கரையில் சேர்ந்து
அந்தரி மாயை யெல்லாம்
அகத்தினில் உணர்ந்து ரைப்பான்.

துர்க்கையும், வீரனும் முன்னே செல்ல, கடல்வற்ற, அனைவரும் அரசர் போல் நடக்க, பின்னே கடல் சுரக்கப் பெருமையோடு கரை சேர்ந்த உருத்திர வன்னியன் துர்க்கையின் பெருமையை மனத்தில் உணர்ந்து கூறுவான்.

தோன்றல் - வன்னிய வீரன். **வேலை** - கடல். **பந்தம்** - வற்றுதல். **சுரப்ப** - நீர் நிறைய. **அகம்** - மனம்.

985. துர்க்கைக்கு நன்றி கூறல்

வெஞ்சுரம் வீற்றி ருந்த
விமலி எந்தனையு மின்றே

வஞ்சனை அவுணர் கையால்
மடிந்திடா மற்காக் கின்ற
அஞ்செழுத் தமலி ஆளி
அதிலெழுந் தன்பு கூரும்
செஞ்சுடர்த் தாயே என்று
சிலைகரன் செப்பு கின்றான்.

"பாலை நிலத்தில் வீற்றிருக்கும் விமலியே! என்னைச் சூழ்ச்சி மிக்க அரக்கர் கையால் மடியாமல் காக்கும் ஐந்தெழுத்து நாயகியே! சிங்கத்தில் எழுந்தருளும் அன்பு மிக்க தாயே!" என்று வில்லேந்திய உருத்திர வீரன் கூறுகின்றான்.

வெம்மை + சுரம் - **வெஞ்சுரம்** - கொடிய பாலை நிலம். **ஆளி** - சிங்கம். **சிலைகரன்** - வில்லேந்திய கையன்.

986. நன்றி கூறி வரம் வேண்டல்

அக்கரை ஏறி ஆய
அரிவைபோல் உருவ மன்னி
தக்கவா தாவி முன்றில்
தயிரான சாற்றி உள்ளம்
திக்கென அமரை மூட்டி
மடிந்திடச் செய்து வைத்தாய்
மக்களின் மீதி ரங்கி
வரந்தந்து காப்பீ ரென்றான்.

"கடல் தாண்டி இரத்தினாபுரம் சென்று ஆயப் பெண்போல் உருமாறி வாதாவி வாயிலில் தயிர்விற்றுப் போர் மூளச் செய்து வைத்தாய் உன் மக்கள்மேல் இரங்கி வரம்தா" என்று கூறினான்.

ஆய அரிவை - இடைப்பெண் **முன்றில்** - வாசல்

987. துர்க்கை வரம் தருதல்

அரவணி பரமன் தந்த
அரசனே உனது தேவி
மருமலர்க் குழலா ளான
மந்திர மாலை யின்பப்
பெருமையாய் அணைந்தே இன்பம்
பேருல கினில்எந் நாளும்
அரசனாய் வாழும் என்றே
அந்தரி வாழ்த்து கின்றாள்.

"பாம்பை அணிந்த பரமன் ஈன்ற அரசனே! உனது தேவியான வாசம் மிகுந்த கூந்தலையுடைய மந்திர மாலையை இன்பமாய் அணைந்து இவ்வுலகில் என்றும் அரசனாய் இரு" என்று வாழ்த்தினாள் துர்க்கை.

அரவு + அணி - **அரவணி** - பாம்பை அணிந்த. **மரு** - மணம்.

988. துர்க்கை தன் ஊரில் தங்க, உருத்திர வன்னியன் தன் ஊர் செல்லல்

துர்க்கைதான் வாழ்த்தி ஏகி
தொல்பதி இருப்ப வீரன்
மிக்கதோர் சேனை எல்லாம்
வேலையின் கரைய கன்றே
மக்களும் அவுண மாதும்
வந்திட விருது சின்னம்
ஒக்கவே துவசம் சூழ
உருத்திரன் பதிந டந்தான்.

துர்க்கை வாழ்த்தி விட்டுத் தன்நகரம் செல்ல, உருத்திர வன்னியன் தன் சேனைகள் எல்லாம் சூழக் கடற்கரை கடந்து.

மக்களும் அரக்க மாதரும் பின்வர, விருது, சின்னம், கொடிகளுடன் உருத்திரபதிக்கு நடந்தான்.

தொல்பதி - பழமையான ஊர். **வேலை** - கடல். **துவசம்** - கொடி.

989. வீரவன்னியன் வருகைக்கு விருது கூறும் சங்குகள்

அவுணரின் காவலன் வந்தான்
அரனுமை மைந்தன் வந்தான்
குவவுதோள் புயத்திற் றுன்னும்
குமுதத் தாரினன் வந்தான்
சபையுளோர் இறைஞ்சும் பொன்னின்
தாளினன் மதியன் வந்தான்
கவிகை சாமரை இரட்டக்
கருணைசேர் வீரன் வந்தான்.

"அரக்கர்களிடமிருந்து காப்பாற்றியவன் வந்தான். சிவன், உமை பாலகன் வந்தான். வலிமையான தோளில் செங்கழுநீர் மாலையணிந்தவன் வந்தான். சபையில் உள்ளவர் அனைவரும் பணியும் பாதங்களை உடையவன் வந்தான். குடை நிழல்தர, கவரி வீசக் கருணையுடைய வீரன் வந்தான்."

குமுதத் தாரினன் - செங்கழுநீர்மாலை அனிந்தவன் **கவிகை** - குடை. **இரட்ட** - வீச.

990.

வாசச்செங் கழுநீர் மாலை
வாடாத மார்பன் வந்தான்
நேசச்செஞ் சிகையும் பூணல்
நூலுமே உடையோன் வந்தான்

பூசுச்சந் தனத்தோன் வந்தான்
புவிதனக் கிறைவன் வந்தான்
தேசுள முடியோன் ஆன
சிலைமன்னன் வந்தான் வந்தான்.

"மணம் பொருந்திய செங்கழுநீர் மாலை வாடாத மார்பை உடையவன் வந்தான். சிவந்த குடுமியும். பூணுலும் உடையவன் வந்தான். சந்தனம் பூசியவன் வந்தான். பூமிக்குத் தலைவன் வந்தான். ஒளி வீசும் முடியை உடைய வன்னியச் சிலை ஏந்திய வீரன் வந்தான்."

சிகை - தலைமயிர். **பூணல்நூல்** - முப்புரி நூல். பூணூல். **தேசு** - ஒளி.

991. சங்குகள் ஒலித்தல்

முரசொலித் துவசம் நீட்டி
முப்பதோ டாறும் துன்ன
பரிதிபோல் பகல்தீ வட்டி
பருந்தூபக் காலு மென்ன
வரமிகும் அவுணர் தேரும்
வானவர் முரசும் பெற்ற
அரசனும் வந்தா னென்றே
அநேகசங் கினங்கள் ஆர்ப்ப.

"முரசுகள் ஒலிக்க, 36 கொடிகள் பறக்க, சூரியன்போல் தீ வட்டி ஒளி வீச, பெரிய தூபக்கால் போன்ற அரக்கர் தேருடன். தேவர்கள் முரசும் பெற்ற வீரன் வந்தான்" என்று சங்குகள் முழங்கின.

பரிதி - சூரியன்.

992. முரசு துந்துபி முழங்கல்

பன்னகர் வேந்தன் வந்தான்
பணிந்தவர் இடுக்கண் தீர்த்துக்

கண்ணுறு மவனா மென்னக்
கடவுளர் இறைஞ்சி நிற்ப
விண்ணகர் இராசன் ஈன்ற
மெல்லியல் மகிழ்நன் வந்தான்
எண்ணற வென்று பேரி
இசைபூரி ஆர்த்த தன்றே.

"பலநாடுகளுக்கும் அரசன் வந்தான். பணிந்தவர்களின் துன்பம் தீர்த்துக் காப்பவன் என்று எல்லாக் கடவுளரும் வணங்க, தேவேந்திரன் பெற்ற மந்திரமாலை கணவன் வந்தான்" என்று பெரிய பெரிய முரசங்களும் தேவதுந்துபியும் முழங்கின.

பல + நகர் - பன்னகர். **இடுக்கண்** - துன்பம். **பேரி** - முரசம். **பூரி** - தேவ துந்துபி.

993. கங்கை கொண்ட சோழன் எதிர் வருதல்

நடந்தவன் வரவு நோக்கி
நானிலத் தரசு மன்னும்
கடுங்கதிர் குலத்தோன் கங்கை
கண்டசோ ழனுக்கு ரைப்ப
வடந்திகழ் முலையாள் ஆன
மாதொடும் தானை சூழ
தடந்திகழ் புயமும் விம்ம
தானெதிர் வந்து கண்டான்.

உருத்திர வன்னியன் வரவைக் கண்ட சேவகர், சூரிய குலத்தைச் சேர்ந்த கங்கை கொண்ட சோழனுக்குச் சொல்ல, சோழன் மாலையணிந்த மார்பை உடைய மனைவியரோடு படைகள் சூழ பெரிய தோள்கள் விம்ம எதிரே வந்தான்.

கடுங்கதிர் - சூரியன். **வடம்** - மாலை. **தானை** - படை

994. சோழன் விருந்தளித்தல்

எதிர்வந்த சோழன் தன்னை
இறுகவே அணைத்து வீரன்
அதிசயம் புகழ்ச்சி பேசி
அரசனும் நகரம் சார்கால்
விதமுள சேனை துன்ன
விருந்தினை அளிக்க வேண்டும்
புதுமையாம் பணிகள் நல்க
புளகமுற் றிருந்தான் வீரன்.

எதிரே வந்த சோழனை வன்னியன் இறுக அணைத்து அவனைப் புகழ்ந்தான். இருவரும் சோழநாடு வந்தனர். சோழன் வன்னிய வீரனுக்கும் அவன் படைகளுக்கும் விருந்தளித்து புதிய ஆபரணங்களை அளித்தான். வன்னிய வீரனும் மகிழ்ச்சியோடு அங்கு தங்கினான்.

பணிகள் - ஆபரணங்கள். **நல்க** - கொடுக்க **புளகம்** - மகிழ்ச்சி

995. வன்னிய வீரன் சோழனைக் கயிலைக்கு அழைத்துச் செல்லுதல்

வீரனும் சோழன் தன்னை
விருப்பமாய் அழைத்தே உந்தன்
ஆருயிர் பால ரோடேன்
அவனியில் வருவீர் என்ன
கூறியே அழைத்து சேனைக்
குழாங்களும் கொடியும் ஆர்ப்ப
நீறணி கடவுள் ஆன
நிருதன்வாழ் பதியில் சேர்ந்தான்.

பின்னர், வன்னிய வீரன், சோழனை "உன் பிள்ளைகளுடன் என் நகருக்கு வாருங்கள்" என்று கூறி அழைத்துக் கொண்டு

படைகளுடன் கொடி அசைய, திருநீறு அணியும் கடவுள் ஆன சிவனின் கயிலை மலைக்குச் சென்றான்.

பாலர் - பிள்ளைகள். **அவனி** - பூமி, இங்கு நாடு. **குழாம்** - கூட்டம். **நீறு** - திருநீறு. **நீறணிகடவுள், நிருதன்** - சிவன்.

996. வன்னிய வீரன் வருகை கண்டு மகிழ்தல்

அங்கவன் வரவு கண்டே
அரனுமை அயனும் மாலும்
இங்கிதக் கடவு ளாரும்
இதயமும் மகிழ்ந்தி ருப்ப
செங்கரச் சிலையுள வீரன்
சிவன்தனை விழியாற் கண்டே
சங்கரா போற்றி என்றே
தாளினைப் பணிந்து ரைப்பான்.

வன்னிய வீரர்கள் வருவதைக் கண்ட சிவன், உமை, பிரமன், திருமால் மற்ற கடவுளர் மனம் மகிழ்ந்தனர். கையில் வில்லுடைய வீரன் சிவனைக் கண்ணாரப் பார்த்துச் "சங்கரா போற்றி" எனப் பாதங்களைப் பணிந்து கூறத் தொடங்கினான்.

997. வன்னிய வீரன் சிவனைப் போற்றுதல்

சம்புவின் மகத்தில் எம்மைத்
தயவுடன் அளித்தாய் போற்றி
உம்பர்கோன் மகளைத் தந்த
உரகவா பரணா போற்றி
செம்பொன் அம்பலத்துள் ஆடும்
திருநட ராஜா போற்றி
நம்பினார்க் கருள்சு ரக்கும்
நாதனே போற்றி போற்றி.

"சம்பு மகரிஷியின் யாகத்தில் என்னைத் தயவோடு அளித்தவனே! தேவேந்திரன் மகளை எனக்குத் தந்தவனே! பாம்பை ஆபரணமாக உடையவனே! அம்பலத்தில் ஆடும் நடராஜனே! நம்பியவர்க் கருள் செய்பவனே! உன்னைப் போற்றுகின்றேன்."

மகம் - யாகம். **உம்பர்கோன்** - தேவநேந்திரன். **உரகம்** - பாம்பு.

998.

ஆதியும் அந்தம் ஆகி
அளவிலா அண்டம் ஆகி
சோதியின் சோதி ஆகி
சொல்மனக் கெட்டாய் போற்றி
வேதன்மால் அயனும் காணா
வித்தகா போற்றி யென்றும்
நீதியாய் உருவம் மன்னும்
நிருத்தனே போற்றி என்றான்.

"முதலும் முடிவும் ஆனவனே! அளவற்ற அண்டம் ஆனவனே! ஒளியானவனே! சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதவனே! பிரமன், திருமால் இருவராலும் காண முடியாதவனே! நீதியின் உருவ மானவனே! உன்னைப் போற்றுகின்றேன்."

ஆதி - முதல். **அந்தம்** - முடிவு. **அண்டம்** - பூமி, சூரியன் எல்லாக் கோள்களும் சுற்றும் பெருவெளி. **சோதி** - ஒளி. **வேதன், அயன்** - பிரமன். **நிருத்தன்** - நடனமாடுபவன்.

999. சிவன் வன்னிய வீரனை வாழ்த்துதல்

அப்பொழு தரனு ரைப்பான்
அரசனும் சுதனும் வாழ்க
மைப்படி குழலாள் தன்னை
மணம்புரிந் தவனே வாழ்க

ஒப்பிலா உனது சுற்றம்
உலகினில் தழைத்து வாழ்க
இப்புவிக் கதிப னாக
வேதனே வாழ்க வாழ்க.

அப்போது சிவன் வன்னிய வீரனைப் பார்த்து "அரசனே! நீயும் உன் மக்களும் வாழ்க! கரிய கூந்தல் உடைய மந்திர மாலையை மணம் புரிந்தவனே! வாழ்க! ஒப்பற்ற உனது சுற்றத்தினர் உலகத்தில் தழைத்து வாழ்க! இப்பூமிக்குத் தலைவனாக வாழ்க!" என்று வாழ்த்தினான்.

அரன் - சிவன். **சுதன்** - பிள்ளை. **மைப்படி** - கருமை படிந்த. **அதிபன்** - தலைவன்.

1000. வன்னிய வீரன் வெற்றியைக் கூறுதல்

என்றனன் இயம்பி நீற்றை
ஈந்திடப் பணிந்து வீரன்
தென்திரைக் கடலைத் தாண்டி
தீயன்வா தாவி யாக்கை
வென்றவா றனைத்து மோத
விமலனும் மனம கிழ்ந்தே
பொன்தொடி மாதைக் காண
போமெனச் சார்ந்தா னன்றே.

வாழ்த்திய சிவன் திருநீற்றை அளிக்க, வன்னிய வீரன் பணிந்து வாங்கி அணிந்து தென்கடல் கடந்துசென்று தீயவனாகிய வாதாவியை வென்ற செய்தியை விளக்கமாகக் கூறினான். சிவனும் மகிழ்ந்து மனைவியைப் பார்க்கப் போகும்படி கூற மனைவியிடம் சென்றான்.

ஈந்திட - கொடுக்க. **யாக்கை** - உடல். **தொடி** - வளையல்.

1001. மந்திரமாலை மகிழ்தல்

வந்திடும் வீர வேந்தை
மந்திர மாலை கண்டே
சுந்தர மலர்க்கை கூப்பி
தோன்றலின் தாள்ப ணிந்தே
எந்தனை அணைந்த மன்னா
இனிதுயிர் அளித்தாய் இன்றே
உந்தன்நற் பாதம் போற்றி
உவகையு மடைந்தேன் என்றாள்.

வன்னிய வீரனைக் கண்ட மந்திர மாலை அழகிய கைகளைக் கூப்பி, அவனுடைய பாதங்களை வணங்கி, "என்னை மணந்த அரசனே! எனக்கு உயிர் அளித்தாய். உன்னைப் பணிந்து மகிழ்ந்தேன்" என்றாள்.

சுந்தர - அழகிய. **உவகை** - மகிழ்ச்சி. **தோன்றல்** - பெருமைக்குரியவர், இங்கு உருத்திர வன்னியன்.

1002. உருத்திர வன்னியன் சிவனைப் போல் வீற்றிருத்தல்

தோகையை வாழ்த்தி பூமன்
தொன்னகர் இருப்பச் சோழன்
பாகமீ திருப்ப ஈன்ற
பாலரும் களித்திருப்ப
வாகைசூ டியவா னோரும்
மாபடைக் குழாமும் சூழ
ஏகநா யகனைப் போல
இருந்தனன் எழிலார் வீரன்.

மனைவியை வாழ்த்தித் தன் பழைய பெருமை வாய்ந்த ஊரில், சோழனும், பிள்ளைகளும் பக்கத்தில் மகிழ்ந்திருக்க, வெற்றிமாலை

சூடிய தேவரும் படைகளும் சூழச் சிவபெருமான்போல் இருந்தான் வன்னிய வீரன்.

தோகை - மயில், மயில் போன்ற பெண், இங்கு மந்திர மாலை. **பூமன்** - பூமிக்கு அரசன்., இங்கு உருத்திர வன்னியன் (வன்னிய வீரன்) **தொன்மை + நகர்** - தொன்னகர். **பாகம்** - பக்கம். **பாலர்** - பிள்ளைகள். **வாகை** - வெற்றி. **வானோர்** - தேவர். **குழாம்** - கூட்டம். **ஏகநாயகன்** - சிவன்.

1003. சோழன் தன் ஊர் செல்ல விடை வேண்டுதல்

இருந்திட அவர் வர்க்கு
இனிதுள அமுத ளித்து
பொருந்தியே இருப்பச் சோழன்
பூபதி சிலநாள் சென்றே
திருந்தஎன் னகரில் சேர
சிந்தைவைத் தனுப்பு மென்ன
புரிந்தருள் ஈய்ந்து வேண்டும்
புக்ழ்ச்சியை அளித்தான் வீரன்.

எல்லோர்க்கும் உணவளித்துச் சிலநாள் இருக்க, சோழன் "என் ஊருக்குப் போக வேண்டும் விடை கொடுங்கள்" என்று வேண்ட, உருத்திர வன்னியன் அவனுக்குச் சன்மானங்கள் அளித்து விடையும் கொடுத்தான்.

புகழ்ச்சி - பரிசுகள் **ஈய்ந்து** - ஈந்து, கொடுத்து.

1004. சோழன் புறப்பட்டுக் காஞ்சி செல்லுதல்

ஆடையும் மாடைக் காசும்
அரசனுக் கீயப் பெற்று

நீடிய இரதம் ஏறி
நிருபதி மிகவும் சூழ
நாடினன் கங்கை வேந்தன்
நவமணிக் குப்பை மன்னும்
மேடியாம் காஞ்சி யீசன்
மலரடி மேவி னானால்.

ஆடைகளும், பொற்காசுகளும் சோழனுக்குக் கொடுக்க, கங்கை கொண்டசோழன் தேர் ஏறி அரசர்கள் சூழ நவமணிகள் நிறைந்த காஞ்சிபுரம் சென்று சிவனின் மலர் போன்ற பாதங்களை வணங்கினான்.

மாடை - பொன். **குப்பை** - செல்வம். **மேவினான்** - பொருந்தினான்.

1005. சோழன் காஞ்சிபுரத்திலும் சிதம்பரத்திலும் திருப்பணி செய்து விழா எடுத்தல்

மணமுடன் இருந்தும் ஆங்கே
வண்மையே காம்ப ரற்கு
குணமுள செம்பொன் தன்னால்
கோபுர மதில மைத்தே
அணையும் வாவிகளும் தேரும்
அரன்விழா நடத்தி இப்பால்
இணையிலாத் தில்லைக் கேகி
இறைவிழா நடத்து கின்றான்.

சோழன் காஞ்சிபுரத்தில் தங்கி ஏகாம்பரேசுவரர்க்கு பொன்னால் கோபுரமும் மதிலும் அமைத்து, குளம் தோண்டி, தேரமைத்து, விழா எடுத்து, அங்கிருந்து சிதம்பரம் சென்று அங்கு விழா நடத்துகின்றான்.

வாவி - குளம். **அரன்** - சிவன்.

1006. சிதம்பரத்தில் சோழன் மகன் இறக்கச் சோழன் எழுப்பித் தருமாறு வேண்டுதல்.

நடத்திய காலை தன்னில்
நானில வேந்தன் பாலர்
தடத்தினில் மடியக் கண்டு
தணிந்திடாத் துயரத் தோடே
படப்பொறி நாகம் சூழும்
பரமன்தன் பாலன் பக்கம்
திடத்துடன் ஏகிப் போற்றிச்
சிறுவனை எழுப்பு மென்றான்.

திருவிழா நடத்தும் போது சோழன் புதல்வர் இறக்க துன்பத்தோடு, படமும் புள்ளிகளும் உடைய நாகத்தை அணிந்த சிவனின் மகனிடம் சென்று எழுப்பித் தருமாறு வேண்டினான்.

பொறி - புள்ளி.

1007. உருத்திர வன்னியன் எமனிடம் சோழன் புதல்வர் உயிரைத் தருமாறு ஆணையிடல்

எழுப்புவீர் என்ற போதில்
எமன்பால் முடங்கல் விட்டு
பொழிலமர் சோழன் பாலர்
பொருந்திட எழுப்பாய் ஆகில்
அழிப்பனாம் எமபு ரத்தை
அறிந்துகொள் எனவே யாரும்
பழிக்கிட மாகா முன்னம்
பகர்ந்தனம் செய்வாய் இன்றே.

"சோழன் என் புதல்வர்களை எழுப்பித் தா" என்ற போதே எமனுக்குக் கடிதம் எழுதினான், உருத்திர வன்னியன். "சோலையில்

உள்ள சோழனின் புதல்வர்களை எழுப்பா விட்டால் எமபுரத்தை அழிப்பேன் பழிவருமுன்னே நான் கூறியதைச் செய்வாய் இப்பொழுதே" என்று எழுதினான்.

முடங்கல் - கடிதம். **பொழில்** - சோலை. **பகர்ந்தனம்** - கூறியதை.

1008. எமன் கோபித்து வன்னியவீரன் உயிரைக் கவரப் புறப்படுதல்

என்றவர் வார்த்தை கேட்டே
இயமனும் எழுந்தி ருந்து
நன்றுநன் றெனவே சீறி
நற்சிலை வீரன் தன்னை
இன்றென துலகில் சேர்ப்பது
இயல்பெனப் பாசம் ஏந்தி
குன்றெனும் கடாவில் ஏறிக்
கொப்பெனப் புறப்பட் டானே.

வன்னிய வீரன் சொற்களைக் கேட்ட எமன் உடனே கோபம் அடைந்து "அந்த வன்னிய வீரனை இப்போதே என்னுலகில் சேர்ப்பேன் என்று பாசக் கயிற்றை எடுத்துக் கொண்டு சிறியமலை போன்ற எருமைக் கடாவில் ஏறிக் கொண்டு புறப்பட்டான்."

கடா - எருமைக் கடா. **கொப்பென** - விரைவாக.

1009. சிவன் எமனைத் தடுத்தல்

புறப்படும் போதில் ஈசன்
பெருநமன் தனைய ழைத்தே
இறப்பது நிசமே கண்டாய்
எழில்வீரன் சொல்லி னாலே
இறப்பது வேண்டாம் வேந்தன்
இளவலின் உயிரை இன்றே

சிறப்புடன் விடுவி டென்றே
திருவுளம் பாலித் தாரே.

எமன் புறப்படும் போதே சிவன் எமதர்மனை அழைத்து, "வன்னிய வீரன் உயிரைக் கவரப்போனால் நீதான் இறப்பாய். நீ இறக்க வேண்டாம். சோழவேந்தன் புதல்வர்களின் உயிரைவிட்டு விடு" என்று கூறினார்.

நமன் - எமன். **இளவல்** - புதல்வர். **திருவுளம் பாலித்தார்** - கூறினார்.

1010. எமன் பாலர் உயிரைத் தருதல்

திருவுளம் மொழியைக் கேட்டுச்
சிறுவரின் சீவன் தன்னை
விரைவுடன் கொடுபோய் விட்டான்
வீரனும் வனம்க டந்து
தருவெனும் கங்கை கொண்ட
சோழனார் தனைஅ னுப்பி
மருவளர் கயிலை ஈசன்
மலரடி தொழுதி ருந்தான்.

எமன் சிவன் சொல்லைக் கேட்டுச் சிறுவர் உயிர்ர விரைவில் கொண்டுபோய் விட்டான். வன்னிய வீரனும் கங்கை கொண்ட சோழனையும் அவன் பிள்ளைகளையும் சோலைகளைக் கடந்து அனுப்பி விட்டு மணம் மிகுந்த கயிலை ஈசனின் மலர்போன்ற திருவடிகளை வணங்கினான்.

சீவன் - உயிர். **மரு** - மணம்.

1011. ஈசன் வரம் அளித்தல்

மலரடி வணங்கி நின்ற
வன்னியன் வதனம் நோக்கி

இலகிய வரமும் கோடி
இயல்புடன் அளித்துச் சூரன்
தலைவளர் இரதம் துன்மை
தனக்கல்லால் உங்கள் நன்மைக்
கிலையென உரைத்து வாழ்த்தி
ஏகெனச் சொற்றான் ஈசன்.

தன் திருவடியை வணங்கிய வீரவன்னியன் முகம் நோக்கிக் கோடி வரம் அளித்த சிவபெருமான் வாதாவியின் தலை இருக்கப்பட்ட இந்தத் தேர் உன் வம்சத்துக்குத் தீமையே தவிர நன்மை இல்லை என்று கூறி வாழ்த்தி விடை கொடுத்தான்.

வதனம் - முகம். **துன்மை** - துன்பம் **ஏகு** - செல். **சொற்றான்** - கூறினான்.

1012. உருத்திர வன்னியனின் மைந்தர் மனைவியரைக் காணாமல் துயருறுதல்

என்றவன் உரைப்ப அந்த
எழில்முடி வீரன் கோயில்
துன்றியே இருப்ப நான்கு
சுதன்களும் மாதர் பக்கல்
வென்றியாய் ஏகும்போது
விருப்பமாய் மணம் புணர்ந்த
ஒண்தொடி மாதரைக் காணா
துளம்தனில் துயருற்றார்.

சிவன் விடைகொடுக்க உருத்திர வன்னியன் அரண்மனை திரும்பினான். மைந்தர் நால்வரும் மனைவி மார்களிடம் வெற்றி கூறச் செல்லும் போது தாங்கள் விரும்பி மணந்த பெண்களைக் காணாமல் துயரம் உற்றனர்.

கோயில் - அரண்மனை. **துன்றி** - நெருங்கி. **சுதன்** - மகன். **மாதர்** - மனைவியர்.

1013. "எங்கள் மனைவியர் எங்கே"? என்று அன்னையிடம் கேட்டல்

இந்திரன் ஈன்ற மாது
எழிலடி இறைஞ்சி உந்தன்
மைந்தர்கள் அணைந்த மாது
மண்டபத் தில்லை ஏது
விந்தையை மனத்தில் ஓர்ந்து
விமலன் தாள்போ னாரோ
அந்தமாம் சுவான மொன்று
அவரிடம் வந்த காலை.

இந்திரன் மகளான மந்திர மாலையின் அழகான பாதங்களை வணங்கி உன் பிள்ளைகளை மணந்த பெண்கள் மண்டபத்தில் இல்லை; என்ன விந்தையைக் கண்டு இறைவனடி சேர்ந்தார்களோ என்றனர். "நீங்கள் அனுப்பிய நாய் வந்தது" (அடுத்தபாட்டில் தொடரும்)

சுவானம் - நாய்.

1014. மந்திரமாலை பெண்கள் இறந்ததைக் கூறல்

மன்னவர் மடிந்தா ரென்று
வளரெரி வீழ்ந்தே மாய்ந்தார்
என்ன நாரதன் எனக்கே
இயம்பினன் பால னாரே
அன்னவர் வரலா றீதை
அறிவித்தே னுனக்கி தென்று
மின்னும் மந்திர மாலைக்கு
வினயமாய்ச் சொல்ல லுற்றார்.

"நீங்கள் இறந்து விட்டீர்கள் என்று நினைத்து உங்கள் மனைவியர் தீயில் விழுந்து இறந்தனர் என்று நாரதன் என்னிடம் கூறினான். அவ்வரலாற்றைப் பிள்ளைகளே உங்களிடம் கூறினேன்" என்றாள் மந்திர மாலை. அவருக்குப் பாலகர் நயமாகக் கூறத் தொடங்கினர்.

1015. பிள்ளைகள் தாங்கள் முன்பு கூறிய அடையாளத்தைச் சொல்லுதல்

தீயனாம் வாதாவி யாக்கை
சேதிக்க விஜயம் செய்து
பாயிரத் துடன்ப யின்ற
பாங்கினை மனத்தின் ஓர்ந்து
பேயனால் தீத டைந்தால்
பெருகிய ஞாளி யொன்று
மாயிரும் ஞாலம் தன்னில்
வந்திடும் வந்த காலை.

தாங்கள் தீயவனாகிய வாதாவியை அழிக்கச் செல்லும்போது கூறிய சொற்களை நினைத்தனர். "வாதாவியால் எங்களுக்குத் தீங்கு வந்தால் நாயொன்று வரும் அந்த நாய் வரும்போது,

சேதிக்க - அழிக்க. **பாயிரத்துடன்** - முன்னால் போருக்குப் புறப்படும்போது விடைபெற வந்தபோது. **ஓர்ந்து** - நினைத்து. **பேயனால்** - வாதாவியால். **ஞாளி** - நாய். **ஞாலம்** - உலகம். **காலை** - பொழுது.

1016. பெண்கள் இறந்த காரணம் கூறுதல்

அக்கினி புகுவீ ரென்றே
அரிவையர்க் குரைத்திட் டேக
மிக்கசொல் உறுதி யென்றே
விரும்பியே மாதர் பக்கல்

ஒக்கவே அழைத்துப் போன
நாயினில் ஒன்று வேலை
புக்கிட வருகக் கண்டே
பூவையர் இறப்ப தானார்.

தீயில் முழுகுவீர் என்றே மனைவியர்க்குச் சொல்லி விட்டுப் போக, அதை உறுதியாக நம்பிய பெண்களிடத்தில், நாங்கள் அழைத்துப்போன நாயொன்று கடலில் புகாமல் வருவதைக் கண்ட பெண்கள் இறந்தனர்"

அரிவையர் - பெண்கள். **பூவையர்** - பெண்கள். **வேலை** - கடல்.

1017. மனம் தேறுதல்

இனிமனம் இடிந்தால் அந்த
ஏந்திழை வருவ துண்டோ
புனிதமாக் கொணர்ந்த மாதைப்
புணருவோ மென்னத் தேறி
பனிமலர் சடையான் பாலர்
பகர்ந்திட அவனி சைப்ப
குனிசிலை கரத்தோர் அந்தக்
கோதையை அணைய லுற்றார்.

"இனிமேல் மனம் வருந்துவதால் அந்தப் பெண்கள் வரப்போகிறார்களோ? கொண்டுவந்த பெண்களைச் சேர்வோம்" என்று மனம் தேறிச் சிவபாலர் (வன்னிய வீரர் நால்வரும்) சிவனிடம் கூறினர். பின்பு வில்லேந்திய அவ்வீரர் தாம் அழைத்து வந்த மாதரைச் சேரலுற்றார்.

ஏந்திழை - ஆபரணம் அணிந்த பெண்கள். **பனி** - குளிர்ந்த. **பகர்ந்திட** - சொல்ல. **கோதை** - பெண்கள்.

1018. நால்வரும் அழைத்து வந்த அரக்க மாதரைச் சேரல்

பிரமநற் கலனாள் சேர்ந்தான்
பெருகிய கிருஷ்ணன் தானும்
பெருமுலை மாதைச் சேர்ந்தான்
பெட்பமர் சம்பு வீரன்
மருவிய பலமார் நல்லாள்
மகிழ்ந்தனன் அழலா மன்னன்
செருமையா மேடி இன்பம்
சேர்ந்தனர் நான்கு வீரர்.

பிரம வன்னியன் மாங்கல்யம் அணிந்தவளைச் சேர்ந்தான். கிருஷ்ண வன்னியன் கனத்த முலையுடைய பெண்ணைச் சேர்ந்தான். சம்பு வன்னியன் பலமுடைய பெண்ணைச் சேர்ந்தான். அக்கினி வன்னியன் மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்ணைச் சேர்ந்தான்.

1019. "ஈசன் மக்கள் அரக்கரைச் சேர்ந்ததேன்"? எனஅத்திரி முனி கேட்டல்

பரமுனி உரைப்பக் கேட்ட
முனிவனும் பகர ஈசன்
செருவர்க ளவுணர் இன்பம்
சேர்ந்தனர் சிந்தை வைத்தது
உரையென முன்னோர் சாபம்
உள்ளதை உரைப்பேன் வேத
விரிவுள சுசீலன் சேயை
வெள்ளியும் விரும்பி வந்தான்.

சனகர் கூறக்கேட்ட அத்திரி முனிவர் "ஈசன் மக்கள் அரக்க மாதரைப் புணர்ந்தது ஏன்"? என்றார். "முன்னோர் சாபம் உள்ளது.

அதனால் சேர்ந்தனர். அதைக் கூறுகிறேன்" என்று சனகர் கூறத் தொடங்கினார். "வேதம் கற்ற சுகீலன் என்பவனிடம் நான்கு பெண்கள் இருந்தனர். அவர்களை மணக்க விரும்பிச் சுக்கிரன் வந்தான்."

பரமுனி - சனகன். **செருவர்** - சிறுவர் - பிள்ளைகள் **வெள்ளி** - சுக்கிரன்.

1020. சுக்கிரன் சாபமிடுதல்

வந்தவன் மடந்தை யாரை
வதுவைசெய் தீவை என்ன
தந்திர முனிவ னாரும்
தடுக்கநின் மகவைச் சேர்ந்தார்
சுந்தர முடனே கண்டு
சுடரெரி வீழ்ந்தே மாய்வார்
சிந்தைவைத் தவரி யக்கர்
தெரிவையைச் சேர்வர் என்றான்.

சுக்கிரன் "பெண்களைத் திருமணம் செய்து கொடு" எனக் கேட்க, முனிவர் மறுக்க, "உன் பெண்கள், மணம் செய்தவரோடு சுகம் அடைந்தும் பின்னர், தீயிலே வீழ்ந்து இறந்து போவார்கள். கணவர்கள் அரக்க மாதரைச் சேர்வர்" என்று சாபமிட்டான்.

வதுவை செய்து ஈவை - திருமணம் செய்து கொடுப்பாய். **மகவை** - பெண்களை. **தெரிவை** - பெண்கள்.

1021. சாபம் பலித்தல்

பளிங்கவன் உரைத்த சாபம்
பாரமா யிற்றே என்று
உளந்தனி லோர் வாய்மை
உரைத்திடா திருப்பச் சூரன்

வளங்களைக் கவரும் வீரர்
வம்பவு ணர்கள் மாதை
களங்கமில் மனத்தை நாடி
களிப்புற விரும்பு கின்றார்.

சுக்கிரன் இட்ட சாபம் பாரமாக, ஒன்றும் பேச முடியாமல் சுசீலன் விட்டுவிட்டான். அச்சாபத்தின்படி அப்பெண்களை மணந்த வன்னிய வீரர் நால்வரும் வாதாவியின் செல்வத்தைக் கவரும்போது அசுரப் பெண்கள் நால்வரை மணந்தனர்.

1022. இந்திரன் பள்ளி எனப் பழித்தல்

இப்படி இருக்கும் காலை
இந்திரன் அவர்பால் செல்கால்
கைப்பிடி சிலையோர் வாளி
களிப்புடன் இருக்கக் கண்டே
செப்புவேன் பள்ளி யாரே
சிவனுமே அளித்த சேயே
இப்படி யாயிரோ வென்று
இயம்பிட வேசொல் வார்.

இவ்வாறு வன்னியர்கள் அசுரப்பெண்களோடு மகிழ்ந்திருக்கும் காலத்து இந்திரன் அவர்களிடம் சென்றான். அப்பொழுது கையில் வில்லும் அம்பும் உடைய அவர்கள் பள்ளியறையில் மகிழ்ந்திருத்தல் கண்டு "பள்ளியாரே! சிவன் அளித்த பிள்ளைகளே! உங்களுக்கு இப்படி அல்லல் நேர்ந்த தென்ன?" என்றான்.

1023. வன்னியர்கள் சினத்தல்

பள்ளியென் றுரைத்திட் டெம்மைப்
பழித்திட லாமோ ஆக்கை

துள்ளவே உனையும் வெட்டித்
தூதர்கை அளிப்பே னென்ன
கொள்ளியே அனலெ ழுப்பிக்
கோபித்த மன்னர் தம்மை
கள்ளுணும் தருவின் நீழல்
காவலன் உரைக்க லுற்றான்.

"பள்ளியென்று எம்மைப் பழிக்கலாமோ? இப்போதே உம்மை வெட்டி எமதூதர் கையில் போடுவேன்" என்று கொள்ளிபோல் கோபித்த அரசர்களை நோக்கிக் கற்பக நிழலில் உள்ள இந்திரன் கூறுவான்.

ஆக்கை, யாக்கை - உடல். **தரு** - மரம். கற்பக மரம். **நீழல்** - நிழல். **காவலன்** - அரசன், இந்திரன்.

1024. இந்திரன் அவர்களுடைய கோபம் அகற்றுதல்

எந்தன் சேயின் எழிலுள பாலரே
உந்தன் வெம்மை அகற்றும் உரையிதாம்
விந்தையாம் பள்ளி யென்றுரை மேன்மையாம்
சிந்தை வைத்தினி செப்பிக் கேளென்றான்.

"என் மகனின் பிள்ளைகளே! கோபம் அகற்றுங்கள்! பள்ளி யென்றுரைத்த மேன்மையை மனம் விரும்பிக் கேளுங்கள்"

சேய் - மகன். **வெம்மை** - கோபம்.

1025. பள்ளி - பெயர்க் காரணம்

பள்ளி ஆனவன் மாய னயன்பரன்
கள்ளு சூழ்மலர்த் தாரணி மன்னவர்
தெள்ளு செந்தமிழ் வீரன் சிறுவரே
பள்ளி யாவர்க்கும் பாத்திர மாமென்றான்.

திருமாலும் பள்ளிதான்; பிரமனும் பள்ளிதான்; சிவனும் பள்ளிதான். தேன் நிறைந்த மலர்மாலையனிந்த மன்னரும் பள்ளிதான். தெளிந்த தமிழ் வன்னிய வீரன் பிள்ளைகளே; பள்ளி யென்பது எல்லோர்க்கும் பொதுவான பெயர்.

மாயன் - திருமால். **அயன்** - பிரமன். **பரன்** - சிவன். **கள்** - தேன். **தார் + அணி** - மாலையணிந்த. **தாரணி** - பூமி என்றும் சொல்லலாம்.

1026. பள்ளி - பொருள்.

அரவினில் பள்ளி மாய னயன்மலர்
பெருமையாம் பள்ளி பிஞ்ஞுகன் இம்மலை
புரியும் பள்ளி புரவல னாருமென்
எரியெனும் பூசுரப் பள்ளியெனச் சொன்னான்.

திருமால் பாம்பில் பள்ளி கொண்டான். பிரமன் தாமரை மலரில் பள்ளி கொண்டான். சிவன் கயிலை மலையை இருப்பிடமாகக் கொண்டான். என் மார்பில் அணியும் சரப்பளியும் பள்ளிதான் (எனவே பள்ளி என்பது பாம்பு, மலர், மலை, சரப்பளி எல்லாவற்றையும் குறிப்பிடுவதாகக் தேவேந்திரன் கூறினான்).

அரவு - பாம்பு. **பிஞ்ஞுகன்** - சிவன். **புரவலன்** - அரசன் இங்கு தேவேந்திரன்

1027. பள்ளி சொல்லின் பெருமை

கள்ள லம்பிய கன்று களித்தன
பிள்ளை துஞ்சு மலர்புவி பேணிய
பள்ளி யாலுடை தோருடை பாலித்தே
வள்ளல் ஈசன் மலரடி மன்னினான்.

தேன் நிறைந்த மலர்கள் அன்னப்பறவை தூங்கும் படுக்கை. பூமியில் பள்ளி. பள்ளிக்கூடம். ஈசனுடைய மலர்ப்பாதங்களும் பள்ளிதான்.

கள் - தேன் **பிள்ளை** - அன்னப்பறவை **துஞ்சும்** - தூங்கும். **புவி** - பூமி.

1028. மூன்றெழுத்துப் பெருமை

மூன்றெழுத் துள்ள பள்ளி யென்றேமொழி
தோன்று கின்றன தொல்புவி யாவையும்
ஊன்றிடும் சிவன் தன்னிணை யாகிய
தான்றவர்க் குத்த ழைத்திடும் பள்ளியே.

பள்ளி என்பது மூன்றெழுத்து உலகம் யாவையும் படைத்த சிவனுக்கும் மூன்றெழுத்து. சிவனுக்கு இணையாகிய தவருக்கும் மூன்றெழுத்து (தவர்). முனிவரின் தவச்சாலையும் பள்ளியே.

1029. கோபத்தை அகற்றுவீர் எனல்

அனைவ ரும்துயில் பள்ளி அறையதாம்
கனமுடன் அப்போ கழறினங் கவ்வவீர்
சினமிகுந் திடும் தீதைய கற்றுவீர்
புனிதம் மேவிய பொன்னுல கேகினன்.

எல்லோரும் தூங்கும் படுக்கையும் பள்ளி எனவே கோபத்தை நீக்குங்கள்" என்று கூறிய தேவேந்திரன் தூய்மையான தன் தேவலோகம் போனான்.

1030. வன்னிய வீரர் மகிழ்தல்

நச்ச ரவணை நாரணன் போலவே
அச்ச மின்றி அவுண மடந்தைகள்
இச்சை யின்றி மணந்த எழிலுடன்
கச்சை வீரர் களிப்பா யிருந்தனர்.

விடமுடைய பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமால் போலவே. அசுரப் பெண்களை விருப்பமின்றி மணந்தாலும் வீரர்கள் மகிழ்ச்சியோடிருந்தனர்.

நச்சு - விடம் **நாரணன்** - திருமால். **இச்சை** - விருப்பம்.

1031. அத்திரிக்குச் சனகர் சொல்லுதல்

பொன்னிளங் கொன்றை யுற்ற புனல்சடை
முன்ன வன்னருள் பெற்ற முனியனே
இன்னம் களிப்ப அவையினில் ஏகியே
மன்னர் ஆகிய வார்த்தையைக் கூறுவார்.

பொன் போன்ற கொன்றைமலர் அணிந்த கங்கை தங்கிய சடையை உடைய சிவனருள் பெற்ற அத்திரி முனிவரே! வன்னியர் அரசர் ஆகிய கதையைச் சொல்கிறேன்.

புனல் - நீர், கங்கை.

32. அரசியல் சருக்கம்

1032. உருத்திர வன்னியன் சிவனை வேண்டுதல்

வெள்ளிமால் வரைப்பால் வீரர்
வீற்றி ருந்திடும் அந்நாளில்
கள்ளுலா மலர்சூழ வீரன்
கயிலை நாயகனைப் போற்றி
பள்ளமாம் உவரி சூழ்ந்த
பாரெலாம் அரனே காக்கும்
வள்ளலன் றரசு நல்க
வரமளி எனவு ரைத்தான்.

கயிலை மலையில் வன்னிய வீரர் வீற்றிருக்கும் நாளில் தேன் நிறைந்த மலர் சூழ்ந்த உருத்திர வன்னியன்) கடல் சூழ்ந்த இவ்வுலகம் முழுவதும் சிவனே காக்கும்படி. நான் ஆளும் வரம் தரவேண்டும் என வேண்டினான்.

வெள்ளிமால் வரை - கயிலை மலை. **உவரி** - கடல்.

1033. திருமால் சிவனிடம் உருத்திர வன்னியனுக்கு முடிசூட்டச் சொல்லுதல்

அயன்அரி அண்டர் போற்ற
அரனிருந் துரைப்பார் மாலே
புயமிரு வீரன் சொன்ன
புதுமைகேள் சொல்வோம் என்ன
நயனபார் வைகளாய் அந்த
நானிலம் தனில்ப கிர்ந்தே
வியன்மணி முடிகள் சூட்டி
மேதினி புரக்கச் செய்வீர்.

பிரமன், திருமால், தேவர் போற்ற அரன் வீற்றிருந்து கூறுவார். "திருமாலே! தோள்வலி மிகுந்த உருத்திர வன்னியன் கூறியதைக் கேட்டாயா? சொல்" என திருமால் "இப்பூமியைப் பார்வையால் அளந்து பங்கு பிரித்து முடி சூட்டி ஆளச் செய்வாய்" என்றார்.

அயன் - பிரமன். **அரி** - திருமால். **அண்டர்** - தேவர். **அரன்** - சிவன். **நயன** - கண். **மேதினி** - பூமி.

1034. சிவன் திருமாலிடம் பூமியை ஐந்து பங்காகப பிரிக்கச் சொல்லுதல்

என்றரி உரைப்ப ஈசன்
இதயத்தில் உவகை மன்னி
நன்றென மயனைக் கூவி
அழைத்துநா னிலங்கள் தன்னை
வென்றிவேல் வீரர் மேவி
விண்ணவர் போலி ருப்ப
மன்றல்சேர் புவியை ஐந்தாய்
வகுத்திடும் எனவு ரைத்தான்.

என்று திருமால் கூறச் சிவன் மகிழ்ந்து நல்லதெனச் சொல்லி, மயனை அழைத்து, "இப்பூமியை வெற்றி பொருந்திய வேலையுடைய வீரர் ஆட்சி செய்து தேவர்கள் போலிருக்க ஐந்து பங்காகப் பிரி" என்றார்.

என்று + அரி. என்றரி. **விண்ணவர்** - தேவர். **மன்றல்** - மணம்.

1035. மயன் பங்கு பிரித்தல்

ஆலமுண்டவன் அனுப்ப வந்தமயன் மனத்தோர்ந்து
பாலநதி வடதிசையில் பரமனுத் தரபூபன்
மால்பெண்ணை நதிமட்டும் வளர்கிருஷ்ணன் இருப்ப
சீலமுறும் பொன்னிவரை செழிபிரமன்
வீற்றிடுவான்.

விடமுண்ட ஈசன் அழைக்க வந்த மயன், மனத்தில் ஆராய்ந்து, "பாலாற்றுக்கு வடதிசையில் உருத்திர வன்னியனும், பாலாறு முதல் பெண்ணை வரை கிருஷ்ண வன்னியனும், பெண்ணைக்குத் தெற்கே பொன்னிவரை பிரம வன்னியனும் ஆட்சி செய்வான்" என்றார்.

பாலநதி - பாலாறு. **பொன்னி** - காவிரி.

1036. திருமால் நன்று எனல்

சேதுபதி அந்தமுதல் செழும்சம்பு வன்னியனும்
ஓதையுண் குணக்கடலின் ஓங்குபுடை அக்கினிக்காம்
நாதனே மயனுரைப்ப நக்கனுடன் மாலயனும்
தீதிலா அகத்துணர்ந்தே செப்புமுறை நன்மை
என்றார்.

இராமேஸ்வரம் முதல் காவிரி வரை சம்பு வன்னியனுக்கும், கிழக்குக் கடலோரப் பகுதி அக்கினி வன்னியனுக்கும் என மயன் கூறச் சிவனும் பிரமனும் திருமாலும் "நீ கூறியது நல்லது" என்றனர்.

சேதுபதி - இராமேஸ்வரம் - இராமர் அணைகட்டிய இடம். **அந்தம்** - முடிவு. **ஓதை** - அலைநீரின் ஈரம். **குணக்கடல்** - கிழக்குக்கடல். **நக்கன்** - சிவன்.

1037. சிவபெருமான் அவரவரை அழைத்துக் கூறுதல்

வீரவன்னி யனுக்கே விளம்புவார் அரனாரந்த
பாரியுடன் இருந்தே பதியைஆண் டிருங்களென்ன
கூரயில்வேல் பாலர்களைக் குறித்த பதியிலேகிச்
சூரரென வாழ்ந்திடுவீர் என்றுரைப்பத் திருத்திருந்
தான்.

சிவபெருமான் வீரவன்னியனை அழைத்து "நீ உன் மனைவியுடன் பாலாற்றுக்கு வடதிசையை ஆண்டிரு" என்று கூறிக் கூர்மையான இலையையுடைய வேலாயுதம் தாங்கிய பிள்ளைகளைப் பார்த்து "உங்களுக்குக் குறிப்பிடப்பட்ட ஊரில் சென்று வீரர்களாய் வாழ்ந்திருப்பீர்" எனக் கூறினார்.

விளம்புவார் - கூறுவார். **பாரி** - மனைவி. **பதி** - ஊர். **அயில்** - இலை.

1038. பிள்ளைகள் சிவனிடம் விருது கேட்டல்

மயன்வகுத்த பூமிதனில் மக்களுமே மனமகிழ
புயவலிவாய் இருமெனவே புகல்புனிதன் அடியேத்தி
இயலுமுள நாதனே இந்நாளில் அடியரேற்குச்
செயமான விருதுகளைச் செப்பென்றார்
சிறுவருமே.

"மயன் படைத்த பூமியில் மனம் மகிழ்ந்து தோள் வலியோடு வாழுங்கள்" எனச் சிவன் கூறியதும். பிள்ளைகள் சிவனைப் பார்த்து "நாதனே! எங்களுக்குரிய வெற்றி விருதுகளைக் கூறுங்கள்" என்றனர்.

புயம் - தோள். **செப்பு** - கூறு. **சிறுவர்** - பிள்ளைகள்.

1039. சிவபெருமான் விருதுகளைக் கூறுதல்

வாதவுணன் அத்திமன்னும் சிரமாய இரதமுமே
தீதடையும் போதாகும் சிவிகையுடன் கவிகைகளும்
கோதுசெயும் அவுணருரை கோயில்வளர்
துவசமுடன்
சீதமுள செங்கழுநீர் தார்புனைந்தே செழித்திடுவீர்.

“வாதாவியின் எலும்பினால் ஆகிய அவன்தலை இருக்கும், இத்தேர் உங்களுக்குத் தீமை தரும். பல்லக்கு, குடை, குற்றம் புரிந்த அவ்வரக்கர் அரண்மனையில் இருந்த பதினெட்டு கொடிகள். குளிர்ந்த செங்கழுநீர் மாலை இவற்றை உமக்கு உரிய விருதுகளாக்கிக் கொள்ளுங்கள்” என்றார் சிவன்.

வாதவுணன் - வாதாவி. **அத்தி** - எலும்பு. **சிவிகை** - பல்லக்கு. **சீதம்** - குளிர்ச்சி. **கவிகை** - குடை. **கோது** - குற்றம். **துவசம்** - கொடி. **தார்** - மாலை.

1040. மேலும் விருது கொடுத்து வாழ்த்துதல்

நானணிநல் விருதுமக்கே நானிலத்தே
தழைத்திருப்ப
வானவர்கோன் மும்முரசும் மகுடகவச மும்துன்ன
தேனுகையு மலர்த்தாராய் தேவகுல மானவர்காள்
ஈனமிலா திப்புவியில் எந்நாளும் வாழ்ந்திடுவீர்.

“எனக்குரிய விருதுகளை யெல்லாம் உங்களுக்கே அளித்தேன். இப்பூமியில் செழித்து வாழுங்கள் தேன் நிறைந்த மாலையணிந்தவனே! தேவேந்திரனின் மூன்று முரசுகள், மகுடம், கவசம், ஆகியவற்றையும் பெற்று, தேவகுலமானவர்களே! இப்பூமியில் இழிவில்லாமல் எந்நாளும் வாழுங்கள்!” என்றார் சிவபெருமான்.

ஈனம் - இழிவு.

1041. துர்க்கை மந்திரியாகப் படைகளுடன் வாழ்க எனல்

புடவியெனும் ஆடைதனை பொருது புவிதனிலேகி
அடைவுடனே யாவருக்கும் அருஞ்சமருக்
குரிமையென
நடம்புரியும் மந்திரியும் நற்பாதம் போற்றி
யென செப்பும்
படைகள்தனைக் காட்சியாய் பாரினில்வாழ்ந்
திடுமென்றார்.

"கடல் ஆகிய ஆடையை உடுத்த பூமியில் போர் செய்து எல்லோருக்கும் போருக்கு உரிமையாயுள்ள நடனம் செய்யும் துர்க்கா தேவியை மந்திரியாகக் கொண்டு, படைகள் பாதங்களை வணங்கப் பூமியில் வாழ்க" என வாழ்த்தினார்.

புடவி - கடல். **பொருது** - போர் செய்து. **புவி** - பூமி. **சமர்** - போர். **பார்** - பூமி.

1042. பிள்ளைகள் தாய்தந்தையை வணங்குதல்

கிருஷ்ணனும் பிரமனும் கிளர்சம்பு வன்னியும்
உருத்திர னோடுபணிந் தோங்குபுகழ் வீரனையும்
திருத்தமுட னேபணிந்து தெய்வானைக்
கிளையவளை
இருத்திபதம் பணிந்திடவும் அவள்மகிழ்ந்து
இயம்புவளே.

கிருஷ்ண வன்னியன், பிரம வன்னியன், சம்பு வன்னியன், அக்கினி வன்னியன் நால்வரும் சிவனைப் பணிந்து, தந்தையாகிய உருத்திர வன்னியனையும் பணிந்து, தெய்வானைக் கிளையவளாகிய

தங்கள் தாயார் மந்திரமாலையையும் வணங்கினர். மந்திர மாலை மகிழ்ந்து கூறுவாள்.

உருத்திரன் - சிவன். **வீரன்** - உருத்திர வன்னியன். **தெய்வானை** - இந்திரன் மகள். முருகன் தேவி. அவளுக்கிளையவள் மந்திரமாலை உருத்திரவன்னியன் மனைவி. கிருஷ்ண வன்னியன் முதலான நால்வருக்கும் தாய்.

1043. மந்திரமாலை புதல்வரை வாழ்த்துதல்

என்று முங்கள் குலந்தழைத் தோங்கவும்
மன்றல் சூடி மகிழ்ச்சி அணையவும்
குன்று போன்ற புவிநல் வலிகொளவும்
வென்று வீரரிம் மேதினி வாழ்கவே.

“உங்கள் குலம் தழைக்கவும், மாலை சூடி மகிழ்ச்சி நிரம்பவும். உருண்டையான இவ்வுலகம் வலிமையோடு வாழவும். வெற்றியோடு வீரர்களே இப்பூமியில் வாழுங்கள்!

மன்றல் - மாலை. மணம். **குன்று** - குண்டு. உருண்டை. **மேதினி** - பூமி.

1044. பிள்ளைகள் அவரவர் நாடு செல்லல்

மக்க ளேயென வாழ்த்திட மக்களும்
தக்க சூரரின் தையலர் சூழ்ந்திட
நக்க னுந்தான் நாட்டினில் சென்றுமே
புக்கி வாழ்ந்து புவியில் இருந்தனர்.

பிள்ளைகளே” என்று வாழ்த்தினாள். பிள்ளைகளும் அவுண மனைவியர் சூழ சிவன் அளித்த அவரவர் நாட்டில் சென்று ஆட்சி செய்து பூமியில் வாழ்ந்தனர்.

மக்களே - புதல்வர்களே! **சூரர்** - அவுணர். அசுரர். இராட்சதர். **தையலர்** - பெண்கள். **நக்கன்** - சிவன். **புக்கி** - புகுந்து. **புவி** - பூமி.

1045. உருத்திர வன்னியனும் தன் நாட்டில் அரசு செய்தல்

கொன்றை சூடியன் அளித்த
குமாரனும் சம்பு ஊரில்
மன்றலர்க் குழலாள் ஆன
மந்திர மாலை துன்ன
வென்ற மதன்ர தியென
விண்ணவர் கோனா யிலங்கிடவும்
துன்றிய நல்லரி மேடை
துரந்தரசு வீற்றி ருந்தான்.

கொன்றை சூடிய சிவன் பெற்ற உருத்திர வன்னியனும், அவன் தேசத்தில் மணம் மிகுந்த மலர் சூடிய மந்திர மாலையுடன் மன்மதனும் ரதியும் போல தேவேந்திரன் என்று சொல்லும்படி அரியணையில் அரசு வீற்றிருந்தான்.

அரிமேடை - சிம்மாசனம். **விண்ணவர்கோன்** - தேவேந்திரன்

1046. மந்திர மாலை பிள்ளை பெறுதல்

அங்கியின் மரப தான
அரசனும் அவனி முற்றும்
செங்கைகோல் வழுவிடாமல்
செயமுடன் இருக்கும் காலை
மங்கையும் கருவை யுற்று
மதிபல செல்லப் பின்னர்
திங்களும் நிகர்த்த சேயைத்
தினகரன் எனவே ஈன்றாள்.

அக்னி வசம்சத்தில் வந்த வீர வன்னியன் பூமி முழுவதையும் செங்கோல் வழுவாமல் காத்து வெற்றியுடன் இருக்கும் போது,

மந்திரமாலை கருவுற்றாள். பத்துமாதம் சென்ற பின்னர், சந்திரனை ஒத்த பிள்ளையைச் சூரியன் போலப் பிரகாசத்துடன் பெற்றாள்.

அங்கி - அக்னி. **அவனி** - பூமி. **வழுவிடாமல்** - தவறிடாமல். **செயம்** - வெற்றி. **மதி** - மாதம். **திங்கள்** - சந்திரன். **தினகரன்** - சூரியன்.

1047. உருத்திரவன்னியன் தருமம் அளித்துக் குழந்தைக்குச் சந்திர சேகரன் எனப் பெயரிடுதல்

மகவினை அரசன் கண்டு
மாநிலம் தருமம் நல்கி
பகவன்தன் விழவ ளித்துப்
பாலனை வளர்க்கும் நாளில்
செகதலத் தரசர் போற்ற
சிறந்துள சேக ரப்பேர்
நகையினால் புரமெ ரித்தார்
நாமமே நவில லுற்றான்.

பிள்ளையைக் கண்டு மகிழ்ந்த உருத்திர வன்னியன் தருமம் செய்து, இறைவனுக்கு விழா எடுத்துப் பிள்ளையை வளர்த்தான். எல்லாத் தேசத்து அரசர்களும் வந்து வணங்க, சிரிப்பினால் முப்புரம் எரித்த சிவபெருமான் பேராகிய சந்திர சேகரன் என்னும் பெயரைப் பிள்ளைக்கு வைத்தான்.

மகவு - பிள்ளை. **விழவு** - விழா. **செகதலம்** - உலகம். **நகை** - சிரிப்பு. **புரம்** - திரிபுரம், முப்புரம். **நாமம்** - பெயர்.

1048. சந்திரசேகரனுக்குத் திருமணம் செய்தல்

இந்துசே கரனைந் தாண்டு
ஏகவும் கலைகள் ஓதி
தந்திமா வேதம் சாபம்
தழல்கண்ண தெளிவ தாகி

மைந்தனுக் கான மங்கை
மன்னன் சோழனே ஈயச்
சிந்தையில் உவகை கூர்ந்தே
திருமணம் செய்ய லுற்றான்.

சந்திர சேகரன் ஐந்தாண்டுகள் முடிந்ததும் ஆயகலைகள் அறுபத்து நான்கையும் ஓதினான். யானை யேற்றம் குதிரையேற்றம், வேதம், வில்வித்தை, அக்கினிக் கணை ஏவுதல் ஆகிய எல்லாக் கலையும் கற்றபின் அவனுக்கான பெண்ணைச் சோழன் தர மன மகிழ்ச்சியுடன் திருமணம் செய்து வைத்தான்.

இந்து - சந்திரன். **சேகரன் + ஐந்து + ஆண்டு** - சேகரனைந்தாண்டு. **தந்தி** - யானை. **மா** - குதிரை. **சாபம்** - வில். **தழல்** - நெருப்பு. **கணை** - அம்பு.. **சிந்தை** - மனம். **உவகை** - மகிழ்ச்சி.

1049. முடி சூட்டுதல்

தேவர்கள் ஜெயஜெ யென்ன
செகதலத் தரசர் மன்ன
பாவைய ரினங்கள் ஆட
பருமுனி வோர்கள் பாட
கோவெனும் வீரன் உள்ளம்
குளிர்ந்திட மகனை வாழ்த்தி
பாவலர் யாகம் நல்க
பருமுடி அணிந்தான் மாதோ.

தேவர்கள் ஜெய கோஷம் போட, பூமியிலுள்ள அரசர் சூழ, பெண்கள் நடனம் ஆட, பாவலர் பாட, வீரவன்னியன் மனம் குளிர மகனை வாழ்த்தி, முனிவர் யாகம் வளர்க்க, முடி சூட்டுவித்தான்.

பாவையர் - பெண்கள்.

1050. இந்திரன் முதலிய தேவர்கள் வானுலகம் செல்லுதல்

தந்திர மாக மன்னன்
தரணியைப் புரக்கும் காலை
இந்திரன் முதலோர் வீரன்
இணையடி ஏத்தி வானில்
வந்திடு மென்னும் வண்ணம்
மயேசன்தன் உரைப்ப டிக்கே
இந்திர லோகம் புக்கி
இருந்தனன் உவகை ஆகி.

அறிவுத் திறமையோடு சந்திர சேகரன் பூமியைக காபபாறறும காலத்து, இந்திரன் முதலிய தேவர்கள் அவனுடைய பாதங்களை வணங்கி, வானுலகில் சென்று வாழ்ந்திருங்கள் என்று பரமேசுவரன் கூறியபடி இந்திரலோகம் சென்று மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர்.

தந்திரம் - திறமை. **தரணி** - பூமி. **புரக்கும்** - காக்கும். **காலை** பொழுது. **உவகையாகி** - மகிழ்ச்சியோடு.

1051. சந்திரசேகரன் நல்லாட்சி நடத்துதல்

திங்கள்மும் மாரி பெய்ய
தேசங்கள் செழித்து ஓங்க
சங்கரன் கோயில் பூசை
தவறிடா தரணி வாழ்க
இங்கித மறையோர் நீதி
என்றுமே வாழ்த லோடு
துங்கமாம் பயிரி னங்கள்
தொன்னகர் செழிக்கச் செய்தான்.

மாதம் மூன்று மழை பொழிந்தது. தேசம் செழித்து ஓங்கியது. சிவன் கோயிலில் பூமி வாழத் தவறாமல் பூசைகள் நடைபெற்றன. வேத நீதி தழைத்தோங்கியது. பயிர்கள் செழித்து வளர்ந்து நகரம் செழித்தது. இவ்வாறு தேசம் செழிக்க அரசாட்சி புரிந்தான் சந்திர சேகரன்.

1052. இந்திரன்போல் வீற்றிருத்தல்

அம்புவி புரந்து நிற்கும்
அரியர புத்திரன்போல்
செம்பதி யெனுமா வெள்ளி
செழித்திடு மலைக்க டுத்த
சம்புவின் நகரம் தன்னில்
தழலினில் உதித்த வீரன்
இன்பமாய் அளித்த சேயும்
இந்திரன் எனஇ ருந்தான்.

பூமியைக்காக்கும் ஐயனார் போல் கயிலை மலைக்கடுத்த சம்புமா முனிவரின் நகரத்தில் நெருப்பில் உதித்த வன்னிய வீரனின் புதல்வன் இந்திரன்போல் வீற்றிருந்தான்.

அம்புவி - அழகிய பூமி. **புரந்து** - காப்பாற்றி. **அரி** - விஷ்ணு. **அரன்** - சிவன். **அரியரபுத்திரன்** - ஐயனார். **வெள்ளி செழித்திடும் மலை** - கயிலை மலை. **தழல்** - நெருப்பு. **சேய்** - புத்திரன்.

1053. அத்திரி முனிவருக்குச் சனகமுனி கூறுதல்

அத்திரி முனியே அன்று
அழலினில் உதித்த வீரன்
புத்திரனுலக மெல்லாம்
புரந்திடும் காதை யெல்லாம்
உத்தம புராண மாக
ஓதினேன் உவகை யாலே

சித்தமே மகிழ்ந்தென் னாளும்
சிவன்பதம் சேர்ந்தி ருப்பீர்.

அத்திரி முனிவரே! நெருப்பில் உதித்த வீரன் மகன் உலகத்தை யெல்லாம் காத்த கதையெல்லாம் புராணமாகச் சொல்லி விட்டேன். இதைக்கேட்ட நீங்கள் மனம் மகிழ்ந்து சிவன் பதம் அடைவீராக.

1054. கதையின் பயன்

அம்புலிச் சடையில் வைத்தான்
அருளினால் பிறந்த மன்னன்
சம்புமா முனிவன் வேள்விச்
சந்ததி சரிதை தன்னை
இன்பமாய்ப் படிப்போர் கேட்போர்
எழுதுவோர் இதனை ஈவோர்
அம்புவி புரந்து வாழ்ந்தே
அரன்பதம் அடைவர் தாமே.

சந்திரனைச் சடையில் வைத்த சிவனருளால் பிறந்த மன்னன் சம்புமா முனிவன் யாகத்தில் தோன்றிய சந்ததிகள் வரலாற்றை மகிழ்ச்சியோடு படிப்பவர், கேட்பவர், எழுதுவோர், எழுதிப் பிறருக்குக் கொடுப்பவர் இப்பூமியைக் காத்து வாழ்ந்து சிவனின் பாதங்களை அடைவர்.

அம்புலி - சந்திரன். **வேள்வி** - யாகம். **சந்ததி** - வம்சம், வழிவருபவர். **சரிதை** - வரலாறு. **அம்+புவி** - அழகிய பூமி. **அரன்** - சிவன்.

1055. நூல்பாடிய விதம் உரைத்தல்

வன்னிய புராணம் வியாசன்
வழுத்திடச் சனகன் தேரி

துன்னும் அத்திரிக் குரைத்த
உண்மையை உணர்ந்தோர் மிகவோர்
உன்னிய வடநூ லாலே
உரைத்தனர் அதனை ஆய்ந்தே
மன்னன் மீனவனும் கேட்க
வழுத்தினன் உலகில் மாதோ.

வியாசர் கூறிய வன்னிய புராணத்தைச் சனகன் அத்திரிக்குக் கூறினான். அதனை உணர்ந்த அறிஞர் வடமொழியில் நூலாக எழுதினர். அதனை ஆராய்ந்து சுந்தர பாண்டியன் கேட்க நான் தமிழில் பாடினேன்.

வழுத்திட - கூற. **தேரி** - ஆராய்ந்து. **மீனவன்** - பாண்டியன்.

1056. கம்பரும் பாடினார் எனல்

சம்புவின் மகத்து தித்த
தாட்டிய வன்னிய ரன்று
அம்புவி தன்னில் நிறைந்தே
அரசுசெய் வலிமை கண்டே
கம்பனும் சுருக்க மாகக்
கவியுரை தன்னில் காதை
இன்பமாய் நவின்ற கீர்த்தி
யாவரே உணர கிற்பார்.

சம்பு முனிவர் யாகத்தில் தோன்றிய வன்னியர் பூமியில் அரசு புரிந்த வலிமையைக் கண்டுதான் கம்பரும் சுருக்கமாக இதனைப் பாடினார். இந்தப் பெருமையை யாரே அறிய இயலும்?

கீர்த்தி - புகழ்.

1057. செய்யுள் தொகை

வையகம் புகழும் வீரன்
வன்னிய புராணம் செய்யுள்

ஐயமில் ஆயி ரத்தி
எழுபத்து மூன்ற தாக
மெய்யெனும் வேதம் தன்னில்
விளங்கிய கதையில் ஆய்ந்தே
துய்ய செந் தமிழாற் காண
துங்கமாய் உரைக்க லுற்றேன்.

வன்னிய வீரனின் புராணத்தை ஆயிரத்து எழுபத்து மூன்று செய்யுளாக வேதத்தில் சொன்ன கதையை ஆராய்ந்து செந்தமிழில் கூறினேன்.

வையகம் - பூமி. **துங்கம்** - மேன்மை.

1058. பாடிய ஆசிரியர்

கங்கையின் மரபில் தோன்றி
காசினியிற் பயிரைச் செய்யும்
துங்கவே ளாளன் மேழித்
துவசமும் பெற்ற தீரன்
இங்கித கிருஷ்ணன் தானும்
ஈன்றருள் வீரன் ஆனோன்
பங்கய முகம லர்ந்தே
பரிவுள புராணம் செய்தேன்.

கங்கை வம்சத்தில் தோன்றிப் பூமியில் பயிர்த்தொழிலை மேற்கொண்டு வேளாளர் குலத்தில் கலப்பைக் கொடி பெற்ற கிருஷ்ணன் என்பவன் மகனாகிய வீரன் என்னும் பெயர் கொண்ட நான் தாமரை போன்ற முகம்மலர்ந்து இப்புராணத்தைப் பாடினேன்.

காசினி - பூமி. **துங்க** - உயர்ந்த. **மேழி** - கலப்பை. **துவசம்** - கொடி. **பங்கய முகம்** - தாமரை போன்ற முகம்.

1059. எல்லோருக்கும் வாழ்த்து

செந்தமிழ்க் கவிஞர் வாழ்க
செய்யவேல் வேந்தர் வாழ்க

வந்தரி மகவும் கூட
வரனருள் மிகுத்தே வாழ்க
மந்திர முனிவர் வாழ்க
வையகத் துறைவோர் வாழ்க
சுந்தர பாண்டி யன்தன்
சுற்றமும் தழைத்து வாழ்க.

தமிழ்க் கவிஞர்களும், வேலையுடைய அரசர்களும், வாழ்க! துர்க்கை மைந்தனும் வரம்பெற்று வாழ்க. முனிவரும் பூமியில் உள்ளோரும் வாழ்க. சுந்தர பாண்டியனும் அவன் சுற்றத்தினரும் வாழ்க.

1060. வன்னிய வீரனுக்கு வாழ்த்து

வானவர் சகாய னான
வன்னிய திலகன் வாழ்க
தானவர் உயிரை மாய்த்த
தரணிமன் னவனும் வாழ்க
ஊனமில் முந்நூல் பார்ப்பான்
உயர்சிகை யுடையோன் வாழ்க
மேன்மைபண் ணாடன் வாழ்க
வீராதி வீரன் வாழ்க.

தேவர்களுக்கு உதவி புரிந்த வன்னிய வீரன் வாழ்க! பூமியில் அரக்கரை அழித்த மன்னனும் வாழ்க! குற்றமற்ற பூநூல் அணிந்து குடுமியை உடைய அந்தணர் வாழ்க! வேளாளர் வாழ்க! வீராதி வீரர்களும் வாழ்க!

வானவர் - தேவர். **சகாயன்** - உதவி செய்வன். **தானவர்** - அரக்கர். **ஊனம்** - குற்றம். **முந்நூல்** - பூணூல். **சிகை** - குடுமி. **பண்ணாடன்** - வேளாளர், வன்னியர்.

வன்னிய புராணம் முற்றிற்று.

துணை நூல்கள்

1. அபிதான சிந்தாமணி,
ஆ. சிங்காரவேலு முதலியார்,
ஏசியன் எஜுகேஷனல் சர்வீஸஸ்,
புதுடில்லி - 110 016. 1982

2. அரிச்சந்திர புராணம்,
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை - 600 001. 1975

3. இறையனாரகப்பொருள் (நக்கீரர் உரை),
பவானந்தம் பிள்ளை (பதி.),
சென்னை. 1916

4. கோலவரைத் துயிலரங்கம் சரிதம்,
கே. சத்தியபாமா, பீ. சுப்ரமணியம் (பதி.),
ஆசியவியல் நிறுவனம்,
சென்னை - 600 119. 1999

5. தமிழ் மொழி அகராதி,
யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளை,
சென்னை. 1955

6. திவாகரம்,
மு. சண்முகம்பிள்ளை. இ. சுந்தரமூர்த்தி (பதி.),
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை- ,600 005. 1990

7. பதினெண்புராணச் சுருக்கம்,
வெ. சோமதேவ சர்மா,
மால்பலம் குருகுல வெளியீடு,
சென்னை - 600 017. 1957

8. பிரபந்த மரபியல்,
மு. அருணாசலம் (பதி.),
அரசினர் சுவடி நூலகம்,
சென்னை- 600 005. 1975

9. வன்னியர் சிலை எழுபது,
டாக்டர். கெ. சிவராமலிங்கம் (பதி.),
இந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம்,
சென்னை - 600 094. 2003

10. வன்னியர் புராணம் மூலமும் உரையும்,
பாலசுந்தரநாயகர் (பதி.),
கலைக்கியான முத்திராட்சர சாலை,
சென்னை. 1919

பாடல் முதற் குறிப்பு

எண் : பாடல் எண்.

இராஜ சந்ததியாராகிய வன்னியர்களுடைய 32 விருதுகள்

1.	புலிக்கொடி	17.	வெண்கலச்சொம்பு
2.	சிங்கக்கொடி	18.	முத்துக்குடை
3.	விற்கொடி	19.	வெள்ளைக்கொடி
4.	மீனக்கொடி	20.	சாமரை
5.	திருத்தேர்	21.	வாள்
6.	வெள்ளையானை	22.	கேடயம்
7.	அக்கினிக்குதிரை	23.	வளைதடி
8.	கொன்றைமாலை	24.	அம்பறாத்தூணி
9.	சாம்பிராணிக்கலசம்	25.	எக்காளம்
10.	சங்கு	26.	நகரா
11.	சக்கரம்	27.	வெற்றிமுரசு
12.	மகுடதோரணம்	28.	வில்மணி
13.	கருடக்கொடி	29.	புல்லாங்குழல்
14.	அன்னக்கொடி	30.	அறுகால்பீடம்
15.	மயில்கொடி	31.	பகல் தீவட்டி
16.	தவளச்சங்கு	32.	வெள்ளைப்பாவாடை

சிறப்புச் சொல்லடைவு

(எண் - பாடல் எண்)



பிற்சேர்க்கை

வள்ளல் பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் வரலாறு

திரு, பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் 10.04.1829 ல் பிறந்தார். தந்தை பெருமாள் நாயகர். தாய் தெய்வானை அம்மாள். சென்னை, இராணுவத்தில் சுபேதாராகப் பணிபுரிந்து 'சர்பகதூர்' பட்டம் பெற்றவர். தான் இவ்வுலகில் அவதரிக்கக் காரணமாக இருந்த தந்தை-தாய் இருவரின் பெயர்களை முதல் எழுத்துக்களாகவைத்து 'லீ' எனும் எழுத்தையும் சேர்த்து "பெ.தெ.லீ" என்று தமது பெயருக்கு முன்பு பயன்படுத்திப் புரட்சி செய்தவர் வள்ளல் செங்கல்வராய நாயகர். கல்வி கேள்விகளில் திறமையுடன் விளங்கிய நாயகர் தந்தையின் மறைவுக்குப் பின் வாணிபத்தில் ஈடுபட்டு வளம்பெற்றார். அப்போது இவருக்கு வயது முப்பது. 'சந்த்' கம்பெனியில் துபாஷி (மொழிபெயர்ப்பாளர்) ஆகி விரைவிலேயே பெருஞ்செல்வம் திரட்டினார். தொடக்கத்திலேயே கொடைமனம் கொண்டவராதலின் 1857-ல் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின்போது ஏழைகளுக்கு மனமுவந்து உதவி செய்தார். இவரது இல்லம் பஞ்சநிவாரண முகாமாகியது கண்டு அன்றைய ஆங்கிலேயர் அரசு பெருமிதம் கொண்டது.

நாயகருக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. எனவே, 04.03.1870-ல் ஓர் 'உயில்' எழுதினார். பிறகு 30.04.1873-ல் அதற்கு ஓர் 'இணை உயில்' எழுதினார். இதன் மூலமாக, தாம் சுயமாக சம்பாதித்த மற்றும் தந்தை வழி வந்த பெருஞ்செல்வத்தைச் சமயத்திற்காகவும், அறச்செயல்களுக்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும் செலவிடுமாறு விட்டுச் சென்றார். இன்று, அதன் பலனாக "பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் அறக்கட்டளை" நிறுவப்பெற்று கீழ்க்காணும் நிறுவனங்கள் இயங்கிவருகின்றன.

இத்தகைய புகழுடன் வாழ்ந்த "வள்ளல்" நாயகர் அவர்கள், 1874-ஆம் ஆண்டு தமது 45 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

சென்னை, வேப்பேரியில் இயங்கிவரும் புகழ்பெற்ற செங்கல்வராய நாயகர் பல்தொழில் நுட்பக்கல்லூரி (C.N.Polytechnic College) இந்தியாவில் தொடங்கப்பெற்ற பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் இரண்டாவதாகத் தொடங்கப்பெற்ற மிக பழமைவாய்ந்த ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள சிறந்த பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் இது இரண்டாவதாகப் புகழ்பெற்று விளங்கி வருகிறது. (The Second Best Polytechnic College) காஞ்சிபுரம் அருகே ஊவேரியில் இயங்கிவரும் பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியையும் இதே போன்று உயர்நிலைக்குக் கொண்டு வருவதற்கு அறக்கட்டளை அனைத்து நடவடிக்கைகளும் எடுத்துவருகிறது.

மேற்படி அறக்கட்டளையை 9 அறங்காவலர்கள், நடத்தி வருகின்றனர். இவர்கள் அனைவரும் சென்னை-உயர்நீதி மன்றத்தால் நியமனம் செய்யப் பெற்றவர்கள். இதன் தலைவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஆவர். இவர்களின் அயரா உழைப்பால் எல்லோருக்கும் கல்வி, இலவச மருத்துவம், ஆதரவற்ற சிறுவர்களுக்கு அடைக்கலம், ஏழை மாணவர்களின் கல்விக்கு நிதி உதவி, திருக்கோயில்களுக்கு மாதந்தோறும் காணிக்கைத் தொகை என பல்வேறு நற்காரியங்கள் செய்யப்பட்டு மேற்படி அறக்கட்டளை செவ்வென செயல்பட்டு வருகிறது.

அறக்கட்டையின்கீழ் நடைபெறும் நிறுவனங்கள்

ஊவேரி, காஞ்சிபுரம் மாவட்டம்

1. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி.

2. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் தொழிற் பயிற்சி நிலையம்
3. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் நடுநிலைப் பள்ளி
4. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் சமுதாய அறிவொளி மையம்
5. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் இலவச சித்த மருத்துவமனை (காஞ்சிபுரம் நகரம்)

சென்னை வேப்பேரியில் உள்ளவை :

1. செங்கல்வராய நாயகர் பல்தொழில் நுட்பக் கல்லூரி.
2. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் மேல்நிலைப் பள்ளி
3. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் தொடக்கப் பள்ளி
4. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் சித்த மருத்துவமனை
5. பெ.தெ.லீ செங்கல்வராய நாயகர் இலவச ஆதரவற்றோர் சிறுவர்கள் காப்பகம்.

இந்நூல் உருப்பெறுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துதவிய அறங்காவலர் அனைவருக்கும் என் நன்றி. இவ்வறக்கட்டளை செவ்வெனே நடைபெற இறையருளை வேண்டுகிறேன்.

பி.டி.லீ. செங்கல்வராய நாயகர் அறக்கட்டளை,
தலைவர் மற்றும் அறங்காவலர்கள் விபரம்:

1. திரு. நீதியரசர் அ. தங்கமணி (தலைவர் மற்றும் அறங்காவலர்)
2. திரு. ஜெ.ஜெகன் (எ) ஜெகன்னாதன். M.A., (அறங்காவலர்)
3. திரு. எல். இராஜசேகர். M.A., B.L., (அறங்காவலர்)
4. திரு.டாக்டர் என். கருணாநிதி. M.B.B.S., M.D. (அறங்காவலர்)
5. திரு. எஸ். சம்பந்தன் B.E. (அறங்காவலர்)
6. திரு.சி. ஜெகன்னாதன் B.A., B.L. (அறங்காவலர்)
7. திரு.எம்.பாலகிருஷ்ணன் B.Com., CAIIB, PGDLA., (அறங்காவலர்)
8. திரு. டாக்டர். எம்.சுப்பையன் M.Sc., Ph.D., (அறங்காவலர்)
9. திரு. ட்டி.டி. சுந்தர்ராஜ். இ.ஆ.ப (ஓய்வு) (அறங்காவலர்)
10. திரு.கே.எஸ். கோவிந்தசாமி M.A., M.L., (செயலாளர்)

அறக்கட்டளையின் மூலம் பயன்பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

பெ.தெ.லீ. செங்கல்வராய நாயகர் அறக்கட்டளை
2 & 3, ஈ.வீ.கே. சம்பத்சாலை, வேப்பேரி, சென்னை-7.



உழைப்பால் உயர்ந்தவர்

திரு. சா. சுப்பிரமணியம் (ஐ.ஏ.எஸ்.ஓய்வு)

சா. சுப்பிரமணியம் ஐ.ஏ.எஸ். அவர்கள்

பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையத்தில் சாமிநாத படையாட்சி என்பவருக்கு மூன்றாவது மகனாக 25.09.1923 இல் பிறந்தார். இவ்வூரில். சிவன் கோவில் வடக்கு மடவிளாகத்தில் இவரது வீடு. சிவன் கோவிலுக்கு எதிரே அர்ச்சுனனால் தோண்டப்பட்டது என்று கூறப்படும் காண்டீவ தீர்த்தம் என்னும் தெய்வக் குளத்தில் தெப்ப உற்சவம் நடக்கும்போது ஈஸ்வரனுக்கு முதல் மரியாதை செய்ய இவருடைய தந்தையையே கூப்பிடுவார்கள்.

சா. சுப்பிரமணியம் அவர்கள் ஆரம்பக் கல்வி கற்கும்போது நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலும் வகுப்பில் அவரே முதல் மாணவனாக இருந்தார். இருந்தபோதிலும் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிக்க வசதியில்லை. இவருடைய தந்தையாரும் பாட்டனாரும் மாவட்ட முன்சீப் அலுவகத்தில் சேவகர்களாக இருந்தவர்கள். இவர்களுக்கு அமீனா வேலைக்கு அழைப்பு வந்தபோதிலும் மக்களுக்குத் துரோகம் செய்யும் வேலை என்பதால் ஒப்புக்கொள்ளவில்லை.

10 ஏக்கர் புன்செய். ஒரு ஏக்கர் நன்செய், மாட்டுவண்டி எல்லாம் இருந்தும் வீட்டுச் செலவுக்குத்தான் வருமானம் போதுமானதாக இருந்தது. படிக்க வைக்க வசதியில்லை. எனவே, பிற்படுத்தப் பட்டோர் என்று சாதிச்சான்று வாங்கினால் கட்டணம் கிடையாது. ஆகவே, அதனை வாங்கி அரியலூர் உயர்நிலைப் பள்ளியில் சேருங்கள் என்று உடையார்பாளையம் தலைமை ஆசிரியர் கூறினார். அதன்படி ஜெயங்கொண்டம் தாசில்தாரிடம் சாதிச் சான்று வாங்கி, அரியலூரில் ஒரு வீட்டு முற்றத்தில் தங்கி. உயர்நிலைப்பள்ளியில் 9, 10, 11 வகுப்புகள் படித்துத் திருச்சி மாவட்டத்திலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுப் பரிசு பெற்றார்.

பரிசளிப்பு விழாவுக்கு வந்திருந்த புனித சூசையப்பர் கல்லூரித் தமிழாசிரியர் பெரியசாமி அவர்கள் இவரை அக்கல்லூரியில் இண்டர்மீடியட்டில் சேர்த்துவிட்டார். ஆனால்.

தந்தையாருக்கு இதில் விருப்பமில்லை. வேலைக்குப் போகும்படி கூறினார். எனவே. சர்வீஸ் கமிஷன் தேர்வெழுதி வெற்றி பெற்றுச் சைதாப்பேட்டையில் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியேற்றார். பதவி உயர்வு பெற்றுப் பூந்தமல்லி, மாதவரம், திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களில் பணியாற்றி மீண்டும் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் மேல்நிலை உதவியாளராகப் பணியேற்றார்.

இரண்டு ஆண்டுகள் கழிந்த பின் அரசு ஆணைப்படி உதவித் தாசில்தார் வேலை கிடைத்தது. இது வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. செங்கற்பட்டு வட்டத்தில் அலுவலர் பணியில் இருந்தபோது நிலத்தின் தன்மை, அளவை, வரி விதித்தல் ஆகியவற்றில் இரண்டு ஆண்டு பயிற்சி பெற்றார். மீண்டும் வட்டாட்சியர் பதவி உயர்வு கிடைத்தது. துணை வட்டாட்சியராக இருந்தபோதே பி.ஜீ.எல். (சட்டம்). பி.ஏ. எம்.ஏ., (பொருளாதாரம்) படித்து முடித்தார். திருவள்ளூரில் தாசில்தாராக ஓராண்டு பணியாற்றிய பிறகு செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிரஸ்தார் பணி கிடைத்தது. இது வட்டாட்சியர், துணை வட்டாட்சியர் ஆகியோருக்குப் பதவி உயர்வு, மாற்றுதல் ஆகியவற்றை அளிக்கும் வேலை.

இந்த வேலையை நேரடியாகக் கவனித்த **திரவியம் ஐ.ஏ.எஸ்., சத்தியபாமா ஐ.ஏ.எஸ்., சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,** ஆகியோர் இவரைத் திருவாலங்காட்டில் பி. டி. ஓ., (மண்டல வளர்ச்சி அலுவலர்) ஆக்கினார். அங்கு ஓராண்டுக் காலம் இருந்தபோது பிரம்மோற்சவத்தில் 10 நாள்கள் நாடகம் போட்டார். அதில் இரண்டு நாடகங்களில் இவரே நடித்துப் பேரும் புகழும் பெற்றார். பின்பு மாவட்டத்துணை ஆட்சியராகப் பதவி உயர்வு பெற்று மதுரை சென்றார். அங்கு இவருடைய முதல் வேலை விருதுநகரிலிருந்து மானா மதுரைக்கு ரயில் மார்க்கம் அமைக்க நிலம் ஏற்பாடு செய்வது. இவர் மதுரைக்குச் செல்லும் முன்பு **முதலமைச்சர் காமராசரைச்** சந்தித்து ஆசி பெற்றார். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டோர் சேம நல அதிகாரியாக வேலை செய்ய வேண்டியிருந்தது. அப்போது அமைச்சராக இருந்த **திரு. கக்கன்** அவர்கள் இவரைத் தம்முடன் அழைத்து வந்து திருநெல்வேலி சேமநல அதிகாரியாக ஆக்கினார். பின் சிவகங்கையில் கோட்டாட்சித் தலைவராக ஓராண்டு பணியாற்றினார். பின் தஞ்சை மாட்டக் கலெக்டரின் உதவியாளராக ஈராண்டு பணியாற்றினார்.

பின்னர் மதுரை மாவட்ட உணவு வழங்கல் அதிகாரி **டி.என். சேஷன், ஐ.ஏ.எஸ்.**, அவர்களின் கீழ் ஓராண்டு பணிபுரிந்தார். அங்கிருந்து அவசரத் தந்தி மூலம் சென்னை கோட்டையில் தலைமைச் செயலாளரின் நேர்முக உதவியாளராக நியமிக்கப்பட்டார். இப்பணி மாவட்ட எல்லா அலுவலகங்களையும், தலைமைச் செயலக எல்லாத்துறைகளையும் தணிக்கை செய்யும் பணி, இதில் மூன்றாண்டுகள் பணியாற்றிய பின் மாவட்ட வருவாய் அதிகாரி (D.R.O.) என்ற பதவி உயர்வு கிடைத்தது. அப்போது கோயம்புத்தூரில் உள்ள 7 நூற்பாலைகளில் பணி செய்ய வாய்ப்புக் கிடைத்தது.

இங்கு நாலரை ஆண்டுகள் பணி செய்த பின் ஐ.ஏ.எஸ். பதவி உயர்வு கிடைத்தது. பயிற்சி பெற உத்தராஞ்சல் மாவட்டத்தில் உள்ள முசௌரி சென்றார். பயிற்சி முடிந்தபின் மதுரையில் செட்டில் மெண்ட் அதிகாரியாகப் பணியேற்றார்.

தஞ்சாவூரில் செட்டில்மெண்ட் அதிகாரியாக இருந்தபோது, வேதாரண்யத்தில் கோவில் நிலத்தில் வீடு கட்டிவாழ்ந்த 200 பேருக்குப் பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றினார். இதை இவருக்கு முன்னால் இருந்த ஐந்து அதிகாரிகளால் செய்ய முடியவில்லை. எனவே, மக்கள் இவரைப் பாராட்டினர். வீடு கட்டியவர்கள் கோவிலுக்கோ அரசுக்கோ எந்த வரியும் செலுத்தியதில்லை. எனவே, அவர்களுக்குப் பட்டா கொடுத்துக் கோவிலுக்கு இழப்பு ஏற்படாமல் இருக்க அரசாங்கத்திலிருந்து தஸ்தக் வருமானம் தர வழி செய்தார்.

குமரி மாவட்டத்தில் செட்டில் மெண்ட் உதவி அதிகாரி ஒருவர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் ஒருவருக்கு 351 ஏக்கர் பட்டா வழங்கினார். இதனைக் கண்ட இவர் நேரில் சென்று அந்த நிலத்தைப் பார்த்து அதில் பல வைரம் பாய்ந்த தேக்கு மரங்களடர்நத காடு இருப்பதைக் கண்டு (அது பல கோடி ரூபாய் பெறும்) என்பதை அறிந்ததும், தனக்கு இலஞ்சமாகப் பல இலட்சங்கள் வரை கிடைக்க இருந்ததையும் வேண்டாம் என்று கூறிப் பட்டாவைத் தடுத்து நிறுத்தியதோடு அந்த அதிகாரிக்குப் பென்ஷனையும் நிறுத்தினார். இதனால் செட்டில்மெண்ட் கமிஷனர் **ஒயிட் ஐ.எ.எஸ்.,** அவர்களிடம் பாராட்டுப் பெற்றார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் புறம் போக்காக மாற்ற, அரசு உத்தரவு வந்த நிலங்களை அப்போதிருந்த தாசில்தார் கமிஷன் வாங்கிக்கொண்டு பட்டா வழங்கியதைக் கண்டுபிடித்து அவற்றைத் தடுத்துப் புறம்போக்காக்கினார். இரண்டு ஆண்டுகள் முடிந்த பின் 01-04-1977 இல் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டர் ஆனார். இப்பதவியில் 3 3/4 ஆண்டுகள் இருந்தார். இம்மாவட்டத்தை ஒரு தொழில் மாவட்டமாக ஆக்க நினைத்து அதற்காக முயற்சி மேற்கொண்ட நேரத்தில் சென்னைத் தலைமைச் செயலகத்தில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறைக்குத் துணைச் செயலராக நியமிக்கப்பட்டார். எனவே, இராமநாதபுரத்தைத் தொழில் மாவட்டமாக்கும் எண்ணம் நிறை வேறாமல் போய்விட்டது.

தலைமைச் செயலகத்தில் ஓராண்டு பணி செய்தபின் மறுவாழ்வுத் துறை இயக்குநராக ஆக்கப்பட்டார். பர்மா, இலங்கை, வியட்நாம் அகதிகளின் நல்வாழ்வு காக்கும் பணி இது. இதில் இரண்டாண்டுகள் பணியாற்றி 1982 இல் ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்ற இவரை மத்திய அரசு டெல்லிக்கு வரவழைத்து இலங்கை அகதிகளின் நல வாழ்வுக்காக மூன்றாண்டுகள் பணியை நீட்டித்துத் தருவதாகக் கூறியது. இவர் அதனை மறுத்து ஓய்வு பெற்றபின் சொந்த முயற்சியால் இரண்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அதில் நல்ல வருமானம் ஈட்டி அதன் மூலம் பொது சேவையில் ஈடுபட்டு வருகிறார்.

வன்னியர் சங்கத் தலைவராகப் பத்தாண்டுகள் பணியாற்றினார். பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் திரு. டாக்டர் ச. இராமதாசை இவர்தான் உருவாக்கினார் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும். பச்சையப்பன் அறக்கட்டளை உறுப்பினராகப் பத்தாண்டுகளும், செங்கல்வராய நாயகர் அறக்கட்ளையில் முதன்மை டிரஸ்டியாக இரண்டாண்டுகளும் இருந்தவர். இவர் தற்போது வன்னிய வேலை வாய்ப்பு மேம்பாட்டு மையத்தின் தலைவராகத் தற்போது செயல்பட்டு வருகிறார். வன்னிய சமுதாய ஏழை எளிய மக்களின் வாழ்வை உயர்த்த அரும்பாடுபட்டார்.

உழைப்பையே மூலதனமாக கொண்டு உழைப்பால் உயரமுடியும் என்பதற்கு இவர் ஓர் நல்ல எடுத்துகாட்டாக உள்ளவர். இவர் பேரும் புகழும் பெற்று பல்லாண்டுகள் வாழவேண்டி இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன்

டாக்டர். கெ. சிவராமலிங்கம்



மனிதநேயப் பண்பாளர்

திரு. சி.ஆர். சாமிதுரை

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க **திரு. சி.ஆர். சாமிதுரை** அவர்கள் இராமசாமி குப்பம்மாள் தம்பதியர்க்கு சிதம்பரத்தில் 20-5-1922ல் பிறந்தார். தந்தையின் பெயரில் உள்ள சாமி என்பதையும். அப்போது இந்தியாவை ஆண்ட வெள்ளையர்களைக் குறிக்கும் துரை என்ற பெயரையும் சேர்த்துப் பெற்றோர் இவருக்குச் சாமிதுரை எனப்பெயரிட்டனர். பிச்சாவரத்தை ஆண்ட ஜமீனின் பெயர் என்றும் சொல்லலாம். எப்படியோ தன்மகன் துரை போல் இருக்க வேண்டும் என்ற இனிய இதயம் படைத்த பெற்றோர்.

புறநானூற்று வீரத்தாய் போன்று குப்பம்மாள் அவர்கள் சாமிதுரை, குஞ்சிதபாதம், ஆறுமுகம் என்ற மூன்று பிள்ளைகளையும் இராணுவத்துக்கனுப்பிப் பெருமைப்பட்டவர். சி.ஆர். சாமிதுரை அவர்கள் பெற்றோர் எண்ணம் போலவே. இரண்டாவது உலகப் போரில் ஈரான். ஈராக், சிரியா, பாலஸ்தீனம், ஆப்பிரிக்கா, எகிப்து, சிசிலி, இத்தாலி, சீனா, பாகிஸ்தான், ஜம்முகாஷ்மீர் ஆகிய இடங்களில் போர் புரிந்து நாட்டுக்குச் சேவை செய்தார்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் 24-1-1947ல் வீடு திரும்பிய சாமிதுரை ஆறுமாதங்ளுக்குப் பின்னர் 7-7-1947ல் திருவிசைநல்லூர் பெரியசாமி. அமராவதி ஆகியோர் மகள் ருக்மணியைத் திருமணம் செய்து கொண்டார். தாயைப் போலவே மனைவியும் 1963ல் சீனப்போரின் போது இரண்டாவது முறையாகக் கணவனை ராணுவம் அனுப்பிவிட்டு மிகுந்த சிரமங்களுக்கிடையே பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கினார். உறவினரை அரவணைத்துச் செல்லும் பண்பு இவரிடம் பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம்,

சாமிதுரை சிறுவயதில் சிதம்பரம் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியிலும் பின்பு பச்சையப்பன் பள்ளியிலும்

பயின்றார். படிக்கும்போது பெற்றோரை இழந்ததால் கல்வி தடைப்பட்டது.

இதனாலேயே இவர் இராமசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளி, வீனஸ் மெட்ரிகுலேசன் பள்ளி, திருவிடைமருதூர் மேல்நிலைப்பள்ளி, ஆடுதுறை ஸ்ரீ குமரகுருபரன் மேல்நிலைப்பள்ளி ரைஸ்சிட்டி மேல் நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்குப் பரிசு வழங்குவதோடு ஏழைமாணவர்க்குச் சீருடையும் வழங்குகிறார்.

தாய் தந்தையர் நினைந்தது போலவே திருவிடை மருதூர், வேப்பத்தூர், திருவிசை நல்லூர் ஆகிய ஊர்களில் விவசாயம் செய்து தற்போது ஜமீன்போல் வாழ்ந்து வருகிறார்.

இவருடைய பிள்ளைகளும், மருமகள்களும் இவருக்குச் சளைத்தவர்கள் அல்லர். இவருடைய மகன் சி.ஆர்.எஸ். குமார், சிதம்பரம் வீனஸ் மெட்ரிகுலேசன் பள்ளித் தாளாளர். சி.ஆர்.எஸ். செல்வம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஆர்.ஓ. ஆகப் பணிபுரிந்து வருகிறார். சி.ஆர்.எஸ். இராஜேந்திரன், அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் எம்.ஏ.எம். இராமசாமி செட்டியார் எம்.பி. அவர்களின் நேர்முக உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். சி.ஆர்.எஸ். இராமச்சந்திரன் கும்பகோணம் சிட்டியூனியன் வங்கியில் பணிபுரிகிறார். சி.ஆர்.எஸ். பால கிருஷ்ணன் அண்ணாமலைப் பல்கலைக் கழக மைய நூலகர். இவர்கள் அனைவரும் தம்மை நாடிவருபவர்களுக்குக் கல்வி பெறுவதிலும். வேலைவாய்ப்பு பெறுவதிலும் பேருதவி செய்து வருகின்றனர்.

மூத்த மருமகள் ராணிகுமார். இரண்டாவது மருமகள் வசந்தாராணி செல்வம் (வேதியியல் துறை விரிவுரையாளர், பல்கலைக் கழக செனட் உறுப்பினர்) மூன்றாவது மருமகள் சரோஜினி ராஜேந்திரன் , நான்காவது மருமகள் கல்யாணி ராமசந்திரன், ஐந்தாவது மருமகள் திருமதி சாந்தி பாலகிருஷ்ணன் ஆகியோரும் கணவர்களின் உதவியோடு பலருக்கும் உதவி செய்து வருகின்றனர். மகள்கள் திருமதி ராஜேஸ்வரி நடராசன், திருமதி மீனா கண்ணதாசன் (ஆசிரியை) ஆகியோரும் தங்களை நாடி வருவோர்க்குச் சகோதரர்களின் மூலம் உதவி வருகின்றனர்.

சி.ஆர்.எஸ். சாமிதுரை சுபேதார் பட்டம் பெற்றவர். சீனப் போருக்குப்பின் டெல்லி. கல்கத்தா, லக்னோ, சிம்லா, பம்பாய், பூனா, ஆவடி, கொச்சி, பெங்களூர், கண்ணனூர், ஆகிய முகாம்களில் பணிபுரிந்துள்ளார். 16 விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். 33 ஆண்டுகள் ராணுவப் பணிக்குப் பிறகு டெல்லி ஆபீசர்ஸ் நிறுவனத்தில் மேலாளராகப் பணிபுரிந்தார். 1978ல் கும்பகோணம் காளி பிராண்ட் ஸ்டீல் தொழிற்சாலையில் எஸ்.ஓ. ஆகப் 18 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வுக்குப் பின்னரும், திருவிடை மருதூரில் வீட்டில் இருந்து கொண்டு, விவசாயமும் சமூக சேவையும் செய்வதோடு செஞ்சிலுவைச் சங்கத் தலைவராகவும் ரொட்டேரியனாகவும் இருக்கிறார் கோவிந்தபுரம் கஸ்தூரி மாரியம்மன் கோயில், கஞ்சனூர் கோபால கிருஷ்ணன் கோயில் இன்னும் பல கோயில்களுக்கு நிதி உதவி செய்துள்ளார் 7-5-2002 அன்று திருக்கடையூரில் இவருக்கு 81வது வயதில் மங்கள முத்து விழா நடைபெற்றது 83 வயதிலும் இளைஞர்போல உற்சாகமாக உள்ளார். இவர் பெயரின் முதல் எழுத்தையும், மனைவியின் முதல் எழுத்தையும் சேர்த்து சாரு என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.

இவருடைய கடைசி தம்பி சி.ஆர்.எஸ். லட்சுமிகாந்தன் அவர்கள் பட்டதாரி ஆசிரியராகவும், தமிழக மேலவை உறுப்பினராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்து குடும்பத்துக்குப் பெருமை சேர்த்தவர்.

இவர்கள் குடும்பம் முதல் தலைமுறை விவசாயக் குடும்பமாகவும், இரண்டாவது தலை முறை இராணுவக் குடும்பமாகவும், மூன்றாவது தலைமுறை கல்வியாளர் குடும்பமாகவும், திகழ்கிறது. இவர்கள் பெருமைகள் எல்லாம் கொடை வள்ளல், அண்ணாமலை பல்கலைக் கழக இணைவேந்தர், **எம்.ஏ.எம். இராமசாமி செட்டியார் எம்**.பி. அவர்களையே சாரும்.

செட்டியார் குடும்பத்தவரால்தான் இன்று மயிலாடுதுறை, சிதம்பரம், சீர்காழி, கடலூர், அரியலூர், ஜெயங்கொண்டம், மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள மாணவர்கள் அனைவரும் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேற முடிகிறது. இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த சி.ஆர்.சாமிதுரை அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புடன்

டாக்டர். கெ. சிவராமலிங்கம்



வன்னியர் சங்கம் மற்றும் இடஒதுக்கீட்டு பணி

திரு. கோதை கேசவன் அவர்கள் தஞ்சை மாவட்டம். திருவிடை மருதூர் வட்டம், கோவிந்தபுரம் கிராமத்தில் விவசாயி கோவிந்தசாமி, தைலம்மாள் தம்பதிக்கு 1951 ஜனவரி 22-ல் பிறந்தார். வாணாபுரத்தில் தொடக்கக் கல்வி முடித்து ஆடுதுறையில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்து குடந்தை அரசு ஆடவர் கலை கல்லூரியில் இளங்கலை வேதியியல் முடித்தார்.

1965-ல் 8ஆம் வகுப்பு படிக்கும்போது பேரறிஞர் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டார். 1972-ல் பெரியார் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு அவருடைய பொதுக் கூட்டங்களுக்கும் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

1978-ல் வேணு ஜெயராமன். முத்தூர் எம். சாமிநாதன் மூலம் ஏ.கே.என். தலைமையில் இருந்த எஸ்.எஸ்.எஸ்-ல் சேர்ந்து சமுதாயப்பணி ஆற்றத் தொடங்கினார். 20-07-1980-ல் வன்னியர் சங்கம் தொடங்கப்பட்டது. 1981-82ல் இச்சங்கத்தில் வன்னியர்களைச் சேர்க்கக் கிராமம் கிராமமாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

ஒவ்வோர் ஆண்டும் வன்னியர் சங்க மாநாடு ஒவ்வோர் ஊரில் நடைபெற்றபோது வாகனங்கள் சேகரித்துள்ளார். ஒருமுறை கம்பியில் அடிபடத் தெரிந்து உயிர் தப்பினார். இட ஒதுக்கீட்டுக்காக 1985-ல் அணைக்கரை-திருப்பனந்தாள் ஒருநாள் சாலை மறியல் செய்து கைது செய்யப்பட்டார். இட ஒதுக்கீட்டை அமல்படுத்தச் கோரி மீண்டும் தஞ்சை இரயில் மறியலில் கலந்து சேலம் சிறையில் 1986-ல் அடைக்கப்பட்டார் இரயில் அருகில் வரும்வரை காத்திருந்து திடீரென்று இரயில் முன்னால் விழுந்தது மறக்க முடியாத அனுபவம்.

17-9-87 முதல் 23-9-87 வரை ஏழுநாட்கள் தமிழ்நாட்டில் 5-அம்ச கோரிக்கையை நிறைவேற்றுமாறு போராட்டம் நடந்தது.

அப்போது சாமியார் வேடமிட்டுத் தலைமறைவாகப் போராட்டம் வெற்றிபெறப் பாடுபட்டு ஏழாவது நாள் கைது செய்யப்பட்டுத் திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். 16-1-88 அன்று குடவாசல் கடலங்குடியில் வன்னியர்க்கும் காவல்துறைக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் ஏற்பட்ட பொருள் இழப்பின் போது மீட்புப் பணியில் ஈடுபட்டார். 17-6-88-ல் தேர்தல் புறக்கணிப்பு ஆலோசனைக் கூட்டத்திலும். 8-8-88ல் நில மீட்சிப் போராட்டத்திலும் கலந்து கொண்டு நற்பெயர் பெற்றார்.

இடஒதுக்கீட்டை நிறைவேற்ற முன்வராத கட்சிகளைக் கண்டித்துத் தேர்தலைப் புறக்கணித்தபோது துணை ராணுவத்தால் ஒருகால் எலும்பு முறிந்தும் தேர்தல் புறக்கணிப்புப் போராட்டத்தில் வெற்றிபெற்றார். 1-5-89ல் விழுப்புரத்தில் பாட்டாளி தொழிற் சங்கப் பேரணியில் கலந்து கொண்டார். டாக்டர் எஸ்.ராமதாஸ் அவர்கள் கொடியேற்றும்போது ஆளும்கட்சி செய்த கலவரத்தால் ஒருவர் பலியானார். இதைக்கண்டித்து ஆடுதுறையில் இவர்மட்டுமே மூன்று மணி நேரம் சாலை மறியலில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடதக்கது. நெய்வேலி நிலமீட்சிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு மிலட்டூர் காவல்நிலையத்திலும், பின்னர் திருவிடைமருதூர்ச் சிறையிலும் அடைக்கப்பட்டார். அப்போது இவர் மனைவி கலாவதி நிறை கர்ப்பிணி. சிறையில் வந்து பார்த்து திருமண நாள் நிகழ்சசியை துன்பத்திலும் மகிழ்ச்சியை தெரிவித்தார்.

அகில இந்திய வன்னியர் சங்கம் தொடங்கியபோது தொண்டர்களே இவரை சுவாமிமலையில் அடித்துச் சாக்கடையில் போட்டுவிட்டனர். குடந்தை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது பலர் பண உதவி செய்தனர். இவர் அவற்றையெல்லாம் கட்சிப் பணிக்கே கொடுத்து விட்டார்.

தொடர்ந்து சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டதால் வீடு. மனைவி. மக்கள். தாய் தந்தை சகோதரர்களை விட்டுப்பிரிந்து நடத்திவந்த கல்வி நிறுவனங்களையும். விவசாயத்தையும் கவனிக்க முடியாமல் வருமானத்தை இழக்க நேரிட்டது. வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டாலும் **திரு. டாக்டர் எஸ்.ராமதாஸ்** இட்ட பணிகளை முழு ஆர்வத்துடன் செய்து வந்தார்.



வளரும் தொழிலதிபர்

திரு.கோ. செல்வராஜ் அவர்கள். 1-8-1956-ல் பெரம்பலூர் மாவட்டம், செந்துறை வட்டம், சோழன் குடிகாடு கிராமத்தில் பெ.கோவிந்தசாமி வள்ளியம்மாள் தம்பதியர்களுக்குப் பிறந்தார். இவருடைய சகோதரர் கோ.இராமச்சந்திரன். சகோதரிகள் அலமேலு, பொருட்செல்வி, மணிமேகலை ஆகியோர் ஆவர். இவர் குறிச்சிக்குளம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு முடித்துவிட்டு, சென்னை, நந்தனம் அரசினர் கலைக் கல்லூரியில் பி.ஏ., வரலாறு முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றவர். சென்னை, சூளைப் பகுதியில் பாத்திர உற்பத்தித் தொழிற்சாலையில் பத்து வருடகாலம் பணிபுரிந்தார். அதன்பிறகு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நிதிக்கடன் பெற்று 1992 ஆகஸ்ட் 31-ல் **Sri Ganesh Cables & Conductors** என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். தன்னுடைய உழைப்பின் மூலம் நிறுவனத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்தி **வளரும் தொழிலதிபராக** முன்னேறிக் கொண்டிருக்கின்றார்.

இவருடைய மனைவி செ.சரோஜா எம்.ஏ. அவர்கள் பெரம்பூர் ஏகாங்கிபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கடந்த ஏழாண்டு காலமாக இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். மகள் சிவகாமி ஆர்.எம்.கே. கல்லூரியில், பி.டெக். (தகவல்துறை) இரண்டாம் ஆண்டு படித்து வருகிறார். மகன் ஸ்ரீதர் விவேகானந்தா பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வருகிறார்.

இவர் செந்துறைப் பகுதியில் மருவத்தூரில் மணிக்கூண்டு கட்ட நிதி உதவி அளித்துள்ளார். மேலும், ஏழை மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்களை வழங்கி உயர் படிப்புக்கும் இயன்றவரை உதவி வருகிறார். இவர் இந்நூல் வெளிவருதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளார். இவருக்கு என் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



சமுதாயப் பணியில் ....

திரு. டாக்டர். சு. நடராசன், M.Sc., B.Ed., L.L.B., M.L.M., Ph.D., M.A. (S.W) அவர்கள். இவர் விழுப்புரம் மாவட்டம் கெடார் கிராமத்தில் திரு. சுப்பிரமணிய கவுண்டர் திருமதி.ஆனந்தாயி தம்பதிகளுக்கு 1959-ல் பிறந்தார். ஏழ்மை காரணமாக நெசவுத் தொழில் செய்து கொண்டே முதுநிலை கணிதம் (M.Sc.,) பட்டமும், டாகடர். (Ph.D.) பட்டமும் பெற்றார்.

இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் இஞ்ஜினியரிங் டெக்னாலஜியில் (HIET) பணிபுரிந்தார். அவருக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு சென்னையில் Nataraj Institute of Science and Technology நிறுவனத்தைத் தொடங்கினார். பின்பு Charu Academy of Catering and Hotel Management தொடங்கினார். மேலும் இவர் Nataraj Software Solution Pvt. Ltd., இயக்குனராகவும். Sri Vocational Education Centre தலைவராகவும். சதீஷ்கர் மாநிலத்தில் உள்ள ரெய்பூர் The University of Technology-யில் டீனாகவும்., மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் தமிழ்நாடு தொடர்கல்வி வாரியம் மற்றும் பள்ளி சாராக் கல்விக் கருவூலம் ஆகியவற்றின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார். இவருடைய தீவிர கல்விச் சேவையால் அமெரிக்கா மற்றும் லண்டன் பல்கலைக்கழகங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்து வருகிறார். தொழிற்கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் Salon Provence - Knowledge France Academy, அவார்டும், திருமதி. Hubert Gavoty அவார்டும் வாங்கியுள்ளார்.

சமுதாய உணர்வை வெளிப்படுத்தும் வகையில் ஸ்ரீ சம்பு மகாரிஷி கல்வி அறக்கட்டளையை நிறுவி அதன் மூலம் பல ஏழை மாணவர்களின் மேற்படிப்பிற்கு உதவி வருகிறார். கெடார் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மேஜைகள். நாற்காலிகள், மற்றும் மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம், சீருடை ஆகியவற்றையும் வழங்கி வருகிறார்.

தமிழ்நாடு தொடர்கல்வி வாரியம். அகில இந்திய விவசாய அமைப்பு, சென்னை நண்பர்கள் மன்றம், மற்றும் வன்னியர் வேலைவாய்ப்பு மேம்பாட்டு மையம் ஆகிய சேவை அமைப்புகளில் உறுப்பினராகவும், உயர்நீதிமன்ற வழக்கறிஞராகவும் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். இவருக்கு என் நன்றி என்றும் உரியது.



சமுதாய, சமயப்பணியில்...

திரு. பெ. அன்பரசன் அவர்கள், வந்தவாசி வட்டம் தென்வணக்கம்பாடி கிராமத்தில் அ.பெருமாள்சாமி அவர்களுக்கும் அலமேலு அம்மாளுக்கும் 12.8.1968-ல் பிறந்தார். இவருடைய தாத்தாவான அமரர் அய்யாவுக் கவுண்டர் வள்ளலாக வாழ்ந்து சமுதாயத்தொண்டு ஆற்றியவர். இவர்கள் குடும்பம் பரம்பரை நாட்டாண்மைக் குடும்பம். அன்பரசன் அவர்கள் கட்டிடக்கலை பொறியாளர், பி.இ. சிவில் கல்வி கற்று 80 சதவீதத்துக்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேறியவர்.

இவருடைய சகோதரர் பெ.முருகன் எம்.எஸ்.ஸி. எம்.ஏ.. எம்.ஃபில்., எம்.பி.ஏ., எம்.எல். அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக உள்ளார். மனைவி கலைவாணி எம்.சி.ஏ., எம்.ஃபில், கல்லூரி ஆசிரியையாகப் பணிபுரிகிறார்.

அன்பரசன் அவர்கள் வாஸ்து சாஸ்திரப்படி வீடு கட்டுபவர். வாஸ்து தொடர்பான பல நூல்களையும் எழுதியுள்ளார். பலருக்கு வாஸ்து தொடர்பான யோசனைகளையும் கூறுவதுண்டு.

சமுதாயத்தை ஆன்மிகம் கலந்த பகுத்தறிவோடு முன்னேற்றப் பாடுபடுபவர். ஒரு மதம் எவ்வளவு பெருமையுள்ளதோ அதற்கு இணையான பெருமை வன்னியருக்கு இருப்பதாகக் கூறுபவர்.

இந்து சமய இயக்கங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். வன்னியர் குல மேன்மைக்கும் பெருமைக்கும் பாடுபடுபவர். பாரதீய ஜனதாவில் மாவட்ட, மாநில பொறுப்பாளராவும், தேசீய கவுன்சிலராகவும் பணியாற்றியவர். பாரதீய ஜனதாவின் மாநிலப் பிரச்சார செயளலாராக உள்ளார்.

சமுதாய உணர்வை வெளிப்படுத்தும் முறையில்பல ஏழை மாணவர்கள் படிப்பிற்கு உதவிவருகிறார். இந்நூலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ளர். இவருக்கு எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



..நூலாசிரியர்

டாக்டர். கெ. சிவராமலிங்கம் அவர்கள், பெரம்பலூர் மாவட்டம், செந்துறை வட்டம், இருங்களாக்குறிச்சியில் திரு.ர.கெங்காசலம், திருமதி.கெ.சலுப்பாள் ஆகியோருக்கு 05.12.1959ல் பிறந்தவர். அரியலூர், அரசினர் கலைக் கல்லூரியில் பி.எ. வரலாறு முதல் வகுப்பிலும் (1982) திருச்சி, பெரியார், ஈ.வே.ரா. கல்லூரியில் எம்.எ. வரலாறு முதல் வகுப்பிலும் (1984) தேர்ச்சி பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொல்லியல் துறையில் திட்டக்குடி சிவன் கோயில் பற்ற [illegible] செய்து எம்.:பில். பட்டம் பெற்றுள்ளார் (1985), ஆசிரியப் பயிற்சிக் [illegible]யான எம்.எட். பட்டமும் பெற்றுள்ளார். திருவிசைநல்லூர், சிவயோகநாத [illegible]வாமி கோயிலைப் பற்றி ஆய்வேடு வழங்கி டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். (1996) [illegible] சென்னை, செம்மஞ்சேரியிலுள்ள ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் 1.4.199[illegible] முதல் 2002 வரை புத்தமதத் துறையில் ஆராய்ச்சியாளராய்ப் பணிபுரி[illegible]து தமிழ்நாடு முழுவதும் களப்பணி செய்து ஆங்கிலத்தில் Archaeologica[illegible] Atlas of the Antique Remains of Buddhism in Tamil Nadu (1997) என[illegible] நூலை வெளியிட்டார். Buddhist Bronzes of South india, Kanchip[illegible]uram - as a Buddhist Centre ஆகிய நூல்களை எழுதியுள்ளார். கடந்த இருப[illegible]து ஆண்டு காலமாக வரலாறு, தொல்லியல், பௌத்தம் ஆகிய துறைகளில் ப[illegible]றிசியும், பட்டறிவும், பெற்ற இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெ[illegible]ளியிட்டுள்ளார்.

தற்போது சென்னை, சூளைமேட்டில், [illegible]ந்தியப் பண்பாட்டு ஆய்வு மையம் (பதிவு எண். 61/2003) என்ற ஒன்றை நிறு[illegible] நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். முதல் நூலாக, வன்னி[illegible]ர் சிலை எழுபது (வன்னியர் — வரலாறு, கலை, பண்பாடு) வெளியி[illegible]டுள்ளார் (2003). இரண்டாவது நூலாக, வன்னியர் புராணம் — ஒன்று [illegible] (வன்னியர் — வரலாறு, கலை, பண்பாடு) வெளியிட்டுள்ளார் (2004). மூன்றாவது நூாக, திருக்கைவளம் மற்றும் கம்பர் சிலை எழுபது (வன்னிய[illegible] — வரலாறு, கலை, பண்பாடு) (அச்சில்) வெளியிட உள்ளார் (2005).

Priyadharsini ✆ (04562) 223230.